
மன்னார்குடி அருள்மிகு

# இராஜகோபாலசுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலர்

8-6-95



T14000
R005C03
T.14000




மாண்புமிகு தமிழக முதல்வர் ஆலயங்களின் ஒளிவிளக்கு. டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், பூம்புகார் நிறுவனம் ஆலயங்களுக்குத் தங்கத்தேர், இறைவன் திருமேனிகளுக்குத் தங்கக்கவசம், வெள்ளிக்கவசம், ஆலயமணிகள் ஆகியவை செய்வதில் தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கின்றது.

மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில் திருக்குட முழுக்கு காணும் தமிழக மக்கள் அனைவரும் அருள்மிகு இராஜகோபாலசுவாமி செங்கமலத்தாயார் திருவருள் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றது.

பூம்புகார்

தமிழ்நாடு கைவினைப்பொருள்கள் வளர்ச்சிக்கழகம், சென்னை.

T014000
Sarasvati Mahal Library. Thanjavur



Hon'ble Chief Minister
"PURATCHI THALAIVI"
**DR. J. JAYALALITHA**

T. 14000

ஜெ. ஜெயலலிதா

முதலமைச்சர்

Gr. 56683
2003

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 30.5.1995

## வாழ்த்துச் செய்தி

தொன்மையும் புராதன கலைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்று தமிழகத்தின் வைணவத் திருக்கோயில்களில் மிக முக்கியமான ஒன்றாக கருதப்படும் பெருமை உடையது, நாகப்பட்டிணம் காயிதே மில்லத் மாவட்டம் மன்னார்குடியில் அமைந்துள்ள அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயில் ஆகும்.


மன்னை நகரில் குடி கொண்டு பல நூற்றாண்டுகளாக பக்தர்களுக்கு அருள் பாலித்து வரும் அருள்மிகு ராஜகோபால சுவாமி குடி கொண்டிருக்கும் இத்திருக்கோயில், அழகிய பிரகாரங்களையும், சிற்பக் கலைகளின் சிறப்பை எடுத்துக்காட்டும் கோபுரங்களையும், சிறப்பான சன்னதிகளையும், வேலைப்பாடுகள் நிறைந்த மண்டபங்களையும் தன்னகத்தே கொண்டு, தமிழகத்தின் கலை மற்றும் கலாச்சாரத்தின் பெருமையை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இத்திருக்கோயிலின் நெடிதுயர்ந்த மதில் சுவர்கள், 'மன்னார்குடி மதில் அழகு' என்கிற சிறப்பினை பெற்றுத் தந்துள்ளன. இந்தியாவின் கலைப் பொக்கிஷங்களில் ஒன்றான இத்திருக்கோயிலின் குட முழுக்கு விழா, சீரோடும் சிறப்போடும் நடைபெறவும், நாட்டின் பல பாகங்களிலிருந்து இறை அன்பர்கள் வந்து இந்த விழாவில் பங்கு கொண்டு இறையருளைப் பெறவும், தேவையான அனைத்து வசதிகளையும் தமிழக அரசும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையும் செய்து கொடுத்துள்ளன.

தமிழகத்தின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றுகின்ற ஆன்மீகப் பலகணியாகவும், கலைக்களஞ்சியமாகவும் விளங்கும் இத்திருக்கோயில், ஒரு புதிய பொலிவினையும், சிறப்பினையும் பெறும் என்பதை அறியும் போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது. தமிழகத்தில் உள்ள தொன்மையான திருக்கோயில்கள் அனைத்தும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு, சிறப்போடு விளங்க வேண்டும் என்பதே தமிழக அரசின் நோக்கமாகும். அந்த வகையில் தொன்மைச் சிறப்புமிக்க அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு புதுப் பொலிவைத் தரும் இந்த குட முழுக்கு விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ.ஜெயலலிதா

ஜெ.ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்



30th Peetadhipathi His Holiness

SRIMATH PARAMAHAMSA SRI KALIAN VANAMAMALAI RAMANUJA JEEYAR SWAMI

Vanamamalai Mutt, Nanguneri - 627 108, Tamil Nadu.

30 वें पीठाधिपति श्रीमत्परमहंस

श्री कलियन वानमामलै (तोदाद्रि) रामानुज जीयर स्वामी महाराज, श्रीतोदाद्रिमठ

नाङगुनेरी, तमिलनाडु ॥ (627 108)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:


# SRI VANAMAMALAI MUTT,

## NANGUNERI - 627 108

ஸ்ரீ சம்பாகரண்ய க்ஷேத்ரமென்றும், தக்ஷிணத்வாரகையென்றும் போற்றப்படும், தற்காலத்தில் மன்னார்குடி என்று யாவராலும் அழைக்கப்படும் திவ்யதேசத்தில், ஸ்ரீசெங்கமலத்தாயாருடன் எழுந்தருளியிருந்து திருவருள் பாலித்துக் கொண்டு விளங்கா நிற்கும் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமியின் திருக்கோவிலில் மஹாஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் 8.6.95 அன்று கொண்டாடப்படுவதையறிந்து எமதுள்ளம் எல்லையில்லாவுவகை கொள்கின்றது. நம்மாழ்வாரது திருவாய்மொழியில் 'தீர்ப்பாரை' பதிகத்திலுள்ள 'உன்னித்து' எனத்துவங்கும் பாசுரம் ஸ்ரீராஜகோபாலஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கப்பட்டு பெருமை பெற்றுள்ளதை யாமனைவரும் நன்கறிவோம். மிகவும பழங்காலந்தொட்டு பற்பல நூற்றாண்டுகளாய் மிகப்பெரிய திருக்கோவிலாக அமைந்து விளங்கிடுமிங்கு குடிகொண்டு நம்மையெல்லாம் ஆட் கொண்டருளும் ஸ்ரீசெங்கமலத்தாயாரது திவ்ய லாவண்ய பூர்ணமான திருமேனியும், ஸ்ரீராஜகோபாலஸ்வாமியின் ஒப்புயர்வற்ற திவ்ய மங்கள விக்ரஹமும் ஸேவிப்போர் கண்களையும், மனங்களையும் ஈர்த்தருளும் பாங்கு இணையற்றவொன்று. மிகவும் பிரஸித்தி பெற்று விளங்கிய ராஜாதிராஜன், குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்களாலும், பின்னர் நாயக்க மன்னர்களாலும் பெரிதும் போற்றப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் வந்த மிகப் பெரிய சீரிய திருக்கோவிலிது. இத்தகைய பெருமை வாய்ந்த திருக்கோவிலில் நடைபெறும் மஹாஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தையொட்டி 'சிறப்புமலர்' ஒன்று சீரிய பாங்கினில் வெளிவருவதையறிந்து பெருமகிழ் வெய்துகிறோம்.

திருக்கோவில் மஹாஸம்ப்ரோக்ஷண திருவிழாவும், இம்மலர் வெளியீட்டு விழாவும் மிகவினிது இடையூறின்றி நிறைவேறிட யாம் எமது குலதெய்வங்களான ஸ்ரீவரமங்கை நாச்சியார், ஸ்ரீதெய்வநாயகன், ஸ்ரீவானமாமலைப் பெருமாள் ஆகியோரது திருவடித் தாமரையிணைகளில் மனதார பிரார்த்திக் கின்றோம். இத் திருப்பணி விழாக்குழுவினர்கள் யாவர்க்கும், திருக்கோவில் கைங்கர்ய பரர்களான அன்பர்கள், பெருமக்கள் யாவர்க்கும் எமது மனம் நிறைந்த மங்களாசாஸனங்கள்.

ஸ்ரீராமாநுஜன்
[ஸ்ரீகவியின் வானமாமலை
ஸ்ரீராமாநுஜ ஜீயர் ஸ்வாமி]


VIGNESH STUDIO

உ

Phone : 22115

Sri Chandramouleeswaraya Namaha :

*SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA*

**His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi**

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

SRIMATAM SAMSTHANAM

**No. 1, Salai Street, Kancheepuram-631 502.**


கோட்டயம் 14.5.95

பகவான் கிருஷ்ணபரமாத்மா கோகுலத்திலும் பிருந்தாவனத்திலும் தன் ஆனந்த விபூதி நிறைந்த பாலலீலைகளைக் கோபரும் கோபியரும் கண்டான ந்திக்கச் செய்தார். தேவரும் முனிவரும் பட்சியாகவும் மரமாகவும் மறைந்து நின்று அதைக் கண்டனர் என்பர். அந்த பாலலீலையைக் காண விரும்பிய கோபிலரும் கோப்ளயரரும் சம்ப்காரண்ய க்ஷேத்திரத்தில் கடும் தவமியற்றித் தவப்பயனாகப் பரமாத்மாவைப் பால கோபாலனாக ராஜகோபாலனாகக் கண்டானந்தித்தனர். அவர்கள் கண்ட அதே திவ்ய மங்கள் விக்ரஹம் தாங்கி ராஜகோபாலனாக காட்சி தருகின்ற சம்பகாரண்யம் என்ற மன்னார்குடியில் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி தேவாலயத்திற்கு சீரமைப்புத் திருப்பணி நிறைவுற்று ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற இருப்பதை அறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறோம். அத்திருப்பணிகளில் முழுவதும் ஈடுபட்டு உதவுகின்ற பக்தர் பெருமக்கள் அனைவரும் பக்தவத்ஸலனான ஸ்ரீ ராஜகோபாலப் பெருமானின் திருவருள் பெற்றுச் சீரும் சிறப்பும் மிக்க நல்வாழ்வு பெறுமாறு வாழ்த்தி ஆசிர்வதிக்கிறோம்.

நாராயணஸ்மிருதி



ஸ்ரீ அகோபிலமடம் ஜீயர் சுவாமிகள்

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபில மடம்
ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ மந்திர்

பூசா ரோடு, கரோல் பாக்,
புதுடெல்லி 110 005

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः
श्रीमते श्रीवण्शठकोप श्रीवेदान्तदेशिक यतीन्द्र महादेशिकाय नमः ॥

ஸ்ரீ மத் அஹோபில மடம் 45 வது பட்டம் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகன் அருளிய

## மங்களாசாஸந ஸ்ரீ முகம்

ஈடும் எடுப்புமில்லா வடிவழகுடைய ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம் நிகழும் யுவ வரு வைகாசி மீ 25 உ (08.06.95) வியாழக்கிழமை நன்னாளில் மன்னார்குடியில் நடக்க இருப்பதைக் கேட்டு மிகவும் மகிழ்கிறோம். ஸுமார் 55 வருஷங்களுக்கு முன்னம் நம் பூர்வாச்ரமத் திருத் தமையனார் ஸ்ரீ உவே. வேதாந்த வாவதூக வில்லிவலம் நாராயணாச்சார்யார் ஸ்வாமியுடன் மன்னார்குடியில் இருந்தபோதே ஸ்ரீ ராஜ கோபாலனுடைய ஒப்புயர்வற்ற திருமேனி அழகிலே ஈடுபட்டுள்ளோம்.


தக்ஷிணத்வாரகை எனப்படும் ஸ்ரீ ராஜ மன்னார்குடியில் ஸ்ரீ ஹரித்ரா நதியில் அவன் செய்தருளிய லீலைகளை ஸ்தல புராணத்தின் வாயிலாகப் பல தடவைகள் கேட்டு மகிழ்ந்துள்ளோம். அன்றிலிருந்தே இவன் அவதரித்தருளிய ஸ்ரீ மதுரையையும், விளையாடியருளிய நந்த கோகுலம், ப்ருந்தாவனம் முதலிய க்ஷேத்ரங்களையும் தர்சிக்க ஆவல் மிகுந்தது.

தற்போது ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாஸ்தாநத்தில் முடிசூட்டப்பட்ட நாம், விஜயயாத்ரையாக ஸஞ்சாரம் செய்து கொண்டு, இவன் ஆட்சி புரிந்த ஸ்ரீத்வாரகா க்ஷேத்ரத்திலும் சென்று இவனை மங்களாசாஸநம் செய்து மேற்கூறிய திவ்யஸ்தலங்களுக்கும் சென்றோம். இவன் வைபவங்களை அங்குள்ளோர் சொல்லக்கேட்டு நம் ஸ்ரீ ராஜ கோபாலனுடைய திவ்ய திருமேனியையே நெஞ்சிற்கொண்டு நெகிழ்ந்திருந்தோம். இந்தத் தருணத்தில்தான் இவனுடைய திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷண விழா மலரில் வெளியிட ஸ்ரீமுகம் ஒன்று கேட்டு எழுதியிருந்தனர்.

இவனுடைய நினைவுத் தேன் பாய்ந்து, தேங்கித் தித்திக்கும் நெஞ்சுடனேயே இந்த ஸ்ரீமுகத்தை வழங்குகிறோம் நாம். இவனுடைய பெருமைக்கேற்ற பெருமையுடன் விளங்கும் இப்பெருந்திருக்கோயிலின் திருப்பணிகள் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளமை, ஆஸ்திகர்கள் அனைவருக்கும் பேரானந்தம் பயப்பதாகும்.

இந்தப்பெருமானுடைய திருவிழாக்கள் யாவும் மேன்மேலும் சிறப்புடன் பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் தடையின்றி நடைபெற வேண்டும். மற்றைய திருக்கோயில்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக இங்கு அமைக்கப்பட்டுள்ள நந்தவனம், சிறந்த முறையில் வளம்பெற்று, எம்பெருமானுடைய திவ்ய திருமேனியில் சாற்றுவதற்கேற்ப பல வண்ண மலர்களையும் திருவாராதனத்திற்கேற்ப பூந்துளவங்களையும் நல்க வேண்டும். சம்பகாரண்யம் என்ற இத்திருத்தலத்தின் திருநாமத்திற்கேற்ப செண்பக மலர்கள் மல்க வேண்டும். செங்கமல நாச்சியார், ஸ்ரீ ராஜகோபாலன் இவர்களுடைய திருவருள்களால் உலகம் முழுவதும் நலம் பெற்றுத் திகழ வேண்டும். இந்தத் திருக்கோயில் நிர்வாஹத்தினரும் மற்றும் பலரும் சிறந்த முறையில் தங்கள் பணிகளைப் பிழையின்றிப் புரிய வேண்டும். ஆகம விதிகளில் சிறிதும் பிறழாதபடி பூஜா முறைகளும் நடைபெற வேண்டும் என்றெல்லாம் நம் ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்து இந்த ஸ்ரீ முகத்தை அருளுகிறோம்.

H.H. The Jeer of Sri Ahobila Mutt



ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன்
ஸ்ரீரங்கராமானுஜ மகாதேசிகன்.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீரங்கம்
ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்

श्रीमुखम्

ஸ்ரீமுகம்

वन्देहं चम्पकारण्य वासिनं कमलापतिम् ।
वन्दारु जनमन्दारं अमन्दानन्द दायिनम् ॥

மன்னுபுகழ் வண்துவரை மன்னன்தான் மன்பதைகள்
துன்னுநல் லின்பமேவித் துன்பமின்றி மெய்ஞ்ஞானம்
பெற்றாங்கே நற்றவப் பண்போடே வீடுமுறச்
சுற்றமாய் வீற்றிருந்தா னீங்கு

ஆசார்யர்கள் பலராலும் மஹான்களாலும் அரசர்களாலும் போற்றப் பெற்ற இவ்வெம்பெருமானின் திவ்ய ஸந்நிதிக்கு ஸம்ப்ரோக்ஷணம் மஹநீயர் பலரின் பல்வகை உதவியால் இனிதே நடைபெறும் இவ்வேளையில் உதவி செய்யப் பாக்கியம் பெற்ற எல்லோருமே பரமனின் க்ருபைக்குப் பாத்திரர்களாகிப் பலவளம் பெற்றுப் பல்லாண்டு இனிதே வாழ வேண்டுமென்று ஸ்ரீரங்கநாதனின் திவ்யமணிப் பாதுகைகளைப் பிரார்த்திக்கிறேன்.

ऊत्थमाशास्य क्रियते
श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकास्मृतिः
श्रीरङ्गरामानुजयतिना ॥
18.5.95

ஸ்ரீரங்கம்

ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்

## "பாஞ்ச ராத்திர ஆகமும் பக்தர்களின் பண்ணார் தமிழ்ப் பாடல்களும்"

## 'ஆகமம்'

"ஆங்" என்ற உபஸர்கத்தோடு கூடின "கம்லு" தாதுவின் மீது "அச்" ப்ரத்யயம் வந்து முடிவுற்ற சொல்லான "ஆகமம்" என்ற சொல்லிற்கு "முற்றிய அறிவுடன் எம்பெருமானைப் பூஜை செய்து அடையக் கருவியான சாத்திரம் என்பதே பொருளாகும்.

(ஆ + கமம்) = மலத்திலிருந்து விடுபட்டுப் பசுவானது உரிய நிறைவினைப் பெறுவதற்கு உறுதுணையானதே ஆகமம் என்பர் சைவத்தமிழர்கள்.

'பாஞ்ச ராத்திரம் என்ற பெயர் வரக்காரணம்'

1) பொறிக்குப் புலனாகிய ஐந்தும் பஞ்சபூதங்களும் ஆகிய இரவுகள் எந்த சாத்திரமாகிய சிறந்த ஒளியின் முன்பு அழிகின்றமையாலும் எல்லா அவித்யைகளையும் அழிக்கின்றமையாலும் "பஞ்ச ராத்திரம்" எனப் போற்றப் படுகின்றது.

ராத்ரயோ கோசரா : பஞ்ச சப்தாதி விஷயாத்மிகா :
மஹா பூதாத்மகா வாத்ர பஞ்சராத்ரமிதம் தத :
அவாப்ய து பரம் தேஜோ யத்ரைதா : பஞ்ச ராதரய :
நச்யந்தி பஞ்ச ராத்ரம் தத் ஸர்வாஜ்ஞான விநாசனம் (விஷ்ணு ஸம்ஹிதை)

2) ஐந்து விதமான அடையத் தகுந்த நல்ல ஞானங்களை அடைவதற்குக் காரணமான நூலே பாஞ்சராத்திரமென்பர்.

ராத்ரம் ச ஜ்ஞான வசநம் ஜ்ஞானம் பஞ்ச விதம் ஸ்ம்ருதம்
தேநேதம் பாஞ்ச ராத்ரம்ஹி ப்ரவதந்தி மநீஷிணம் (நாரத பாஞ்சராத்ரம்)

3) மற்ற பெரிய ஐந்து சாத்திரங்களும் எதன் முன்பு இரவினைப் போன்று மங்குகின்றனவோ? அதுவே பாஞ்சராத்திரம் என்றும் கூறுவர்

பஞ்சேதராணி சாஸ்த்ராணி ராத்ரீயந்தே மஹாந்த்யபி
தத் ஸந்நிதௌ ஸமாக்யாஸௌ தேந லோகே ப்ரவர்த்ததே (பாத்ம ஸம்ஹிதை)

இவ்வாறு இன்னும் பல வாக்கியங்கள் பெயர்க்கான காரணங்களைக் கூறுவதால், விரிக்கின் பெருகுமென விடுத்தனம்.

இப்பாஞ்ச ராத்திரத்திற்கு 'மூலவேதம்', 'ப்ரக்ருதிவேதம்', 'சித்தாந்தம்' என்ற பெயர்களும் உண்டு

ஏஷ ப்க்ருதி வேதாக்ய : வாஸுதேவைக கோசர:
ப்ரவர்ததே க்ருதயுகே தத: த்ரேதா யுகாதிஷு
விகார வேதா : ஸர்வத்ர தேவதாந்தர கோசரா :

மஹதோ வேத வ்ருக்ஷஸ்ய மூலபூதோ மஹாநயம்
ஸ்கந்த பூதா : ருகாத்யாஸ்தே சாகாபூதா : ததா முநே
ஜகந் மூலஸ்ய தேவஸ்ய வாஸுதேவஸ்ய முக்யத:
ப்ரதி பாதகதா ஸித்தா மூல வேதாக்யதா த்விஜ (பாரமேச்வர ஸம்ஹிதா)

ஏவம் நாநாகமாநாஞ்ச ஸாமாந்யம் வித்தி ஸர்வதா
நாம த்வயஞ்ச ஸித்தாந்த பஞ்சராத்ரேதி பௌஷ்கர (பௌஷ்கர ஸம்ஹிதை)

ஆகம ஸித்தாந்தம், மந்த்ர ஸித்தாந்தம், தந்த்ர ஸித்தாந்தம் தந்த்ராந்தர ஸித்தாந்தம் என்றும் கூறப்படுதல் காண்க.

சுமார் 108 ஆகமங்களுள் 'ஸ்ரீப்ரச்னம்' என்பது ஒன்று. சம்பகாரண்யம், திருக்குடந்தை முதலிய க்ஷேத்திரங்களில் இந்த ஆகமத்தின்படியே இன்றும் திருவாராதனம் அநாதியாகவே நடைபெற்று வருகின்றது.

இந்த நூலில் சிறப்பாகத் தமிழ் திவ்ய ப்ரபந்த பாராயணம் கூறப்பட்டுள்ளது கவனிக்கத் தகுந்ததாகும்.

ததாது சுக்ல பக்ஷஸ்ய த்வாதச்யாம் அருணோதயே
க்ஷீராப்தி தடமாஸாத்ய புஷ்கர த்வீப வாஸிந: 40-33
திவ்ய த்ரவிட காதாபி ராக தாள ஸ்வராந்விதை:
காயந்தி கேசிதபரே ஸாமபிஸ் தோஷயந்திச என்றும்

கர்மார்சாம் மகபிம்பஞ்ச பூஜயேத் குரு ஸத்தம:
பூஜாகாலே வேதவித: பூர்வாதீஷு யதாக்ரமம் 42-115
ருக்வேதாதீன் பாடயேயு: ததா த்ராவிட ஸம்ஜ்ஞிகா:
மஹாவிர் நிவேத்யாத் பக்தேப்யோ தாபயேத் க்ரமாத் 42-116 என்றும்

கோதண்டஸ்தே ஸவிதரி யாவத் மகர ஸங்க்ரமம்
தாவத் திநேஷு ப்ரத்யூஷே பகவந்தம் ஜநார்தநம் 46-2
யதாவத் பூஜயேத் தேவி ஸ்நாநார்த்தம் ப்ரோக்ஷணம் சரேத்
அலங்காராஸநம் நீத்வா பக்த காத ஸமந்விதை 46-3 என்றும்

தேவம் ஸம்பூஜ்ய பக்ஷ்யாதி விநிவேத்ய தத: பரம்
பக்த பிம்பாந் பூஜயித்வா தேப்யஸ் தாநி நிவேதயேத் 46-54
காதா பாடக பக்தேப்யோ வைஷ்ணவேப்யஸ்ச தாபயேத் 46-55 என்றும்

காதாபி: ஸ்துதிபிஸ்சைவ ஸம்ஸ்துதே ஜ்ஞாநிபிஸ் ததா
குரு: கவாடமுத்காட்ய பதா தேந ஹரிம் நயேத் 46-69 என்றும்

ஏகைகசோ பக்த பிம்பாந் ஆநாய்ய ச ஹரே: புர:
கந்த மால்யஞ்ச துளஸீம் தத்வா, பக்தஸ்ய மூர்த்தநி 46-72
நிக்ஷிப்ய பாதுகாம் சைவ பூமௌ பக்தாந் நிவேசயேத்
தைருக்தாபி காதிகாபி: தோஷயேத் பக்தவத்ஸலம் 46-73 என்றும்

கூறப்பட்டுள்ள விஷயங்கள் மிகவும் இன்பமளிப்பவை.

ஸ்ரீ மந் நாராயண ஸ்ரீ மந் நாராயண ஸ்ரீ மந் நாராயண

श्रीः

**SRIMAD ANDAVAN**
Poundarikapuram Swami Asramam,
43/A13, Asramam Road, SRI RANGAM

श्रियै नमः श्रीरङ्गनाथपरब्रह्मणे नमः



श्रीमते गोपालदेशिकमहादेशिकाय नमः
श्रीमते श्रीनिवासमहादेशिकाय नमः
श्रीमते रङ्गनाथमहादेशिकाय नमः
श्रीमते श्रीनिवासमहादेशिकाय नमः
श्रीमते नारायणमहादेशिकाय नमः
श्रीमते श्रीनिवासमहादेशिकाय नमः
श्रीमते गोपालार्यमहादेशिकाय नमः
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः
श्रीमते भगवते भाष्यकारायमहादेशिकाय नमः
श्रीमद्भ्यः यामुन नाथ शठकोपमहादेशिकेभ्यो नमः

श्रीरङ्गं श्रीमदाण्डवन् (वल्लत्तूर्) वेदान्तलक्ष्मणमुनेः अविच्छिन्न संन्यस्त गुरुपरम्परा समागतः

## श्रीमत्पौण्डरीकपुरं श्रीमदाण्डवन् आश्रमः

ராஜமன்னார்குடி வித்யா ராஜகோபால ஸ்வாமி உபயகுசலோபர் உ வே திருக்கோயில் திருப்பணிக்குழுவினர் அவர்கட்கு ஸ்வாமி ஸந்நதியில்

விஞ்ஞாபனம் ஶ்ரீமத் ஸ்வாமி பாங்காக எழுந்தருளியிருக்கிறபடி இங்கு ஆச்ரமத்தில் பகவதாராதன, க்ரந்த காலக்ஷேபாதிகள் யதாக்ரமம் நடந்துவருகிறபடி


தேவரீர் அனுப்பிய சிறப்பு மலர் வெளியீடு சுப முஹுர்த்தப்பத்திரிகை கிடைத்தது. அருள்மிகு செங்கமல வல்லீ ஸமேத வித்யா ராஜகோபால ஸ்வாமியும்

அலர்மேல் மங்கையுறை மார்பனாம் திருவேங்கடமுடையானும் ஶ்ரீ ரங்க திவ்விய தம்பதிகளும்

திருப்பணிக்குழுவினருக்கும் சிறப்பாக உதவிய அரசினருக்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பிரிவினருக்கும் விளம்பரம் அளித்தவர்கட்கும் வேதோக்த தீர்க்காயுஸ்ஸையும், அரோக த்ருடகாத்ரத்தையும், ஸர்வஸம்பத் ஸம்ருத்தியையும், லக்ஷ்மீ கடாக்ஷங்களையும், பகவத்பாகவத ஆசார்யபக்தியையும், நித்ய ஸத்கர்மானுஷ்டானங்களில் சிரத்தையையும், ஸர்வாபீஷ்டஸித்தியையும், வித்யாராஜகோபாலஸ்வாமியின் இன்னருளால் நாட்டிற்கும் நாடாளும் அரசிற்கும் மக்கட்கும் பல்வகை வளங்களையும் அளித்து அனுக்ரஹிக்குமாறு நம் பூர்சார்ய ஸந்ததியை ப்ரார்த்தித்து நாராயண ஸ்மரண பூர்வகமாக சுப மங்களங்களை ஆசாஸனம் பண்ணுவதாக (பறவரக்கோட்டை) ஶ்ரீமத் தாண்டவன் அனுக்ரஹித்தபடி.

சுபம் சுபம் சுபம்

நியமனப்படி
மருதூர் ராமஸ்வாமி அய்யங்கார்
ஶ்ரீகார்யம்



பாரத ஜனாதிபதி விருதுபெற்ற
ஆசுகவி ஸார்வபௌம

**ஸ்ரீநிதி ஸ்வாமி**

ப்ரதான தர்மகர்த்தா
நடாதூர் அம்மாள் ஆஸ்தானம்

பாரத ஜனாதிபதி விருதுபெற்ற
ஆசுகவி ஸார்வபௌம
**ஸ்ரீநிதி ஸ்வாமி**
ப்ரதான தர்மகர்த்தா
நடாதூர் அம்மாள் ஆஸ்தானம்

நடாதூர் அம்மாள் ஆஸ்தானம்
நடாதூர் அம்மாள் திருமாளிகை
புராணத் தெரு
வடுவூர் 614 019.

*ஸ்ரீமதே ஹேமாப்ஜ நாயிகா ருக்மணீ ஸத்யபாமா ஸமேத*
*ஸ்ரீராஜகோபால பரப்ரஸ்மணே நம :*
*வாத்ஸ்ய வரத தேசிகாய நம: மன்னார்குடி நிவாஸாய மன்னாராயண மூரத்தயே!*
*மதுராபுர ஜாதாய மதுராக்ருதயே நம : !!*

ராஜமன்னார் என்று பெயரைச் சொன்ன உடனேயே மங்களத்தை எல்லாம் அள்ளி அளிக்கும்படி அழகாக தர்சனம் கொடுக்கும் ஸ்ரீராஜ கோபால ஸ்வாமியினுடைய விசாலமானதும் ஸ்ரீரங்கத்திற்கு ஸமானமானதும் ஸப்தப்ராகாரங்களின் நடுவில் உள்ளதுமான பெரிய கோயில், தாயார் ஸன்னிதி, கோபுரங்கள், மண்டபங்கள் இவைகளை எல்லாவற்றையும் புதிப்பித்து மன்னார்குடி மதில் அழகு என்கிற பழமொழியை மன்னார்குடிக்கோயிலே முழு அழகு என்று சொல்லும்படி இப்பொழுது திருப்பணி செய்து குடமுழுக்கு நடக்க இருப்பதைக் கேட்டு அளவில்லா மகிழ்ச்சியடைகிறேன். அந்த அந்த காலங்களில் அந்த அந்த ராஜாக்கள் புதிது புதிதாக ஜீர்ணோத்தாரணம் பண்ணிக்கொண்டு வந்துள்ளார்கள். அவர்களில் விஜயராகவ நாயக்கர் என்பவர் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர். அதுபோல் இப்பொழுது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும் அவரை அனுஸரித்து இதற்கு உதவிய எல்லா அடியார்களுக்கும் ஸ்ரீராஜகோபால ஸ்வாமியின் திருவருளால் மிகவும் நன்றாக வாழ்ந்து வருவார்கள். அவர்களையும் ஸ்ரீராஜகோபால ஸ்வாமி செங்கமலத்தாயார் இவர்களால் அலங்கரிக்கப்பட்ட திருக்கோயிலையும் அதை உட்கொண்டு விளங்கும் மன்னார் குடியையும் நினைத்து நினைத்து அளவில்லா ஆனந்தம் அடைகிறேன்.

*ராஜ கோபாலக்ருஷ்ணாய ராஜ ராஜ நு தாங்க்ரயே!*
*ராஜீவதன நேத்ராய ராஜவக்த் ராய மங்களம்!!*

இவ்விதம்
*ஸ்ரீநிதி :*

வெ. நடேசன் பால்ராஜ்
இந்து அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை 600 009
நாள் 16.5.95

அன்புடையீர்

ஓங்கி உலகளந்த உத்தமன், எம்பெருமான் நாராயணன் இராஜமன்னார்குடியில் அருள்மிகு இராஜகோபாலனாக எழுந்தருளியுள்ள திவ்ய ஸ்தலத்தில் மஹா ஸம்ரோட்க்ஷணம் நடைபெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. இதில் பங்கு கொண்டுள்ள ஆன்மீகப் பெருமக்கள் அனைவருக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்க ஸ்ரீ ராஜகோபாலனை வணங்கி வேண்டும்,

அன்பன்,

(வெ. நடேசன் பால்ராஜ்)

*Justice K.S. Bakthavatsalam*
Judge
High Court of Karnataka
Bangalore 560 001

ஸ்ரீ ராஜகோபாலன் கோவில் மஹா சம்புரோக்ஷணம் பத்திரிக்கை கிடைக்கப் பெற்றேன். எங்கள் குலம் காக்கும் ஸ்ரீ வித்யா இராஜகோபாலன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடப்பது கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன். சோழன் காலத்தில் கட்டப்பட்டு, நாயக்கர் மன்னர்களால் பராமரிக்கப்பட்டு வந்த கோவிலுக்கு இப்படி கும்பாபிஷேகம் செய்ய முன்வந்த அனைவரையும் பாராட்டுகிறேன்.

இந்த முயற்சியில் ஈடுபட்டு சிறப்பாக கும்பாபிஷேகம் செய்ய முனைந்த அனைவருக்கும் என் வாழ்த்துக்கள். அவனருளாலே அவன் நடத்திக் கொள்ளும் மஹா சம்புரோக்ஷணம் சிறக்க நடைபெற அவனையே வேண்டி நிற்போம்.

K.S. Bakthavatsalam
16.5.1995

**ச.சாவர்க்கர்,** இ.ஆ.ப.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

சென்னை **34**
**29.4.95**

## *வாழ்த்துரை*

மன்னார்குடி அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயிலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிதியுதவியிலும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மற்றும் அரசின் நிதியுதவியிலும் நன்கொடையாளர்களின் நன்மனத்தாலும் பல இலட்சம் செலவில் திருப்பணி மேற்கொண்டு நேர்த்தியாக முடித்து குடமுழுக்கு விழா நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திருக்கோயில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்படாவிட்டாலும் திருவரங்கத்து ரெங்கநாதர் திருக்கோயிலுக்கு ஈடு இணையான கோயிலாகும். பார்த்தாலே பரவசமூட்டக் கூடிய தோற்றம் உள்ளது இந்தத் திருக்கோயில். எண்ணிறைந்த கலைநயம் மிகுந்த கோபுரங்களையும், விமானங்களையும், மண்டபங்களையும், சன்னதிகளையும் கொண்ட இந்தத் திருக்கோயில் தன்னகத்தே அழகிய நந்தவனத்தையும் அடக்கியுள்ளது. இந்தக் கோயிலைச் சேர்ந்த திருக்குளத்தின் அழகைக் காண கண்கோடி வேண்டும். அத்தனைக்கும், மேலும் அழகு சேர்க்கும் வகையில் அழகுற திருப்பணி முடிவுற்றது அறிந்து அளவிலா ஆனந்தம் அடைகிறேன். குடமுழுக்கின் நிமித்தம் வெளியிடயிருக்கும் இந்த மலர் மக்களுக்கு இந்தத் திருக்கோயிலை வந்து வழிபடும் எண்ணத்தையும் அர்ச்சா அவதாரத்தின் மேன்மையையும் கண்டு களிக்கத் தூண்டும் வகையில் அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. குடமுழுக்கு விழாவும், குடமுழுக்கு மலரும் சிறப்புறுவதற்கு செங்கமலத் தாயாரை வணங்கி என்னுடைய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருக்கோயிலின் திருப்பணியில் ஈடுபட்ட அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அனைவருக்கும் இராஜகோபாலசுவாமியின் அருள் என்றென்றும் கிட்டுமென்பதில் ஐயமில்லை.

*ச.சாவர்க்கர்*
ஆணையாளர்

R. பாஸ்கரன் I.A.S.
மாவட்ட ஆட்சியர்,
நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்.

நாகப்பட்டினம்
03-06-95

# வாழ்த்துரை

தமிழகத்தைப் பொறுத்தவரை மிகச் சேய்மையான காலந்தொட்டு கண்ணனை மாயோனாகக் கொண்டு வழிபடும் மரபு தொடர்ந்து வருகின்றது. சிலப்பதிகாரம் யாத்த இளங்கோ அடிகள் திருமாலின் கிடந்த, நின்ற கோலங்களைத் தம் நூலில் மிகச்சிறப்பாக பேசுகின்றார்.

" விரிதிரைக் காவேரி வியன் பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும், " - என்றும்
"செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்" - என்றும்

போற்றிப் பரவுகிறார். ஆழ்வார்களின் பாசுரங்கள் அழகுத்தமிழில் நம் உள்ளத்தை உருகச் செய்யும் இயல்புடையவையாகும்.

சோழநாட்டு வைணவத் திருப்பதிகளாக (ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருக்கோயில்கள்) 40 திருக்கோயில்கள் குறிக்கப் பெறுகின்றன. இவற்றுள் இருபதுக்கும் மேற்பட்ட திருவூர்கள் நாகை காயிதே-மில்லத் மாவட்டத்தில் இருப்பதனை நோக்கும் போது வைணவம் இங்கு மலர்ந்த பாங்கினை அறியமுடிகிறது.

நின்ற கோலத்தில் பரவாசுதேவராக திரு மூலத்தானத்தில் எம்பெருமானும், வண்துவராபதி மன்னன் கோபாலனாக தேவியர் இருவருடன் உற்சவரும் கோயில் கொண்டு செங்கமலவல்லித் தாயாருடன் அருள் பாலிக்கின்ற இத்திருத்தலம் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு கடவுள் மங்கலம் செய்யப் பெறுகின்ற பெருவிழாவைக் காணப் போகின்றது.

தமிழக அரசின் செயல்பாடுகள், குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பேரார்வம், அறவுள்ளம் கொண்டவர்களின் சீரிய முயற்சி , மன்னை வாழ்மக்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றோடு இப்பெருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. அது மங்கலம் பொழியும் திருவிழாவாக மலர பிரார்த்திக்கிறேன்.

R. பாஸ்கரன்

**ஓ.எஸ்.மணியன்**
தலைவர் & நிர்வாக இயக்குநர்

**பூம்புகார்**
**தமிழ்நாடு கைவினை பொருட்கள் வளர்ச்சிக் கழகம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பேரன்புடையீர் வணக்கம்,

மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில் நேற்று காடடர்ந்த இயற்கை அழகு குறைந்த நிலை நாம் கண்டது. இன்று காடழிந்து நந்தவனமாக்கி, சிதறுண்ட கோபுரங்கள் சீர்பெற்று சிறப்பெய்திருக்கும் நிலை கண்டு உளம் மகிழ்கிறது. இத்திருக்கோவில் சிற்ப அழகை கட்டிட அழகை, கலையழகை, தெய்வத்திருவழகை, மறைபோற்றும் நல்லோர், நானிலத்தோர், கண்டு மகிழும் போது, இவ்வாலயம் மன்னராட்சி காலத்தில் கட்டியதாக நாம் அறிகிறோம். இன்று இக்குடமுழுக்கு பணி இவ்வளவு சீக்கிரமாக, இவ்வளவு அழகாக இலக்கணம் மாறாமல் ஆகம விதிகளின்படி அனைத்துப் பணிகளும் மக்களாட்சி காலத்தில் முற்றுப்பெற முடித்திருக்கும் அத்திருக்கரங்கள் பற்றி வணங்கி மகிழ விழைகின்றேன். நிதி உதவி அளித்து ஊக்கமளித்திட்ட தமிழகத்தின் ஆலயங்களின் ஒளிவிளக்கு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் ஆலயப்பணி மேற்கொண்டோருக்கும் எனது வணக்கங்கள்.

ஓ.எஸ்.மணியன்

ஸ்ரீ

# வாழ்த்துரை

Ln. R.S. கோபாலன்
அறங்காவலர் குழு உறுப்பினர்
அருள்மிகு இராஜகோபாலஸ்வாமி தேவஸ்தானம்
மன்னார்குடி.

மன்னார்குடி
26 -05 - 95

இயற்கை அன்னையின் பேரெழிலும் பெருவளமும் செறிந்து திகழ்வதும், கலை வல்ல பெரியோர்களும், கற்றறிந்தோர் பலரும் வாழ்வதும், செல்வம் கொழிக்கும் திருவுடையோர் பலர் உறைவதும், ஸ்ரீ செங்கமலவல்லி நாச்சியார் சமேத ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி அருளுவதுமான சிறப்புகள் பல பெற்ற மன்னை நகரத்திற்குத் திலகமாக விளங்குவது ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி திருக்கோயிலாகும் . தஞ்சைத் தரணியின் தலை சிறந்த நகரமான இந்த ஸ்ரீராஜமன்னார்குடியில் இதற்கு முன் சரித்திர காலத்திலும் எந்த மாமன்னரும் சாதித்திராத வகையில் ஒரு மா பெரும் தெய்வீகப் பணியாக இத்திருக் கோயிலின் புனரமைப்பு, மற்றும் குடமுழுக்கு விழா, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது பேருதவியால் நடைபெறுவது நமக்கு ஒரு பெரும் அதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும். இப்பெரு விழாவில் பங்கு கொள்ளும் வாய்ப்பு கிட்டியமைக்கு நான் மிகவும் கடமைப்பட்டவனாவேன். இவ்விழாவில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் ஸ்ரீ ருக்மணி சத்யபாமா ஹேமாப்ஜநாயிகா சமேத ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமியினுடைய பரிபூர்ண அருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஆர். எஸ். கோபாலன்.

டி.எஸ்.சுவாமிநாத உடையார், (Ex. M.L.A.)
25, காந்தி நகர், கும்பகோணம்

மானுடப் பிறவி கிடைப்பது அரிது. மானிட ஜென்மா கிடைத்தபின் தர்மகைங்கர்யங்கள் செய்பவர்கள் மிக அரிதாக இருக்கிறார்கள். உலக நன்மைக்காக ஆண்டு தோறும் பிரம்ம யக்ஞங்கள் நடத்தி, உயிர்களின் நன்மைக்காகத் தினந்தோறும் காயத்ரி மந்திரத்தினை அனுசரிக்க வேண்டுமென்று அறிவுறுத்தி தம் சந்ததிக்குச் சொல்லிக் கொடுப்பவர்களும் குறைந்து வருகிறார்கள்.

நம் தமிழ்நாட்டிற்கே தனிப்பெருமை சேர்ப்பன திருக்கோவில்கள் ஆகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் ஔவையார் நமக்கு அருளியுள்ளார். நாம் புதிதாக ஆலயங்களையும் கட்டத் தொடங்குவதை விட நம் முன்னோர்கள் கட்டிவைத்தத் தொன்மையான ஆலயங்களைப் பழுதுநீக்கிப் பராமரித்தல் மிகப்பெரிய இறைத் தொண்டாகும்.

அன்பு நெறியாகிய ஸ்ரீ வைஷ்ணவ நெறியை உயிரெனக் காத்து உடலென வளர்த்தவர்களாகிய நாயக்க மன்னர்களின் திருப்பணிகளால் உயர்ந்த கோவில் இது. பிற்காலத்தில் இந்த ஆலயம் பல பெரிய செல்வந்தர்களால் பரிபாலிக்கப்பட்டு இந்த நூற்றாண்டின் முற்பகுதிவரை மன்னை நகரப் பெருநிலக்கிழார் குடும்பங்களில் நிர்வாகத்தில் இருந்து வந்துள்ளது.

கண்ண பரமாத்மா தன் ஜோதி சென்ற பிறகு அவருடைய திருவிளையாடல்களைக் காண விரும்பி துவாரகையை நோக்கிச் சென்ற கோபால கோப்பிரளய மாமுனிவர்கள் நாரதருடைய தூண்டுதலினால் உலகத்தில் தரணி மிக்க செண்பகாரண்யத்தில் தவம் இயற்றி அவருடை 32 காட்சிகளில் கண்டுகளித்து சேவித்தனர். இதில் முதல் காட்சி சிறையில் நான்கு கைகளுடன் வாசுதேவனாக தேவகி கண்ட கோலம். 32 வது காட்சி ஹரித்ராநதி திருக்குளத்தில் நீர் விளையாட்டாடி முடிவில் மிகுந்திருந்த ஒரு வஸ்திரமும், ஒரு தோடும் ஒரு குண்டலமும் அணிந்து வண்டுவராபதி மன்னனாகத் திகழ்வது தற்சமயம் கருவறையில் மூலவர் உற்சவ மூர்த்திகளாக நாம் காணும் சேவையாகும்.

"பாஞ்சராத்திரம்" இதற்கு பகவத் சாஸ்த்ரம் ஸாத்துல தந்திரம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. நம்முடைய பெரிய கோவில், பஞ்சராத்திரத் திருக்கோவில் ஆகும். ஐஸ்வர்யம், வீரியம், புகழ், ஞானம், வைராக்கியம் என்ற ஐந்து கல்யாண குணங்களை உடைய பகவான் ராஜ கோபாலனே முழுமுதற்கடவுள் என்ற கொள்கையைக் கொண்ட கோவில் ஆகும்.

இத்திருக்கோவிலுக்குப் பங்குனி மாதம் பிரம்மோத்ஸவம் ஆனி மாதம் தெப்பம். ஸ்ரீ ராஜகோபாலசாமி கோவில் எட்டாவதவதாரத்தில் எழுந்தருளியிருக்கிறதால் பசுக்களோடு இருக்கிறார். விஷ்ணுவிற்கு உரிய சங்கு சக்கரம் இல்லாது உபயகரங்கள் செண்டுடன் ஸேவை சாதிப்பது இந்த ஷேத்திரத்தின் விசேஷம். இக் கோவில் அர்ச்சகர்களுக்கு தீட்சிதர் என்று பெயர்.

திருவிழாக்காலங்கள் நம் ஊரில் தனி விசேஷம். குறிப்பாக கருடசேவை, வெண்ணெய்த்தாழி திருத்தேர் ஆகியன ஆகும். எங்குமில்லாத முறையில் பக்தர்கள் கோபாலனுக்கு வெண்ணெய் வழங்கிச் சாத்துவது இந்த ஊரில்தான் காணலாம். வெண்ணெய்த்தாழி அன்று கோபாலன் கோயிலிலிருந்து புறப்பட்டு கோவில் வந்து சேருகிற வரையில் பக்தர்கள் வெண்ணெய் வாங்கிச் சாத்துவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

திருத்தேர் வடம்பிடித்தல் ஆண்டுதோறும் எம்பள்ளித் தலைமையாசிரியர் ஆசிரிய ஆசிரியைகள், மாணவச் செல்வங்களால் ஏற்று நிறைவேற்றப் படுவதை தேசிய மேல்நிலைப்பள்ளி செய்துள்ள பாக்கியமாகக் கருதுகிறோம்.

நவதீர்த்தங்களால் புனிதமான "மண்ணில் மிக்க மன்னார்குடித் தலத்தில் நம்முடைய ஸ்ரீ ராஜகோபாலன் ஸ்ரீ செங்கமலத்தாயார் 16 கோபுரங்களின் புனரமைப்புப்பணியும் 18 விமானங்களின் வடிவமைப்புத் திருத்தப் பணிகளும் நிறைவு பெற்று குடமுழுக்கு கொள்வதறிந்து மகிழ்ச்சியுடன் போற்றி வணங்குகிறேன்."

நாம் உய்யும் பொருட்டும், நமது நாடு உய்யும் பொருட்டும் செய்யப்படுவதுதான் கும்பாபிஷேகம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று சாஸ்திரம் வலியுறுத்துகின்றது. கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்திடவும், இப்பெரும் தொண்டில் பங்கேற்றோர் அனைவருக்கும் திருப்பணி குழுவினருக்கும் பாராட்டு தெரிவித்து மேலும் வெளியிடப்படும் விழா மலர் நல்ல மலராய்ப் பொலிவுடன் அமையவும் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பக்தியே முக்தி

என்றும் ஆன்மீகத்தில்

*டி.எஸ். சுவாமிநாதன்*

## கு.பாலகிருட்டிணன்

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,
முன்னாள் தலைவர், மன்னார்குடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்,
முன்னாள் தலைவர், கூட்டுறவு நகர வங்கி, மன்னார்குடி

மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் மகா கும்பாபிஷேக விழா வருகிற 8.6.95 ல் நடப்பதில் மன்னைவாழ் மக்களோடு நானும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்திலேயே மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோயில் வரலாற்று சிறப்பு மிக்க வைஷ்ணவ கோயில் ஆகும். ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த கோயிலின் 16 கோபுரங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகும். பண்டைய கலை, கலாச்சாரம், ஓவியம், சிற்பங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டுமென்பதில் எந்த ஒரு அரசும் கவனமாக இருக்கும். இப்பொழுது உள்ள தமிழக அரசும், பொதுமக்களும் முனைப்பாக இருந்து சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து பெரியகோயிலின் குடமுழுக்கு விழாவினை நடத்துவதில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். இக்கோயிலுக்குச் சென்று இப்பொழுதும் ஆயிரக்கணக்கான வருமானமுள்ள நிலங்கள் இருந்தாலும் யாரும் செய்ய முடியாத அளவிற்கு மிக துணிவோடும் எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடனும் திருப்பணி செய்து முடித்திருக்கின்ற அறங்காவலர் குழுவினருக்கும் திருப்பணி குழுவினருக்கும் எனது பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னனம்
கு. பாலகிருட்டினன்

**Mannai M. Ambigapathy, Ex. M.L.A.**
Former Vice - Chairman
State Advisory Board fpr National Savings
14, Athinayakkanpalayam St.,
MANNARGUDI - 614 012

நமது நகரத்தின் புராதன பெருமையை பறைசாற்றும் அற்புதமான சின்னமாக விளங்குவது திரு ராஜகோபாலசுவாமி திருக்கோயில்.

நமது நகரமே அந்தக் காலத்திலேயே திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகர அமைப்பாக விளங்குவது நமது நகர மக்களில் நிரம்ப பேருக்குப் புரிய வாய்ப்பில்லை.

நகரத்தின் இயற்கைச் சூழலைப் பாதுகாக்க பல இடங்களிலும் குளங்களை அமைத்து அதற்கும் பாசன வசதிகளையும் உருவாக்கியுள்ளார்கள் நமது முன்னோர்கள்.

திரு ராஜகோபால சுவாமி திருக்கோயிலை மையமாகக் கொண்டு வீதிகள் அமைந்துள்ளது. நமது நகராட்சி நூறு ஆண்டுகளைக் கடந்து விட்டதாகும்.

தமிழ்நாட்டின கலையையும் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் தொன்மை வாய்ந்த சின்னமான நமது பெரியகோவில் பாதுகாக்கப் படவும் கோபுரங்களும் அதனைச் சார்ந்த பல அமைப்புகளும் பழுது பார்க்கப்பட்டு திருப்பணி செய்யப்படுவது சிறப்பானதாகும்.

நமது நகரத்திற்கு எழில் கூட்டும் பெரிய கோவிலும் கெருட ஸ்தம்பமும். அரித்திராநதி என்னும் தெப்பக்குளமும் நமது பெருமையை உயர்த்துவதாக அமைந்துள்ள சின்னங்களாகும். நமது பெரிய கோயிலை அழகூட்டிய நிலையில் உருவாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட திருப்பணிக் குழுவினரும் உதவிகள் செய்த நகரப் பெரியோர்களும் அதிகாரிகளும் உழைத்த தொழிலாளர்களும் விற்பன்னர்களும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

மன்னார்குடி மதிலழகு என்று பிற ஊரில் உள்ளவர்கள் பெருமையாகக் கூறுவார்கள். மகத்தான நாடக திரைப்படக்கலைஞர் M.G. நடராஜபிள்ளை, கோட்டு வாத்திய கலைஞர் சாவித்திரியம்மாள், தவில் கலைஞர் சின்னபக்கிரியா பிள்ளை, நாதஸ்வரக் கலைஞர் M.S.பரமசிவம் பிள்ளை, வலையப்பட்டியின் குருநாதராக விளங்கிய ராஜகோபாலப் பிள்ளை, முகர்சிங் கலைஞர் நடேசபிள்ளை, கஞ்சிரா வித்வான் தெட்சிணாமூர்த்தி பிள்ளை, போன்றோர் பிறந்ததும், வளர்ந்ததும் வாழ்ந்ததும் வாழ்வதும் நமது பெரிய கோவிலைச் சுற்றித்தான்.

நமது பாரம்பரியத்தின் சின்னமாக திகழும் மிக பிரம்மாண்டமான பெரிய கோவில் திருப்பணி சாதாரணமானதல்ல. இதனை நிறைவேற்றிய அற்புதத்தை ஊர் தெரியச் செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தையும் வாழ்த்தையும் பாராட்டுகளையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அன்பன்

மு. அம்பிகாபதி

T. 14000

**மன்னை சா.ஞானசுந்தரம் B.A., Ex. M.L.A.,**
அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம்,
நாகை காயிதே மில்லத் மாவட்டம்

அன்புடையீர்

வணக்கம், மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழா மலர் வெளியிடுவது கண்டு மகிழ்கின்றேன்.

ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சமம் என்ற சமய நெறி போற்றும் வகையில் இன்றைய திருக்கோவில்கள் தமிழகத்தில் செம்மையாகச் செயல்படும் வண்ணம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் நடைபெறுவது கண்டு ஆன்றோர் சான்றோர் அறவோர் அகம் மகிழ்கின்றனர்.

மன்னையில் அமைந்துள்ள இத்திருக்கோவில் வரலாற்றில் புகழ் பெற்ற ஒன்றானாலும் இடைக்காலத்தில் அழகும் பொலிவும் குறைந்து காணப்பட்டது.

இதனை யார் செய்வார் எவர் முடிப்பார் என்று எண்ணிய வேளையில் இப்பெரும் பணியை திருப்பணியை அனைத்து வளாகத்தையும் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ளும் நல்லோரை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

பல ஆண்டுகளாக எடுக்கப்பட்ட முயற்சி பலனின்றி தற்போது குறுகிய காலத்தில் தொடங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்காலத்தில் பணி நிறைவு பெற்று சிறப்பு பெறுவது கண்டு மன்னை மக்கள் மனம் குளிர்கின்றனர்.

இப்பணியைப் பாராட்டி இப்பணியில் தன்னை அயராது ஈடுபடுத்திச் செயல் வடிவம் தந்து சிறப்பித்த சான்றோர் திருப்பணிக்குழுவினர் அறங்காவலர் குழுவினர் ஆலய அறநிலையத்துறை நிர்வாகத்தினர் அத்துணை பேரையும் உளமாற பாராட்டி மகிழ்கின்றேன்.

நன்றி!

அன்புடன்
சா. ஞானசுந்தரம்

**கே. ராமச்சந்திரன்**
முன்னாள் எம்.எல்.ஏ.,
87 கோபால சமுத்திரம் தெற்கு வீதி
மன்னார்குடி.

மக்கள் முழுமையான நல்வாழ்வைப் பெற்று மகிழ்வதற்கு மண்வளம் (ஆன்மீக வளம்) தருவது திருவருளைச் சுரந்து நிற்கும் திருக்கோயில்களாகும் 300 ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையான திருப்பணியை நிறைவேற்றி திருக்குடமுழுக்கு காணும் மன்னை அருள்மிகு இராசகோபாலசுவாமி திருக்கோயில் குடமுழுக்கைக் கண்டு வழிபடும் மக்கள் அனைவரும் பொலிவுமிக்க புதுவாழ்வைக் காண விரும்புகிறேன்.

அன்புடன்

கே. ராமச்சந்திரன்

**Siva. Rajamanickam,**
Ex. MUNICIPAL CHAIRMAN,
MANNARGUDI.

33, Big Kammala Street,
MANNARGUDI - 614 001.

நம் மன்னை நகருக்கு பெருமை சேர்க்கும் அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில் திருப்பணி நிறைவு பெற்று 8-6-95 ல் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சுமார் 325 ஆண்டுக்குப் பிறகு முழுமையாக 16 கோபுரங்களுக்கும், 17 விமானங்களுக்கும் திருப்பணி நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. நாம் வாழ்கிற காலத்தில், இத்திருக்கோவில் கும்பாபிஷேகத்தை காண்பது மிகப் பெரிய பேறு. எல்லோருக்கும், எல்லா வளங்களும் கிடைக்க அருள்மிகு ராஜகோபாலன் செங்கமலத்தாயார் அருள் பாலிக்க வேண்டுகிறேன்.

சிவா. ராஜமாணிக்கம்

**வி.ஸ்ரீநிவாசன்,** பி.எஸ்சி., எல்.டி
தலைமை ஆசிரியர் (ஓய்வு)
தேசிய மேல்நிலைப்பள்ளி
124 மேல முதல் தெரு,
மன்னார்குடி 614 001

## வாழ்த்துச் செய்தி

*அன்புடையீர்!*

அன்பும் அடக்கமும் நம் பாரதக் குடும்பப் பெண்டிரின் அடிப்படைக் கலாசாரப் பண்புகள் ஆகும். அத்தகைய பெண்டிருக்கு எடுத்துக்காட்டாக நிற்பது போல் படிதாண்டாப் பத்தினித் தெய்வமாக ஆலயத்தின் நான்கு மதில் சுவர்களுக்கு உள்ளேயே வீற்றிருந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ செங்கமலத் தாயார் சமேதராய் விளங்கும் ஸ்ரீ வித்யா ராஜகோபாலனின் பேரழகை வர்ணிக்க நம்மிடம் வார்த்தை கிடையாது.

அவனது பரிபூரண லாவண்யத்தில் ஒன்றித் திளைத்த மன்னார்குடிப் பெரியவர் எனப்படும் பிரும்மஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகள், தனது கஸ்தூரி திலகாங்க பாலம் எனத் தொடங்கும் பாடலில் சொல்வது போல நெற்றியில் கஸ்தூரி திலகமும், சிவந்த உதடுகளில் விரிந்த புன்னகையும் கொண்டு, ஆயிரம் மன்மதனைப் போல அழகுடன் நிரம்பி வழியும் வெண்ணெய்க் குடத்தை அணைத்துக் கொண்டு, தவழும் நிலையில் பச்சிளம் பாலகனாய்ப் பல்லக்கில் சேவை சாதிக்கும் அந்த நவநீத கிருஷ்ணனைத் தரிசித்த மாத்திரத்தில், அவனது முன்னழகு நமது முன்வினை தீர்க்கும் பின்னழகு பிறவிப் பிணி அறுக்கும்.

இத்தகைய அவனது அழகுக்கு அழகு சேர்ப்பது போல், அவனுறையும் ஆலயத்தின் புதுப்பிப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, நேரில் வந்து அந்தப் பணிகளைப் பார்வையிடும் பெரும் பேறு, பல தடவைகள் எனக்குக் கிட்டியது.

அப்போதெல்லாம், சுமார் 880 ஆண்டுகளுக்கு முன்பு, இவ்வாலயத்தை எழுப்பிய முதலாம் குலோத்துங்க சோழனே, என்னுடைய பழைய மாணவர்கள் உருவில் இப்போது நேரில் வந்து நின்று ஆட்களை ஏவி, இக்கோயிலின் திருப்பணியைச் செய்து கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றும். அனைத்துக் கோபுரங்கள், விமானங்கள் மதில் சுவர்கள், மற்றும் எந்தவொரு இடமும் விடாமல் மிக விரிவான திருப்பணி வேலைகள் கடந்த 322 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். என் மாணவர்களது ஆன்மீகத் தொண்டை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அவர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக நின்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டு இவ்வரிய பணியினை நிறைவு செய்துள்ள மற்றவர்களுக்கும், அனைவரின் இனிவரும் சந்ததிகள் சிறக்க, ஸ்ரீசம்பகவல்லித் தாயார் சமேத ஸ்ரீவித்யா ராஜகோபாலனின் பரிபூரணமான திருவருள் என்றென்றும் நீக்கமற நிறைந்து கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

உள்ளன்புடன்
*வி.ஸ்ரீநிவாசன்*

## அறங்காவலர் குழு

கா. பிச்சைக்கண்ணு - தலைவர்
ஆர். எஸ். கோபாலன்
வி. கதிர்வேல் முனையதிரியர்
ஆர். என். சந்தான கோபாலன்
கோ. சதாசிவம்.

அறங்காவலர்கள்/ திருப்பணிக்குழு உறுப்பினர்கள்.
எஸ். ஜெகதீசப் பெருமாள் எம். ஏ.,பி.எல்.
நிர்வாக அலுவலர்.

## திருப்பணிக்குழு

கு. சீனிவாசன், பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., - தலைவர்

### உறுப்பினர்கள்

திரு. ஆ. தி. மாதவன்
திரு. கே. எஸ். சீனிவாசன்
திரு. ஆர். காமராஜ்
திரு. கை. இளந்தமிழன்
திரு. ஆர். ராஜகோபாலன்
திரு. சோலை எஸ். நடராஜன்
ஸ்தானீகம் திரு. எஸ். இராகவ தீட்சிதர்.
திரு. சி. இராஜகோபால (தம்பி) தீட்சிதர்
திரு. ஜெ. அர்ஜுனன்
திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
திரு. டி கோவிந்தராஜ்
திரு. எம். கே. சிவசுப்பிரமணியன்
திரு. சி. வெங்கடேசன்
திரு. பி. இராஜகோபால்

# மலர்க்குழு

திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் M.A.

திரு. வடுவூா நாராயணன் - மன்னார்குடி

திரு. G. சீனிவாசன் - 'THE HINDU' தஞ்சாவூர்

திரு. த. பத்மநாபன் - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

புலவர் திரு. ஆர். செம்பகேசதீட்சிதர் - மன்னார்குடி

அமைப்பு ஆலோசகர் : **திரு. R. பாஸ்கரன்** I.A.S.
மாவட்ட ஆட்சியர்,
நாகை காயிதே மில்லத் மாவட்டம்

பதிப்பாசிரியர் : **குடவாயில் பாலசுப்ரமணியன்.**
எம்.ஏ.,
சரஸ்வதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

# சிறப்புமலர்.....


மன்னு தன் பொழிலும் வாவியும் மதிளும் மாட மாளிகையும் மண்டபமும், விண்முட்டும் கோபுரங்களும் எழிலார் விமானங்களும், புள் அமர்ந்த பெருந்தூணும் கொண்டிலங்கும் இராஜ மன்னையில் எம்பெருமானார் துவாரகை மன்னனாகக் காட்சி நல்கி அருள்பாலிக்கின்றார். கோவிந்தன் உறைகின்ற இப்பெருங்கோயிலுக்கு பூரணமாக கடவுள் மங்கலமும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவும் நாயக்க மன்னன் விஜயராகவன் காலத்தில்தான் (322 ஆண்டுகளுக்கு முன்பு) நிகழ்ந்தது. மீண்டும் அதே ஜலசம்ரோக்ஷணமும், மகாசம்ரோக்ஷணமும் யுவ ஆண்டு வைகாசித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் வியாழக் கிழமையில் (8.6.95) நிகழ்ந்து பரந்தாமனின் பேரருளாம் கருணை வெள்ளத்தால் மனம் குளிர்ந்து நிற்கின்றோம். வாழ்வில் கிட்டாத பெரும் பேற்றைப் பெறுகின்றோம்.

மங்கலம் நிறைந்த இப்பெரு விழாவின் நினைவாக இச்சிறப்பு மலரினை வெளிக்கொணர்வதில் உள்ளம் பூரிப்பு கொள்கின்றோம். காரார்ந்த திருமேனிக் கண்ணன் அமர்ந்துறையுமிடமான சீரார்ந்த மன்னை நகரின் வரலாற்றுப் பெருமைகள், தல மகாத்மியம், செண்டலங்காரரின் சீர்மிகு கீர்த்திகள், அவனுறையும் திருக்கோயிற் பெருமைகள், அவனை போற்றிப் பாடிய மன்னர்களின் கவிதைகள், அவன் பவனி வரும் திருவிழாக்கள், மன்னார்குடி நகரின் சிறப்புகள், சுற்றுப்புற ஊர்களின் கீர்த்திகள், நாகை மாவட்டத்தின் உயர்வுகள், வைணவத்தின் சிறப்பு என பல்வேறு கோணங்களில் ஆய்ந்து முத்தெடுத்த வித்தகர்களின் கட்டுரைகளே இம்மலரில் இடம் பெற்று மணம் பரப்புகின்றன.

புரவலர் பெருமக்களின் கொடுத்துச் சிவந்த கரங்கள், கோபாலனின் திருப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அடியார்கள், திருக்கோயில் வாரியம் அமைத்து இடிபாடுற்ற கோயில்களை எழிலார் குன்றங்களாக மாற்றி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் கருணை உள்ளம் ஆகிய அத்தனையும் இணைந்து மன்னையில் திகழும் இம்மாதவன் கோயிலை இன்று மாணிக்கக் கோயிலாக மாற்றியுள்ளது. சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கைகளும் பங்கயக் கண்ணனின் பெருங்கருணைப் பார்வையும் இவர்களுக்கு என்றும் துணை நின்று அருள் சுரக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

செங்கமல நாயகியோடு சேர்ந்திலங்கும் எங்கள் நம்பி இராஜகோபாலன் திருவடிகளில் மங்கலச் சீர் உரைக்கும் இவ்விழாமலரினை காணிக்கை ஆக்குகின்றோம்.

மலர்க் குழுவினர்



# சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| 1. மன்னை நகரமும் மாண்புடைய கோயில்களும் | குடவாயில் பாலசுப்ரமணியன் | 5 |
| 2. மன்னார்குடித் தலச் சிறப்பு | ஆர். ராமசேஷன் | 13 |
| 3. செண்டலங்காரர் | டாக்டர் உவே. சாமிநாதய்யர் | 23 |
| 4. மன்னையை வாழ்விக்கும் மாலவன் | புலவர் விஜயராகவன் | 26 |
| 5. செங்கமலவல்லித் திருமண வைபவம் | என். விஸ்வநாதன் | 28 |
| 6. மன்னாருதாச விலாசம் | இரா. சீனிவாசன் | 30 |
| 7. ஆண்டுமுழுதும் விழாக்கொள்ளும் கோபாலன் | ஆர். செம்பகேச தீட்சிதர் | 32 |
| 8. மன்னார்குடி ராஜகோபாலன் | ஸ்ரீநிதி ஸ்வாமி | 34 |
| 9. காணவேண்டிய கலைச் சிற்பங்கள் | கி. தனவேல் | 37 |
| 10. மாதவத்தால் மன்னைக்கு வந்த மாதவன் | எஸ். ஜெகதீச பெருமாள் | 39 |
| 11. வேதமும் வண்துவராபதி மன்னனும் | V. தேசிகாச்சாரியார் | 40 |
| 12. இராஜகோபாலனைப் பாடிய சஹஜி மன்னன் | கண்ணா பாலசுப்ரமணியன்<br>லலிதா விஸ்வநாதன் | 43 |
| 13. மன்னார்குடி பெரியவாள் | வடுவூர் நாராயணன் | 47 |
| 14. மன்னார் மோகனப்பள்ளு | | 52 |
| 15. கோபால விம்சதி | சக்தி சரவணன் | 55 |
| 16. கருட ஸ்தம்பம் | இராசு பவுன்துரை | 58 |
| 17. எழில் சிந்தும் எம் நகர் | து.ப. நடனம் | 60 |
| 18. நூறாண்டுகளுக்கு முன்பு மன்னை நகரம் | கு. சீனிவாசன் | 63 |
| 19. மன்னை செண்டலங்கார வள்ளல் | ப.வெ. நாகராசன் | 65 |
| 20. மன்னார்குடியில் பாண்டியர் கால வணிக நகரம் | இல. தியாகராஜன் | 68 |
| 21. இந்திய நாட்டின் முதல் நடமாடும் நூலகமும் முதியோர் கல்வியும் | த. பத்மநாபன் | 71 |
| 22. மன்னையில் ஒரு தேவாரத்தலம் | தி.ந. இராமச்சந்திரன் | 74 |
| 23. ரிஷியூர் சிவாலயம் | விவேகானந்த திவாகரன் | 76 |
| 24. நாயக்கர் காலத்து நாட்டிய ஆசான் | B.M. சுந்தரம் | 78 |
| 25. மன்னார்குடி செப்பேடுகள் | புலவர். செ. இராசு | 80 |
| 26. நாகப்பட்டினமும் மாவட்டமும் ஒரு கண்ணோட்டம் | R. பாஸ்கரன் I.A.S. | 85 |
| 27. நாகைமாவட்டத்தில் இப்படியும் ஒரு கிராமம் | G. சீனிவாசன் | 89 |

| | | |
|---|---|---|
| 28. நாகைமாவட்டத்துத் திவ்ய தேசங்கள் | | 91 |
| 29. கோயில் கன்றாப்பூர் நடுதறிநாத சுவாமி திருக்கோயில் | மு. கார்த்திகேயன் | 94 |
| 30. கல்வெட்டு கூறும் ஆலய வழிபாடு | இரா. நாகசாமி | 95 |
| 31. தமிழக வரலாற்றில் ஸ்தபதிகள் | வே. இராமன் | 101 |
| 32. தஞ்சைக் கலைக்கூட வைணவத் திருமேனிகள் | சா. ஜனகராஜன் | 105 |
| 33. ஒளிபதி விஷ்ணு கிருகம் | இரா. கலைக்கோவன் | 107 |
| 34. ஏரார் பொழில் தூழ் இடவெந்தை | சீ. வசந்தி | 114 |
| 35. சங்கு | என். ஸ்ரீனிவாசன் | 117 |
| 36. சக்கரத் தண்ணல் | ஆ. வீரராகவன் | 122 |
| 37. திருக்கோயில் போற்றுவோம் | எஸ். வெங்கட்ராஜலு | 126 |
| 38. மன்னார்குடியில் மேரு ஸ்வாமிகள் | பீமராஜ கோஸ்வாமி | 128 |
| 39. தெளிவு தரும் திருவாய்மொழி | இராம. கதிரேசன் | 130 |
| 40. ஈடில்லாத ஈடு | இரா. சுப்பராயலு | 132 |
| 41. அசோகவனச் சீதையும் சொல்லின் செல்வனும் | ம.சா. அறிவுடைநம்பி | 135 |
| 42. ஸ்ரீமத் இராமாயணமும் அர்த்த பஞ்சகமும் | தி.ஈ. வீரராகவாச்சாரியார் ஸ்வாமி | 137 |
| 43. வைணவம் காட்டும் தத்துவம் | S. நாராயணசுவாமி | 140 |
| 44. அருள்ராகம் சொட்டுகின்ற ஆண்டவன் | திரு. பாண்டியன் | 142 |
| 45. வளமும் நலமும் நாளும் ஓங்கவே | அறங்காவலர் குழு | 143 |
| 46. சீர்மிகு திருப்பணி | எஸ்.மகாலிங்கம் | 144 |
| 47. UTHARA YOGI | S. RANGANATHAN | 145 |
| 48. THE BHAKTI MOVEMENT FROM THE GITA TO SRI RAMANUJA MAHARISHI | S.VASUDEVACHARIAR | 147 |
| 49. A POETIC DRAMA ON VIJAYARAGHAVA NAYAK | PREMA NANDAKUMAR | 153 |
| 50. MNNARGUDI - A CENTRE OF PILGRIMAGE | N. SRINIVASACHARIAR | 156 |



கிழக்குக் கோபுரம்

கோபுரமும் கருடத்தம்பமும்





ஸ்ரீ ராஜகோபாலன்

# மன்னை நகரமும் மாண்புடைய கோயில்களும்

குடவாயில் பாலசுப்ரமணியன் எம்.ஏ.,

செம்மங்குடி, சேந்தன்குடி என்று 'குடி' என்ற பெயரால் பல ஊர்கள் திகழ்கின்றன. இவ்வாறு இருப்பினும் இங்கு மன்னார்குடி என்று அழைக்கப்பெறும் ஊரின் பெயர் இரண்டு நூற்றாண்டுகள் முன்பு வரை மன்னார் கோயில் என்றே அழைக்கப்பெற்றது என்பதைப் பல ஆவணங்கள் வாயிலாக அறிய இயலுகின்றது. கோயில் என்பதைத் தெலுங்கு மொழியில் "குடி" எனக் குறிப்பிடுவர். தஞ்சை நாயக்க மன்னர்களின் ஆட்சிக்குப் பிறகு "மன்னார் கோயில்" என்று அழைக்கப் பெற்ற இவ்வூர் மன்னார்குடி என்பதாயிற்று.

*புகழ் மிகுந்த மூன்று மன்னார் கோயில்கள்*

தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் வீராணம் ஏரிக் கரையில் ஓர் ஊர் தற்போது மன்னார்குடி என்ற பெயரில் உள்ளது. இதனை நமது ராஜமன்னார்குடியிலிருந்து வேறுபடுத்திக் காட்ட காட்டு மன்னார்குடி எனக் கூறுவர். இவ்வூரின் பெயரும் மன்னார்கோயில் என்பதாகும். ஆனால் இவ்வூரினை கி.பி.907-953 இல் ஆட்சி புரிந்த பராந்தக சோழன் தோற்றுவித்து வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம் என்று பெயரிட்டான். இவ்வூரின் திருமால் ரங்கமன்னாராகக் கோயில் கொண்டு இருப்பதால் பின்னாளில் இவ்வூருக்கு மன்னார்கோயில் என்ற பெயர் உண்டாயிற்று.திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தினை ஒட்டிய ஊர் ஒன்று மன்னார்கோயில் என்ற பெயரில் குறிக்கப்பெறுகின்றது. சேர மன்னனாகிய இராஜசிங்கன் என்பவன் இவ்வூரில் ஒரு திருமால் ஆலயம் எடுப்பித்தான். அதற்கு இராஜேந்திர சோழவிண்ணகரம் எனப் பெயரிட்டான். இராஜேந்திர சோழனின் சிற்றரசனாகத் திகழ்ந்த இச்சேர மன்னன் தான் கட்டிய விஷ்ணு கோயிலில் ரங்கமன்னார் திருமேனியை அமைத்தான். ரங்கமன்னார் கோயில் கொண்டுள்ள ஊர் என்பதால் இவ்வூரும் மன்னார்கோயிலாயிற்று. இங்குள்ள கோயிலில் ரங்கமன்னார் செப்புத் திருமேனியாக கையில் செண்டேந்திய கோலத்தில் ஓர் புறம் ஆண்டாளும், மறுபுறம் பெரிய திருவடி எனும் கருடாழ்வாரும் இருக்க காட்சித் தருகிறார்.

மூன்றாவதாகத் திகழும் நமது மன்னார்கோயிலிலும் (இராஜமன்னார்குடி) திருடால் துவாரகை மன்னன் கண்ணனாகக் கையில் செண்டேந்தி, செண்டலங்காரனாக பாமா ருக்மணி சகிதராக காட்சி நல்குவதால் இவ்வூர் மன்னார்கோயில் என்ற காரணப்பெயரோடு திகழ்கின்றது. எனவே இங்கு நாம் காணும் மூன்று ஊர்களும் மன்னார் எனும் துவாரகை மன்னன் கண்ணன் கையில் செண்டு எனும் ஆயுதம் ஏந்தி (சிலர் இதனை சாட்டை எனத் தவறாகக் கூறுவர்) அருள்பாலிக்கும் திருவூர்களே என்பதைத் தெளிவாக அறியலாம்.

வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம் எவ்வாறு காட்டு மன்னார்குடியாயிற்றோ அவ்வாறே நமது ஊரும் தன் பழம் பெயரான இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்ற பெயரினைத் தவிர்த்து இராஜமன்னார்குடியாயிற்று.

*ஸ்ரீ வித்யா இராஜகோபாலனின் பூரண ஆசி அனைவரும் பெற பிரார்த்தித்து வாழ்த்தும்*

*செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை மகளிர் கல்லூரி*

*சுந்தரக்கோட்டை - மன்னார்குடி*

*இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம்*

மன்னை என்ற நமது நகர் பற்றி அறிய சோழமன்னர்களது கல்வெட்டுச் சாசனங்களைத் தவிர பிற தொன்மையான சான்றுகளான சங்க இலக்கியங்களோ, பிற்கால இலக்கியங்களோ துணைபுரியவில்லை. சோழ நாட்டு வரலாற்றை பல்வேறு கோணங்களில், நிலவியல் துணை கொண்டு ஆராயும்போது சோழராட்சியின் மத்திய காலம் வரை மன்னார்குடிக்குத் தெற்கே காட்டுப் பகுதிகளாக (முல்லை நிலம்) இருந்துள்ளதை அறிகிறோம். பஞ்ச ஆரண்ய தலங்கள் இவ்வூருக்கு மிக அருகாமையில் இருப்பது திருமறைக்காடு (வேதாரண்யம்) அணித்தே உள்ளது போன்ற காரணங்களும் இதனை வலியுறுத்துகின்றன.

காடு நீக்கி நாடு கொள்ளும் முயற்சியில் சோழ மன்னர்கள் முயற்சித்தபோது உருவான திருவூரே மன்னை நகரமாகும். இவ்வூரின் பழம் பெயர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்பதை கி.பி. 1070-1125 வரை ஆட்சி செய்த முதற் குலோத்துங்கனின் மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் கல்வெட்டே (கி.பி. 1118) உறுதி செய்கின்றது. சுத்தவல்லி வளநாட்டுப் பிரமதேயம் தனியூர் ஸ்ரீ ராஜாதி ராஜ சதுர்வேதி மங்கலம் என்ற இக்குறிப்பே மன்னார்குடி நகரம் பற்றிய தொன்மைக் குறிப்பாகும்.

இராஜாதிராஜன் என்ற சோழ மன்னன் ஒருவன் பெயரால் பிரமதேய ஊராகவும் (அந்தணர்களுக்காக அளிக்கப்பெறும் ஊர்) நான்கு வேதம் படித்த அந்தணர்கள் வாழ்ந்ததால் சதுர்வேதிமங்கம் என்ற மங்கலம் எனும் பகுப்புடைய ஊராகவும், தனியூர் என்ற சிறப்பு உரிமைகள் பெற்ற ஊராகவும் திகழ்ந்தது என்பதை இக்கல்வெட்டு வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. ஒவ்வொரு சோழ மன்னனும் தங்களது ஆட்சிக் காலத்தில் தன் பெயரில் பல சதுர்வேதிமங்கலங்களை உருவாக்குவதை மரபாகக் கொண்டு திகழ்ந்தனர்.

கி.பி.* 1118 இல் வெட்டப்பட்ட மன்னார்குடி கல்வெட்டு இராஜாதிராஜன் எனும் சோழன் பெயரில் இவ்வூர் இருந்தது என்று சொல்வதாலும், கி.பி. 1118 க்கு முன்பு இப்பெயரில் வாழ்ந்த சோழ மன்னன் முதலாம் இராஜாதிராஜன் என்ற ஒருவனே என்பதாலும், கங்கை கொண்ட சோழன் எனும் முதலாம் இராஜேந்திர சோழனின் மகனான இராஜாதிராஜ சோழனால்தான் இவ்வூர் தோன்றியது என்பதைத் தெள்ளத்தெளிவாக அறிய முடிகிறது.

தஞ்சைப் பெரிய கோயிலைத் தோற்றுவித்த முதலாம் இராஜராஜனின் பெயரனும், கங்கை, கடாரம் போன்ற நாடுகளை வென்று கங்கை கொண்ட சோழபுரத்தை உருவாக்கியவனுமான முதலாம் இராஜேந்திர சோழனின் முதல் மகனுமான இராஜாதிராஜன் பெயரால் இவ்வூர் அவனாலேயே தோற்றுவிக்கப்பெற்றது என்பதுதான் இவ்வூரின் தலையாயப் பெருமையாகும். இவ்வூரைத் தோற்றுவித்த அந்தப் பேரரசனின் வரலாற்றுப் பெருமைகளை ஓரளவு அறிந்தால்தான் மன்னார்குடி நகரின் பெயர்ப் பெருமையை நாம் அறிந்தவர்களாவோம். சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் சாலையில் திருவிடந்தை என்னும் திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம் செய்த பூவராகஸ்வாமி திருக்கோயில் உள்ளது. அத்திருக்கோயிலில் ஒவ்வோர் மாதமும் பூர நாளில் இராஜாதிராஜ சோழனின் பிறந்த நாள் சிறப்பு வழிபாடு முட்டாமல் இன்றளவும் நடைபெற்று வருகின்றது. இக்கோயிற் கல்வெட்டில் அப்பேரரசன் தான் பிறந்த நட்சத்திர நாளில் மாதந்தோறும் சிறப்பு வழிபாடு நடத்த நிலக்கொடை அளித்துச் சென்றுள்ளதைக் கூறுகின்றது. அப்பெரு மன்னனின் வைணவ பக்திக்கு இக்கல்வெட்டும் இன்றளவும் தொடரும் வழிபாடும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இம்மன்னவன் பாண்டியர், சேரர், சிங்களர், மேலைச் சாளுக்கியர் போன்ற பல மன்னர்களை வென்று புகழ் பெற்றவன். ஜயங்கொண்ட சோழன் என்பது இவனது விருதுப் பெயராகும். ஜயங்கொண்ட சோழன் உயர்ந்த பெரும்புகழ்க் கோவி ராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜாதி ராஜ தேவர் என்று கல்வெட்டுக்கள் இவனது புகழைக் குறிக்கின்றன. மாமன்னன் இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய இருவரும் சோழ சிம்மாசனத்தில் அமர்ந்து அரசாளும் போது பல போர்க் களங்களில் வெற்றி வாகை சூடியவன். இவனது வெற்றியின் புகழைப் பாடும் மிக அழகிய துவாரபாலகர் சிற்பம் ஒன்று இன்றும் தஞ்சையில் உள்ளதை நாம் காணலாம். பழையாறை நகரிலிருந்த இந்த சிலை தற்போது தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ளது. மேலைச் சாளுக்கியர்களின் தலைநகரமான கல்யாணபுரத்தை (தற்போது மகாராட்டிர மாநிலம் பம்பாய்க்கு அருகிலுள்ள கல்யாண் எனும் நகரம்) வென்று அங்கிருந்து இந்த துவாரபாலகர் சிற்பத்தை வெற்றிச் சின்னமாக எடுத்து வந்து சோழ நாட்டில் காட்சியாக வைத்தான். அதன் பீடத்தில் கல்யாணபுரத்தை வென்று தான் எடுத்து வந்த துவாரபாலகர் என்று தமிழில் கல்வெட்டாகவும் பொறித்துள்ளான். இவ்வாறு தமிழனின் வீரத்தின் இலக்கணமாக வாழ்ந்து காட்டியவன். இறுதிவரை வீர வாழ்வு வாழ்ந்தான் என்பதுதான் இவனது பெருஞ் சிறப்பாகும். கி.பி. 1054 இல் தம் தம்பியுடன் மேலைச்சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்தான். கிருஷ்ணா நதிக் கரையிலுள்ள கொப்பம் எனும் இடத்தில் நடந்த கடும் போரில் யானை மீது அமர்ந்து போர் புரிந்து கொண்டிருக்கும் போது பகைவர்களது அம்பு மார்பில் பாய்ந்து வீரமரணம் அடைந்தான். தான் இறந்தாலும்

அவனது தம்பியின் ஆற்றலால் அப்பெரும் போரில் சோழர் படையே வெற்றிவாகை சூடியது. இம்மாவீரன் தன் பெயரால் தோற்றுவித்த ஊர்தான் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் (மன்னார்குடி) என்று அறியும் போது எத்தனை பெருமித உணர்வு ஏற்படுகின்றது.

இராஜாதிராஜசோழன் தன் பெயரால் தோற்றுவித்தத் தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலத்தில் மூன்று கோயில்கள் இப்பெரு மன்னன் பெயரால் எழுந்தன. இவை இராஜாதிராஜ விண்ணகரம் எனும் வைணவ ஆலயம், ஜெயங்கொண்ட சோழன் என்ற இவனது விருதுப் பெயரில் எழுப்பப் பெற்ற ஜெயங்கொண்ட சோளீஸ்வரமுடையார் கோயில், ஸ்ரீகைலாசம் எனும் இராஜாதிராஜ ஈஸ்வரமுடையார் கோயில் என்பவைகளேயாகும்.

*இராஜாதிராஜ விண்ணகரம்*

இராஜாதி ராஜ விண்ணகரம் என்பதுதான் நமது இராஜகோபால சுவாமி கோயிலின் மூலப் பெயராகும். இதனைத் தற்போதைய இராஜகோபால சுவாமி கோயில் மூன்றாம் இராஜ கோபுரத்தில் உள்ள சோழர் கால கல்வெட்டொன்றின் மூலமாக அறியமுடிகிறது. இக்கோயிலின் பெருமாளுக்கு இராஜாதிராஜ விண்ணகரத்து எம்பெருமான் என்ற பெயர் இருந்தது. இம்மன்னன் காலத்தில் இது செங்கற் கோயிலாக இருந்திருத்தல் வேண்டும். இவனுக்குப் பிறகு இரண்டாம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன், அதிராஜேந்திரன் என்ற சோழ மன்னர்கள் ஆட்சி செய்த பிறகு, கி.பி. 1070 இல் முதலாம் குலோத்துங்கன் சோழர் சிம்மாசனத்தில் அமர்ந்தான். இவனது ஆட்சி கி.பி. 1125 வரை நீடித்தது. இவன் 1118 இல் நமது இராஜகோபால சுவாமி கோயிலில் ஒரு கல்வெட்டைப் பொறித்தான். அதில் ஸ்ரீ இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலத்து நடுவில் திருமுற்றமான ஸ்ரீ குலோத்துங்க சோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலில்.... என்ற சொற்றொடர் காணப்பெறுகின்றது. இந்த சான்று கொண்டு நோக்கும் போது முன்பே இவ்வூரில் இராஜாதிராஜ விண்ணகரம் என்று திகழ்ந்த ஏறத்தாழ ஒரு நூறாண்டுகள் அடைந்த விஷ்ணு ஆலயத்தை மிகப் பெரிய விண்ணகரமான இவன் கருங்கற்கள் கொண்டு திருப்பணி செய்து தனது பெயருடன் ஸ்ரீ குலோத்துங்க சோழ விண்ணகரம் என பெயரும் இட்டுள்ளான் என்பதை அறிகிறோம்.

இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ள மூன்று மன்னார்கோயில்களையும் இங்கு மீண்டும் நினைவில் கொண்டு, மூன்று இடங்களிலும் உள்ள ரங்கமன்னார் எனும் செண்டேந்திய பெருமானின் கோயில்களும், இறைவன் திருமேனிகளும் இராஜேந்திர சோழன் அவன் மகன் இராஜாதிராஜன் ஆகியவர் காலத்தில் படைக்கப் பெற்றவையே என்பதை நோக்குதல் வேண்டும். எனவே கோபாலன் வழிபாடு இவர்கள் காலத்தில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தது என்பதறிகிறோம்.

ராஜமன்னார்குடியான இத்திருக்கோயிலில் மூலவர் முன்பு உள்ள வண்துவராபதி மன்னனார் எனும் ராஜகோபாலன் மற்றும் பாமா ருக்மணி ஆகியோரது செப்புத் திருமேனிகளின் சிற்ப அமைதி இடைக்காலச் சோழர்களின் கலைப் பாணியில் (Middle Chola Art) உள்ளதை கருத்தில் கொள்ள வேண்டும். இராஜராஜன் காலம் முதல் இராஜாதிராஜ சோழன் காலம் முடிய உள்ள காலப் பகுதியில் வடிக்கப் பெற்ற செப்புத்திருமேனிகளின் கலை அம்சம் ஒத்த நயமுடையவையாய் இருக்கும். அவ்வகையிலேயே எம்பெருமானும் தேவியரும் காட்சி நல்குவதால் இராஜாதிராஜ சோழன் காலத்துத் திருமேனிகளே இவை என்பதை வலியுறுத்த இயலுகின்றது.

இராஜாதிராஜ சோழன் காலத்தில் இராஜாதிராஜ சோழ விண்ணகரமான செங்கற் தளியாய் இருந்தமையால் அவர் காலத்துச் சாசனங்கள் நமக்குக் கிடைத்தில. முதற் குலோத்துங்க சோழனது கல்வெட்டில், அவனது 48-ம் ஆட்சியாண்டில் (கி.பி. 1118 இல்) தை மாதம், வளர்பிறை, திரயோதசியும் திருவாதிரையும் உள்ள நாளான திங்கட்கிழமையில், குலோத்துங்க சோழ விண்ணகரம் எனும் இக்கோயிலுக்கு முன்பு உள்ள தர்மபூதி எனும் இடத்தில் இவ்வூர் மகாசபையினர் கூடி ஆலோசித்து காடு, நாடு, நகரம் கள்ளப்பற்று உட்பட உள்ள இடங்களுக்கு முப்பதினாயிரம் காசு அரசுக்கு செலுத்திவிட்டு அவ்வரியை சபையே வசூலிப்பதென்றும் வரி கொடாதவர்களுக்கு தண்டனை விதிப்பதென்றும் எடுத்த முடிவுகள் பற்றி விவரிக்கின்றது. இக்கல்வெட்டு இவ்வூர் சபையினர் எடுத்த முடிவு பற்றி குறிப்பிடுகிறதேயன்றி முதற் குலோத்துங்கன் இக்கோயிலுக்கு செய்த எந்த அறக்கொடைகள் பற்றியும் குறிக்கவில்லை.

இவனுக்குப் பிறகு பல சோழ மன்னர்கள் ஆட்சி செய்த போதும் அவர்களது கல்வெட்டுச் சாசனங்கள் நமக்குக் கிடைக்காததால் அவர்கள் காலச் செய்திகள் பற்றி அறிய முடியவில்லை. இதனை அடுத்து இக்கோயிலில் நமக்குக் கிடைக்கும் கல்வெட்டுக்கள், மூன்றாம் இராஜராஜ சோழனின் சாசனங்களாகும். இதில் ஒரு சாசனம் வேறு எங்கும் சொல்லப்படாத அரிய வரலாற்றுச் செய்தி ஒன்றினைத் தருகின்றது.

"திரிபுவன சக்கரவர்த்திகள் இராஜராஜதேவர்" எனக் குறிப்பிடப் பெற்றுக் காணப்படும் இம்மன்னனது 23 வது ஆட்சியாண்டில் (கி.பி. 1239) வெட்டப்பெற்று இங்கு காணும் கல்வெட்டின் நகல் மன்னார்குடி கைலாசநாதர் கோயிலிலும் உள்ளது.

கைலாசநாதர் கோயிலான ராஜாதிராஜீஸ்வர முடையார் கோயிலில் இவ்வூர் சபையார், மகாசபையார் மற்றும் ஜெயங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டவர், ராஜாதிராஜப் பேரிளமை நாட்டவர், கங்கைகொண்ட சோழப் பேரிளமை நாட்டவர், நாலாயிரப் பேரிளமை நாட்டவர், ஆளப்பிறந்தான் பேரிளமை நாட்டவர் ஆகியோர் கூடி ஒரு முடிவு எடுக்கின்றனர். வரி வதூலிக்கும் அரசு அதிகாரிகள் தங்களுக்குத் தோன்றியபடி எல்லாம் வரி வதூலித்து குடிகளுக்கு இன்னல்கள் செய்ததால் மகாசபையோரும், நாட்டோரும் கூடி எவ்வகை வரி கொள்வது, எவ்வாறு கொள்வது என்பது பற்றியும் ஸ்ரீ கைலாசமுடையார் கோயில் திருவிழாவுக்கும், வண்துவராபதி மன்னனார் கோயில் திருவிழாவுக்கும் உரிய வருவாய் வகைகள் பற்றியும் தெளிவாக முடிவெடுத்து அதன்படி நடப்பதாக அனைவரும் ஒப்புக்கொண்டு, இரண்டு கோயில்களிலும் சாசனம் வெட்ட வேண்டும் என்று கூறி இக்கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். இச்சாசனம் எழுதி கையொப்பம் இட்ட ஊர் கணக்கு அலுவலர்கள் சேகல் எனும் ஊரினைச் சேர்ந்த கருணாகரப்பிரியன், உத்தமப்பிரியன் என்பவர்களே என்பதை இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இக்கல்வெட்டை அடுத்து இராஜகோபாலசுவாமி கோயிலில் காணப்படும் மற்றொரு கல்வெட்டில் மன்னன் பெயர் குறிக்கப் பெறாமல் "கோனேரி மேல் கொண்டான்" என்ற குறிப்போடு தொடர்கிறது. இவ்வாறு எழுதப்பெறும் கல்வெட்டுக்கள் ஒரு மன்னனது நேரிடையான அரசாணையைக் குறிப்பதாகும். இதில் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலத்து இராஜாதி ராஜ விண்ணகரத்து எம்பெருமானுக்கு (இராஜகோபால பெருமானுக்கு) சொந்தமான பன்னிரண்டு மா நிலத்தை இம்மன்னனது 13 வது ஆட்சியாண்டிலிருந்து வரியில்லாத நிலமாக மாற்றி ஆணையிட்டு, தன்னுடைய பிறந்த நாள் ஆன புரட்டாசி மூல நட்சத்திரத்தன்று பெருமாளுக்கு திருவிழா நடத்தித் தீர்த்தம் அருளிச் செய்வதற்கும், மாதந்தோறும் மூல நட்சத்திரத்தன்று பெருமாள் எழுந்தருளவும், எல்லா வாகனங்களிலும் பெருமான எழுந்தருளவும் வைத்த அறக்கட்டளைப் பற்றி விவரிக்கின்றது. மன்னனது ஆணையை நிறைவேற்றும் தலைவனாக மன்னனால் இக்கல்வெட்டில் குறிக்கப்படுபவன் சேகல் எனும் ஊரினைச் சேர்ந்த உத்தமப் பிரியன் என்பவனாவான்.

அரசு அலுவலன் பெயரை இக்கல்வெட்டில் அறியும் நாம், மன்னன் பெயரை இக்கல்வெட்டால் அறிய முடியாவிட்டாலும், மன்னன் யார் என்பது அறிய நாம் மன்னார்குடி கைலாசநாதர் கோயில் கல்வெட்டுக்களின் துணையை நாட வேண்டியுள்ளது. ஸ்ரீ கைலாசமான ராஜாதி ராஜீஸ்வரம் எனும் அச்சிவாலயத்தில் மூன்றாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. இவை நான்குமே அம்மன்னனின் 23ஆம் ஆண்டு கல்வெட்டுக்கள். இதில் ஒன்று இராஜகோபாலசாமி கோயிலில் உள்ள கல்வெட்டின் நகலாகும். அதில் இறுதிப் பகுதியில் கையொப்பம் இட்ட அலுவலர்கள் பெயர் வரிசையில் சேகல் எனும் ஊரைச் சேர்ந்த கருணாகரப் பிரியன், உத்தமப் பிரியன் ஆகிய இருவர் பெயர்களும் காணப்பெறுகின்றன. மூன்றாம் இராஜ ராஜ சோழனின் மற்ற கல்வெட்டுக்களிலும் இவர்களது பெயர்கள் காணப்பெறுகின்றன. எனவே 'கோனேரின்மை கொண்டான்' என்ற பெயரோடு குறிக்கப்



பெற்றுள்ள அரசன் ஆணையை குறிக்கும் கல்வெட்டின் அதிகாரியாக சேகல் எனும் ஊரைச் சேர்ந்த உத்தமப் பிரியன் குறிக்கப் பெறுவதால் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த ஆணையைப் பிறப்பித்த மன்னவன் உத்தமப்பிரியனின் தலைவனான மூன்றாம் இராஜராஜனே என்பது தெளிவாக நிருபணமாகிறது.

மூன்றாம் இராஜராஜனின் பிறந்த நாள் புரட்டாசி மூலம் என்பதைத் தமிழக வரலாற்றுக்கு இக்கல்வெட்டு ஒன்றே அறிவிக்கின்றது. மேலும் ஒரு பேரரசன் தன் பிறந்த நாளான புரட்டாசி மூல நட்சத்திர நாளில் ஆண்டுதோறும் இராஜகோபாலப் பெருமாளை திருவீதி உலா வரச் செய்து, தீர்த்தம் அருளி திருவிழாக் கொண்டாடச் செய்ததோடு, மாதந்தோறும் மூல நட்சத்திர நாளில் பெருமாளை திருவீதி எழுந்தருளச் செய்யவும், எல்லா வாகனங்களிலும் உலா வரச் செய்து கொண்டாடினான் என்பதை இங்கு மட்டுமே நாம் காண முடிகின்றது.

மன்னார்குடி விண்ணகரத்தை இராஜாதிராஜன் எடுப்பித்து முதற் குலோத்துங்கன் திருப்பணி செய்து போற்றி இருந்த போதும் அப்பேரரசர்கள் எடுத்த விழாக்கள் பற்றியோ, அறக்கொடைகள் பற்றியோ அறிய நமக்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் மாமன்னன் மூன்றாம் இராஜராஜன் தன் பிறந்த நாளை இங்குக் கொண்டாடும் முகமாகப் பெருமானை எழுந்தருளச் செய்து பெருந் திருவிழாவாகப் போற்றி இருக்கிறான் என்பது இக்கோயிலின் பெருமைகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பெரு மன்னனின் மைந்தனான மூன்றாம் இராஜேந்திர சோழனது இருபத்தொன்றாம் ஆண்டு (கி.பி. 1267) சாசனமொன்று இத்திருக்கோயிலிலுள்ளது. இத்திருக்கோயிலோடு இணைந்து திகழ்ந்த மண்டலத்தார் மடத்தின் தலைவராகத் திகழ்ந்த வண்துவராபதி மஹாமுனிகளுக்கும் அவரது சிஷ்யை பெரிய பிராட்டிக்கும் இத்திருக்கோயில் மடப்புறமாக அளித்த நிலத்தை, அவர்கள் காலத்திற்கு பின்பு முறையாகப் போற்ற வேண்டி அம்மஹாமுனிகள் எழுதிய சாசனமே இக்கல்வெட்டாகும். இக்கல்வெட்டால் தவசீலர் ஒருவர் இக்கோயிலோடு இணைந்த மடத்தில் இருந்து தொண்டு செய்தார் என்பது அறிகிறோம்.

மன்னனது ஆண்டு முப்பத்தொன்றாவது குறிக்கப்பெற்ற இக்கோயிலில் உள்ள சோழ மன்னனது சாசனத்தில் திருஞானசம்பந்த சதுர்வேதி மங்கலம் எனும் ஊரில் காணியாக அளிக்கப்பெற்ற நிலங்கள் பற்றிக் கூறுகின்றது. இச்சாசனத்தில் சேகலுடையான கருணாகரப் பிரியன் குறிக்கப் பெறுவதால் இதுவும் மூன்றாம் இராஜராஜன் காலத்து சாசனம் என்று நாம் கொள்ளலாம்.

சோழர்கள் கால கல்வெட்டுக்களுக்குப் பிறகு பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று இக்கோயிலில் உள்ளதை நாம் காண முடிகின்றது. இராயூர் என்ற ஊரினன் ஒருவன் நாலு மாக்காணி நிலத்தை இக்கோயிலுக்காக ஸேநாபதி ஆழ்வார் (சேனை முதலி) கன்மிகளுக்கு விலைக்கு விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டு விவரிக்கின்றது.

சிவாலயங்களாக இருந்தால் கோயில் நிலத்தை விற்பது, வாங்குவது போன்ற செயல்களுக்கு அக்கோயிலின் சண்டிகேஸ்வரர் பெயரால்தான் ஆவணம் பதிவு செய்யப் பெறும். அதுபோல விஷ்ணு ஆலயமாய் இருந்தால் சேனை முதலி எனும் ஸேநாபதி ஆழ்வார் பெயரால்தான் நிகழும். இக்கல்வெட்டிலும் சேனை முதலி பெயரில் பதிவு செய்யப் பெற்றிருப்பதை நாம் காணமுடிகிறது.

தஞ்சை நாயக்கர்களது சாசனங்களாக இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. கி.பி. 1577 ஆம் ஆண்டான சகாப்தம் 1499 இல் வெட்டப்பெற்ற முதற் கல்வெட்டில் தஞ்சை மன்னரான அச்சுதப்ப நாயக்கர் தனது இராஜ குருவாகத் திகழ்ந்த திருமலநம்பி திருமல தாத்தாச்சாரியார் என்பவருக்கு ஒரு குளம் உட்பட ஆறு வேலி நிலத்தினை வேட்கோவனூர் எனும் ஊரில் அளித்ததைக் குறிப்பிடுகின்றது. இத்தாத்தாச்சாரியாரின் செப்புச்சிலை இராஜகோபாலசாமி கோயிலிலேயே இருப்பதைப் பின்னர்க் காண்போம்.

அச்சுதப்ப நாயக்கரின் மற்றொரு கல்வெட்டில் இராஜகோபாலசாமி கோயிலுக்காக இரண்டு வேலி நிலத்தினை அச்சுதப்ப நாயக்கர் கட்டளையாக அளித்து இறைவனுக்குக் குறிப்பிட்ட சில வகை தளிகைகள் நடத்த ஏற்பாடு செய்ததை விவரிக்கின்றது.

அச்சுதப்ப நாயக்கர், அவர் மகன் இரகுநாத நாயக்கர், அவரது மகன் விஜயராகவ நாயக்கர், அவர் மகன் மன்னாரு தேவன் போன்ற தஞ்சை நாயக்கர்கள் இக்கோயிலை 7 பிரகாரங்களோடு மிக விரிவுடையதாகச் செய்து மண்டபங்கள், திருக்குளங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து எழில்மிகு நகரமாகச் செய்தனர் என்பதைத் தஞ்சை நாயக்கர்கள் காலத்து ஓலைச்சுவடிகள் பல மிக விரிவாகக் கூறுகின்றன. சாகித்ய ரத்னாகரம், இரகுநாத நாயகாப்புதயம், மன்னாருதாச விலாசம், இராஜகோபால விலாசம், ஹேமாம்ஜ நாயகி சுயம்வரம், பிரகலாத சரித்திரம், பூதனாஹரம், காளீயமர்த்தனம், விப்ரநாராயண சரித்திரம், கிருஷ்ண விலாசம் போன்ற சமஸ்கிருத, தெலுங்கு நூல்கள் இம்மன்னர்கள் செய்த திருப்பணிகள், இராஜகோபாலனின் பெருமை, அவனைப் பற்றிய கதைகள், அவன் முன்பு நிகழ்ந்த இசை, நாட்டிய நாடகங்கள் போன்றவற்றைத் தெளிவாக உரைக்கின்றன.

அச்சுதப்ப நாயக்கர் சில கோபுரங்களை இங்கு கட்டுவித்ததோடு இவரது மகத்தான பணியாக இங்கு குறிக்க வேண்டிய சிறப்புடையது கருடஸ்தம்பம் எனும் துவஜஸ்தம்பமே. மேலே 5' X 5' அளவு உடைய பலகைக்கல் தலையோடு 54 அடி உயரமுடைய இக்கருடஸ்தம்பம் வியப்புக்குரியதாகும். கருங்கற்களே இல்லாத இம்மாவட்டத்திற்குப் புதுக்கோட்டை குன்னாண்டார்கோயில் மலைப் பகுதிகளிலிருந்து இக்கல்லைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது மகத்தான சாதனையாகும். இக்கம்பத்தில் இராஜகோபாலன், அனுமன், அச்சுதப்ப நாயக்கர், அவரது தேவி மூர்த்திமாம்பா ஆகியோரது சிற்பங்கள் இடம் பெற்றிருப்பதும் நோக்குதற்குரியது.

இரகுநாத நாயக்கர் சில கோபுரங்களையும் மண்டபங்களையும் இங்கு தோற்றுவித்துள்ளார். இராஜகோபாலனின் கருவறைக்கு முன் உள்ள மகாமண்டபத்தில் பல்வேறு தானங்களை அமைச்சர் கோவிந்த தீட்சிதருடன் இருந்து இம்மன்னன் செய்தான் என்பதை அங்குள்ள சிற்பங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுவர்ணமேரு தானம், கோதானம், துலாபார தானம் போன்றவற்றை இம்மன்னன் அளிக்கும் காட்சிகளோடு, தேவியர்களுடன் இவன் இறைவனை வணங்கும் காட்சியும் நான்கு பெருந்தூண்களில் இடம்பெற்றுள்ளன.

இராஜகோபாலன் என்றாலேயே நம் மனக்கண் முன் நிற்பவன் விஜயராகவ நாயக்கன்தான். கி.பி. 1532 லிருந்து 1575 வரை வாழ்ந்த இம்மன்னவன் இக்கோயிலுக்கு செய்த அளவு வேறு எந்த மன்னர்களும் செய்யவில்லை என்பதுதான் வரலாற்று உண்மை. இவன் 1675 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ம் நாள் தஞ்சை இராஜகோபாலசாமி கோயில் வாசலில் ஏகோஜி என்ற மராட்டிய படைத் தலைவனோடும், இரண்டு பீஜப்பூர் முகமதிய தளபதிகளுடனும் கடும் சண்டையிட்டு வீரமரணம் அடைந்தவன். இவனது வீர மரணத்தைக்கூட தஞ்சை இராஜகோபாலசாமிக்கே காணிக்கை ஆக்கியவன்.

தற்போது காணும் பெரிய வெளிக் கோபுரங்கள் நான்கினையும், ஆயிரங்கால் மண்டபத்தையும், கிருஷ்ண தீர்த்தத்தையும் இன்ன பிற மண்டபங்களையும் அகழியையும், கோட்டையையும் உருவாக்கியுள்ளான். திருமலை நம்பி தாத்தாச்சாரியார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் போன்ற செப்புத்திருமேனிகளை செய்தளித்தவன் இவனே. மேலே குறிப்பிட்ட இச்சிலைகளின் பீடத்தில் அச்சிலைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அருகே "அச்சுத விஜயராகவ மன்னாருதாசன் சதாசேவை" என்று எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இம்மன்னவன் காலத்தில் இராஜகோபாலசுவாமி கோயிலுக்கு உரிய நிலங்களிலிருந்து மூன்று இலட்சம் கலம் நெல்லும், முப்பதினாயிரம் பொற்காசுகளும் குத்தகையாகக் கிடைத்தன என்பதை மன்னாருதாச விலாசம் எனும் நூல் வாயிலாக அறிய முடிகிறது.

மிகச்சிறந்த இசை வல்லுநராகவும் நாடக மேதையாகவும் வாழ்ந்த இவன் தன் கலை ஆற்றல் முழுவதையுமே மன்னார்குடி இராஜகோபாலனுக்கே அர்ப்பணித்தான். "பிரகலாத நாடகம்" எனும் தெலுங்கு பாகவதமேளா நாடகத்தை இயற்றி இராஜகோபாலன் முன்பு ஆயிரங்கால் மண்டபத்தில் நடைபெறச் செய்தான். தொண்டரடிப் பொடியாழ்வார் கதை திருவரங்கத்திற்கே உரியதாயினும் அக்கதையின் ஒரு பகுதி மன்னார்குடி இராஜகோபாலன் கோயிலில் நிகழ்வதாக நாடகத்தை அமைத்து "விப்ரநாராயணன் சரித்திரம்" என்ற பெயரில் மன்னார்குடி கோயிலில் நடைபெறச் செய்தான்.

இவ்வாறு இசை நாட்டியம், நாடகம் போன்ற பல்வேறு கலைகள் இவன் காலத்தில் பரிணமித்த அளவு மன்னா.குடி வரலாற்றிலேயே நிகழ்ந்ததில்லை என்று நிச்சயமாகக் கூறலாம். இக்கோயில்களுக்குப் புதிய தேர்கள் அளித்தும், திருவிழாக்கள் நடத்தியும் சிறப்பித்ததைப் பல்வேறு நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. இன்றும் இராஜகோபாலசுவாமி ஆண்டுதோறும் திருவிழாக்களின் போது நான்கு முறை விஜயராகவ நாயக்கர் அலங்காரம் பூண்டு சேவை சாதிப்பது கண் கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றது. இவ்வலங்காரத்தில், இம்மன்னனின் உருவச் சிலைகளில் காணப்படுவது போன்றே இராஜகோபாலனும் சாய்ந்த கொண்டையுடன் திகழ்வார். விஜயராகவனின் மைந்தனான மன்னாரு தேவன் என்பானும் தன் தந்தையைப் போன்றே இராஜகோபாலன் மீது பக்தி கொண்டு பல்வேறு பணிகளை இக்கோயிலில் புரிந்துள்ளான். இவன் செங்கமலவல்லி மீது எழுதிய ஹேமாம்புஜ நாயிகா சுயம்வரம் எனும் நூல் இவனது இராஜகோபால பக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நாயக்க மன்னர்களுக்குப் பிறகு தஞ்சை அரசு மராட்டியர் வசமாயிற்று. இம்மன்னர்களில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர் சகஜி என்பவராவர். இவர் கி.பி. 1684 முதல் 1712 வரை ஆட்சி புரிந்தவர். இவர் மன்னார்குடி இராஜகோபாலப் பெருமாள் மீது அளவிலா பக்தி பூண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். தெலுங்கு மொழியில் இவர் இராஜகோபாலப் பெருமாளையும் செங்கமலவல்லித் தாயாரையும் புகழ்ந்து பாடல்களாக எழுதியுள்ள ஏட்டுச் சுவடிகள் இன்றும் தஞ்சை அரண்மனை நூலகத்திலுள்ளன.

இராஜகோபாலன் கருட வாகனத்தில் பவனி வருவது, தேரில் உலாப் போவது ஆகிய பல காட்சிகளை


இசைப் பாடல்களாகப் பாடிய இம்மன்னவன் இராஜகோபாலன் பல்லக்கில் பள்ளியறைக்குச் செல்லும் சிறப்பு வைபவத்தை நாட்டிய, இசைப் பாடல்களாக "விஷ்ணு பல்லக்கி சேவா பிரபந்தம்" என்ற நூல் வடிவில் இயற்றியுள்ளார். இம்மன்னவனும், பின்பு வந்த மராட்டிய மன்னர்களும் இக்கோயிலை மிகவும் போற்றிப் பல திருப்பணிகள் புரிந்துள்ளனர்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் இக்கோயிலில் 'பாகவதமேளா' எனும் இசை நாட்டிய நாடகங்கள் நிகழ்வதற்காக சுரோத்திரிய கிராமங்களை மன்னார்குடிப் பகுதியில் அளித்துப் போற்றினர் என்பதைப் பல சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

*ஜெயங்கொண்டநாதர் கோயில்*

பாமணியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது இக்கோயில். சோழ மன்னன் இராஜாதிராஜனின் சிறப்புப் பெயரான "ஜெயங்கொண்டான்" என்ற பெயரில், ஜெயங்கொண்ட சோளீஸ்வரமுடையார் என்ற இச்சிவாலயம் எடுக்கப் பெற்றது. இக்கோயில் பலமுறை திருப்பணிகளுக்கு உட்பட்டதால் சோழர்களின் கல்வெட்டுச் சாசனங்கள் எதையும் காணமுடியவில்லை. ஹோய்சாளர்கள் எனும் போசன மரபு மன்னர்களில் (இவர்கள் திருச்சி மாவட்டம் சமயபுரம் எனும் கண்ணனூரைத் தலைமை இடமாகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள்) சிறந்தவரான வீரராமநாததேவர் காலத்தில் (கி.பி 1255) ஆண்டொன்றுக்கு 1632 கலம் நெல் வருவாய் உடைய நிலங்களை இக்கோயிலுக்காக அளித்துள்ளனர். இதே போன்று பின்பு பாண்டிய மன்னன் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனாலும் (கி.பி. 1335-1362) இக்கோயிலுக்கு நிலங்கள் அளிக்கப் பெற்றது.

ஜெயங்கொண்ட சோளீஸ்வரமுடையார் கோயிலின் முன் மண்டபம் "விக்கிரம பாண்டியன் திருமண்டபம்" என்று அழைக்கப்பெற்றதாக இரண்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோச்சடைபன்மரான சுந்தரபாண்டியன் 12 வது ஆட்சியாண்டில் இந்நகரத்து வணிகர்களும் நான்கு திசை பதினெணவிஷயத்தோம் எனும் வணிகக் குழுவினர்களும், மேலே கூறப்பெற்றுள்ள மண்டபத்தில் கூடி மன்னார்குடியின் மேற்குப் பகுதியான சாரிகைக் கோட்டையில் (தற்போது அண்ணாமலை நாதர் கோயில் உள்ள பகுதி) உள்ள இரண்டு பெரிய வணிக மையங்களான புவனேகவீரன் மடிகை, விக்கிரம பாண்டியன் மடிகை என்ற இடங்களுக்கு விற்பனைக்காக வரும் பாக்கு மூட்டைகள், மிளகு மூட்டைகள், துணி மூட்டைகள் ஆகியவற்றுக்கும் இவ்வணிக மையத்தின் உள்ளே வராமல் அவ்வழியாக மற்ற பகுதிக்கு விற்பனைக்காகச் செல்லும் மேற்படி



பொருள்களுக்கும் முறையே பாக்குப் பொதி ஒன்றுக்கு ஒரு உழக்குப் பாக்கு, மிளகுப் பொதி ஒன்றுக்கு ஒரு உழக்கு மிளகு, புடவை கட்டான துணி மூட்டை ஒன்றுக்கு பணம் மாகாணி என்ற விகிதத்தில் வதுலித்து, அதனை ஜெயங்கொண்ட சோழீஸ்வரமுடையார் கோயிலின் நிவேதனத்துக்குரிய கறி அமுதுக்கும், திருப்பணிகளுக்கும் செலவழிக்க வேண்டும் என அறிவித்ததை இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தஞ்சை மராட்டிய அரசர் பிரதாபசிம்மன் காலத்தில் இக்கோயிலுக்கு என அளிக்கப்பெற்ற அறக்கொடைகளை நான்கு செப்பேடுகள் கூறுகின்றன. கி.பி. 1757 இல் பாப்பாகுடி சிறுநெல்லிக்கோட்டை நென்மேலிவாடி நல்லவல் விசையாத்தேவர் மகன் இராமலிங்க விசையாத்தேவ செயங்கொண்ட நாதசாமியின் அர்த்தஜாம பூஜைக்காக 4 பொன் இராஜகோபால சக்கரம் அளித்ததை ஒரு செப்பே கூறுகிறது. மற்றொரு செப்பேட்டில் 1758 இல் பாப்பாகு பதினாறு கரைக்குட்பட்ட அனைவரும் செயங்கொண் நாதருக்கு உச்சிகால பூஜைக்காக 45 பொன் ராஜகோபா சக்கரம் அளித்ததைக் கூறுகிறது.

மூன்றாம் செப்பேடு 1758 இல் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம் சிங்கவனம் சமீன்தார் ஜெயங்கொண்ட நாதர் காலை சந்தி பூஜைக்கு ராஜகோபால சக்கரம் 72 கொடுத்ததைக் கூறுகிறது.

நான்காம் செப்பேடு சிங்கவனம் சமீன்தார் சவாயி விஜயரகுநாதமெய்க்கன் ஜெயங்கொண்டநாதரின் மாலைக் கால பூஜைக்காக 40 பொன் கொடுத்ததைக் கூறுகிறது.

இக்கோயிலை சோழ மன்னர்கள், பாண்டியர்கள், ஹோய்சாளர்கள், மராட்டியர்கள், பாப்பாநாடு, சிங்கவனம் சமீன்தார்கள் போன்றவர்கள் போற்றி வழிபட்டார்கள் என்பதைக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் வாயிலாக அறிய இயலுகிறது.

*ஸ்ரீ கயிலாயம் எனும் இராஜாதிராஜீஸ்வரம்*

மன்னை நகரின் கீழ்ப்பாலம் பகுதியில் பாமணியாற்றின் மேல் கரையில் கயிலாசநாதர் கோயில் என்ற பெயரில் இச்சிவாலயம் திகழ்கின்றது. இதுவும் இராஜாதிராஜ சோழன் காலத்தில் எடுக்கப்பெற்ற திருக்கோயிலாகும். இக்கோயிலில் காணப்பெறும் மூன்றாம் இராஜராஜ சோழனின் நான்கு கல்வெட்டுக்கள் இவ்வூர் சபையினர் எடுத்த முடிவுகளையும், கயிலாசநாதர் கோயில் மற்றும் இராஜகோபாலசாமி கோயில் நிர்வாகம் பற்றிய செய்திகளையும் திருப்பணிக்காக அளிக்கப்பெற்ற நிலங்கள் பற்றிய செய்திகளையும் கூறுகின்றன.

பாண்டிய மன்னன் பராக்கிரம பாண்டியன் காலத்தில் அளிக்கப்பெற்ற நிலக்கொடை பற்றி ஒரு சாசனமும், வீரபாண்டியன் காலத்தில் கைலாசநாதர் கோயில் ஸ்நபன மண்டபம் "இளையான்குடி உடையான் நாராயண தேவரான பல்லவராயன் திருமண்டபம்" என்ற பெயரில் நாராயண தேவன் பல்லவராயனால் கட்டப்பெற்றது என்பதை மற்றொரு சாசனமும் கூறுகின்றன.

இவ்வூர் கிராம காரியம் செய்கின்ற கூட்டப் பெருமக்கள் ஒன்று கூடி இக்கோயில் இறைவனுக்கு ஒன்பதாங் கட்டளையில் அளித்த நில தானத்தை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இதில் கையொப்பம் இட்டவர்கள் நச்சினார்க்கினியான், முத்துசூரியதேவபட்டன், கேசவபட்டன், வரதராஜ பட்டன் போன்றவர்கள் என்ற குறிப்பும் காணப்பெறுகின்றது.

மற்றொரு கல்வெட்டு இக்கோயிலில் உள்ள ஆலாலசுந்தரப் பெருமானின் பூஜைக்காக 440 கலம் நெல் முதலீடு செய்யப் பெற்றதை விவரிக்கின்றது.

இத்திருக்கோயிலிலுள்ள நடராஜப் பெருமான் திருவுருவத்தின் பேரழகைக் காணக் கண் கோடி வேண்டும். சிறிய கருங்கற் கட்டுமானக் கோயிலாகத் திகழ்ந்தாலும் மிக அழகான அமைப்போடு இக்கோயில் திகழ்கின்றது.

*அண்ணாமலைநாதர் கோயில்*

மன்னார்குடி நகரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இச்சிவாலயமும் சோழர் காலத்திய கற்றளியேயாகும். இக்கோயில் உள்ள இடத்தை "இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலத்து மேல் பீடாகை சாரிகை கோட்டை" என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இச்சிவாலயத்தின் பெயர் "இராஜேந்திர சோழ திரு அண்ணாமலையுடையார் கோயில்" என்பதும், இதனை வல்லம் எனும் ஊரின் தலைவனான திருவிடைமருதூருடையான் என்பவனின் தாயார் பெரிய நாச்சியார் என்பவர் எடுப்பித்தார் என்பதையும் இக்கோயிலில் உள்ள கல்வெட்டுச் சாசனங்களே குறிப்பிடுகின்றன.

மூன்றாம் இராஜேந்திர சோழன் (கி.பி. 1216-1256) பெயரில் எடுக்கப் பெற்ற இந்த சிவாலயம் எழில் மிகுந்த திருக்கோயிலே. இக்கோயில் திருமுற்றம், மடைவிளாகம், தீர்த்தகுளம் ஆகியவை இரண்டு வேலி நிலப் பரப்பில் அமைந்தன என்ற குறிப்பும் கல்வெட்டிலேயே குறிக்கப் பெற்றுள்ளது. இக்கோயிலுக்காக குலோத்துங்க சோழ சதுர்வேதிமங்கலம் எனும் ஊரில் வாங்கப்பெற்ற நிலங்கள் பற்றியும், அதில் விளையும் நெல் பற்றியும் பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஜெயங்கொண்டநாதர் கோயிலுக்கு அளிக்கப் பெற்றது போன்றே சாரிகைக் கோட்டையில் (அண்ணாமலை நாதர் கோயில் இருக்கும் பகுதி) உள்ள வணிக மையமான புவனேகவீரன் மடிகையில் விற்பனைக்காக வரும் மிளகுப் பொதி ஒன்றுக்கு உழக்கு மிளகு வீதம் வசூலித்து, அதனை அண்ணாமலை உடையார்க்கு அமுது படிக்கும் திருப்பணிகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று நான்கு திசை என் வணிகக்ற குழுவினர் முடிவெடுத்து செயல்படுத்தியதை இக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டு இராஜகேசரிவர்மன் வீரபாண்டிய தேவரின் 19 வது ஆட்சியாண்டில் (கி.பி. 1285 இல்) வெட்டுவிக்சப் பெற்றதாகும்.

இவ்வாறு சைவமும் வைணவமும் காலம் காலமாகத் தழைத்த மன்னார்குடியில் முற்காலத்தில் பௌத்த மதமும் சிறந்து விளங்கி இருந்தது என்பதனை அறிய ஒரு சான்று இன்றும் உள்ளது. இங்கிருந்து பின்பு அழிந்த பௌத்த கோயிலொன்றில் இருந்த புத்தர் விக்ரகம் ஒன்று தற்போது மன்னார்குடி சமணக் கோயிலில் இடம்பெற்றுள்ளது. தமிழகத்தில் சமண சமயம் மிகவும் அருகிய போதும், இவ்வூரில் சமணம் தழைத்து நிற்பது குறிப்பிடத் தக்கதாகும். இங்கு மல்லிதீர்த்தருக்கென சிறந்த சமண ஆலயம் திகழ்கின்றது. இஸ்லாமும், கிருத்துவமும் இங்கு சிறப்புடன் திகழ்கின்றன. அனைத்து மதத்தினரும் கைகோர்த்து இன்புற வாழும் பெரும்பகுதி மன்னார்குடி என்பதில் ஐயமே இல்லை.



இராஜாதிராஜ சோழீச்சரத்து (கயிலாச நாதர்)
ஆடல்வல்லான்



கயிலாசநாதர் கோயில் - சோமாஸ்கந்தர்



செண்டலங்காரர்

பஞ்சமுக அனுமன் வாகனத்தில் பரந்தாமன்



# மன்னார்குடித் தலச்சிறப்பு

சேக்கிழார்தாசன், அமரர் ஆர்.ராமசேஷன் எம்.ஏ.,பி.எட்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களைக் கொண்ட திருக்கோயில்களில் இக்கோயிலும் ஒன்று. தலச்சிறப்பை முதற்கண் ஆராய்வோம். மஹாபாரதத்தில் புலஸ்தியர் பீஷ்மரிடம் சம்பகாரணிய க்ஷேத்திரப் பெருமையைக் கூறும் போது "தத்ரோஷ்ய ரஜ நீமேகாம் கோஸஹஸ்ரபலம் பவேத்" (இத்தலத்தில் ஓரிரவு தங்கினாலும் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் கிட்டும்) என்று கூறுகிறார். மன்னார்குடி மன்னார்கோயில், ராஜமன்னார்குடி, சம்பகாரணியம் வண்துவராபதி, தட்சிணதுவாரகை, வாஸுதேவபுரி ஸ்வயம் வியக்த க்ஷேத்திரம் முதலிய பல பெயர்களில் இத்தலம் போற்றப் பெறுகிறது. வேதவியாஸர் அருளிய பிரம்மாண்ட புராணத்தில் காணப்பெறும் சம்பகாரணிய க்ஷேத்திர மகாத்மியம் (வடமொழி மூலம்) கி.பி. 1903 இல் T.S. வாமனராவ் என்பவரால் அச்சிடப்பெற்றது. 1959 இல் இத்திருக்கோயில் வெளியீடாக அதன் மொழி பெயர்ப்பு பிரசுரிக்கப் பெற்றது. அதன் சுருக்கம் 1965 இல் இத்திருக்கோயிலில் வெளியிடப்பெற்ற தல வரலாற்றிலும் கொடுக்கப்பட்டுள்ளது. பிரமாண்ட புராணத்தின் உத்தரகாண்டத்தில் விஷ்ணு க்ஷேத்திர விபாகம் என்ற எட்டு அத்தியாயங்கள் உள்ளன. அதிலேயே தட்சிணதுவாரகை என்னும் சம்பகாரணிய மான்மியம் கூறப்பட்டுள்ளது.

*கோபிலர், கோப்பிரளயர்*

"காவிரிக்கரையிலமைந்த தலங்கள் அனைத்தும் சிறப்புமிக்கவை. காவேரிக்கரையில் ஹேமபுஷ்கரணி என்ற குளக்கரையில் திருக்குடந்தை அமைந்துள்ளது. அதற்குத் தென்கிழக்கில் சம்பகவனம் உள்ளது. இவ்வனத்தில் ஆயிரத்தெட்டு முனிவர்கள் தவமியற்றினர். அவர்களுள் "வஹ்னி முகர்" என்பவர் சிறப்புடையவர். அவருக்கு கோப்பிரளயர் கோபிலர் என்னும் இருபுதல்வர்கள் இருந்தனர். இவர்களிருவரும் சிறந்த தபோதனர்களாகவும் பக்தி மிக்கவர்களாகவும் திகழ்ந்தனர். ஐந்தீ நடுவே எட்டெழுத்தோதி ஒற்றைக்காலில் நின்று இவர்கள் நாரயணனைக் குறித்துத் தவமியற்றினர். பெருமான் இவர்கள் தவத்துக்குகந்து. "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டருள, "எங்களுக்கு மோட்சம் வேண்டும்" என்றனர் இருவரும்."அப்படியாயின் துவாரகையிலுள்ள கண்ணபிரானைத் தரிசித்தால் அப்பேறு கிட்டும்" என்றார் பரமாத்மா. இருவரும் மகிழ்ந்து, துவாரகையை நோக்கிப் புறப்பட்டனர், நடுவழியில் பல புண்ணியப் புனல்களில் நீராடித் தலங்களைத் தரிசித்துகொண்டு சென்றனர். நடுவே நாரத முனிவரைக் கண்டு வணங்கி "கண்ணபிரான் எங்குள்ளார்? துவாரகை எங்குள்ளது?" என வினவினர்.

*மக்கள் அனைவரும் அருளும் பொருளும் பெற இராஜகோபாலனை வேண்டுகிறோம்.*

*ஸ்ரீ தாயார் பெனிஃபிட் பண்ட் லிட்.,*

**189, A** *காந்தி ரோடு, மன்னார்குடி*

இவ்வுலகில் பூபாரம் தீர்க்க வந்த கண்ணபிரான், கம்ஸன் முதலான தீயவர்களை மாய்த்து, பீஷ்மன் முதலான நல்லோரைக் காத்துத் தம் விண்ணுலகம் சென்றுவிட்டார் என நாரதர் கூறக்கேட்டு, இருவரும் ஏக்கமுற்று அக்கணமே மூர்ச்சித்து விழுந்துவிட்டனர். நாரதர் அவர்களது பக்தியைக் கண்டு மகிழ்ந்து, பன்னிரெண்டெழுத்து மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்து "நீங்கள் துவாரகை, நந்த கோகுலம் ஆகியவற்றைக் கண்டு தரிசித்துப் பின், சோழவள நாட்டிலே குடந்தைக்குத் தென்பால் அமைந்த சண்பகாரணியம் என்னும் தலத்திற்குச் செல்லுங்கள். அங்கே ஹரித்திரா நதிக்கரைக்குச் செல்லுங்கள். அதில் நீராடி அங்கே ஓராண்டுத்தவம் இயற்றுங்கள். பகவான் உங்களுக்குக் காட்சி தருவார்" என்று நாரதர் கூறியருளினார். கோபிலரும் கோப்பிரளயரும் நாரதர் கூறியவற்றைக் கேட்டு மகிழ்ந்து துவாரகை, நந்தகோகுலம் முதலிய தலங்களை வழிபட்டுப் பின் ஹரித்திரா நதிக்கரையை அடைந்தனர். அங்கே ஆசிரமம் அமைத்துக் கொண்டு தவமியற்றினர். இவர்கள் தவத்திற்கிரங்கிப் பரமன் காட்சி தந்தருளினார். பரந்தாமனைக் கண்டு பலவாறாகத் துதித்த இரு முனிவர்களும் "பெருமானே! தேவரீர் அன்று பிருந்தாவனத்தில் செய்த லீலைகளை இன்று நாங்கள் கண்டு உய்ய, அருள வேண்டும்" என வேண்டினர். அவர்கள் விழைந்த வண்ணமே பரந்தாமன் கண்ணனாக அவதாரம் செய்து காட்டிய லீலைகளை அவர்களுக்கு காட்டியருளினன். கண்ணனது முப்பது கோலங்களை அவ்விரு முனிவர்களும் கண்டு பரவசமுற்றனர். அவை வருமாறு :

*1. கண்ணன் அவதார வைபவம்*
*2. பூதனை வதம்*
*3. யசோதையின் மடியில் பால் அருந்துதல்*
*4. சாயக் கொண்டையுடன் மாயன் தவழ்ந்து விளையாடல்*
*5. நவநீத நாட்டியம்*
*6. ஆநிரை மேய்த்தல்*
*7. வெண்ணெய்க்களவு*
*8. புன்னை மரக்கண்ணன்*
*9. வேணுகோபாலன்*
*10. உரலிடையாப்புண்டது.*
*11. மாடு மேய்க்கையில் கோலைக்கீழே ஊன்றி அதன் மேல் திருமுடி வைத்துக்காட்டியது*
*12. கலமும் கயிறும் கொண்டு பால் கறத்தல்*
*13. கபித்த வத்ஸாஸுரர்கள் வதம்.*
*14. காளிங்க நர்த்தனம்*
*15. பெண்களின் மஞ்சள் பூச்சைத் தன் திருமேனியில் காட்டியருளல்*
*16. பொன்னாழி, புரிசங்கு, தண்டு, வில் கொண்ட கோலம்*
*17. குரவைக் கூத்து.*
*18. இடையருக்குத் தம் அவதாரங்களைக் காட்டுதல்*
*19. இடையர்களுடன் அமுதுண்ணல்*
*20. கோவர்த்தன கிரி உயர்த்திக் கல்மாரி காத்தல்*
*21. பிரமனால் அபகரிக்கப்பட்ட நிலை*
*22. கோபிகாலீலை*
*23. பாரிஜாத அபஹரணம்*
*24. கிருஷ்ண துலாபாரம்*
*25. குவலயா பீட வதம்*
*26. முஷ்டிக - சாணூர வதம்.*
*27. ருக்மிணீ - சத்தியபாமாவுடன் காட்சி*
*28. வாது தீர்க்கத் தூது சென்ற காட்சி*
*29. பார்த்தசாரதியாகக் கீதை உபதேசித்தல்*
*30. ருக்மிணீ சத்தியபாமாவுடன் - இருமலர்களுக் கிடையே ஒரு வண்டுபோல் எழுந்தருளி, வலத்திருக்கையில் மூன்றுவளைவு கொண்ட சாட்டைக்கயிற்றுடன் கூடிய பொற்கோலை ஏந்தி, இடது திருக்கையை சத்தியபாமாவின் தோளில் வைத்து நின்ற திருக்கோலம். இதுவே இன்றும் நாம் இத்திருக் கோயிலில் உத்ஸவ மூர்த்தமாகக் காணும் கோலமாகும்.*

இரு முனிவர்களும் இக்காட்சி கண்டு, கண்ணீர் மழை எனச் சொரிய, மெய் விதிர்த்தெய்தி, திருவடிகளில் வணங்கி, "உள்ளம் குலாவும் இத்திருக்கோலத்துடன் என்றும் இவ்விடத்திலேயே தேவரீர் எழுந்தருளி எல்லோருக்கும் காட்சி தந்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். அவர்களது வேண்டுகோளால் நமக்கு இன்று வித்யாராஜகோபாலன் அருள் தரிசனம் கிடைத்து வருகின்றது.

*பிரமன்*

பிரமனுக்குத்தானே உயர்ந்தவன் என்ற அகந்தை வந்துவிட்டது. அவனது அகந்தையை அகற்ற எம்பெருமான் நினைத்தார். பிரமன் அறிவிழந்தான்; அறியாமையிலுழன்றான்; ஸநகாதிமுனிவர்களின் தூண்டுதலினால் இத்தலத்தை அடைந்தான். பரமாத்மாவின் பன்னிரெண்டெழுத்தை ஓதித்தவம் இயற்றினான். பிரமனது பக்தியைக்கண்ட பரமன் கருடவாகனனாய்க் காட்சிதந்து பிரமனுக்கு உண்மையறிவை ஊட்டினார். பிரமன் அறிவு பெற்றான். இத்தலத்தில் விசுவகர்மாவைக் கொண்டு ஸ்வாயம்புவ விமானத்துடன் கூடிய கோயிலை அமைக்கச் செய்து பரமான்மாவைத் தானே பிரதிட்டை செய்து பங்குனி ரோகிணியில் தேர்த்திருவிழாவையும் சிறப்பாக நடத்தி மகிழ்ந்தான் பிரமன்.

*லட்சுமி :*

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நிகழ்ந்த போரில் தோற்ற அசுரர்களுக்காக, ப்ருகுமுனிவரின் மனைவி தேவர்களைச் சபித்தாள். இச்செய்தியைத் தேவர்கள் திருமாலிடம் விண்ணப்பிக்க அவர்தம் சக்ராயுதத்தால் ப்ருகுமனைவியின் கழுத்தைத் துண்டிக்கச் செய்தார். இச்செய்தி கேட்ட ப்ருகுமுனிவர், "என் மனைவியைக்

கொன்றவன் அரசிழந்து, மனைவியை இழந்து, காட்டியல் அலையக் கடவன்" எனச் சபித்தார். அச்சாபம் பரந்தாமனை ஒன்றும் செய்யாது ப்ருகு முனிவரிடமே திரும்பியது. தாம் திருமாலையே சபித்த விபரம் அறிந்து வருந்திய ப்ருகுமுனிவர், பிரம்மா மற்றும் சத்திய லோகமுனிவர்களைக் கலந்து ஆலோசித்தார். அவர்களும் "நீங்கள் சண்பகாரணியம் அடைந்து, திருமகளைக் குறித்துத்தவம் செய்து, அவளையே மகளாகப் பெற்று, விஷ்ணுவுக்குத் திருமணம் செய்து அவரிடம் சரணாகதி அடைந்தால் கழுவாய் பெறலாம்" என்று கூறினார். உடனே ப்ருகுமுனிவர் இத்தலத்தை அடைந்து திருமகளை நோக்கித் தவம் இயற்றினார். திருமகளும் மகிழ்ந்து, அவர் தவத்துக்கிரங்கி, இத்தலத்தின் வடகிழக்கு மூலையில் செந்தாமரைப் பொய்கையில் அவதரித்தாள். ப்ருகுமுனிவர் திருமகளைத் தம் மகளாக வளர்த்து வந்தார். திருமகள் திருமாலையே மணப்பேன் என்று தவமியற்றினாள். தாயார் தவம் கண்டு பெருமாள் காட்சி கொடுக்க, ப்ருகுமுனிவரும் பீதாம்பர மணாளனுக்குப் பெருந்தேவியை திருமணம் செய்து கொடுத்துச் சரணாகதியடைந்தார். பாலாழியில் அவதரித்த மகாலட்சுமியே இச்சம்பகாரணியத்தில் ப்ருகுமுனிவரின் மகளாய்குளத்தில் அவதரித்தமையால், அவள் அவதரித்தகுளம் இன்றும் திருப்பாற்கடல் என்றே அழைக்கப்படுகிறது.

*அக்னி*

கருடன் தன் சிற்றனையிடம் அடிமையாயிருக்கும் தன் தாயை மீட்க வேண்டி விண்ணுலகம் சென்று அமுதம் கொணரச் சென்றபோது அக்னி குறுக்கிட்டார். கருடன் அவரைச் சபிக்க, அக்னி தன் வெப்பத்தையும் ஒளியையும் இழந்தார். பிரம்மனின் யோசனைப்படி, இத்தலத்தில் கோப்பிரளய தீர்த்தக்கரையில் அக்னி தவமியற்றி, பெருமாளின் அருளால் தனது ஒளியையும் வெப்பத்தையும் மீண்டும் பெற்றார்.

*இராஜசேகரன்*

சௌராஷ்டிரத்தில் வசுமான் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மைந்தன் இராஜசேகரன். ஒருசமயம் இராஜசேகரன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அங்கே யக்ஞசீலன் என்ற அந்தணன் அவனுக்கு உணவும் உறையுளும் அளித்து உதவினான். தன் நாட்டிற்கு வந்தால் ஏராளமான பொருள் தருவதாக யக்ஞசீலனிடம் இராஜசேகரன் கூறிவிட்டு நாடு திரும்பினான். யக்ஞசீலன் ஒருயாகம் செய்ய விரும்பினான். இராஜசேகரனிடம் பொருள்பெறச் சென்றான். இராஜசேகரன் அவனை அலட்சியப் படுத்தி அனுப்பினான். நன்றி கொன்ற பாவத்தால் இராஜசேகரன் பயித்தியமானான். தற்செயலாக யக்ஞசீலன் இருப்பிடத்தையே அடைந்த இராஜசேகரன், தனது நன்றிமறந்த பாவத்திற்குக் கழுவாய் வேண்டினான். யக்ஞசீலனும் அரசனது நிலைக்கிரங்கி, இத்தலத்திற்கு வந்து ஹரித்திராநதியில் நீராடி பரந்தாமனை வழிபட்டால் தீமை விலகும் என அறிவுறுத்தினான். இராஜசேகரன் இத்தலமடைந்து நீராடி வழிபட்டு உய்வடைந்தான். தாயார் கோபுரம், மண்டபம், பிராகாரம் முதலியவற்றை இராஜசேகரன் அமைத்தான்.

இராஜ சேகரனது மகன் சுவர்ணசிகாமணியும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டான். இத்தலத்தில் சந்தான கிருஷ்ணனாகப் பெருமாள் அவன் மடியில் எழுந்தருளி நற்புத்திரப் பேறளித்தார். அதனால் தான் இன்றும் சந்தான கிருஷ்ண விக்ரஹத்தை மடியில் எழுந்தருளச் செய்து நற்புத்திரப் பேறு பெறுகின்ற பலரையும் இத்தலத்திலே காண்கிறோம்.

மன்னார்குடி மதில் அழகு; கோயில் ஒரு பாதி குளம் ஒரு பாதி; மறையோர் மிகுந்தது மன்னார் குடியே என்னும் பழமொழிகள் இத்தலச் சிறப்பு பற்றி எழுந்தவையாகும்.

*புண்ணியப் புனல்கள்*

இத்தலத்தில் பத்து புண்ணியப் புனல்கள் உள்ளன. வடமொழிப் புராணத்தில் ஒன்பது தீர்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. புண்ணியப் புனல்கள் வருமாறு:

1. ஹரித்திராநதி
2. துருவாச தீர்த்தம்
3. திருப்பாற் கடல்
4. கோபிகாதீர்த்தம்
5. ருக்மணீ தீர்த்தம்
6. அக்னி குண்ட தீர்த்தம்
7. கிருஷ்ண தீர்த்தம்
8. சங்கு தீர்த்தம்
9. சக்கர தீர்த்தம்
10. பாம்பணி ஆறு

*ஹரித்திரா நதி*

கோபிலர், கோப்பிரளயர் என்னும் இருமுனிவர்களுக்கும் பரந்தாமன் கண்ணனாக இத்தலத்தில் காட்சியருளியபோது இக்குளத்தில் கோபிகையருடன் ஜலக்ரீடை செய்தருளினான். கோபிகைகளின் உடலில் பூசிய மஞ்சள் (ஹரித்ரா) மற்றும் நறுமணப் பூச்சுக்கள் இத்தீர்த்தத்தில் படிந்தபடியால் இக்குளம் ஹரித்திராநதி எனப் பெயர் பெற்றது. இக்குளத்தைக் காவிரியின் மகள் எனப் போற்றுவர். அறுபத்தாறு கோடி புண்ணிய தீர்த்தங்கள்

ஒருங்கு சேர்ந்தது இக்குளம் என்பர். இக்குளம் 23 ஏக்கர் பரப்புடையது. கோயிலின் பரப்பும் இக்குளத்தின் பரப்பும் ஒன்றே எனவும் கூறுவர். குளத்தின் நடுவே வேணுகோபாலன் சந்நிதி மிகச் சிறப்புடன் உள்ளது. மாசிமாதத்தில் நியமத்துடன் ஹரித்திராநதியில் நீராடத் தொடங்க வேண்டும் என்பது விதியாகும். இத்தீர்த்தத்துக்கு நிசா தீர்த்தம் என்றும் பெயர். பெருமாளுக்கு நித்தியத் திருமஞ்சன தீர்த்தம் இக்குளத்திலிருந்தே கொணர்கிறார்கள். பிரம்மோத்ஸவ முடிவில் இக்குளத்திலேயே தீர்த்தவாரியும் நிகழ்கின்றது. கோபிலரும் கோப்பிரளயரும் இதில் நீராடி திருஎட்டெழுத்தையும் பன்னிரண்டெழுத்தையும் ஓதிப் பெருமாளைக் கண்டு மோட்சம் அடைந்தனர்.

வைகாசி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்களிலும், அமாவாசை, பூர்ணிமை, கிரஹணகாலம், ரோகிணி, திருவோண நாட்களிலும் இதில் நீராடினால் திருவருள் மிகவும் கிட்டும். மாசிமாதம் முழுவதும் நீராட இயலாமற் போனாலும் கடைசி மூன்று நாட்களாவது நீராட வேண்டுவது சிறப்பு என்று தல மான்மியம் பேசும்.



"மற்ற புண்ணியத் தலங்களில் ஒரு கோடி ஆண்டுகள் தவமியற்றிப் பெறும் பலனை ஹரித்திரா நதிக்கரையில் ஓராண்டில் அடையலாம்" என நாரதர், கோபிலர், கோப்பிரளயரிடம் கூறியதாகத் தலமான்மியம் கூறும்.

ப்ருகு முனிவர் வேண்டுகோளுக்கிணங்கக் காவிரியையே பெரியகுளமாகத் தேக்கி, அதில் பெருமாள் ஜலக்ரீடை செய்தருளினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

கோபிலர் கோப்பிரளயர் தமது வேண்டுகோளில், இத்தலம் துவாரகை போல நான்கு வீதிகளும், கோமதி நதி போல இத்திருக்குளம் விளங்க வேண்டும் என விண்ணப்பித்தனர். பெருமாள் திருவடியில் அவதரித்த கங்கையைக் காட்டிலும், பெருமாள் சம்பந்தம் பெற்ற கல்யாணீ என்ற நதியைக் காட்டிலும், பகவானுடைய வியர்வையினின்றும் உண்டான மத்ஸ்ய நதியைக் காட்டிலும் பெருமாள் மடியில் தவழும் காவிரியைக் காட்டிலும், கண்ணனும் கோபிகைகளும் கலந்து களித்து விளையாடிய பெருமை பெற்ற ஹரித்திரா நதியே மிகவும் புனிதமாயிற்று. ஜலக்கிரீடையின் முடிவில் பகவான் கரையேறி தன் ஆடை அணிகளை அணியும் போது அங்கே ஒரு பட்டாடையும், ஒரு குண்டலமும், ஒரு தோடும் (தாடங்கமும்) மட்டுமே இருந்தன. இவற்றையணிந்த இராஜகோபாலன் அழகைக் கண்டு மகிழ்ந்த முனிவர்கள் என்றைக்கும் இப்படியே காட்சி தந்தருள வேண்டினர். அவ்வண்ணமே இன்றைக்கும் ஸ்ரீ ராஜகோபாலன் ஒற்றைப் பரிவட்டம், ஒற்றைக் குண்டலம், தாடஙகம் இவற்றுடன் காட்சியருளுகின்றார்.

*"ஹரித்ரா ஸரிதஸ்திரே ஜபித் வாத்வாதசாக்ஷரம்*
*ஸ்வாயம்புவோ விமாநஸ்து தரஷ்டவ்ய: முக்திமிச்சதா"*

ஹரித்ராநதியில் நீராடி, துவாதசாட்சரமந்திரத்தை ஓதி, ஸ்வாயம்புவ விமானத்தின் கீழ் விளங்கும் பரந்தாமனைப் பணிந்தால் முக்தி கிடைப்பது திண்ணம்.

*துருவாச தீர்த்தம்*

கோயிலுக்கு மேற்கில் ஒரு வில்லடி தொலைவிலுள்ள இக்குளம் தற்போது கஜேந்திர மோக்ஷம் யானை விழுந்தான் குளம், ஆனைத்தான் குளம் எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. துருவாச முனிவர் இங்கு வரம் பெற்றதால் இதற்குத் துருவாச தீர்த்தம் எனப் பெயர் வந்தது. இக்குளத்தில் ஆனிமாத நீராடல் சிறப்புடையது. சனிக்கிழமைகள் நீராடலும் இங்கே சிறப்புடையதாம். இதில் நீராடுவோர் குருநிந்தை போன்ற கொடிய தீவினை செய்தவராயினும் தீமை நீங்கி நலம் பெறுவர். இங்கே பகவத் கீதை பாராயணம் செய்வதும் பெரும் பயனைத் தரும்.

*திருப்பாற்கடல்*

திருமகள், ப்ருகு முனிவர் மகளாகி வந்து தவமியற்றிப் பரந்தாமனையே நாயகனாகப் பெற்றதை இக்குளக்கரையின் கரையில் அமைந்துள்ள அருள்மிகு லக்ஷ்மி நாராயணன் திருக்கோயில் சான்று பகர்கின்றது. இத்திருக்குளம் திருமகள் தவமியற்றிய தொடர்பினால் பாற்கடல் என்ற பெயர் கொண்டது. இங்கே தை வெள்ளிக்கிழமைகளில் நீராடற் சிறப்புடையது. இதில் நீராடிப் பசுதானம் செய்து அருள்மிகு லக்ஷ்மி நாராயணனை வழிபடுவோர் குறைவிலா வளம்பெறுவர் என்று தலமான்மியம் கூறுகின்றது.

*கோபிகாதீர்த்தம்*

இத்திருக்குளம் கோப்பிரளய தீர்த்தம் ஓமக்குளம் என அழைக்கப்படும் கோப்பிரளயர் தவமியற்றிய இடமாதலால் அவர் பெயராலும், கோபில மகரிஷிகள் இங்கே யாகம் செய்ததால் ஓமக்குளம் எனவும் இது அழைக்கப்படுகிறது. இங்கே அக்னி தவமியற்றித்தன் ஒளியையும் வெப்பத்தையும் மீண்டும் பெற்றார். இங்கே தென்கிழக்கு மூலையில் உபய நாச்சிமார்களுடன் வாசுதேவ மூர்த்தி எழுந்தருளியுள்ளார். கண்ணன் கோபியருடன் நீர் விளையாடல் ஆடியதால் இது கோபிகா தீர்த்தம் எனவும் பெயர் பெற்றது. திருப்பாற்கடல் குளத்திற்கு தெற்கே பட்டுக்கோட்டை செல்லும் வழியில் உள்ள இத்திருக்குளத்தில் புரட்டாசி மாதத்திலும் புதன் கிழமைகளிலும் கண்ணனின் ஆறு எழுத்தோதி நீராடுவோர் வாழ்வில் அனைத்து நலன்களையும் எய்துவர்.

*ருக்மிணி தீர்த்தம்*

கோப்பிரளய தீர்த்தத்துக்கு வடக்கில், கோயிலுக்குச் சற்றுச் சேய்மையில் உள்ள இப்புண்ணியப் புனலில் ஆடிப் பூரத்திலும் திங்கட்கிழமைகளிலும் நீராடுவோர் திருமகள் அருளைத் திடமாய் அடைவர். இங்கே நீராடித் திருமகள் மந்திரத்தை ஓதிச் சுமங்கலிகளுக்கு குங்குமம் மஞ்சள் முதலியன அளிப்பதும், கன்னிகாதானம் செய்வதும் சிறப்பான நன்மைகளைத் தரும்.



*அக்கினி குண்ட தீர்த்தம்*

ருக்மிணீ குளத்திற்குத் தெற்கிலுள்ள இக்குளம் கோப்பிரளய தீர்த்தம் எனவும் போற்றப் பெறும். கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் இதில் புனித நீராடித் தீபதானம், அகில்கட்டை தானம் செய்வது பெரும்புண்ணியமாகும். இங்கே ஒருமுறை ஔபாஸனம் (வேள்வி) செய்வதால் அப்தோர்யாமம் என்ற பெரு வேள்வி செய்த பலன் கிடைக்கும் எனவும் தலமான்மியம் கூறுகின்றது.

*கிருஷ்ண தீர்த்தம்*

கோயிலின் தென்கிழக்கு மூலையில் அழகிய நீராழி (மைய) மண்டபத்துடன் கூடிய இத்திருக்குளத்தில் தான் பெருமாள் பங்குனி பிரமோத்ஸவத்தின் முடிவில் தெப்போற்சவம் கண்டருளுகின்றார். கோயிலுள் விழும் தீர்த்தம் இக்குளத்தில் கலப்பது தனிச்சிறப்பாகும். கோயிலும் குளமும் என்ற முதுமொழிக்கிணங்க அழகாக அமைந்துள்ள திருக்குளம் இதுவேயாகும். மார்கழியில் இதில் நீராடுவதும் பதினாறு வகை (ஷோடச) தானம் செய்வதும் பெரும் பயனைத் தரும்.

*"நமோ ப்ரஹ்மண்ய தேவாய கோப்ராஹ்மண ஹிதாயச!*
*ஜகத் ஹிதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம:!"*

என ஓதி இக்குளத்தில் நீராடுவோர் பிறவிப் பெருந்துன்பம் நீங்குவர். அவர்களைத் தொடுத்த கருமம் விடுபடும்.

*சங்கு தீர்த்தம்*

வலம்புரிச்சங்கு போன்ற அமைப்புடையதால் இக்குளம் இப்பெயர் பெற்றது. கோயிலுக்கருகில் தெற்கில் அமைந்துள்ள இப்புனலில் ஆவணி மாதத்தில் நீராடி, எட்டெழுத்தோதி இரத்தினதானம் செய்வோர் பெரும் நன்மைகளை எய்துவர்.

*சங்கரதீர்த்தம்*

கோயிலுக்கு வடபால் உள்ளது இக்குளம். சங்கு சங்கர தீர்த்தங்கள் இடம் வலம் மாறியுள்ளன. இதனைக் கருத்திற் கொண்டே கோயில் முன்பு மேற்கு நோக்கி இருந்திருக்கலாமோ எனச் சிலர் ஐயுறுவதும் உண்டு. இங்கே சித்திரை மாதத்தில் நீராடித் தானங்களைச் செய்வது சிறப்புடையது. ஹரித்திரா நதியில் நீர் விளையாடி, கரையேறிய பெருமாள் ஒற்றையுடை, ஒரு குண்டலமும் ஒரு தோடும் பூட்டிக் கொண்ட வரலாற்றுக்கியைய தன் சங்கு சக்கரத்தையும் மாற்றி அணிந்து கொண்டதால் இத்திருக்குளங்களின் அமைப்பும் மாறி விட்டனவோ என்று சிலர் நயமாகக் கூறுவதும் உண்டு.

மேற்சொன்ன ஒன்பது தீர்த்தங்களுக்கும் விருட்சம் ரிஷி, தேவதைகள் கூறப்பட்டுள்ளன. அனைத்திற்கும் துவாரகை நாதனே காப்புக் கடவுளாவார்.

*பாம்பணி ஆறு*

இத்தலத்தில் ஓடும் பாமணி ஆறு பத்தாவது புண்ணியப் புனலாகத் திகழ்கின்றது. ஹரித்திராநதிக்கு வடபால் பாமணியாறு ஓடுகிறது. ஊருக்கு வடகிழக்கிலிருந்து வடமேற்கில் மாலை போல இவ்வாறு ஓடுவது குறிப்பிடத் தக்கது.

*திருக்கோயிற் சிறப்பு*

ஆறு சதுர ஏக்கர் பரப்பில் ஏழு பிரகாரங்களும் பதினாறு கோபுரங்களும் கொண்ட மாபெரும் இத்திருக்கோயில் நூற்று ஐம்பத்து நான்கு அடி உயரமுடைய இராஜகோபுரத்துடன் கம்பீரமாக விளங்குகின்றது.

இக்கோயிலில் திருவுண்ணாழிப் பிரகாரம், கருடன் பிராகாரம், சண்பகப் பிராகாரம், காசிப்பிராகாரம், நாச்சியார் பிராகாரம், என்னும் ஐந்து பிராகாரங்கள் தனிச்சிறப்புடையன.

வல்லாள மகாராஜன் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் கருடவாகன மண்டபம், யானை வாகன மண்டபம், பலகணி மண்டபம் வெண்ணெய்தாழி மண்டபம், புன்னை வாகன மண்டபம் என்னும் ஏழுமண்டபங்கள் இக்கோயிலில் அமைந்துள்ளன.

பெருமாள் தாயார் சந்நிதிகள் உட்பட இருபத்து நான்கு சந்நிதிகள் இக்கோயிலில் உள்ளன.

தலவிருட்சம்: புன்னைமரம் ஆகும். இது சண்பக பிராகாரத்தில் உள்ளது. சண்பகாரணியம் என்று போற்றப்பெறும் இத்தலத்தில் முன்பு சண்பகச் செடிகள் மலிந்திருந்தன.

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முதலில் மேற்கு நோக்கிய கோயிலாக இருந்திருக்கக் கூடும் எனவும், ஆகவேதான் தற்போது மேலவாசல் என்றழைக்கப்படும் கோபுரத்தருகில் உள்ள மாளிகைமேடு என்ற இடத்தில் முற்காலத்தில் தஞ்சை மன்னர்கள் சுவாமி தரிசனத்துக்குத் தம் குடும்பத்துடன் வந்து தங்குவர் எனவும், அவர்கள் நேராகவே கோயிலுக்குத் தரிசிக்கச் சென்றிருக்க வேண்டும் எனவும் சிலர் கருதுகின்றனர். மேலும் இன்று சங்கு, சக்கரதீர்த்தங்கள் இடம் வலம் மாறி அமைந்திருப்பதற்கும் இதுவே காரணம் எனவும் எண்ணத் தோன்றுகிறது.

இக்கோயிலுக்கு ஏழு பிராகாரங்கள் என்று நோக்குமிடத்து ஏழாவது பிராகாரமாக விளங்குவது எது என்ற வினா எழுகிறது. வீதிகளையும் பிராகாரமாகக் கணக்கிடுவதும் அக்கால வழக்கம். இன்றைக்குக் கோபால சமுத்திரம் என்று கூறப்படும் நான்கு வீதிகளையும் சுற்றி பிரளயகாலவீதி என்ற நான்கு வீதிகள் இருந்தனவாம். இன்று அவ்வீதிகள் மறைந்துவிட்டன என்பர். இதுவே இக்கோயிலுக்கு ஏழாவது பிராகாரமாயிருந்திருக்கலாம்.

கோபால சமுத்திரம் நான்கு வீதிகளும் ஆறாவது பிராகாரமாகும். இந்த நான்கு வீதிகளும் முற்காலத்தில் பெரிய அகழிகளாக இருந்திருக்கலாம். அதன் காரணமாகக் கோபால சமுத்திரம் என்ற பெயர் பெற்றிருக்கலாம் எனவும், அவை பிற்காலத்தில் வீதிகளாக மாறிய பின்னரும் பழைய பெயரையே கொண்டுள்ளன எனவும் சிலர் கருதுகின்றனர். கோயிலைச் சுற்றிலும் சந்நிதிக்குச் செல்லும் பாதை நீங்கலாக அகழி சூழ்ந்திருந்ததென்பதை நிலஅளவுக் கணக்குகளிலிருந்து காணமுடிகின்றது எனவும் கூறுவர்.

கிழக்குக் கோபாலசமுத்திர வீதியில் கோயிலுக்கு எதிரில் 54 அடி உயரமுள்ள ஒற்றைக்கல் கருடஸ்தம்பம் கம்பீரமாக நம்மை வரவேற்கிறது. கம்பத்தின் மேல் தளத்தில் கருடனுக்கு ஒரு சிறிய அழகிய கோயிலும் உள்ளது. கருடன் கூப்பிய கரங்களுடன் மேற்கு நோக்கி விளங்குகிறார். பல நூற்றாண்டுகளாக நிற்கும் இத்தம்பம் இயற்கையால் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் திகழ்வது திருவருளே அன்றோ! பஞ்சு மூட்டைகளை அடுக்கி இக்கம்பத்தைத்



திருமங்கையாழ்வார் நிறுத்தினார் என்பாரும் உளர். அப்படியாயின் திருமங்கை மன்னன் இத்தலத்தில் மங்களா சாசனம் செய்த பாசுரங்கள் நமக்கு ஏன் கிடைக்கப் பெறவில்லை என்ற வினாவும் நம்முள் எழாமலில்லை. இக்கருடத்தம்பத்தின் வடபால் பெரிய தேர் உள்ளது. அதனருகில் மண்டபமும் உள்ளது திருவாரூருக்கு அடுத்தபடியாக இத்தேர் புகழ்பெறுவது கிழக்கு கோபால சமுத்திர வீதியே இராஜகோபுரத்திற்கு நம்மை அழைக்கின்றது. கோபாலசமுத்திரத்தின் வடமேற்கு மூலையில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. கீழவீதியில் ஆகமபாடசாலை ஒன்று உள்ளது.

கருடத்தம்பத்தை அடுத்து பதினாறு கால் மண்டபம் உள்ளது. கோயில் சந்நிதி முகப்பில் இம்மண்டபம் சிறப்பாக நம்மை வரவேற்கிறது. முன்னர் உற்சவ காலங்களில் இம் மண்டபத்தில் பெருமாளுக்குத் திருவந்திக்காப்பு நடை பெறுவது வழக்கம். சந்நிதித் தெருவின் தென்சரகில் ராஜ கோபுரத்தருகே அகோபில மடத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹனும் ஸ்ரீஅதிவண்சடகோப யதீந்திரமஹாதேசிகனும் எழுந்தருளி யுள்ளனர். வடக்குச் சரகில் ஸ்ரீவானமாமலை மடம் உள்ளது. பதினாறு கால் மண்டபத்தைத் தாண்டி கம்பீரமான இராஜ கோபுரத்தை அடைகிறோம். விண் நிறைந்த கோபுரம் விரைந்து நம்மை அழைக்கின்றது. இக்கோபுரம் ரூபாய் எழுபத்தைந்தாயிரம் செலவில் திருப்பணி செய்யப்பெற்று 8.12.1966 ல் மஹாசம்ப்ரோக்ஷணம், சிறப்பாக நடைபெற்றது.

இராஜகோபுரத்தின் வாயிலுள்ளே தென்புறம் வீர ஆஞ்சநேயர் சிறப்பாக எழுந்தருளியுள்ளார் இவரை வழிபட்டுப் பலரும் நலமடைந்து வருகிறார்கள்.

இப்போது நாம் ஐந்தாவது பிராகாரத்தை அடைகிறோம். இதற்கு "நாச்சியார் பிராகாரம்"-எனப் பெயர். அருள்மிகு செங்கமலத்தாயாருக்கு இதுவே தேரோடும் வீதியாகும். படிதாண்டாப் பத்தினியாக திகழும் தாயார் தேர்த்திருவிழாவினை இவ்வாறு பெற்றிருப்பது வேறெந்த தலத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பாகும். இப்பிராகாரத்தின் தென் கிழக்குப் பகுதியில் ஒரு பெரிய வாயிலும் கோபுரமும் உள்ளன. இவ்வாயில் தற்போது அடைக்கப்பட்டு விட்டது. கோப்பிரளய தீர்த்தத்திலிருந்து பெருமாளுக்கு இவ்வாயிலின் வழியே முன்னர் திருமஞ்சன நீர் கொண்டு வருவது வழக்கம். தென் பிராகாரத்தின் நடுவே பெரிய வாயிலும் கோபுரமும் உள்ளன. அதற்கு எதிரே மதிலோரத்தில் செங்கல் வெட்டிக் கோபுரமும் தென்படுகின்றது. இப்பிராகாரத்தில் "தியாகராஜர் மண்டபம்" ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை திருவாரூர் அருள்மிகு தியாகேசப் பெருமான் இங்கே வந்து திருவிழாக் கண்டு செல்வது வழக்கமாக இருந்ததென அறிகிறோம். மேற்குப் பிராகாரத்தில் கல் கோபுரமும், மேலக்கோபுரமும் அமைந்துள்ளன. மேலக் கோபுரத்தில் நாயக்கர்காலச் சிற்பங்கள் மிகுந்துள்ளன. தஞ்சை மன்னர்கள் இக்கோபுரத்தின் வழியே வந்துதான் வழிபடுவது வழக்கமாம். வடமேற்கு மூலையில் தாயார் திருக்குளமும் அமைந்துள்ளது. வடக்குப் பிராகாரத்தில் வடக்கு வாயிலும், கோபுரமும் செங்கல்வெட்டிக் கோபுரமும் உள்ளன. வடகிழக்குப் பகுதியில் கோசாலையும் யானை மண்டபமும் உள்ளன. இப்பிராகாரத்தில் தான் திருமஞ்சன வீதிவாயிலும் சிறுகோபுரமும் அமைந்துள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் யானை மண்டபத்தருகே தாயார் திருத்தேரும் மண்டபமும் உள்ளன. இம்மண்டபத்தின் மேல்பால் பதினாறு கால் மண்டபமும் அதற்கு மேற்கில் யோகநரசிம்மன் சந்நிதியும் காணப்படுகின்றன. இப்பதினாறு கால் மண்டபத்தில் தாயாருக்குத் திருவந்திக்காப்பு நடை பெறுகின்றது. இங்கே கோயிலின் முகப்பில் புதுமண்டபம் உள்ளது. இம் மண்டபத்தின் மேல் பால் நுழைவாயிலில் கிருஷ்ண கோபுரக் காட்சி கிட்டுகின்றது.

இப்போது நாம் நான்காவது பிராகாரத்தை அடைகிறோம். இதனைக் காசிப்பிராகாரம் என அழைப்பர். கிருஷ்ண கோபுரத்திலிருந்து சந்நிதிக்குள் செல்லும் நீண்ட நடைபாதையைச் 'சபை' என அழைக்கிறார்கள். சபைக்கு மேலே மண்டப முகப்பில் சித்திரவேலைப்பாடு மிக்க ஓவியங்களைக் காணலாம். சபையின் தென்புறம் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. ஆயிரக்கால் மண்டபத்தின் மேற்புறம் திருக்கோயில் அலுவலகம் அமைந்துள்ளது. தென்கிழக்கு மூலையில் பெருமாள் எழுந்தருளும் பகல்பத்து இராப்பத்து மண்டபம் உள்ளது. தெற்குப் பிராகாரத்தில் திருநந்தனவனம் உள்ளது. இங்குள்ள பலாமரத்திலிருந்து கிடைக்கும் சுளையைக்கொண்டு வைகாசி விசாகத்தில் ஸஹாரம் என்னும் இனிப்பு அமுதுபடி பெருமாளுக்கு நிவேதிக்கப்படுகிறது. வடக்குப் பிராகாரத்தில் பதினாறு தூண்களைக் கொண்ட 'திருமாமணிமண்டபம்' உள்ளது. வைகுண்ட ஏகாதசியன்று இம்மண்டபத்தில் பகல் முழுதும் பெருமாள் மண்டபப்படி கண்டருளுவார். இம்மண்டபத்துக்கு எதிரே திருவந்திக் காப்பு நாலுகால் மண்டபம் உள்ளது. சமயச் சொற்பொழிவுகள் இங்கே நிகழ்த்தப்பெறுகின்றன. இப்பிராகாரத்தின் கீழ்க் கோடியில் கூரத்தாழ்வார், உடையவர் சந்நிதிகளும் வாகன மண்டபமும் உள்ளன. கூரத்தாழ்வார் சந்நிதிக்கு நேரே அமைந்த கிணறு, பொதுமக்களுக்குக் குடிநீராக விநியோகிக்கப்படுகின்றது. அக்கிணற்றுக்கு எதிரே தென்பால் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் சந்நிதி உள்ளது.

அடுத்து நாம் மூன்றாவது பிராகாரத்தை அடைகிறோம். இதற்குச் சம்பகப் பிராகாரம் என்று பெயர். சபையின் வழியே இப்பிராகாரத்திற்குள் நுழையும் வாயிலுக்கு மேல் மோகினி கோபுரம் விளங்குகின்றது. இப்பிராகார முகப்பில் தென்பக்க மேடையில் பெரியாழ்வார் மூலவரும் குலசேகராழ்வார் உற்சவரும் எழுந்தருளியுள்ளனர். இவர்களுக்கு எதிரே துவஜஸ்தம்பமும் பலிபீடமும் உள்ளன.

அடுத்து முதலாழ்வார்கள் சந்நிதி உள்ளது. தென்புறம் திருமடைப்பள்ளி உள்ளது. உள்ளே மடைப்பள்ளி நாச்சியார் எழுந்தருளியுள்ளார். மடைப்பள்ளிக்கு "நாச்சியார் பரிக்ரஹம்" எனப்பெயர். தெற்குப்பிராகாரத்தில் கோயிலின் உக்ராண அறையும் அதனை அடுத்து ஆண்டாள், நம்மாழ்வார், மணவாள மாமுனிகள் சந்நிதிகளும் அமைந்துள்ளன. இவற்றிற்கு அருகே குமுதவல்லி நாச்சியாருடன் திருமங்கை மன்னன் இரு விக்ரங்களாகக் காட்சி தருகின்றார். அருகே ஸ்ரீ ராமபாதுகையை வணங்கி நிற்கும் ஆஞ்சநேயரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் விளங்குகின்றனர். இப்பிராகாரத்தில் தாயார் சந்நிதிக்கு எதிரே நாலுகால் மண்டபம் திறந்த வெளியில் அமைந்துள்ளது. கோடை விழாவிலும் வஸந்த விழாவிலும் இம்மண்டபத்தில் நம் பெருமாள் மண்டபப்படி கண்டருளுகிறார். தென்பிராகாரத்தில் அருள்மிகு செங்கமலத்தாயார் சந்நிதி அமைந்துள்ளது. தாயார் சந்நிதியில் நுழைந்ததும் துவஜஸ் தம்பமும் சுபர்ணீ(கருடன் தேவி)யுடன் கூடிய பலிபீடமும் காணப்படும்.

தாயார் ஸந்நிதியின் தென் பிராகாரத்தையடைந்ததும் துளஸி மடமும், அதற்கெதிரே திருக்கண்ணாடி மண்டபமும் தென்படுகின்றன. வடகிழக்கு மூலையில் வைகுண்டசபை என்னும் ரோகிணீ மண்படம் மேல்தளத்தில் விளங்கின்றது. இம்மண்டபத்தில் தான் பெருமாள் ரோகிணீ உத்ஸவம் நடைபெறுகிறது. தாயார் ஸந்நிதிக்கு எதிரிலமைந்த பெரிய நிருத்த மண்டபத்தில் தாயாருக்குப் பத்து நாட்கள் அத்யயன உத்ஸவத்தையும் ஏக சிமாஹாஸன உத்ஸவத்தையும் நடத்துகிறார்கள். மட்டையடி உத்ஸவத்தில் பெருமாளும் தாயாரும் ஒன்றாக எழுந்தருளிக் காட்சி தருவதையே ஏகசிம்ஹாஸனம் என்பர். ஸ்ரீரங்கம் பங்குனி உத்தரமண்டபப்படிபோன்றதே இது. இங்கே உடையவரால் அநுஸந்தானம் செய்யப்பெற்ற கத்யக்ரயக் (வைகுண்ட கத்யம், ஸ்ரீரங்க கத்யம், சரணாகதி கத்யம்) கோஷ்டி நடைபெறும். தைவெள்ளிக்கிழமைகளிலும் தாயார் இதே மண்டபத்தில் திருவோலக்கம் கண்டருளுவார். இம்மண்டபத்தின் மேற்பால் தாயார் மஹாமண்டபம் பித்தளைத்தகடு வேய்ந்த சிறப்புடன் திகழ்கிறது.

தாயார் இம் மஹாமண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திருமஞ்சனம் கண்டருளுகின்றார். இம்மண்டபத்தையடுத்து அர்த்த மண்டபமும் தாயார் சந்நிதியும் உள்ளன. அருள்மிகு செங்கமலத்தாயாரும், அருள்மிகு ஹேமாப்ஜநாயகியும் உத்ஸவமூலவராக எழுந்தருளிப் பேரருள் புரிந்து வருகிறார்கள். தாயார் சந்நிதி மேல் பிராகாரத்திலிருந்து பிரிந்து, பெருமாளுடைய சம்பகப் பிராகாரம் தொடங்குகின்றது. இப்பிராகாரத்தின் வடமேற்குப்பகுதியில் நிருத்த மண்டபம், மஹாமண்டபம், அர்த்த மண்டபங்களுடன் கூடிய இராமர் சந்நிதி உள்ளது. இதே பிராகாரத்தில் பதினாறுகால் ஸ்ரீபாதுகாமண்டபமும் அமைந்துள்ளது. இதனருகே பரமபதவாயிலும், அதற்கருகே பஞ்சபருவ உற்சவ மண்டபமும் உள்ளன. கிழக்குப் பிராகாரத்தில் தலவிருட்சமான புன்னைமரத்தையும், யாகசாலையையும் காணலாம்.

பெருமாள் சந்நிதிக்கு எதிரில் விசாலமான வாத்திய மண்டபமும், இதன் வடபால் வல்லாஜமகாராஜன் உத்தர மண்டபமும், பேரருளாளன் சந்நிதியும் உள்ளன. இம்மகாமண்டபத்தில் பெருமாள் பகற்பத்து உற்சவத்திலும் தாயார் பிரம்மோற்சவத்திலும் எழுந்தருளுவர். பேரருளாளன் சந்நிதிக்கு மேற்கில் திருப்பள்ளியறை உள்ளது. வாத்திய மண்டபத்தூண் ஒன்றில் அச்சுதப்பநாயக்கர், விஜயராகவ நாயக்கர், ராணி சம்பகலக்ஷ்மி ஆகியோர் கூப்பியகரங்களுடன் பெருமாளை வணங்கி நிற்கின்றனர். இம்மண்டபத்தென்பகுதியில் படிகள் உள்ளன. மேலே சாளக்கிராம, ஆஞ்சநேயர் (ஹரித்திரா நதிக்கரையில் எழுந்தருளியிருந்தவர்) பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார்.

கருடன் பிராகாரம் என்றழைக்கப்படும் இரண்டாவது பிராகாரத்தின் நுழை வாயிலுக்கு வந்து விட்டோம். இங்கே வெண்கலத்தில் வடிவு கொண்ட துவாரபாலகர்களான ஜய, விஜயர் மிடுக்காகக் காவல் புரிகிறார்கள். கருடப்பிராகாரத்தில் பெருமாள் நிருத்த மண்டபம் உள்ளது. இங்கே கருடன், உத்ஸவமூர்த்தியுடன் கோயில் கொண்டுள்ளார். இங்கே தென்பிராகாரத்தில் சுரங்க அறை உள்ளது என்பர். மேற்குப் பிராகாரத்தில் தெற்கிலிருந்து வேணுகோபாலன், லக்ஷ்மி நரசிம்மன், அனந்த பத்மநாபன், லக்ஷ்மி நாராயணன், கஜேந்திர வரதன் சந்நிதிகள் விளங்குகின்றன. வடகிழக்கு ஓரம் சேனைமுதலியார் (விஷ்வக்ஸேனர்) மூலவர், உற்சவர் ஸூத்ரவதீ தேவியுடன் கோயில் கொண்டுள்ளார். வடபுறம் வாகன அறை உள்ளது. வெள்ளி, தங்க வாகனங்கள் இங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இப்போது நாம் முதல் பிராகாரமான திருவுண்ணாழியை அடைகிறோம். இங்கே பெருமாள் சந்நிதிக்கு முன்புள்ள மகாமண்டபமான சபை உள்ளது. இங்குள்ள தூண்கள் எல்லாம் பித்தளைத் தகடுகள் வேயப்பட்டுள்ளன. தென் திருவுண்ணாழிப்பிராகாரத்தின் வலப்பக்கம் கருவறை விமானத்தின் கீழ் விநாயகரும், வடக்குப் பிராகாரத்தில் துர்க்கையும் ஸ்ரீரங்கத்தில் உள்ளது போன்றே எழுந்தருளியுள்ளனர். அடுத்து நாம் பெருமாள் அர்த்தமண்டபத்தை அடைகிறோம். உள்ளே கருவறையில் தேவதேவனான பரந்தாமன் ஸ்ரீதேவி பூதேவிமார்களுடன் மூலவர் பரவாஸுதேவனுடைய திருநாமமும் உத்ஸவர் ஸ்ரீருக்மிணி சத்தியபாமாவுடன் ஸ்ரீவித்யா ராஜகோபாலனுடைய திருநாமமும் கொண்டு அழகு வெள்ளம் நம் உள்ளத்தில் அலைபாய நம் தீவினை விண்டோட அற்புதமாகக் காட்சி தந்தருளி உய்விக்கின்றார்.

*மூர்த்திச் சிறப்பு*

"பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகமும் அங்காதும் சோராதே ஆள்கின்ற எம்பெருமான்," அடியார்களின் நன்மைக்காகவே பெருங்கருணையினால் உந்தப்பட்டு, தன்னைப் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று ஐந்து விதமாக ஆக்கிக்கொண்டு அருள் பாலிக்கிறான். "விண்மீது இருப்பாய், மலைமேல் நிற்பாய், கடல் சேர்ப்பாய், மண் மீது உழல்வாய், இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்" என்றார் நம்மாழ்வார். இவ்வைந்து நிலைதனிலும் நிறைவு ஒன்றும் இல்லாத நம் போன்றோர்க்கு 'அர்ச்சை'யே எளிதில் அடையத்தக்கது. கல், மரம், சுதை, உலோகம் முதலியவற்றாலான வடிவங்களில் மந்திரப்பிரதிட்டை செய்விக்கப் பெற்று, கோயில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்தங்களே 'அர்ச்சை' என அழைக்கப்படுகிறது. அர்ச்சை வழிபாடுதான் இறைவன் அருளை விரைவில் நமக்குச் சுரக்கச் செய்யும் என்பது ஆழ்வார் ஆசாரியர்களின் முடிவான தீர்மானமாகும். இவ்வர்ச்சையே 'சுபாச்ரயம்' எனவும் கூறுவர். 'பரம்' என்ற வகைப் பரமபதத்தில் இருக்கும் நிலையாகும். வியூகம் என்பது அண்டத்திற்கு உட்பட்ட பாற்கடலில் பள்ளி கொண்ட நிலையாகும். விபவம் என்பது இராமன், கண்ணன் போன்ற அவதார நிலைகளாகும். அந்தர்யாமி என்ற வகை மக்கள் இதயத்தே ஒளிரும் நிலையாகும். ஆனால் அர்ச்சையோ கோவில்களிலும் வீடுகளிலும் விக்கிரஹ வடிவிலோ சாளக் கிராம வடிவிலோ எழுந்தருளி அடியவர் இச்சைக்கேற்ப அருளும் நிலையாகும். உலக நன்மைக்காக (பரார்த்தம்) கோயிலில் மூர்த்தங்களைப் பிரதிட்டை செய்து வழிபாடுகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. அர்ச்சை என்ற சொல்லுக்குப் பூஜை, பிரதிமை என்று பொருள். இந்த அர்ச்சை இரு வகைப்படும்: கோயில் அர்ச்சை, கிருஹ அர்ச்சை. வீட்டில் வைத்து ஆன்மார்த்தமாக வழிபடும் வடிவம் கிருஹ அர்ச்சையாகும்.

அர்ச்சாவதாரப் பெருமைகள் யாவும் விஷ்வக்ஸேன ஸம்ஹிதை முதலிய ஆகமங்களில் பலபட விளக்கப் பெற்றுள்ளன. அர்ச்சாவதாரத் தலங்கள் 108 என்பர். இவை ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப் பெற்றவை. இவற்றையேயன்றி முனிவர்களாலும், சித்தர்களாலும், பக்தர்களாலும் பிரதிட்டை செய்யப் பெற்ற திவ்ய மூர்த்தங்களைக் கொண்ட கோயில்களும் உள்ளன. இவ்வகையில் ஸ்வயம் வ்யக்தஸ்தலமான நம் மன்னார்குடித் திருக்கோயில் மூர்த்தங்கள் பௌராணிகப் பெருமையும் முனிவர்கள், மன்னர்கள், அருளாளர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற பெருமையும் கொண்டு விளங்குகின்றது.

இக்கோயில் கருவறையில் எம்பெருமான் திருக்கோலத்தை எப்படி வருணிப்பது! பசுவிடம் சிறிது சாய்ந்து கொண்டு ஒற்றை ஆடையுடன் ஒரு காதில் ஓலையும் ஒரு காதில் குண்டலமும் விளங்க, ஒரு கையின் நுனியில் மும்மடிப்புள்ள சாட்டையுடன் கூடிய தங்கக்கோலை ஏந்தியும், இடது திருக்கரத்தைச் சத்தியபாமாவின் திருத்தோளிலே பதியச் செய்தும் த்ரிபங்க லலிதாகாரமாய் உள்ளம் கவர் பேரழகனாம் அருள்மிகு ஸ்ரீவித்யா ராஜ கோபாலனும், ஸ்ரீதேவி பூதேவிமார்களுடன் மூலவர் பரவாஸு தேவனும் மிகவும் கம்பீரமாக விளங்குகின்றார். மூலவர் நின்ற திருக்கோலத்தில் சங்கு, சக்கரம் கதையுடன் வெள்ளிக்கவசம் பூண்டு நம் தீவினையகற்றி அருள் பாலிக்கின்றார். அண்டிவரும் அடியார்களுக்கு அருள்முகம் காட்டுவதோடு நிற்காமல் ஒதுங்கியிருப்பர்களையும் அருள் பாலிக்கும் திருவுள்ளம் கொண்டு திருவீதியுலாக் கண்டு அருளும் ஸ்ரீவித்தியா ராஜகோபாலனின் அழகுக்கு இணையேது! திருவுக்கும் திருவான செல்வனை நாம் கண்டு கண்டு மகிழ்கின்றோம். பக்கத்திலே யாகமூர்த்தி, பல மூர்த்தி, ஸ்நான மூர்த்தி, சயனமூர்த்தி என்னும் நான்கு அழகு வடிவங்களும் உள்ளன. பாலசுவாமி என்பவரால் பூஜிக்கப்பட்ட வெள்ளிச் சிறு கருட வாகனத்துடன் கூடிய தங்க நவநீத கிருஷ்ணனும் அங்கே காட்சி தருகிறார். புத்திரப்பேறு நல்கும் சந்தான கோபாலனும் செல்வரும் விளங்குகின்றனர். இங்கே தரிசிக்கும் இன்பம் பக்தர்களின் உள்ளத்திலே கமர்பிளந்த இடத்திலே ஒரு பாட்டம் மழை விழுந்தாற்போல இருக்கிறது. பக்த கோலஹலனுக்கு அழகின் தேவதையே ஆர அமர ஆரத்தி எடுப்பது போல உள்ள அந்த ஸௌந்தரிய இன்பத்தை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனும் விளக்க விரகில்லான்.!

*முடியானே! மூவுலகும் தொழு தேத்தும் சீ*
*ரடியானே! ஆழ்கடலைக் கடைந்தாய்! புள்ளூர்*
*கொடியானே! கொண்டல் வண்ணா! அண்டத்தும்*
*நெடியானே! என்று கிடக்கும் என் நெஞ்சமே!*

என அரற்றி ஆர்ப்பரிக்கும் அழகு! அப்பரந்தாமனைக் காணும்போது நம் காலாழும்! நெஞ்சழியும்! கண் சுழலும்! திருமுடியில் சுற்றிய திருப்பரிவட்டமும், இடையில் ஒற்றைப் பரிவட்டமும் காண, நீர்வரி கொண்ட இளமணல் போலத் தேம்பல் வரிகொண்ட திருமுக மண்டலமுடன் அருள்மிகு இராஜகோபாலன் காட்சி அழகை என்னென்பது!

கொடி மின்னல் வீசும் கார்மேகம் தவழும் மேருமலை இதுவோ! எனும்படி தோற்றம் அளிக்கும் பொற்பீடத்தின் அழகும்,

அடியார் தம் இருவினைகள் மாய ஈருலகளித்து, அவர்களின் குலதனமாய், என்றும் காத்தருளும் திருச்சதங்கை குலுங்க, ஆழ்வார்களின் ஈரச்சொற்கள் பட்டு ஈரவாடை வீசும் இருதிருப்பாதங்களின் அழகும், சிறிது சாய நின்ற இடது திருவடியழகும், பொற்றாமரைப் பீடத்தில் ஊன்றிய வலது திருவடியின் அழகும், எக்காளம் போலும் பசுவின் வால் போலும், மேலே பருத்தும் கீழே சிறுத்தும் பாங்காக அமைந்த கணைக்கால்களின் அழகும், திவ்விய மன்மதன் சிங்காரப் பூங்கா வாயிலில் நட்டுவித்த பருத்த

ரஸ்தாளி வாழைகள் போன்ற திருத்தொடைகளின் அழகும், வளைந்து காணும் இளைத்த இடையில் அழுத்தி ஒதுக்கி மடித்துச் சாற்றிய ஜரிகை ஒளிரும் ஒற்றைத் திருப்பரி வட்டத்தின் அழகும், சத்தியபாமா தேவியின் வேயுறு தோளில் வைத்த இடது திருக்கை அழகும், செண்டு ஏந்திய வலது திருக்கையின் அழகும், இருபுடைகளிலும் மறுமை, இம்மை இன்பங்களைப்பகிர்ந்து தரும் வலப்பால் ருக்மிணியும், இடப்பால் சத்தியபாமாவும் கலந்து நின்று காணும் சேர்த்தியின் அழகும், கற்பகதரு பணைத்தாற் போன்ற இணையற்ற இரு தோள்களின் அழகும், குலுங்கித் துளுங்கி நடந்து வருகையில், ஆடி அசைந்து மின்னொளி வீசும் ஒரு காதில் தாடங்கமும், மற்றொரு காதில் குண்டலமும் கொண்ட தாடங்க குண்டலியோகத்தின் அழகும்,

மந்தஹாஸம் தவழும் செம்பவளச் செவ்வாயுடன் திருமாமகள் வீற்றிருக்குமதாய், கரைபுரண்டோடும் அலை வெள்ளம் கொண்ட மகாநதி போன்று அருள் வெள்ளம் பாய்கின்ற திருமார்பின் அழகும்,

வலம்புரிச் சங்கம்போல மூவரிகள் படிந்த திருமிடற்றின் அழகும் மறைமணம் வீசும், எள்ளுப்பூப்போல் எட்டிப்பார்க்கும் நெட்டிமூக்கின் அழகும் ஓடித்திரியும் வண்டுகளுக்கு ஓய்யாரமான பஞ்சணை போன்று, அடியார் கண்களுக்குப் படுத்துறங்கப் படுக்கை போன்ற இரு கன்னங்களின் அழகும், செம்பதுமத்தின் இடையே முல்லைகள் வரிசையாகப் பூத்தனவோ என்னும் படியான முறுவல் நிலவழகும், கருணைத்தடத்தில் பூத்த இருகாயா மலர்கள் போன்று கரியவாகிப் புரைபடர்ந்து மிளிர்ந்து செவ்வரியோடிய இரு திருக்கண்களின் அழகும்,

அடியார்களை வா! வா! என வருந்தி அழைக்கும் குனித்த புருவங்களின் அழகும், அஷ்டமீ சந்திரனை அனுசரிக்கும் திருநெற்றியின் அழகும் அழகு வெள்ளத்தில் மிதக்கவிட்ட ஜ்வலிக்கும் விளக்குப்போன்ற திலகத்தின் அழகும். மடித்துக்கட்டிய தாய்முகத்தே தவழ்ந்து விளையாடும் குந்தளத்தின் அழகும், அந்நாளில் இன்பத்தின் இறுதிகண்ட யதோசையைப் போல இந்நாளில் அடியார்களை மடக்க வைக்கும் முழுத் தோற்றத்தின் அழகும், அடியார்களைப் பரவசமாக்குகின்றன!

அமுதவடிவாய் அருள்பாலிக்கும் திருக்கண்களுடன் பக்தரிகளின் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றி வைத்தருளும் செண்டும் கையுமான அருள்மிகு செங்கமலத்தாயாரும் ஹேமாப்ஜநாயகித் தாயாரும் நினைக்குந்தோறும் உள்ளம் தித்திக்கும் ஒப்பற்ற அக்காரக்கனியாக உயிர்க்குயிராக விளங்குகின்றனர்.

கருத்தாழம் கொண்ட கவிதைபோன்று ஆழ்ந்த அமைதிப் புன்முறுவல் பூண்ட இராஜகோபாலனைப் பக்திப் பரவசத்துடன் பரவிப் பார்க்கும்போது அவர் நம்முடனே உள்ளம் கலந்து பேசுவது போலவே அநுபவம் ஏற்படும். ஆடவரையும் பெண்டிரையும் மயக்கும் இவ்வடிவழகு வைகுந்தத்திலும் கிட்டாத வானமுதச் சுவையன்றோ! இப்பெருமானுக்கு எந்த அலங்காரம் செய்தாலும் பார்ப்பவர் இவரை விட்டகல மனமின்றிச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருப்பர்.

இக்கோமள வண்ணனை அர்ச்சாவதார அநுபவத்திற்காகவே அவதரித்த ஆழ்வார்கள் ஏன் அநுபவியாது விட்டனர் என்பதற்கு ஓரிரு காரணங்களை நயமாக நம் முன்னோர் கூறுவது உண்டு. ஏனைய திவ்வியதேச எம்பெருமான்களை ஒருவாறு அநுபவித்த ஆழ்வார்கள் மாயவனான இவருடைய வடிவழகில் மயங்கித் தம்மையும் மறந்து, நீர்ச்சுழலிலே குமிழ்நீல் கொப்பளித்து அமுங்குவாலைப்போல அமிழ்ந்து மயங்கினர் போலும்! கன்றைத் தொடர்ந்து அந்தந்த திவ்விய தேசஎம்பெருமான்களின் திருவுருவத்திலே கலந்து அவர்களுக்குக் காட்சி தந்ததால் பாடாது விட்டனர் போலும்!

இப்பெருமானைத் தம் அபிமான தெய்வமாகப் போற்றிய பெரியஜீயரான ஸ்ரீமணவாள மாமுனிகள் நம்மாழ்வாருடைய "உன்னித்து மற்றோர் தெய்வம் தொழாள்" என்ற பாசுரத்தையும் "அன்னை என்செய்யில்" என்ற பாசுரத்தையும் ஆழ்வாரின் திருவுள்ளப்போக்கிலே ஆழமாடி அவற்றை இப்பெருமாள் விஷயமாய்ச் சமர்ப்பித்ததற்கு இதுவே காரணமாகவும் இருக்கலாம். விண்ணுலக இன்பத்தையும் மண்ணுலக இன்பத்தையும் இணைந்து அருளும் மூர்த்தி இவர் என்பதே முடிந்த முடிவு! ஸ்ரீமணவாள மாமுனிகள் இத்தலத்திலேயே சிலகாலம் எழுந்தருளி இருந்தார் என்பதை இத்தலத்திலுள்ள ஜீயர்குளமும், ஜீயர்புரம் எனவரும் ஊரும் சான்று பகருகின்றன.

இப்பெருமாள் யுகங்கண்ட பெருமாள் என்பதைத் தலமான்மியம் பேசுகின்றன.

இக்கோயிலில் விளங்கும் ஒவ்வொரு மூர்த்தமும் அருளொடு நிறைந்து அடியார்க்கு அமுதெனப்பேரின்பத்தை வழங்கும் பெற்றியன.

தலமான்மியப்படி கிருதயுகத்தில் பிரமதேவர் இங்கே வழிபட்டார், திரேதாயுகத்தில் திருமகளும் ப்ருகுமுனிவரும் வழிபட்டனர், துவாபரயுகத்தில் அக்னி வழிபட்டார், துவாபரயுக முடிவில் கோபிலர், கோப்பிரளயர் வழிபட்டனர், கலியுகத்தில் மூன்றாம் குலோத்துங்கன், ராஜசேகரன், அச்சுதப்ப நாயக்கர், விஜயராகவநாயக்கர் முதலிய மன்னர்களும் ஸ்ரீமணவாளமாமுனிகள், க்ஷேத்ரக்ஞர், முத்துசுவாமி தீட்சிதர், தியாகப்பிரம்மம் மற்றும் எண்ணற்ற ஞானியர், அருளாளர்களும் வழிபட்டுப் பேறும் பெற்றுள்ளனர்.

அழகுக்கு அழகு சேர்ப்பது போன்று இத்திருக்கோயிலில் பெருமாளும் தாயாரும் எண்ணற்ற நவரத்ன, வைர, தங்க அணிகலன்களையும் கவசங்களையும் அணிந்து நமக்கு அருட்காட்சி தந்தருளி விளங்குகின்றனர்

# செண்டலங்காரர்

மகாமகோபாத்யாய உ.வே. சாமிநாதய்யர்

வில்லிபுத்தூரார் பாரதம் தமிழிலே சுவையுடையவர்களுக்கு இனிமை தரும் காவியங்களில் ஒன்று. சங்க காலத்திலேயே பாரதம் ஒன்று இருந்தது. ஆனால், உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப் பெற்றமையின் சில செய்யுட்கள் மாத்திரம் இப்பொழுது உயிர்தரித்து நிற்கின்றன. அதற்குப் பிறகு தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவன் காலத்தில் இயற்றப்பெற்ற பாரதம் ஒன்று உண்டு. அது முற்றும் கிடைக்கவில்லை. அதைப் படித்து இன்புறுவார் அரியர். பிற்காலத்தில் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதம் தமிழர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தது போல வேறு எந்தப் பாரதமும் கவரவில்லை. இப்பொழுதும் தமிழ்நாட்டுக் கிராமங்களிலே தமிழறிந்தோர் வில்லிபாரதப் பிரசங்கம் செய்வதைக் காணலாம். தமிழ்நூலை முறையாகப் பாடங் கேட்பவர்கள் வில்லிபாரதத்தைத் தவறாமற் கேட்பது வழக்கம்.

நான் இளமையிலே அந்நூலைப் படித்த காலத்தில் அதிலுள்ள சந்த அமைப்பைக் கண்டு வியந்தேன். அந்நூலின் நடையிலே ஒரு தனியான கம்பீரம் உள்ளது. இடத்துக்கேற்ற சந்தங்கள் அதில் மிக அழகாக அமைந்திருக்கின்றன. குதிரையின் கதியொலியும் தேரின் கடகடவோசையும் யானையின் முழக்கமும் அந்தச் சந்தங்களிலேயே ஒலிக்கும். வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் வில்லிபுத்தூரார் தடையின்றி மிகுதியாக எடுத்து ஆளுகின்றார்.

சபாபருவத்திலே சூதுபோர்ச் சருக்கத்தில் தரும புத்திரர் சகுனியுடன் சூதாடித் தோற்ற வரலாறு சொல்லப்படுகிறது. சூதாட்டம் முடிந்த பிறகு துரியோதனன் அரசவைக்குத் திரௌபதியை அழைத்துவரும்வண்ணம் தன் தம்பி துச்சாதனனுக்குக் கட்டளையிடுகிறான். காந்தாரியோடு இருந்த திரௌபதியை அவன் வலியப் பிடித்து இழுத்து வருகின்றான்.

*"தண்டார் விடலை தாயுரைப்பத்*
*தாய்முன் னணுகித் தாமரைக்கைச்*
*செண்டால் அவள்பைங் குழல்பற்றித்*
*தீண்டா னாகிச் செல்கின்றான்*
*வண்டார் குழலு முடன்குலைய*
*மானங் குலைய மனங்குலையக்*
*கொண்டா ரிருப்ப ரென்றுநெறிக்*
*கொண்டா ளந்தோ கொடியாளே"*

என்ற செய்யுளில், அவன் திரௌபதியைப் பற்றி இழுத்துச் செல்லும் செய்தி கூறப்படுகின்றது. "தன்னுடைய தாயாகிய காந்தாரி, 'நீ போய் வா' என்று கூற, துச்சாதனன் அன்னை போன்ற திரௌபதியின் முன் சென்று தன் கையிலுள்ள செண்டால் அவளது கூந்தலைப் பற்றிச் செல்லலானான். கொடி போன்ற திரௌபதி அந்தோ! தன் குழல் குலைய மானங் குலைய மனங்குலையத்தான் செல்லுமிடத்தே தன் கணவர் இருப்பர் என்ற தைரியத்தோடு சென்றாள்" என்பது இச் செய்யுளின் பொருள்.

*மாதவ முனிவர்தம் மாதவத்தால் - மன்னைக்கு வந்த மாதவனின் கோவிலைப் புதுப்பித்து பெருவிழா காணும் புரவலரை வாழ்த்தும்*

*ஸ்ரீமுருகன் ஹார்டுவேர்ஸ்*

*இரும்பு பெயிண்ட், சிமிண்ட் வியாபாரம், 61, மேல ராஜ வீதி, மன்னார்குடி, போன் : 22596*

திரௌபதி அக்காலத்தில் தீண்டாத நிலையில் இருந்தாளென்று தெரிகின்றது. பின்னே ஓரிடத்தில்,

*"தீண்டாத கற்புடைய செழுந்திருவை"*


என்று அந்நூலாசிரியரே குறிப்பிக்கின்றார். அதனால்தான் துச்சாதனன் அவளைக் கையாற் பற்றாமல் செண்டாற் பற்றிச் சென்றானென்று ஆசிரியர் கூறினார். இவ்விஷயங்களை யான் பலரிடத்தில் என் இளமையிலே கேட்டிருக்கிறேன்.

*"கைச் செண்டால் அவள்பைங் குழல்பற்றி"*

என்ற இடத்தில் குறிக்கப்பெற்ற செண்டு என்பதற்குப் பூச்செண்டு என்றே பொருள் செய்து வந்தனர். 'துச்சாதனன் கையில் பூச்செண்டு ஏது? திரௌபதி கூந்தலில் அணிந்திருந்த மாலையைப் பிடித்து இழுத்தான் என்று சொல்லலாமா? பாட்டில் தெளிவாகக் கைச்செண்டாலென்று சொல்லப்பட்டிருக்கிறதே. தீண்டாத நிலையில் உள்ள அவள் கூந்தலில் மாலை அணிவதும் கையில் செண்டு வைத்திருப்பதும் இயல்பல்லவே? செண்டென்பதற்குப் பந்தென்று ஒரு பொருள் உண்டு. அதை அமைத்துப் பார்க்கலாமா? பந்துக்கு இங்கே என்ன சம்பந்தம்? என்று இவ்வாறெல்லாம் எனக்கு அடிக்கடி ஐயம் தோன்றிக்கொண்டே இருந்தன.

திருவிளையாடற்புராணத்தில் சோமசுந்தரக் கடவுள் உக்கிர குமாரருக்கு வேல் வளை செண்டு வழங்கியதாக ஒரு திருவிளையாடல் இருக்கிறது. அங்கே கூறப்படும் செண்டு எது? அந்தச் செண்டைக் கொண்டு அவர் மேருவை எறிந்ததாகப் புராணம் கூறுகின்றது. பலர் அதற்குப் பந்தென்றும், பூச்செண்டு போன்ற ஆயுதமென்றும் பொருள் கூறினர். ஐயனார் திருக்கரத்தில் செண்டு இருக்கிறதென்றும், கரிகாற்சோழன் இமயமலையைச் செண்டாலடித்துத் திரித்தானென்றும் சில செய்திகள் நூல்களால் தெரிந்தன. அந்தச் செண்டுகள் யாவை? பந்தா? மலர்ச்செண்டா? செண்டு போன்ற ஆயுதமா? எல்லாம் சந்தேகமாகவே இருந்தன. நான் பலரைக் கேட்டுப் பார்த்தேன். சமயம் போல அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

சற்றேறக்குறைய நாற்பது வருஷங்களுக்குமுன், வழக்கமாக நான் செய்துவரும் தமிழ் யாத்திரையில் ஒருமுறை பொறையாறு முதலிய இடங்களுக்கு போக நேர்ந்தது. என்னோடு இருந்து தமிழ்ப்பணிக்கு உதவிபுரிந்து வந்த திருமானூர்க் கிருஷ்ணயரென்பவருடன் அம்முறை புறப்பட்டேன். மாயூரத்தைக் கடந்து ஆறுமைல் தூரத்திலுள்ள ஆறுபாதி என்னும் ஊருக்கருகில் சென்றுகொண்டிருந்தோம். அங்கே வழியில் கீழ்மேல் அக்கிரகாரத்துக்குப் பின்பக்கமாக வடபுறமுள்ள குளத்தின் கீழ்கரையில் ஒரு பெருமாள் கோயில் இருந்தது. அக்கோயிலின் வாசலில் அதனுடைய தர்மகர்த்தாவும் வேறு சிலரும் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் இருந்த நிலையைப் பார்த்தபோது யாரோ பெரிய உத்தியோகஸ்தர் ஒருவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு நிற்பதாகத் தோன்றியது. எங்களைக் கண்டவுடன் தர்மகர்த்தா என்னை அவ்வுத்தியோகஸ்தராக எண்ணிக்கொண்டாரென்று ஊகித்தேன். அந்தக்காலத்தில் உத்தியோகஸ்தராக இருந்தாலும் கோவிலுக்குப் போகும்போது வைதிகக் கோலத்தோடுதான் போவது வழக்கம். ஆதலின் நான் மிகவும் சாதாரண உடையணிந்து செல்வதைக்கண்டும் அவர் என்னையே உத்தியோகஸ்தராக எண்ணிவிட்டார்; "வாருங்கள், வாருங்கள்" என்று உபசரித்து வரவேற்றார்.



யாரோ ஓர் உத்தியோகஸ்தர் அவ்வாலயத்தைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருந்தாராம். அதற்காகப் பெருமாளுக்கு அலங்காரம் செவ்வையாகச் செய்திருந்தார்கள். தர்மகர்த்தாவும் நல்ல உடைகளை உடுத்து அலங்காரம் செய்துகொண்டு நின்றனர். பிரஸாதங்களும் பெருமாளுக்கு நிவேதனம் செய்த வியாஜமாக உத்தியோகஸ்தரின் பொருட்டு ஸித்தமாக வைத்திருந்தனர். அவர்கள் நெடுநேரம் காத்திருந்தார்கள். உத்தியோகஸ்தர் வரவில்லை. அந்த நிலையிலே என்னைக் கண்டவுடன் அவரென்றோ அவரால் அனுப்பப்பட்டவரென்றோதான் தீர்மானித்திருக்கவேண்டும்.

தர்மகர்த்தா எங்களை உள்ளே அழைத்துச்சென்றார். பெருமாளைத் தரிசனம் செய்து வைத்தார். அவர் எதிர்பார்த்தவர் நான் அல்லவென்று உடனிருந்தவரால் அறிந்து ஏமாந்து போனார். ஆனாலும் அவர் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. கும்பகோணத்தில் நான் வேலையில் உள்ளவனென்று தெரிந்தவுடன் தம்முடைய பெருமை அங்கே பரவட்டுமென்று எண்ணியிருந்தாலும் இருக்கலாம். எப்படியாயினும் எங்களுக்கு எதிர்பாராதபடி திவ்ய தரிசனமும் வயிறார இனிய பிரஸாதங்களும் கிடைத்தன.

தரிசனம் செய்தபோது பெருமாள் திருநாமம் ராஜகோபாலப் பெருமாளென்று அறிந்தேன். அவர் திருக்கரத்தில் பிரம்பைப்போல ஒன்று காணப்பட்டது. அதன் தலைப்பில் இரண்டு வளைவுகள் இருந்தன. நான் அதுகாறும் பெருமாள் திருக்கரத்தில் அத்தகைய ஒன்றைக் கண்டதில்லை; ஆதலால் தர்மகர்த்தாவை நோக்கி, "இது புதிதாயிருக்கிறதே; என்ன ?" என்று கேட்டேன். "அதுதான் செண்டு" என்று அவர் கூறினார். "செண்டா!" என்று சொல்லி அப்படியே நின்றுவிட்டேன். "எங்கே, அதை நன்றாகக் காட்டச் சொல்லுங்கள்" என்று வேண்டினேன்.

கோயில் அர்ச்சகர் கற்பூர தீபத்தால் அந்தச் செண்டை நான் அதைக் கவனித்துப் பார்க்கும்படி காட்டினார். நான் அதைக் கவனித்துப் பார்த்தேன். என் மனக்கண்முன் அப்போது திரௌபதியின் உருவம் வந்து நின்றது; துச்சாதனன் தலைப்பு வளைந்த பிரம்பு போன்ற ஒரு கருவியால் அவள் கூந்தலைப் பற்றியிழுக்கும் காட்சி வந்தது. அடுத்தபடியாக உக்கிரகுமாரர் மேருமலையை அந்தக் கருவியால் எறிந்து திரிந்த தோற்றம் தோன்றியது. அவர் மறைந்தார். கரிகாலன் கையில் செண்டாயுத்தோடு நின்றார். ஐயனாரும் நின்றார். அவர்கள் கைகளில் எல்லாம் தலைப்பு வளைந்த பிரம்புபோன்ற கருவியைக் கண்டேன். சில நிமிஷங்கள் வரையில் இந்த அகக் காட்சிகளால் புறவுலகத்தை மறந்திருந்தேன்.

அந்த அர்ச்சகர் காட்டிய தீபம் பெருமாள் திருக்கரத்திலிருந்த ஆயுதத்தை எனக்குத் தெளிவாகக் காட்டியது. அதனோடு நெடுங்காலமாக என் மனத்திலிருந்த சந்தேக இருளை அகற்றித் துச்சாதனன், உக்கிர குமாரர், கரிகாலன், ஐயனாரென்பவர்கள் கையில் உள்ள கருவி இன்னதுதானென்று அறியும்படியும் செய்தது.

"ஐயா, நீங்கள் எனக்குப் பெரிய உபகாரம் செய்தீர்கள். பெருமாளின் தரிசனத்தால் எனக்கு ஒரு பெரிய லாபம் கிடைத்தது; என் மனம் சந்தோஷம் அடைந்தது. இதுவரையிலும் இந்தச் செண்டைப் பார்த்ததில்லை. உங்கள் தயையால் இதைப் பார்த்தேன்" என்று தர்மகர்த்தாவை நோக்கிக் கூறினேன்.

"இந்தப் பெருமாளும் மன்னார்குடியில் எழுந்தருளியிருக்கும் பெருமாளும் ஒரே அச்சு. அங்கும் பெருமாளின் திருக்கையில் செண்டு உண்டு. செண்டலங்காரப் பெருமாள் என்றும் அவரது திருநாமம் வழங்கும்" என்று அவர் கூறினார்.

"சந்தோஷம். தங்களுக்கு மிகவும் வந்தனம்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டேன்.

அன்றுமுதல் என் சந்தேகம் பறந்துபோய்விட்டது. பிறகு ஆராய்ச்சி செய்யச் செய்யத் தமிழ் இலக்கியத்தில் பல செண்டுகள் கிடைத்தன. அவற்றை நான் மிகவும் தெளிவாக அறிந்துகொண்டேன். மன்னார்குடிப் பெருமாளுக்குச் செண்டலங்காரப் பெருமாளென்னும் திருநாமம் உண்டென்று தர்மகர்த்தா கூறியதை இலக்கிய வாயிலாகவும் நான் உறுதி செய்துகொண்டேன். 'செண்டலங்காரப் பெருமாள் வண்ணம்' என்ற பிரபந்தமொன்றை நான் படித்தபோது அந்த நினைவு வந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கரத்தில் உள்ள செண்டும் ஓர் ஆயுதமென்று தெரிந்துகொண்டேன். பெருமாள் தரிசனத்தின் பயன் கைமேல் கிடைத்தது.



# மன்னையை வாழ்விக்கும் மாலவன்

புலவர் விஜயராகவன், எம்.ஏ., பி.எட்.,
தேசிய மேல்நிலைப்பள்ளி, மன்னார்குடி

திருப்பதிகமென்றும், திவ்ய தேசங்களென்றும், ிப் புகழப்படும் திருப்பதிகளுள் ஒன்று மன்னார் ல் தெட்சிணத்துவாரகை எனவும், வாசுதேவபுரி ம் செண்பாகரண்யத்திருத்தலம் எனவும் போற்றிப் படும் இம்மன்னார் கோயிலில் எழுந்தருளிய கோபாலன் கண்ணாக அவதரித்து அருள்பாலிக்கும் ாமயினை எண்ணிப் பெருமிதங் கொள்ளாதவர் இவர். ற்று நாயகர்கள் பலர் தோன்றியும், வள்ளல்கள் பலர் தும் இறையுணர்வின் மேன்மையினை எடுங்காலங்களுக்கு முன்னரே உணர்த்தியுள்ளனர். ாளர்களையும் பக்தர்களையும் வாழ்விக்கும் ாலவனான ஸ்ரீ விதயா இராசகோபாலனின் மைகளை இக்குடமுழுக்கு நன்னாளில் சிந்தையில் வது மிகப் பொருத்தமான ஒன்றாகும்.

கலியுகத்தில் நமக்கெல்லாம் கைகண்ட மருந்து ாகதியே! இறைவன் திருப்பாதங்களை டைவதற்கு எந்தத் தகுதியும் வேண்டாம். அவனது ாருளானது சாதி, சமயம், காலம் முதலிய வரம்புகளைக் ு நிற்பது. அதனால்தான் கோபாலனாகிய கண்ணனை

*கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை*
*வைகுதாமரை வாங்கிய வேழம்*
*முடியும் வண்ணமோர் முழுவலி முதலை*
*பற்ற மற்றது நின் சரண் நினைப்ப,*
*கொடியவாய் விலங்கின்றுயிர் மலங்கக்*
*கொண்ட சீற்றமொன்றுண்டுளதறிந்து, உன்*
*அடியேனும் வந்தடியினை யடைந்தேன்"*

என்றும் பெரிய திருமொழிப் பாசுரம் உணர்த்தும் உண்மையின் வழி நன்குணரலாம். எல்லா உயிரினங்களுக்கும் இயல்புடையவனாகிய கோபாலன் உயிரினங்களனைத்தையும் வாழ்வித்துக் காக்கும் பேரருளாளன்.

*மாலவனின் பெருமைகளில் மேலும் சில:*

ஓர் ஏழை வேடனான குகனைத் தன் தோழனாகவும், தன் தேவியாகிய சீதையைத் தோழியாகவும் கூறி முறைமை பாராட்டினானெனில் இராகவனாகிய கோபாலனது பெருங்குணத்தை என்னென்பது? எம்பிரானைச் சரணடையின் எமபயம் நீங்கும்; மடிந்தொழிந்த தன் புதல்வனைத் தருமாறு வேண்டிய சாந்தீபனியின் பிரார்த்தனையை நிறைவேற்றருளிய வள்ளலல்லவா கண்ணன்! இன்னும் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்திய கோபாலன் இத்திருநகரில் உறைந்து இன்னருள் பாலித்து வருகின்றான்.

இத்திருத்தலம் மகான்கள் பலரின் திருப்பாதங்களால் புகழ் பெற்ற பதியாகும்.

ஐப்பசித் திருமூலத்தில் திருநகரியில் அவதரித்த அந்தமில்சீர் மணவாள மாமுனிகள் எழுந்தருளி, இறைவனின் பெருமைகளை எடுத்தோதி, ஏழைஏதிலன்கீழ்மகன் என்னாது யாவர்க்கும் சேவை சாதிக்கும் இறைவனின் பெருமையினை விளக்கியுள்ளார்.

*முன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு முழு கும்பாபிஷேகம் செய்யும் கரங்களுக்கு எங்களுடைய வணக்கமும் வாழ்த்துக்களும்*

*பூர்ணா லாட்ஜ் A/c,*
*60, காமராஜர் வீதி, மன்னார்குடி. போன் : 22495*

அம்மாமுனிகள் செங்கமலத்தாயார் எனவும் செண்பக லெட்சுமி எனவும் இச் செண்பகாரண்யத் திருத்தலத்தில் எழுந்தருளி சேவை சாதித்தருளும் ஸ்ரீ தாயாருக்கு ஆடிப்பூரத் திருவிழா கொண்டாட அருளிச் செய்துள்ளார். தாயாரின் திருத்தேர் மணவாள மாமுனிகளின் திரு ஏற்பாட்டிற்கிணங்க அமைந்த ஒன்றாகும். தானே புகலிடம் என்னும் உண்மையை நிலைநிறுத்துவதற்காக பூபாரம் நீக்குவதற்காக இத்தென்துவாரகையில் அவதரித்தவன் இக்கோபாலனாகிய கண்ணபிரான். அவனது திருவடிகளே சரணம் என்று விழுந்து வணங்கினால் அவனருள் கிட்டும் என்பதை அனுபவித்துப் பாடுகிறார் ஆழ்வார்.

"கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண். அது நிறகவந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே" இதனையே "ஸர்வதர்மான் பர்தியஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ"

என்று கீதாசார்யான் கடைசியில் உபதேசித்ததை ஆழ்வார் அழகிய தமிழில். இப்பாடல் வழி விளக்கியுள்ளார். எனவே, அவனை யடைந்தார்க்கு அல்லல் இல்லை என்ற வண்ணம் அருள்பாலிக்கும் கோபாலனை அனுதினமும் வணங்குவார் இடர் நீங்கி இன்பம் எய்துவர்.

பெருமை மிக்க இப்பூதலம் பல்வேறு பெருமை சிவாலயங்களும் அறுபத்து நான்கு தீர்த்தங்களும் செ அழகிற் சிறந்து விளங்கும் தலமாகும்.

ஆண்டு முழுவதும் திருவிழாச் பெருமைப்படும் பெரும்பதிகளுள் ஒன்றாக விளங் காரணமாகவே இத்திருப்பதி கண்ணனாகிய கோபா இடைவிடாது இரட்சிக்கப்படும் அழகிய ஊராகும்.

திருவிடை மன்னரைக் திருமாலைக்கண்டேனே என்னும் திருவுடை வண் கானில் உலகு அளந்தான் என்று துள்ளும் கருவுடை இல்கள் எல்லாம் கடல் வண்ணன் கோயிலே வெருவிலும் வீழ்விலும் ஓவாள் கண்ணன் விரும்புமே என்னும் நம்மாழ்வார் பாசுரவழி எதை காண்பினும் கண்ணனின் கழல்கள் என்றெண்ணித் இன்பம் எய்த வேண்டும்.

துவைத அத்வைத, விஷிஷ்ட வேறுபாடின்றி அனைவரும் போற்றி வணங்கி சிறப்பு மிக்க மன்னையம்பதி என்னும் இத்திருத் பெருமையினை எண்ணி மகிழ்வோமாக.



# செங்கமலவல்லி திருமண வைபவம்

என். விஸ்வநாதன்
தெலுங்கு பண்டிதர், தஞ்சாவூர்

வரலாற்று ஏடுகளைப் புரட்டும்போது தஞ்சாவூர் நாயக்க மன்னர்கள் நாட்டிய-நாடகக் கலையைப் போற்றி வளர்த்த அளவு வேறு எந்த அரச மரபினரும் செய்யவில்லை என்றே கூறலாம். மன்னார்குடி இராஜகோபால சுவாமியை தன் குலதெய்வமாக வரித்துக் கொண்ட தஞ்சை விஜயராகவநாயக்கர் 32க்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதி, அவற்றில் பெரும்பாலான நாடகங்களை மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்திலேயே நடிக்கவும் செய்தான் என்பதை அறியமுடிகிறது. குறிப்பாக பாகவதமேளா என்ற நாட்டிய நாடக மரபில் பிரதான நாடகமாகப் போற்றப்பெறும் பிரகலாத நாடகம் ஒன்றினை விஜயராகவனே எழுதி மன்னார்குடி கோயிலில் அரங்கேற்றினான் என்பதைச் சுவடிகள் வாயிலாகக் காணும்போது, குச்சுப்புடி நாட்டிய மரபின் பலஅம்சங்கள் மன்னார்குடியிலிருந்துதான் சென்றுள்ளது என்று நிச்சயமாக நம்பலாம்.

இசை, நாடகம் முதலிய துறைகளில் நிபுணராக விளங்கிய விஜயராகவன் இராஜகோபாலன் மீது கொண்ட பக்தியினால் தன்னை மன்னாருதாசன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைந்தான். மன்னாருமீது கொண்ட பக்தியினால் தன் மகனுக்கு மன்னாருதேவன் என்று பெயரிட்டான். தந்தையைப் போலவே தனனும் இசை, நடாகம் இயற்றுவதில் வல்லமையோடு வளர்ந்தான். மன்னாரு தேவன் எழுதிய "ஹேமாப்ஜ நாயகி ஸ்வயம்வரமு" எனும் செங்கமலவல்லியின் திருமண வைபவம் பற்றிய நாட்டிய நாடகம் மிகச்சிறந்த தெலுங்கு நாடகம் என்பதில் ஐயமில்லை.

இந்நாடகம் மன்னார்குடி இராஜகோபால சுவாமித் திருக்கோயிலில், மன்னன் விஜயராகவ நாயக்கர், குலகுரு ஸ்ரீனிவாச தாத்தாச்சாரியார் ஆகியோர் இருக்க, இராஜகோபாலப் பெருமானையும் செங்கமலவல்லிநாச்சியாரையும் எழுந்தருளச் செய்து, நாடகமாக நடிக்கப் பெற்றது என்பதை இந்நூலில் காணப்படும் குறிப்பால் அறிய முடிகிறது.

இந்நாடகம் செங்கமலவல்லிக்கும், இராஜகோபாலனுக்கும் மன்னன் விஜயராகவன் முன்னின்று திருமணம் நடத்துவதாக அமைந்துள்ளது. கதையின் துவக்கம் திருப்பாற் கடலை, தேவர்களும், அசுரர்களும், மேருமலையையும் வாசுகியையும் கொண்டு கடைந்து அமிர்தம் எடுப்பதில் துவங்குகின்றது. சமுத்திர மதனம் எனும் இக்காட்சித் துவக்கத்தில் பாற் கடலிலிருந்து கிடைக்கும் பொருள்கள் உயிரினங்கள் ஆகியவற்றோடு இலக்குமித் தாயாரும் வெளிவருதை விரிவாக விவரிக்கின்றது. இலக்குமி தேவியைக் கண்ட மன்னார் எனும் இராஜகோபாலன் விஜயராகவனிடம் வந்து திருமகளைத் தனக்கு மணம் முடிக்கவேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். கோபாலனின் விருப்பத்திற் கிணங்க விஜயராகவ நாயக்கர் சமுத்திராஜனிடம் சென்று

*கஜலெக்ஷ்மியின் அருள் என்றென்றும் கற்பகவிருட்சம்போல் விரிந்திட வேண்டும்.*

*ஹோட்டல் கற்பகம்*

***60, காமராஜர் வீதி, மன்னார்குடி, போன் : 22861***

கோபாலனுக்காக பெண் கேட்கிறார். சமுத்திராஜன் அதற்கு இசையவே மன்னன் விஜயராகவன், குலகுரு ஸ்ரீனிவாச தாத்தாச்சாரியார் ஆகிய இருவரும் முன்னின்று சமுத்திராஜன் வீட்டில் நிச்சயதார்த்த வைபவம் நிகழச் செய்கின்றனர். பின்பு திருமண வைபவம் மிகச் சிறப்பாக நிகழ்கின்றது. மண விழாவோடு மங்கலப் பாடல்கள் முழங்க நாடகம் நிறைவு பெறுகிறது.

திருமணம் செய்து கொள்வதற்காக ஹேமாப்ஜ நாயகி (செங்கமல வல்லி) பல்லக்கில் ஏறி வரும் பேரழகை நாடகப் பாத்திரமான விஜயராகவ நாயக்கர் பல்லக்கு வைபவமாகக் கூறுவதாக இந்நாடகத்தில் கூறப்பெற்றுள்ளது. பொற்பல்லக்கில் அமர்ந்துள்ள செங்கமல வல்லியின் அழகிய கருங் கூந்தலில், மல்லிகை முதலிய பூச்சரங்களும், சூரியபில்லை, சந்திரபில்லை போன்ற அனிகலன்களும் அழுக்கு அழகூட்டுவதாக உள்ளனவாம். குங்குமம், கஸ்தூரித் திலகம், கண் மை, சந்தனம், சவ்வாது போன்ற வாசனைப் பொருள்கள் அவளுக்கு மணமூட்ட, காதணிகள், தாடங்கம் புல்லாக்கு என்ற அலங்கார நகைகளோடு அவள் அழகுறத் திகழ்கிறாளாம். சரிகைப் பாவாடை, புட்டாவோடு பட்டுப்புடவை ஆகிய உடையலங்காரத்தோடு கழுத்தணிகள், மார்பு அணிகள், முத்துமாலைகள், சந்தி மாலைகள், பதக்கங்கள், சங்கிலிகள் இரத்தினக் காப்புகள், வண்ண வண்ண மோதிரங்கள், தண்டை, அந்தை, மெட்டி போன்ற பல்வகை அணிகளும் சூடிய செங்கமலவல்லி தன் பேரழகை கண்ணாடியில் பார்த்து மகிழ்கிறாள் என்று விஜயராகவ நாயக்கரின் கதாபாத்திரம் வாயிலாகக் காட்டப்பெற்றுள்ளது. இவ்வர்ணனை தாயாரை கண்முன் நிறுத்துகிறது.

## தெலுங்கு மொழியில் தாயாரின் வர்ணனை

*குருலு துவ்வி மிடாரி கொப்பமரிஞ்சி*
*ஸரிலேனி யரவிரி ஸரமுலு ஜூட்டி*
*தெலிவொந்த கஸ்தூரிதிலகம்பு தித்தி*
*கலிகி வால்கன்னுல காடுக தீர்சி*
*வகமிஞ்சு சரிகபாவட தரியிஞ்சி*
*ஜிகி புருஸாசீர செலுவொந்த கட்டி*
*பங்காரு ரங்குல ரவிக தரிஞ்சி*
*முத்தேல குதிகண்டு முந்ஜேஸராலு*
*உத்தரிகலு மேல்மி யுதிரிகாஜூலு*
*பதகமுல் மகரால பாபடபொட்டு*
*உங்கரால் ஸரிபெண லொட்டாண மமரு*
*பங்காருசாயல பரகு பல்லகி எக்கி*
*செங்கம்ம யாஸப சேரங்க வச்செ*

இதே போன்று கஸ்தூரி திலகமிட்டு சம்பங்கி பூச்சூடி இராச உருமாலும், பட்டாடையும் தரித்து, பொன்மயமான சால்வை அலங்கரிக்க முத்துமாலை, கிளிப்பதக்கம் தாயத்து, வண்ண மோதிரங்கள், காப்புகள் விருதுபெண்டேரம், அட்டிகை போன்ற எழில்மிகு அணிகலன்கள் சூடி இராசமன்னார் வீற்றிருக்கும் பேரழகுக் கோலத்தை விஜயராகவ நாயக்கர் பாடுவதாக இந்நாடகக் காட்சி அமைந்துள்ளது.

## இராச மன்னார் கொலுச் சிங்காரம்

*தீருகா கஸ்தூரிதிலகம்பு தித்தி*
*ஜகஜம்பு ஸம்பங்கிஸரு லரஜாரு*
*சிக ஜூட்டி யாபைன் ஜீனிகடானி*
*ஸரிக முத்தெபு ஜண்டி ஸவரண யொண்டி*
*பொற புருஸாருமால் பொலுபொந்த கட்டி*
*பலுடம்பு சல்லடம்புபை ரஹிமீரு*
*ஸூளுவு பட்டுஹிஜாரு ஸொகஸூகா தொடிகி*
*பங்காரு ஸரிகதுப்படி வலெவாடு*
*தேட ஸூப்பாணி முத்யால சௌகட்லு*
*தரியிஞ்சி யல சமந்தக கௌஸ்துபமுல*
*கரகங்கணம்புலு கண்டபெண்டெம்பு*
*ஸரிபணிலுனு கண்டஸருலு ஜேஸருலு*
*கொலுவு ஸிங்காரமை கோடிகந்தர்ப*
*லலித ஸௌந்தர்ய விலாஸூடை மெறஸெ*

இந்நாடகம் எந்த ஆண்டு அரங்கேறியது என்ற தகவல் நாடகத்தின் ஒரு காட்சியின் வாயிலாகவே தெரிவிக்கப்பெற்றிருப்பது சுவையான தகவலாகும். விஜயராகவ நாயக்கர், தாத்தாச்சாரியார் போன்றவர்கள் திருமண வைபவத்திற்காக சங்கல்பம் செய்து கொள்ளும் நாடகக் காட்சியில் சௌமிய நாமசம்வதசரே, உத்தராயணே, வசந்தருது, சயித்ரமாஸே சுக்ல பக்ஷம், என்று கூறப்பெறும் குறிப்பால், இது. கி.பி. 1669 மார்ச்சு 21 ஆம் நாளுக்கும் ஏப்ரல் ஐந்தாம் நாளுக்கும் இடையில் நிகழ்ந்தது எனபதும் அறிகிறோம்.

# மன்னாருதாச விலாசம்

இரா. சீனிவாசன் M.A.,
கோட்டாட்சியர், மன்னார்குடி

1632லிருந்து 1675 வரை தஞ்சாவூரை ஆட்சி செய்த விஜயராகவ நாயக்கரின் குலதெய்வம் மன்னார்குடி இராஜகோபாலப் பெருமான் என்பதைப் பல இலக்கியங்கள் கூறுகின்றன. இம்மன்னனின் அவையை அலங்கரித்த பெண்பாற் புலவர் ரங்காஜம்மா என்பவராவார். ரங்கஜம்மாவின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கது மன்னாருதாச விலாசம் எனும் நாடகநூலாகும். இந்நூலில் மன்னார்குடி கோயில், திருவிழாக்கள், மன்னார், செங்கமலவல்லி, மன்னன் விஜயராகவன் அவனது பரிவாரத்தார் என்று நம் கண்முன் காட்சிப்படுத்துகிறார். இது சுவையான நாடகம் மட்டுமன்று. சுவையான வரலாறு காட்டும் ஆடி என்றே சொல்லாம்.

இந்நாடகம், தஞ்சாவூர் அரண்மனையில் நிகழும் நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு துவங்குகிறது. மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானின் பங்குனித் திருவிழா தொடங்குவதற்காக மன்னனாரின் ஸ்ரீமுகத்தோடு தஞ்சை மன்னரைக் காண திருக்கோயிலார் அனைவரும் தஞ்சை அரண்மனை வாசலில் காத்து நிற்கின்றனர். இதனைக் காவலன் ஒருவன் மன்னனிடம் அறிவிக்கிறான். இதநைக் காட்சிப்படுத்தும் ரங்காஜம்மா காவலனின் கூற்றாக பின்வருமாறு கூறுகிறார்.

காவலன் *"சாமி பராக்கு, கிழக்கே மன்னாரு கோயிலிலிருந்து பங்குனித் திருநாளுக்குத் தேங்காய் வாங்க செங்கோல் பாருபத்தியகாரனும், ஐஞ்சுவகை நிர்வாகத்து நம்பிமாரும், தலத்தாரும், ஜீயாளும், ஏகாங்கியளும், வயிராவிகளும், கொத்தியளும், ஸ்ரீபாதந்தாங்கியளும், திருரா பரண கணக்கப்பில்ளையும், இராஜ போகத்தாரும், கூடி ஆனைமேலே ஸ்ரீமுகம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து சமூகத்திலே அறிக்கைப் பண்ணச் சொல்லி ஆசார வாசலிலே காத்திருக்கிறார்கள் சாமி சித்தம்" என்று கூறுகிறான்.*

"ஸ்ரீமுகம்" என்று இங்கு குறிப்பிட்டிருப்பது மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானின் ஆணை எழுதப்பெற்ற ஓலையாகும். மன்னன் விஜயராகவனுக்கு தன் திருவிழா பற்றி அறிவிக்கும் செய்தி அடங்கிய இந்த ஸ்ரீமுகத்தை மன்னனிடம் சமர்ப்பித்து விழாவுக்கென மங்களகரமாக முதற் தேங்காயை மன்னனிடமிருந்து பெறவே இவர்கள் வந்தார்கள் என்பது அறிகிறோம். மேலும் அத்திருக்கோயிலில் செங்கோல் பாருபத்தியக்காரன், என்ற அரசு ஆலய நிர்வாகி அலுவலன், ஐந்துவகை நம்பிமார், ஸ்தலத்தார் எனும் கோயில் பூஜை உரிமைபெற்ற பட்டர்கள், ஜீயாள் எனும் வைணவ மடத்துத் தலைவர், ஏகாங்கிசள் எனும் ஸ்ரீவைஷ்ணவர்கள், வயிராவிகள் எனும் ஒருவகை அடியார் கூட்டம், கொத்து எனும் பலவகையான பணியாளர்கள், இறைவன் திருமேனியை உலா எடுத்துச் செல்லும் ஸ்ரீபாதந்தாங்கிகள், இறைவனின் அணிகலன்களை பாதுகாக்கும் கணக்கப்பிள்ளைகள், இராஜபோகத்தார் என்னும் இசை நாட்டியக் கலைஞர்கள் ஆகிய பலரும் வந்ததாக இங்கு காண்கிறோம்.

*பாரில் உள்ளோர் பிணியெல்லாம் போக்கும் பரந்தாமன் பேரருள் பெற வாழ்த்தும்*

*ரெங்கேஸ்வரா மருத்துவமனை,*
***சந்தைப்பேட்டை, மன்னார்குடி, போன் : 22426***

மன்னார்குடி திருக்கோயில் நிர்வாகத்தில் எத்தனை வகையினர் பங்கேற்றனர் என்பதை இந்நாடகக் காட்சி நமக்கு காட்டுகின்றது.

திருவாரூர்த் திருக்கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழாவின் துவக்க நாளில் தியாகேசப் பெருமானின் ஸ்ரீமுகத்தையும் சண்டிகேசரின் ஸ்ரீமுகத்தையும் படித்துக்காட்டுவர் இவற்றில் ஆரூர் தியாகேசனே அனைவரையும் தன் திருவிழாக்காண அழைப்பதாக எழுதப் பெற்றிருக்கும். இம்மரபு இன்றளவும் போற்றப் பெறுகின்றது. இதேபோல மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானே தன் பங்குனித் திருவிழாவுக்கு மன்னன் விஜயராகவனை அழைக்க சேனை முதலி எனும் விஷ்வக்சேனர் மூலமாக அனுப்பும் ஸ்ரீமுகமே இங்கு யானைமேல் வைத்து தஞ்சைக்கு எடுத்துவரப்பெறும் ஸ்ரீமுகமாகும். அந்த ஸ்ரீமுகம் இதுவேயாகும்.

*ஏதத் ஸுராஸுராதீச ரத்னப்ராபாருணம்*
*ஸ்ரீமத் துவாரவதீநாத சாசனம் சாத்வதம் பதம்*
*ஸ்ரீமதனந்தகோடி ப்ரஹ்மாண்ட நிக்ரஹானுக்ரகம்பு*
*லகு பரிக்ரஹிஞ்சின மணிதண்டம்புதோ வேதண்ட*
*வரதுனி நகரி தளவாயி யகு விஷ்வக்ஸேனுலு*
*ஸகல கல்யாணகுண ஸம்பன்னுண்டை மாயாவாதிமத*
*விபேத களாதுரீணுண்டை ஷோடச மஹாதான*
*தீஷா விசஷணுண்டை மன்னாருதாஸ நாமாங்கித*
*விசால வக்ஷுண்டை ஸ்ரீராஜகோபாலஸ்வாமி பிரிய*
*புத்ருண்டை ஹெச்சு அச்யுத விஜயராகவ பூபாலு*
*னகு வ்ராயிந்சி பஞ்சின மங்கள சாசனம்பு*
*சுபக்ருத் ஸம்வத்ர பால்குண பஹுள பஞ்சமீ*
*குருவாஸரம்புன ஸ்வாதீ நக்ஷத்ரம்புன பிரம்ம*
*திருநாள்ளகு துவ ஜாரோஹணம்பை யந்துகு*
*பதிநெனிமிதி தினம்புனரோஹிணீ நக்ஷத்ரம்புன*
*ரதோஸ்வம்பு நடவங்கா நுன்னதி கனக ஈமங்களா*
*சாசனம்பு வின்ன தத்ஷணம்பு ரதகஜதுரக பதாதுரலதோ*
*ஸபரிவாரம்புகா தஷிண துவாரகா நகரம்புனகு*
*ஸாகிவச்சி ஹரித்ரா ஸரித்ரஜாத்தீர கல்பிதா கல்பக*
*தாந்தார தந்துர க்குஹாந்தரம் புல ஹவணிஞ்சின*
*காஞ்சன பஞ்சானன பீடம்புன விஜயிஞ்சி யுண்டேதி*
*மங்களா சாசனம்*




இந்த திருமுகம் மன்னன் விஜயராகவ நாயக்கரை மன்னாருதாசன் என்றும், ஸ்ரீராஜகோபலசுவாமியின் பிரியபுத்திரன் என்றும, அச்சுத விஜயராகவபூபாலன் என்றும் குறிப்பிடுகின்றது. பால்குணமாதமாகிய பங்குனி மாதத்தில் பகுள பஞ்சமி திதியும், வியாழக்கிழமையும், சுவாதி நட்சத்திரமும் கூடிய நாளில் பிரம்மோஸ்தவம் எனும் திருவிழாவுக்காக துவஜாரோகணம் எனும் கொடி ஏற்று விழா நடந்தது என்ற குறிப்பும் காட்டுகிறது. மன்னார்குடியை தெட்சிண துவாரகை எனக் குறிப்பிடும் இந்தத் திருமுகம், இங்கு ஹரித்திரா நதிக்கரையில் மன்னனின் மாளிகையும், அவன் அமரும் பஞ்சானனபீடம் எனும் அரசுக் கட்டிலும் இருந்ததாகக் குறிக்கின்றது.

இதே நாடகத்தில் கோயிலில் நடப்பதாகக் காட்டப்பெற்றுள்ள காட்சி ஒன்றின் மூலமாக இக்கோயிலின் ஆண்டு வருமானமும், சொந்தமான கிராமங்களின் எண்ணிக்கையும் கூறப்பெறுகின்றது.

*“லட்சத்து ஐம்பதினாயிரம் பொன்னுக்கு திருவிடையாட்டம் கிராமங்களில் நடக்கிறது. அதிலே கிராமங்களாய் எண்பது. உட்கடயல் எழுபத்து நாலு, மடப்புரம் பன்னிரண்டு, கஞ்சனத்திலே மூணுமாகாணம் நடக்குறது. இதுக்கு மன்னங்காலிலே மூனுலட்சம் கலம் நெல்லும் முப்பதுனாயிரம் பொன்னும் குத்தகைபட்டி .....”*

என்று நாடக கதாபாத்திரங்களான கோயில் அலுவலர்கள் மன்னனுக்கு அறிக்கை செய்வதின் வாயிலாகக் கூறப்பெற்றுள்ளது. இது தவிர புஷ்பவனத்திலே லட்சத்து ஐம்பதினாயிரம் இலுப்பை மரங்கள் உள்ளதாகவும் அவற்றின் மூலம் ஐம்பதினாயிரம் கலம் இலுப்பைக்கொட்டை கிடைப்பதாகவும் கூறப்பெற்றுள்ளது. தஞ்சை அரண்மனையிலிருந்து இக்கோயிலுக்கென ஒவ்வொரு நாளும் 50 பொற் காசுகள் வழங்கப்பட்டது என்ற செய்தியையும் இந்நாடகத்தின் வாயிலாக அறிகிறோம்.

மன்னாருதாசவிலாசம் எனும் இந்நாடகம் மன்னாருதாசன் எனும் விஜயராகவனின் வரலாறு, மன்னார்குடி திருக்கோயில்; மன்னனார் எனும் இராஜகோபாலப் பெருமானின் கீர்த்திகள் ஆகிய பல செய்திகளை அறிய பெரிதும் துணைபுரிகின்றது.



# ஆண்டு முழுமையும் விழாக் கொள்ளும் கோபாலன்

புலவர் ஆர். செம்பகேச தீட்ஷிதர்
ஓய்வு பெற்ற தமிழாசிரியர், மன்னார்குடி.

ஆண்டு முழுமையும் விழாக்களால் புகழ்மிக்கது மன்னயம்பதி. இவ்வூரில் கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு இராஜகோபாலன் ஆண்டு முழுமையும் விழாக்கொள்ளும் மாண்பினை இந்நன்னாளில் எண்ணிப் பெருமிதம் கொள்வோம்.

*சித்திரை*

கோடைத்திருவிழா என்னும் இத்திருநாள் 10 தினங்கள் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அட்சயதிருத்திகை என்னும் புண்ணிய நாளில் அகிலம் புகழும் அகோபிலமடத்தினரால் புகழ்மிக்க கருடவாகனத்தில் சுவர்ண வைரமுடி சேவையுடன் வீதி உலாக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

*வைகாசி*

வசந்தவிழா என்னும் பெயரால் 10 தினங்கள் ஆலயத்திற்குள் அதிவிமர்சையாக சுவாமி புறப்பாடும், இதர வைபவங்களும் முறையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நிறைவு நாளன்று அதிகாலை 5.00 மணியளவில் 'உதயகருடன்' ஆனமீகர்களால் போற்றப்படும் முறையில் சுவாமி வீதிஉலா கீழராஜவீதியில் கைலாசநாதர் கோயில் வாயிலில் எழுந்தருளி சூரியனுக்கு உதயநேரத்தில் அருள்பாலிப்பது போல் அமைந்த ஒரு முக்கியமான விழாவாக நடைபெற்று வருகிறது.

*ஆனி*

புகழ்மிக்க அரித்திராநதி என்று போற்றப்படும் தடாகத்தில் தெப்பத் திருவிழா வெகு விமரிசையாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவிற்கு முன்னர் கொடியேற்றத்துடன் முக்கியமான வாகனங்களில் இறைவன் எழுந்தருளி இத்தடாகத்தைச் சுற்றியுள்ள பக்தர்கள் அனைவருக்கும் சேவை சாதித்தருளிகின்றார்.

*ஆடி*

அருள்மிகு செங்கமலத்தாயாருக்கு நடைபெறும் மிக முக்கியமான திருவிழா இம்மாதத்தில் கொண்டாடப்படுகிறது. 'திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே' என்று போற்றப்படும் ஆண்டாளே செங்கமலத் தாயாராக அருள்பாலிக்கிறாள் என்பது ஐதீகம். அதன்படி பூர நட்சத்திரத்தில் விமரிசையாக திருவிழாக்கொண்டு திருத்தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறாள். ஆடி 18ம் நாளிலோ 28ம் நாளிலோ அருள்மிகு இராசகோபாலன் ஆடிப்பெருக்கு விழாவாக பாமணி ஆற்றிற்குச் சென்று தீர்த்தவாரி கண்டருளி சேவை சாதிக்கின்றார். பின்னர் அருள்மிகு லட்சுமிநாராயணப் பெருமாள் சன்னதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருபாலிக்கின்றார்.

*ஆவணி*

'திருப்பவித்ரோத்சவம்' என்னும் புகழ்மிக்க திருவிழா இம்மாதத்தில் 10 தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் முக்கியத்துவம் என்னவெனில் அன்றாட பூஜைகளில் குறைகளிருப்பின் அவைகளைக் களைவதற்காக 10 தினங்களில் 365 விசேஷ பூஜைகள் நடத்தப்பெற்று வருவது சிறப்பு அம்சமாகும். கண்ணன் பிறப்பு (ஜயந்தி) திருவிழாவும், உரியடித் திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

*குடமுழுக்கு காணவரும் பக்தர்களை வரவேற்கும்*

*அன்பன்*
*முனியாண்டி*
*தேவகண்ணி எலெக்ட்ரிகல் காண்ட்ராக்டர்ஸ், மன்னார்குடி.*

*புரட்டாசி*

நவராத்திரித் திருவிழா ஆண்டுதோறும் இம்மாதத்தில் விமரிசையாகக்கொண்டாடப்படுகிறது. கலைமகள், மலைமகள், நிலமகள் ஆகியோருக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்று இறைவன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அருள்மிகு கோபிநாதன் ஆலயத்திற்கு சென்று பக்தர்களுக்கு அருள்வழங்கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

*ஐப்பசி*

தீபாவளித் திருநாள் அன்று தொடங்கி 10 தினங்கள் கோலாட்டத் திருவிழா சிறப்புற நடைபெற்று வருகிறது. இவ்விழா காலங்களில் கண்ணனின் லீலைக் காட்சிகள் இடம்பெறுவது சிறப்பு அம்சமாகும்.

*கார்த்திகை*

திருக்கார்த்திகை தீபத் திருவிழா வைணவத் தலங்களில் கொண்டாடப்படும் முறைமைக்கேற்ப சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

*மார்கழி*

மாதங்களில் சிறந்த மார்கழியாகத் திகழும் கண்ணபிரானுக்கு தனுர்மாத அதிகாலை பூஜைகளும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாடல்களைக் கேட்டருளவும், திருமொழி திருநாள் 10 தினங்களும் திருவாய்மொழி திருநாள் 10 தினங்களாகவும் சிறப்புறக் கொண்டாடப்பட்டு வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

*தை*

அருள்மிகு தாயாருக்கு சிறப்பான முறையில் ஊஞ்சல் திருநாள் 10 தினங்கள் நடைபெற்று வருகிறது. தை மாதம் முதல் நாள் தொட்டு நான்கு நாட்கள் முறையே சங்கராந்தி, சணப்பரிவேட்டை, மட்டையடித் திருவிழா, ஏகசிம்மாசன சேவையும் மிகச் சிறப்பு வாய்ந்தது.

*மாசி*

மாசி மகத்தன்று பூர்த்தியடையும் வகையில் கோபாலனுக்கு ஊஞ்சல் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. 7 ஆம் நாள் திருவிழாவில் தாயார் கோபாலன் சன்னதிக்கு எழுந்தருளி சேவை சாதிப்பதுடன் இரவு ஊஞ்சலில் பெருமாளுடன் சேர்ந்து சேவை சாதித்தல்.

*பங்குனி*

பிரம்மோற்சவம் என்று போற்றப்படும் இவ்விழா 13 நாட்கள் பல்வேறு வாகனங்களில் கோபாலன் திருவீதி உலாவும் 12 தினங்களில் விடையாற்றிப் பெருவிழாவும் பார்போற்றும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருவதுடன் பஞ்சபருவங்கள் என்று சொல்லப்படும் ஏகாதசி, அமாவாசை, ரோகிணி, திருவோணம், மாதப்பிறப்பு ஆகிய தினங்களில் கோபாலன் புறப்பாடும் வெள்ளிக்கிழமைதோறும் தாயாருக்கு திருமஞ்சனம் நடைபெறுவதுடன் புறப்பாடும் தவறாமல் நடைபெற்று வருகிறது. அத்துடன் ஆழ்வார்கள் திருநட்சத்திரத் திருவிழாக்களும் ஆச்சார்யர்களாகிய மணவாள மாமுனிகள், நிலைமாந்த மகாதேசிகர் ஆகியோரது திருநட்சத்திரத் திருவிழாக்களும் நடைபெற்று வருகிறது. இவ்வாறு ஆண்டு முழுவதும் விழாக்கொள்ளும் இத்திருத்தலம் மெய்யன்பர்களின் உதவியால் குடமுழுக்கு விழாக்காணும் இந்நன்னாளில் அவனருள் பெற்றுய்ய அவன் அடிபணிவோமாக.





# மன்னார்குடி ராஜகோபாலன்

உவே மஹாவித்வான் வில்லூர் நடாதூர் ஆசுகவி ஸார்வபௌம ஸ்ரீநிதிஸ்வாமி

ஸ்ரீயஃபதியான நாராயணன் அர்ச்சகை வடிவில் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்கள் பல. பரந்த இந்த பாரத நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவனுடைய கோயில்கள் பல உள்ளன. ஆயினும் அவற்றில் சில திருத்தலங்களுக்குத் தனியானதோர் ஏற்றம் உண்டு. மூர்த்தி, தீர்த்தம்தலம் என மூன்று விஷயங்களின் அடிப்படையில் சிறப்புக்கள் கணக்கிடப்படும். அழகான மூர்த்தி அதாவது வடிவ அமைப்புடன் கூடிய திருமேனியினால் பெருமை. திருத்தலத்தின் அமைப்பினால்குருக்கக் கூடிய ஏற்றம் மற்றும் அங்கு அமைந்துள்ள தீர்த்த நிலைகளினால் வரக்கூடியதோர் ஏற்றம் என்று உணர்ந்து பெரியோர் பெருமை பகர்வர். மன்னார்குடி ராஜகோபாலனின் வடிவழகு உலகப் புகழ் பெற்றது. மன்னார்குடி மதில் அழகு 'என்றே பழமொழி வழங்குகின்றது. எனில் திருத்தல அமைப்பைப் பற்றித் தனியே சொல்லவும் வேண்டுமா? தெளிந்த பெருந்தீர்த்தங்கள் என்னும்படி ஹரித்ரா நதி, க்ருஷ்ணதீர்த்தம், கோப்ரளையம் என்பதாகப் பல திருக்குளங்கள் நிறைந்துள்ளன. பாமணி என்கிற பெயரில் காவிரியின் கிளை ஒன்று மன்னார்குடியை அணைத்தவாறு ப்ரவேசிக்கின்றது. மன்னார்குடி திருக்கோயிலுக்கு வதிய பரப்பளவு எவ்வளவோ அவ்வளவு பரப்புடையது ஹரித்ரா நதி என்று வழங்கப்படும் திருக்குளம். இது இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பு ஆகும.

இங்கு எழுந்தருளியிருக்கும் ராஜகோபாலனின் வடிவழகு, அவன் கையிலே உள்ள செண்டு என்றும், திருவாயுதம் மற்றும் அவனுக்குள்ள வித்யா ராஜகோபாலன் என்கிற திருப்பெயர் இவைகளைப் பற்றி எழுதுவதற்குப் பல பல பக்கங்கள் தேவைப்படும். நாம் காலத்துக்கும் மற்றைய வரையறைக்கும் உட்பட்டவர்களாகையால் ஓரளவு சுருக்கமாக அவைகளை அனுபவிப்போம்.

புராணங்களில் இத்திருத்தலங்களைப் பற்றிய குறிப்புகளில் இங்கு தவம் செய்த முனிவர்கட்கு எம்பெருமாள் தன்னுடைய குரவைக் கூத்தினை (ராஸக்ரீடையை) மீண்டும் ஒரு காட்சியாகக் காட்டியருளியதாகக் கூறப்பட்டுள்ளது. பெருமாள் ராணிக்ரிடை என்றும், குரவைக் கூத்தினை அன்றைய நாள் ப்ருந்தாவனத்திலே செய்து மகிழ்ந்த பின் குரவைக் கூத்தினில் தன்னுடன் ஆடிய கோபிமார்களுடன் ஜலக்கீறீடை செய்தான் என்று பாகவதமும், விஷ்ணுபுராணமும் கூறுகின்றன. ஸ்வாமி தேசிகன் கண்ணன் வரலாறு கூறும் யாதவரிப்புதயம் என்கிற மஹாகாவ்யத்தினை அருளியுள்ளார். அங்கே மிக விரிவாக குந்த ஜலக்ரீடையை அனுபவித்தருளுகிறார். அந்த ஜலக்ரீடைக்காக எம்பெருமாளும் கோபிகைகளும் தூய பெருநீர் யமுனைக்கு வருகையில் கங்கை முதலிய புண்ணிய நதிகள் யமுனையில் கலந்தன என்வும், மற்றும் பணிப் பெண்களின் வடிவத்திலே வந்து தவம் கிடந்து கோபிகைகட்கும், கண்ணனுக்கும் ஒப்பனை செய்யக் காத்திருந்தனர் என்றும், ஸ்வாமி தேசிகன் வருணித்துள்ளார். சம்பக வனம் என்று பெயர் வரும்படியாகச் செண்பகப்பூ மரங்கள் அடர்ந்திருந்த இப்பகுதியில் தவமிருந்த முனிவர் அக்காட்சியை எல்லாம் காணும் அவாவில் இருந்தனர். அன்று அங்கு யமுனையில் கோபிகைகளுடன் குரவை கோத்த பின் யமுனைக் கரையிலே அணிகலன்களைக் கழற்றி வைத்துவிட்டு கோபிமார்களுடன் நீராடிய பகவான்

*இனியதோரு குடமுழுக்கு காணும் இராஜகோபாலன் அருள்பெற்று வளம்பெறுக என வணங்கும்*

*அன்பன்,*

*இராசகோபாலன்*

*பந்தல் காண்ட்ராக்டர், மன்னார்குடி.*

அந்த ஆனந்த போதையல் கரையேறி அணிகலன்களை அணிகையில் ஒரு காதில் தன்னுடைய குண்டலத்தினையும், மற்றோர் காதினில் அருகே ஒரு கோபிகை கழற்றி வைத்திருந்த தாடங்கம் என்றும் (பெண்களே அணியும் காதணியையும்) பூண்டு கொண்டு ஒப்பனை செய்து கொண்டாராம். இங்கும் ஹரித்ரா நதியில் அக்கோபிகைகள் பூசியிருந்த மஞ்சட் சோறு நிறைந்து கிடந்ததால் இத்திருக்குளம் ஹரித்ரா எனவே பெயர் பெறும்படியாக அக்கோபிகைகளுடன் கண்ணபிரான் குடைந்து நீராடிக் காட்சி கொடுத்தான். யமுனையினின்று மேலே எழுந்தருளிய போது காதணிகளை தாடங்கமாக ஒரு காதிலும் குண்டலமாக ஒரு காதிலும் அணிந்து கொண்டு காட்சியளித்தவாறே இங்கும் காட்சி அளித்தாராம். இக்கவின்கொள் காட்சியைக் கண்டு பரவசமடைந்த முனிவர் இவ்வாறே பின்னோர்களும் வணங்கும்படி நீ ஸேவை தர வேண்டும் என வேண்டினார். எம்பெருமாள் இன்றும் அவ்வாறே இத்திருத்தலத்தில் காட்சி அளித்துக் கொண்டிருப்பது ஓர் சிறப்பான அம்சம் ஆகும். இவனை வழிபடும் எவரும் இம்முனிவரின் ஆனந்தத்தினைப் பெற்று மகிழ்கின்றனர். எம்பெருமாள் ஸாஹி அம்ருதா ஸதாம் என்று வழங்கப் படும் வேதங்களாகிற "" உள்ள சாண்டில்ய விதியை, முதலிய பிரஹ்மவித்யைகளில் கூறப்படும் ஸர்வகந்த, ஸர்வரஸ எனப்படும். பல கல்யாணங்குணங்களுடன் கூடிய காட்சியில் இருப்பதால் ஆன்றோர் இவனை வித்யா ராஜ கோபாலன் என்று வழங்கி வழிபட்டனர் எனலாம். இப்படி, ராஜ கோபாலன் வீற்றிருக்கும் இத்தலம் தஷினா துவாரகை எனவும் வழங்கப்படுகிறது. பலபலவே ஆபரணம் என ஆழ்வார் பாடிய படி இப்பெருமானுக்கு உள்ள அணிகலன்கள் பல ஆகும். இன்று தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களிலேயே அதிக அளவு ஆபரணங்கள் உள்ள திருக்கோயில் இது தான் என்று அறநிலைய அதிகாரிகள் சொல்லக் கேட்டதுண்டு. இந்த வித்யா ராஜ கோபாலனுக்கு ராஜ கோபாலன் என்று பெயர் அமைந்ததைப் பார்க்கும்பொழுது ராதையின் அணியையும், ஜகன்முதனின் அணியையும் அணிந்து காட்சியளிப்பதால் ராஜ கோபாலன் என்று பெயர் வந்ததோ என்று தோன்றுகிறது. தசாவதாரங்களையும் குறிப்பிடுவதாகவும் ராஜகோபாலன் என்னும் திருநாமம் அமைந்துள்ளது.

ராஜகோ என்றால் ராஜாவின் வார்த்தை, கட்டளை என்று பொருள்படும். ராஜாவின் வார்த்தை என்றால் உலகுக்கெல்லாம் ராஜாவான எம்பெருமாளுடைய சொல் கட்டளை என்று அர்த்தம். அஃதாவது 'ராஜசாஸனம்' ராஜசாஸனம் என்பது வேதத்திற்கே உரிய திருநாமம். அந்த 'ராஜகோ' வை வேதத்தைப் பாலனம் பண்ணியவன் ராஜகோபாலன் என்று ஆகும். ஆக ராஜகோபாலன் என்னும் திருநாமம் மத்ஸ்யாவதாரத்தினையும் கூறுகிறது எனலாம்.

'ராஜகோ' என்பது மூவுலகுக்கும் அரசாளும் இந்திரனுடைய பசுவான காமதேனுவைக் குறிக்கும். அந்தக் காமதேனு துர்வாசரின் சாபத்தால் மறைந்திருந்தது. அதனை ரக்ஷித்து திருப்பாற்கடலைக் கடையும் பொழுது வெளி வரும்படிச் செய்தவன் ராஜ கோபாலன் எனலாம். எனவே கூர்மாவதாரம் குறிக்கப்பட்டது.

ராஜாவாக இருந்து நிலத்தினை ஆள்பவர்கட்கு எல்லாம் உரியது நிலம். எனவே பூமி ராஜகோ. அவனை ரக்ஷித்தவன் வராஹன் ராஜ கோபாலன். இவ்வாறு வராஹாவதார வரலிநலும் இத்திரு நாமத்தில் அடங்கியுள்ளது.

ராஜா ப்றாக்ருதி ரஜ்ஜநாத் என்று இடங்களில் போல் ராஜா என்ற சொல் ஆனந்தத்தைக் கொடுப்பவனைக் குறிக்கும். எனவே ராஜா எனில் ப்ரஹலாதன் என்றும் பொருள். ப்ரஹலாதன் எங்குஉளன் கண்ணன் என்றானே அந்த சொல் ராஜாவின் சொல் அதாவது ராஜகோ. அதனை காக்கவே 'ஸதயம்வதாதும்' என்றபடி தோன்றிய நரஸிம்ஹன் ராஜகோபாலன் ஆகிறான்.

ராஜாவான இந்திரனுடைய கோசெல்வம் ராஜகோ, அதனை காத்து இந்திரனிடம் கொடுத்தவன் வாமன்ன். எனவே ராஜ கோபாலன் எனின் வாமனன் என்றும் பொருள்படும்.

ராஜாவான கார்த்தவீர்யனிடமிருந்து தங்கள் பசுவான காமதேனுவைக் காத்ததாலும், துஷ்ட ராஜாக்களிடமிருந்து கோ என்னும் பூமியைக் காத்து ஸத்தான கச்யபநாக்கு தஹியாயாகக் கொடுத்தாலும் ராஜ கோபாலன் என்றும் பெயர் பரசுராமர் வரலாற்றினையும் குறிப்பிடும்.

ராஜாவான சக்ரவர்த்தி தசரதருடைய திருவாக்கைச் மேற்கொண்டு பதிபாலனம் செய்ய வனவாசம் செய்ததால் ராமனும் ராஜ கோபாலனே.

ராஜாதி ராஜனான கண்ணபிரான் ருக்மிணியை கவர்ந்து வருகையில் அவனுடன் போரிட வந்த மன்னர்களிடமிருந்து அவனைக் காக்கும் பணியை செய்ததால் பலராமனும் ராஜகோபாலனே.

கண்ணனே ராஜ கோபாலன் என்பதால் கிருஷ்ணாவதார வரலாற்றினை ராஜ கோபாலன் என்னும் திருநாமம் குறிப்பிடும் என்பதில் ஐயமேது ?

நல்ல மன்னர்கட்டு உரிய பூமியைப் பாதுகாத்தருளப்போகும் கல்கியினையும் ராஜகோபாலன் என்னும் தொடர் குறிப்பிடலாம் அல்லவா ?

இவ்வாறு தசாவதாரத்தின் சிறப்பினையும் தன்னுள் அடக்கி ராஜகோபாலன் பொலிகின்றதை அவன் திருநாமம் காட்டுகிறது.

இவனுடைய திருமார்பில் இலங்கும் பிராட்டி லஷ்மி இவ்வூரில் செங்கமலவல்லியாக சம்பக லஷ்மியாக தனிக்கோயில் நாச்சியாராகவும் காட்சி தருகிறாள்.

இவ்வாறு ஒப்புயர்வற்ற பெருமையைப் பெற்ற இப்பெருமாளை ஆழ்வார்கள் பாடாது விட்டது ஒரு புதிர் தான். இவன் அழகைக் கண்டு அச்ஜசா ஒருவர் அழகியவா என்ற சொல் கூட எழும்பாத நிலை வந்துவிட்டது போலும். ஆனாலும் யாதவாப்யுதய வர்ணனைகளையும் கோபால விம்சதியியாயும் ஸேவித்தால் ஸ்வாமி தேசிகன் இப்பெருமாளின் வடிவினை உள்ளத்தில் கொண்டே அந்நூல்களை இயற்றினாரோ என்று தோன்றுகிறது. ஸ்வாமி மணவாள மாமுனிகள் இத்திருத்தலத்திலே பல்லாண்டு தங்கியிருந்ததாகவும் இப்பெருமாளிடம் போரில் ஈடுபட்டிருந்ததாகவும் வரலாறு. வண்டுவராபதி மன்னன் என்றும், தொடர் உள்ள ஆழ்வார் பாசுரங்கள் இத்திருத்தலத்தையே குறிப்பிடுவதாக அந்த ஆசார்யன் கருதியதாகச் சொல்லுவர். பெரியோர் வண்டுவராபதி என்றும் தொடர் வண்டு வரா (1) வண் + துவராபதி என்றும் (2) வண்டு + வராத + பதி என்றும் பொருளில் வரலாம். இரண்டாவது பொருளில் வண்டு வராதபதி என்றும் தொடர் இடைக்குறையாக வண்டுவராதபதி என்று செய்யுளில் வந்ததாகக் கொள்ளலாம். ( வண்டு + வரா + பதி எனப் பிரித்தால் வண்டுவராப்பதி என்று வர வேண்டுமே என்று சில தமிழறிஞர் ஆட்சேபிக்கலாம். எனவே வண்டுவராதபதி என்னும் தொடரின் இடைக்குறை இது என்று ஒரு வழி). வண்டு வராதபதி என்றால் வண்டுகள் வராத இடம் என்று பொருள். வண்டுகள் செண்பகமலரை நெருங்கா. இத்திருப்பதி செண்பகக் காடு. (சம்பகரண்யம் என்பர்). எனவே இத்திருப்பதிக்கு வண்டுவரா(த)பதி என்றும் பெயர் பொருந்தும். இதைக் குறிக்கவே ஆழ்வார் இத்தொடரை அமைத்திருக்க வேண்டும் என்று பெரிய ஜீயராம் மணவாள மாமுனிகள் கருதி இருக்க வேண்டும்.

இவ்வெம்பெருமாளுடைய வடிவழகு என்னைத் தூண்டியதால் என்னையறியாது என்னுடைய வாயிலிருந்து 'அஷ்டப்ராஸம்' என்று எட்டு எதுகையுடன் கூடிய பல ஸப்ஸ்க்குத சுலோகங்கள் நிறைந்த "கோபாலத்திம்சத்" என்றும் துதியைப் புறப்படச் செய்வித்து எம்பெருமாள் மகிழ்ந்தால் அவன் மகிழ்ந்தது எப்படித் தெரியும் ? என்றால் கீர்த்திமூர்த்தியான வாகம்றாதவர்ஷி மதுபயவே.

வேறாக்குடி வரதாசார்யஸ்வாமி திருவாக்கால் ஸங்கீதமாக அவைகளைப் பாட வைத்து அவர் திருவாயாலேயே ஆழ்வார்கள் தன்னைப் பாடாத குறையை எல்லாம் இக்கவிதைகள் மூலம் ராஜ கோபாலன் தீர்த்துக் கொண்டான் என்று சொல்ல வைத்த நிகழ்ச்சி தான் இதற்குச் சான்று. அந்த கோபாலத்திமசத்தின் முதல் சுலோகம்:

*லீலாயஷ்டி மனோஜ தக்ஷிணகர : பாலார்க்க துல்யப்ரப:*
*பாலா வேசித திவ்யரத்னதிலோ மாலாவா பண்டித : 1*
*கேலா வேஷ்டித மௌரி மோனிஷஜன :*
*சோலாவளிமன்மத :*
*வேலாதீத தயாரலாத்ரஹ்ருதய : மே லாரிதோ*
*மௌரினா"*

(சோலாவளீமன்மத : சோழ வளநாட்டு மன்மதன் இந்த ராஜகோபாலன்)

இதில் 'லா' எட்டு இடங்களில் உள்ளதால இக்கவிதை எட்டெதுகைக் கவிதை ஆகும். இதை ஆலாபனை செய்து அவன் வடிவையும் த்யானம் செய்தால் வரும் இன்பம் வார்த்தைக்கடங்காதது.

இப்படிப்பட்ட ராஜகோபாலனையும், செங்கமல நாச்சியாரையும் வணங்கி நாம் மிகவும் நலமுடன் வாழ வழி வகுக்கும் முறையில் இப்பெருமாளின் திருக்கோயிலுக்குத் திருப்பணி நடந்து ஸம்ப்ரோஷனம் ஏற்பாடாகியுள்ளது. இதனில் பங்கு கொண்டுள்ள அனைவருக்கும் உலக சேமத்திற்கும் அருள் புரிவாராக.



# காணவேண்டிய கலைச் சிற்பங்கள்

கி.தனவேல், எம்.ஏ., பி.எல்., டி.பி.ஏ.,
மாவட்ட வருவாய் அலுவலர், தஞ்சாவூர்

தமிழகச் சிற்பக் கலை வரலாற்றில் பல்லவ, சோழ சிற்பங்கள்தான் முதலிடம் பெற்றுத் திகழ்வதாகக் கலைவல்லோர் கூறுவர். இத்தகைய சிற்பங்களை, தஞ்சை திருச்சி, நாகை காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் சிறிய கிராமங்களில் கூட காணலாம். இத்தகைய எழில்மிகு சிற்பங்களைக் கண்டு பிற்காலச் சிற்பக் கலைஞர்களும் தங்களது உள்ளத்தைப் பறிகொடுத்துள்ளனர். பிற்காலச் சிற்பிகளின் படைப்புகளில் பல்லவ சோழ சிற்பங்களின் சாயல்கள் தென்படுவதைக் கொண்டு இதை உணரலாம். குறிப்பாகத் தஞ்சை நாயக்கர்களின் சிற்பங்களில் இத்தன்மையைக் காண முடிகின்றது.

அண்மையில் மன்னார்குடி அருள்மிகு இராசகோபாலசுவாமி திருக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றில் (பிரகாரம்) உள்ள புதிய நந்தவனத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவ்வேளையில் நந்தவனத்தை ஒட்டி அமைந்துள்ள இரண்டாவது உட்கோபுரம் பல அழகிய சிற்பங்களைக் கொண்ட ஒரு கலைப் பெட்டகமாக இருப்பதைக் கண்டு அதிசயித்தேன். இப்படியும் அற்புதச் சிற்பங்களா! இடிபாடுகளுக்கு இடையேயும் பேசும் பதுமைகளா! அந்தக் கலை உலகிலிருந்து நான் மீள நெடுநேரமாயிற்று.

இந்த கலைக்கோபுர சிற்பங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் பொருட்டு, கல்வெட்டு ஆய்வாளர் குடவாயில் திரு.பாலசுப்ரமணியன் அவர்களுடன் சென்று மீண்டும் ஒரு முறை இச்சிற்பங்களைக் கண்டு களித்தேன்.

மேற்குத் திசையில் இரண்டாம் உட்கோபுரமாக திகழும் இக்கலைப்பெட்டகம் தஞ்சை நாயக்க மன்னர்களால் தோற்றுவிக்கப் பெற்றதாகும். இங்கு சுவரில் பொதிந்து நிகழும் சில சிற்பங்கள் பல்லவ சிற்பங்களோ என்று நம்மை மயங்க வைக்கின்றன. மேற்கு வாயிலில் காணப்படும் யோக நரசிம்மர், கருடன் மீது திகழும் திருமால், கண்ணபிரானின் எழிற் கோலங்கள் ஆகியன நம் உள்ளத்தை நெகிழ வைக்கின்றன. குழல் ஊதும் கோலத்தில் சங்கு சக்கரம் ஏந்தி நிற்கும் திருமாலின் வடிவம் எழில் கொஞ்சுகின்றது.

இதே கோபுரத்தின் கீழ்ப்புறம் எண்ணற்ற சிற்பங்கள் கோபாலனின் எண்ணிலா கோலங்கள். அத்தனையும் தெவிட்டாத தெள்ளமுதம். இங்கு தெய்வ உருவங்களோடு கலை வல்லோர் சிற்பங்களும் ஏற்றம் பெற்றுத் திகழ்கின்றன. நின்ற நிலையில் வீணை வாசிக்கும் எழில் மங்கையர் சிற்பங்கள் ஒரு புறம். கிராமியக் கலைஞர்களின் அற்புத ஆடற் சிற்பங்கள் மறுபுறம், இங்கு வீணையில்தான் எத்தனை வகைகள். .. தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாதன் புதிய வீணையை கண்டுபிடித்து தஞ்சை இசை மரபில் மறுமலர்ச்சியூட்டினான் என்பதை இலக்கியங்கள கூறுகின்றன. அதன் தாக்கம் இங்கு சிற்பங்களில் காணப்படுவதை அனைவரும் காணலாம்.

குழமுழுக்கு விழா கண்ட உள்ளங்களையும் காண வருகைதரும் பக்தகோடிகளையும் வணங்கி வரவேற்கிறோம்.

*தேசிய மேல்நிலைப்பள்ளி, மன்னார்குடி, தலைவர் திரு. T.S. சாமிநாத உடையார், Ex. M.L.A.,*
*செயலர் : திரு.வி. இராமதுரை பி.ஏ., தலைமை ஆசிரியர் திரு. எஸ். சேதுராமன், எம்.ஏ., எம்.எட்.,*

இக்கோபுரத்தின் உட்பக்கச் சுவர்களில் சில அபூர்வமான சிற்பங்கள் காணப்படுகின்றன. கலைஞன் ஒருவன் தப்பாட்டம் (பறையடிப்பது) ஆடுவதை அற்புதமாக ஒரு சிற்பத்தில் வடிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் கிராமியக் கலை குறித்த சுவர் விளம்பரங்களில் காணப்படுகின்ற புதிய ஓவியங்கள் இந்த சிற்பத்தை அப்படியே ஒத்துள்ளன என்பதை எண்ணிப் பார்க்கையில் வியப்பு ஏற்படுகிறது.

இக்கோபுரத்தில் காணப்பெறும் கலை படைப்புகளில் தலையாயதாகப் போற்றபெறும் சிறப்பு வாயில் நிலைக்கால்களுக்கே உரியதாகும். நான்கு நிலைக்கால்கள் இங்கு எழிலுடன் திகழ்கின்றன. இவை கருங்கற்களில் செதுக்கப்பட்டவைதானா அல்லது மரத்தில் கடைந்தெடுத்தவையா என சந்தேகம் எழும் வண்ணம் அத்தனை வேலைப் பாடுகள். அழகிய பாவைகளும், திருமாலின் பத்து அவதாரக் காட்சிகளும், விலங்குகளும், பறவைகளும் இந்த நிலைக் கால்களை அலங்கரிக்கும் காட்சியை இங்கு எழுதுவது என்பது இயலாத காரியமே.

கோகுலத்துப் பெண்கள் நீராட கோவிந்தன் மரமேறும் காட்சியில் தான் எத்தனை நவீனம். அத்தனைச் சிற்பங்களும் நம் சிற்பக்கலையின் முத்திரைகள்

அழிவின் முகடு நோக்கிச் சென்ற இந்த அரிய கோபுரத்தை தற்போது ஏற்றமுடன் திருப்பணிகள் செய்து காத்துள்ளார்கள். இக்கோயிலுக்குச் செல்லும் அனைவரும், தவறாமல் இக்கோபுரத்தின் எழில்மிகு சிற்பங்களைக் கண்டுகளிக்க வேண்டும்.



# மாதவத்தால் மன்னைக்கு வந்த மாதவன்

எஸ். ஜெகதீசப் பெருமாள்

'இப்படி ஓர் ஆழ்ந்த பக்தியா!' வியந்துபோனார் நாரதமாமுனிவர். மன்னளந்த மாதவனின் தரிசனம் கிடைக்காததால் மாதவ முனிவர்கள், கோப்பிரளயரும் கோபிலரும் மூர்ச்சித்து மண்ணில் சாய்ந்துவிட்டனர்.

நடந்தது இதுதான். சம்பகவனத்து அருந்தவமுனிவர் ஹனிமுகரின் புதல்வர்களான இவ்விரு முனிவர்களும், ஐந்த நடுவில் திருஎட்டெழுத்தோதி ஒற்றைக் காலில் நின்று நாராயணன் குறித்து கடுந்தவமியற்றியதன் பயனாக பெருமாள் இவர்கள் முன்தோன்றி வரம் என்ன வேண்டும் என்று கேட்க இவர்கள் எங்களுக்கு மோட்சம் வேண்டும் என்றனர். அதற்கு பெருமாள், 'துவாரகை சென்று கண்ணபிரானைத் தரிசித்தால் அப்பேறு கிட்டும்' என்றார். அகம் மகிழ்ந்தார்கள் முனிவர்கள். அகிலம் உண்ட கண்ணனைக் காண துவாரகை நோக்கிச் செல்லுகையில் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி புனிதத் தலங்களைத் தரிசித்து வரும் வழியில் நாரதமுனிவரைக் கண்டு வணங்கினர். அவரிடம் கண்ணபிரான் பற்றியும் துவாரகை பற்றியும் கேட்டனர். 'மண்ணுலகில் பூபாரம் தீர்க்க வந்த கண்ணபிரான் கம்சன் முதலான தீயவர்களை மாய்த்து, பீஷ்மர் முதலான நல்லோரைக் காத்து விண்ணுலகம் சென்றுவிட்டார்' என்று நாரதர் சொன்னதுதான் தாமதம், ஏக்கமுற்ற முனிவர்கள் மூர்ச்சித்து விழுந்துவிட்டனர்.

எண்ணத்தில் கண்ணனை மட்டுமே கொண்ட இவ்விரு முனிவர்களின் பக்தி திறம் கண்டு பரவசமுற்ற நாரதமுனிவர், அவர்களை எழுப்பி பன்னிரெண்டெழுத்து மந்திரத்தை உபதேசித்து, கண்ணனின் காலடி பட்ட கோகுலம், துவாரகை எல்லாம் தரிசித்துப் பின் சோழ நாட்டில் குடந்தைக்கு அருகிலுள்ள சண்பகாரண்யம் சென்று அங்குள்ள ஹரித்திரா நதியில் நீராடி அங்கு ஓராண்டு காலம் தவமியற்றினால் கண்ணபிரான் காட்சி தருவார்' என்று அவர்களை அன்புடன் ஆற்றுப்படுத்தினார்.

கோபிலரும், கோப்பிரலயரும் ஹரித்திரா நதியோரம் ஆற்றிய அருந்தவத்தின் பலன், முனிவர்களின் எண்ணமெல்லாம் நிறைந்திருந்த கண்ணனின் காட்சி கிடைத்தது. பரவசமுற்று பாடித் துதித்தனர் பரந்தாமனை. கோரிக்கை ஒன்றை கண்ணன் திருவடியில் சமர்ப்பித்தனர். 'பெருமானே, அன்று பிருந்தாவனத்தில் தேவரீர் நிகழ்த்திய லீலைகளை இன்று நாங்கள் கண்டுய்ய அருள்புரிய வேண்டும்".

அடியவர்கள் எண்ணியவண்ணம் அருளும் கண்ணன், அன்று பிருந்தாவனத்தில் செய்து காட்டிய லீலைகளை முனிவர்களுக்கும் காட்டியருளினான். பரவாசுதேவனாக முதல் சேவை தொடங்கி ஸ்ரீவித்யா ராஜகோபாலனான 32 வது சேவை முடிய கண்ட முனிவர்கள் இறையருளில் மூழ்கி எழுந்து தாம்பெற்ற இன்பம் இத்தரணியும் பெறட்டும் என்று பெருநோக்கில் பரந்தாமனின் பாதக் கமலங்களில் வணங்கி, 'எழில்கொஞ்சும் இத்திருக்கோலத்துடன் தேவரீர் என்றும் இவ்விடத்திலேயே எழுந்தருளி எல்லோருக்கும் காட்சி தந்தருள வேண்டும்' என்று வேண்டினார்.

வேண்டுதல் பலித்தது. ஓங்கி உலகளந்த உத்தமன் சண்பகாரண்யத்தில் ராஜகோபாலனாய் கோயில் கொண்டான். அருள் தரிசனம் இன்று அனைவருக்கும் கிடைத்து வருகிறது. சண்பகவனத்து முனிவர்களின் உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாத உயர்ந்த பக்தியினால் நாம் மதிலழகு மன்னையிலே, மாதவனை மன்னப்படு மறைவாணனாய், வண்டுவராபதி மன்னனாய்ப் பெற்றோம்; மாறாக பக்தியின் சிறப்பையும் உணர்ந்தோம். நம்மாழ்வார் பாசுரமும் நமக்கு இதைத்தான் உணர்த்துகிறது.

*உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்*
*அவனையல்லால்*
*நும்மிச்சை சொல்லி நும்தோள் குலைக்கப்படு மன்னைமீர்*
*மன்னப்படு மறைவாணனை வண்ணுவராபதி*
*மன்னனை ஏத்துமின் ஏத்தலும் தொழதாடுமே.*

நன்றி மறக்கவில்லை நாம். கோபாலனைக் கொண்டு வந்த கோப்பிரளயருக்கும், கோபிலருக்கும் கோயில் கட்டி கும்பிடுகின்றோம். அவர்களிலும் நாம் கோபாலனைத்தான் காண்கிறோம்.

# வேதமும் வண்துவராபதி மன்னனும்

ஸ்ரீ உபவே ஸலக்ஷண கனபாடி தர்மக்ஞ, வடுவூர் V. தேசிகாச்சாரியார்

நம்முடைய மதம் இந்து மதம் என்று சொல்லப்படுகிறதாயினும் வைதீகமதம் என்று சொல்வதுதான் பொருத்தமாகும். வைதிகம் என்றால் ஏதோ வேதம் பயிலும் சிலரின் ஸம்பந்தம் கொண்டது என்பதாக அர்த்தம் பண்ணிக்கொள்கிறார்கள். அது தவறு. நாம் யாவரும் வைதீகர்களே. வேதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்ற மதம் தான் வைதிகமதம் என்பதாகும்.

கடவுள் சம்பந்தம் பெற்ற யாவரும் வைதீகர்களே ஏனென்றால் அந்தக் கடவுளை (பகவானை) வேதமுதல்வன் என்றும் வேதாந்த விழுப்பொருள் என்றும் பலவாறாக ஆழ்வார்கள் அழைக்கிறார்கள். இவ்விதமே சைவத்திலும் வேத விழுப்பொருளை வேதப் பொருள்பாடி என்றும் காணலாம். அப்பேர்ப்பட்ட வேதமானது ரிக், யஜுர், ஸாம, அதர்வனம் என்பதாக நான்கு பிரிவுகள் கொண்டது. நம் வேதமானது இதர மத வேதங்கள் போல் குறிப்பிட்டவர்களால் இயற்றப்பட்டது அல்ல, என்பதான அஸாதாரணப் பெருமை படைத்தது. வேதங்கள் எல்லாம் பகவானுடைய முச்சுக் காற்றாகவே பேசப்படுகின்றன. யஸ்ய நிச்வஸிதம் வேதா: என்பதாக ஜகத் ஸ்ருஷ்டி காலத்தில் வேதங்களைக் கொண்டே ஸமஸ்த உலகத்தையும் பகவான் ஸ்ருஷ்டித்ததாக ஐதீஹ்யம் "யோவேதேப்யோ கிலம் ஜகத் நிர்மமே" என்பதாக மேலும் வேதத்திற்காக என்றே ஏற்பட்ட ஸ்வரங்கள் உதாத்த, அநுதாத்த ஸ்வரித ப்ரசயம் என்பதாக நான்குகள் இந்த நான்கு ஸ்வரங்களிலிருந்து தான் ஸங்கீதத்தில் பயன்படுத்தப்படுகிற காந்தாராதி ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன என்பதான வாக்யம்.

*உச்சாத் பவதி காந்தார நீ சாத்ருஷப உச்யதே*
*தீர்க்காத்தஸ்மாத் பவேத் ஷட்ஜ: த்ருதாநீ மத்ய ம*
*ஏவச நித்யாபிநிஹித ஷைப்ரேப்யோ நிஷாத*
*உதாஹ்ஹருத நாநாபதஸ்தோ தாத்தாத்து ஸ்வர்யதே*
*ஸாம்ஹி தச்சய: ஊபாவே ஸ்வர்ய தே யச்ச ஜாயதே*
*த்தர பஞ்சம:*

*தைரோவ்யஞ்ஜன ஸம்ஜ்ஜோய:*
*பாதவ்ருதிதஸ்ததைவச/காரணம்*
*தைவதஸ்யை தௌ ஏவம் நித்யம் நிபோதத/*
*நிஷாதர்ஷபகாந்தார ஷ்ட்ஜ மத்ய மதைவதா:*
*பஞ்சமச்சேத்யம் ஸப்த தந்த்ரீகண்டோத்திதா: ஸ்வரா*

என்பதற்கான ஸப்தஸ்வரங்களுக்கும் உத்பத்தி ஸ்தானம் வேதத்திற்கான உதாத்தம் முதலிய ஸ்வரங்கள் தான் ஸங்கீத அனுபவம் இல்லாதவர்களுக்கு கூட காற்றில் மிதந்துவரும் இசையைக் கேட்டதுமே பிரம்மானந்த அனுபவம் ஏற்படுவதுண்டு.

மெய்மறந்து நிற்பர்.

*வேதாக்ஷ ராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி:*
*த.வந்தி ஹரி நாமாநி கீர்த்தி தாநி நஸம்சய:*
*வேதமேவ ஜபேந்நித்யம் யதாகால மதந்த்ரித:*
*தம்ஹீயஸ்யாஹு: பரம் தர்ம முபதர்மோபந்ய உச்யதே*

வேதத்தினாலே சொல்லப்படுகிறவன் சீரிய பதியான ச்ரீமந் நாராயணனே ஆதலால் சோம்பல் இல்லாமல் வேதத்தையே எப்பொழுதும் ஜபித்து வரவேண்டும். அந்த வேதத்தைத்தான் மஹரிஷிகள் உயர்ந்த தர்மமாகச் சொல்லுகின்றனர்.

மற்றவைகள் எல்லாம் உபதர்மங்களே

இந்த வேதத்தில் ஸாதாரண தர்மம் முதல் (அன்றாடம் கடைபிடிக்க வேண்டியவைகள்) மோஷத்தை அடைவதற்கான உபாயங்கள் வரை எல்லாமே உபதேசிக்கப்படுகின்றன.

*ஸத்யம் வததர்மம்சரஸத்யாந்த ப்ரமதிதவ்யம்*
*தர்மாந்ந ப்ரமதி தவ்யம்குசலாந்த ப்ரமதி தவ்யம்*
*பூத்யை ந ப்ரமதிதவ்யம்மாத்ருதேவோ பவபித்ருதேவோ*
*பவ, ஆசார்ய தேவோ பவஅதிதி தேவோ பவ*
*யாநி அவநத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி*
*நோ இதராணி*

ஒரு ஆசிரியன் தன்னுடைய மாணாக்கனுக்கு உபதேசம் செய்கிற உருவத்தில் உபதேசிக்கப்படுகிறது. உண்மையைப் பேசு. தர்மத்தைக் கடைபிடி. தர்மம் என்றால் என்ன ? என்பதை ஆபஸ்தம்பர் கூறுகிறார். யம்த்வார்யா: கீரியமானம் ப்ரசம்ஸந்தி ஸதர்ம: யம்கர்ஹந்தேஸ:அதர்ம:

எந்தக் கார்யம் செய்யப்படுகிறதைப் பார்த்து குற்றமற்ற பெரியோர்கள் சீலாகிக்கிறார்களோ அது தர்மம். எந்தச் செய்தியை நிந்திக்கிறார்களோ அது அதர்மம் என்று ஆபஸ்தம்பர் விளக்கம் அளிக்கிறார்.

ஸத்யத்திலிருந்து பிறழக்கூடாது. தர்மத்திலிருந்து பிறழக்கூடாது. க்ஷேம காரியத்திலிருந்தும் நல்வழியால் ஸம்பாதிக்கப்பட்ட ஐச்வர்யத்திலிருந்தும் பிறழக்கூடாது. அவ்விதம் தாயை தைவதமாக நினை தந்தையை தைவதமாக நினை ஆசார்யனை தைவதமாக நினை. விருந்தாளியை தைவதமாக நினை எந்தக் காரியங்கள் குற்றமற்று இருக்கின்றனவோ அவைகளை நீ செய்ய வேண்டும். மற்ற காரியங்களை செய்யக்கூடாது. இது மாதிரி உபதேசங்கள் ஆங்காங்கு போதிக்கப்படுகின்றன. பலவிதமான இதிஹாஸங்கள் கதைகள். உலகத்தின் நடப்புமுறைகள் இப்படியாக எவ்வளவோ விஷயங்கள் பொதிந்து கிடக்கின்றன.

வேதமந்த்ரங்கள் எல்லாமும் யாகங்களில் உபயோகிக்கப்படுகின்றன. ஆயினும் எல்லோராலும் யாகங்கள் செய்ய முடியாதல்லவா! அப்படியாகில் வேதத்தை எப்படி உபயோகப்படுத்துவது என்று மஹரிஷிகள் ஆலோசித்து யாகங்களை செய்ய முடியாதவர்களுக்கும் அந்த யாக , பலன் கிடைக்க வழியைக் கண்டுபிடித்துக் காட்டியுள்ளனர். அதற்கு வேதமந்த்ரங்களே ஸாக்ஷியாக அமைகின்றன.

*ய: பூர்வ்யாய வேதஸே நவீயஸே*
*ஸுமஜ்ஜாநயே விஷ்ணவே ததாசதி*
*யோதாஜமஸ்ய மஹதோமஹிப்ரவாத்*
*ஸேதுச்ரவோபிர்யுஜ்யஞ்சிதப்யஸத்*
*தமுஸ்தோதார: பூர்வ்யம் யதாவித ருதஸ்ய*
*கர்ப்பம் ஹவிஷா பிபர்த்தந*
*ஆஸ்ய ஜாநந்தோ நாமசித் விவக்தந*
*ப்ருஹத்தே விஷ்ணோ ஸுமதிம் பஜாமஹே*

உலகில் இருசாரார் உள்ளனர். அதில் ஒரு சாரார் எல்லா வசதியும் படைத்தவர்கள். யாகம் முதலிய ஸத்காரியங்களில் நம்பிக்கையுடையவர்கள்யாகாதிகள் செய்வதற்கு தனஸம்பத்தி அதிகமாக அவசியம் வேண்டும் அதையும் படைத்தவர்கள். மறுசாரார் ஆஸ்திகர்களாக விருந்தும் தாவஸம்பத்தி முதலிய வஸதியற்றவர்கள் இந்த இருவர்களுமே ஒரேவித பலனை அடைகின்றனர் என்பதை அம்மந்திரங்கள் எடுத்துக்கூறுகின்றன. அர்த்தத்தைப் பார்ப்போம். ஒருவன் விஷ்ணுவின் பொருட்டு ஹவிஸ்ஸைக் கொடுக்கிறான். விஷ்ணு எப்பேர்ப்பட்டவன் என்றால் முதல்வன். அதாவது அவனே ஜகத்காரன் பூதன். உலகம் தோன்றியதற்கு முன்பு இருந்தவன் மேலும் உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறவன். ஆகிலும் ஸாது ஜனங்களின் ஸம்ரக்ஷணத்திற்காக ராமன்கிருஷ்ணன் இப்படியாக அவதாரம் எடுத்து புதியவனாகவிருப்பவன். மேலும் தன்னுடைய உயர்ந்த குணங்களால் பர்த்தாவான பகவானை எந்த மஹாலஷ்மீ ஸந்தோஷப்படுத்துகிறாளோ அவனை மனைவியாக உடையவன். யாகம் முதலான ஹோம ஸமயங்களில் ஹவிஸ்ஸை பகவானுக்கு ஸமர்ப்பிக்கிறவனைப் பற்றி இப்படியாகச் சொல்லி அதற்கு அசக்தனான மற்றொருவன் உள்ளானே அவனைப்பற்றி பேசுகிறது வேதம். எவனொருவன் இந்த மிகவும் பெருமை வாய்ந்த விஷ்ணுவின் குணாதிசயங்களை வாயால் சொல்லுகிறானோ, அதாவது பகவானின் திவ்ய குணங்களை வெளிப்படுத்துகிற வேதம் என்ன இதிஹாஸ புராணங்கள் என்ன இவைகளை வாசித்துப் புகழ் பாடுகிறானோ அந்த இருவிதமான மனிதனும் ஹோமாதிகளில் உபயோகிக்கிற மந்த்ரங்களாலும், பாராயணாதிகளில் உபயோகிக்கிற மந்த்ரங்களாலும் நம்முடன் ஸதாசர்வகாலமும் குடிகொண்டுள்ள காமம்க்ரோதம் லோபம் என்கிற மூன்றுவித சத்ருவையும் நம்மிடமிருந்து விலக்கிக் கொள்கிறான். த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசந மாத்மந: காம் க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மாதேதத்த்ரயம் த்யஜேத்"

### *2வது மந்த்ரத்தின் அர்த்தமாவது*

விஷ்ணுவை ஸ்தோத்ரம் செய்கிறவர்களே! முதல்வனான அந்த விஷ்ணுவை உள்ளபடி அறிகிறீர்கள். கர்ப்பம் போல் உள்ளேயிருக்கிற (வேதப்ரத்பாத்யனான) அந்த பகவானை (யாகாதி காரியங்களில்) ஹவிஸ்ஸினால் பூரணம் செய்யுங்கள் அப்படி முடியாவிடில் அந்த விஷ்ணுவின் திருநாமங்களை (கேசவ நாராயணாதிகளையாவது) அறிந்தவர்களாக ஆங்காங்கு விசேஷமாக ஜபம் செய்யுங்கள் ஹே விஷ்ணுவே! அந்த உன்னுடைய அனுக்ரஹ புத்தியை (கிருபையை) எப்பொழுதும் ஸேவிக்கிறோம் (அடைகிறோம்) இவ்விதம் எல்லா மந்த்ரங்களுமே நல்ல புஷ்டியுள்ளவைகள் தான். அவ்விதம் ஆங்காங்கு அவ்வப்போது கதை சொல்லும் ரூபமாக தத்வார்த்தங்களையும் வேதம் விளக்குகிறது. ஓரிரு கதைகளைப் பார்ப்போம் ஒரு ஸமயம் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பயங்கரமான சண்டை ஏற்படுகிறது. அவ்வமயம் இருபக்கத்தாரும் சற்று அயர்ந்த சமயம் பார்த்து காயத்ரீ தேவியானவள் அவ்விரு சாரரின் ஓஜஸ், பலம், இந்திரியம், வீர்யம் ப்ரஜை பசுக்கள் இவைகளை ஸங்கிரஹித்து எடுத்துக் கொண்டு மறைவு இடத்தில் நின்றாள். பலஹீனம் ஏற்படவும் அவ்விருவருக்கும் தங்கள் தங்களின் ஓஜஸ் முதலியவைகளை காயத்ரீதேவி

அபஹரித்ததை அறிந்ததும் இந்த காயத்ரீ நம் இருவரில் யாரைச் சார்ந்து கொள்வாளோ, அப்பக்கம் மிகுந்த பலமுள்ளதாக ஆகிவிடலாம் என்று நினைத்து தேவர்கள் ஹை "விச்வகர்மந்" என்றும் அஸுரர்கள் ஹே "தாபி" என்றும் அழைத்தனர். "விச்வகர்மந்" என்றால் உலகத்தில் நடக்கும் ஸர்வவ்யாபாரத்தையும் நடத்தி வைக்கிறவளே (உலகமே உன் அதீனம்) என்று பொருள். "தாபீ" என்றால் சத்ருக்களை ஹிம்சித்து ஆச்ரதர்களை ரக்ஷிக்கிறவளே என்று பொருள் ஆனால் அந்த காயத்ரியோ இவ்விரு கூப்பாடுகளுக்கும் செவிசாய்க்காமல் இருந்தாள்.

தேவர்கள் அந்த காயத்ரியை மட்டும் குறிக்கக் கூடிய மந்த்ரங்களைக் கண்டுபிடித்து சொல்வோம் என்று ஆராய்ந்து ஓஜோஸி ஸஹோஸி என்றாரம்பிக்கும் மந்திரத்தைச் சொல்லவும். காயத்ரி ஸந்தோஷம் அடைந்து தேவர்களை அடைந்தாள் இதற்கான இஷ்டியின் பெயர் "ஸம்வர்க்கேஷ்டீ" என்று மந்திரத்திலும் "ஸம்ஸம்யுவஸே" என்று வருகிறது ஓதுங்கியிருக்கும் நல்லவர்களையும் சேர்த்து வைக்கக் கூடிய யாகம் என்று அர்த்தம் அந்த யாகத்தைச் செய்யும் போது காயத்ரியின் விசேஷஸ்தோத்ர ரூபமான ஓஜோஸி என்ற மந்திரத்தைச் சொல்லி ஹவிஸ்ஸை அபிமந்த்ரணம் செய்து ஹோமம் செய்தால் சத்ருக்கள் புறங்காட்டி ஓடிவிடுகிறார்கள். செய்கிறவன் ஜயத்துடன் விளங்குகிறான். என்று ஸாரம்: தைஸம்2. கா4 ப்ர.3-அநு மற்றும் ஒரு இடத்தில் ஆச்சர்யமான ஒரு கதை பரத்வாஜர் என்கிற ஒரு முனிவர் தன்னுடைய 3 புருஷாயுள் காலம் பூராவும் ப்ரம்மசர்யத்தையே அனுஷ்டித்துக் கொண்டு வேதம் பயின்று வந்தார். மனிதனானபடியால் உடல் முதுமையடைந்து தளர்ந்து படுக்கையில் இருக்கிற அம்முனிவரை இந்திரனே நேரில் வந்து ஹே பரத்வாஜரே உமக்கு நான்காவது ஆயுஸ்ஸையும் அளிக்கிறேன். அந்த ஆயுஸ்ஸை எப்படி செலவழிப்பாய் என்று வினவ, அதிலும் ப்ரம்மசர்யத்தையே அனுஷ்டித்து மேலும் வேதத்தை அப்யஸிப்பேன் என்று சொன்னதும் அவருக்கு எதிரிலே மூன்று மலைகளை இந்திரன் ஸ்ருஷ்டித்து ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு பிடி மணலை கையால் எடுத்து ஓ பரத்வாஜரே எதிரில் தெரியும் 3 மலைகள் தான் வேதங்கள்.அதிலிருந்து என்கையால் எடுக்கப்பட்ட அளவுதான் இந்த முந்நூறு வருடங்களால் பயிலப்பட்டுள்ளது. எதிரில் தெரியும் அளவு பயிலப்படாதது. வேதம் என்பது முடிவில்லாதது அளவு இல்லாதது அளவிட முடியாதது ஆதலால் எதை அறிந்தால் எல்லாமே அறிந்ததாக ஆகுமோ, அப்பேர்பட்ட உயர்ந்த ஸாவித்ர அஷ்டாக்ஷர மந்த்ரத்தை உனக்கு உபதேசம் செய்கிறேன் என்று சொல்லி உபதேசம் செய்ய அவரும் அதை ஏற்று சரீர அவஸானத்தில் ஆதித்ய ஸாயுஜ்யத்தை பரத்வாஜர் அடைந்ததாகவும் அவ்விதம் இந்த இதிஹாசத்தை எவன் அறிகிறானோ அவனுக்கும் அந்த ஆதித்ய ஸாயுஜ்யம் உண்டு என்பதையும் த்ருடமாகச் சொல்லுகிறது வேதம்.

நம் ஸம்ப்ரதாயத்தில் உபயவேகம் என்றும் உபய வேதாந்தம் என்றும் பூர்வாசார்யர்கள் வ்யவஸ்தை செய்துள்ளார்கள். உபயவேதமானது ரிக்யஜுஸ்ஸாமாதர்வனங்கள் என்று சொல்லப்படுகிற ஸமஸ்கிருத வேதம் ஒன்று. பன்னிரண்டு ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்ட நாலாயிர திவ்ய ப்ரபந்தம்தான். த்ராவிட வேதம் (தமிழ் வேதம்) என்பது மற்றொன்று. இவ்விதம் வேதவியாசரால் இயற்றப்பட்ட பிரம்மஸூத்ரத்திற்கு ஸ்ரீ பாஷ்யாதி வ்யாக்யானங்கள் தான் ஸம்ஸ்க்ருத வேதாந்தம் அவ்விதம் நம்மாழ்வாரால் இயற்றப்பட்ட திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் தான் த்ராவிட வேதாந்தம் இவ்விரண்டிற்குமே ப்ரமாணங்களாக நிருபணம் செய்யப்படுபவைகள் வேதத்திலும் வேதத்தின் சிரஸ்ஸான உபநிஷத்துக்களிலும் சொல்லப்படுகிற விஷய வாக்யங்கள் தான் பிரமாணங்களாக் கொள்ளப்படுகின்றன. இப்படியாக நம்முடைய மதத்திற்கு ஏற்றம் தரக்கூடியது மூன்று. ப்ரமானம், ப்ரமதேயம் ப்ரமாதா ப்ரமானம் என்பது வேதம். வேதம் யாராலும் இயற்றப்பட்டது அல்ல பகவானின் மூச்சுக்காற்றே வேதம் என்பதாக முன்பே கூறியுள்ளேன். அதாவது அபௌருஷ்யம் அதனால் ப்ரமானத்திற்கு ஏற்றம்.

இந்த ப்ரமானத்தினால் அளவிடப்படுகிறவந் அகடிதகடனாஸாமர்த்யவானானாச்ரிய பதி:

ஸ்ரீமன் நாராயணன் ப்ரமேயம்

அடுத்ததாக ப்ரமாதா

ஸ்ரீவ்யாஸாதி மஹர்ஷிகளால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீவிஷ்ணு புராணங்கள் அவர்களுக்கு துல்யமான ஆழ்வார்களால் அருளிச் செய்யப்பட்ட திவ்யப்ரபந்தங்கள இந்தக்ரந்த கர்த்துக்கள் தான் ப்ரமாதாக்கள் ஆக ப்ரமானம்ப்ரமேயம்ப்ரமாதா என்கிற மூன்றுவித ஏற்றங்கள் படைத்தது நம் வைதீகமதம். அவ்விதம் பகவத் ஸன்னிதியில் ஓதப்படுகிற வேதங்களினால் பகவத்ஸான்னித்யம் ஸித்தமாகிறது. அவ்விதம் ஓதப்படுகிற திவ்யப்ரபந்தங்களினால் பகவானுக்கு முகோல்லாஸம் ஏற்படுகிறது. ஆக மனிதனுக்கு இருகண்களும் எப்படி அவசியமோ அவ்விதமே இருவித வேத பாராயணங்களுமே அவச்யம் என்று ஆகிறது.

பிரகிருதத்தில் ஸ்ரீ ராஜகோபாலன் ஸன்னிதி ஸம்ப்ரோக்ஷண ஸமயத்தில் வெளிவருகிற இக்கட்டுரை இந்த ஸன்னிதி ஏற்பட்ட காலம் தொடங்கி உபயவித பாராயணங்களுடன் சோபித்து வருவது போல் ஆசந்த்ரார்க்கம் உபய வேதங்களுடன் சோபித்து வர ஸ்ரீ ராஜகோபாலன் செங்கமலத் தாயார் கிருபை செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

# இராஜகோபாலனைப் பாடிய சஹஜி மன்னன்

கண்ணா பாலசுப்ரமணியன்
லலிதா விஸ்வநாதன்

*சஹஜி மன்னன்*
***கி.பி. 1684 1712***

'சஹஜி' என்று மராத்தியிலும், சகசி என்று தமிழிலும் அழைக்கப்பட்ட இம்மன்னவர் தஞ்சையை ஆட்சிபுரிந்த மராத்திய மன்னர்களின் வரிசையில் இரண்டாவதாக முடிசூடியவர். இவர் தஞ்சையில் மராத்திய ஆட்சியைத் தோற்றுவித்த வெங்கோசியின் மூத்த புதல்வர். இவருடன் பிறந்தவர்கள் முறையே முதலாம் சரபோசியும், துளசாவும் ஆவர். இவர்கள் மூவரும் இணைந்தே தஞ்சை ஆட்சியை நடத்தினர் என்று ஒரு மராத்தியக் கல்வெட்டு கூறுகிறது. 'தர்மாகூடம்' எனும் நூல் இம்மூவரின் நெருக்கத்தை விவரிக்கின்றது.

சகஜி தஞ்சை அரண்மனையில் செங்கோலோச்சும்போது கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டையில் முதலாம் சரபோசியும், மன்னார்குடிக்கு அருகில் உள்ள மகாதேவபட்டினத்தில் துளசாவும் இருந்துகொண்டு அந்தந்தச் சுபாக்களைத் (நாட்டுப் பிரிவுகளை) திறம்பட நிருவகித்தனர். கருநாடக மாநிலத்தில் பிறந்த இவர், தமது இளம் வயதிலேயே தம் தந்தையுடன் தஞ்சை அரசுப் பணிகளைக் கவனித்ததால் தமது ஆட்சியில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தினார். தஞ்சை மராத்திய அரசர்களின் வரிசையில் மிகச்சிறந்த அரசர் என்ற பெயரையும் பெற்றார். சகம் 1633 நந்தன வருடம் கி.பி. 1712 இல் தஞ்சையை அடுத்த வல்லத்தில் இயற்கை எய்தினார்.

*தஞ்சை மண்ணில் இலக்கியச் செழுமை*


தாமே ஓர் பெரும்புலவராகத் திகழ்ந்ததால் சகசி மன்னரது அவை பன்மொழிப் புலவர்கள் சூழத் திகழ்ந்தது. இவரது காலத்தில் இலக்கியங்கள் மலர்ந்த அளவு, தஞ்சை மண்ணில் வேறு எந்த அரசர் காலத்திலும் இலக்கியங்கள் தோன்றவில்லை. இவரது அவையில் மலர்ந்த தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கவை (1) பூலோக தேவேந்திர விலாசம் (2) அதி ரூபவதி கல்யாணம் (3) சங்கர நாராயண கல்யாணம் (4) சந்திரகாச விலாச நாடகம் (5) தியாகேசர் குறவஞ்சி (6) விஷ்ணு சாஹராஜ விலாசம் முதலியனவாகும். இவரது ஆதரவால் பல தமிழிசை நாட்டிய நாடக நூல்கள் மலர்ந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்க நாடகங்கள் மனுநீதி சோழ மகராஜன் நாடகம், பிரகலாதன்மாக்கதை முதலியனவாகும்.

தஞ்சை அரண்மனையில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகள் சங்கமித்தன. சகசி மன்னரே பன்மொழிப் புலமையுடன் திகழ்ந்ததால், இவரே பல மொழிகளிலும் கவிதைகள் புனைந்தார். சகசி கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சாஹராசபுரம் எனும் திருவிசநல்லூரை நாற்பத்தாறு பெரும்புலவர்களுக்கு அளித்து அழியாப் புகழ் எய்தினார். இந்த நாற்பத்தாறு புலவர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீதரவெங்கடேசன் எனும் திருவிசலூர் ஐயாவாள் மற்றும் இராமபத்திர தீட்சிதர் ஆகியோராவர். ஜானகி பரிணயம், சிருங்கார திலகபாணம், பரிபாஷாவிருத்தி, சத்தர்சனசித்தாந்த சங்கிரகம், இரத்தின தூலிகா, சித்தாந்தசித்தாஞ்சனம் வித்யாபரிணயம், ஜீவானந்தம், சுகசந்தேசம், சிருங்கார மஞ்சரி சாஹஜியம் ஆகிய நூல்கள் இவரது அவையில் உதித்த முத்துக்களாகும். திருவிசலூர் ஐயாவாள் எழுதிய 'சாகேந்திரவிலாசம்' எனும் நூல் சஹஜியின் வாழ்க்கையைப் பற்றி விவரிக்கும் ஓர் அரிய சமஸ்கிருத நூலாகும்.

### சஹஜி எனும் பெரும்புலவன்

கருநாடக இசையின் சாகித்யங்களுக்குத் தந்தையெனக் கூறப்படும் புரந்தரதாசர், அன்னமாச்சாரியார் ஆகியோருக்குப் பின்னும், சங்கீத மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோருடைய காலத்திற்கு முன்னும் வாழ்ந்த சகஜி மன்னர் பல நூறு கிருதிகளையும் அரிய நூல்களையும் தெலுங்கு, மராத்தி முதலிய மொழிகளில் படைத்தார். இவரால் பல இசை, நாட்டிய நாடக நூல்கள் எழுதப்பட்டன.

சங்கரகாளீ நடன சம்வாத நாடகம், சங்கர பல்லகி சேவாபிரபந்தம், விஷ்ணு பல்லகி சேவாபிரபந்தம், கிராத விலாசமு, பக்தவச்சல விலாசமு, கங்கா பார்வதி சம்வாதமு, பஞ்சரத்தினபிரபந்தமு, சீதாகல்யாணமு, சதிபதிதான விலாசமு, கிருஷ்ணலீலா விலாசமு, ருக்மணி சத்யபாமா சம்வாதமு முதலான தெலுங்கு நாட்டிய நாடகங்களும், இலட்சுமி நாராயண கல்யாணம், இலட்சுமி பூதேவி சம்வாதம், மிருத்தியுஞ்சய சிரஞ்சீவி நாடகம், தியாகராச விலாசம், கங்கா காவேரி சம்வாதம் முதலான மராத்தி இலக்கியங்களும் பஞ்சபாஷா விலாசம் என்ற பன்மொழிக் காப்பியமும் இம்மன்னர் தஞ்சையில் யாத்த அரும்பெரும் நூல்களாகும்.



இந்தி மொழியில் விஸ்வாதீத விலாசமும், சமஸ்கிருதத்தில் சந்திரசேகர விலாசமும், தமிழில் காவேரி கல்யாணமும் இவர் படைத்த முத்தான நாடக நூலாகளாகும்.

இயல், இசை, நாட்டியம் எனும் முத்துறைகளையும் வளர்த்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சஹஜி மன்னர் தஞ்சை மன்னர்கள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தகுந்த பெரும்புகழாளர் என்பது மிகையன்று.

சோழ நாட்டிலுள்ள சைவ, வைணவ ஆலயங்களுக்குச் சென்று பல பாடல்களைப் பாடியுள்ளார். முறையான இசையோடு இவர் யாத்த பாடல்கள் பக்திச் சுவையும், இனிமையும் உடையவையாகும். மன்னார்குடி இராஜகோபாலப் பெருமானின் திருவிழாவைக் கண்டுகளித்த சஹஜி மன்னன் அவர்மீது பல தெலுங்குப் பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்களில் சிலவற்றை தமிழாக்கத்தோடு இங்கு காண்போம். இராஜகோபாலர் கருட வாகனத்தில் பவனி வருதல், செங்கமலவல்லியின் சிறப்புகள், குதிரை வாகனத்தில் எழுந்தருளுதல், திருத்தேர் மெதுவாக ஊர்ந்தபோது கோபாலன் கீர்த்தி உரைத்தல், சிருங்காரப்பாடல் என்று சஹஜிமன்னன் பாடியவை இனிமை பயப்பவையாய் திகழ்கின்றன.

கருட சேவை

*இராகம் : சாரங்கா* *அடதாளம்*

கோபாலுடு வச்செனு ராஜகோபாலுடு வச்செனு
போபாலுடு ஸஹஜபூபாலுனி இண்டிகிஞீ
பணதிதோ கூடி ஜயமு வர்திஞ்சுசுனு !!எடுப்பு!!

ரங்குமீரகா கசதுரங்கமுபை நெக்கி இபுடு
அங்கஜ ஜனகுடு அதிக ஆரோக்ய சுக மிச்சுசு 1
முரளி அதரமந்து முத்துகானு வாயிஞ்சுசு
ஸரஸ ராகமுலு பாடுசுனு ஸகலவித்ய லொஸங்குசு 2
பூமிஸஹிதுடு பூரி அஷ்டைச்வர்ய மொஸங்குசு
காமிதபலமுல நெல்லனு கருணதோ நிச்சுசு 3
கிரீடகுண்டலாலு தரிஞ்சி கீர்தி பிரஸித்தி சாய தலஞ்சி
அரிஸமூஹமுல மர்திஞ்சுசு வர தியாகேச மித்ருடு 4

கோபாலன் வருகிறான்! சகஜி மன்னரின் இல்லத்திற்கு இராஜகோபாலன் வருகிறான்! லக்ஷ்மி தேவியுடன் அனைவருக்கும் காட்சி தர அழகாக வருகிறான்.

வேலைப்பாடுடன் அமைந்த கருடன் மீது அமர்ந்த வண்ணம் மன்மத அழகோடு வருகிறான்...! காண்பவர்க்கு நீண்ட ஆயுளும், சுகங்களும் அள்ளி வழங்க வருகிறான். இனிய இராகங்களோடு, எல்லாக் கலைகளும் தழைக்க பூமாதேவியோடு குழல் ஊதி வருகிறான்...! கேட்கும்



குதிரை வாகனத்தில் கோபாலன்



அன்ன வாகனத்தில் இராஜமன்னார்



பாமா ருக்மனி சகிதராகச் செண்டலங்காரர்



செங்கமலத்தாயார்

செல்வங்களையும், வேண்டும் வரங்களையும் வழங்கிக்கொண்டு வருகிறான். அவன் கீர்த்தி அகிலமறிய கிரீடம் அணிந்து வருகிறான். தீயோரை மாய்க்க தியாகேசன் நண்பன் வருகிறான்...!

செங்கமவல்லியின்பேரில் பக்தி பதம்

இராகம் : ரேவகுப்தி ஆதிதாளம்

மிதிலேனி மமததோ தயசாயவம்மா மிம்மே நம்மிதிநம்மா
ரதிபதி ஜனகுனி ராணி ரமணீய செங்கமவல்லி !!எடுப்பு!!

அந்தரிவலெ நெஞ்சக அதி பாலுடு நேனு
மந்தஹாஸமு மீர மதனுனி கன்னா நாபை 1
கல்லகாது நின்னு நே கட்டிகா நம்மினா நம்மா
அல்ல. நீமேனல்லுனிகன்னா அதிசயமுகா நாபை 2
தியாகேச ஸோதரி போகி சயன ஸுந்தரி
வேக செங்கமலம்மனி வெலயு தம்முனிகன்னா நாபை3

எண்ணிலா நலமருளும் அம்பிகையே
உன்னையே நம்பினேன். மன்மதனை ஈன்றவளே
அழகிய செங்கமலவல்லித் தாயே. அருளும் அம்மா!
சின்னக்குழந்தை என நினைத்து அருளும் அம்மா!
மன்மதனுக்கு அருளுவது போலும், மருகன் முருகனுக்கு
அருள்வது போலும் அருளுமம்மா
தியாகேசன் சோதரி பாம்பனையில் இருப்பவளே
செங்கமலவல்லி விரைந்து எனக்கு அருளுமம்மா!

குதிரை வாகன சேவை

இராகம் : அஸாவேரி ஆதி தாளம்

விந்த ஜுடரே நேடி விந்த ஜுடரே
கந்து ஜனகுடு சம்பக வனவாஸி
கமனீய ராஜகோபாலுடு வச்செனு !!எடுப்பு!!

ஸன்தஸமுன தேஜிபை நெக்கி
ஸரஸ நெரிஜமு கரமுன பூனி
மன்து கெக்கின அருள மர்திஞ்சுசு மஹனீய
தக்ஷிண துவாரகா வீதி வச்செனு 1
ஸகல பூஷணமுலு மேனனு தரிஞ்சி
ஸரஸ புருஸா மந்தில கட்டி
அகலங்க ரூபமுன ஸ்த்ரீலு மோஹிசச
ஆனந்தமுக ஸொகஸுக வச்செனு 2
தீன தயாளுடு த்யாகேச மித்ருடு
திக்விஜயமு அகிலமந்து ஜேயுசுனு
மானினுலு நடியிஞ்சக பூமி ஸஹிதுடு
மா ராஜகோபால சுவாமி இபுடு வச்செனு 3

வேடிக்கையைப் பாருங்கள்....! இன்று நடக்கும் வேடிக்கையைப் பாருங்கள்...! மன்மத அழகொடு சம்பக வனத்தவன் இராஜகோபாலன் வருகிறான்.

தெட்சின துவாரகையில், உச்சித எழுச்சியொடு, கடிவாளம் கையில்பற்றி குதிரை மீதேறி வருகிறான்...!

அணிகலன் மிகச்சூடி அழகு ஆடைகள் எழில் செய்ய, ஆபரணங்கள் மோகம் கொள்ள அகளங்கன் ஆனந்த பவனி வருகிறான்...!

தீனதயாளன், தியாகேசன் அன்பன் திக்கனைந்தும் பவனி வருகிறான்.

ஆரணங்குகள் அபிநயிக்க, அரம்பையர் இசைபாட கலைமகளும், நிலமகளும் சூழ்ந்துவர இராஜகோபாலன் பவனி வருகிறான்.

திருத்தேர் சேவை

இராகம் : கண்டரவம் அடதாளம்

இந்த பராகு ஸேதுரா இந்தரிலோன
இந்த தய நாமீத நீகு எந்து போயெ
இபராஜ வரதா ராஜகோபாலா !!எடுப்பு!!

ஜனுலந்தரு பலுகுதுரு முனு துவாபரமுன நீவு
அர்ஜுன ஸாரத்யமு ஜேஸிதிவனி சால
மனமு ஜூடக நீரதமு மந்தகதி அயிதே
மொனஸி நவ்வுது ரந்தரு காவுன முத்துகோபால 1
பூசக்கர மெல்லனு முனுக நெத்தினதி நீவுன் காவா
கோசர பூதரமெத்தி கோவுல காசினதி மரசிதிவா 2
வாசமகோசர நீசரித்ரமு வர்ணிம்பக தரமே
இபுடு ஈசக்ரமு நடுப இந்த தாமஸ மேமி 3
தியாகேசரூப போகிசயன வாசீவந்தித
நாகாசனவாகன போசபிரிய ருக்மிணீவல்லப 3
யோகஸாத்ய எண்டலோநிலுபேதி நியாமா 4

என்மீது உனக்கு ஏன் இரக்கம் இல்லை...? எங்கே போனது உன் தயை இராஜகோபாலா...?

அன்று அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன் என்று மக்கள் கூறுவார்களே...! ஆனால் இன்று நான் பார்க்க உன் தேர் மெதுவாக ஊர்கின்றதே...! உன்னைத் துரந்தரன் என்று கூறுவார்களே...! உன் ஆற்றல் எங்கு போனது? அன்று நீ கோவர்த்தனகிரியை தூக்கி குடையாகப் பிடித்து கோபர்களையும், பசுக்களையும் காத்தவன் அல்லவா? வாசாமகோசரனே, உன் சரிதையை என்னால் வர்ணிக்கமுடியுமா?

இந்த திருத்தேரின் சக்கரங்களை உருளச் செய்வதில் தாமதம் ஏனோ?

தியாகமே உருக்கொண்டவனே, பாம்பனையில் பள்ளிகொண்டவனே, பிரமனால் துதிக்கப்படுபவனே, யானையை வாகனமாகக்கொண்டவனே இன்பத்தைத் துய்ப்பவனே, ருக்மணி மணாளனே, யோக நாயகனே, உன் திருத்தேரை இந்த வெய்யிலில் நிறுத்துவது நியாயமா?

## திருத்தேர் சேவை

*இராகம் : பந்துவராளி* *அடதாளம்*

*தேருபை வச்செனு ஜுடரே*
*துவரகாதீசூடு தேருபை வச்செனு*
*சாரு சிருங்காரமு ஜேஸி*
*சந்தன மிருகமதமு தித்தி* *!!எடுப்பு!!*

*கொந்தரு தேவதுலு ஸன்னுதி ஸாய*
*கொந்தரு ருஷுலு ஜயஜய மனக*
*அந்தமுமீர அகிலஜனுலு பொகடக*
*அந்தமுகா ராஜ கோபாலுடு* *1*

*ஆஹரி தோடி பந்துவராளி ராகமுலு*
*அதிசயமுகா நாரதுடு வினுபிஞ்ச*
*ஈஹரினி ஆஹிரியு ஸேவிம்பக*
*ஹரி பக்தவரதுடு நேடு* *2*

*கனகாம்பரமு வலெவாடுகா வேஸி*
*கமனீய பூஷணமுலு மேனனு தரிஞ்சி*
*மனஸிஜ ஜனகுடு மந்தஹாஸமு மீர*
*மஹனீய வீதிலோ தியாகேச மித்ருடு*

சந்தன சவ்வாது சுகந்த மணமொடு துவாரகை மன்னன் திருத்தேரில் வருகிறான்...! பாருங்கள்...!

தேவர்கள் துதிக்கவும், முனிவர்கள் ஜயஜய எனப் போற்றி மகிழவும், புவனமனைத்தும் புகழ ஆனந்தமாய் இராஜகோபாலன் அழகுத்தேரில் வருகிறான் பாருங்கள்.

ஆகிரி தோடி பந்துவராளி போன்ற இனிய ராகங்கள் அதிசயிக்க நாரதன் பாட, ஆகிரி என்னும் இராக தேவதை இந்த ஹரியின் மீது மோகம் கொள்ள, பக்த வரதனாகக் காட்சியளிக்கிறான் பாருங்கள்.

கனகாம்பர ஆடைதுடி, அழகு ஆபரணங்கள் பூண்டு மன்மதனாக மந்தகாசமாய் பிரகாசிக்கிறான் இக்கோபாலன். தியாகசேனின் நண்பனாக திருத்தேரில் பவனி வருகிறான் பாருங்கள்...!



## பக்தி சிங்கார பதம்

*இராகம் : பாடி* *ஆதி தாளம்*

*இந்த தயவானினி எந்தனி கொனியாடுதுனு*
*இந்துலாலரா வினரே*
*ஸந்ததமு பக்த வரதுடனே பேருனு*
*ஸஹஜமுகானு செல்லு நிதனிகி* *!!எடுப்பு!!*

*தரசுகா மகரி சேத தகிலின கரினி*
*பரி பூர்ண தயசே பாலிஞ்செ நிதடு*
*சரணு ஜெந்தின விபிஷணுனி லங்காராஜ்யமுன*
*கரிமெனு பட்டம்பு கட்டெ நிதடு* *1*

*மதிமந்துடைனட்டி மஹித ப்ரஹ்லாதுனி*
*மமததோ காசின மஹீ காந்துடிதடு*
*ஸதியைன துரௌபதிகி ஸததமு மானமுகாசி*
*அதிசயமுக வலுவலந்திச்செ நிதடு* *2*

*தேவ நிர்குணரூப! தியாகே சுடை நித்யமுனு*
*பாவிம்பனு தீனுலனு பஹுவிதமுல பாலிஞ்சு நிதடு*
*பாவ ஸகுணரூப! கோபால மூர்தியை மன்னாரு*
*தேவுண்டு சம்பகவனமுன தேஜரில்லு நிதடு* *3*

இத்துணை தயையுள்ளவனை நான் எனனவென்று கொண்டாடுவேன். கேளுங்கள் பெண்களே...!

பக்த வரதன் இவன். முதலை பிடித்த யானையை முழு மனதோடு ஆட்கொண்டவன். சரணடைந்த வீடணனுக்கு மகுடம் கவித்தவன். பாண்டவர் தம் தேவியை பாங்காகக் காத்தவன். பிரகலாதனுக்கு அருளிய பூமிதேவியின் மணாளன். பார்த்தனுக்குச் சாரதியாய் பாரதப்போர் நடத்தியவன். கோவர்த்தன கிரி தாங்கி கோகுலத்தைக் காத்தவன். நிர்குணன், தியாகசீலன், எளியவரை பரிபாலிக்கும் கருணாமூர்த்தி, இவன் சகுணரூப பாவமாய் கோபாலமூர்த்தியாய் மன்னாரு தேவன் என்ற நாமம் துடி சம்பகவனத்தில் பிரகாசிக்கிறான்.

மராட்டி மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இம் மன்னவன், தஞ்சையில் வாழ்ந்து, மன்னார்குடி இராஜகோபாலன் மீது அளவிலா பக்திபூண்டு தெலுங்குமொழியில் பாடியுள்ள இசைப்பாடல்களை நோக்கும்போது இம்மன்னனின் மாட்சிமையையும், மனித நேயத்தையும், பக்தி வெளிப்பாட்டையும் நாம் காண முடிகிறது.

# மன்னார்குடி பெரியவாள்

தொகுப்பு :- வடுவூர் நாராயணன்

பிரம்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் தற்போதைய நாகை மாவட்டத்தில் உள்ள சம்பகராணீய க்ஷேத்திரமாகிய மன்னார்குடியில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தனது அதிசயத்தக்க புனித வாழ்க்கையாலும் தன்னிகரற்ற புலமையாலும் பிரகாசித்து வந்தவர்.

நாயக்க மன்னர்களில் அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷதர் அவர்களின் வம்சத்தில் ஒன்பதாவது நேர் தலைமுறையை சார்ந்தவர் சாஸ்திரிகள். கி.பி. 1815 மே மாதம் 28ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (யுவ வருஷம் வைகாசி மாதம் 17ம் தேதி) திருவோண நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவருடைய தந்தையும் பாட்டனாரும் திருவாருக்கு அண்மையில் உள்ள கூத்ததம்பாடி என்ற கிராமத்தில் வசித்துவந்தனர். இவர்களுக்கு இக்கிராமம் மானியமாக கிடைத்தாகச் சொல்லப்படுகிறது.

பிரம்மஸ்ரீ ராஜு சாஸ்த்ரிகள் ஸாமவேத லக்ஷணங்களை தன பாட்டனாரிடமும், தனது தந்தையாரிடம் காவிய, நாடகங்களையும் கற்று தேர்ந்தார். தன்னுடைய பதினைந்தாவது வயதிலேயே வடமொழியில் நன்கு பேசவும், அழகான கவிதைகளை புனையவும் ஆரம்பித்திருந்தார்.

மன்னார்குடியில் இவருடைய முதல்குரு நாராயண ஸரஸ்வதி. பிறகு இவர் இங்கு தாய்மாமன் வீட்டில் தங்கிக்கொண்டு கோபாலசாரியார் அவர்களிடம் சில வருடங்கள் தர்க்கம், வியாகரண சாஸ்த்திரங்களை கற்றார். இருபது வயதில் சாஸ்திரங்களில் நடந்த விவாதங்களில் வெற்றிவாகை சூட துவங்கினார்.

மஹாபாஷ்யம் படிப்பை மேலக்காவேரி சின்னண்ணா தீக்ஷதரிடமும், மீமாம்ஸாவை கும்பகோணம் ரகுநாத சாஸ்திரிகளிடமும் கற்று, மன்னார்குடி வந்து நிரந்தரமாக தங்கினார். இவருக்கு சாஸ்திரி என்ற பட்டம் இவருடைய குருவான கோபாலச்சாரியாரால் வழங்கப்பட்டதாகும். தற்சமயம் இவர் வசித்துவந்த மன்னார்குடி கீழமுதல் தெரு கதவு இலக்கம் 82 என்ற வீடு, தற்போது சங்கரமடமாக திகழ்கிறது. அன்னப்பறவைகளின் கூட்டம், சரத்காலத்தில் கங்கையை வந்து அடைவதுபோல, மூலிகைகளுக்கு இரவில் ஒளி தானாக வந்து சேருவதுபோல் இவருடைய முற்பிறவிக் கல்வி மறுபடியும் இவரையே வந்து சேர்ந்தது.

குருகுலவாசம் முடிந்த பிறகு சாஸ்திரிகள்; பராசரஸம்ருதி, மாதவீய ஸ்ம்ருதி வைத்தியநாத தீக்ஷதயம், ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷதரின் கிரந்தங்கள், வேதாந்ததேசிகரின் கிரந்தங்கள் முதலியவைகளை கவனமாக ஆராய்ந்தார். பிருஹத் ஜாதகம், காலாம்ருதம், காவ்யபிரகாசம், காவீயதர்ப்பணம் முதலிய மற்ற நூல்களையும் ஆராய்ந்து தெளிந்தார்.

சாஸ்திரிகள் தினமும் அதிகாலை மூன்று மணிக்கு படுக்கையிலிருந்து எழுந்து சிஷ்யர்கள் பின்தொடர கோபிநாதன் குளத்திற்கு ஸ்நானம் செய்ய செல்வார். அப்போது அவருடைய சீடர்கள் பின்னே செல்வார்கள். போகும்போது பாடங்களை சந்தேக நிவர்த்தி என்ற வகையில் சொல்லி தருவார்.

காலையில் செய்ய வேண்டிய வைதிககாரியங்கள், ஜபங்கள், முடிந்தபிறகு எட்டு மணி முதல் 11 மணி வரை பாடம் நடக்கும். பிற்பகலில் தர்க்கம், வியாகரணம், மீமாம்சா, அலங்காரம், ஆகிய பாடங்கள் குழுக்களாக நடைபெறும்.

மறுபடியும் தூர்யாஸ்தமன வேளையில் ஸந்தியா வந்தனம் செய்வதற்கு சிஷ்யர்களுடன் குளத்திற்கு செல்வார். ஓய்வு நேரம் கிடைக்கும் பொழுது எல்லாம் மஹாபாரதத்தை

படிக்கச் சொல்லி கேட்பார். இவரைத்தேடி தரிசிக்கும் எண்ணத்துடன் வெகு தூரத்திலிருந்து புலவர்களும், வித்வான்களும் வருவது வழக்கமாகிப்போனது.

ராமநாதபுரம், புதுக்கோட்டை, மைசூர் ஆகிய மன்னர்களின் தர்பார்களிலும் வித்வத் ஸ்தலங்களிலும் இவருக்கு முதன்மை இடம் உண்டு. அங்கு ஆண்டுதோறும் சென்ற இவரால் இம்மன்னர்கள் கௌரவம் பெற்றனர்.

இவரிடம் பாடம் பயில வருபவர்கள் அனேகமாக (நம்நாட்டில் எல்லா மாநிலங்களிலிருந்தும்) முதல்தெருவின் எல்லா வீட்டின் திண்ணைகளிலும் ஓய்வுபெற உறங்குவது வழக்கம். இவர்கள் தங்கும் வீட்டில் சொந்தக்காரர்கள், அவர்களுக்கு அன்னமிடுவதையே தங்களின் புனிதமான செயலாக கொண்டனர். அதனால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்த முதல் தெரு, ஒரு தங்கிப்படிக்கும் பல்கலைக்கழகமாகவே இருந்தது என்றால் அது மிகையாகது. இவருக்கு அப்போதைய ஆங்கில அரசு மிக உயர்ந்த விருதான "மஹாமஹோபாத்யாய" என்ற விருதை அளிக்க முன்வந்தபொழுது இவர் அதனை ஏற்க சென்னை போக மறுத்துவிட்டார். ஆனால் அரசு அதனை இவருக்கு தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் தந்து, சகல மரியாதைகளுடன் இவருடைய வீட்டிலேயே கொண்டுபோய் தரும்படி பணித்தது.

ஜெர்மனியில் உள்ள மாக்ஸ்முல்லர் என்ற வடமொழி அறிஞரை ஒருவர், நீங்கள் ஸ்மஸ்க்ருதத்தில் இத்தனை புலமை பெற்றிருக்கிறீர்களே, அம்மொழியின் நாடான இந்தியாவிற்கு ஏன் செல்லவில்லை? என்று கேட்டபொழுது அதற்கு அவர் அளித்தபதில் மிக மிக அற்புதமானது.

"நான் இந்தியா செல்லவேண்டும் என்று விரும்பினால் அது சென்னை மாகாணத்தின் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியில் வசிக்கும் ஸ்ரீமத் ராஜு சாஸ்திரிகளை சந்திப்பதற்காக மட்டும் இருக்கும்".

இதிலிருந்து இவருடைய கடல் கடந்த புலமையும் அறியலாம். இப்படி இவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல அற்புதங்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

இவர் வாழ்ந்த காலத்தில் மன்னார்குடியிலிருந்த பிண்டலே கல்லூரியில் முதல்வர் ஒரு வெள்ளைக்காரர். அவரும் இவரிடம் சில சமயங்களில் மதம் தொடர்பான சந்தேகங்களை கேட்க வருவாராம்.

தற்போதைய காஞ்சிகாமகோடி மடத்தின் முக்தியடைந்த பராமாச்சார்யாளின் குருவிற்கு இவர் குரு. அவ்விதமே சிருங்கேரி மடத்தின் பூர்வீக பீடங்களுக்கும் இவர் குருவாக விளங்கினார்.

### இவரால் இயற்றப்பட்ட நூல்கள்

*1. ந்யாயேந்து சேகரம்*

இந்நூலின் உட்கருத்து எங்கும் நிறைந்த பரப்பிரம்மம் ஒன்று, அதுவே ஜீவனாக விளங்குகிறது. உலகம் வெறும் தோற்றமே.

*2. ஸ்த்வித்யாவிலாசம்*

இது "தத்வமனி" என்ற கொள்கையை விஸ்தாரமாக விளங்குகிறது.

*3. ஸாமருத்ர பாஷ்யம்*

இதுவரை ஸாமவேதத்தின் பாஷ்யம் செய்யப்படாத கடினமான பகுதிகளை எடுத்துக்கொண்டு ஒரு பதத்திற்கு அனேக தாதுக்களைக் கொண்டும் பற்பல அர்த்தங்களை மிகப்பொருத்தமான எழுதியதுடன், முழுவேதத்திற்கும் பாஷ்யம் எழுதியிருக்கும் நூல் இது.

*4. சிவமஹிம கலிகா ஸ்துதி பாஷ்யம்*

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் "சிவ மஹிமகலிகாஸ்துத" என்ற நூலிற்கு அற்புதமான பாஷ்யம் எழுதியிருக்கிறார்.

*5. தியாகராஜ ஸ்தவம்*

திருவாரூர் தியாகராஜ பெருமானைத் துதிக்கும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது.

இவைகளைத் தவிர ராஜகோபால நவரத்னமாலிகா என்பதும். ஸ்ரீராஜகோபால மஹநித்வை அனுக்ரமானிகா என்பதும் இவர் இயற்றியவைகள்.

இதில் ராஜகோபால மஹோத்சவ அனுக்ரமானிகா என்பதில் 18 நாள் உற்சவத்தை 23 ஸ்லோகங்களால் அற்புதமான வர்ணித்து எழுதியிருக்கிறார். இதிலிருந்து இவர் மன்னார்குடியில் இருந்த நாட்களில் உற்சவ காலங்களில் இரண்டு வேளைகளிலும் ஸ்வாமி தரிசனம் செய்ய வந்தார் என்றும் தெரிகிறது. அந்த 23 ஸ்லோகங்களின் தமிழாக்கம் பின்னே தொடர்கிறது.

4-3-1903 மாசிமாதம் 21 புதன்கிழமை இவர் முக்தியடைந்தார். இவருக்கு முன்னரே இவருடைய மனைவி சுமங்கலியாக போய்ச் சேர்ந்தார்கள்.

இவர் இறந்தபொழுது இவர் துக்கத்துடன் குறிப்பிட்டவை மிகவும் சாரமானது.

மனைவி இறந்த துக்கத்தில் இவர் அழதபொழுது ஒருவர் இவரை அணுகி "மிகப்பெரிய ஞானியான நீங்களே இப்படி அழலாமா?" என்ற கேட்டபொழுது இவர். மனைவி இறந்த துக்கம் ஒருபுறம் இருந்தாலும், இவள் தன்னுடன் என்னுடைய அக்னிஹோத்திரத்தையும் எடுத்துச் செல்கிறாளே என்றுதான் அழுகிறேன்" என்றாராம்.

மனைவியில்லாதவன் அக்னிஹோத்ரம் செய்யும் தகுதியை இழக்கிறான்.

இவர் நிர்வாணம் அடைந்தபோது எல்லா சமயத்தை சார்ந்தவர்களும் அந்திம ஊர்வலத்தில் கலந்து கொண்டதும். அப்பொழுதிருந்த பிண்டலே கல்லூரி முதல்வர், மயானம் வரை வெறுங்காலுடன் வந்து, இவருக்கு புகழாஞ்சலி செய்ததும் மறக்கவோ, மறுக்கவோ முடியாதவைகளாகும்.

*இனி ராஜகோபால உத்சவ அனுக்ரமானிகா*

1. கருணைக்கடல் நம் ராஜகோபாலன், பக்தர்களின் பொருட்டு எப்பொழுதும் ஈரமான மனதை உடையவன். இவன் சந்திரனுக்கு ஒப்பானவன் ஆயர்பாடி பெண்கள் ஆம்பல் மலர்கள் போன்றவர்கள். இந்த கோபாலன் என்ற சந்திரனைக்கண்டு அந்த மலர்கள் மலருவதுபோல, உன்னைப் பார்த்த மாத்திரத்தில் உன் உள்ளம் கருணை என்கிற மகரந்தத்தால் நிரம்பி வழியட்டும்.

2. உன்னை தரிசிப்பதில் எனக்கு எல்லையற்ற ஆசை! ஆசை வெட்கமறியாது என்பார்கள். என்னால் உன்னை பூரணமாக தரிசிக்கமுடியுமா அல்லது முடியாதா என்பதையும் நான் நினைத்துகூடப் பார்க்கவில்லை. உன்னுடைய தரிசனம் என்கிற எண்ணைகடலில் மூழ்கினாலே இந்த நிலை என்றால் நிஜமான உன் தரிசனம் என்னை என்னென்ன செய்யுமோ?

3. முதல்நாள் கொடிச்சப்பரத்தில் பெருமாள் எழுந்தருளும் அழகு

அருகம்புல் கூட்டம் தூரத்திலிருந்தே பார்க்கும்பொழுது சற்றே கறுப்பாகவே தெரியும். ஆனால் அதன் ஊடே பசுமை நிறமும் தெரியும். அம்மாதிரியான நிறம் கொண்ட ருக்மணி ஒருபுறம். மறுபுறம் காய்ச்சி அடிக்கப்பட்ட தங்கத்தின் பளபளப்பான நிறமுடைய சத்யபாமா. இந்த இருவரையும் மாறிமாறி சமமாக எப்போதுமே பார்க்கிற இந்த கோபாலனின் கருணையைத்தான் அளவிடமுடியுமோ? ஆனால் மற்றவர்கள் உன்னை நீ ருக்மணியை கொஞ்சம் குறைவான சிநேகத்துடனும், பாமாவை அதிகமாக நேசிக்கும் பாவத்துடன் பார்ப்பதாக நினைக்கிறார்களே! இது சரியாகுமோ?

***4. புன்னைமர வாகனம்***

நீ பேராண், புருஷசிரேஷ்டன், கோகுலத்தின் பெண்கள் எல்லாம் உனக்காகவே தவமிருந்து, உன்னைச் சுற்றியே வலம்வரும் ஜீவன்கள், ஜீவாத்மாக்கள், உன்னுடைய திருவடியை மட்டிலும் நினைத்தவுடனேயே புன்னாகனான நீ (புன்னாகன் என்பதற்கு புருஷசிரேஷ்டனி என்று பொருள் உண்டு) புன்னை மரத்திலிருந்தே அருள்பாலிக்கிறாயோ?

*5 ஹம்ச வாகனம்*

வேதங்களை உயிர்ப்பிக்க ஹம்சவதாரம் எடுத்த நீ அதை நீருபிக்கவே இப்போது அன்னத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறாயோ?

*6 கோவர்த்தனகிரி*

ஆநிரை மேய்க்க, நீபோதில்.... என்று துவங்கிய பாசுரத்தில் கானகமெல்லாம் திரிந்து உன் கரிய திருமேனி வாட என்ற பொருளுக்கு இணங்க, பசுக்களையே தன்னுடைய பரிவாரங்களாக, சொத்தாக எண்ணிய நீ அவைகளை ஏன் துளிர்போன்ற கைகளால் ரஷித்தாய். இந்திரனின் கோபத்திலிருந்து கோகுலத்தை காப்பாற்றிய நீ எனக்கு இன்னமும் ஏன் அங்கீகாரம் தரவில்லை என்று ஏங்கும் அந்த தலைவியின் உள்ளகிடங்கையை புரிந்துகொண்டு அதற்கு அங்கீகாரம் தரவே, ஒரே விரலில் அதனை தூக்கிப்பிடித்து உலகிற்கு காட்டி, இவனால் அல்லவோ கோகுலம் காப்பாற்றப்பட்டது என்று சொல்கிறாயோ?

*7. பஞ்சமுக அநுமான் :*

1. சென்றால் குடையாக, 2. உட்கார்ந்தால் சிம்மாசனமாக, 3. நின்றால் பாதுகையாக, 4. பாற்கடலில் மணிவிளக்காக, 5. சயனத்தின்பொழுது மெத்தையாக ஆதிசேஷன் பகவானுக்கு சேவகம் செய்வதைப்போல அநுமனும் உனக்கு பல விதங்களிலும் உதவி செய்ததை காட்டவே ஐந்துமுகமாக அவனைகாட்டி, அவன்மேல் ராமனாக காட்சிதருகிறாயோ? கிஷ்கிந்தையின் மன்னருக்கு (சுக்ரீவனுக்கு) நட்பு பாலம் ஒருமுகம், இருவருக்கும் மந்திரியாய் இரண்டாவது முகம், தென் இலங்கைக்கு தூதனாக மூன்றாவது முகம் உயிர்காக்கும் தோழனாக (சஞ்சீவிமலையை கொணர்ந்தபொழுது) நான்காவது முகம், சீதாபிராட்டியை அசோக வனத்தில் காத்துநின்று இலங்கையை தீக்கிரையாக்கிய ஐந்து முகத்தையும் உலகிற்கு காட்டுகிறாயோ? இறைவன் யாராக இருப்பினும் அவனுக்கு கருடனோ, சேஷனோ, ரிஷபமோ முக்கிய வாகனம்.

*கெண்டபேரண்டபஷி*

விலங்குகளில் பெரியதும் பலமுள்ளதும் யானை என்று கருதப்படுகிறது. யானையைவிட சிங்கம் அதிக பலம் வாய்ந்தது. அந்த சிங்கத்தைவிட சரபம் என்கிற யாளி முகத்தை உடைய ஒன்று இன்னமும் பலமும் கொண்டது. இவையெல்லாவற்றையும்விட ஹேரண்டபஷி மிக சக்தி வாய்ந்தது. அப்படி பெரிய பஷியான ஹேரண்டத்தையே தனது வாகனமாக பெற்றதால் கோபாலன் எல்லோரையும் காக்கவல்ல மஹாசக்தி படைத்தவன் ஆகிறான். அவனுடைய திருவடி சம்மதத்தால் இப்பஷியும் ஏற்றமடைகிறது.

### 9. பல்லக்கு சேவை

தங்கமயமான தகடுகளுடன் ஒரு பக்கம் முழுவதும் முத்துச்சரங்கள் தொங்க, மறுபக்கம் பல்வேறு பூங்கொத்துக்கள் நறுமணத்தை பரப்ப, பல்லக்கு முகப்பில் மல்லிகைப்பந்தல் போன்ற ஜோடிப்பு பகவானை சுமக்கும் அதற்கு பூப்புருவமாக தோன்றுகிறதே! இந்த அழகிய பல்லக்கில் ஒரு சுந்தரமான புருஷன்தான் உட்காரவேண்டும். அதுவும் அவன் புவன சுந்தரனாக இருக்கவேண்டும். இப்போது அவன் பரமபுருஷனாக தெரியாமல் எங்கள் எல்லோரையும் ஆண்களே, அவன்மேல் காதல் பக்தி கொள்ளும் அளவிற்கு சாதாரண புருஷனாகவே தெரிகின்றானே! என்னே இவனுடைய சௌந்தர்யம்!

10. ஹே, ரிஸ்யமுக பர்வதமே! உனக்கு ஏன் இத்தனை வியப்பு? இவன்தான் அந்த ராமன்? இப்போது கிருஷ்ணன். கானகத்தில் முன்பு அரக்கர்களால் துன்பப்பட்டவர்களும், முனிவரின் யாகத்தின் பாதுகாப்பிற்கும் சென்ற அவன், தன் பாததூசியால் ஒரு கல்லை பெண்ணாக்கி அகலிகைக்கு மோஷம் தந்தானே! ஒரு சாதாரண கல் இவனால் மோஷத்தை அடைந்துவிட்டால் அதன் பிறந்த வீடான இந்த பர்வதம், கம்சனுக்கு எதிரியான கிருஷ்ணன், இந்த கோபாலனை, முன்பு ஏகபத்தினிவிரதனான அவனை, இப்போது கோபிகைகளால் சூழப்பட்ட இவனை நன்றிக்கடனாக சேவிக்கிறதோ?

### 11. சிம்ம வாஹனம்

சீரிய சிங்காதனம், என்பது பகவானுக்கே உரியதான ஒன்று. அதன்மேல் எல்லாம் நல்முத்துக்கள் பதிக்கப்பெற்றவைகள். அந்த சிங்காசனம் பகவானிடம், இந்த கோபாலனிடம் சம்பகராணீய ஷேத்திரத்தின் ராஜகோபாலனுடைய பெரிய உற்சவத்தின் முதல் வாகனமாக வருவதாக கேட்டபொழுது, பகவானும் அதற்கு சம்மதம் அளிக்க, ஓவ்வொரு திருநாளிலும் இச்சிங்கம் ஏதோ ஒரு உருவில் வாகனத்தில் வந்துகொண்டுதான் இருக்கிறது. இது கோபாலனுடைய பரம க்ருபையை காட்டுகிறது.

### 12. சூரியப் பிரபை

பகவானுடைய மனதிலிருந்து சந்திரன் உருவானான். (சந்த்ர மாமனசோ ஜாத) சூரியன் ஒருகண், மற்றொரு கண் சந்திரன். தன்னுடைய மனதிலிருந்து உருவான சந்திரனையே, அல்லது சூரியனையே வாகனமாக கொண்ட கோபாலனே சூரியமண்டலத்தின் நடுநாயகமாக, வேணுகோபாலனாக காட்சிதரும் உன்னை ஜோதிஸ்வரூபனான உன்னை நான் வணங்குகிறேன்.

### 13. சேஷ வாகனம்

ஹே ஆதிசேஷன், சேஷபாவத்தை உடைய உன்மேல் மிகுந்த கருணையால் இந்த கோபாலன் உன்மேல் சயனித்திருப்பதால் உன்னையும் சேர்த்து பகவானை நாங்கள் வணங்குகிறோம். எங்களுக்கு வைகுண்டத்தின் பரமபதநாதன் சேவையை நீ உன்னுடன் இருப்பதால் தானே இந்த பகவான் அளிக்கிறான். அதனால் உனக்கு சேஷத்வ பாவம் வந்துவிடுகிறதே.

### 14. கருடசேவை

கருடனே! உனக்கு கிடைத்திருக்கும் இந்த தொண்டு என்கிற மகத்தான வாய்ப்பு இனி யாருக்கு கிட்டும்? இதனால் உன்னை கைங்கர்யயை அடைந்தவன் என்று நினைக்கிறேன். ஆளவந்தார் உன்னை "வேதாத்மா விஹேகேஸ்வர" என்ற அழைப்பால் நீ வேதங்களின் ஆன்மா! வேதங்களின் ஆன்மாவாகிய உன் திருத்தோளில் வேதநாயகன் காட்சி தருவது பார்த்தும் பரவசமாகாமலிருக்க முடியுமா? உற்சவ வாகனங்களிலேயே நீதான் சிறப்பான வாகனம். அந்த லஷ்மிபதி பின்னர் புஷ்பமயமான சப்ரத்தில் ஏறி, கோயிலை வந்தடையும் வரை ஒரே மாதிரியான நடையுடன் ஆடி ஆடி அழகாக வருகிறானே!

### 15. காளீய நர்த்தனம்

காளீயன் என்ற பாம்பின் படங்களில் குவியல்களாக கிடக்கும் மணிகளின் (நாகரத்தினங்கள்) ஒளியில் உன்னுடைய திருவடித் தாமரையும், ஜாதி நீலக்கல் பதித்து உன் மார்பில் தவழ்ந்து விளையாடும் கௌஸ்துப மாலையும், ஒளிக்கற்றையை உமிழ்ந்து உமிழ்ந்து சூரியனாக பிரகாசிக்கும் உன்னுடைய கிரீடமும், நெற்றியில் இலேசாக காற்றில் ஊஞ்சலாடும் முன் உச்சிமயிரும் யோகிகளின் தியானத்திற்கு இதனைவிட சிறந்ததொரு தரிசனம் வேறு எங்கேயாவது கிடைக்குமா என்ன? இயற்கையிலேயே உன் உலகமகா அழகு இந்த நாட்டியகோலத்தில் பன்மடங்கு சிறப்பாக இருக்கின்றதே.



*16 அனுமந்த் வாஹனம்*

அஞ்சனையின் மைந்தன் ஆஞ்சநேய பெருமானின் மேல், அமர்ந்த வண்ணம் மைபோன்ற நிறமுடைய நீ, (நீலமேக சியாமளன்) அன்றில் பறவை போன்ற அழகான கண்களைக் கொண்டு பக்தர்களுக்கு எப்போதுமே பிரியமான சேவையை தருகின்றாய். ஒரு முறையல்ல இரண்டு முறை இந்த ஆஞ்சநேயவாகன தரிசனம்.

*17. யானை வாகனம்*

ஆயிரக்கணக்கான பௌர்ணமிகள் ஓரேநாளில் தோன்றினால் அதில் என்ன ஒளி கிடைக்குமோ, அந்த நிலவின் ஒளியின் ஊடே சிறிய திட்டாக காணப்படுகிறது. கருமையை போல, உன் கேசங்கள் நெற்றியில் விழுந்து விழுந்து விளையாடுகின்றன. உன்னை இந்த யானையின்மேல் தரிசித்தமாத்திரத்திலேயே எல்லா காரியமும் சித்தியடையும். கஜேந்திரனுக்கு மோஷத்தை அளித்தபோது, அந்த கஜேந்திரன் சிம்மத்தை மட்டும் உனக்கு வாகனமாக ஏற்றுக்கொள்கிறாயே, என்னையும் ஏற்கக் கூடாதா, உன்னை சுமக்கும் பாக்கியம் எனக்கு கிட்டாதா என்று வேண்டிக் கொண்டதற்கிணங்க, நீ அந்த கஜேந்திரனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதரும் எண்ணத்துடன் கல்யாணத் திருக்கோலத்தில், சத்யபாமாவுடன் தரிசனம் தருகின்றாயே! என்ன அழகு! கொள்ளையழகு!.

*18. கோரதம்*

மூன்று வளைவுகளை கொண்டு செண்டு ஆயுதமேந்தி (ருக்மணி, சத்யபாமா ஆகிய இருவருக்கு இரண்டு வளைவுகளும், செங்கமலத்தாயாருக்கு ஒன்றும் ஆக மூன்று) தாமரைப் போன்ற நிறமுடைய பாமா ஒரு பக்கமும், விதர்பநாட்டுப் பெண்ணான ருக்மணியை மறுபக்கமும் கூடவே அழைத்துக்கொண்டு (செங்கமலத்தாயாருடன் கூடிய) இந்த செம்பக மன்னன் எங்களுக்கு லஷ்மி கிருபையை அளிக்கட்டும்.

*19. வெண்ணத்தாழி*

மாயையினால் இந்த யுகத்திலும், பக்தர்களின் மனநிறைவிற்காக ஒரு குழந்தையாக, தவழும் குழந்தையாக, ஆயிரமாயிரம் மன்மத அழகு மிளிர, கஸ்தூரி திலகத்துடன், வெண்ணை நிறைந்த குடத்தை ஒரு கையால் அணைத்தபடியே, மறுகையால் பக்தர்கள் உன்னை வெண்ணையால் அன்புடன் அடிக்கும்பொழுதெல்லாம். பொறுத்தருளி, அவர்களை அன்புடன் கருணை பொங்க பார்க்கவே அடிக்கடி உன் தளிர் கரங்களால் முகத்தை வழித்து விட்டுக் கொள்கிறாயோ! உன் இந்த மாயையை நினைத்து நினைத்து உன்னையே வழிபடுகிறேன்.

*20. குதிரை வாகனம்*

ஜனன மரணத்தையுடைய என்னை இப்பிறவியிலேயே நல்ல கதியை காண்பிக்க, குதிரையேற்றத்தில் தூரனான நீ, சாரதியின்றி அங்குமிங்கும் ஓடிஓடி பக்தர்களுடைய மனதுடன் என்னையும் கவர்ந்து உன்னுடைய நீருண்டமேகம் போன்ற நிறத்துடன் அடிக்கடி கருமை மேகத்தில் ஒளிந்து ஒளிந்து வெளிப்படும் பூரண நிலவாக காட்சி தருகிறாயோ! உன்னுடைய இந்த அலங்காரம் எங்கள் எல்லோருடைய கண்களையும் கவர்ந்து இழுக்கின்றது.

*21. திருத்தேர்*

தேவி, பூதேவி, சமேதராக, (இங்கு ஹேமாப்ஜ நாயகி, ரக்தாப்ஜ நாயகி) திருத்தேருக்கு எழுந்தருளும் பெருமாளே, எங்களின் எட்டாத உயிரத்திலிருந்து கீழே உன் பார்வையை தவழவிடுகிறாய். அதனால் உன் பார்வை படாதவர்கள் உறுதியாக இருக்கமுடியாது. உன்னுடைய அந்த பார்வை எங்களை பாபங்களிலிருந்து விடுவிக்கிறது. தாயார்களின் பார்வை எங்களை சர்வ சம்பன்னனாக ஆக்கிவிடுகிறது.

ஆஹா இன்னொரு ரகசியம் இங்கே உன் தேர் வடத்தை இன்னார்தான் இழுக்கவேண்டும் என்று ஒரு தீர்மானமும் இல்லையை? தேருடன் வரும் உன் கொள்ளையழகில் நாங்கள் மெய்மறந்து போகிறோம். நீயும் உபய நாச்சியார்களுடன் இருப்பதால், புன்னகை மாறாத முகத்துடன் எங்களை காத்துநிற்கிறாய்

22. இந்த தேர் அண்டமாக என் கண்முன்னே நிற்கிறது. பிரளயத்துக்குமுன் அண்டசராசரங்கள் அழிந்தபிறகு, நீயும், உன்னுள் என்னையே பாவிக்கின்ற நானும், நாமிருவரும் நிற்பதை போன்ற ஒரு உணர்வு எனக்கு வருகிறது. பகவானே, இவ்வுலகு பொய் பிரம்மமே மாறாத சத்யம் நீ தத்துவமாக இருக்கிறாய். என்னை நான் உன்னுள் பார்க்கிறேன். உன்னையே நானாக பாவிக்கிறேன். (நடுவில் அகலமான தேரின் நிலையை மேருவாக, அண்டமாக பார்த்து மகிழ்ந்துவிடுகிறார். இந்த மஹான்)

23. பகவானே! வால்மீகி போன்ற கவிச்ரேஷ்டர்களால் மட்டும் வர்ணிக்க முடிந்த உன்னையும் உன் புவனசௌந்தர்யத்தையும், நான் எப்படி வர்ணிப்பேன்? நான் உயிரற்ற ஒரு வீணை போன்றவன். மீட்டப்படாத வீணைக்கு நாதமில்லை. இதில் நீதான் நாதத்தை மீட்டவேண்டும்? என்னுள் நீ இருக்கிறாய். உன்னை துதிக்க நீதான் நாவாக வரவேண்டும். உன்னால் நான் சக்தியை பெறுகிறேன். உன்னை துதிக்கும் இப்பாடல்களில் ஏதேனும் குற்றமிருப்பின் அது என் குற்றமல்ல.

24. ஸ்ரீமத் அப்பய்யதீஷதர் பரம்பரையில் வந்த தியாகராஜமகி என்கிற நான் உன்னுடைய பிரம்மோத்சவத்தை என்னால் இயன்றவரை பாடியிருக்கிறேன். எல்லோரும் இதனை படித்து பக்தி பரவசமடையட்டும்.

# மன்னார் மோகனப் பள்ளு

தஞ்சாவூர் அரண்மனை சுவடி நூலகத்தில் தஞ்சை நாயக்க மன்னர் விஜயராகவ நாயக்கரால் சேர்க்கப்பெற்ற நூல்களுள் ஒன்றே மன்னார் மோகனப்பள்ளு எனும் தமிழ்ச் சுவடியாகும். சிற்றிலக்கிய வகைப் பாட்டுள் அடங்கும் இந்நூல் இரண்டு காப்புச் செய்யுள்களோடு தொடங்கி பதினோரு பாடல்களைக்கொண்டதாக விளங்குகிறது. இந்நூல் மன்னார்குடி இராஜகோபாலப் பெருமாளான மன்னார் பெயரில் பள்ளு இலக்கியமாகத் திகழ்கின்றது. தொல்காப்பியம் குறிப்பிடும் இலக்கண அமைதிக்கேற்ப, சிலம்பில் காணும் விருந்திற்பாணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு, முதலிய உழவுப் பாடல்களை ஒத்தும், ஆடும்பள்ளி, அழகுடையபள்ளி போன்ற வரிக்கூத்துக்களைத் தழுவியும் அமைந்துள்ளது இச்சிற்றிலக்கியம்.

செங்கமலவல்லித் தாயாருக்கும், கிழக்கு கோபுரத்து அனுமனுக்கும் காப்புச் செய்யுள் பாடி துவங்கும் இவ்விலக்கியம் மன்னனார் பெருமையை உழுகுடி மக்களின் வாயிலாகக்காட்டுகின்றது. நிறைவுப் பாட்டில் பாராளும் விஜயராகவ பூபனாகிய விஜயராகவ நாயக்கரின் புகழுரைக்கப்பெறுகின்றது.

*காப்பு*

*புத்தியும் புத்திக் கேற்ற பொறுமையும் உதவிப் பின்னும்*
*முத்தியும் தரும்மன் னார்மேல் மோகனப் பள்ளுப்பாட*
*எத்திசை தனிலும் அன்பர் ஏதுரைத் தாலுங் கேட்டுச்*
*சித்தமே மகிழ்வார் ராசைச்செங்கமலத்தாய் காப்பாம்.* (1)

*கூடிய அளையுன் டாய்ச்சி*
*கோல்கொடு அதட்ட வாயை*
*மூடிய மன்னார் பேரில்*
*மோகனப் பள்ளுப் பாட*
*தூடிய வெற்றி மாலை*
*துலங்கிடக் கீழை வாயில்*
*தேடியாங் கமர்ந்த ராசை*
*திகழ்அனு மந்தன் காப்பாம்* (2)

*நூல்*

*பூவிற் சிறந்திடு லட்சுமிமார்பர் இந்தப்*
*புவனம் பதினான் களந்தவர்*
*பூமிபா ரத்தினைத் தீர்த்தவர் அன்பு*
*புரிந்திடு மைந்தனைக் காத்தவர்*

*சேவிக்க வாழ்வுகொ டுத்தவர் வாணன்*
*சிரம்விழ வாளி தொடுத்தவர்*
*தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்*
*சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே*

*தாவிப் படர்முகில் கார்க்கடல்நீர் தன்னைத்*
....... ....... .........
.......... .......... .........
....... ....... .........

*மேவிப் பரந்திடும் காவேரி தந்த*
*வெள்ளப் பெருக்கில் திருக்கையை*
.......... .......... .........
*.......... பாரடி பள்ளீரே* (1)

*அலைகட லின்கண் வளர்ந்தவர் மத்தால்*
*ஆய்ச்சியர் தட்டத் தளர்ந்தவர்*
*ஆவின் பிறகே திரிந்தவர் அய்வர்*
*ஏவவே தூது புரிந்தவர்*

*சிலைக்கையன் மதனன்அ யனையும் பெற்ற*
*செங்கமல வல்லி நாயகர்*

தெட்சினத் வாரகை பட்சம்வைத்த மன்னர்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

பொலிமுக்கி மட்டையொரு கொம்பன்
பொங்கு சினத்தான் வயலதல விதங்க
பொலிப்பில் அடங்கி மயிலைக் கறுப்பன்
கொம்பனுழவுக் கிளையன்

விலைக்கடங் காத முன்னே ரழகன்
வேடிக்கைப் பனங்காய் கறுப்பனும்
மிகுத்தமா டெல்லாம் மகிழ்ந்துதான் பள்ளன்
உகந்து முக்கின்ற பள்ளீரே. (2)

எண்டா ரணியும் அளந்தவர் புவியீர்
ஏழும் உருவ வளர்ந்தவர்
இலங்கா புரியை யழித்தவர் வந்த
இரணியன் மார்பைக் கிழித்தவர்

திண்டோள் கரவா யழகர் தனிச்
சீலை யழகர் திருவழகர்
தெட்சணத் வாரகை பட்சம் வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

உண்டால் மணக்குஞ் சம்பாக் கறுப்பன்
ஒழுகு புழுகு சம்பானும்
ஓதரிய காடைக்கழுத்தன்கல் லுண்டை
ஒப்பரிய திங்கள் பாலியும்

வண்டாருங் குறுவைக் குரைமணக் கத்தை
வார பாசனமும் வளத்துடனே
வகைவிறை யெல்லாம் பள்ளன் தெளித்து
வளர்க்கி றானடி பள்ளீரே.

சந்ததம் வேயூதும் வாயினார் ஐவர்
(தமக்கா) னசகா யனார்
தாதுசேர் கமலக் கண்ணனார் நித்தம்
தழைத்த காயாம்பூ வண்ணனார்.

செந்திருவந் துறைநந்தர் முகுந்தர்
(செல்வ) வைகுந்தர் நிறைந்த
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

சுந்தரி மகனைக் கண்ணைக்காட்டி அவள்
தூங்கப்பள்ளனை வாடா யென்றாள்
(சோறி)டா வெற்றுரை சொல்லாதே நீ
(தூரப்போ)எ ன்றான்; உனக்கு

அந்தியம் பொழுதாய் நெல்லுவித்த காசு
அஞ்சாறு தாரமென் றழைத்தாள்

.......... ....... .......... .........
நழுவப் பார்க்கிறான் பள்ளீரே.

நெஞ்சிற் கருணையுள்ள வீடணன் தனக்கு
நிதம்வாழ வரம ளித்தவர்
நிட்டூரர் பாதகர் வஞ்சகர் காண
நேரில் வாரா தொளித்தவர்

செஞ்சொற் தமிழ்புனை சீதர கேசவர்
செண்டலங் காரமுகில் வண்ணனார்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

வஞ்சிக் கிளையவள் தஞ்சிநடு கைக்கே
மாமுலை ஓடிப் பிடித்தான்; அடா
வம்பா போடாவென்று இன்பமுடன்
(வனசமலரைக்) ........... கொண்டடித்தாள்;

அஞ்சிப் பயப்பட்டுக் கைகட்டி வாய்
அறியாமற் சொன்னேன் பொறுத்துக்
கோவென அடுத்ததும் ஆசை ..........
அடுத்ததும் பாரும் பள்ளீரே

பன்னூலை மீட்டு மகிழ்ந்தவர் தம்மைப்
பணியாரை விட்டு நெகிழ்ந்தவர்
பகலை யிரவாய்ச் செய்தவர் ...........
........ ........ ...........

செந்நெல் நிறைந்த வயலில்முத் தினஞ்
சிறுசங்கு தவழ் நாட்டினர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

மன்னி மகள்மெத்தப் பிலுக்கியே முலை
.......... ....... குலுக்கியே
வசந்திமகனை நெருக்குவாள் ........
........ உருக்குவாள்

என்னை ஏனடி நெருக்குறாய் என்று
இடிக்கச்சே அவள்அடிக் கச்சே
இகழ்ந்ததும் கலை நெகிழ்ந்ததும்
...............பாரீர் பள்ளீரே

வாலியை ஓர்அம்பாற் கொன்றவர் கலை
வாரிக் குருந்தேறி நின்றவர்
வடவாலிலை தனியே துயின்றவர் .........
.......... .......... ..........

சேலினங் கயிலைத் துரத்தவே நவி
வாலினஞ் செழிக்கு நாட்டினார்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

கோலி வந்திடக்குப் பெரியாள் தூலி
கொண்டை யிலேசெங்கை யப்பினாள்
குனிந்து நின்றவள் நிமிர்ந்தவள் முகம்
நிறைந்திட எடிதனுப்பினாள் சின்ன

வேலிமகள் பாலி ......... பொற்தண்டைக் காலியும்
பள்ளனைப் பிடித்துதான் சேற்றில்
மிதித்ததுஞ் தூலி குதித்ததும் சண்டைக்
கதித்ததும் பாரும் பள்ளீரே (7)

ஒளிரிரா வணனை வதைத்தவர் முன்னம்
உறுதியாச் சகடு தைத்தவர்
உகந்து பேய்முலை குடித்தவர் அன்று
ஒருத்திக்காய் வில்லை யொடித்தவர்

தெளிவுறு முந்நூல் மார்பினர் என்றும்
தேவர் புகழுந் திருவினர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

வளியிரு வருக்கிளைய வள்ளியும் ..........
வரப்படிக் கதிர் கிள்ளியும்
வாதக்கால் வழியான் மகளுமாய்க் கூடி
வன்னியடிப் பள்ளநடு கைக்கே

கிளிமொழி வள்ளிவாய் கிழியப் பெத்தான்
கெஞ்சி யளைச் சருவியே
கிட்டினதும் மெள்ளத் தட்டினதும் அச்சம்
பட்டினதும் பாரும் பள்ளிரே (8)

கொத்தார் குழிப்ப ருடனே கூடிக்
கோபால முனியாய் வந்தவன்
குலவு முனிசெய் வேள்வி நிறுத்திக்
கூறரிய வரம் ஈந்தவர்

தித்தாதா வென்று அரிபிடர் மீதிற்
சிலம்பு கொஞ்சிட ஆடுவார்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

முத்தாரந் தஞ்சிக்குச் கொடுக்கச்சே கொண்டைப்
பெத்தான் வந்து சண்டை தொடுக்கச்சே
மோகனச் சிந்துகள் படித்ததும் பள்ளன்
தாகங்கேட்கக் கள்ளைக் குதடித்தும்

மத்தாரும் வேண்டென்ன நடந்து தான்
பள்ளன் மிக்காசையாய்ப் பின்னே
தொடர்ந்து தான்தஞ்சி வந்ததையும் அங்கண்
சிவந்ததையும் பாரும் பள்ளீரே (9)

ஆனை உயிர்தனைக் காத்தவர் வெங்
கராவைத் துணித்து விண் சேர்த்தவர்
ஆயிரம் பிழையும் பொறுத்தவர் தமது
அன்பர் செய்பாவத்தை யறுத்தவர்

தேனை நெல்லுவயலுக் கிறைக்கவே மடை
தேங்கவே சோழ நாட்டினார்
தெட்சணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

தானிக் குடங்களைக் குடித்ததும் நெட்டைத்
தேனிமகன் வந்து அடித்ததும்
சற்பனை செய்யவே தொடுத்ததும் இவன்
கற்பனை யென்றுதான் விடுத்ததும்

கூன மிருவன் மகளைஇன் றந்திக்குக்
கொள்ளுவேன்அ வளைத்தள்ளு வேன்என்று
குறித்ததும் மூத்தாள் மறித்ததும் கள்ளு
வெறித்ததும் பாரும் பள்ளீரே (10)

பாராளும் விசைய ராகவ பூபனைப்
பட்சமுடன் நித்தங்காத்த வர்
பணியும்அறுகு மயனுந் தரித்த
பரன்பெறுஞ் சாபந் தீர்த்தவர்

தீராத வல்வினை தீர்த்தவர் துரோபதை
செந்துகில் போகாமல் காத்தவர்
தெட்சிணத் வாரகை பட்சம்வைத்த மன்னார்
சித்தம்மெச்சும் பண்ணை வயலுளே

மேராமுலை முற்றுரெங்கிக் காசைகொண்டு மூளி
வெங்கிதனைச் சந்து விடுத்தான்
வெள்ளையன் தங்கச்சி பெற்றியைத் தன்மனம்
வேண்டாமல் துரும்புகொடுத் தான் புவி

கேறாத தோவிது நடவெல்லாம் நட்டு
இருவி வீட்டினில் இருக்கச்சே
எட்டி னதும் மெள்ளக் கிட்டினதும் தாலி
கட்டினதும் பாரும் பள்ளீரே (11)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீகோபால விம்சதி

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ!
வேதாந் தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி!!

தமிழாக்கம் : சக்தி சரவணன்

பொருந்தும் ஜயந்தி நன்னாளில் புவியின்மீதே அவதரித்துத்
திருந்தும் அழகார் வைஜயந்தி சிறக்கும் வண்ணம் அணிந்துகொண்டு
வருந்த ஆயர் மடாநல்லார் மனத்தைக் கவர்ந்து விளையாடிப்
பிருந்தா வனத்தே சஞ்சரிக்கும் பிழம்புச் சோதி கண்டேனே! 1

ஏய எழுத்தார் முக்கோணம் இலங்கும் கமலத் தெழுந்தருளி
வாயம் புயத்தே பாஞ்சசன்யம் வைத்துக் கொண்டு தன்னுடைய
தூயக டிமேல் வந்தமர்ந்தே சுவைக்கும் வாணி தனைநோக்கி
ஆயர் குலத்தோர் பேரரசன் அம்மா சிறந்து விளங்குகிறான்! 2

வாயில் நொடிக்கு நொடிமுறுவல் வந்து தோன்ற அழுகையினால்
தூய வேத மணம்வீசும் உதடுதுடிக்கக் கண்கலங்கி
மாயத் தாயின் பாலோடு வாங்கி உயிரும் பருகியவன்
ஆயர் குழவி உருவானோன் அவனே பரன்என் றறிந்தேனே! 3

பெருகக் கடையும் தயிரரவம் பிறழாத் தாள ஒலியாக
ஒருகால் மடங்க மற்றொருகால் ஊன்றி நிற்க அணிகுலுங்கத்
திருவின் கேள்வன் நந்தனது செல்வ மனையில் வெண்ணெய்க்காய்
உருகி ஆடும் திருக்கூத்திங் குற்றென் கண்முன் தோன்றுகவே! 4

குடத்தில் உள்ள நறுவெண்ணெய் கொள்ளக் கையை நுழைத்தவனாய்
எடுத்த சினத்தின் தாய்தாம்பை எடுக்க விரையும் நிலைகண்டு
நடக்க சிறிதே அடிபெயர்த்தும் நடவான் நில்லான் கண்ணுடனே
ஒடுக்கி மூடும் பொய்யாயன் உலகு புரப்போன் நம்காப்பே! 5

ஆய மடவார் கடைக்கண்ணின் அடிக்குத் தப்பாச் செம்பொருளாய்த்
தூய மதுரைப் பெரும்பேறாய்த் துய்ப்போர்க் கமுதாய்த் தேவகியாம்
தாயின் பாலைப் பருகுவதாய்த் தன்னால் குழவிப் பருவத்திற்
கேய எழிலார் அற்புதமாய் இயங்கும் இறையைப் போற்றுவனே! 6

பெரிதோர் உரலை இழுத்தஞ்சிப் பின்னே திரும்பும் கழுத்தினனாய்
விரியும் முறுவல் மலர்ச்சியுடன் விளங்கும் அதரத் தளிரினனாய்
மருதாம் யாரோ இருவரது மரமாம் பிறவி யழித்தவனாய்
ஒருமா மாயச் சிறுவனையே ஓவா தென்றும் உன்னுவனே! 7

தெளியா தின்னும் மறைமுடியால் திகைத்துத் தேடப் படுபவனை
குளிர மருத மரங்காணக் குழவி யாடல் புரிந்தவனை
எளிதாய் யமுனைநதி சான்றாய் இளமை குறும்பு செய்தவனை
இளஞ்சிங் கத்தை என்னருகே எங்கும் என்றும் காண்பேனே! 8

வானுக்கருகார் வழியாகி வனத்தின் செல்வம் வளர்ச்சி பெறற்
கான முகிலைப் பெறசெய்து அழகார் செவ்வாய்ச் சுவைவிரும்பும்
கானக் குழலைக் கைக்கொண்டு கருதும் உலக காரணமாய்
மானி டத்தின் உருக்கொண்டே மங்கா அருளைத் தொழுவேனே! 9

விழிகள் இமையைக் கொட்டாமல் விரும்பித் துய்க்கத் தக்கப்படி
அழிவில் லாத இளமையதாய் அழகார் தோகை யுடன்முரணும்
எழில்மைக் குழலின் கற்றையுடன் இலங்கும் காணம் மாலாக்கும்
ஒழிவில் லாடல் ஒளிவடிவம் உற்றென் உளத்தே தோன்றுகவே! 10

இனிய குழலின் ஓசையுடன் இயைந்து தொடர்ந்து வருவனவாய்
மனமே மகிழும் ஆய்மகளிர் மயக்கம் அடையப் புரிவனவாய்க்
கனிவாய்ச் சிரிப்பால் குளிர்ந்துள்ள கருணை நதியின் மலர்கமலம்
அனைய கடைக்கண் பார்வையால் அவனே என்னைக் காப்பானே 11

கோலச் செவ்வாய் தன்னிடையே குளிர்வேய்ங் குழலைக் கொண்டதுமாய்ப்
பீலி மாலைத் திருமுடியில் பிறந்து சாயப் பெற்றதுமாய்
நீலமணியின் ஒலியினையே நிகர்த்த தோற்றம் என்னிறுதிக்
காலந் தன்னில் தவறாதென் கண்ணில் தோன்ற வேண்டுவனே 12

திருமா மகட்கே உரித்தாகும் திருமார் புடையோன் பேரழகை
அருமை பொருந்தும் ஆய்மகளிர் ஆசைக் கிலக்காம் பெருவனப்பை
பெருக வாயால் வருணித்துப் பேசற்கரிதாம் பேரெழிலை
உருவார் இளமைக் கோலத்தை உவந்தெப் போதும் காண்கின்றேன். 13

வளைவுற் றசையும் வனப்புடைய மயிலின் பீலி அணிந்தவனாய்!
உளையும் காதல் நோய் முதிர்ந்தே உருகும் ஆயச் சிறுமியரின்
ஒளிரும் வதனத் தாமரைகட்கு வக்கும் கதிரோன் ஆகியவவ்
விளைஞன் உருவை என்னுளத்தே எந்தச் சிற்பி வரைந்தானோ! 14

எங்கும் போற்றப் பெற்றதுமாய் இறுகும் மைபோல் நிறமுடைத்தாய்
திங்கள் முகமும் சேயிழையும் சேரக் கொண்ட ஆய்மகளிர்
செங்கை வளையோ டுரையாடும் சீரார் இனிய குழலுடைத்தாய்ப்
பொங்கும் ஒளியைத் தலையுடன்மேல் பொருத்தும் கையால் வணங்குவனே 15

குவளைவிழி ஆயரின் மடவார் கையில் குலுங்கி நெகிழ் வளையலொலிக் குளிர்ச்சியோடே
அவர்களிடும் கைத்தாளம், லலிதமென்றும் அபிநயத்தை கற்பிக்கக் கற்றதாகி
உவகையுற உலகமெலாம் காக்க ஆயன் உருக்கொண்டு விளங்குகிற எம்மான் தன்னால்
பவளச் செவ் வாயிதழின் அமிழ்த ஊற்றில் பங்குகொளும் வேய்குழலின் சிறந்த துண்டோ! 16

ஆவலுறத் திருச்செவியில் தென்னம்பாளை அளிக்கின்ற பூவணிந்த பீலிமௌலி
மேவுகிற கருங்குழலின்கற்றை மீது விழைவுறவே செம்பருத்தி மலரைச்சூடி
ஓவியம்போல் திருமார்பில்குன்றி கோத்த ஒளிர்மாலை அணிந்துபல அணிகள் பூண்டு
கோவியரின் இளமையினைக் கவர்ந்துகொள்ளும் குறும்பனது சிறப்பெடுத்துக் கூறற்பாற்றே! 17

பழகிவிளை யாடும்பேற் றூன்று கோலைப் பசுந்தளிரை நிகர்த்தவலக் கரத்தில்பற்றி
அழகுமிகு நப்பின்னை சிலிர்க்கும்தோளை அன்புறவே இடக்கரத்தால் அணைத்துக்கொண்டு
குழலினைத்தன் மேகலையில் செருகிச் சேர்த்துக் குன்றிமணி மாலையுறும் குஞ்சியோடே
எழில்மிருந்துகார்மேக வண்ணனான இடைமகளிர் காமுகன்தான் சிறந்திட்டானே 18

நீரினிடை விளையாடக் கச்சம் கட்டி நீர்பீச்சும் குழல்கொண்டு செல்லுங்காலை
ஓரிடையர் குலமங்கை. வலக்கால் முன்வைத் துறுவதுகண் டவள்பின்சென் றிறுகப்புல்லிக்
காரிகையாள் கடைவிழியின் காதல் பார்வைக் கலவியிலே மகிழ்கின்ற கோபிநாதன்
சீரடியார் தமையுய்க்கும் மருந்தாம் கண்ணன் செய்யுமருள் நமையென்றும் காக்குமன்றோ! 19

பெருக்கெடுக்கும் யமுனையிலே திளையாநின்ற பேதையராம் கோபியரின் கூறைகொண்டு
குருக்கத்தி மென்கிளையில் அமர்ந்தோனாகிக் கூசிமிக நாணமுறும் கோபிமார்கள்
உருக்கமுற வேண்டுகையில் தலைக்குமேலே உயர்த்தியிரு கரங்கூப்ப ஆணையிட்டுத்
தருக்குறுபுன் சிரிப்புடனே எள்ளிநிற்கும் தன்னிகரில் காமுகன்தான் சிறக்கின்றானே!

வேறிங் கெதையும் நாடாத வேங்க டேச கவிபுனைந்த
மாறில் லாத இத்துதியை மனத்துள் பதித்துப் படிப்பவர்கள்
கூறும் குழலின் சுவையுணரும் குமரிக் குழுவின் மனங்கவரும்
ஈறில் லாத அற்புதமாம் இறையைக் காணப் பெறுவாரே!

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே!
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம!!



# கருட ஸ்தம்பம்

டாக்டர் இராசு பவுன்துரை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

கோயிற்தூண்களின் அமைப்பு முறைகளைக் கொண்டு அவற்றை மூன்று வகைகளில் பிரித்தறியலாம். அவை

1. *அரைத்தூண்கள்*
*(சுவரிடையே தூணின் ஒரு பகுதி மட்டும் வெளிப்படும்)*
2. *மண்டபத்தூண்கள்*
*(கட்டிடங்களைத் தாங்கி நிற்கக் கூடியவை)*
3. *தனித்து நிற்கும் தூண்கள்*
*(கோயிலின் வெளியே தனித்து நிற்கும் தூண்கள்)*

எனப்படும் அவற்றில் அரைத்தூண்கள் என்பன முழுமையாகக் காண இயலாது. இவை பெரிதும் சுவருடன் இணைந்தே கட்டப்படும் கட்டுமானப் பகுதியாகும். மண்டபத் தூண்கள் என்பவை மேற்கூரைப் பகுதியைத் தாங்கி நிற்கும் பயன்பாட்டுடைய கட்டிடப் பகுதியாகும். அலங்காரம் என்பது தூண்களில் புற வெளிப்பாட்டாகத் தோற்றமளித்தாலும் கட்டிடங்களில் மண்டபங்களில் அவை கூரைப் பகுதியைத் தாங்கி நிற்பதற்காகவே கட்டப்படுபவையாகும். மூன்றாம் வகையாகிய தனித்து நிற்கும் தூண்கள் என்பவை சுவர்பகுதியில் இணைந்து கட்டப்பட்டு உள்ளவையாகவோ அல்லது மண்டபத்தில் நிற்பவையாகவோ இல்லாதவகையாகும். ஒரு தூண் நிற்பது போன்றுள்ளதால் இதனை தனித்து நிற்கும் தூண்கள் எனப் பெயர் சூட்டப்படுகின்றது.

தனித்து நிற்கும் தூணின் கலை வரலாறு என்பது கட்டடக்கலை வரலாற்றை அறிய உதவும் மிகப் பெரிய கலை மரபாகும். பௌத்தம், சமணம், இந்து மதம் எனப் பல்வேறு மதங்களின் வழிபாட்டுத் திருத்தலங்களுடன் தனித்து நிற்கும் தூண்கள் தொடர்புடையதாக உள்ளன. இந்து மதத்தில் இவ்வகைத் தூண்கள் சிறப்பிடம் பெற்றித் திகழ்வதை பின்னிடைக் காலக்கோயிற் கட்டிடக்கலையில் காணலாம். எனவே தனித்து நிற்கும் தூண்களின் அமைவிடமும் வடிவமைப்பும் சமய, தத்துவக் கலைச் சிறப்புடன் தொடர்புடையவனவாகவே திகழ்கின்றன.

மிகத் தொன்மையான தூண் பற்றிய செய்தியாக யூபத்தூண்கள் பேசப் படுகின்றன. தூண், கால், கந்து, கம்பம், ஸ்தம்பம் எனப் பல பெயர்களில் தூண்கள் பெயரிட்டழைக்கப் பெற்றாலும், யூபத்தூண் வேதகாலத்திலும், சங்க காலத்திலும் இருந்தன என்ற செய்திகளை இலக்கியச் சான்றுகள் வெளிக்காட்டுகின்றன. பௌத்தக் கலையில் சைத்திய யூபத்தூண் பேசப்படுகின்றது. மௌரியர்களின் கோயிற்கலையில் தனித்து நிற்கும் தூண்களை தர்ம ஸ்தம்பம் என்றும் துவஜ ஸ்தம்பம் என்றும் குடைவறை கோயில்களின் முன் உள்ள தனிக் கல்லில் செதுக்கப் பெற்ற தூண் கீர்த்தி ஸ்தம்பம் என்றும் அழைக்கப் பெற்றன.

சமணக் கோயில்களில் நின்றிருக்கும் தூண்களுக்கு 'மான ஸ்தம்பம்' 'மானவகத்ஸ்தம்பம்' என்றும் பெயர். இத்தூண்களின் மேற்பகுதியில் சமணர் திருவுருவம் இடம் பெற்றிருக்கும்.

இந்து மதத்தில் குறிப்பாக வைணவத் திருக்கோயில்களின் முன் பகுதியில் உயரமான தனித்து நிற்கும் தூண்கள் கட்டப்படும் மரபு சிறப்பாக இடம் பெறுகின்றது. இத்தூண்கள் கோயிலின் நுழை வாயிலின் முன்பாக வெளிப்பிரகாரப் பகுதி அல்லது முன்புறப் பகுதியில் கட்டப்படுகின்றது. வைணவத்தில் இம்மரபு சிறப்பிடம் பெறுவது போல் பௌத்தத்திலும் 'துவஜ ஸ்தம்பம்' என்ற மரபு உண்டு.

தமிழகத்திலுள்ள வைணவத் திருக்கோயில்களின் நுழைவாயிலின் முன் பகுதியில் 'கருட ஸ்தம்பம்' கட்டப்படும் மரபு உள்ளது. இந்த ஸ்தம்பமானது விஷ்ணுவின் கருட வாகனத்திற்குரிய இடமாகும். தூனின் மேற்பகுதியில் கருட

வாகனம் இடம் பெறுவதால் 'கருட ஸ்தம்பம்' எனப் பெயரிட்டழைக்கப்படுகின்றது. தர்ம சக்கரமுடைய தூண் 'தர்ம ஸ்தம்பம்' என்றும் சமணர் வடிவம் கொண்ட தூண் 'மானஸ்தம்பம்' என்றும் அழைக்கப்பட்டது போலவே 'கருட வாகனம்' உருவமைப்பால் கருடத் தூண் என்றாயிற்று. சிலவகைத் தனித்து நிற்கும் தூண்களின் மேற் பகுதியில் திருமாலின் முத்திரைச் சின்னங்கள், ஆயுதங்கள் இடம் பெறும் கலை மரபும் உண்டு.

வைணவ மரபில் தனித்து நிற்கும் தூண்களின் வடிவமைப்பைக் கொண்டு இரண்டு வகையாகப் பிரித்துக் காணலாம். அவை தூணின் மேற் பகுதியில் முத்திரை அல்லது வாகனத்தின் வடிவம் உள்ளவை.
தூணின் மேற்பகுதியில் சிறிய மண்டபம் கட்டப்பட்டு அதில் கருடன் இடம் பெறும் கலைவடிவமைப்புடையவை எனப்படும்.

தமிழக வைணவக் கோயில்களில் இவ்விரண்டு வகைத் தூண்கள் இடம் பெறுவது என்பது தென்னிந்தியாவில் சமண சமயத்தின் 'மானஸ்தம்பம்' மரபைப் பின்பற்றியது எனக் கூற மேலும் பல சான்றுகள் தேவைப்படுகின்றன. ஏனெனில் 'மானஸ்தம்பம்' வடிவமைப்பு 'பிரமதேவத் தூணின்' ஒரு வகை எனக் கருதப்படும் இவ் இரண்டு வகை கலை வடிவமைப்பைப் போன்றே மானஸ்தம்பம் காணப்படுவதால் இவ்வகையமைப்பு முறை தென்னிந்தியக் கோயில்களுக்குப் பொதுவான மரபு எனக் கருதலாமா? எனற வினாவும் எழுகின்றது. ஆனால் தென்னிந்தியாவில் கர்நாடகப் பகுதிகளில் சமணக் கோயில்களில்தான் மானஸ்தம்பம் சிறப்பாக இடம் பெறுகின்றது. தமிழகத்தில் வைணவக் கோயில்களில் 'கருட ஸ்தம்பம்' சிறப்பிடம் பெறுகின்றது.

துவஜஸ்தம்பம் அல்லது கொடிமரம், தீபத்தூண் வடிவமைப்பு முறையுடன் கருடத் தூணை ஒப்பிட்டுக் கூறமுடியுமா? இவை அனைத்தும் ஒன்றா? எனும் கேள்வி எழுகின்றது. தீபத்தூனின் வடிவமைப்பு,பயன்பாடு இவ்விரண்டிலிருந்தும் வேறுபடுகின்றது. துவஜஸ்தம்பம், கருட ஸ்தம்பம் ஆகிய இரண்டும் வழிபாட்டிலும் கோயிற் கட்டிடக்கலை வரலாற்றிலும் தொடர்ச்சியான மரபைப் பெற்றுத் திகழ்கின்றன. ஆனால் கொடிமரமாகிய துவஜஸ்தம்பம் பல்லவர், முற்காலச் சோழர் கோயிற் கட்டிடக் கலைப் பாணியில் இடம் பெறவில்லை. இருப்பினும் மிகத் தொன்மையான கல்வெட்டுச் செய்தி ஒன்று மேலப்பழுவூர் சிவன் கோயிலில் கிடைக்கின்றது. "ஸ்வஸ்திஸ்ரீ அடிகள் பழுவேட்டரையர் கைக்கோளன் மாதேவன் இரணமுகராமர், எடுப்பித்த த்வஜ பீடம்" எனும் கல்வெட்டாகும். இதில் தூண் அமைக்கப் பெற்ற செய்தி இல்லை. ஆனால், பீடம் அமைக்கப் பெற்ற செய்தியே கிடைக்கப் பெறுகின்றது. கொடும்பாளூரிலுள்ள துவராபீடத்தின் மையத்தில் துளை ஒன்றுள்ளமையால் இதன் மீது மரத்தாலான தூண் நிறுத்தப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதலாம்.

கருடத் தூண் அமைக்கும் மரபு நாயக்கர்களின் காலத்தில்தான் பெரிதும் இடம் பெறுகின்றது. தமிழக வைணவத் திருத்தலங்களில் மன்னார்குடி இராசகோபாலசுவாமி கோயில், ஸ்ரீ முஷ்ணம் பெருமாள் திருக்கோயில் ஆகிய இரண்டு இடங்களிலும் உள்ள கருடத் தூண்கள் கலைத்திறன் மிக்கவை.

இராசகோபலசுவாமி கோயில் கருடத்தூண் 54 அடி உயரத்துடன் மேற்பகுதியில் மண்டபத்துடன் உயர்ந்து நிற்கும் தூணாகும். இத்தூணின் அடிப்பகுதி சதுரமாகவும் சதுரத்தில் நாகபந்தம் கலை வடிவமைப்பும் உள்ளது. சதுரமாகிய கால் பகுதிக்கு மேலே பதினாறு கோணங்களையுடைய தூண் பாகம் சிறிது சிறிதாகக் குறைந்து செல்லும் அளவுடைய தூணாக அமைகின்றன. போதிகையாவது மலரிடை கலசம், மலர்பந்தம், பாலி, பலகை, மாடம் என்றழைக்கின்றன. பலகையின் நான்கு பகுதிகளிலும் நான்கு மணிகள் உள்ளன. பலகையின் மேல் அமைந்துள்ள மாடமாகிய மண்டபத்திற்கு நான்குபுறமும் வாயில்கள் இடம் பெறுகின்றன. இம்மாடத்தின் (மண்டபத்தில்) கருடன் இடம் பெறுகின்றது. வாகனங்களை தூனின் மீது வைக்கும் மரபு இந்தியக் கலைப் பாணியில் சிறப்பிடம் பெறுவது போல் வைணவ கருடன் தூண்களும் இச்சிறப்பிற்குரிய தொடர்ச்சியைப் பெற்றுத் திகழ்வதாகக் கருதலாம். தூணின் கீழ்ப் பகுதியில் அச்சுதப்ப நாயக்கரின் திருவுருவமும், அவரது துணைவியர் மூர்த்தியம்மாள் சிற்பமும் அமைத்துள்ளனர். இதனை தஞ்சை நாயக்கர் காலக் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறலாம். சோழ மண்டலத்தில் காணப்படும் கருடத்தூண்களில் மற்றொன்று திருச்சி மலைக்கோட்டைக் கோயிலுக்கு அருகேயுள்ள பெரிய கடைவீதியில் அமைந்துள்ள தூணாகும். தனித்து நிற்கும் வகையைச் சார்ந்த இத்தூணின் கால் பகுதி வரை ஒரு கல்லாலும் போதிகையும் கருடனும் வேறு ஒருவகைக் கல்லாலும் வடிவமைக்கப் பெற்றுள்ளது. 12 அடி உயரமுடைய இத்தூணின் கீழ்ப்பகுதியில் மலரிடையும் அதன் பிறகு வட்ட வடிவக் கலசமும் அமைந்துள்ளன. இத்தூண் வரதராசப் பெருமான் கோயிலிற் குரியதாகும். ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள கருடத்தூணும் மன்னார்குடி கருடத்தூண் போலவே வடிவமைப்பில் சிறந்தும் அழகிய மண்டபத்தைத் தாங்கியும் அதன் அகத்தே கருட வாகனத்தைப் பெற்றும் திகழ்கின்றது. இத்தகைய சிறப்புடைய பல கருடத் தூண்கள் வைணவத் திருத்தலங்களில் தனித்து தனித்தன்மையுடன் கலைப் பெட்டகமாகவும் நிற்கின்றன. அவை இந்தியக் கோயிற் கட்டிடக் கலையின் தொடர்ச்சியான மரபைப் பெற்றுத் திகழ்கின்றன என்பது சிறப்புடையதாகும்.

# எழில் சிந்தும் எம் நகர்

து.ப. நடனம்,
பத்திரிக்கையாளர், மன்னார்குடி

தெய்வீகப் பேரொளியைச்சிந்தி எழில் சிறந்திலங்கும் நகரம் நம் மன்னார்குடி.

ஆநிரை காப்பான் விரும்பி விளையாடும் விண்ணகர்க் கோயில்களும், பிறையணிந்த பெம்மான் பீடு நிறை ஆலயங்களும், மடாலயங்களும், சத்திரங்களும், சார்ந்துள்ள நகரம், வைணவமும் சைவமும் வளர்த்த பெரு நகரம். ஜைனமும், கிறித்துவமும், இல்லாமும் இணைந்த நகரம்.

பெசண்ட் அம்மையார் தந்த பிரம்மஞானசபையும், வள்ளலார் பெயரில் வளரும் திருச்சபைகளும் யாவும் இங்கு உண்டு. எதிலும் குறைவில்லை.

மன்னார்குடி நகரம் 11.55 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உடையது. 190 தெருக்கள் உள்ளன. 57,200 மக்கள் தொகையும் கொண்ட நகரம்.

இச்சிறப்புமிக்க நகரத்தைப் புகழ்மிக்க நகர நிர்மாண நிபுணர் சர் பிரடரிக் ஜெட்டிஸ் பல ஆண்டுகளுக்கு முன் இந்நகரத்திற்கு வருகைதந்து, 'நம் மாநிலத்திலேயே மிகவும் அழகாக நிர்மாணிக்கப்பட்ட நகரங்களில் மன்னார்குடியும் ஒன்று' என்று புகழ்ந்து கூறியுள்ளார்.

'மண்ணில் மிக்கது மன்னார்குடி', 'மன்னார்குடி மதிலழகு', 'கோயில் பாதி; குளம் பாதி', என்பதோடு 'செண்பகாரண்ய ஷேத்திரம்', 'வண்டுவராபதி', 'ராஜாதிராஜ சதுர்வேதமங்கலம்', 'குலோத்துங்கச் சோழ விண்ணகரம்' என்றெல்லாம் நம் நகருக்குச் சிறப்பு பெயர்களும் உண்டு.

'தெற்கு துவாரகை' எனப்படும் நம் நகரத்தில் அருள்மிகு ராஜகோபாலசாமி திருக்கோயிலை முதல் குலோத்துங்க சோழன் கி.பி. 1070 1120 க்குள் அமைத்தார். பின்னர் வந்த தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் வம்சத்தினர் கோயிலை விரிவுபடுத்திக் கட்டினார்கள். கோபுரத்தின் முன் அமைந்துள்ள 'கருடகம்பம்' ஊருக்கே எழில்கூட்டுகிறது. ராஜாக்கள் கோபாலனுக்குக் கோயிலைக் கட்டியதால், 'மன்னார்கோயில்' என்றும், கோயிலைச் சுற்றிக் குடிகள் ஏற்பட்டதால் 'மன்னார்குடி' என்றும், கல்வெட்டுக்களில் 'ராஜாதிராஜ சதுர்வேதமங்கலம்' என்றும், இங்குள்ள ஸ்தலவிருட்சம் செண்பகப் பூவிலுள்ள மதுவை வண்டுகள் வந்து அருந்தாததால, 'வண்டுவராபதி' என்றும், சோழன் திருக்கோயிலை அமைத்ததால் 'சோழவிண்ணகரம்' என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

மன்னார்குடியில் 64 குளங்கள் உள்ளன. இவற்றில் புனித நீர் நிலைகளாகக் கருதப்படுவது 10. 'அரித்திராநதி', 'திருப்பாற்கடல்', 'துர்வாசதீர்த்தம்', 'அக்கினிகுண்டதீர்த்தம்', 'ருக்மணிதீர்த்தம்', 'சக்கரதீர்த்தம்', 'பாமணி ஆறு' இவற்றில் நீராடுவதால் ஏற்படும் பலன்கள் பற்றி விரிவாக வரலாற்றில் குறிப்படப்பட்டுள்ளது.

தெப்பக்குளம் எனப்படும் அரித்திராநதிக்குளத்தை 'நதி' எனக் கூறுவது இது. 'காவிரியின் மகள் என்பதால் 1000 கோபியர்கள் குளித்ததால் குளத்து நீர் மஞ்சளாகி 'அரித்திராநதி' (அரித்திரா மஞ்சள்) ஆகியது. இது 23 ஏக்கர் பரப்புள்ள தமிழகத்தின் பெரிய நீர்நிலையாகும். 1158 அடி நீளமும், 847 1/4 அடி அகலமும் உள்ளது. 66 கோடி புண்ய தீர்த்தங்களைச் சேர்ந்தது என்பார்கள்.

கலியுகத்தின் தொடக்கத்தில் உருவான இத் திருக்கோயிலில் 16 கோபுரங்கள் 7 பிரகாரங்கள் உள்ளன. இதன் கடைசி குடமுழுக்கு 9.9.1959இல் நடைபெற்றது. அதன்பிறகு 5.7.1981ல் கோயில் நிர்வாகிகளும், பொதுமக்களும் இணைந்த திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது. 12.5.1987 இல் அரிமா சங்கப் பிரமுகர் திரு. ஆர். எஸ். கோபாலன், தலைமையில் மீண்டும் ஒரு திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது.

திருக்கோயில் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இக்கோயிலுக்குத் தமிழக அரசு ரூ. 10,00,000 நிதியுதவி அளித்துள்ளது. கோயில் நிர்வாகமே மதில் சுவர்களைப் புதுப்பித்து, கோபுரம், விமானங்கள், உளவாரப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அரசு உதவி 1 லட்சம், மக்கள் நன்கொடை 80,000 வட்டி உள்பட ரூ. 2 1/4 லட்சத்துக்கு மேல் சேமிப்பு நிதியில் சேர்ந்தது.

*திருக்கோயில்*

சுவாமி மூலவர் வாசுதேவபெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சியளிக்கிறார். உற்சவர் ஸ்ரீவித்யா ராஜகோபாலன் ருக்மணி, சத்ய பாமாவுடன் உள்ளார். தாயார் மூலவர் ஸ்ரீசெண்பகலட்சுமி.

*திருவிழாக்கள்*

சித்திரை கோடை விழா 10 நாட்கள். வைகாசி வசந்த விழா 10 நாட்கள். ஆனியில் தெப்பத்திருவிழா 10 நாட்கள். ஆடியில் ஆடிப்பூர விழா 10 நாட்கள். ஆவணியில் பனித்திருவிழா 10 நாட்கள். புரட்டாசி நவராத்திரி விழா 10 நாட்கள். ஐப்பசியில் கோலாட்டத்திருவிழா 10 நாட்கள். கார்த்திகை தீபத் திருவிழா ஒரு நாள். மார்கழியில் திருவாய்மொழித் திருநாள் 10 நாட்கள். தைமாதம் தாயார் ஊஞ்சல் விழா. மாசியில் பெருமாள் ஊஞ்சல்விழா. பங்குனி மாதம் 18 நாள் பெரிய திருவிழாக்கள்! விடையாற்றி 12 நாட்கள். இவ்வாறு மாதத்தின் நாட்கள்தோறும் திருவிழாக்கள் உண்டு.

பங்குனி மாதச் சிறப்புத் திருவிழாக்களில், 'கோவிர்தனகிரி' 'கண்டபேரண்டபட்சி, சூர்யபிரபை, இவெள்ளி சேஷ வாகனம், தங்க கருடசேவை, அனுமந்த வாகனம், கோரதம், வெண்ணெய்தாழி, தங்கக்குதிரை வாகனம், திருத்தேர் முதலியன சிறப்பானவை. இந்த நாட்களில் திரளாக மக்கள் வந்து தரிசனம் செய்வார்கள்.

வெண்ணெய்த்தாழியன்று காலை கண்ணன் தவழ்ந்த நிலையில், வெள்ளிக்குடமேந்தி பல்லக்கில் வரும்போது, பக்தர்கள் வெண்ணெயால் குடத்தை நிரப்பி, கண்ணன் திருமேனி முழுவதும் வெண்ணெயால் அர்ச்சித்து மகிழ்வார்கள். இரவு தங்கக்குதிரை வாகனத்தில் ராஜ அலங்காரத்துடன் சுவாமி பவனி வருவதைத் திரளான மக்கள் கண்டு களித்து மகிழ்வார்கள்.

இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்ற இத்திருக்கோயிலில் தமிழக அரசு நந்தவனத் திட்டத்தைத் துவக்கியுள்ளது.

*திருக்கோயில் நந்தவனத் திட்டம்*

திருக்கோயில்களில் நந்தவனம் அமைக்கும் திட்டம் தமிழ்நாடு சட்டப் பேரவையில் 21.4.92 இல் மாண்புமிகு தமிழக முதல்வரின் உத்திரவின்படி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய திட்டங்களில் ஒன்றாகும்.

இத்திட்டத்தினை 1992-93 ஆம் ஆண்டில் செயல்படுத்த 21 கோயில்கள் முதல் கட்டமாக தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் நந்தவனம் அமைக்கும் திட்டம் செயல்படுத்த மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி கோயில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

கோயிலின் வரைபடம், நந்தவனம், அமையவிருக்கும் பகுதிகளில் பற்றிய தகவல்கள் மற்றும் திட்ட மதிப்பீடுகள் ஆடுதுறை தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் மன்னார்குடி உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) ஆகியோரால் தயாரிக்கப்பட்டு 12.11.92 அன்று தமிழ்நாடு அரசுக்க அனுப்பப்பட்டது. இத்தகவல்கள் அடிப்படையில் மன்னார்குடி ராஜகோபாலசாமி திருக்கோயிலில் நந்தவனம் அமைக்க முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். சாவர்க்கர் தலைமையில் மாவட்டக்குழு அமைக்கப்பட்டு, இதன் முதல் கூட்டம் 17.9.93 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்றது. அன்று மாலை மாவட்ட ஆட்சித்தலைவர், கோவிலில் நந்தவனம் அமையவுள்ள பகுதிகளைப் பார்வையிட்டு 20.9.93 முதல் பணிகளைத் துவக்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

பல ஆண்டுகளாகப் பராமரிப்பு இல்லாமல் இருந்ததில் நந்தவனம் இருந்த பகுதியில் முட்புதர்களும், செடிகொடிகளும் அதிகம் இருந்தது. இவற்றைத் தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, மன்னார்குடி நகராட்சி, வருவாய்த்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை போன்ற அரசுத் துறைகள் மற்றும் பொது நிறுவனங்கள், பள்ளி மாணவர்கள் துணையுடன் சுத்தம் செய்து வருகிறார்கள். நீர்ப்பாசன வசதிக்காக தனிக்குழு அமைக்கப்பட்டு, இதன் தலைவராக திரு. ஆர்.எஸ்.கோபாலனும், கன்வீனராக மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு.சீனிவாசனும், செயலாளராக அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கா. பிச்சைக்கண்ணுவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் பொதுமக்களிடமிருந்து நன்கொடை மூலம் போர்வெல் போடும் பணியை மேற்கொண்டு செய்தனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கோயிலின் அன்றாட பூஜைக்குத் தேவையான மலர்கள் மற்றும் பழங்கலை நந்தவனத்திலிருந்து உற்பத்தி செய்யவேண்டும் என்பதாகும். மேலும் பழ மரங்களை அதிக அளவு நடவு செய்வதன்மூலம் கோயிலின் வருவாயையும் அதிகரிக்கலாம். அரசின் இச்சீரிய குறிக்கோள் நிறைவேறும் வகையில் தற்போது இக்கோயிலில் முதல் கட்டமாக 1 ஏக்கர் அளவில் நந்தவனம் சுத்தம் செய்யப்பட்டு, அதில 1/2 ஏக்கர் அளவில் மலர்ச்செடிகளும், 1/2 ஏக்கர் அளவில் பழச்செடிகளும் நடவு செய்வதென முடிவு செய்யப்பட்டது. இதற்கான அனைத்துப் பணிகளும் தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளது.

ஏற்கனவே நந்தவனத்தில் பராமரிப்பின்றி இருந்த பழமரங்கள், கருந்துளசி, நன்னாரி, பெரியநங்கை, சந்தனம் போன்ற அரிய மூலிகைகளைப் பாதுகாக்கும் பொருட்டு தோட்டக்கலைத்துறை மூலம் உரிய தொழில் நுணுக்கங்கள் கையாண்டு பராமரிப்பு செய்யப்பட்டது.

மன்னார்குடிக்கு தென்பகுதியில் உள்ள பூக்கொல்லை பகுதி அந்த நாளில் கோயிலுக்குச் சொந்தமான இடமாயிருந்து கோயிலுக்கு பூக்கள் தரும் நந்தவனமாக இருந்துள்ளது. இப்போது தனியார் வசமிருக்கும் இந்த இடங்கள் மீண்டும் கோயில் நந்தவனமாகுமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கொண்டு மலர்ச்செடிகளான ரோஜா, மல்லிகை, முல்லை போன்றவைகள் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதன் துவக்கவிழா முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் சாவர்க்கார் தலைமையில் நடந்தது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு நடேசன் பால்ராஜ் துவக்கிவைத்து சிறப்பித்தார். மன்னை கோட்டாட்சியர் இரா. சீனிவாசன் எம்.ஏ., உற்ற துணை நின்று பணியாற்றினார்.


மன்னார்குடி நகரைச் சுற்றிலும் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல் பசுமையான வயல்வெளிகள்! உயரேயிருந்து பறவைப் பார்வையில் பார்த்தால், பச்சைநிற ஸ்டாம்புகள்போல, சதுரம் சதுரமாக வயல்களும், தோட்டங்களும் தெரியும். ஆனாலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இளங்கோ அடிகள் நடந்தாய் வாழி காவேரி என்றார். கால ஓட்டத்தில் காவிரி நின்றாய் வாழி! மறந்தாய் வாழி என்றானாள். காவிரியன்னையின் கருணையால் பொங்கிவரும் நீர் கிடைக்க இயலாத நிலையிலும், வேளாண்மைத் துறையின் தொலைநோக்கினாலும், புதிய உத்தியினாலும் கிடைக்கின்ற நீரை வடிய வடிய இறுத்தி விளைச்சலுக்குப் பாதகமில்லாமல், பயிரை வளர்த்து வருகிறோம். அவ்வப்போது வானமும் பொழிந்து இந்தத் 'தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்' பகுதியைக் காத்துவருகிறது.

நாம் வீட்டைக் கட்டினால் முழுதும் முடிக்காது புதுமனைப் புகும்போது ஒரு சிறு இடத்தைவிட்டு வைப்போம். அதுபோல, நமது பெரிய கோயிலைக் கட்டிய அரசர்களும், நாயக்க மன்னர்களும் கோயிலின் ஒரு மூலையில் அள்ளாது விட்டிருக்கும் மண் குன்றுகள் இன்றும் உள்ளன. அவற்றை நீக்கும் பணியில் நமது நகர்ப் பள்ளி மாணவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். ராமஜெயத்தம்மாள் ஐ.டி.ஐ. மாணவர்களும், தேசீய மேநிலைப்பள்ளி, பின்லே மேனிலைப்பள்ளி, அரசினர் கலைக்கல்லூரியிலுள்ள தேசிய மாணவர் படை நாட்டுநலத்திட்ட மாணவர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். இந்த இளம் மாணவர்களின் சேவை அர்ப்பணிப்பு உணர்வு பாராட்டுக்குரியது.

### குடமுழுக்கு விழா

இன்று 8.6.95ல் இதன் குடமுழுக்குவிழா சிறப்பாக நடைபெறுகிறது. அருளும், கொடை உள்ளமும் கொண்ட குடும்பத்தினரும், அரசும், மக்களும், கடல்கடந்து வசிக்கும் தமிழ்மக்களும் இணைந்து நேசக்கரம் நீட்டி இந்த குடமுழுக்கு விழாவை சிறப்பித்துள்ளார்கள்.

கடைசியாக 9.9.1959ல் நடைபெற்ற குடமுழுக்குப்பின் பெரிய அளவில் நடைபெறும் குடமுழுக்கு இதுவேயாகும்.



# நூறாண்டுகளுக்கு முன்பு மன்னை நகரம்

கு. சீனிவாசன், B.A; B.L; M.L.A.
மன்னார்குடி

ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரலாற்றுச் சான்றுகளான கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் மற்ற ஆவணச் சான்றுகளையும் பெற்றுப் பெருமையோடு திகழும் மன்னார்குடி நகரம் சென்ற நூற்றாண்டின் கடைப்பகுதியில் எவ்வாறு திகழந்தது என்பதைக் காண்போம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை மகாணத்தில் அடங்கியிருந்த மாவட்டங்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்து கெசட்டியர் என்ற நூல்களாக வெளியிட்டனர் F.R. ஹிமிங்வே என்ற ஆங்கிலேயர் தஞ்சை மாவட்ட கெசட்டியரைத் தொகுத்து இரண்டு பகுதிகளாக அச்சிட்டார். இவற்றுள் மன்னார்குடி நகரம் பற்றிய பல செய்திகள் கூறப்பெற்றுள்ளன. சென்னை எழும்பூரிலுள்ள தமிழக அரசின் ஆவணக் காப்பகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் அரண்மனை நூலகம் ஆகிய இடங்களில் தஞ்சை மராட்டிய அரசர்களின் மோடி ஆவணங்கள் உள்ளன. இவற்றிலும் மன்னார்குடி நகரம் பற்றிய பல செய்திகள் உள்ளன.

ஆங்கிலேயர்கள் ஆட்சி பீடம் அமர்வதற்கு முன்பாகத் தஞ்சை மராட்டியர்கள் சோழநாட்டைப் பல சுபாக்களாகப் பிரித்திருந்தனர். பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், மாயூரம், திருவாதி (திருவையாறு) என்ற ஐந்து சுபாக்களின் கீழ் தற்போதைய தஞ்சை நாகை மாவட்டங்கள் அடங்கியிருந்தன. இந்த சுபாக்கள் ஒவ்வொன்றும் சீமைகளாகவும், ஒவ்வோர் சீமையும் மகாணங்களாகவும் பிரிக்கப்பெற்றிருந்தன. ஒருசில ஊர்கள் அடங்கிய பகுதியே மகாணம் எனப்பெற்றது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பழைய தஞ்சை மாவட்டத்தை ஒன்பது தாலுக்காக்களாகப் பிரித்தனர். இதன்படி திருவாதி (திருவையாறு) கும்பகோணம், மாயவரம், பாபநாசம், திருவாரூர், நன்னிலம், கீவளூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை என்ற பகுப்பு ஏற்பட்டது. கேமல் என்ற கலெக்டர் இதனை மேலும் பிரித்து, இவற்றுடன் கொடவாசல், வலங்கிமான், குத்தாலம், சீயாழி (சீர்காழி) பேரளம், திருத்துறைபூண்டி என்று ஆறு தாலுக்காக்களாக அமைத்தார். எனவே மன்னார்குடி ஆரம்பத்தில் சுபா என்ற அமைப்பிலும் பின்னர் தாலுக்காவாகவும் திகழ்ந்தது என்பது அறிய முடிகிறது.

மன்னார்குடியில் 1900 இல் 20,449 பேர் மக்கட்தொகையாகக் கணக்கிடப் பெற்றிருந்தனர். இவர்களில் 651 முஸ்லீம்களும், 540 கிருத்துவர்களும் 153 சமணசயத்தவரும் அடங்குவர். தஞ்சை மராட்டியர்களின் அரண்மனைக்குத் தேவைப்படும் காகிதம் முழுவதும் மன்னார்குடி காதிப்பட்டரைத் தெருவிலிருந்து தான் சென்றதாகப் பல ஆவணங்கள் குறிக்கின்றன. 250 ஆண்டுகளுக்கு முற்பட்ட மன்னை நகரத்து காகிதங்கள் இன்றும் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் ஏட்டுச் சுவடிகளாகத் திகழ்வதைக் காணலாம். இவை மிகநேர்த்தியாகவும், உயரிய தன்மை உடையதாகவும் விளங்குவதால். இத் தயாரிப்பின் தொழில் நுட்பம் பற்றி மேலை நாட்டவர் பலர் வியக்கின்றனர்.


மன்னை நகருக்கு பெருமை சேர்த்த நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கது. பின்ட்லே காலேஜ் ஆகும். 1845 இல் வெஸ்லியன் மிஷினின் ஆக்கத்தால் பள்ளியாக (Lower Secondary School) இது உருவானது. இதனுடைய கல்லூரி தொடக்கத்தில் (1883 இல்) நாகப்பட்டினம் வெஸ்லியன் உயர்நிலைப் பள்ளியோடு இணைக்கப்பெற்றிருந்தது. இதன் முதல்வராக ரெவரன்ட் W.H. பிண்ட்லே என்பவர் இருந்தார். 1895 இல் நாகப்பட்டினத்திலிருந்த இந்த கல்லூரி மூடப்பெற்று பின்பு 1898 இல் இதனை மன்னார்குடியில் துவக்கினர். அப்போது உதயமானதே பிண்டிலேகாலேஜ். இது சென்னை பல்கலைக் கழகத்தோடு இணைந்திருந்தது.

1900 இல் இக் கல்வி நிறுவனத்தில் 649 பேர் பயின்றார்கள். இவர்களுள் 62 பேர் கல்லூரியிலும், 209 பேர் உயர் நிலைப்பள்ளியிலும், 234 பேர் இடைநிலைப்பள்ளியிலும், 144 பேர் துவக்கப் பள்ளியிலும் பயின்றார்கள் என்று செகட்டியர் கூறுகின்றது. இப்பள்ளியின் முக்கிய கட்டடத்தை 1871 இல் லார்ட் நேப்பியர் என்பவர் திறந்தார் என்ற குறிப்பும் உள்ளது. கல்லூரி படிப்பிற்கு ரூ 21 ஒரு பருவத்திற்குக் கட்டிணம் வசூலிக்கப் பெற்றதாகவும், இரண்டு ஆங்கிலேயர்கள் நான்கு இந்திய பட்டதாரி ஆசிரியர்கள், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய பண்டிதர்கள் இங்கு பேராசிரியர்களாகப் பணிபுரிந்ததையும். சில ஆவணங்கள் குறிக்கின்றன. நாகை, திருவாரூர், தஞ்சை போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்து மாணவர்கள் கல்வி பயின்றதாகவும் அறிய முடிகிறது.

இக்கல்வி நிறுவனம் போன்றே மன்னார்குடி நகராட்சியும் பழம் பெருமை வாய்ந்ததாகும். 1866 இல் 12 கவன்சிலர்களுடன் இது செயல்படத் தொடங்கியது. 1883 இல் கவன்சிலர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்தது. 1903 இல் எட்டாக குறைக்கப்பெற்றது. 1873–74 இல் ரூ.21,940 செலவில் 12 மைலில் உள்ள வடவாறிலிருந்து வாய்க்கால் மூலம் நகரத்திலுள்ள பல குளங்களுக்குத் தண்ணீர் நிரப்ப புதிய திட்டம் செயல்படுத்தப்பெற்றது. ரூ. 2,500 நிதி செலவீட்டில் மூன்று ஆரம்ப பள்ளிகளையும், 13 உதவி பெறும் பள்ளிகளையும், மருத்துவமனையும் நிர்வாகித்தது.

1900 இல் 780 ஏக்கர் நில வருவாயோடு ரூ 6000 பண வருவாயும் பெற்று மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில் திகழ்ந்ததாகவும் தஞ்சாவூர் கெசட்டியர் கூறுகின்றது. ஜெயங்கொண்டநாதர் கோயிலில் தயாரிக்கப்பெற்ற திரட்டுப்பால் அகில இந்திய அளவில் சிறப்பாக பேசப்பட்டது என்ற குறிப்பையும் தருகின்றது. இக்கோயிலில் வைகாசி மாதம் ரோகினி நாளில் பசும்பாலுடன் பல வாசனைப் பண்டங்களைச் சேர்த்துக் காய்ச்சி திரட்டுப்பால் செய்து, கோயிலின் மேற்குப் பிரகாரத்திலுள்ள வியாச லிங்கத்திற்கு ஆராதனை செய்து, பெரிய கோயிலின் இராஜகோபலப் பெருமாளுக்கு அனுப்புவது பழைய வழக்கம். பெருமாள் திருப்பாற்கடலில் ஜலக்கிரீடை செய்த போது அவருக்கு இத்தலத்து சிவபெருமான் அனுப்புவதாக ஒரு மரபு இருந்துள்ளது. இக்கோயிலில் திரட்டுப் பால் காய்ச்சி வந்த 120 சேர் பால் கொள்ளவுடைய பாத்திரம் இக்கோயிலில் இன்றும் உள்ளது. யாது காரணத்தினாலோ காசி வரை பெருமையாகப் பேசப்பட்டு வந்த இந்த திரட்டுப் பால் காய்ச்சும் மரபு பின்னாளில் நின்று விட்டது.

நூறாண்டுகளுக்கு முன்பு மிகச் சிறந்த வணிக கேந்திரமாகவும் இவ்வூர் திகழ்ந்துள்ளது. மன்னையின் சுற்றுப் புற ஊர்கள் மட்டுமின்றி தஞ்சை, நாகை, திருவாரூர் மக்களும் இங்கு வந்து பயன் பெற்றனர் என்ற குறிப்புகளும் உள்ளன. இவையனைத்தையும் தொகுத்து நோக்கும் போது நூறாண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்திலேயே மிகச் சிறந்த நகரமாக மன்னை விளங்குகிற்று என்பது அறிகிறோம்.



# மன்னைச் செண்டலங்கார வள்ளல்

சிரவையாதீனக் கவிஞர்
புலவர் ப.வெ. நாகராசன்

தக்கிணத் துவாரகை எனவும் இராச மன்னார்குடி எனவும் புகழ்பூத்து விளங்கும் மன்னார்குடியாம் புனிதத் தலத்தில் இராசகோபாலசுவாமி செங்கமலவல்லித் தாயாருடன் செண்டலங்காரர் என்னும் சிறப்புப் பெயருடன் எழுந்தருளியிருந்து உலக உயிர்கள் அனைத்தையும் புரந்தருளும் பெருவள்ளலாக விளங்குகிறார் என்பது வெள்ளிடைமலை. ஆனால் இக்கட்டுரை அறிமுகப்படுத்துவது அந்த ராஜகோபால வள்ளலை யன்று; அவருடைய அடியாராகவும், பல அறிஞர்களைப் போற்றிய புரவலராகவும், தஞ்சை மன்னனின் அட்டவணை அதிகாரியாகவும் விளங்கிய செண்டலங்காரப் பிள்ளை என்பவரைப் பற்றியதே இக்கட்டுரை. இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு விறலிவிடுதூது ஒன்றும், வண்ணங்கள் இரண்டும், காப்புமாலை ஒன்றும், தனிப்பாடல்கள் சிலவும் கிடைத்துள்ளன. இச்சிற்றிலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை வரையப்படுகிறது.

தஞ்சாவூர்ப் பகுதி கி.பி. 1675 முதல் 1832 வரை மராட்டியர்களின் ஆளுகையில் இருந்தது. இவர்களுள் சகசி என்பவர் 1684 முதல் 1712 வரை ஆட்சி புரிந்தார். இவரைப் பற்றி ஆய்வறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணியன், " தஞ்சை மராட்டிய மன்னர்களிலேயே மிகவும் புகழ் பெற்றவர் இவர். சிறந்த கல்விமானாகவும், சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கியவர். பல மொழிகளில் கவிதை இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தார். பல புலவர்களை ஆதரித்துத் தஞ்சையை இலக்கியச் சோலையாக மாற்றியவர். இசையில் தானே சிறந்த விற்பன்னராகவும் திகழ்ந்தார்" (தஞ்சாவூர் பக். 158) என்கிறார்.

இவ்வளவு கலைவேட்கை மிக்க சகசி மன்னனிடம் அட்டவணை அதிகாரியாக இருந்தவர்தான் நம் செண்டலங்கார வள்ளல். விறலிவிடு தூது இச் செய்தியை மிகத் தெளிவாக,

*"தன்மதுரை தஞ்சைச் சகசிமா ராசனுக்குப்*
*பொன்முதிர வேண்டிப் பதுக்கியே நன்மணியத்*
*திட்டமிட்டு நாளும் திகழ்நல் லவன்வாசல்*
*அட்டவணை யாம்செண் டலங்காரன்"* (கண்ணி 544, 545)

எனக் குறிப்பிடுகிறது. அரசுக்குரிய இறை, வரி, கடமை, குடிக்கூலி, வாரம் சுங்கம், ஊர்க்காவல், மாவடை, மரவடை என்னும் எட்டுவிதமான வரிகளையும் கணக்கிடும் அதிகாரி அட்டவணை எனப்படுவார்.

இச்செண்டலங்காரர் யாதவ மரபினர் என்பதை,

*"ஆய்ப்பாடிப் புகழ்நந்த கோபன் குலத்துதித்த*
*கோபாலன்"* (விறலி. 11)

*"உச்சித நந்தகோ பாலவங் கிசனை"* (காப்புமாலை3)

என்பனவற்றால் அறிகிறோம். இவருடைய பாட்டனார் பெயர் மன்னப்பன் என்பதாம் (விறலி 61) இவருடைய தந்தையார் பெயர் தியாகப்பன் என்பதாகும்.

*"வண்துவ ராபதி வந்ததி யாகன்உ*
*வந்தருள் மாநிதி செண்டலங்காரன்"* (வண்ணம் 1)
*"த்யாகபூ பதிஉதவு குமரவேள்"* (வண்ணம் 2)
*"வண்டாடும் முல்லையந் தாமனே தியாகப்பன்*
*மைந்தனே குணசீலனே"* (தனிப்பாடல்)

எனப் பல இடங்களில் தந்தையார் பெயர் கூறப்பட்டுள்ளது. நம் செண்டலங்கார வள்ளலுக்கு ஆறு தமையன்மார்களும் ஒரு தம்பியும் இருந்தனரென்று விறலிவிடு தூது குறிப்பிடுகிறது (கண்ணி 66 - 73)

இவ் வள்ளலின் பண்பு நலன்களைத் தனிப்பாடல் ஒன்று.

*"கல்விக் கதிபன் கவிதைக் கிசைந்தவன்*
*கன்னியர்கள் மதனரூபன்*
*கற்றவர்க் கருகூலன் உற்றவர்க் குபகாரி*
*காசினிக் கொரு பூஷணன்*
*செல்வத்திற் குபேரன் கணக்கிலே நிபுணன்*
*சயத்தம்பம் நாட்டவல்லான்*
*சீராசை வளநகர்க் கொருதிவா கரன்(என்று)*
*செகம்புகழ்வ துனையல்லவோ"*

எனக் குறிப்பிடுகிறது. மந்திர சாத்திரத்தில் இவர் சிறப்பான பயிற்சி பெற்றிருந்தார் என்பதை, "மந்த்ர கலாதர சந்த்ரன்" என முதல் வண்ணம் சுருக்கமாகக் கூற, விறலியோ 12 கண்ணிகளில் (22-33) விரித்துரைக்கிறது. காப்புமாலை பாடல் ஒன்று,

*"அஞ்செழுத் தினையும் ஆறெழுத் திணையும்*
*ஆய்ந்துதத் துவங்(களை) அறியும்*
*உம்பர்கொண் டாடும் ராசையா திபனாம்*
*உச்சிதன் செண்டலங் காரன் (5)"*

எனக் கூறுவதையும் இதைப் பற்றியதாகவே கொள்ளலாம்.

நம் நாட்டில் எத்தனையோ அரசுகள் இருந்தன. எத்தனையோ அரசு அதிகாரிகள் இருந்தனர். இந்தச் சகசி மன்னரின் அரசிலேயே பல அதிகாரிகள் இருந்திருப்பர். அவர்கள் பெயர்கள் எல்லாம் அழிந்துவிட்டன. ஆனால் இந்தச் செண்டலங்காரனின் புகழ் மட்டும் இன்னும் இலக்கியத்தில் நிலைத்து நிற்கிறது. இது எதனால்? வள்ளுவர் கூறுவார்

*"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்கொன்*
*றீவார்மேல் நிற்கும் புகழ்".*

இச் செண்டலங்காரனின் கொடைச் சிறப்பு மிகப் பலவாகப் பாராட்டப் பெறுகிறது. இவன் தனக்கு அடுத்த நாளுக்கு வேண்டுமென்றோ அல்லது தன் மக்களுக்கு வேண்டுமென்றோ பொருளைச் சேமித்து வைக்காமல் வரையாமல் வழங்குவானாம்.

*"நாளைக்குப் பிள்ளைக்கென் றெண்ணான்*
*பொருள்களை நாளும்உற்ற*
*வேளைக்கு வாரித் தருவான்என்*
*ஐயன் விதரணனே"*
*"ஐந்தருவும் சொரிமுகிலும் பாரியும்கா*
*ரியும்குமணன் வான வர்தம்*
*சந்திரனும் காமனுந்தே வேந்திரனும்*
*அகத்தியனும் தருமன் தானும்*
*புந்தியும்கன் னனுங்கூடிச் செண்டலங்கா*
*ரன்எனவே பொருந்தி ஒன்றாய்ச்*
*செந்தமிழார் மிடிதவிர்க்கத் தியாகவிட*
*மாய்வநது செனித்தார் அன்றே"* *(தனி*

நம் செண்டலங்காரன் பெருஞ்செல்வனாகவும் வாரி வழங்கும் வள்ளலாகவும் இருந்தான் என்பதைவிட அவன் எத்தகையோருக்கு வழங்கினான் என்பதைக் காண்பது மிக இன்றியமையாததாகும். நற்பண்புகள் இல்லாதவருடைய செல்வம் தீயவர்களுக்கே பயன்தரும். கல்வியறிவோ கலையுணர்வோ வாய்க்காதவர்களின் பொருள் மூடர்களாலேயே துய்க்கப்பெறும். செண்டலங்காரனின் ஈகையைக் கூறும்போதே புலவர்கள் அவன் எத்தகையோருக்கு வழங்கினான் எனத் தெளிவாகக் கூறுகின்றனர். இக்குறிப்புகளால் செண்டலங்கார வள்ளலின் இயல்பைத் தெற்றென உணரமுடிகிறது. சிலவற்றைக் காண்போம்:

*"பாடும் செந்தமிழ்ப் பாவல ருக்கருள்*
*பத்ம மாநிதியே"*
*"கற்றவர்க் கருகூலன் உற்றவர்க் குபகாரி"*
*"பசித்தவர்க் கன்னம் பகிரவந் தவனை"*

இவ்வாறு அரசியல் அதிகாரம், பெருஞ் செல்வம், உயர்ந்த பண்புகள் யாவும் வாய்க்கப் பெற்ற நம் செண்டலங்கார வள்ளல் இராச கோபாலப் பெருமானின் திருவடிகளை மறவாத அடியான் என்பதை எல்லா இலக்கியங்களும் அழுத்தமாகக் கூறுகின்றன.

*"இராசையில் எம்பெருமான் மலர்அம் செழும்தாளை*
*அருமையுடனே பணிய வருகார்" (வண்ணம் 1)*
*"வண்டிருக் கும்பொழில் சூழும் ராசையில்*
*வாழும் செங்கமல வல்லி மார்பினன்*
*செண்டி ருக்கும் கரத்தான் பதம்பணி*
*செல்வனே எங்கள் செண்டலங்காரனே" (தனிப்பா)*

திருமாலின் திருவடிகளை மறவாத பரம பாகவதனாக இருந்த போதிலும் நம் செண்டலங்காரன் முருகப் பெருமான் மேலும் அன்பு கொண்டவன் என்பதை இவன் மேல் எழுந்த காப்புமாலையால் அறிகிறோம். முருகனை முன்னிலைப்படுத்தி வேண்டும் அச்சிற்றிலக்கியத்தில்,

*"உந்தனைக் கனவிலும் மறந்திடாதானை" (1)*
*"நின்னையே தெய்வம் என நினைப்பவனை" (2)*
*"சந்ததம் உனை நினைப் பவனை" (4)*

என வருகிறது.

அரசியல் பொறுப்பில் இருந்ததால் தீயவர்களை ஒடுக்கி நல்லவர்களைக் காக்க வேண்டிய கடப்பாடு இருந்தது. இக்கடமையை யாருக்கும் அஞ்சாமல் நிறைவேற்றத் தேவையான வீரமும் இவன்பால் இருந்தது.

"துட்டர்கொட்டம் தன்னை அடக்கும் சதுரன்"
"வீராதி வீரன் விஜயன்" (விறலி.7,540)

நம் செண்டலங்கார வள்ளல் சொன்ன சொல் தவறாதவனாகவும், நடுநிலை தவறாத நீதிமானாகவும், சத்தியசந்தனாகவும் விளங்கினான்.

"முகில் பொய்த்திடினும் இந்துரவி தெற்கெழினும் அம்பொன்
மலைதெற்றிடினும் ரெண்டுமொழி செப்பிடாத
(மொயம்புறு) வீரியன்" (வண்ணம் 1)
"சொல்லுக்கும் வாய்மைக்கும் நீதிஅரிச் சந்த்ரனே"
(தனிப்பா)
"தருமனை ஒரு சொல்வா சகனை" (காப்புமாலை4)

இத்தகைய சிறந்த அதிகாரிகள் இருந்ததால்தான் அந்நாளைய அரசர்களும் செவ்வனே ஆட்சிபுரிய முடிந்தது. மன்னர்கள் பெற்ற பெரும்புகழுக்கு அடிப்படையே நேர்மையான அரசு அலுவலர்கள்தான். முடியரசோ குடியரசோ இடைநிலை அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஒன்றே. எனவே முடியாட்சியில் இருந்த அதிகாரிகளைப் பற்றிய ஆய்வு இன்றைய அரசியல் முறைக்கும் பயன்தருவதே ஆகும்.

மன்னைச் செண்டலங்கார வள்ளலைப் பற்றிய இலக்கியங்கள் யாவும் தஞ்சாவூர்ச் சரசுவதி மகால் சுவடி களில் உள்ளன. இவருடைய மரபினர் இன்றும் இருக்கக் கூடும். இத்தகைய அரசியல் அதிகாரிகள் பற்றிய இலக்கியங்கள் அனைத்தையும் தொகுத்துத் தெளிவான உரையுடன் பதிப்பிக்க வேண்டும். இவ்விலக்கியங்கள் இடைக்கால அரசியல் சமுதாய, பொருளாதார ஆய்விற்கு இன்றியமையாத கருவிநூல்களாக அமையும். ஆய்விற்குப் பயன்படும் கருவிநூல்களின் பெருக்கமே ஒரு மொழியின் உண்மையான வளர்ச்சியாகும்.



# மன்னார்குடியில் பாண்டியர்கால வணிகநகரம்

இல. தியாகராஜன் எம்.ஏ., எம்.பில்., டி.இ.ஏ., பி.லிட்.,
அரசு கலைக்கல்லூரி - அரியலூர்

தமிழக வரலாற்றில் பொற்காலம் படைத்தவர்கள் சோழர் ஆவர். இவர்களின் காலத்துச் சாதனைகளை இன்றளவும் நிலைத்து நின்று பறைசாற்றிக் கொண்டுவருபவை இவர்கள் கட்டுவித்த கோயில்களும், எழுதிவைத்த கல்வெட்டுகளும், அமைப்பித்த ஊர்களும், வெட்டுவித்த ஏரிகளும், கால்வாய்களும் ஆகும். இவ்வகையில் இன்றைய மன்னார்குடி ஊர் இராஜாதிராஜச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் கி.பி. 1018 முதல் 1053 வரை ஆட்சிபுரிந்த முதலாம் இராசாதிராசன் என்பவர் காலத்தில் அமைக்கப்பெற்ற பிரம்மதேயம் ஆகும். இங்குள்ள ஜெயங்கொண்டநாதர் (ஜெயங்கொண்டசோழீஸ்வரம்) கைலாசநாதர் (ராஜாதிராஜஈஸ்வரமுடையார்), அண்ணாமலை நாதர் (இராசேந்திர திரு அண்ணாமலை உடையார்) ராஜகோபாலபெருமாள் (ராஜாதிராஜ விண்ணகர்) ஆகிய கோயில்களும் இவற்றில் உள்ள கல்வெட்டுகளும் இவ்வூர் மற்றும் இப்பகுதியின் அரசியல், சமய, சமுதாய, பொருளாதார வாழ்க்கை வரலாற்றை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இன்றைக்குத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்பு இவ்வூரின் மேற்கு பகுதி வணிகர்கள் வாழ்ந்த குடியிருப்பாக விளங்கியது எனவும், இங்கு பல்வேறு அயல்நாடுகளுக்கும் சென்று வணிகம் செய்யும் திசையாயிரத்து ஐநூற்றுவர் அல்லது பதினெண் விஷயத்தார் எனவும் அழைக்கப்பட்ட வணிகக்குழுவினர் தங்கிப் பண்டகசாலைகள் அமைத்து வியாபாரம் செய்தனர் என்பதையும் கல்வெட்டுகளால் அறிகிறோம். இவர்கள் இவ்வூர் கோயில்களுக்குக் கொடை வழங்கிப் பேணி உள்ளனர். மேலும் இவ்வணிகக் கூட்டத்தின் ஒரு பிரிவினர் புத்தசமண சமயத்தைப் போற்றிப் பின்பற்றியவர்கள் என்பதை பிற ஊர்க் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். மன்னார்குடியிலும் புத்த, சமணக் கோயில்கள் சிறப்புற இருந்துள்ளன. அவற்றில் சமணக்கோயில் இன்றளவும் வழிபாட்டில் உள்ளது. இவைகளைப் பற்றி ஒருசேர ஆய்ந்து அளிப்பதே இக்கட்டுரையாகும்.

*நகரம்*

நகரம் என்ற சொல் மக்களுக்கு வேண்டிய நுகர்பொருட்களையும் கைவினைப்பொருட்களையும் செய்கின்ற அல்லது வெளியிடங்களில் இருந்து கொண்டுவந்து வியாபாரம் செய்கின்ற வணிகர்கள் வாழுகின்ற இடத்தைக் குறிப்பிடுவதாகும். வாணியநகரம், சங்கரப்பாடி நகரம், சாலியநகரம் வீரப்பட்டணம் என இவற்றில் பலவகைகளும் உண்டு.

மன்னார்குடி பிராமணர்கள் வாழ்வதற்காக அமைக்கப்பட்ட பிரம்மதேய ஊர் ஆகும். மேலும் இது அரசனின் வரிவிதிப்பு நிருவாக முறையில் இருந்து விலக்களிக்கப்பட்ட அந்தஸ்து பெற்ற 'தனி ஊர்' ஆகவும் விளங்கியது. பொதுவாக அக்காலத்தில் வணிக நகரங்கள் தனி ஊராகவே அமைந்திருந்தன. இருப்பினும் பிராமணர்கள் வாழுகின்ற பிரம்மதேயங்களிலும் அதன் ஒரு பகுதியில் வணிகர்கள் குடியேறி வாஉழ்ந்திருந்தனர் என்பதைக் காட்டுமன்னார்குடி (வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம்) பெண்ணாடம் (முடி கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலம்), திட்டகுடி (திருச்சிற்றம்பலச் சதுர்வேதிமங்கலம்) ஆகிய ஊர் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

இதே போன்று மன்னார்குடியிலும் (இராஜாதிராஜச் சதுர்வேதிமங்கலம்) வணிகர்கள் குடியமர்வு இருந்துள்ளது. இதனை ராஜகோபாலசுவாமி கோயிலில் உள்ள முதலாம் குலோத்துங்கனின் 48-வது ஆண்டு கல்வெட்டு (கி.பி. 1118) மூலம் அறியமுடிகிறது. (103/1897).

*சாரிகைக்கோட்டை*

இதன்பின் நமக்கு வணிகநகரம் பற்றிய குறிப்பு அண்ணாமலைநாதர் கோயிலில் உள்ள மூன்றாம் இராசேந்திரனின் 32-வது ஆண்டு கல்வெட்டில் (கி.பி.1278) கிடைக்கிறது. இக்கல்வெட்டு சாரிகைக்கோட்டை என்ற பகுதியைக் குறிப்பிடுகிறது. இது ராஜாதிராஜச் சதுர்வேதிமங்கலத்தின் மேல்பிடாகையாக அதாவது மேற்கில் அமைந்த ஊர்ப்பகுதியாக விளங்கியதாகவும் கல்வெட்டு கூறுகிறது.

இச்சாரிகைக் கோட்டையில் வல்லங்கிழான் திருவிடைமருதுடையான் என்பவரின் தாய் அம்மை பெரியநாச்சி என்ற பெண்மணி இராசேந்திரசோழ திரு அண்ணாமலை உடையார் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்றைக் கட்டுவித்தார் எனவும் இக்கல்வெட்டு கூறுகிறது. (92, 93/1897)

இதிலிருந்து இப்போதுள்ள அண்ணாமலைநாதர் கோயில் உள்ள பகுதியே சோழர் காலத்தில் சாரிகைக் கோட்டை என அழைக்கப்பட்டது என்பது நன்கு புலனாகிறது.

சாரிகை என்ற சொல்லுக்கு 'கூட்டம்' என்று பொருள். இது வணிகக் கூட்டத்தைக் குறிப்பிடுவதாகும். இன்றையவழக்கில் பேரணிகளிலும், ஓட்டுச்சாவடிகளிலும், கோயில்களிலும் ஒருவர்பின் ஒருவராகச் செல்லும் கூட்டத்தைக் குறிப்பிட சாரிசாரியாகச் சென்றனர் என்று சொல்லுகிறோம். இச்சொல் சாரிகை என்பதன் மருவிய வடிவம் ஆகும். அதாவது வியாபாரப் பண்டங்களையும் சரக்குப் பொதிகளையும் வண்டிகளிலும், கழுதை மீதும் ஏற்றிக்கொண்டு வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் வணிகக்கூட்டத்திற்கு வழங்கப்பட்ட பெயரே சாரிகை என்பதாகும். இதையே ஆங்கிலத்தில் Caravan என்பர்.

இத்தகைய வணிகச் சாரிகை கூட்டத்தினர் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் பண்டக சாலை நிறுவி பாதுகாப்பிற்கு கோட்டை அமைத்து வியாபாரம் செய்த இடமே சாரிகைக்கோட்டை எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இத்தகைய சாரிகைக் கோட்டையை ஆங்கில, பிரஞ்சு, டச்சு, வணிகக் கம்பெனியார்கள் சென்னை, பாண்டிச்சேரி, தரங்கம்பாடி, கடலூர் போன்ற இடங்களில் நிறுவிய கோட்டையுடன் கூடிய வணிகப்பண்டக சாலைகளுக்கு ஒப்பாகக் கூறலாம்.

*சாரிகைக் கோட்டையில் மடிகைகள்*

இக்காலத்தில் அரிசி, பருப்பு, உப்பு, மிளகாய், எண்ணை உள்ளிட்ட பல சரக்குகளை 'மளிகை' என்றும் இவை விற்கும் இடங்களை மளிகைக்கடை எனவும் குறிப்பிடுகிறோம். இந்த மளிகை என்ற சொல்லே அக்காலத்தில் மடிகை என்று கூறப்பட்டது.

இத்தகையப் பண்டகசாலைகள் பல இச்சாரிகைக் கோட்டையினுள் அமைந்திருந்தன. அவற்றிற்குத் தனிப்பெயர்களும் இருந்தது என்பதை கி.பி. 1284, 1287, 1288 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பெற்ற பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளால் அறிகிறோம். (95, 90, 89/1897)

இவ்வகையில் புவனேகவீரன் மடிகை, விக்ரமபாண்டியன் மடிகை என்ற இரு மடிகைகள் இங்கு இருந்துள்ளன. இம்மடிகைகள் நான்குதிசை பதினெண் விஷயத்து நகரத்தார் என்ற வணிகக்கூட்டத்திற்கு உரியதாக இருந்தன. இக்கூட்டத்திற்கு நானாதேசிகள் என்றும், திசை ஆயிரத்து ஐனூற்றுவர் என்றும் ஐய்யபொழில் திசையாயிரத்து ஐனூற்றுவர் ஆகிய பெயர்களும் உண்டு. இவ்வணிகக்குழு கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹைஹோல் என்ற இடத்தை தாயகமாககொண்டு ஐனூறு உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது என்றும் இவர்கள் உள்நாட்டிலும் கடல்கடந்த வெளிநாடுகளிலும் (திசை ஆயிரம்) சென்று வணிகம் செய்து வந்தனர் எனவும் கல்வெட்டுகளால் அறிகிறோம். மேலும் இவர்கள் அறநெறி பிறழாது தர்மநியாயங்களின் படி வணிகம் செய்துவந்தமையால் தன்மவாணிகர், தன்மசெட்டிகள் எனவும் இவர்கள் அவ்வப்பொழுது வணிகப்பெருவழிகளில் தற்காலிகமாகத் தங்கி வியாபாரம் நடத்திய இடம் தன்மதாவளம் என்றும், கோயில் சிலவற்றில் இவர்கள் கூடிப் பேசி கூட்டம் நடத்த என கட்டப்பெற்ற மண்டபங்கள் தன்மதாவளன் திருக்காவணம், தனமதாவளன் மண்டபம் எனவும் அழைக்கப்பட்டதைப் பலகல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

*கோயிலுக்குக் கொடை*

இவ்வணிக நகரத்தார்கள் தாங்கள் தங்கி வணிகம் செய்த மன்னார்குடியில் உள்ள ஜெயங்கொண்டசோழீசர் கோயிலுக்குக் கொடைகள் வழங்கியுள்ளனர். இந்நிகழ்ச்சியைக் கல்வெட்டு தன்மசமைய காரியம் எனக்குறிப்பிடுகிறது. சமையம் என்பது வணிகக்குழுவைக் குறிப்பதாகும்.

ஜடாவர்மன் சுந்தரபாண்டிய மன்னரின் 12-வது ஆண்டில் (கி.பி. 13.9.1287) இக்கோயிலில் இருக்கும் விக்ரமபாண்டியன் திருமண்டபத்தில், சாரிகைக் கோட்டையில் விக்ரமபாண்டியன் மடிகைகளில் உள்ள நான்கு திசைபதினெண் விஷயத்தார்கள் ஒன்றுகூடி தங்களின் சாரிகைக் கோட்டைக்குள் நுழைகின்ற சரக்கு வண்டிகளில் கொண்டுவரப்படும் மிளகுப்பொதி (மூட்டை)

ஒன்றுக்கு உழக்கு மிளகு வீதமும், புடவைக்கட்டு (நெய்யப்பட்ட துணிமுட்டை) ஒன்றுக்கு மாகாணிப்பணம் வீதமும் வசூலித்து அதைக் கொண்டு இறைவனுக்குக் கறியமுது படைத்திட ஆவன செய்தனர். மேலும் இச்சாரிகைக் கோட்டைக்குள் புகாமல் புறவழியாகச் செல்லும் சரக்குப்பொதிகள் மீதும் கூட இத்தகைய வரி விதிப்பு செய்து வசூலிப்பது எனவும் இவர்கள் முடிவு செய்ததையும் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இதேபோன்று பாக்குப் பொதி மீது பொதி ஒன்றுக்கு ஒரு உழக்கு பாக்கு வீதம் வசூலித்து அதைக்கொண்டு இறைவனுக்கு அமுதுபடி படைத்திட முடிவு செய்ததை கி.பி. 31.12.1288-இல் எழுதிய மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. இவ்விரு கல்வெட்டுகளும் ஜெயங்கொண்ட நாதர் கோயிலில் எழுதப்பெற்றுள்ளன.

அடுத்தபடியாக அண்ணாமலை நாதர் கோயிலில் இராஜகேசரிபன்மரான வீரபாண்டியன் என்ற பாண்டியமன்னரின் 19-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. இம்மன்னன் கி.பி. 1265 - இல் அரியணை ஏறிய கொங்குபாண்டிய மன்னராக இருக்கலாம் என்று அறிஞர் கே.வி. சுப்பிரமணிய அய்யர் கருதுகிறார். இக்கல்வெட்டு சாரிகைக் கோட்டையில் புவனேகவீரன்மடிகையில் உள்ள நான்கு திசைபதினெண் விஷயத்துநகரத்தார்கள் ஒன்றுகூடி திருவண்ணாமலை உடையாற்கு திருப்பணிக்கும் கறிஅமுதுக்கும் ஆக மிளகு பொதி ஒன்றுக்கு ஒரு உழக்கு மிளகு வீதம் வசூலித்து இதனைச் செய்வது என்று முடிவு எடுத்ததைப்பற்றிக் கூறுகிறது. இம்முடிவைச் சமயம் பணிக்க (வணிக குழுவினர் ஆணைப்படி) சமயகரணத்தான் என்ற கணக்கு எழுதும் அதிகாரி எழுதி உள்ளார் எனவும் கல்வெட்டு கூறுகிறது. இதிலிருந்து இவ்வூருக்கு மிளகு, பாக்கு, துணி வகைகள் கொண்டுவரப்பட்டன எனவும் இவ்வூர் வணிகப் பெருவழியில் அமைந்து விளங்கியது எனவும் அறியலாம்.

*சமண புத்தக்கோயில்கள்*

இன்று மன்னார்குடியில் வழிபாடு இன்றிக்கிடக்கும் அழகிய புத்தர்சிலை ஒன்று உள்ளது. அதேசமயம் வழிபாட்டில் மல்லிதீர்த்தநாதர் என்ற சமணக்கோயிலும் உள்ளது. பெரும்பாலும் இத்தகைய உதிரி சமணபுத்தச்சிற்பங்கள் இருக்கின்ற ஊர்கள் கி.பி.11 முதல் 14-ஆம் நூற்றாண்டுவரை சிறந்த வணிகநகரங்களாகத் திகழ்ந்தவை என்பதை அண்மையில் நான் மேற்கொண்ட கள ஆய்வு மூலம் அறிந்தேன். இதனைக் கட்டுரையாகவும் எழுதி உள்ளேன். கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில சோழர், பாண்டியர் கல்வெட்டுகள் நானாதேசித் திசைஆயிரத்து ஐனூற்றுவர் என்ற வணிகக்குழுவினர் புத்தசமய (நிற்கந்த) சமயத்தைப் போற்றிப் பின்பற்றியதாகக் கூறுகின்றன. இதனைக் காமரசவல்லி, அன்பில் ஆகிய ஊர்களில் உள்ள மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு, (கி.பி. 1235), திருவண்ணாமலை வட்டம் வேட்டவலம் அருகில் ஆவூர் என்ற ஊரில் உள்ள கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு, (கி.பி. 1272) திருமணமேடு ஊரில் உள்ள இரண்டாம் மாறவர்மன் குலசேகரபாண்டியரின் கல்வெட்டு (கி.பி. 1318) ஆகியவற்றால் அறியமுடிகிறது. இத்தகைய வணிகக்குழு மன்னார்குடியில் சாரிகைக்கோட்டையில் இருந்துள்ளமையால் இவர்களின் வழிபாட்டிற்காக இவ்வூரில் புத்தசமண கோயில்கள் கட்டப்பட்டன எனலாம்.

இவ்வாறு மன்னார்குடியில் மேற்கு பகுதி சோழர்பாண்டியர் (கி.பி. 12-14) ஆட்சிக்காலத்தில் ஓர் வணிகநகரமாக விளங்கி இப்பகுதியின் பொருளாதாரசமய நடவடிக்கைகளில் சிறந்த பங்காற்றி உள்ளதை அறியமுடிகிறது. அதன் எச்சங்களாக கல்வெட்டுகளும், அண்ணாமலைநாதர் கோயிலும், புத்த, சமணச் சிற்பங்களும் இவ்வூரில் உள்ளன. இவ்வூர் புத்தசமண சிற்பங்களைப் பற்றியும் தேவையான குறிப்புகளையும் வழங்கி உதவிய கெழுதகை நண்பர் திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரியதாகும்.









# இந்திய நாட்டின் முதல் நடமாடும் நூலகமும் முதியோர் கல்வியும்

த பத்மநாபன், தமிழ்ப்பல்கலைக்கழகம்

தஞ்சை மாவட்டம் இந்தியாவின் நெற்களஞ்சியம் என்ற சிறப்பான பெயர் பெற்று விளங்குகிறது. பல நூறு ஆண்டுகளாகக் காவிரி ஆறு இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் தடையின்றி பாய்ந்து வளம் கொழிக்கச் செய்கிறது. தஞ்சை மாவட்ட மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டு நல்ல செல்வநிலையில் வாழ்ந்து வந்ததால் அவர்களுக்கு இலக்கியம், கலைகள், அரசியல் ஆகியவற்றில் அதிக காலமும் பொருளும் செலவிடுவதற்கு வாய்ப்பிருந்தது. அதனால் மற்ற மாவட்டங்களை விடப் பல துறைகளிலும் தஞ்சை மாவட்டம் தற்போது நிர்வாக நலனிற் பிரிக்கப்பட்டிருக்கும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தையும் உள்ளடக்கி, மிகச்சிறந்து இந்திய அளவிலேயே நற்பெயர் பெற்றிருந்தது.

### கல்வியறிவு

அனைத்துலக அளவில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலக நாடுகள் பெரும்பான்மையாக கல்வியறிவு போதிய அளவு பெறாமல் இருந்தன. வளமையான பிரிட்டன் நாட்டிலே கூட கிராமப் பகுதிகளில் கல்வியறிவு இல்லாமலேயே இருந்தது. 1919ம் ஆண்டில் இலண்டன் மாநகரத்தில் அனைத்துலக முதியோர் கல்விச் சங்கம் அமைக்கப்பட்டது. அப்போது இந்திய நாடு அச்சங்கத்தின் உறுப்பினராகக் கூட அமைந்திருக்கவில்லை.

இந்தியாவில் முதல் அனைத்திந்திய முதியோர் கல்வி மாநாடு டெல்லியில் 1938ம் ஆண்டில் நடைபெற்றது.

### முதியோர் கல்வியில் மூத்த மன்னார்குடி

அனைத்திந்திய அளவில் கல்வியறிவு அனைவரும் பெறவேண்டும் என்றும் குறிப்பாக தமது இளமைக்காலத்தில் படிக்கத் தவறியவர்கள் முதியோர் கல்வித் திட்டத்தில் சேர்ந்து கல்வியறிவு பெறவேண்டும் என்ற நோக்கம் இந்தியாவில் 1938ல் செயல்படத் துவங்கிய போது, தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி நகரத்தில் 1927ம் ஆண்டிலேயே முதியோர் கல்வி இயக்கம் முழுவீச்சில் நடைபெற்றது என்ற தகவல் பலருக்கும் புதியதாகும்.

### மன்னார்குடியில் அமரர் எஸ்.வி. கனகசபை பிள்ளையின் கல்வித் தொண்டு

மன்னார்குடி நகரத்தில் சஞ்சீவிகுளம் அருகில் வாழ்ந்து வந்த திரு.எஸ்.வி.கனகசபைப் பிள்ளை அவர்கள் பொதுப்பணித்துறையில் ஒரு உதவிப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். அவர் 1924 ம் ஆண்டில் தமது பணியிலிருந்து ஓராண்டு காலம் விடுப்பு பெற்று சென்னை சென்றார். அங்கு அவர் அன்னிபெசண்ட் அம்மையாரின் சர்வசமய சமரச கொள்கைகளில் ஈடுபாடு கொண்டார். அதே இயக்கத்தில் ஒரு பிரிவாக உதய நட்சத்திர சபை என்ற பெயரில் ஒரு அமைப்புக்காக புது யுகம் என்ற தமிழ் மாத இதழைத் துவக்கி நடத்தி வந்தார். 28.4.1925 ம் ஆண்டு சென்னையில் உள்ள கோகலே மன்றத்தில் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் பேசும் போது கனகசபை பிள்ளையவர்கள் தன்னுடைய நகரத்தில் கிராம மக்களின் கல்வியறிவைப் பெருக்க முதியோர் கல்வித் திட்டத்தை தம் செலவில் நடத்த முன் வருவதாக தெரிவித்தார். உடனே அன்னிபெசண்ட் அம்மையார் அவர்கள் சென்னையில் அந்த மன்றத்தில் அதே நாளில் அதே நேரத்தில் மன்னார்குடியின் முதியோர் கல்வி இயக்கத்தின் தொடக்கவிழா இதுதான் என்று அறிவித்தார். இவ்வாறாக இந்தியாவின் முதல் முதியோர் கல்வி இயக்கம் மன்னார்குடியில் துவங்கப் பெறுவதற்கு 1925 . ல் சென்னையில் தொடக்கவிழா நடைபெற்றது.

### முதியோர் கல்வி பாடநூல்

கனகசபை பிள்ளையவர்கள் கிராமங்களிலுள்ள கல்வியறிவில்லாத மக்களுக்கு கல்வியறிவினை எளிமையாக ஏற்படுத்த ஒரு முன்மாதிரியான பாடநூலை உருவாக்கினார். அதை சென்னையிலிருந்த தம் இயக்கத்தின்

உறுப்பினர்களான கல்லூரி மாணவர்களிடம் கொடுத்து அவர்கள் தங்களது கிராமங்களுக்கு கோடை விடுமுறைக்குச் செல்லும் போது அப்பாட நூலைப் பயன்படுத்தி முதியோர்களுக்கு கல்வி கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். அந்தப் பாடநூலில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் குறிப்பெடுத்து வந்து தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். இவ்வாறு 1925 ல் தயாரிக்கப்பட்ட பாடநூல் பயன்பாட்டிற்கு பிறகும் பல திருத்தங்கள் செய்யப்பட்டு 1927 ல் அச்சடிக்கப்பட்டது. முதியோர் கல்வி என்ற பெயர் உண்மையிலேயே முதியோராக இருந்தாலும் அவர்கட்கு மனநிறைவு அளிக்காது என்று உணர்ந்து முதியோர் கல்வி என்ற பெயருக்குப் பதிலாக வாலிபர் கல்வி என்ற பெயரினை தம்முடைய முதல் நூலுக்கு தலைப்பாக அமைத்தது அவருடைய உளவியல் நுட்பத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

*சென்னை நூலகச் சங்கம்*

இந்தியாவின் நூலகத் தந்தை என்று போற்றப்படும் அமரர் திரு.எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்கள் நாகை மாவட்டத்தைச் சார்ந்த சீர்காழியில் பிறந்தவர். அவர் சென்னையில் சென்னை நூலகச் சங்கம் என்ற அமைப்பினை 1928 ல் உருவாக்கினார். அவர் கனகசபை பிள்ளை அவர்களிடம் தொடர்பு கொண்டு மேன்மேலும் முன்னேற்றுவதற்குரிய வழிமுறைகளைக் கூறிவந்தார்.

*மன்னார்குடியில் முதியோர் கல்வி*

மேட்டூர் அணைக்கட்டு நிர்மாணப் பணியின் போது நிர்வாகப் பொறியாளராகப் பணியாற்றிய கனகசபை பிள்ளை அவர்கள் 1930 ல் மன்னார்குடி திரும்பி முதியோர் கல்வித் தொண்டுகளில் முழுநேரம் ஈடுபடத் தொடங்கினார். முதியோர் கல்விக்காக தனியாக ஒரு கட்டிடம் கட்டினார். இளமைக் காலத்தில் படிக்க இயலாமல் பின்னர் தமது 16 வயதிலிருந்து 22வரை உள்ள வயது நிலைகளில் கல்வி கற்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அத்தகைய பருவத்தினரை குமரன் என்று அழைப்பது வழக்கமாகையால் தம்முடைய வாலிபர் கல்வி திட்டத்திற்கு கௌமார குருகுலம் என்று பெயரிட்டார்.

கௌமாரகுருகுலம்: மன்னார்குடி கௌமார குருகுலத்தில் இலவசமாக கல்வி கற்பிக்கப்பட்டது. வேளாண்மை காலம் முடிந்த பிறகு வருகின்ற ஆறு மாத காலத்தில் வகுப்புகள் நடைபெற்றன. கற்பிக்கப்பட்ட பாடங்கள்

1. மதம், ஒழுக்கம்
2. சுகாதாரம்
3. கிராமப் பொருளாதாரம்
4. தமிழ்மொழி
5. வரலாறு புவியியல்
6. அரசியல் நிர்வாகம்
7. இயற்பியல்

*வேளாண்மைக் கல்வி*

ஒரு குழுவிற்கு 8 வாலிபர்கள் விகிதம் வேளாண்மைக் கல்விக்காக 18 லிருந்து 25 வரை வயதுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் பத்து ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்ற முதல்வர் ஒருவரை அழைத்து மாணவர்களுக்கு கரும்பு சாகுபடி செய்யும் முறைகள் கற்பிக்கப்பட்டது. மாணவர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களில் வேலை செய்தனர். ஒவ்வொரு மாணவரும் ரு 500 செலுத்தினர். கரும்பு அறுவடை முடிந்த பிறகு கிடைத்த தொகையினை மாணவர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதியோர் கல்வி

கௌமார குருகுலம் தனது மாணவர்களை எந்தவித வேறுபாடுமின்றி நடத்தி வந்தது. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்கு வகுப்புகள் நடக்கும் காலங்களில் இலவசமாக உணவு அளிக்கப்பட்டது.

பாடநூல்கள் கௌமார குருகுலத்தின் வாலிபர் கல்வி பாடத்திட்டத்திற்காக எட்டு பாடநூல்கள் மாணவர்களுக்காக அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம்

முதியோர் கல்விப் பணிகள் கௌமார குருகுலத்தில் சேர்ந்து படிப்பவர்களுக்கு மட்டும் அமைந்தால் போதாது என்று எண்ணி மன்னார்குடி நகரத்தைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கும் கல்வி அறிவினை பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு இரண்டு மாடுகள் இழுக்கக்கூடிய வண்டி ஒன்று செய்து அதில் நூல்கள், கல்வியறிவிற்கான ஒளிப்படவில்லைகள், இசை ஒலித்தட்டுகள், அறிவியல் படங்கள் ஆகிய பொருட்களையும் வைத்து நிர்வகிக்கும்படியான ஒரு நடமாடும் நூலக வண்டி தயாரிக்கப்பட்டது. இதற்கு உரிய அளவுகள் அறிவுரைகள் நூலகத் தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்களால் வழங்கப்பட்டன. அவரே நேரில் வந்து 18.10.1931 ம் நாள் விஜயதசமி தினத்தில் இந்த நடமாடும் நூலக வண்டியை துவக்கி வைத்தார். முதன்முதலில் மன்னார்குடியிலிருந்து புறப்பட்டு இந்நூலகம் மேலவாசல் சிற்றூருக்குச் சென்றது. மன்னார்குடியிலிருந்து பன்னிரண்டு மைல் சுற்றளவிலிருந்த 95 சிற்றூர்களுக்கு இந்த நடமாடும் நூலக வண்டி சென்று வந்தது. இந்திய நாட்டிலேயே முதல் நடமாடும் நூலகம் இதுதான் என்பது மன்னார்குடி நகரத்திற்கு பெருமை சேர்க்கக் கூடியதாகும்.

ஒவ்வொரு நூலிலும் நூல்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற குறிப்பு அச்சடிக்கப்பட்டு முதல் பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு சிற்றூரிலும் சிலர் பொறுப்பேற்று நூலக வண்டியிலிருந்து


தேவையான நூல்களைக் கடனாகப் பெற்று அடுத்த முறை நூலக வண்டி வரும்போது அவற்றை திரும்பக் கொடுத்து புதிதாக வேறு நூல்களைப் பெற்று வந்தனர். இந்த நடமாடும் நூலக வண்டியில் 1931 ம் ஆண்டு துவக்க நிலையில் 280 நூல்கள் இருந்தன. 1933ல் நூல்களின் எண்ணிக்கை 2211 ஆக உயர்ந்தது. ஒரு வருடத்திற்கு 275 முறை சிற்றூர்களுக்கு இந்நூலகம் சென்று வந்தது. ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 3782நூல்கள் கொடுத்து வாங்கப்பட்டன.

கௌமார குருகுலத்தின் சிறப்பான கல்வித் தொண்டு மற்றும் நடமாடும் நூலகத் தொண்டு ஆகியவை பல அறிஞர்களாலும் போற்றப்பட்டது. 28.5.1933 ம் நாள் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்கள் இப்பள்ளியின் ஆண்டு விழாவிற்கு வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.

*கௌமார குருகுலத்தின் தொடர்பணிகள்*

1933 ம் ஆண்டு கனகசபை பிள்ளை அவர்கட்கு கண்பார்வை குறைந்ததால் கல்விப்பணிகளில் அதிகமாக உழைக்க முடியவில்லை. அவருடைய பணியினை அவரது மருமகன் திரு.எம். இராமலிங்கம் அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார். 1937 ம் ஆண்டில் நடமாடும் நூலக வண்டி பணியில் ஈடுபட்டிருந்த உதவியாளர்களில் சிலரை வேலைநீக்கம் செய்தது தெரிய வருகிறது. மேலும் 1936 ல் தஞ்சை மாவட்ட போர்டின் ஆதரவில் ஒரு மோட்டார் வாகனத்தில் நடமாடும் நூலகம் அமைக்கப்பட்டு அதில் பேசும்படம் காண்பிக்கப்பட்டதால் சிற்றூர் மக்கள் மோட்டார் வண்டி நூலகத்தில் அதிகம் ஈடுபாடு கொண்டனர். மேலும் மோட்டார்வண்டி நூலகத்தில் நூல்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் ஒரு மருத்துவக் குழுவும் இணைந்து வந்து சிறிய அளவில் அறுவை சிகிச்சைப் பணிகளும் செய்து வந்ததால் அது மன்னார்குடி மாட்டுவண்டி நூலகப் பணியின் பயன்பாட்டைக் குறைத்து விட்டது.

மன்னார்குடியில் இந்தியாவின் முதல் முதியோர் கல்வித்திட்டமும் முதல் நடமாடும் நூலகமும் செயல்பட்டன என்பது மன்னார்குடி வாழ் பெருமக்களுக்கு மேன்மேலும் பெருமை சேர்க்கும் பணிகளாகும்.



# மன்னையில் ஒரு தேவாரத்தலம்

சேக்கிழார் அடிப்பொடி தி.ந. இராமச்சந்திரன்,
கௌரவ இயக்குநர்,
அனைத்துலக சைவ சிந்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம்

மன்னார்குடி என்று பெயர் தாங்கி விளங்கும் இத்தலம் பண்டு காடாக இருந்த நிலப்பகுதி ஆகும். அக்காலத்தில் இப்பகுதி செண்பக ஆரண்யம் என்று வழங்கப்பட்டது. இப்பகுதியை ஓட்டி, இன்று பாமணி என்று அழைக்கப்படும் பகுதியிலே ஒரு நெடுஞ்சேய்மையான சிவத்தலம் இருக்கிறது. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய மங்களாசாசனம் உண்டு. இங்கு விளங்கும் திருக்கோயிலுக்குத் திருப்பாதாளீச்சரம் என்று பெயர். பதினொரு பாடல்கள் கொண்டதும், வியாழக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்ததுமான ஒரு பதிகம் இத்தலத்திற்குத் தமிழாகரரால் அருளப்பட்டிருக்கிறது. தேவாரத்தில் இது பாதாளே என்று குறிக்கப்படுகின்றது. காவிரித் தென்கரையில் இது நூற்று நான்காவது பதி.

பாம்பு வழிபட்ட இத்தலம், பாமணி, பாம்பணி, பாதாளே என்று பேசப்படுகிறது. பாதாள உலகத்தினின்றும் ஆதி சேடனது தம்பியாகிய தனஞ்சயன் என்னும் அரவு பிலத்தின் வழியே வந்து இங்கு வழிபாடு நிகழ்த்திற்று. ஆகவே இது அரவோடு தொடர்பு கொண்ட பெயர் பெற்று இலங்குகின்றது. வட மொழியில் இவ்வூர் சர்ப்பபுரம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இறைவன் திருநாமம் சர்ப்பரேசர்; அம்மையின் திருநாமம் அமுதநாயகி, தலத்திற்கு அருகில் ஓடும் ஆற்றுக்குப் பாமணியாறு என்று பெயர்.

இத்தலத்திற்கான பதிகத்தை அருளிய திருஞானசம்பந்தர், தம்மைப் பதிகத்தின் திருக்கடைக் காப்பில் இவ்வாறு அறிமுகம் செய்து அருளியுள்ளார், "தன்னொளி மிக்குயர்ந்த தமிழ் ஞான சம்பந்தன்" தன்னொளி என்பது சிவ ஒளியை, சிவஞான விளக்கத்தைக் குறிக்கும்.

சமணப்பட்டுப்போன மதுரையைச் சிவநெறியில் தாபித்தபிறகு பொன்னிநாட்டிற்கு மீளும்போது பலதலங்களையும் வழிபட்டு வந்த ஞானப் பிள்ளையார், திருக்களர் என்னும் திப்பிய பதியில் எம்மிறையைப் போற்றி, இத்தலத்திற்கு எழுந்தருளினார்.

இப்பதிகம் சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனிப் பிரானை அம்மையப்பராகவே நமக்குக் காட்டுகிறது. உயிர்கள் உறுதி கூடவே எம்மிறை ஆணையின் நீக்கமின்றி எப்பொழுதும் நிற்கும் இறைவன் தன்னளவில மாதொருகூறன், அர்த்தநாரி உயிர்கள் பொருட்டு அவன் கொண்டுள்ள கோலமே அருள்மிகு அம்மையப்பரின் அருள் திருக்கோலமாகும். இதுவே இறைவனது தொன்மைக் கோலம்.

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்பது சாத்திரப் பிழிவாகும். அரிவையோடு பிரிப்பின்றி அவன் நிற்பினும், அவன் இயற்றுவது யோகமே. பவன் பிரமசாரி : பால்மொழி ஓர் கன்னிகை. ஆகவேதான் மகாகவி பாரதியாரும் சிவபெருமானைக் "கற்றைச் சடை மதி வைத்த துறவி" என்றே போற்றுகிறார்.

சிவயோகத்தின் அங்கங்களாகவே ஆடலும் பாடலும் அமையும். தாண்டவமோ, தோத்திரப்பாடல்களோ இங்குக் காம உத்தீபனம் ஆகா. காமதகனம் செய்த பரம்பொருள் கண்ணுதலே. "காமனை வீடுவித்தான்" என்ற ஒரு சொல் தொடர் இப்பதிகத்தில் இடம் பெற்றிருத்தலின் சிறப்பை உயத்துணர வேண்டும். நல்ல எண்ணங்களுக்கான விளைநிலன் காமனல்லன் : காமேச்சுரனே. ஆகவே கண்ணுதலின் காமதகனத்தை இடைவிடாது தியானிப்பார் புலன்களைப் புறங்கண்ட அந்தணாளர் ஆவார்.

"தந்தை தாய் பேண்" என்பது தமிழ் மூதாட்டியின் அருள் வாக்கு. உண்மைத் தந்தை தாய் அம்மையப்பரே. அவரை ஏற்றியும் போற்றியும் வழிபட்டு உறுதி கூடவே

மானுடப்பிறவி அருளப்பட்டிருக்கிறது. "வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி:மதித்திடுமின்" என்று அப்பர் அடிகள் அருளியுள்ளதை ஆழமாகச் சிந்தித்துப் பயனுறல் வேண்டும்.

உலகவர் இல்லற தருமத்தை முறைப்படி நடாத்த வேண்டும் என்பதற்காகவே திருச்சிற்றம்பலவன் பெண்பால் உகந்த பெம்மானாக விளங்குகிறான். பாமணிப் பதிகத்தில்,

"அன்னமனநடையா ளொடு பாகத் தமர்தருளி" என்றும்,

"தோடமர் காதினல்ல குழையான்" என்றும்,

"தோகை நன் மாமயில் போல் வளர் சாயல் தூமொழியைக் கூடப் பாகமும் வைத்துகந்தான்" என்றும்,

"அழகார்ந்த அஞ்சொல் மங்கையோர் கூறுடையான்" என்றும்,

"பெண்ணமர் மேனியினான்" என்றும்,

"பூமரு வுங்குழலா ளுமை நங்கை பொருந்தியிட்ட நல்ல பாமருவுங் குணத்தான்" என்றும் வேயுறு தோளி பங்கன் போற்றப்பட்டிருக்கிறான்.

சிவபெருமான் வேதகீதங்களை விரும்பிக் கேட்டருளுபவன். அப்படி அவன் கேட்டருளுவதும் உலகவர் நன்மையின் பொருட்டே. வேதம் போலவே விழுமாய பண்சுமந்த தீஞ்சுவைத் தமிழ்ப்பாடல்களையும், உயிர்கள் உறுதியடைய அவன் கேட்டருளுகிறான்.

"வேதம் பாடலினா லியான் உறை கோயில் பாதாளே" என்று அருளிய ஆளுடைய பிள்ளையார் "மலையில் வண்டினங்கள் மது உண்டு இசை முரல வாய்த்த பாலை யாழ்ப் பாட்டுகந்தான் உறை கோயில் பாதாளே" என்றும் அருளியுள்ளார்.

பிள்ளையார் பதிகந்தோறும் இறைவனைப் பிரமன் மால் அறியாப் பெற்றியன் என்று அருளியுள்ளார். இதன் பொருள் என்ன? பிரமனின் சக்தி சரஸ்வதியாகிய கலைமகள். அதாவது அவனுடைய ஆற்றல் அளவுபடாக் கல்வியேயாம். திருமாலின் சக்தி திருவாகிய இலக்குமி. அளவற்ற செல்வமே திருமால் கொண்டிருக்கும் ஆற்றல். கல்வியாலோ, செல்வத்தாலோ இறைவனை எட்டிப் பிடிக்க முடியாது. ஏனெனில் அவன் மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன். இறைவனை இறைஞானம் மூலமே எய்தல் ஒல்லும்.

*"மைப்படிந்த கண்ணாளுந்தானும் கச்சி*
*மயானத்தான் வார் சடையான்*
*என்னி னல்லான்*
*ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்*
*ஓரூரனல்லன் ஒருவம னில்லி*
*அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும்*
*அவனருளே கண்ணாகக் காணின்*
*அல்லால்*
*இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன்*
*இவனிறைவன் என்றெழுதிக்*
*காட்டொணாதே"*

என்பதே வாகீச வேதம்.

பாமணிப் பதிகத்தில் "தாமரை மேலயனும் மரியுந் தமதாள் வினையாற் றேடிக்...கழல் காண்பிலராய கன்றார்" என்று பாலறாவாயர் பணித்துள்ளார். இதன் பொருளைச் சிந்தித்து உணர வேண்டும். சுயயத்தனம் (சுய முயற்சி) என்பது உலகியலில் மிக முக்கியமான இடம் பெறும். ஆனால் தெய்வத்தை அடைய முயல்வோர் சுய முயற்சியை மட்டும் நம்பிச் செயல்பட்டால் வெற்றி பெற முடியாது. அவன் அருளாலேதான் அவன் தாள்களை வணங்கவோ அடையவோ முடியும். உண்ணுஞ்சோறு, பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எனக்கண்டு, அவனையே தாரக போஷக போக்கியமாகக் கொண்டு செயல்படும் ஆழ்வார்கள் சுயயத்தனபரராக விளங்கும் இருடிகளைக் காட்டிலும், பல்லாயிரம் மடங்கு மேம்பட்டவர் என்று வைணவம் போற்றும் கொள்கையை நாம் மறத்தல் கூடாது.

பாமணி, "பன் மலர் வைகு பொழில் புடை சூழ்ந்த" இடமாகக் குறிக்கப் பெற்றுள்ளது. பன்மலராவன, பொறுமை, கொல்லாமை, முதலாய அட்ட புட்பங்கள். எண்குணத்தானை, அட்டமூர்த்தியை முறையாக வழிபடுதற்கு என்றே அமைந்த திருத்தலம் பாமணி. தமிழ் ஞான சம்பந்தரது தமிழ்ப் பதிகம் பெற்ற தலமிது. இறையுணர்வு சிவனிய பாடலும் ஆடலும் பல்கியிருந்த வளமார்ந்த தலம். மலர்கள் கஞலிய சோலை வாழ் ஞிமிறும் பாலையாழ்ப் பாடல் மிழற்றும் புண்ணியத்தலம். ஆதி தம்பதியாம் அரனும் உமையும் உவந்தருளி வீற்றிருக்கும் அற்புதத்தலம். வாரீர். இத்தலத்தை ஏற்றுவோம். போற்றுவோம். சொன்னேன் அதுவே சுகம்.

# ரிஷியூர் சிவாலயம்

விவேகானந்த திவாகரன் பி.எஸ்ஸி.
மன்னார்குடி

மன்னார்குடியைக் குறிப்பிடும் சோழர் காலக் கல்வெட்டுக்கள் சுத்தமல்லி வளநாட்டுத் தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடுகின்றன. இதே போன்று மன்னார்குடிக்கு அருகில் உள்ள ரிஷியூர் என்ற கிராமத்தைச் சுத்தமல்லி வளநாட்டுப் பிழிதூர் என்று சோழர் கால கல்வெட்டுக்களே குறிப்பதால் ரிஷியூரின் பழம் பெயர் பிழிதூர் என்று அறியலாம். நீடாமங்கலத்திலிருந்து தென்கிழக்காகச் செல்லும் சாலையில் அமைந்துள்ள இவ்வூரில் மிக அழகான சிவாலயம் ஒன்று உள்ளது. இடிபாடுற்றுக் கிடந்து அண்மையில் திருப்பணிகளால் புத்தொளி பெற்றுத் திகழும் இக்கோயிலின் சிறப்புகளை இங்குக் காண்போம்.

இக்கோயிலின் வரலாறு அறிய வேண்டுமாயின் நாம் முதலில் இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்பெறும் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். 1907 இல் 4 கல்வெட்டுக்களைப் படி எடுத்து சென்றனர். 473 லிருந்து 476 வரை எண்கள் இடப்பெற்ற 1907 ஆண்டு சாசனங்களாகிய இக்கோயில் கல்வெட்டுக்களைத் தென் இந்திய கல்வெட்டுக்கள் தொகுதி 23 இல் அச்சிட்டு வெளியிட்டனர். மேலும் அண்மையில் நடந்த திருப்பணிகளின் போது மதிற்சுவரின் வெளிப்புறத்தில் பூமிக்கடியில் புதைந்திருந்த கல்வெட்டொன்றைக் குடவாயில் பாலசுப்ரமணியம் நகல் எடுத்துள்ளார். இதுவரை கிடைத்த 5 கல்வெட்டுக்களுமே மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தியவையாகும்.

அனைத்துக் கல்வெட்டுக்களுமே இக்கோயிலைத் திருவகத்தீஸ்வரம் என்றே குறிப்பிடுகின்றன. கிழக்கு நோக்கி அமைந்துள்ள இந்த சிவாலயத்தில் சிவலிங்க உருவில் அகத்தீஸ்வரர் (தற்போது கயிலாசநாதர் என அழைக்கப் பெறுகின்றார்) காட்சி கொடுக்கின்றார். தெற்கு நோக்கி அம்மன் கோயில் உள்ளது முழுவதும் கருங்கல்லாலான கர்ப்பக்கிருஹம் அர்த்த மண்டபம், முக மண்டபம் ஆகியவற்றின் வெளிப்புறத்தில் பிறைமாடங்கள் உள்ளன. இவற்றில் மிக அழகு வாய்ந்த தெய்வத் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன.

தென்புறம் பிட்சாடனர், கணபதி தெட்சிணாமூர்த்தி போன்ற சிற்பங்களும், மேற்கு திசையில் திருமாலும் வடபுறம் பிரம்மா, துர்க்கை, தபசுகாமாட்சி, அர்த்தநாரி, காலகாலமூர்த்தி ஆகிய சிற்பங்களும் அலங்கரிக்கின்றன. இச்சிற்பங்களின் கலை அழகு சிறப்புடையதாகும்.

கருவறையின் தென்புறத்திலேயே தனியாக ஒரு சிறிய மாடம் குடையப் பெற்று அதில் தாடி மீசையுடன் கூப்பிய கரங்களோடு சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் உருவச்சிலை உள்ளது. இங்குள்ள சிற்பங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்வது காமாட்சி தபசு எனும் கற்சிற்பமாகும். எரிகின்ற தீச்சுவாலையின் இடையே ஒற்றைக்காலால் நின்று பரமேஸ்வரனின் அருள்பெற்ற காமாட்சியின் சிற்பத்தைக் காணக் கண் கோடி வேண்டும்.

பிரஹாரத்தில் பல பரிவாராலயங்கள் இருந்த போதும் வடமேற்கிலுள்ள சரஸ்வதி சிற்பத்திற்கு ஒரு வரலாற்றுப் பெருமையுண்டு. இச்சிலையை கி.பி. 1211 இல் சோழமன்னனின் உயர் நிலை அதிகாரியான குலோத்துங்க சோழ வான கோவரையன் என்பவன் தோற்றுவித்தான் என்பதை இக்கோயிலிலுள்ள கல்வெட்டே குறிப்பிடுவது சிறப்பான செய்தியாகும். பொதுவாக சிவாலயங்களில் சரஸ்வதி சிலை எடுக்கப் பெறுவது அரிதாகத்தான் உள்ளது. ஆனால் இங்கு சிலை எடுத்ததோடல்லாமல் தொடர்ந்து

## ரிஷியூர் சிவாலயத்துச் சிற்பங்கள்



காலகால மூர்த்தி



காமாட்சி தபசு




சரஸ்வதி

BLACK



மூன்றாம் குலோத்துங்க சோழன்



உண்ணாழிகையில் இராமாயணக் காட்சிகள்



சிறப்பு பூஜைகள் செய்யவும் நிலம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

களத்தூர் எனும் ஊர் தற்போது ரிஷியூரிலிருந்து திருவிடைவாசல் போகும் சாலையிலுள்ளது. இங்கு வாழ்ந்தவன்தான் குலோத்துங்க சோழ வானகோவரையன். தான் பிழிதூரில் (ரிஷியூர்) எடுத்த இந்த கோயிலின் இறைவன் முன் தூண்டா விளக்கு தொடர்ந்து எரிவதற்காக 160 குழி நிலம் வழங்கியதை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. ரிஷியூர் போகும் வழியில் பெரம்பூர் என்ற கிராமம் தற்போதுள்ளது. இதன் பழம் பெயர் பெருமூர் என்பதாகும். இவ்வூரின் தலைவனாக வாழ்ந்தவன் மலையப்பிராயன் என்பவன். இவன் களத்தூர் கிழவன் வானகோவரையனின் மகளை மணந்திருந்தான். அவளுக்குச் சீதனமாக 7 வேலி நிலத்தைப் பிழிதூரில் (ரிஷியூரில்) வானகோவரையன் கொடுத்திருந்தான். அந்நிலத்தில் ஒரு பகுதியை ரிஷியூர் கோயிலுக்கும், 4 வேலி நிலத்தைப் பெரம்பூரிலிருந்த சிவாலயத்திற்கும் இத்தம்பதியினர் கொடுத்திருந்தனர். பெரம்பூர் சிவாலயத்துக்குச் சாசனமும் எழுதிக் கொடுத்திருந்தனர். அந்த சாசன ஓலை பின்னாளில் செல்லரித்து அழிந்து போனதால் மீண்டும் அதன் நகல் வேண்டுமென்று பெரம்பூர் கோயிலார் விண்ணப்பம் செய்தனர். அதன்படி வானகோவரையனின் மருமகன் மீண்டும் சாசன நகலைப் பெரம்பூர் கோயிலார்க்கு எழுதிக் கொடுத்ததோடு, 'அது என்றும் அழியாமல் இருக்கட்டும் என்பதற்காகவே ரிஷியூர் சிவாலயத்தில் கல்வெட்டாகவும் பொறித்துள்ளான்.

திருக்கோயில்களையும் அதன் சொத்துக்களையும் காப்பாற்றுவதில் தமிழ்மக்கள் எவ்வாறு திகழ்ந்தனர் என்பதற்கு ரிஷியூர் கல்வெட்டு சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோயிலில் பூஜைகளோடு ஆடற்கலையும் அற்புதமாக வளர்ந்தது என்பதனை மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இக்கோயிலில் பெரிய நாச்சியான நாற்பத்தொண்ணாயிர மாணிக்கம் எனும் பெண் ஆடல் புரிந்து வந்தாள். இவளது பணிக்காக முன்னூறு பொற்காசுகளை நிரந்தர முதலீடாக இக்கோயிலில் வைத்து, அதன் வட்டியிலிருந்து அவள் ஊதியம் பெற வழிவகுத்துள்ளனர். இவ்வாறு பல்வேறு கவின்கலைகளும் அதனை வளர்க்கும் கலைஞர்களும் காக்கப் பெற்றனர் என்பதற்கு ரிஷியூர் கோயில் சாசனங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சோழர் கால சிற்பக்கலையின் உயர்வையும், சிறந்த வரலாற்றுக் கல்வெட்டுக்களின் சிறப்பையும் பெற்றுத் திகழும் ரிஷியூர் சிவாலயம் மனதுக்கு நிறைவு தரும் திருக்கோயில் என்பது முற்றிலும் உண்மை.

## இராஜகோபாலச்சக்கரம்





கி.பி. 1535 - 1675 வரை தஞ்சையை ஆட்சி புரிந்த நாயக்கர்கள் மன்னார்குடி இராஜகோபாலன் மீது தனி ஈடுபாடு கொண்டு திகழ்ந்தனர். இவர்களுள் விஜயராகவ நாயக்கர் தன்பெயரை மன்னாருதாசன் என்றும், தன் மகனுக்கு மன்னாருதேவன் என்றும் பெயர் சூட்டிக்கொண்டு கோபால பக்தியை வெளியிட்டார். இவர்காலத்தில் தங்கத்திலும், செம்பிலும் இராஜகோபாலசுவாமி உருவம் பொறிக்கப்பெற்ற காசுகள் வெளிவந்தன இவற்றுக்கு இராஜகோபாலசக்கரம், இராஜ கோபாலி சக்கரம், கோபாலி சக்கரம், இராஜகோபாலன் மாடை, இராஜகோபாலிபணம் என்று பெயர்கள் இருந்தன.

மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் செப்பேடுகளும், மெக்கன்சி சுவடிகளும் இக்காசுகள் பற்றி குறிப்பிடுகின்றன. நாயக்கர் காலத்திற்குப் பின்பு தஞ்சை மராட்டியர் காலத்திலும் இக்காசுகள் புழக்கத்தில் இருந்தன. செம்புக் காசுகளில் செண்டேந்திய இராஜகோபாலப் பெருமானின் உருவம் ஒரு புறமும், வணங்கும் விஜயராகவ நாயக்கரின் உருவம் மறுபுறமும் காணப்பெறுகின்றது.

-குடவாயில் பாலு

# நாயக்கர் காலத்து நாட்டிய ஆசான்

தஞ்சாவூர் **B.M.** சுந்தரம்

எழில்மிகுந்த திருமுக மண்டலத்தைப் பெற்று விளங்கும் ராஜகோபாலனின் ஆலயம் அமைந்த புண்ணியப்பதி, மன்னார்குடி எனப்பெறும் சண்பகாரணியம். ராஜகோபால சுவாமியின் பக்த சிரோமணிகளில் முதலிடம் வகித்தவர், பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சையில் நல்லரசோச்சிய விஜயராகவ நாயக்கர் ஆவார். தஞ்சை நகரில் ஈடற்ற பிருகதீசுவரர் ஆலயத்தை எழுப்பியும், வெற்றிச் செல்வியின் கேள்வனாய் அமைந்தும் அழியாப்புகழீட்டிய சோழமன்னன், ராஜராஜனுக்கு அடுத்த இடம் பெறத்தக்கவர், விஜயராகவன். இம்மாபெரும் மன்னனை ஒரு கோழையென்றும், சகோதரனின் கண்களைப் பிடுங்கிச் சிறையிலிட்டு அரியணை ஏறியவன் என்றும், இன்னும் பலவாறு, சில வரலாற்றாசிரியர்கள் உண்மைக்குப் புறம்பாக எழுதிப்போயினர். ராஜராஜனைச் சிவபாதசேகரன் என்போமாயின், விஜயராகவன் வைணவ சிகாமணியெனப் போற்றுதல் பொருந்தும். தன் தந்தையான ரகுநாத நாயக்கரின் அவையிலிருந்த ஆடல்மணிகளையும், கவித் திலகங்களையும் எழுத்திலே வடித்துள்ள விஜயராகவனின் அரசவையிலும் கலைஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் தனிப்பெரும் இடமளிக்கப்பட்டிருந்ததில் வியப்பிருக்க முடியாது. மன்னனே பல யக்ஷான நாட்டியநாடகங்களையும், ஆடலுக்கான பாடல்களையும் இயற்றிய பெருமைக்குரியவர். மோஹனாங்கி, ரூபாவதி, சந்திரரேகா, லோகநாயகி, சசிரேகா, கீரவாணி, மூர்த்தி, சண்பகவல்லி, கோமளவல்லி, பாகீரதீ போன்ற பல ஆடற்கலையரசிகள் இம்மன்னரின் அவையை அலங்கரித்தவர்கள். 'மன்னாருதாஸ விலாஸமு', 'உஷா பரிணயமு' போன்ற யக்ஷகானங்களை வடித்த தலைசிறந்த கவயத்ரியும், ஆடலில் வல்லவளுமாயிருந்த பசுபுலேடி ரங்காஜம்மா, விஜயராகவனின் பேரன்புக்குப் பாத்திரமாயிருந்தவள். சிலகாலம் ரங்காஜம்மா, நாட்டியம் என்றதுமே ஒருவரின் நினைவுக்கு முதலில் வரும் பந்தணைநல்லூரில் வசித்தவள். இக்காரணத்தை முன்னிட்டே அவ்வூரை, மன்னன் விஜயராகவன், புனர்நிர்மாணம் செய்ததாக இலக்கியவாயிலாக அறியமுடிகிறது. இம்மன்னனின் ஆதரவில் நாட்டியமணிகள் இருந்தனரென்னும்போது, அவர்களைப்பயிற்றுவித்து, இயக்கிய நாட்டிய ஆசான்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லாதிருந்திருக்க வேண்டும். ஆயினும், அவர்களுடைய பெயர்கள் அனைத்துமாக நமக்குக் கிடைக்காமல் இருக்கின்றது. அவர்களில் சிலருடைய பெயர்கள் கிடைக்கின்ற அதே சமயத்தில் ஓரேயொரு நாட்டிய ஆசானின் குடும்பத்தைப் பற்றிய செய்திகள் மட்டும் கிடைத்துள்ளன. இக்கட்டுரையின் வாயிலாக, அக்குடும்பத்தைப்பற்றிக் காண்போம்.

தஞ்சை நகரில் வாழ்ந்து வந்த நாட்டிய ஆசான்களில் ஒருவரது குடும்பத்தில் தோன்றியவர், கோபாலகிருஷ்ண நட்டுவனார் என்பவர். மன்னார்குடி ராஜகோபாலசுவாமி ஆலயத்தில் நாட்டிய மேளத்தை நிருவகித்துச் சேவை செய்யும் பணியில் விஜயராகவ நாயக்கரால் நியமிக்கப்பெற்று, மன்னார்குடியில் குடியேறினார். கோபாலகிருஷ்ண நட்டுவனார். இவரிடம் பயின்றவர்களே, சண்பகவல்லி, கோமளவல்லி என்ற இருவரும். கோபாலகிருஷ்ண நட்டுவனாருக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உண்டு. இந்த மகளின் மகனாக 1696 ஆம் ஆண்டில் பிறந்தவர், விஜயரங்க நட்டுவனார். விஜயரங்கத்துக்கு 1729 ஆம் ஆண்டில் மகனாக உதித்தவர், கோபால நட்டுவனாரென்பவர். அந்தக் காலகட்டத்தில் தஞ்சையை ஆண்டுவந்த மராத்திய மன்னனாகிய பிரதாபசிம்மனின் (1739-1763) அவையிலிருந்த ஆடலரசிகளில் குறிப்பிடத்தக்கவராகிய முத்துப்பழனி என்பவர், இந்தக் கோபால நட்டுவனாரின் மாணவியே. 'ராதிகா ஸாந்த்வனமு' எனும் சிருங்கார காவியத்தைப் படைத்தவர் இந்த முத்துப்பழனி. கோபால நட்டுவனாருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தனர். திருநெல்வேலியில் வாழ்ந்துவந்த செந்தில்வேல் அண்ணாவி என்பவரின் மூத்த

குமாரராகிய மஹாதேவ அண்ணாவிக்கும் (1734-1791), கோபால நட்டுவனாரின் மகளுக்கும் திருமணமாயிற்று. மஹாதேவ அண்ணாவியின் இளவல்களே கங்கைமுத்து நட்டுவனாரும் (1737-1798), ராமலிங்கமும், கங்கைமுத்துவின் குமாரர் சுப்பராயன் என்பவரின் புத்திரர்கள். நாட்டிய உலகில் தனிப்பெரும் பெயர்கொண்ட 'தஞ்சை நால்வர்' எனக்குறிப்பிடப்பெறும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு எனும் 'சங்கீத சாஹித்திய பரத சிரேஷ்டர்கள்'. மன்னார்குடி கோபால நட்டுவனாரின் மகன் வயிற்றுப்பேரனுக்கு வைத்தியலிங்க நட்டுவனார் எனப்பெயர். வைத்தியலிங்கத்தின் சகோதரிக்குப்பிறந்த தையல்நாயகி என்ற மூத்த பெண்ணைத் 'தஞ்சை நால்வரில்' ஒருவரான சிவானந்தமும், பார்வதியென்ற இளைய மகளைத் தாய் மாமனாகிய வைத்தியலிங்க நட்டுவனாரும் மணந்தனர். சொக்கலிங்க நட்டுவனார், சாமிநாத நட்டுவனார், கோபாலப்பிள்ளை (நாகசுரக்கலைஞர்) என்ற மக்களைப்பெற்றார், வைத்தியலிங்க நட்டுவனார். சொக்கலிங்க நட்டுவனாரின் மூத்தமகன், கோவிந்தசாமிப்பிள்ளை; இரண்டாவது மகன், பக்கிரிப்பிள்ளை, தொடக்கத்தில் நட்டுவனாராகிப்பின் அதை விடுத்துத், தவிற்கலைஞராக ஆகிச், சிலகாலங்கழித்து அதையும் விட்டுக் 'கொனகோல்' என்ற கலைக்கு மூல புருடராக மாறி, அக்கலைக்குத் தனிச் சிறப்புடைய ஸ்தானத்தையும், கௌரவத்தையும் தேடித்தந்தவர். இவரையடியொற்றியே இவரது மகனாகிய வைத்தியலிங்கம் பிள்ளையும் இணையற்ற 'கொனகோல்' கலைஞராக விளங்கி எழுபத்துநான்கு ஆண்டுகள் வாழ்ந்து 1974 ஆம் ஆண்டில் மறைந்தார். பக்கிரிப்பிள்ளையின் மகள் அம்மணி என்பவர், 'நாட்டிய கலாநிதி' பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மகனாகிய முத்தையாபிள்ளையின் மூத்த மனைவி. வைத்தியலிங்கம் பிள்ளையின் குமாரராகிய பக்கிரிசாமி, பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்து, ஓய்வு பெற்று, தற்போது மன்னார்குடியில், தம் பூர்வீக இல்லத்தில் வாழ்ந்து வருகின்றார். நாட்டியககலைக்குப் பேராதரவு நல்கி வளர்த்த விஜயராகவ நாயக்க மன்னரால், மன்னார்குடியில் நிலைப்பட்ட இந்த நாட்டிய ஆசான் குடும்பம், ராஜகோபால சுவாமியின் சேவையில் பலகாலம் தம்மை அர்ப்பணித்திருந்ததாகும்.



(4)

# மன்னார்குடிச் செப்பேடுகள்


புலவர் செ. இராசு
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

மன்னார்குடி செயங்கொண்ட நாதர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைச் செப்பேடுகள் நான்கு
(5) கிடைத்துள்ளன. உண்மையில் அவை நான்கு கொடைச் செய்திகள் பொறிக்கப்பட்ட இரண்டு செப்பேடுகளேயாகும்.

1920-21 ஆம் ஆண்டு மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையினர் இவற்றைப் படி எடுத்துள்ளனர். அவர்கள் செப்பேட்டின் அளவை நோக்கி இதனை 14,15 ஆம் எண்ணிட்ட இரண்டு செப்பேடாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்ட ஆலயங்களின் நிருவாகக் குழு உறுப்பினராக விளங்கிய திரு. வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்கள் மூலம் இச் செப்பேடுகலைப் பெற்றுப் படி எடுத்துள்ளனர்.

மைய அரசின் துறையினர் அளித்த மைப்படியைக் கொண்டே இச் செப்பேடுகள் முதலில் வெளியிடப்பட்டன. (தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, பதிப்பாசிரியர் புலவர் செ. இராசு).

இவை தாமரை மொக்குப் போன்ற அழகிய
(6) கைப்பிடியை உடையன. செயங்கொண்ட நாதர் இலிங்க வடிவில் உள்ளார். மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. இலிங்க வடிவின் இடப்புறம் உமாதேவி இரண்டு கரங்களுடன் ஒரு கையில் மலரேந்தி நிற்கிறார். இடையில் முத்தலைச் சூலம் பெரிதாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்காட்சி நான்கு புறங்களிலும் உள்ளது. ஒரு செப்பேட்டின் இறுதியில் வரை கோட்டு ஓவியத்தில் (காமதேனு) இலிங்கத்திற்குப் பால்சொரியும் பசுவின் காட்சி மிக மிக அழகிய முறையில் செதுக்கப்பட்டுள்ளது.



இரண்டு செப்பேடுகள் பாப்பாநாடு ஜமீன்தார் இராசராச வளநாடு ராசேந்திர சோழ வளநாடு. பொய்யூர்க் கூற்றத்துப் பாப்பாகுடிநாடு சிறுநெல்லிக் கோட்டை நென்மேலிவாடியிலிருக்கும் நல்லவன் விசையாத் தேவர் மகன் இராமலிங்க விசையாத் தேவர் தம் காணியாக இருக்கும் மன்னார்குடி செயங்கொண்ட நாதர்க்கு அளித்த கொடையைக் கூறுகின்றன.

அர்த்தசாம பூசைக்கு 46 இராசகோபாலச் சக்கரம் கொடை அளித்ததை முதற்செப்பேடு கூறுகிறது.

பாப்பாகுடி நாடு மேல்கரை கீழ்க்கரையைச் சேர்ந்த 16 கரைப் பெருமக்களும் கரைக்கு 22 ½ பொன்னாக மொத்தம் 45 இராசகோபாலச்சக்கரம் பொன் கொடுத்ததை இரண்டாம் செப்பேடு கூறுகிறது. கீழ்க்கரையில் பிளாபட்டு, வெள்ளூர், கரம்பையூர் ஆகியன கூறப்பெறுகின்றன.

இக்கொடைகள் தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாப் சிங் (1739-1763) காலத்தில் முறையே 11.5.1757, 12.5.1758 ஆகிய நாட்களில் அளிக்கப்பட்டன.

பாப்பாகுடி ஜமீன்தார் வில்லுக்கு விசையன், சொல்லுக்கு அரிச்சந்திரன், அழகுக்கு மன்மதன், குதிரைக்கு நகுலன், யானைக்குத் தேவேந்திரன் அறிவுக்கு அகத்தியன், கொடைக்குக் கர்ணன் என்று புகழப்படுகிறார்.

காசிமடத்துச் செப்பேடு ஒன்றின் மூலம் இராமலிங்க விசையாத்தேவரின் தாத்தா ஆதி ஆவிடை விசையாத் தேவர் என்று தெரிகிறது.

மற்ற இரண்டு செப்பேடுகளும் சிங்கவனம் ஜமீன்தார் ஸ்ரீசவ்வாயி விசைய ரெகுநாத வாளோசி மெய்க்கன் கோபாலர் அளித்த கொடையைக் கூறுவன. சவ்வாயி என்பது இளவரசரைக் குறிக்கும் பெயர். (சவாயி)

மெய்க்கண் என்பது நீதி கூறும் தலைவராக அவர்கள் விளங்கியதைக் குறிக்கிறது என்பர். (மெய் + காண் மெய்காண் மெய்க்கண்)

காலைச் சந்திக்கு ஒரு நாளைக்கு 2 பணமாக ஆண்டுக்கு 720 பணம் (72 இராசகோபாலச் சக்கரம் பொன்), சுக்கிரவாரக் கட்டளைக்கு 1 மாதத்திற்கு 1 பொன் 6 பணம் ஆக ஆண்டுக்கு 19 பொன் 2 பணம் ஆக மொத்தம் 91 பொன் 2 பணம் அளித்ததைக் கூறுகிறது.

இறுதிச் செப்பேடு செயங்கொண்டநாதரின் மாலைக்காலப் பூசைக்கு 40 பொன் அளித்ததைக் கூறுகிறது.

செப்பேட்டுச் செய்தியை எழுதியவர்கள் அஸ்தாந்திரம் பெத்த பெருமாள் மகன் அருணாசலமும், அட்டவணை அஸ்தாந்திரம் சீதாராமய்யன் மகன் முத்தய்யனும், சிறுகளத்துடையான் இராமலிங்கம் பிள்ளையும் ஆவர்.

செப்பேட்டைப் பொறித்தவர் அருணாசலன் மகன் நாராயணன் என்பவர். சிங்கவனம் ஜமீன்தார் பலபடப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளார்.

கடைசி இரண்டு செப்பேடுகளும் முன் செப்பேடுகளுக்குரிய பிரதாப்சிங்கின் காலத்திற்கு உரியனவே. காலம் 26.6.1758; 31.1.1760 ஆகும்.

## செப்பேடு எண் 1

*உ சு(ஸ்)வஸ்திசி மகாமண்டலேசுரன் ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமாத்தாண்டன் ராச கெம்பீரன் ணச உத்தண்டண் கண்ட னாடு கொண்டனாடு குடாதாண் யெம்மண்டலங்கொண்டு ஈழமுந்துறை கொண்டவன் துலுக்கர் மோகம்தவிர்த்தவன் ஒட்டியர் கொட்டந் தவிர்த்தவன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் வேலூர் தேவமகாராயர் வீரவசந்தராயர் கோலராயர் அச்சுதப்ப னாயக்கர்செவ்வப்ப னாயக்கர் விசைய ராகுவ னாயக்கர் ஏகோசி மகராசா சரபோசமகராசா துககோசி ராசா வாவா சாயிபு அன்னா சாயிபு னாணாசாயிபு உ ரா உ பறதாபிசிங்கு மகராசா இப்படிக்கொத்தயோர்கள் ராச்சிய பலிபாவனம் பண்ணி அருளா நின்ற கலியுக ரா சகாத்தம் 1680 சாலியவாகன சகாத்தம் 4861 இதின் மேல் செல்லா நின்ற வெகுதானிய வய்ய*

*ச்சீ மீ 2 உ ராச ராச வளணாடு ராசேந்திர சோழ வளனாடு பொய்யூர்க் கூத்தத்துப் பாப்பா குடி னாடு செறுநல்லிக் கோட்டை நென் மேலிவாடியிலிருந்தும் யரா நல்லவன் விசையா தேவரவர்கள் குமரர் ரா ராமலிருக விசையா தேவர்(கள்) பாப்பானாட்டவர்களுக்கு காணியாக இருக்குற செயங்கொண்டனாத சுவாமியாருக்கு தற்ம சாதனப்பட்டயம் பண்ணிக் குடுத்தபடி தற்ம சாதனப் பட்டயமாவது கோயில் அற்(க்)த்த சாமக் (க)ட்டளை வரு(சி)சம் ஒன்னுக்கு ராசகோ பாலச் சக்கரம் பொன் 46 இந்த னாற்பத்தாறு பொன்னும் ரெண்டு பங்குள்ள வகுப்புக்கம்புலேனா மூனு பங்கு பேரம்பலக்குலேயம் பத்திக் கொண்டு கோவில்ப்பூசை நிறவேறப்பண்ணி நருவோமாகவும் இந்தப்படிக்கு வரு(சி)சத்துக்கு வரு(சி)சம் கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும் உண்டான காலத்துக்கும் சந்திராதித்தவரைக்கும் பூத்திர பவுத்திர பாரம்பரியமாக பத்திக் கொள்வதாகவும் வேதவினாயகன் துணை(பே) பொன் 46 உ*


## செப்பேடு எண் 2

*சுவசித்தி ஸ்ரீ மகாமண்டலேசுபரன் ராசாதி ராசன் ராசபரமேசுரன் ராசமாத்தாண்டன் ராசகெம்பீரன் ராச உத்தண்டன் கண்டனாடு கொண்டு கொண்ட னாடு குடாதான் யெம்மண்டலமுங் கொண்டு ஈழமுந்துறை கொண்டவன் துலுக்கர் மோகந் தவிர்த்தவன் ஒட்டியர் கொட்டந் தவிர்த்தவன் பாஷைக்குத் தப்புவராத கனடன்*

வேலூர் தேவ மகராயர் மல்லிகாற்ச்சுயண ராயர் வீரவசந்த ராயர் கோபால ராயர் கிஷ்ன ராயர் அச்சுதப்ப னாயக்கர் செவ்வப்ப னாயக்கர் விசைய ராகுவ னாயக்கர் ஏகோசி மகராசா சகசி மகராசா சரபோசி மகராசா துளசி மகராசாப் பாவா சாயெபு அன்னா சாயெபு னானா சாயெபு ரா பிரதாபிசிங்கு மகராசா இப்படிப் பிறுதிவி ராச்சிய பரிபாலனம் பண்ண அருளா நின்ற சலியவகனத்தம் 1680 கலியுகம் 4860 இதன் மேல் செல்லா நின்ற இசுர வய்யாசி மீ 2உ ராசராச வளனாடு ராசேந்திர சோழவளநாடு மல்லாரி விருதுள்ள னாடு அடைக்கலங் காத்தனாடு கடலேழுவில்க் கடைகாவல் கொண்ட னாடு வில்லுக்கு விசையனைப்போலவும் சொல்லுக்கு அரிச்சந்திரனைப் போலவும் அழகுக்கு மன்மதனைப் போலவும் குதிரைக்கு நகுலனைப்போலவும் யானைக்கு தேவேந்திரனைப் போலவும் அறிவுக்கு அதத்தியனைய் போலவும் குடைக்குக் கற்னனைப் போலவும் புகழ்பெற்ற நாடுவளவன் பல்லவ திரையன் முன்பாக கல்லூர் நெல்லூர் வெட்டிச் செயங்கொண்டனாடு பொய்யூர்க் கூத்தத்துப் பாப்பாகுடி னாட்டில் மேல்கரை கீழ்கரையிலிருக்கும் பதினாறு கரைக்குள்பட்ட கரைப்பேர்கள் சகலரும் செயங்கொண்ட னாத சுவாமியாருக்கு தற்ம சாதனப் பட்ட(ய)ம் பண்ணிக்குடுத்த படி தற்ம சாதனப் பட்டயமாவது அம்பளகனி நிமித்தியம் னாட்டார் பொற்கொது சுவாமிக்கு பிராத்தினை பண்ணிக்கொண்டு போயி கல்லூர் நெல்லூரும் வெட்டி அபித்துகனியும் மரத்தோடே கொண்டுவந்த படியினாலே நிகரம் அமித்துக் கோவிலும் கட்டிவச்சு செயங்கொண்ட னாதர் என(ச) அதற்கு பூசைக்கு நடத்தவேண்டியதுக்கும் தாழ்வு வராமல் திட்டபாடுறாத் தடுக்குக்குடுத்து உச்சிக்கால(க)ட்டளைக்கு னாட்டில் வச்சு குடுத்து ராசகோபாலச் சக்கரம் பொன் 45க்கு னாற்பத்து அஞ்சு பொன்னும் வருஷசத்துக்கு வருஷசம் எளருப்புக் காம்புலே ரெண்டு பங்கும் பேரம்பலத்திலே மூணு பங்குமாயி பத்திக்கொண்டு கோவில் பூசை நிறவேறபண்ணிவிச்சுக் கொண்டு வருவதாகவும் இந்த னாற்பத்து அஞ்சுபொ ன்னுக்கு விபரம் மேல்கரையில் கரை 8 க்கு பொன் 22 பணம் 5ம் கீழ்கரை 8ம் பிளா பட்டுக்கு பொன் 11 பணம் 2 1/2 ம் வெள்ளூர் பொன் 5 பணம் 6 1/4 கரம்பையூர் பொன் 5 பணம் 6 1/4 ஆக கீழ் கரை மேல்கரையில் கரை 16க்கு 1க்கு பொன் 45 இந்த நாற்பத்தஞ்சு பொன்னும் விபரப்படிக்கு வருஷசத்துக்கு வருஷசம் கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும் உண்டான காலத்துக்கும் சந்திர ஆதித்த வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரைக்கும் பத்திக் கொண்டு கோவில்பூசை தவக்கமில்லாமல் பண்ணி வருவதாகவும் இந்த தற்மத்தை யாதாமொரு(த்)தர் பரிபாலனம் பண்ணி வரு(கு)றார்களோ அவர்களுக்கு கெங்க கரையில் ஆயிரங்கோடி சிவாலையம் பண்ணின பலனும் ஆயிரங்கோடி விறுமப் பிறதிஷ்ட்டை பண்ணின பலனும் ஆயிரங்கோடி காராம்பசுவைப் பூசித்த பலனும் மாதாபிதாவை பூசித்த பலனும் குருவைப் பூசித்த பலனும் அனுபவித்துக்கொண்டு சுகத்திலே இருப்பார்கள் இந்த தற்மத்துக்கு யாதாமொரு(த்)தர் விகாதமாயி நினைத்தாலும் அவர்கள் முன் எழுதின தற்(ம)ங்களுக்கு எல்லாம் விகாதமி பண்ணினால் எந்தத் தோஷம் உண்டோ அந்தத் தோஷ(ச)த்தில் போவார்கள் இந்தப்படிக்கு சம்மதித்து செயங்கொண்டனாத சுவாமியாருக்கு பாப்பா நாட்டவர்கள் பதினாறு கரைப்பேரும் பட்டயம் பண்ணித் தொட்டு குடுத்தோம் இந்தப் பட்டயம் எழுதின நன்மைக்கு சிறுகளத்துடைய ராமலிங்க பி(ள்)ளை நெட்டெழுத்து உ யிந்த தாம்பிர சாதனம் எழுதின நம்மைக்கு அறுணாசலத்து மகன் நாறயணன் கயி எழுத்து உ

## செப்பேடு எண் 3

ஸ்வ்வாழிசிமன் மகாமண்டலேசுரன் அரியராயர் தள விபாடன் பாஷைக்குத் தப்புவராத கண்டன் கண்ட



நாடு கொண்ட நாடு குடாதான் துட்ட நிட்டுரன் சிஷ்ட பரிபாலனஅ பூறுவ தெக்ஷண பச்சிம உத்தர சத்தா() (ச)முத்திராதிபன் இம்மண்டலமுங் கொண்டு ஈழமும் துறை கொண்ட ராசாதிராசன் ராச பரமேசுரன் ராச மாத்தாண்டன் ராச கெம்பீரன் ராசாக்கள் தம்பிரான் ராசர் குல திலகன் ராச குல கெடிதீரன் மேதினி பாவர் கண்டன் கட்டாரிச் சாளுவன் கட்டாரி ராயன் கோப தன விபாடன் கோவிப்பார் கண்டன் ஒட்டியர் ரண போடன் ஒட்டியர் மோகந் தவிழ்த்தான் துலுக்கர் றன விபாசன் னுலுக்கற் மோகந் தவிழ்ருன் ஸ்ரீவீரப்பித்தாபன் சோமமண்டல ஸ்தாபனாச்சாரியன் பாண்டி மண்டலபரிற்தாபனா சாரியன் (பாண்டி மண்டல ப்ரிற்தாபனாசாரியன்) வலியச் சருவி வலுவில்க்கால் நீட்டி நாவுலகம் பொருந்தீவுக்கு நாயகன் பிதவுட தேவமகராயர் அச்சுதத்தேவ மகாராயர் மல்லிகாற்சுன விருபாக்ஷராயர் ஸ்ரீரங்கராயர் ஆனைக் கொந்தி மகாராயர் கிற்ஷன தேவ மகாராயர் அச்சுதப்ப நாயக்கர் சேவப்ப நாயக்கர் விசைய ராகுவ நாயக்கர் ஏகோசி மகாராசா சகசி மகராசா சரபோசி மகாராசா வாவா சா(ய)பு மகராசா ரா பிறதாபசிங்கு மகாராசா இவர்கள் பிறிதிவுறாச்சிய பரிபாலனம் பண்ணிச் செல்லாநின்ற சாலிவாகன சகாத்தம் 1680 கலியுகம் 4861 உக்கு மேல் செல்லாநின்ற வெகுதானிய ஆனி மீ 16 உ உத்த(ர)யண புண்ணிய காலத்தில் சோமவார சுபதினத்தில் கூடிய புண்ணிய காலத்தில் சோழமண்டலம் காவே( )ரியாத்து பிரிவு விண்ணாத்துக்குத் தெ(ற்)கு வீரம நலூர்ச் சாவடிக்கு வடக்கு ராசராச வளவ நாடு ராசகெபமாணாடு ராசேந்திர சோழ வளநாடு பானஅப வளநாட்டில்ச் செறு நலரிக் கோட்டையிலிருக்கும் காணியுடைய அரசாளி யிந்திர குலவதரித்தோன் ஒன்னலார் வணங்காச் சொன்ன வாய்துலைத்தோன் மும்முரசுடையோன் அனும கேதனன் படை வஞ்சாத கண்டன் யெதுத்தவர் குடாரி வாகையந்தார் மார்பன் வற்கால தற்கன் வடுகர் குல ராக்கன் விசையமே படைத் தென்கடலெழுவில்க் சுடைக்காவல் கொண்டருள்வோன் ஆழிபோல் வரைபோல் ஆடக வரைபோல் யேழு நாட்டினில் இசைவளர்சிங்கம் நெல்லூர் கல்லூர் நிருபரை நடிந்தூம் அலூர் அறாத்தன் வீரராதித்தன் விரகங்கண் தாந வீரமல்லாரி விருது பெத்துயந்தோன் செம்பொன்மாரி திறை கொண்டு வந்தவன் கம்பர் ஒட்டக்கூத்(த)ரின் கவிகொண்டருள்வோன் வாயளப்பாற் கண்டன் அம்பலம் கனியைச் செம்பியற் குதவியும் நல் சங்கர நாரணர் பத(த்)தில் அன்புறுபாம் பைக்கரசென்னை சுந்தோன் சுவாமி கா(ர்)ய தூரந்தான் அனூமகொடி செயக்கொடி அம்புளிக்கொடி(ம்) மருப்புலி கற்பக மாலையும் படைத்தோன் ராயமானியஸ்ரீ சவ்வாயி விசைய ரெகுநாத மெய்க்கன் கோபாலரவர்கல் குமாரன் ரா ஸ்ரீ சவ்வாயி விசைய ரெகுநாத வாளோசி மெய்க்கண் கோபாலரவர்கல்

பாக்கா நாட்டில் காணியா இருக்குற செயங்கொண்ட நாத சுவாமியாருக்கு தற்ம சாதன பட்டையம் ப(ண்)ணிக் குடுத்தபடி தற்ம சாதன பட்டையமாவது கொல் காலந்திக் கட்டளைக்கு (நா)ள் 1க்கு பணம் 2 ஒரு வருசம் 1க்கு ராச கோபால சக்கரம் பொன் 72 சுக்குற வாரம் வாரக் கட்டளை மீ 1க்கு பொன் 1 பணம் 6 ஆக 1க்கு பொன் 19 பணம் 2 க்கு வகை 2க்கு 1க்கு ராசகோபால சக்கரம் பொன் 91 பணம் 2 இந்தப்படிக்குத் தொண்ணூத்தொரு பொன்னு ரெண்டு பணமும் வருஷாசலம் வாங்கிக் கொண்டு கோவில் பூசை தாட்சி வராமல் பண்ணி வருவோமாகவும் இந்தப் படிக்கு வருஷத்துக்கு வருஷம் கல்லும் காவே( )ரியும் புல்லும் பூமியும் உண்டான வரைக்கும் சந்திராதித்தால் புத்திர பவுத்திர பாரம்பா ரியமாக பத்திக்கொள்ளுவதாகவும் யிந்த தற்மத்தை யாதாமொருவன் பரிபாலனம் பண்ணினானாகில் காசியிலே கோடி சிவலிங்க பிரகிஷ்ட்டையும் கோடி விஷ்ட்ணு பிரதிஷ்ட்டையும் அனேக அசுவமேதங்கு



பண்ணிவிச்ச பலத்தை யடைவார்கல் யிந்த தற்மத்துக்கு யாதாமொருவன் விகா(த)ங்கள் செயிதானாகில் கெங்கைக் கரையிலே அனேகமான சிவாலயங்கள் விஷ்ண ஸ்தலங்களை கெடுத்த பாவத்திலே போவானா(க)வும் அறிந்தா நடப்பிவிக்க கடவராகவும் யிந்த பட்டையம் சாதனம் எழுதின நன்மைக்கு அஸ்தாந்திரம் பெத்த பெருமாள் குமரன் அருணாசலம் விகிதம் உ பொன் 11 பணம் 2க்கு உ 11 பணம் 2க்கு கோபாலர் துணை உ

## செப்பேடு எண் 4

### முதல்பக்கம்

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுரன் ஆரிய ராயர் தள வீபடன் பாஷைக்கு தப்பு வராத கண்டன் (கன்) கண்ட நாடு கொண்டு கொண்ட னாடு குடாதான் துட்டரில் து(ட்)டன் துட்(ட) நிட்டுரன் சிஷ்ட்ட பரிபாலனன் பூற்வ தெட்சண பச்சிண உத்தர சத்த சமுத்திராதிபன் இம்மண்டலமுங் கொண்டு ஈழமும் துறைகொண்ட ராசாதி றாசன் ராச பரமேசரன் ராச மாற்த்தாண்டன் ராச கெம்பீரான் ரா(சா)க்கள் தம்பிறான் ரா(ச)குல திலகன் ராச குல கெம்பீரான் மேதினி பாவர் கண்டன் கட்டாரிச் சாளுவன் கட்டாரி ராயன் கோபகனி விபாடன் கோவிப்பர் கண்டன் ஒட்டியர் தள விபாடன் துலுக்கர் மோகன்நதவிழ்த்தான் ஸ்ரீ வீராப்பிறதாபன் சோஷமண்டல ஸ்தாபநாசாரியன் பாண்டிமண்டலப் பிறதாபத்தாசாரியன் வலியச் சரிவில்லி வில்கால் நீட்டி நாடு வாலகம் பெருந்தீவுக்கு னாயகன் புறவிட தேவமகாராயர் அச்சுததேப மகாராயர் மல்லிகாற்ச்சுந விருபாட்சிராயர் ஸ்ரீ ரெங்கராயர் ஆனை குந்தி மகாராயர் கிஷ்ணதேவ மகாராயர் அச்சுதப்ப னாயக்கர் சேவப்பனாயக்கர்விசைய ராகவ னாயக்கர் யேகோசி மகாராசா ஸஹஜி மகராசா சாரபோசி மகாராசர் வாவா சாயுப்பு மகராசா ராபுப பறாதாப சிங்கு மகராசா இவருகன்ப் பிறிதிவி ராச்சியம் (ப)ரிபாலநம் பண்ணி செல்லா நின்ற சாலிவாகன சகா ஆழுத்தம் 1680 கலியுகம் 4862 இதின் மேல் பிறமாதி தையி மீ 21 உ உத்தராயண புண்ணிய காலத்தில் குருவார சுபநினத்தில் பூசநட்சத்திரா சுபதினத்தில் குடிய புண்ணிய காலத்தில் சோஷமண்டலம் காவேரியாத்துப் பிறிவு வெண்ணாத்துக்கு தெற்கு வீராமத்தல்லூர் சாவடிக்கி வடக்கு ராசராச வளநாடு ராசகெம்பீரா நாடு ராசேந்திர சோஷ வளநாடு பாம்ப வளநாட்டி(ல்) சிறு நெல்லிக் கோட்டையில் இருக்கும் காணியுடைய அராசர்களில் இந்திரர் குலத்தில் வத்தோன் ஒன்னலார் வணங்காச் சொன்ன வாயி துளத்தோன் மூன்(று) மொற சுடையோன் அனும கேதநன் படையில் ஆஞ்சாத கண்டன் யெதுத்தவர் குடாரி வாகை ஆத்தா(ர்)மார்பின் வறத்தால் கர்த்தன் வடுகவ் குலராக்கன் விளமணவாளன் விசையமே படைத்தோன் கடல் ஏழும் வில்க்கடைக்காவல் கொண்டறள்வோன் அழிபோல் வரைபோல் ஆடகவரை போல் ஏழுனாட்டுநில் இசைவளர் சிங்கம் நெல்லூர் கல்லூர் நிருப்பனூர்த் தடித்து மல்லூர்ப் புயத்தன்வீரராதித்தன் வீராகங்கன் தான வீராமல்லாரி விருது பெ(த்)துமந்தோன் செம்பன் மாரி தெறை கொண்டு வெந்தவன் கம்பார் ஒட்டை(க்கூ)த்தன்க் கவி கொண்டறுண்வோன் வாயிப்பார் கண்டன் ஆம்பளம்ங் கனியை செம்பியர் ஓதவாயும் நண்மை பெராறும் சங்கரானாறாணிர் பதத்தால் அம்புறு பாம்பைத் தாரணை விடுத்தோன் சுவாமி காரிய துராந்திரானான அனுமக்கொடி சேவக்கொடி அம்புலிக் கொடியும் மறப்புலி கற்பக மாலையும் படைத்தோன் ராச மானிய ராச ராசவாயி விசைய ரெகுனாத கிஷ்ண மெக்கன்ங் கோபாலர் அவருகள் குமரரான ராசவாயி விசைய தெகுனாத பொன் 40 கோபாலர் துணை ரெகுனானங் கோபலர் அவருகள் பாப்பா நாட்டுக் காணியாக இருக்குற(ரர்) செயங் கொண்டனாத சுவாமியாரு தற்ம்ம சாஸந பட்டையம் பண்ணி குடுத்தபடி தற்ம்ம சாஸன பட்டையமாவது கோவில் ஸாயரெட்சை பூடை கட்டளைக்கு வருசம் 1 இத்த(த)நாற்பது பொண்னும் வாங்கிக் கொண்டு கோவில்ப்பூசை தாட்சி வராமல் பண்ணி வருவோமாகவும் இந்தப்படிக்கி வருஷத்துக்கு வருஷம் கல்லும் ங் காவேரியும் புல்லும் பூமியும் உண்டான வரைக்கும் சந்திராதித்தாள் புத்திற பவுத்திற பாரம்பரைக்குமாகப் பத்திக் கொள்ளுவதாகவும் இந்த தற்ம்மத்தை யாதாமொருவன் பரிபாலநம் பண்ணினானாகில் காசியிலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டையும் கோடி விஷ்னுப் பிறதிஷ்(டை)யும் அநேகம் அஸ்(வ)மேதங்களும் (ப)ண்ணின பலத்தை அடைவார்கள் இந்த தற்ம்மத்துக்கு யாதாமொருநன் விகாதம்ங்கள் செயிதானாகில் கெங்கைக்கரையிலே அனேகமான சிவாலயங்கள் விஷ்(ணு)

### இரண்டாம் பக்கம்

நாமங்களைக் கெடுத்த பாவத்திலே போவானாவது (இ)தறிந்து நடப்பிவித்த கடவேராகவும் இந்த பட்டையம் எழிதின நன்ம்மைக்கு அட்டவணை அஸ்த்தாத்திராம் சீதாராமய்யன் குமாரன் முத்தய்யன் லிகிதம் ஸ்ரீ ராமஜெயம்.



வெண்ணைக் குடத்துடன் கோபாலன்



தேவியோடு கோபாலன்



காவிரிப்பூம்பட்டினத்துக் கிடைத்த பொன் முலாம் பூசிய பௌத்த உரு
போதிசத்வ மைத்ரேயர். பல்லவர் கலை 1300 ஆண்டுகட்கு முற்பட்டது.



கடாரத்து அரசன் (மலேசியா, சுமத்ரா, ஜாவா நாடுகள்)
நாகப்பட்டினத்தில் தன் தந்தையின் பெயரால் கட்டிய பௌத்த விஹாரத்தில் வழிபாட்டிலிருந்த
புத்தர் பொன் பூசப்பட்டது. லண்டன் Victoria Albert Museum - த்தில் உள்ளது.

படம்: இரா. நாகசாமி.

# நாகப்பட்டினமும் - மாவட்டமும் ஒரு கண்ணோட்டம்

**R. பாஸ்கரன் I.A.S.**
மாவட்ட ஆட்சியர்
நாகை காயிதேமில்லத் மாவட்டம்

தமிழகத்து மாவட்டங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது, நாகை காயிதேமில்லத் மாவட்டத்தின் பெருமைகளுக்கும், வரலாற்றுச் சிறப்புகளுக்கும் ஈடாக மற்றொரு மாவட்டத்தைக் கூறுதல் இயலாது. சோழநாடு அல்லது சோழ மண்டலம் எனும் பரந்த நிலப்பரப்பு திருச்சி, தஞ்சை, நாகை, தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி, புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதே ஆகும். சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளுள் தலையாயதாகப் பேசப்பெறும் பெருமை உடையது சோழ நாடே. அதிலும் அதன் விஞ்சிய பெருமைகளுக்குக் காரணமாய் நிற்பது நாகை மாவட்டத்தின் தன்னிகரற்ற சிறப்புகளேயாகும்.


### தலைநகரம்

கடற்றுறை நகரமான நாகப்பட்டினம் சோழப்பெருமன்னர்கள் காலத்தில் ஒரு கூற்றத்தின் தலைநகரமாக விளங்கியது. இராஜராஜசோழன் தனது பட்டப் பெயர்களில் அழைத்த சத்திரியசிகாமணி வளநாட்டில் இப்பட்டினக் கூற்றம் இருந்தது. இவ்வூருக்கு நாகப்பட்டினம் என்ற பெயரோடு 'சோழகுலவல்லிப்பட்டினம்' என்ற சிறப்பு பெயரும் இருந்தது. இந்நகரின் தொன்மை பற்றிய குறிப்புகள் கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பர்மாநாட்டு விவரணச் சுவடி ஒன்றின் இறுதிப் பகுதியில் காணப்பெறுகின்றது. இங்கு அசோகப் பெருமன்னன் எழுப்பிய புத்தவிகாரம் (புத்தர் கோயில்) ஒன்று இருந்தது என்ற குறிப்பும் அச்சுவடியிலேயே குறிக்கப்பெற்றுள்ளது. இந்த புத்தர் கோயிலைப் பற்றி சீனநாட்டுப் பயண எழுத்தாளர் யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார். நாகப்பட்டினத்தின் முற்காலப் பெயரான "படரித்த" என்பது தொன்மையான புத்தநூல்களில் குறிக்கப்பெற்றுள்ளன. இன்று நாகையில் உள்ள "அவுரித்திடல்" என்னும் இடப்பெயர் "படரித்த" என்பதின் திரிபாகலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். பாலிமொழியில் படரி என்பது இலந்தை மரத்தைக் குறிக்கும். இலந்தை மரங்கள் அடர்ந்த பகுதியாகவும் இக் கடற்றுறை இருந்திருக்கலாம்.

"நாகநாடு", "நாகத்தீபம்" என்றெல்லாம் பழங்காலத்தில் கூறப்பட்ட தீவு இலங்கைத் தீவாகும். அங்கிருந்த பௌத்த துறவிகளுக்கும் இந்நகரத்திற்கும் மிகுந்த தொடர்பு இருந்தது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் காசிபதேரர் எனும் பௌத்த துறவி நாகை நகரில் பழுதுபட்டிருந்த புத்த கோயிலினை நாகர்கள் உதவியோடு (நாகநாட்டுப் பௌத்தர்கள்) புதுப்பித்ததை குலோத்துங்க சோழன் காலத்து ஆனைமங்கலம் செப்பேடு குறிக்கின்றது. அதன் பிறகு இவ்விகாரம் நாகர் + அனனம் + விகாரை = நாகானனவிகாரை எனப் பெயர் பெற்றது. பல்லவப் பேரரசன் இராஜசிம்மன் (கி.பி. 690-728) சீனமன்னன் ஒருவனுக்கு நாகப்பட்டினத்தில் பௌத்தப்பள்ளி ஒன்று எழுப்ப அனுமதியளித்தான். இதனால் சீனர்களால் கட்டப்பெற்ற பௌத்தப் பள்ளி ஒன்று இங்கு இருந்தது. விசயம் எனும் நாட்டு அரசனான விஜயோதுங்கவர்மன் நட்புறவுக்காக இராஜராஜசோழன் பெயரில் "இராஜராஜபெரும்பள்ளி" என்றும் முதற்குலோத்துங்கன் பெயரில் கடாரத்து அரசனால் கி.பி. 1090 இல் எடுக்கப்பெற்ற "இராஜேந்திர சோழ பெரும்பள்ளி" எனும் பெயர்களில் திகழ்ந்தன என்பதை ஆனைமங்கலம் செப்பேடுகள் (Laiden Museum copper plates) வாயிலாக அறிகிறோம். இப்புத்தர் கோயில் சூடாமணி விகாரம் என்றும் அழைக்கப்பட்டது. இப்பள்ளிகள் இருந்து அழிந்த இடமான வெளிப்பாளையத்தில் 300க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் புதைந்திருந்ததை அகழ்வாய்வு மூலம் கண்டுபிடித்து சென்னை அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். இங்கிருந்த பௌத்தப் பள்ளியின் இடிபாடுற்ற கோபுரத்தை 200 ஆண்டுகளுக்கு முன்பு இடித்துவிட்டனர். நாகர்கள் மிகுந்து வாழ்ந்த ஊர் என்பதால் நாகூர் (நாகர்+ஊர்) எனவும் அழைக்கலாயினர். நாகைப்பட்டினத்திலுள்ள காயாரோகணம் எனும் சிவாலயம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே

திகழ்ந்ததாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரது வரலாற்றோடு தொடர்புடைய திருக்கோயிலாகும். கயோரோகணம் என்பதை லகுளீசபாசுபத நெறியின் அடிப்படையில் தோன்றிய கோயிலென்பர். அதேபோன்று கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் திருமங்கை மன்னன் பாடிய சௌந்தரராஜபெருமாள் கோயிலும் இவ்வூரில் இருப்பது குறிப்பிடத்தக்க பழம்பெருமைகள் ஆகும்.

சோழப் பெருமன்னர்கள் காலத்தில் சிறப்பிடம் பெற்ற இந்நகரம் விஜயநகரப் பேரரசர்களாலும் போற்றி மதிக்கப்பெற்றது. தஞ்சை நாயக்கர் செவ்வப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர் ஆகியவர்கள் காலத்தில் இங்கு போர்த்துகீசியர்கள் வணிக மையம் தொடங்கினர். கி.பி.1554 இல் இவ்வணிகமையம் உதயமாயிற்று. அப்போது முதல் இங்கு கிருத்துவமும் வேரூன்றிற்று. இவ்வணிகமையம் துவங்கும்போது 10 கிராமங்கள் அவர்களது மேற்பார்வையில் வணிக ஒப்பந்தப்படி அளிக்கப்பெற்றது. போர்த்துகீசியர்களின் வரவால் தோன்றியதே வேளாங்கண்ணி தேவாலயமாகும்.



கி.பி. 1658 இல் டச்சுக்காரர்கள் நாகப்பட்டினத்திலிருந்த போர்த்துகீசியர்களை விரட்டிவிட்டு தாங்கள் வணிகமையம் ஏற்படுத்துவதில் முனைந்தனர். தஞ்சை நாயக்கமன்னர் விஜயராகவநாயக்கருடன் 5.1.1662இல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். இதன்படி முன்னர் போர்த்துகீசியர் வசம் இருந்த நாகப்பட்டினக்கோட்டையும், புத்தூர், முட்டம், பொருவலச்சேரி, அந்தோணிப்பேட்டை, கருவேப்பங்காடு, அழிஞ்சிலமங்கலம், சங்கமங்கலம், நிருத்தினமங்கலம், மஞ்சக்கொல்லை, நறியங்குடி ஆகிய 10 கிராமங்களும் டச்சுக்காரர்களின் கீழ் இருந்தன.

டச்சுக்காரர்கள் நாகப்பட்டினத்தில் இருந்தபோது 10 சிறிய கிருத்துவ தேவாலயங்களும், ஒரு மருத்துவமனையும் ஏற்படுத்தினர். நாகப்பட்டினம் என்ற தமிழ் எழுத்தோடு காசுகளும் வெளியிட்டனர்.

தஞ்சையில் முதல் மராட்டிய மன்னரான ஏகோஜி டச்சுக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நாகப்பட்டினத்தையும் சுற்றியுள்ள ஊர்களையும் 30.12.1676 இல் வழங்கினார். இதன் பின்னர் கி.பி.1781இல் நாகப்பட்டினம் பல போராட்டங்களுக்குப் பின்பு ஆங்கிலேயர் வசமாயிற்று. 1779இல் கம்பெனியாருக்கு நாகூரை தலைமை இடமாகக் கொண்ட 277 கிராமங்களை எழுதிக்கொடுத்தார். தஞ்சை மராட்டியமன்னர்கள் காலத்தில் "நாகப்பட்டினம் வராகன்", "நாகப்பட்டினம் ஹோன்னம்" என்ற பெயரில் தங்கக் காசுகள் புழக்கத்தில் இருந்தன. இவ்வாறு இரண்டாயிரத்துமுன்னூறு ஆண்டுகள் வரலாறு உடையதாக இப்பெருநகரம் திகழ்ந்திருக்கிறது. அதுவே கிழக்குத் தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாக தற்காலத்தில் பெரும் புகழுடன் திகழ்ந்து வருகிறது.

### *இம்மாவட்டத்தின் தலையாய பெருமைகள்*

தமிழும், சமயமும் வளர்த்த சான்றோர்கள் வரிசையில் சமயத் தமிழுக்குச் சிறப்பிடம் கொடுத்த தேவார மூவருக்கும் நெருங்கிய தொடர்புடையது இம்மாவட்டம். திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் சீர்காழியாகும். திருநாவுக்கரசர் மறைந்த ஊர் திருப்புகலூராகும். சுந்தரரின் தாயார் இசைஞானியார் பிறந்த ஊர் திருவாரூராகும். வைணவ இலக்கியத்திற்குப் பெருந்தொண்டாற்றிய திருமங்கை மன்னன் பிறந்த ஊர் சீர்காழிக்கு அருகிலுள்ள திருக்குறையலூர் (திருவாலிதிருநகரி) என்பதே.

ஆழ்வார்களின் பாசுரங்கள் பெற்ற தலங்களைத் திவ்ய தேசம் என அழைப்பர். சோழநாட்டு திவ்ய தேசங்கள்

மொத்தம் நாற்பது ஆகும். இதில் திருச்சி, தஞ்சை தென் ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி அடங்கிய சோழ நாட்டில் இருப்பவையோ 18 தலங்கள்தான். ஆனால் இவ்வரிசையில் 22 தலங்கள் நாகை மாவட்டத்தில் மட்டுமே உள்ளன. இதே போன்று தேவாரப் பாடல்கள் பெற்ற சோழநாட்டுத் திருவூர்களில் பெரும்பாலான தலங்கள் நாகை மாவட்டதிலுள்ளன.

உலகக் கலை வரலாற்றில் பல்லவர், சோழர்காலச் செப்புத் திருமேனிகளே தலையாய இடம்பெற்று நிற்கின்றன. நாகைமாவட்டத்து வடக்காலத்தூர் கல்யாணசுந்தரர், பருத்தியூர் இராமர் ஆகிய திருமேனிகளை உலக கலை இயல் வல்லுநர்கள் முதலிடம் கொடுத்து போற்றுகின்றனர். இவை இரண்டுமே நாகை மாவட்டத்து கலைப் பொக்கிஷங்களாகும்.

சங்ககாலச் சோழர்களின் தலைநகரமும் காவிரி கடலோடு சங்கமிக்கும் இடத்தில் திகழ்வதுமான பூம்புகார் எனும் காவிரிப்பூம்பட்டினம் நாகை மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமைகளுக்கு மகுடமாய் நிற்பதாகும். இதேபோன்று சங்ககாலச் சோழர்களின் கோநகரங்களாகத் திகழ்ந்த ஆரூர், குடவாயிற்கோட்டம் ஆகிய ஊர்களும் நாகைமாவட்டத்திற்குரியவையே.

பாண்டியமன்னன் நெடுஞ்செழியன் இளைஞனாய் இருந்தபோது அவனை சேரன், சோழன், ஐம்பெரும்வேளிர் ஆகியோர் ஒன்றுகூடி எதிர்த்தனர். இளைஞன் ஒருபுறம், எழுபெரும் மன்னர்கள் எதிர்புறம். இவர்கள் போர்புரிந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் தலையாலங்கானம். இப்போரில் இளைஞன் நெடுஞ்செழியன் வென்று புகழ் எய்தினான். தன் பெயரை தலையாலங்கானத்துச் செறுவென்ற நெடுஞ்செழியன் எனவும் மாற்றிக்கொண்டான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்நிகழ்ச்சி நிகழ்ந்த தலையாலங்கானம் தற்போது தலையாலங்காடு என்ற பெயரில் திருவாரூர், குடவாசல் நெடுஞ்சாலையில் திகழ்வதை காணும்போது வரலாற்று ஏடுகளில் இம்மண் பெற்ற பெருமைகளை நன்கறிகிறோம்.

நரசிம்ம பல்லவனின் தானைத் தலைவனாகச் சென்று வாதாபியை வென்று, வாதாபி விநாயகரைத் தமிழ்மன்னுக்கு கொண்டுவந்ததோடு, சிறுத்தொண்ட நாயனாராகவும் சைவ அடியார்கள் வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற பரஞ்சோதி எனும் பெருமகன் பிறந்த மண் திருச்செங்காட்டங்குடி எனும் நாகை மாவட்டத்து ஊரேயாகும்.

சோழர்களின் கோயிற்கலை மரபில் தனிச்சாதனை புரிந்த சோழப்பேரரசி செம்பியன் மாதேவியார் பெயரால் அவராலேயே தோற்றுவிக்கப்பெற்ற செம்பியன் மாதேவி எனும் ஊர் நாகப்பட்டினத்திற்கருகாமையில் இருப்பதும், அங்கு இராஜேந்திர சோழன் எடுத்து விழா கொண்டாடிய செம்பியன் மாதேவியாரின் உருவச்சிலை இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆண்டுதோறும் இவ்வூரில் சித்திரை கேட்டை நாளில் விழா எடுத்து அவ்வம்மையாரை நினைவுகூறும் நன்றிக் கடப்பாடுடைய மக்கள் வாழ்வதும் இம்மாவட்டத்தின் பெருமையிலும் பெருமையல்லவா?

அறுபத்து மூன்று நாயன்மாரில் . தன் உறுதிப்பாடுடைய தூயமனத்தால் சிவப்பேறு பெற்ற அதிபத்தர் என்ற நாகப்பட்டினத்து செம்படவர்க்கு, திருக்கோளிலி எனும் திருக்குவளையில் சிலை எடுத்து நாளும் வழிபாடு செய்யும் சிறப்பு பெற்ற மாவட்டம் நாகையே.

கலிங்கத்துப் பரணி என்னும் தமிழ் இலக்கியம் தந்த ஜெயங்கொண்டார் பிறந்த ஊரான தீபங்குடி, ஒட்டக்கூத்தர் எனும் தமிழ்ப்புலவன் பிறந்த ஊரும், தான் வழிபட்ட




BRONZE IMAGE, PRESENTED TO LORD NAPIER IN 1868.

"ஆற்றங்கரை சொற்கிழத்தி" எனும் கலைமகள் கோயில் உள்ளதுமான கூத்தனூர், சேக்கிழார் பெருமானின் மூதாதையர்கள் வாழ்ந்த சேவூர் எனும் அச்சுதமங்கலம், தமிழ் இசை நாடகக் கலைக்கு உயிரூட்டிய அருணாசலக் கவிராயர் பிறந்த சீர்காழி, நந்தன்சாத்திரம் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் பிறந்த ஆனதாண்டவபுரம், கர்நாடக இசையின் பேரறிஞர்களான தியாகப்பிரம்மம், முத்துசாமி தீட்சிதர், சியாமாசாஸ்திரிகள் ஆகிய மூவரும் பிறந்த பதியான திருவாரூர், போன்ற பெருமைகளையுடைய பலவூர்கள் இம்மாவட்டத்தை அலங்கரிப்பது சிறப்பு அம்சமாகும்.

நாகூர் தர்க்கா, வேளாங்கண்ணி தேவாலயம், சிக்கல் சிங்காரவேலர் திருக்கோயில் ஆகிய மூன்றும் அனைத்து சமயத்தாராலும் சமய நல்லிணக்கத்தோடு போற்றப்பெறும் பெருமையோடு திகழ்வதுதான் இம்மாவட்டத்தின் பெருமைகளுள் தலையாயதாகும்.

கோடியக்கரை வனவிலங்கு சரணாயலமும், சதுப்புநிலக்காடுகளும் இம்மாவட்டத்திற்கு இயற்கை அன்னை தந்த பெரும் பரிசுகளாகும். நரிமணம் போன்ற இடங்களில் இயற்கை எரிவாயும், மன்னார்குடி பகுதியில் நிலக்கரி படிவ வளம் இருப்பதும் வளரும் அறிவியல் உலகிற்கு நாகை மாவட்டம் அள்ளித்தரும் அற்புதச் செல்வங்கள் என்பதில் ஐயமே இல்லை.



THE TOWER AS IT EXISTED IN 1846.

ANCIENT TOWER AT NAGAPATNAM.

# நாகை மாவட்டத்தில் இப்படியும் ஒரு கிராமம்...!

G. சீனிவாசன்
'இந்து' நிருபர்

கடுங்கோடைகாலச் சித்திரைமாதம். சிக்கல் சிங்கார வேலவர், வடக்காலத்தூர் கல்யாண சுந்தரர். ஸ்ரீதேவி பூதேவி சகிதரான பெருமாள் ஆகியோரை அந்த மாலைப்பொழுதில் தரிசனம் செய்த பிறகு சற்று தெற்கு நோக்கி பயணித்தோம். இருள் மங்க ஆரம்பித்தது. கோடை வெப்பத்தைத் தணிக்கும் இனிய தென்றல் வீசத் தொடங்கியது. தொலைவிலிருந்து இனிய நாதஸ்வர இசை தென்னைமர ஓலைகளுக்கிடையே பாய்ந்து வந்து மேலும் மனதை இதப்படுத்தியது. இந்த சுகானுபவம் மேலும் செல்லச் செல்ல கூடிக் கொண்டே வந்தது. காரணம் சிக்கல் கோயிலில் கண்ட சிங்கார வேலவரின் எழிற்காட்சியும், வடக்காலத்தூர் பல்லவர்கால கல்யாண சுந்தரரின் பேரழகுக்கோலமும், வடக்காலத்தூர் பெருமாளும் தேவியரும் காட்சிதரும் அருள்வடிவும் , கண்ணுக்குக் கிடைத்த பெருவிருந்தோடு மேலும் பயணிக்கும்போது மாலைக்குளிர்ச்சியும், இனிய தென்றலும், காதில் தேனாகப் பாயும் நாதஸ்வர இசையும் எப்படி இருக்கும். இப்படிப்பட்ட இனிய அனுபவத்தோடுதான் அந்த சிறிய கிராமத்திற்குள் நுழைந்தோம்.

ஊரின் பெயரோ செம்பியன்மாதேவி என்றார்கள். வரலாற்று நூல்களில் செம்பியன் மாதேவி என்ற சோழப்பேரரசி கண்டராதித்தர் என்ற சோழ அரசருக்கு மனைவியாகத் திகழ்ந்திருந்தார் என்று மட்டுமே படித்திருக்கிறோம். இப்படி ஓர் ஊர் இருப்பதை அன்று தான் அறிந்தோம். நாதஸ்வர இசை வந்த திக்கு நோக்கினோம். அவ்வூரின் தெருக்கோடி அது. அங்கே ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறார்கள் கூட்டம் கூடியிருந்தது. அங்கிருந்த மேடை மீது வரிசையாக உள்ள தட்டுகளில் பழங்கள், இனிப்புப் பொருள்கள், வகை வகையான பூக்கள், பெரியதட்டு ஒன்றில் பட்டுப் புடவை ஆகியவை இருப்பதைக் கண்டோம். ஊர்மக்கள் அனைவரும் ஊர்வலம் புறப்பட தயாராயினர். அவர்களுடைய சுரு சுருப்பும், ஆனந்தத்தையும் கண்ட நாங்கள் அக்கிராமத்து வீடு ஒன்றில் ஏதோ மங்கல விழா நடைபெறுகிறது என்று மட்டும் யூகித்தோம். மாலை 7 மணியாயிற்றே திருமணமாக இருக்க வாய்ப்பில்லை. பெண்கள் சடங்கு அல்லது திருமண நிச்சய விழாவாக இருக்கலாம் என்பதை அங்கு தட்டுகளில் இருந்த வரிசைப் பொருள்களைக் கொண்டு அனுமானித்தோம்.

சாலையில் சென்ற எங்களை வழிமறித்த பெரியவர் ஒருவர் தம்பீ வாங்க...வாங்க...எங்க ஊருக்கு வந்திருக்கீங்க ஊர்வலத்தில எங்களோட கலந்துக்குங்க...என்று பாசத்தோடு அழைத்தார். பெரியவரின் இனிய அழைப்பையும் மறுக்க முடியவில்லை...! அதே நேரத்தில் அறிமுகம் இல்லாதவர்கள் வீட்டுக்கு எப்படி போவது என்ற உறுத்தல். பெரியவர் விடுவதாக இல்லை. கையைப் பிடித்து இழுத்து ஊர்வலத்தில் கலந்து கொள்ள செய்து விட்டார்.

ஊர்வலம் தொடங்கியது. வானவேடிக்கைகள் முன்செல்ல தாரை, தப்பு முழங்க, நாதஸ்வர இசையோடும், பெட்ரோமாக்ஸ் விளக்குகளோடும் ஊர்ப்பெண்கள் தட்டுகளை ஏந்திவர அனைவரும் புடை சூழ மெல்ல

aavin

நலவாழ்விற்கு தூய்மையான தரமான 'ஆவின்' பாக்கெட் பாலைப் பயன்படுத்துங்கள்.

தஞ்சாவூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தஞ்சாவூர்.

நடக்கத் தொடங்கினர். பெரியவரிடம் ஐயா, நாங்கள் இந்த ஊருக்குப் புதியவர்கள், நாகை மாவட்டத்துக் கோயில்களை எல்லாம் பார்த்து வருகிறோம். இவ்வூரிலும் ஒரு நல்ல கோயில் இருப்பதாக அறிந்து அதனைப் பார்க்கவே வந்தோம். நீங்கள் நினைப்பது போல் உங்கள் வீட்டு விழாவுக்கு வந்தவர்கள் அல்ல என்று மெலிந்த குரலில் கூறினோம்.

இதனைக் கேட்ட பெரியவர் வாய்விட்டுச் சிரித்தார். "தம்பி இந்த வரிசையை சோழஅரசி செம்பியன் மாதேவிக்காக எடுத்து செல்கிறோம். அவங்க இராஜராஜ சோழனை வளர்த்த பாட்டி. இன்று சித்திரைமாதம் கேட்டை நட்சத்திரம். அவங்க பிறந்தநாள். அதோ அந்த பட்டுபுடவை அவங்க விக்கிரகத்துக்குத்தான். வருஷா வருஷம் நாங்க பட்டு சாத்துரது வழக்கம். வாங்க நாங்களும் கோயிலுக்குத்தான் போறோம். வந்து பாருங்க என்றார்.


ஒரு நிமிடம் அதிர்ந்து போனோம். 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்த பேரரசிக்கு 20 ஆம் நூற்றாண்டில் அதுவும் ஒரு குக்கிராமத்தில் ஊரே கூடி விழா எடுத்து கொண்டாடுகிறது என்பதை அறியும்போது வியந்து போனோம்.

செம்பியன்மாதேவி சதுர்வேதிமங்கலம் என இவ்வூருக்குப் பெயரிட்டு அங்கு ஓர் அழகான "கைலாசம்" என்றும் சிவாலயத்தை இப்பேரரசி கட்டுவித்துள்ளார்கள். இக்கோயிலுக்கு எண்ணற்ற நிவந்தங்கள் கொடுத்துள்ளதை அங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோயிலிலுள்ள சிற்ப அழகை எழுத்தில் வடிப்பது என்பது இயலாத காரியம்.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டொன்று, அரிஞ்சய சோழரின் தேவியாரும், இராஜராஜனின் தமக்கை குந்தவையும் 220 கழஞ்சு பொன்னை அளித்து சித்திரைக் கேட்டையில் இக் கோயிலில் செம்பியன் மாதேவியார் பிறந்த நாள் விழா கொண்டாடச் செய்ததைக் குறிக்கின்றது மேலும் இரண்டு கல்வெட்டுக்கள் கி.பி. 992 இல் உத்தமசோழரின் பட்டத்தரசியார் திரிபுவன மாதேவியார் சித்திரை கேட்டையில் கோயிலில் நடத்தப்பெறும் தம் மாமியாரின் பிறந்தநாள் விழாவுக்காக 100 பொற்காசுகளை முதற் பொருளாக வைத்ததையும், மேலும் உத்தம சோழரின் மனைவியர் எழுவர் தம் மாமியாரின் பிறந்தநாள் விழா கொண்டாட நிலங்களும் பொற்காசுகளும் அளித்ததையும் விவரிக்கின்றன.

கி.பி.1019 இல் கங்கை கொண்ட சோழனாம் முதலாம் இராஜேந்திர சோழன் செம்பியன்மாதேவியாருக்கு இக்கோயிலில் கல்லால் சிலை எடுத்து தெய்வமாக வழிபட்டதோடு, ஆண்டுதோறும் சித்திரை கேட்டையில் பிறந்த நாள் விழா எடுக்க நிலங்களும் கொடுத்தான். இன்று செம்பியன் மாதேவி கோயிலில் அச்சிலை அப்படியே உள்ளது. அதற்குத்தான் இன்று ஊரே கூடி அபிஷேக ஆராதனைகள் செய்து பட்டுப்புடவை சார்த்தி, வரிசைகள் எடுத்து வந்து விழாக்கொண்டாடுகின்றனர். இதுமட்டுமல்லாமல் சில ஆண்டுகளுக்கு முன்பு இத்தேவியாரின் உருவச்சிலையை செம்பால் செய்து உற்சவத் திருமேனியாகக் கொண்டு, சித்திரை மாத கேட்டை நாளில் இரவு அலங்காரம் செய்து திருவீதியில் உலாவரச் செய்கின்றனர். ஒரு பேரரசியை, சிவஞானச் செம்மல் கண்டராதித்தரின் தேவியை ஊரே கூடி தெய்வமாக இன்றும் வணங்குவதைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கின்றது.

கோனேரிராஜபுரம், விருத்தாசலம், திருவாரூர் அரநெறி, திருமணஞ்சேரி, தென்குரங்காடுதுறை, திருக்கோடிக்கா, ஆநாங்கூர், குத்தாலம், திருவக்கரை, திருச்சேலூர் (கோயில் தேவராயன்பேட்டை) போன்ற பல திருக்கோயில்களைக் கற்கோயில்களாக மாற்றி சோழர் கலை மரபில் "செம்பியன் மாதேவியார் பாணி" என்ற ஒரு புதிய மரபில் பல நூற்றுக்கணக்கான செப்புத் திருமேனிகளை படைத்து வரலாற்றில் நீங்கா இடம்பெற்ற செம்பியன் மாதேவியாரை மறவாத நாகை மாவட்டத்து செம்பியன் மாதேவி கிராமமக்களை நினைந்து நினைந்து போற்றுவோம்.



# நாகை மாவட்டத்துத் திவ்ய தேசங்கள்

எம்பெருமான் கோயில் கொண்டுள்ள திருப்பதிகள் எண்ணற்றவையாயினும், ஆழ்வாரகள், பரந்தாமனைப் பைந்தமிழ் கொண்டு பாடிய பதிகள் நூற்றெட்டே ஆகும். வைணவ மரபில் இவற்றை திவ்ய தேசங்கள் எனக் குறிப்பார். நூற்றெட்டு திவ்ய தேசங்கள் பற்றி குறிப்பிடும் பழம் பாடலொன்று.

*நாலு பத்துத் திருப்பதிகள் சோழ நாட்டில்*
*நல்லதமிழ்ப் பாண்டி, பதி நான்கினோடு*
*நாலு; மலைநாட்டினிலே ஈராறு ஒன்றாம்;*
*நடுநாட்டில் இரண்டுபதி; தொண்டை நாட்டில்*
*நாலைந்தோடு இரண்டுபதி; வடக்கு ஈராறு;*
*நற்பரம பதம் என்னும் திருநாடு ஒன்று;*
*நாலினுடன் ஆயிரம்சேர் ஆழ்வார் பாடல்*
*நவின்ற திருப்பதி இந்த நூற்றெட்டாகும்.*

என்று கூறுகின்றது.

சோழ நாட்டுத் தலங்கள் நாற்பது என்பது திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் நாகை காயிதேமில்லத், தென்ஆற்காடு வள்ளலார் மாவட்டம் என்ற நான்கு மாவட்டங்களில் அடங்கியவையாகும். இந்த நாற்பது தலங்களில் இருபத்திரெண்டு தலங்கள் நாகை மாவட்டத்தில் அடங்கி இருப்பது இம்மாவட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

ஆழ்வார்கள் பாடல்கள் பெற்ற நாகை மாவட்டத்துத் திவ்ய தேசங்களாகத் திகழ்பவை திருநாகை, திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருக்கண்ணபுரம், சிறுபுலியூர், திருவெள்ளியங்குடி, திருஅழுந்தூர், திருஇந்தளூர், காழிச்சீராம விண்ணகரம், திருவாலி திருநகரி, திருநாங்கூர் மணிமாடம், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், வண்புருடோத்தமம், செம்பொன்செய் கோயில், திருத்தெற்றியம்பலம், திருத்தேவனார்தொகை, காவாளம்பாடி, திருவெள்ளக்குளம், பார்த்தன்பள்ளி, தலைச்சங்க நான்மதியம் என்ற இருபத்திரெண்டு திருக்கோயில்களேயாகும்.

### *(1). திருநாகை (நாகப்பட்டினம்)*

திருமங்கை ஆழ்வாரின் 10 பாசுரங்கள் பெற்ற புனிதத் தலம். தொன்மையான கடற் துறை நகரம். நின்ற கோலத்தில் ஆழியும் சங்கும் ஏந்தி அருள் நல்கும் பெருமானின் திருநாமம் சௌந்தரியராசப் பெருமாள். தாயாரின் திருநாமம் சௌந்தரவல்லி. எம்பெருமானை திருமங்கை மன்னன் "நாகை அழகியாரை" என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

*"அன்னமும் கேழலும் மீனும் ஆய*
*ஆதியை நாகை அழகியாரை*
*கன்னிநன் மாமதின் மங்கை வேந்தன்*
*காமரு சீர்க்கலி கன்றி, குன்றா*
*இன்னிசை யால்சொன்ன செஞ்சொல் மாலை*
*ஏழும் இரண்டும் ஒரொன்றும் வல்லார்*
*மன்னவராய் உலகு ஆண்டு மீண்டும்*
*வானவராய் மகிழ்வு எய்து வாரே"*

### *(2) திருக்கண்ணங்குடி*

திருமங்கை மன்னின் 10 பாசுரங்கள் பெற்ற திருத்தலம். நாகை திருவாரூர் சாலையில் உள்ள கீழ்வேளூருக்குக் கிழக்காக 3 கி.மீ. தொலைவில் உள்ள ஊர். நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும் எம்பொருனின் திருநாமம் சியாமள மேனிப் பெருமான் தாயார் அரவிந்தவல்லி.

இராஜகோபாலசுவாமி கோயில் விழாவிற்கு வருகைபுரியும் பொதுமக்களை
தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் வரவேற்கின்றது.

Dr. ஜி இராமமூர்த்தி எம்.வி.எஸ்ஸி
நிர்வாக இயக்குநர்.

கு. தங்கமுத்து பி.ஏ.
சட்டமன்ற உறுப்பினர் - தலைவர்.

### (3) திருக்கண்ணமங்கை

திருமங்கை ஆழ்வாரின் பதினான்கு பாசுரங்கள் பெற்ற திருத்தலம். திருவாரூர் குடவாசல் சாலையில் ஆரூரிலிருந்து 7.கி.மீ. தொலைவில் உள்ளது. நின்ற கோலத்தில் அருள்நல்கும் எம்பெருமானின் திருநாமம் பக்தவத்சல பெருமாள் என்பதாகும்.. தாயார் அபிடேகவல்லி. சோழர் கால கற்கோயிலை இரகுநாத நாயக்கர் புதுப்பித்துள்ளார். தாயரைப் போற்றி இராமலிங்க சுவாமிகள் பாடியுள்ளார்.

### (4) திருக்கண்ணபுரம்

கும்பகோணம் நாகூர் பெருவழியில் (சன்னாநல்லூருக்குக் கிழக்காக) உள்ள திருப்புகலூர் எனும் சிவத்தலத்தின் தென்புறம் 2 .கீ.மீ தொலைவில் உள்ளது. நின்ற கோலத்தில் அருள் நல்கும் பெருமானின் திருநாமம் சௌரிராசப் பெருமான். தாயார் கண்ணபுர நாயகி பெரியாழ்வார் ஒரு பாசுரமும், ஆண்டாள் ஒரு பாசுரமும், குலசேகராழ்வார் பதினோரு பாக்களும், திருமங்கை ஆழ்வார் 104 பாக்களும், நம்மாழ்வார் பதினோரு பாக்களும் ஆக 128 திவ்யபிரபந்த பாசுரங்கள் பெற்ற புகழ்மிகு பதி. பெருமான் திருமலைராயன் பட்டினத்திற்கு கடலாடச் செல்வது குறிப்பிடத்தக்க விழாவாகும்.

*கொங்கு மலி கரும் குழலான் கோசலை தன் குல மதலாய் !*
*தங்கு பெரும் புகழ்ச் சனகன் திருமருகா தாசரதீ!*
*கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்து என் கருமணியே!*
*எங்கள் குலத்து இன்னமுதே! இராகவனே! தாலேலோ!*

-குலசேகராழ்வார்

### (5) சிறு புலியூர்

திருமங்கை ஆழ்வாரின் 10 பாசுரங்கள் பெற்ற திருத்தலம். மயிலாடுதுறை திருவாரூர் நெடுஞ்சாலையில் உள்ள மங்கைநல்லூர், பேரளம் எனும் ஊர்களிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது. இறைவன் கிடந்த கோலத்தில் அருமாகடல் என்ற திருநாமத்தோடு, தாயார் திருமாமகள் என்ற திருநாமத்தோடும் அருள் நல்கும் சிறப்புடைய பதியாகும்..

### (6) திருவெள்ளியங்குடி

திருவிடைமருதூரிலிருந்து 8 கி. மீட்டர் தொலைவில் உள்ள திருவூர் திருமங்கையாழ்வார் 10 பாசுரங்கள் பாடிய திருக்கோயில். கிடந்த கோலத்தில் சேவை சாதிக்கும் பெருமானின் திருநாமம் கோலவில் இராமன் தாயாரின் திருநாமம் மரகதவல்லி. இத்தலத்திற்கு வடக்கே ஒரு கல் தொலைவில் திவ்யபிரபந்தத்திற்குப் பேருரை கண்ட பெரிய வாச்சான்பிள்ளை பிறந்தருளிய செங்கநல்லூர் எனும் திருவூர் உள்ளது.

### (7). திரு அழுந்தூர் (தேரழுந்தூர்)

திருமங்கை ஆழ்வாரின் 45 பாசுரங்கள் பெற்றத் புனிதத் தலம் கும்பகோணம் மயிலாடுதுறை நெடுஞ்சாலையில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து 11 கி.மீ. தொலைவுடையது. நின்ற கோலத்தில் அருள் நல்கும் இறைவனின் திருநாமம் ஆமருவியப்பன். தாயாரின் திருநாமம் செங்கமலவல்லி. இராமாயணம் யாத்த கம்பர் பிறந்த திருவூர்.

### (8). திரு இந்தளூர் (திருவழுந்தூர்)

மயிலாடுதுறையில் 5. கி.மீ. தொலைவில் உள்ள இத்தலத்தை திருமங்கை ஆழ்வார் 11 பாசுரங்களால் போற்றியுள்ளார். கிடந்த திருக்கோலத்தில் அருள் நல்கும் பெருமானின் திருநாமம் மருவினியநாதன் (அல்லது) சுகந்தவனநாதன் என்பதாகும். தாயாரின் திருநாமம் சந்திரசாபவிமோசன வல்லி. தஞ்சை மராட்டிய மன்னர்கள் முதலாம் துளஜா, பாவாசாகிப், பிரதாபசிம்மன் ஆகிய மூவரது அவையையும் அலங்கரித்த இராமபண்டிதர் என்ற சமஸ்கிருத, மராட்டிய மொழிப் புலவர் இவ்வூரில் பிறந்தவராவார். திருவிந்தளூர் பெருமானைப் போற்றிப் புகழ்ந்து பாடல்கள் எழுதியவராவார்.

### (9). காழிச் சீராம விண்ணகரம் (தாடாளன்-சந்நிதி)

திருமங்கை ஆழ்வாரின் 10 பாடல்கள் பெற்ற திருப்பதி. சீர்காழி இரயில் நிலையத்திற்குக் கிழக்காக 1 கி.மீ. தொலைவில் உள்ளது. நின்ற கோல எம்பெருமானின் திருநாமம் தாடாளன் என்பதாகும். தாயார் மட்டவிழும் குழலியாவார்.

### (10) திருவாலிதிருநகரி

திருமங்கையாழ்வரால் 41 பாடல்களும் குலசேகராழ்வாரால் ஒரு பாடலும் பாடப்புற்ற புகழ்மிகு பதியாகும். சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். வீற்றிருந்த திருக்கோலத்தில் திகழும் எம்பெருமானின் திருநாமம் வயலாலி மணவாளன் என்பதாகும். தாயார் அமுதகடவல்லி என்றழைக்கப்பெறுகின்றார்.

திருமங்கை ஆழ்வார் பிறந்தருளிய குறையலூர் எனும் ஊர் இத்திவ்ய தேசத்திற்கு அருகாமையிலுள்ளது. திருவாலி திருநகரத்தில் உள்ள திருமங்கை ஆழ்வார் தை அமாவாசை தோறும் எழுந்தருளி, குறையலூர் சென்று, அதற்கு அருகேயுள்ள மங்கைமடத்தில் தங்கி, திருநாங்கூர் திருப்பதிகள் பன்னிரெண்டிலும் கருடசேவை கண்டருள் மீண்டும் மீண்டும் திருநகரியை அடைகின்றார்.

### திருநாங்கூர் திருப்பதிகள்

### (11) திருநாங்கூர் - மணிமாடக் கோயில்

சீர்காழியிலிருந்து 8 கி.மீ. தொலைவில்லுள்ளது. திருமங்கை ஆழ்வார் 12 திருப்பாசுரங்கள் பாடியுள்ள திருப்பதி.

அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கும் எம்பெருமானும் தாயாரும் முறையே நந்தாவிளக்கு பெருமாள் என்றும், புண்டரீகவல்லி என்றும் திருநாமங்கள் பெற்றுள்ளனர்.

*(12) திருநாங்கூர் - வைகுந்த விண்ணகரம்*

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் 10 ஆகும். அமர்ந்த கோலத்தில் வைகுந்தநாதனும், வைகுந்த வல்லியும் அருள் பாலிக்கும் திவ்யதேசமாகும்.

*(13) திருநாங்கூர் - அறிய விண்ணகரம்*

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் 10 ஆகும். அமர்ந்த கோலத்தில் குடமாடு கூத்தப் பெருமாளும், அமுதகடவல்லியும் உறையும் திருக்கோயிலாகும்.

*(14) திருநாங்கூர் - வண்புருடோத்தமம்*

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் 10 ஆகும். நின்ற கோலப் பெருமரனின் திருநாமம் புருடோத்தமன். தாயார் புருடோத்தம நாயகி

*(15) திருநாங்கூர் - செம்பொன் செய் கோயில்*

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் 10 ஆகும். நின்ற திருக்கோலத்தில் பேரருளாளப் பெருமாளும், அல்லிமாமலர் நாச்சியாரும் அருளுகின்ற திருப்பதி.

*(16) திருநாங்கூர் (திருத்தெற்றி அம்பலம்)*

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் 10 ஆகும். கிடந்த திருக்கோலத்தில் திகழும் பெருமானின் திருநாமம் செங்கண்மால் என்பதாகும். தாயார் செங்கமலவல்லி.

*(17) திருத்தேவனார் தொகை (கீழைச்சாலை)*

திருநாங்கூருக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவிலுள்ள திருப்பதி. திருமங்கையாழ்வார் 10 பாசுரங்கள் பாடியுள்ளார். நின்ற கோலத்தில் அருளும் பெருமானின் திருநாமம் மாதவப் பெருமான் என்பதாகும். தாயார் கடல் மகள் என்ற பெயரோடு திகழ்கின்றனர்.

*(18) திருமணிக்கூடம்*

மணிக்கூட நாயகன், திருமாமகள் என்ற திருநாமங்களோடு நின்ற கோலத்தில் சேவை சாதிக்கும் திருப்பதி. திருமங்கை ஆழ்வார் 10 பாடல்கள் பாடியுள்ளார். திருநாங்கூருக்குக் கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது.

*(19) காவளம்பாடி*

திருநகரியிலிருந்து தெற்காக திருவெண்காடு செல்லும் சாலையில் 3 கி.மீ தொலைவிலுள்ளது. திருமங்கை மன்னன் 10 பாசுரங்கள் பாடியுள்ளார். கோபாலகிருஷ்ணன், மடவரல்மங்கை என்ற திருநாமங்களோடு நின்ற திருக்கோலத்தில் பெருமாளும் தாயாரும் திகழ்கின்றனர்.

*(20) திருவெள்ளக்குளம் (அண்ணன்கோயில்)*

திருநாங்கூருக்கு வடமேற்காக 4 கி.மீ. தொலைவிலுள்ளது. திருமங்கை மன்னன் 10 பாசுரங்கள் பாடியுள்ளார். கண்ணன், நாராயணன், பூவார் திருமகள் என்ற திருநாமங்களோடு எம்பெருமானும் தாயாரும் நின்ற கோலத்தில் தேவை சாதிக்கும் திருப்பதி

*(21) பார்த்தன் பள்ளி*

சீர்காழியிலிருந்து 11 கி.மீ தொலைவிலுள்ள உள்ள திருவூராகும். திருமங்கையாழ்வார் 10 திருப்பாசுரங்கள் பாடியுள்ளார். தாமரையாள் கேள்வன், தாமரைநாயகி என்ற திருநாமங்களோடு எம்பெருமானும், நாச்சியாரும் அருள்பாலிக்கின்றனர்.

*(22) தலைச்சங்க நாண் மதியம் (தலைச்சங்காடு)*

சீர்காழிக்ஷீதரங்கம்பாடி சாலையில் உள்ள இப்பதியினை திருமங்கை ஆழ்வார் போற்றி இரண்டு பாசுரங்கள் பாடியுள்ளார். நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும் எம்பெருமானின் திருநாமம் நான்மதியப் பெருமாள் என்பதாகும்.

தாயார் தலைச்சங்க நாச்சியார் என்றழைக்கபெறுகிறார்.

*கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்*
*தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்*
*விண்ணோர் நாள் மதியை விரிகின்ற வெஞ்சுடரை*
*கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றது என்று*
*கொலோ ?*

என்ற ஆழ்வாரின் பாடலை நினைவுறுத்தி நாகை மாவட்டத்து திருப்பதிகளைக் கண்டு களிக்க வாரீர் என அழைக்கின்றோம்.



# கோயில் கண்றாப்பூர் நடுதறிநாத சுவாமி திருக்கோயில்

மு. கார்த்திகேயன்
நிர்வாக அலுவலர்

காலமும் பெருமையும் : திருவாரூரில் இருந்து சுமார் 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது ஒரு கோவில்தான் கோவில் கண்ணாப்பூர் அருள்மிகு நடுதறிநாதஸ்வாமி திருக்கோயிலாகும்.

நாவுக்கரசரால் பாடல்பெற்ற இத்திருத்தலம் சிதம்பரம், திருக்காளத்தி, கீழ்வேளூர், நாகைக்காரோணம் முதலிய தலங்களை விட மேம்பட்டதாகும் என்றால் இதன் பெருமையை வேறு என்னென்று சொல்வது ? இத்தலத்தில் வழிபட்டால் உலகில் உள்ள எல்லா சிவத்தலங்களையும் வழிபட்டதாக ஆகும் என வரலாறு சொல்கின்றது. காவிரிக்கு தென்கரையில் உள்ள இவ்வூரில் வழிபடுவோர் எல்லா நலன்களையும் பெறுவர் என்பது வரலாறு. முக்கியமாக கண்நோய் உள்ளவர்கள் 'வேண்டி' நலம் பெறுகின்றனர். நாவுக்கரசரால் பாடல்பெற்ற இத்திருக்கோவிலின் வரலாற்றைக் காண்போம்.

*திருக்கோவில் வரலாறு :*

ஒருநாள் சிவபெருமான் உமாதேவியுடன் வீற்றிருக்கும்போது பிரம்மதேவன் முதற்கொண்டு தேவர்களால் புடைசூழப்பட்டிருக்கிறது அவை. அப்போது 'சுதாவல்லி' என்ற வித்யாதரப் பெண் 'உமையவள்' போலவே அலங்காரம் செய்து அவையிலே நாட்டியமாடுகின்றாள். இதைத் பார்த்த உமாதேவி 'நீ மண்ணுலகில் பிறக்க' என சபிக்கின்றாள். தவறை உணர்ந்து விம்முகின்ற சுதாவல்லியிடம் 'நீ மண்ணுலகில் பிறந்து எம்மை அடைவாய்' என்கின்றாள்!

அவ்வாறே கன்றாப்பூர் எனும் ஊரில் சைவவேளாா் மரபில் பிறந்து வளர்கின்றாள். வளரும்போதே சிவபூஜை அவளின் வினைத் தொடராகிறது. தக்க பருவத்தில் மாற்று சிந்தனையுடைய ஒருவனை மணம் புரிகின்றாள். அன்றாடம் சிவபூஜை செய்யும் அவள் நிலைகண்டு வழிபடும் 'லிங்கத்தை' எடுத்து கிணற்றில் வீசியெறிகிறான்.

இறைவனின் அன்பையும், கணவனின் ஒப்புறமையையும் விலக்கமுடியாத அவள் தம் வீட்டின் மாட்டுத்தொழுவத்தில் 'கன்று கட்டக்கூடிய தறி'யையே (முளைக்குச்சி) சிவபெருமான் (லிங்கம்) என நினைத்து வழிபடுகின்றாள். அதையும் ஒருநாள் கண்டுவிடுகிறான். சினத்தில் மிகுந்த அவன் 'கோடாரி' கொண்டு அந்த 'தறி'க்குச்சியை பிளக்கிறான். தறிக்குச்சியினின்றும் 'ரத்தம்' பீரிட்டெழுந்தது இறைவன் தேவியுடன் காட்சியளிக்க அவன் தனது தவறை உணர்கின்றான். இருவரும் இறைவனால் ஆட்கொள்ளப்படுகின்றனர்.

*இன்னொரு வரலாறு:*

இத்திருக்கோவிலில் 'சீதளாதேவி' யென்னும் உற்சவர் மாரியம்மனாக திகழ்கின்றாள். பலநூறு வருடங்களுக்கு முன் திருக்குளம் தனில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இம்மாரியம்மன் திருவுளச்சீட்டைப் போட்டு 'உனது இருப்பிடத்தை தெரிவி' என்றபோது இத்திருக்கோவிலின் உள்ளேயே 'தான் இருக்க வேண்டும்' என்று ஆஃஞை பிறந்தது! ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் 'வசந்தோற்சவம்' என்னும் பெயரில் சீதாளதேவிக்கு விழா கொண்டாடுகின்றனர். நாடகங்களும், கலை நிகழ்ச்சிகளும் சிறப்பான காட்சிகளாக விளங்குகின்றன.

தெய்வத்தால்தான் எல்லாம் நடக்கின்றது என்பது 'திருமறை' வாக்கு மட்டுமல்ல. சிற்றில்வாழ் சிறுகுடுவைதாங்கி பற்றுடன் எந்நேரமும் வாழ்ந்துமறையும் இந்த மானுடர்கூட்டத்திலும் போற்றிபுகழ் சான்றோர் பலர் தெய்வத்தின் மாண்பினை திருவுளத்தின் மாண்புடன் உலகுக்குக் காட்டி மறைந்துள்ளீனர். இராஜகோபாலனும் செங்கமலத்தாயாரும் மனம்குளிர மகிழும் இந்நாளில் இத்திருக்கோயிலுக்கும் நன்மங்கலம் செய்ய முனைவோமாக.

# கல்வெட்டு கூறும் ஆலய வழிபாடு

டாக்டர் இரா. நாகசாமி
துணைவேந்தர்,
காஞ்சி பல்கலைக்கழகம்

தமிழகத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆலய வழிபாடுகள் எவ்விதம் நடந்து வந்தன என்பதை சிலாசானங்களிலிருந்தும், தாமிர சாசனங்களிலிருந்தும் அறிந்துகொள்ள இயலுகிறது. நம் நாட்டைப் பண்டைக்காலத்தில் சேரர், சோழர், பாண்டியர் என்ற மன்னர்கள் ஆண்டார்கள் என்று சங்க கால இலக்கியங்கள் கூறுகின்றன.

இவ்விலக்கியங்களில் கடவுள் வழிபாடுகளும், கடவுளர் உருவங்களும் கூறப்பட்டுள்ளன. ஆனால் அக் காலத்திய சாதனங்கள் இந்து ஆலய வழிபாட்டைப்பற்றி ஏதும் கூறவில்லை. அவை பெரும்பாலும் இயற்கைக் குகைத்தலங்களில் வசித்துவந்த சமணப் பெரியார்களுடையவையாகக் காணப்படுகின்றன. கி.பி. 600 இல் கச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட முதலாம் மகேந்திரன் என்ற பல்லவ மன்னன் காலத்திலிருந்துதான் சாசனங்கள் இந்துக்களது ஆலயங்களைப் பற்றிக் கூறுகின்றன. கி.பி.600 லிருந்து கி.பி. 900 வரை சுமார் 300 வருட காலம் பல்லவர்களது ஆட்சி தமிழ்நாட்டில் மேலோங்கியிருந்தது. சுமார் கி.பி. 900 லிருந்து கி.பி.1250 வரை சோழர்களது ஆட்சி மேலோங்கியிருந்தது. இக்காலத்திய சாசனங்களிலிருந்துதான் பெரும்பாலும் ஆலய நிர்மாணம் முதல் நித்திய வழிபாடு, திருவிழாக்க்ள், திருப்பணிகள் முதலியவை பற்றி அறிய முடிகிறது. பொதுப்படையாகப் பார்த்தோமானால் இன்று நம் ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் எவ்விதம் இருந்தனவோ அதேபோல்தான் உள்ளன.

ஆலயங்களை மன்னர்களும் பொதுமக்களும் பொது ஜனங்களின் நலனுக்காகவும் உலக ஷேமத்திற்காகவும் கட்டிவைத்தனர். 'பிரஜைகளின் இஷ்டங்கள் பூர்த்தியடைவதன் பொருட்டு இக்கோயிலைக் கட்டினேன்' என்று பல்லவ மன்னனான இராஜசிம்மனது சாசனங்கள் கூறுகின்றன. இவ்விதமே அரச மாதேவியரும் பல கோயில்களை எழுப்பியுள்ளனர். கோயில்களைத் தோற்றுவித்த பெரியார்கள் தங்களது பெயர்களையே கோயில்களுக்கு இட்டனர்.

திருச்சி மலையின்மேல் மகேந்திரவர்மனால் தோற்றுவிக்கப்பட்ட குகைக் கோயிலுக்கு 'லலிதாங்குர பல்லவேச்வரகிருஹம்' என்று பெயர்.

இராஜசிம்மனால் கட்டப்பட்ட கோயில்களுக்கு ராஜசிம்ம பல்லவேச்வரம், அதிரணசண்ட பல்லவேச்வர கிருஹம் என்றும், அத்யந்தகாம பல்லவேச்வரகிருஹம் என்றும், பெயர்கள் காணப்படுகின்றன. அதுபோன்று பரமேஸ்வர வர்மனால் கட்டப்பட்ட கோயிலுக்கு பரமேஸ்வர மஹாவராக விஷ்ணு கிருஹம் என்றும், பரமேஸ்வர விண்ணகரம் என்றும் பெயர்கள் சாசனங்களில் காணப்படுகின்றன.

இது தவிர நமக்கு முன்னர் இறந்த பெரியவர்களுக்கு நினைவுக் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களுக்கு பள்ளிப்படை என்று பெயர். காளஹஸ்தியில் முதலாம் ஆதித்த சோழர் இறந்த பின்னர் அவர் நினைவாக அவரது மகனான பராந்தக சோழனால் ஆதித்தேஸ்வரம் என்ற கோயில் எழுப்பப்பட்டது என அறிகிறோம்.

கோனேரி ராஜபுரத்தில் கண்டராதித்தியரின் உடைய பிராட்டியார் செம்பியன் மஹாதேவியார் தனது கணவரின் பெயரால் திருக்கற்றளி எடுப்பித்தார் என்று அவ்வூரிலுள்ள சாஸனம் கூறுகிறது.

பல்லவ மனனனான நிருபதுங்கவருமன் காலத்தில் நார்த்தாமலையில் ஒரு குகைக்கோயில் குடைவிக்கப்பட்டது.

'விடேல்விடுகு முத்தரையன் மகன் சாத்தன் பழியிலி குடைவித்த கோயில். இச்சிறிய கோயிலுக்கு முகமண்டகமும் இஷவமும், இஷவக்கொட்டிலும், பலிபீடமும், செய்வித்தாள், சாத்தம்பழியிலி மகள் மீனவன் தமிழதிரையன் பல்லன் அனந்தன் புக்கப் பழியிலி சிறிய நங்கை' என்று அச்சாசனம் கூறுகிறது.

இவ்விதம் தோற்றுவித்த கோயில்களில் தெய்வத்தைப் பிரதிஷ்டை செய்வது பற்றியு சாசனங்கள் கூறுகின்றன. கண்டராதித்த சோழர் காலத்தில் உள்ள சாசனங்கள், 'யாங்கள் கோயில் எடுப்பித்து பிரதிஷ்டை செய்வித்த கணபதியாருக்கு' என்று சொல்வதிலிருந்து, எடுப்பித்த கோயிலிலே மூலவிக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்வது என்பது வழிவழி வந்த வழக்கம் என்று தெரியவருகிறது.

'அந்துவல்துநல்லூர் நாட்டுத் திருவாலந்துறை பரமேஸ்வரருக்கு செம்பியன் இருக்குவேளார், பூதிபராந்தகன் கற்றளி எடுத்து ஜலஸம்ப்ரோஷணம் செய்த நாள்'

என்று மற்றொரு சாசனம் கூறுகிறது. கட்டுவித்த கோயிலின் மேல் விமானத்தில் செம்பினாலான கலசத்தை வைப்பது பற்றித் தஞ்சைப் பெரிய கோயிலை எடுத்த இராஜராஜனின் சாசனம் கூறுகிறது.

நித்திய வழிபாட்டு முறை பற்றி பல கல்வெட்டுக்கள் குறிக்கினறன. கி.பி. 670 இல் அதாவது சுமார் 1300 வருடங்களுக்கு முன்னர் ஆண்ட பல்லவ மன்னனான பரமேஸ்வர வர்மர் கொடுத்த கூரம் செப்பேடுகள் மிக அழகாக பூஜைக்கிரமத்தைக் கூறுகிறது.

'வித்யாவினீத பல்லவ பரமேஸ்வர கிரஹத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள பகவானும் பரமேஷ்டியும் ஆன பினாகபாணிக்கு பூஜை, ஸ்நபனம், குஸுமம், கந்தம், தூபம், தீபம், அவிஸ் உபஹாரம், பலி சங்கம், படகம், முதலியவைகளுக்கும், தண்ணீர் அக்கினி, பாரதம் வாசிப்பவருக்கும் ஆன நிபந்தகளென்று கூறுகிறது. இதற்கு தேவகர்மமென்றும், திருப்பணி செய்வதற்கு நவகர்மமென்றும் பெயர். இதையே தமிழில் 'கூரத்து தளிக்கு நவகர்ம செய்வதாகவும், கூரத்து மண்டகத்துக்கு தண்ணீருக்கும் தீக்கும் ஒரு பங்காகவும் இம்மண்டகத்து பாரதம் வாசிப்பானுக்கு ஒரு பங்காகவும்' என்று உள்ளது.

இதற்கு முந்திய ஓர் பல்லவ சாசனம் கோ விஜயசிம்மவர்மன் என்ற மன்னர் காலத்தியது. அதில் திரிகாலமும் ஆராதித்தல், திரிகாலம் அமர்திடுதல், நந்தாவிளக்கெரித்தல் முதலியன பற்றி குறிப்பிட்டுள்ளது.

பெரும்பாலும் மூன்று சந்திகளில் பூஜை நடந்ததாகச் சாசனங்கள் கூறுகின்றன. இதை, முச்சந்திகள் என்றும் சிறுகாலைச் சந்தி, உச்சியம்போதுசந்தி, இரவுச் சந்தியென்றும் அவை குறிப்பிடுகின்றன. சில இடங்களில் அர்த்தயாமசந்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பள்ளியெழுச்சியைப் பற்றிப் பல சாசனங்கள் கூறுவதிலிருந்து காலையில் பூஜை, பள்ளி எழுச்சியிலிருந்து தொடங்கியது என்று அறியலாம்.

ஸ்ரீரங்கத்திலுள்ள குலோத்துங்க சோழனின் கல்வெட்டு 'இக்கோயிலில் ஆழ்வாருக்குத் திருப்பள்ளியெழுச்சி, திருவாய்மொழி விண்ணப்பம் செய்யக் கடவோமாக' என்று கூறுவதிலிருந்து ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிச் சென்ற திருப்பதிகங்களைப் பாடி, கடவுளுக்குத் திருப்பள்ளியெழுச்சி செய்தனர் என்று அறியமுடிகிறது. சைவக் கோயில்களில் அபிஷேகம் விசேஷமாக நடைபெற்ற என்பதை ராஜசிம்ம



பல்லவனுடைய சாசனத்திலிருந்து அறியலாம். முச்சந்திகளிலும் ஒன்றிலோ இரண்டிலோ அல்லது

மூன்றிலோ ஆண்டவனுக்குத் திருமஞ்சன நீராட்டல் வழக்கத்திலிருந்து வந்தது. மூலஸ்தானத்துப் பெருமானுக்கு மும்முறையும், உற்சவத் திருமேனிகளுக்கு ஒரு சந்தியும், திருமஞ்சன நீராட்டல் என்பது பழக்கத்திலே இருந்து வந்தன. திருமஞ்சன நீருடன், சுகந்தபொருள்களும் அபிஷேகத்திற்குத் தனியாக உபயோகப்படுத்தப்பட்டன என்று அறிகிறோம். பேரரசன் இராஜராஜன், தான் கட்டுவித்த தஞ்சைப் பெரியகோயில் மூல ஸ்வாமிக்கும், உற்சவருக்கும் வேண்டிய திருமஞ்சனத்திற்கும் என ஒரு தனிச் சாசனமே செய்து வைத்துள்ளான். 'ராஜராஜேச்சுவரமுடையார் ஆடியருளும் திருமஞ்சன நீரிலும் தணணீர் மீதிலும் இடபெரும் செண்பகமொட்டுக்கும், எலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும் வேண்டும் நிபந்தம்' என்று அக்கல்வெட்டு கூறுவதிலிருந்து, திருமஞ்சன நீரிலே செண்பக மொட்டு, ஏலவரிசி, இலாமிச்சவேர் முதலியவை போடப்பட்டன என்று அறிகிறோம். சில வைணவக் கோயில்களில் மூன்று சந்தியும் திருமஞ்சன நீராட்டல் வழக்கத்திலிருந்து வந்தது. மற்ற இடங்களில் சில விசேஷ தினங்களில் எண்ணெய்க் காப்பு சாத்துவதும் பழக்கத்தில் இருந்து வந்தது என்று அறிகிறோம். இராஜேந்திர சோழனின் மகனான இராஜாதிராஜனின் கல்வெட்டு, 'மதுராந்தக விண்ணகராழ்வாருக்கு அக்கோயிலில் காணியுடைய வைகானசன் ஆளி ஆராவ்முது ஆளி தாமோதரனான வேங்கடவன் நித்தம் இரு திருமஞ்சனக்குடம் அபிஷேகம் பண்ணி திருமாலை சாத்த பழங்காசு' என்று கூறுகிறது. இதிலிருந்து வைகானச ஆகமம் பத்தாம் நூற்றாண்டிற்கு முந்தியது என்றும் வைகானச ஆகம முறைப்படி சில வைணவக் கோயில்களில் வழிபாடு நடைபெற்றது என்றும், அக்கோயில்களில் திருமஞ்சன நீராட்டல் நித்தமும் இருந்து வந்தது என்றும் அறிகிறோம். திருவரங்கத்திலுள்ள ஒரு சாசனம், 'திருவரங்கத்துப் பெருமானடிகளுக்க திருமஞ்சனம் புக்குஅருள சகஸ்ரதாரை ஒன்றினால்' என்று மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மனின் சாசனம் கூறுவதிலிருந்து திருவரங்கப் பெருமானுக்குத் திருமஞ்சன நீராட்டல் நடைபெற்றது என்று அறிகிறோம்.

திருமஞ்சன நீரைப் பிராமணன் ஒருவன் பக்கத்திலுள்ள நதியிலிருந்து கொண்டு வருவதுமுண்டு. சைவ ஆலயங்களில் எண்ணெய் காப்புகளுக்கு பல நிபந்தங்கள் கொடுக்கப்பட்டன. எண்ணெய்க் காப்பு சில கோவில்களில் தினந்தோறும் இருந்து வந்தது. சில கோயில்களில் வாரத்தில் இரு நாட்களோ அல்லது ஒரு நாள் மட்டுமோ இருந்து வந்தது என்றும் சாசனங்கள் கூறுகின்றன. பஞ்சகௌவியம் ஆடியருளள் என்றும் அப்பஞ்சகௌவியத்திற்கு வேண்டிய பொருளும் அவற்றின் அளவும், ஓர் சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. கோமூத்திரம் உழக்கு, கோமயம் ஆழாக்கு, பால் நாழி உழக்கு, தயிர் நாழி உரி, நெய் நாழி என்று அது கூறுகிறது.

நெய்யாடியருளல், பாலூடியருளல், திருச்சாந்துயாடியருளல் என்பனவும் சாசனங்களில் வருகின்றன.

கோவை மாவட்ட ஈரோட்டில் உள்ள ஓர் கல்வெட்டு "அமுதுபடி சாத்துபபடி திருமேற்பூச்சு சந்தியா தீபம் திருவிளக்கு, திருப்பணி, திருநாட்தேவை அவிப்பலி அர்ச்சனை நித்தகர்மம் பலமடி நிபந்தம்' என்று பூஜை முறையைக் கூறுகிறது. ஸ்ரீரங்கத்தில் சந்தனச்சாந்து, புழுகுநெய், கஸ்தூரி, கற்பூரம் உள்ளிட்ட சாத்துப்படி திருவரங்கப் பெருமானுக்கு இடப்பட்டது என்றும், 'கார்த்திகை மாதத்து திருக்கார்த்திகைத் திருநாளில் பெரிய பெருமாளுக்குப் புழுகுநெய் சாத்தியருள' என்றும் ஓர் கல்வெட்டு கூறுவதிலிருந்து, புழுகுநெய் சாத்துவது வைணவக் கோயிலில் வழங்கி வந்த முறை என்று அறிகிறோம்.

அதே கோயிலிலுள்ள மற்றொரு சாசனம், 'எண்ணெய்க் காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சக்காப்பு, சந்தனக்காப்பு, திருப்பள்ளிதாமம், திருமாலை திருப்பரிவட்டம் உள்ளிட்ட சாத்துப்படிகள், என்று கூறுகிறது. திருப்பள்ளிதாமம் பறித்து ஆண்டவனுக்குச் சாத்தினர் என்றும், பெருமக்கள் மலர்மாலைகளைத் தங்களது பேரால் செய்து தினமும் சாத்துவதற்கு நிபந்தம் செய்தனரென்றும் அறிகிறோம்.

இதற்கு செங்கழுநீர்புஷ்பம் உபயோகப் படுத்தப்பட்டது என்று சில இடங்களில் சாசனங்கள் கூறுகின்றன. அரைத்த சந்தனத்தையே ஆண்டவனுக்கு இட்டனர் என்பதற்கும் சான்றுகள் பல உள்ளன. 'திருச்சந்தனம் தேய்க்கும் பிராமணன் ஒருவனுக்கு கப்படம் முட்டட நித்தம்' என்று ஓர் கல்வெட்டு கூறுகிறது. இவ்விதம் அபிஷேகங்களால் பூஜிக்கப்பட்ட ஆண்டவனுக்குப் பரிசட்டம் சாத்துவதும் வழக்கத்திலிருந்தது. கோனேரிராஜபுரத்தில் உள்ள செம்பியன் மஹாதேவியாரின் சாசனம், கோயிலில் வழிபாட்டு முறை பற்றி மிகவும் வியக்கத்தக்க முறையிலே பல வழிகளைக் குறிப்பிடுகின்றது. அதில் 'திருநமணிகைக்கும் திருவிதானத்துக்கும் திருமேற்கட்டிக்கும் ஜலபவித்திரத்துக்கும் திரு ஒற்றாடைக்கும்' என்று கூறுவதிலிருந்து, இவை வழிபாட்டுக்கு உபயோகப்படுத்தப்பட்டன என்று அறிகிறோம். இராஜராஜ சோழனின் தஞ்சைக் கோவிலுள்ள ஓர் கல்வெட்டு 'இவர்க்கே சாத்தும் திருப்பரிச் சட்டத்துக்கு காசு இருபத்தாறும், திருநமணிகை நாலுக்கு காசு இரண்டும், திருஒற்றாடை 4க்கு காசு இரண்டும், திருப்பாவாடை 16க்கு காசு நாலும்' என்று கூறுகிறது. சில இடங்களில் சிறந்த பட்டினாலான பரிசட்டங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்விதம் கூறும் சாசனங்களில் புலியூர்ப்பட்டு, ப்ச்சைப்பட்டு முதலியவை கூறப்பட்டுள்ளன. இவை அடிக்கடி மாற்றப்பட்டு புதிய பட்டுக்கள் கொடுக்கப்பட்டன.

மூலஸ்தானத்து பட்டாரருக்கு ஆபரணங்கள் சாற்றுவதும் கந்தலைநாகம் சாற்றுவதும் சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நைவேந்தியங்களைப்பற்றியும் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவற்றிலிருந்து சுமார் 1300 வருடத்திற்கு முன்னர் எவை எவை படைக்கப்பட்டனவோ அவையே இன்று வரையிலும் திரு அமிர்தாக இடப்படுகின்றன என்று அறிகிறோம். அநேகமாக எல்லாக் கல்வெட்டுக்களிலும் கூறும் அமுதுபடி பல்லவர் காலம் தொட்டு இக் காலம் வரை, ஓரே மாதிரியாக இருப்பது மிகவும் விசேஷமாகும். பல தடவை குத்தப்பட்ட பவளம் போன்ற அரிசியால் அமுது படைக்கப்பட்டது. இந்தத் திருவமுதின்மீது நறுநெய் ஊற்றப்பட்டது. இதை அவிஸ் அல்லது சரு என்று சாசனங்கள் கூறுகின்றன. இத்துடன் உபகாரம், பொரிக்கரியமுது, புளிக்கரியமுது, கரியமுது, அப்பமுது முதலியவையும் இடப்பட்டன. இவை ஒவ்வொன்றும் புதிய மண் கலயங்களில் சமைக்கப்பட்டன. இவற்றிற்கென நித்தமும் கலயங்கள் இடும் குயவனுக்குப் பல நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சந்தியிலும் இவ்வமுதுகள் செய்யப்பட்ட பொருள்களும் அவற்றிற்கு வேண்டிய அளவுகள் முதலியவை அனைத்தும் வியக்கத்தகும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிருபதுங்கவர்மன் என்ற பல்லவ மன்னன் காலத்தில் திருவெற்றியூரில் ஏற்பட்ட ஓர் சாசனம் 'சென்னற்குத்தல் பழவரிசி இருநாழியினால் நானாழியும், உழக்கு நெய்யும், அடுக்கிலையும், ஐந்து காயும் நாலு பழமும்' என்று கூறுகிறது. அதே அரசன் காலத்தில் போனகம் காட்டுதல் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் சமகாலத்தவனான அபராஜிதவர்மன் காலத்தில் திருவமுது பத்தெட்குத்தரிசி, பதினாறு நாழி, ஸ்நபத்துக்கும், திருவமுக்கும், நெய் ஆறுநாழி, வாழைப்பழம் எட்டு, சர்க்கரை பலம், கரிய முதுக்கு காய், அடைக்காயமுது என்ற பெயரில் கூறப்பட்டுள்ளன. இளநீரும், தேங்காயும் ஓரிரு இடங்களில்தான் கூறப்பட்டுள்ளன.

மன்னன் அல்லது மற்ற பெரிய மனிதர்களின் நட்சத்திரத்தன்று பெரும் திருவமுது விசேஷமாக இடப்பட்டது என்றும் அறிகிறோம். பல சாசனங்களில் தேவர் அமுது செய்யும்போது உத்தமாக் கிரஹமாக வேதப் பிராமணர்களுக்கு அமுது செய்வித்தலைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. உத்தம சோழரின் 9ஆம் ஆண்டு கண்டியூரிலிருக்கும் ஒரு சாசனத்தில் 'இம்மகாதேவருக்கு திங்கள்தோறும் என் பிறந்த நாளாக ஜோதிநாளன்று பெரும் திருஅமுது செய்ய' என்று கூறுகிறது. பராந்தக சோழர் காலத்தில் சாசனம் ஒன்று 'தேவர் அமுது செய்யும்போது வேதப் பிராமணர் நிசதம், ஐவர், அமுது செய்வதாகவும்' என்று கூறுகிறது.

பரிவாரத் தெய்வங்களுக்கும் நித்தம் திருஅமுது இடுவதைப் பற்றிப் பல சாசனங்கள் கூறுகின்றன. அய்யன் மகாசாஸ்தா, கணபதி, ஜேஷ்டாதேவி, சேட்டையார், சப்தமாதர் முதலியவற்றுக்கும் திருஅமுது தினந்தோறும் படைக்கப்பட்டது. திருஅமுதுபடி காண்பிக்கும்போது வாத்தியங்கள் முழங்கின. பலி கொட்டுவது என்பது பற்றியும் பல கல்வெட்டுக்களில் காண்கிறோம். பலி கொட்டுவதற்கெனத் தனிப்பட்ட ஒரு தேவரை பலிதேவர் என்று உத்தம சோழர் காலத்திய ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. தஞ்சைப் பெரிய கோயிலில் ராஜராஜதேவர் கொடுத்த 'பலி எழுந்தருளும் பொன்னின் கொள்கைத் தேவர் ஒருவர் அத்துடன் கொடுத்த பத்மாசன பலிதாலம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருஆலத்தி தட்டுகளும் தூபத் தட்டுகளும் தூபத்தோடு காண்பிக்கும் தீபத்துக்குக் கற்பூரமும் பரிச்சின்னங்களும் ஆங்காங்கே



கூறப்படுகின்றன.

தமிழ் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் ஆலயங்களில் நந்தா விளக்கு எரிப்பதற்காக விட்ட பரிசுகளைப் பற்றிக் கூறுகின்றன. நந்தாவிளக்கு எரிக்கக் கொடுத்த பரிசானது மற்ற எல்லா கைங்கரியங்களையும்விட பெரியதாகவும் சிறந்ததாகவும் கருதப்பட்டது போலும். இவ்விளக்குகள் நறு நெய்யால் எரிக்கப்பட்டனவென்றும் இதற்காக விடப்பட்ட ஆடுகள் 'சாவாமூவாபேராடு' என்று அழைக்கப்பட்டன என்றும் அறிகிறோம். தீபமாலைகளும், நிலைவிளக்கு, குத்துவிளக்கு முதலியவையும் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆலயங்களில் சந்தி தோறும் அக்கினிகாரியங்கள் நடைபெற்றன என்றும், பல சாசனங்களிலிருந்து அறிகிறோம். 'திருநெடுங்குளம் கோயிலுள்ள உத்தமசோழரின் கல்வெட்டு இத்தேவருக்கு நிஸதம் மூன்று சந்தியும் அக்கினி காரியத்துக்கு நிபந்தம் செய்த பரிசாவதுபோது அரைப்படி நெய்யும் மேலெரியும் மற்றும் அக்கினி காரியத்துக்கு வேண்டுவது கொண்டு செய்விப்போம்' என்றும் கூறுகிறது.

தமிழ்நாட்டு மரபிலே ஆலயத்துறை தெய்வங்களை திருவிழாக்காலங்களில் வீதி உலாவாக எடுத்துச் செல்லுதல் என்பது பண்டைக் காலந்தொட்டு வழங்கிவந்த ஓர் பழக்கம். சங்ககால இலக்கியங்களும் தேவாரத் திருப்பதிகங்களும் திருவிழாக்களைப்பற்றித் தெள்ளென விளக்குகின்றன. கல்வெட்டுக்களிலிருந்து அறியப்படும் திருவிழாக்கள் பல உண்டு. இவற்றில் பொதுவான திருவிழாக்கள் சிலவும் சிறப்புத் திருவிழாக்கள் சிலவும் இருந்தன. இவற்றில் சித்திரைத் திருவிழா மிகச் சிறப்புடையதாகக் கூறப்படுகிறது. இது ஏழுநாட்கள் நடைபெற்றது என அறிகிறோம்.

பல்லவர் காலத்திலிருந்தே இத்திருவிழா பெருமைபெற்றிருந்தது என்பதற்குச் சான்றாக லால்குடியில் நிபதுங்கமன்னனின் இரண்டாம் ஆண்டு சாசனம் ஒன்று, 'சித்திரை விசு திருவிழாவுக்கு தாயாரைச் சாத்திவைத்த பொன்' என்றும், ஆண்டாண்டு தோறும் சித்திரை திருவிழாவுக்கு நாராய நாழியால் ஏழு நாளைக்கும்' என்றும் கூறுகிறது.

சென்னை அரசினர் பொருட்காட்சி சாலையில் உள்ள ஒரு செப்பேடு 'இத்தேவர் சித்திரை விழாவுக்கு நிபந்தம் செய்தபடி திருவிழா ஏழு நாளைக்கு' என்று கூறுவதிலிருந்தும், காஞ்சிபுரத்தினருகே உள்ள வேப்பங்குளத்தில் உள்ள இராஜேந்திர சோழனின் சாசனம், 'சித்திரை திருவாதிரை ஏழு நாளைக்கும்' என்று குறிப்பிடுவதிலிருந்தும் இத்திருவிழா ஏழு நாளைக்கு நடத்தப்பட்டது என அறிகிறோம். சித்திரை விஷு, வைகாசி விசாகம், ஆனித் திருவாதிரை, ஐப்பசி பரணி, கார்த்திகை கார்த்திகை, மார்கழித் திருவாதிரை, தைபூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் முதலிய விழாக்கள் சிறப்பாக நடந்தன. கார்த்திகைத் திருநாள், பங்குனித் திருநாள் என்ற வழக்கு ராஜேந்திர சோழனின் காலத்திலேயே இருந்தது என்று அறிகிறோம். தஞ்சைக் கோயிலில் 'திருச்சதயத் திருவிழா பன்னிரண்டும் கார்த்திகைத்திருநாள் ஒன்றும் சங்கராந்தி பன்னிரெண்டும் பெரிய உத்சவம் நாள் ஒன்பதும் ஆக 34 நாள்' என்று இராஜராஜனால் குறிப்பிடப்படுகிறது. திங்கள்தோறும் விசுவயன சங்கராந்திகளில் திருவிழாக்கள் நடைபெற்றன. அரசர்களின் ஜென்ம நட்சத்திரத்தன்று விசேஷ திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டன.

திருவிழா எழுந்தருளும் திருமேனிகளுக்கு அன்றாட திருமஞ்சன நீராடலும் திரு அமிர்திடுதலும் திரு ஆபரணங்கள் சாத்துதலும் வழக்கத்திலிருந்து வந்தது. 'திருவிழா எழுந்தவாறே திருமஞ்சன நீராடலும் திரு அமிர்து செய்தலும் தீர்த்தமாடுதலும் பஞ்சகௌவியம் ஆடுதலும்' ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. திருக்கார்த்திகைத் திருநாளன்று திருவேட்டை எழுந்தருளுதல், பெரும் திரு அமுது செய்தல், அடியார்க்கு சட்டிச் சோறு பிரசாதம் செய்தல் முதலிய முறைகளும் வழக்கத்திலிருந்தன. ஒரு சாசனம், இத்தேவர் உத்திரமயன சங்கரமத்திலும் சகஸ்தரகலசம் ஆடியருளவும் பெருந்திருவமுது செய்தருளவும் என்று கூறுகிறது.

திருவிழாக்களில் கொடி முதலில் ஏற்றப்பட்டது என்றும் அரசாங்க அதிகாரிகள் கொடியேற்றத்திற்கு வந்தனர் என்றும் அறிகிறோம். கொடியேற்ற நாளன்று பறையறிவித்தலும் செப்புத் திருமேனிகள் உருவிலே தெய்வத்தை ஆலயத்தைச் சுற்றி வலமாக எடுத்துச் செல்லுதலும் சாசனங்களில் கூறப்பட்டுள்ளன. திருவிழாக்களில் ஒவ்வொரு நாளைக்கும் ஒருவர் கட்டளைக்காரராக இருந்தனர். மிருத்கிரஹணம் செய்தல், பாலிகை கிழட்டல் (அங்கறார்ப்பணம்), அப்பாலிகையின் அருகே இரவும் பகலும் விளக்கு எரித்தல், திருமஞ்சனத்திற்கென பல குடங்கள் வைத்தல், அவற்றின் நடுவில் சுண்ணாம்பு தடவிய கலசம் அமைத்தல், இவ்வற்றைச் சுற்றி நூலும் பட்டும் சுற்றுதல் முதலிய விவரங்கள் சாசனங்களில் கிடைக்கின்றன. சிதம்பரத்திலுள்ள ஓர் கல்வெட்டு தில்லைநாயகர் திருத்தேர் எழுந்தருளும்போது திருப்புறக் குடையிலே அத்தியயனம் பண்ணிச் சேவித்தலையும், ஸ்வஸ்தி சொல்லிச் சேவித்தலையும், திருமஞ்சன காலத்தில் அத்தியயனம் பண்ணிச் சேவித்தலையும், உத்ஸவங்களுக்கு திருபாலிவல திருநாளுக்கு எழுந்தருளு நாள் மிருத்கிரஹணம் பண்ணி அருளும்போது ஸ்வஸ்தி சொல்லிச் சேவித்தலையும் திருப்பவனி எழுந்தருளும்போது திருக்கண் சாத்தி அருளுதலையும் குறிப்பிடுகிறது.

இத்திருவிழாவில் எழுந்தருளுவதற்கு அநேகவிதமான செப்புத் திருமேனிகள் செய்து

அளிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் செம்பால் வார்க்கப்பட்டவை. தங்கத்தால் செய்யப்பட்ட திருமேனகளும், வெள்ளியால் செய்யப்பட்ட திருமேனிகளும் ஆலயங்களுக்கு அளிக்கப்பட்டன. பித்தளையால் செய்யப்பட்ட ஓர் திருமேனியைப்பற்றி இராஜராஜன் காலத்திய கல்வெட்டு கூறுகிறது. இவ்விதம் தனித்தனி உலோகங்களால் செய்யப்பட்ட திருமேனிகளைப்பற்றி விவரங்கள் கிடைக்கின்றனவேயன்றி வெண்கலத்தாலோ பஞ்சலோகத்தாலோ ஆன திருமேனி பற்றி இதுவரை சான்று ஏதும் கிடைக்கவில்லை. அநேகமாக எல்லாத் திருமேனிகளும் கனமாகச் செய்யப்பட்டன என்றும், வாகனங்கள் கனபொள்ளலாகச் செய்யப்படனவென்றும் சாசனங்கள் கூறுகின்றன.

கடவுளின் உருவங்களுக்கு திருமேனிகள் என்றும், நாயன்மார், அரசர்கள் முதலிய உருவங்களுக்குச் செப்புப் பிரதிமங்கள் என்றும் பெயர் வழங்கிற்று.

செப்புத் திருமேனிகளை இரத்தினந்நியாசம் செய்து பத்மபீடத்தில் வைப்பது பற்றியும், பல்வேறு விதமான பிரபைகளைப்பற்றியும் சாசனங்கள் கூறுகின்றன.


தஞ்சைப்பெரிய கோவிலை எழுப்பிய இராஜராஜன் காலத்தில் சுமார் எண்பதுக்கு மேற்பட்ட செப்புத் திருமேனிகள் அக்கோயிலுக்கு அளிக்கப்பட்டன என்று அறிகிறோம். இவற்றுள் சில உருவங்கள் சிறந்த உருவங்களாகவும் இன்று அநேகமாக கோவில்களிலே காணப்படாத உருவங்களாகவும் இருக்கின்றன. லிங்கபுராணதேவர், சண்டிகேஸ்வர அனுக்கிரஹமூர்த்தி, ஸ்ரீகண்டதேவர் முதலிய உருவங்கள் பெரும்பாலான கோவில்களிலே உத்ஸவமூர்த்திகளாகக் காணப் படுவதில்லை.

ஆபரணங்கள், கோவில்களில் பணி புரிவோர், பாத்திரங்கள் முதலியவை பற்றியும் சாசனங்களிலிருந்து அறிகிறோம். பல கோவில்களிலே, பாரதம் வாசித்தல், மீமாம்சா வியாக்யானம் செய்தல், வியாகரணம் வியாக்ஞானம் செய்தல், சோமசித்தாந்தம் முதலிய சித்தாந்தங்களை விளக்கம் செய்தல் என்பவை வழக்கத்திலிருந்து என்று அறிகிறோம்.

திருவிழாக்காலங்களில் ஆரியத்திலும், தமிழிலும் கூத்துக்கள் நடைபெற்றன. சைவர் கோவில்களிலே பூஜை செய்த பெரியார்களை சிவப்பிராமணர்கள் என்று சாசனங்கள் கூறுகின்றன.

ஓர் தாமிர சாசனத்தில், 'வைணவக் கோயில் நம்பியைக் கொண்டு ஆராதனை செய்விக்கவும் நம்பியைப் பெறாவிடில் வேதம் வல்ல பிராமணனைக்கொண்டு ஆராதிக்கவும்' என்று கூறுவதிலிருந்து வழிபாட்டு முறை தெரிந்த பெரியார்கள் கோயில் பூஜைக்கு அமர்த்தப்பட்டார்கள் என்று அறிகிறோம்.

இதுபோன்ற சாசனங்களிலிருந்து நாம் அறியும் செய்திகள் பல. இவற்றை ஆராய்ந்தறிந்து பார்க்கும்போது, இன்று கோயில்களில் எவ்வாறு வழிபாட்டு முறைகள் உள்ளனவோ அதே போலத்தான் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு மேலாக நடந்து வந்தது என அறிகிறோம்.





சிக்கல் சிங்காரவேலர்

படம் இரா. நாகசாமி

# தமிழக வரலாற்றில் ஸ்தபதிகள்

ஸ்தபதி. வே. இராமன்
தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி.

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். இதில் தமிழகத்துச் சிற்பிகளின் (ஸ்தபதிகளின்) தனித்ததொரு திறனைக் காணலாம். அவர்கள் மண், கல், மரம், கதை, ஓவியம், பொன் போன்ற நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதனைத் தொல்லியல் சான்றுகள் தெளிவாக்குகின்றன. ஆலயங்கள் இறைவன் உறையும் கோவிலாக மட்டும் அமையாமல், நுண் கலைகளோடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் யாவற்றையும் புலப்படுத்தும் கேந்திரங்களாகத் திகழ்ந்தன. அந்நாளைய தமிழகத்து ஸ்தபதிகள் கோயிற் சுவர்களையும், மாளிகைகளையும் பாவைகள் கொண்டு அலங்கரித்தனர். பூம்புகார் நகரத்திலிருந்த மாளிகைகளில் சுதையினால் செய்யப்பட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்திர விழாவின்போது பல பகுதிகளிலிருந்தும் வந்த மன்னர்கள் அவற்றைக் கண்டு களித்தனர். இவைகளை அமைத்தவர்களைப் பெருந்தச்சர் என அழைத்தனர்.

'சுடு மண்ணோங்கிய நெடுநகர் வரைப்பு' என்று பெரும்பாணாற்றுப் படையும், 'வெள்ளியன்ன விளங்குஞ் கதையிரீஇ மணிகண்டன் மாத்திரன் தின்காழ்ச் செம்பியறன்ன செய்வுறு நெடுஞ்சுவர்' என்று நெடுநல்வாடையும் 'வெண்சுதை விளக்கத்து வித்தகரியற்றிய கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநர்' என்று மணிமேகலையும் எடுத்துக் கூறுகின்றன. எனவே நம் பண்டையத் தமிழ் மக்கள் கட்டடங்களைச் சுடுமண்ணாலும், சுதையாலும் கட்டினர் என்பதனை உறுதி செய்யலாம். அவைகளைச் செய்வோரை 'மண்ணீட்டாளர்' என்றும் அழைப்பர். மண்ணீட்டாளர்கள் பூம்புகார், மதுரை முதலிய நகரங்களில் சிறப்புற்றிருந்தனர் என்பதனை சிலம்பு எடுத்துரைக்கின்றது.

தொல்காப்பியர் காலத்திலேயே கோயில்கள் இருந்தன என்பதை 'ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்', 'மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய' என்ற இலக்கிய அடிகள் நமக்குத் தெரிவிக்கின்றன. 'வழிபடு தெய்வம் நின்புறம் காப்ப' என்ற அடி தெய்வ வழிபாட்டில் மக்களுக்கிருந்த நம்பிக்கையை எடுத்துக்கூறுகிறது. இங்ஙனம் எடுப்பிக்கப்பட்ட பண்டையக் கோயில்கள் சிற்பநூல்துணைகொண்டே வடிவமைக்கப்பட்டது என்பதனை 'மேலோர் விழையும்நூனெறிமாக்கள் பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்'; '......' நூல் நெறி மரபின அரங்கம் அளக்கும் கோல் அளவு இருபத்து நால் விரலாக ......' எனும் சிலம்பின் அடிகளால் அறிகிறோம். மானசாரம் எனும் கட்டடக்கலை சிற்ப நூலானது 32 வகையான நூற்பெயர்களை கூறுகின்றது. எனினும் நமக்கு இன்று கிடைத்திருப்பவை மானசாரம், மயமதம், காசியபம், மனுசாரம் போன்ற சில நூல்களே. 'நூலோர் சிறப்பின் முகிழ்தோய்மாடம், மயன் பண்டிழைத்த மரபினதுதான்' எனும் இலக்கிய அடிகள், அக்காலத்தில் சிற்ப நூல்களும், சிற்பிகளும் இருந்தனர் என்பதனை தெளிவாக்குகின்றன.

சுடுமண்ணால் கட்டப்படும் கோயிலை 'மண்தளி' என்றும், கல்லால் கட்டப்படும் கோயிலை ' கற்றளி' என்றும்

கல்வெட்டுக்கள் பேசும். செஞ்சிக்கருகிலுள்ள மண்டகப்பட்டு குடவரைக்கோயிலை தோற்றுவித்த மகேந்திரவர்மன் 'இந்தக் கோயிலை நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய முப்பெரும் தெய்வங்களுக்கு கல் இன்றி, மண் இன்றி, உலோகம் இன்றி, சுதை இன்றி, மரம் இன்றி விசித்திர சித்தனாகிய நான் தோற்றுவித்தேன்' என்கிறான். எனவே இவனுக்கு முன்னர் இருந்த கோயில்கள் யாவும் மண்ணாலும், மரத்தாலும், சுதையாலும் கட்டப்பட்டன என உறுதி செய்ய முடிகிறது. எனவேதான், இத்தகைய கோயில்கள் காலத்தாலும், இயற்கையின் சீற்றத்தாலும், மக்கள் கவனக்குறைவாலும் அழிந்துவிட்டன என உறுதி செய்ய முடிகிறது. இவ்வாறு அழிந்த செங்கற் கோயிலொன்றை 'இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென மணிப்புறாத் துறநேத மரஞ்சேர் மாடத்து' என்ற அகநானூற்றுப் பாடலொன்று படம்பிடித்துக் காட்டுகிறது. எனவே உறுதியாகச் சொல்லக்கூடிய கோயிற்கட்டுமானச் சான்றுகள் பல்லவர் காலத்திலிருந்துதான் அறிய இயலுகிறது.

பல்லவர் கால கோயில் கட்டட அமைப்பு முறையை குடவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், கட்டடக் கோயில்கள் என மூன்று வகையாக பிரிக்கலாம். மலைகள் சார்ந்த இடங்களில் குடவரை மற்றும் ஒற்றைக் கற்கோயில்களை எழுப்புவது எளிதாயிற்று. மலைகளே இல்லாத இடங்களில் கற்களை செதுக்கி கட்டுவித்த கோயில்களை எடுப்பித்து கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் பெருமை சேர்த்தனர் சோழர் கால பெருந்தச்சர்கள். தமிழ்நாட்டில் பண்டைக் காலந்தொட்டு ஓர் இனம் ஐந்து அடிப்படைத் தொழில்களைச் செய்து தமிழ் நாகரிகத்திற்கும், பண்பாட்டுக்கும் அரும்பெரும் தொண்டாற்றி வந்திருக்கின்றது. அவ்வினத்தை கம்மியர் என்றும், கம்மர் என்றும், கம்மாளர் என்றும் விசுவகர்மா என்றும் மக்கள் சொல்லுவர். இலக்கியங்கள் கம்மர், கம்மியர், கைவினைஞர் என்று பேசும். இரும்பு வேலை செய்வோரை கொல்லர் என்றும், மரவேலை செய்வோரை தச்சர் என்றும், பாத்திர வேலை செய்வோரை கன்னார் என்றும், கோயில் நிர்மாண வேலை செய்வோரை சிற்பி என்றும், பொன் வேலை செய்வோரை தட்டார் என்றும் கூறுவர். மேற்கண்ட இவர்களை முறையே மனு, மய, துவஷ்டா, சில்பி, கம்மியர் என்றும் கூறுவர். இத்தகைய மக்கள் சிலப்பதிகார காலத்தில் பூம்புகார் நகரத்தில் வாழ்ந்து வந்த செய்திகளை அறிய முடிகிறது. மரத்தை அறுத்து தொழில் செய்வோரை 'மரங்கொல் தச்சர்' என்று சிலம்பில் பேசப்படுகிறது.

சிலப்பதிகாரமும், நெடுநல்வாடையும் சிற்பிகளை நூலறிப்புலவர் என்றே குறிப்பிடுகின்றன. 'நூலறிபுலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத் தேஎங் கொண்டு தெய்வநோக்கிப் பெரும்பெயர் மன்னர் ஒப்ப மனை வகுத்து' என்றும், 'பத்தினிக் கடவுளைப் பரகல் வேண்டுமென மாலை வெண்குடை மன்னவன் விரும்பி நூலறி புலவரை நோக்க' என்றும் பேசுகின்றன. நூலறிபுலவர் என்பார் கட்டடக் கலைஞர் ஆவார். மனைக்கட்டடங்களோடு கோயில் கட்டடங்களையும், வழிபடு படிமங்களையும் செய்வோரை தெய்வத் தச்சர் என்று குறிப்பிட்டனர். இவர்களையே "இப்பெருந் திருநகர் படைப்பான் மயன் முதல் தெய்வ தச்சரும் ....' '... தேவரும் மருள்கொளத் தெய்வத் தச்சனே' எனவும் தமிழ் நூல்கள் அடையாளம் காட்டுகின்றன. இலக்கியங்களில் தச்சர், பெருந்தச்சர், இளந்தச்சர், தெய்வ தச்சர், அசுரதச்சர் என்ற சொற்கள் கையாளப்படுவதைக் காண்கிறோம்.

பண்டைக்கால கட்டடக் கலைஞர்கள் தச்சர் என்றே அழைக்கப்பட்டனர் என அறிகிறோம். உறுப்புகள் பலவற்றை இணைத்துதான் கட்டடங்களை உருவாக்கிட வேண்டும். பல உறுப்புகளை ஒன்றோடொன்று இணைத்தலை 'தைத்தல்' என்று சொல்வது வழக்கு. சொல்வழக்கில் தைத்து என்பது தச்சு என்று மறுவி பிற்கு தச்சர் என்று சொல்லப்படுவதாயிற்று எனலாம். பல்லவர், சோழர் காலம் வரை கோயில் கட்டுவோரை தச்சர் என்றே கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஒரே கல்லில் குடவரைக் கோயில்களை எழுப்பியோரையும் தச்சர் என்றே குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. மாமல்லபுரம் ஒற்றைக் கற்கோயில்களை எழுப்பிய சிற்பியை கேவாதப் பெருந்தச்சன் என்று கல்வெட்டு உணர்த்துகிறது. பல துண்டுக் கற்களை இணைத்து எடுப்பித்த தஞ்சை இராசராசீசுவரர் கட்டுமானக் கோயிலை எழுப்பிய தலைமைச் சிற்பியை இராசராசபெருந்தச்சன் என்று அக்கோயில் கல்வெட்டு சொல்கிறது. கல், செங்கல், மரம் இம்மூன்றால் எடுப்பிக்கப்பட்ட உத்திரமேரூர் திருக்கோயிலைக் கட்டிய பரமேசுவரன் என்ற சிற்பியையும் தச்சன் என்றே கூறப்படுகிறது. இங்ஙனம் நூலறிபுலவராகவும், பெருந்தச்சனாகவும், போற்றப்படும் தலைமைச் சிற்பியை தற்காலத்தில் 'ஸ்தபதி' என்ற புதிய பெயரால் அழைக்கப்படுகின்றனர். வடநாட்டில் 'சூத்ரதாரன்' என்றும் அழைப்பர்.

நிர்மாணப் பணிகளுக்கு அதிபதியாவதால் ஸ்தபதி என அழைக்கப்படலாயினர். இவர்கள் ஒரு குழுவாக இருந்து செயல்படுகின்றனர். இவர்களை ஸ்தபதி, சூத்ரகிராகி, வார்த்தகி, தச்சகன் எனப் பிரிக்கலாம். ஸ்தபதி என்பவர் சிற்பநூல் வல்லுநர்களின் தலைவனாகவும், ஆசானாகவும் கருதப்படுகிறான். குறிப்பிட்ட அளவுகளுக்கேற்ப செதுக்கப்பட்ட கற்களையும், சிற்பங்களையும் உரிய இடத்தில் பொருத்தி கட்டடங்களை எழுப்பிவிட வல்லவன்

'வர்த்தகி' ஆவான். சூத்ரகிராகி என்பவர் நூல்பிடித்து கல்லின்மீது வேண்டிய அளவுகளைக் குறியிட்டு கொடுப்பவர் ஆவார். தச்சர் என்பவர் பல்வேறு கட்டட உறுப்புகளை, உருவங்களை செதுக்கும் வல்லமை படைத்தவர் ஆவார். தொடக்க காலத்தில் இச்சிற்பிகள் மரத்தை மூலப் பொருளாகக் கொண்டு கட்டடங்களை நிர்மாணித்து வந்தார்கள். அக்காலத்தில் சுவர்கள் உட்பட கட்டடங்கள் மரத்தாலேயே கட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக சிதம்பரம் ஆடலரசர் ஆலய சிற்றம்பலத்தைக் குறிப்பிடலாம். இடையே சுவர்கள் செங்கல்லாலும் மேற்கூரைகள் மரத்தாலும் அமைக்கப்பட்டன. பழங்காலக் கட்டடங்கள் மற்றும் கேரளக் கோயில்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். அடுத்து மேல்தளம் மரமும், செங்கல்லும் கொண்டு அமையப்பெற்றன. மரமே இல்லாது முற்றிலும் செங்கல்லால் ஆன கட்டடங்களும் எழுப்பப்பட்டன. பிறகு கருங்கல்லும், செங்கல்லும் பயன்படுத்தப்பட்டன. இறுதியில் கலைக்கட்டடங்கள் துண்டுக் கற்களைக் கொண்டு முழுதும் கருங்கல்லாலேயே எழுப்பப்பட்டன. தொடக்க சோழர் காலத்தில் மன்தளிகள் கற்றளிகளாக மாற்றியமைக்கப்பட்ட செய்திகளைப் பல கல்வெட்டுக்கள் எடுத்துக் கூறுகின்றன. மரத்திலே செய்து அனுபவப்பட்ட காரணத்தினால், அனுபவப்பட்ட அமைப்பையே செங்கல்லிலும், கருங்கல்லிலும் ஸ்தபதிகள் வடிவமைத்தார்கள். கையாண்ட பொருள் மாறுபடினும் செய்வோன் பெயர் மாறுபடவில்லை என்பது நோக்கத்தக்கது. மானசாரம் என்ற சிற்ப நூல் சிற்பிகளின் தகுதிகள், குணநலன்கள் முதலானவற்றை வரையறுத்துக் கூறுகிறது. ஸ்தபதிக்கு அத்தனைத் தகுதிகளும் தேவையெனக் கூறுக் காரணம், அவன் தன் பணியில் உயர்வை உணர்ந்து செயலாற்ற, சீரிய பண்பும், ஒழுக்கமும், தகுதியும் பெற்று விளங்குதல் வேண்டும் என்பதேயாகும். நுண்ணறிவும், கற்பனைத் திறனும் சிறக்க அமையப்பெற்றவனே சிறந்த ஸ்தபதியாவான். எனவேதான் அவனால் மாமல்லபுரத்து கோயில்களையும், அதனைத் தொடர்ந்து தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம் ஆகிய ஊர்களில் நிகரற்ற கோயில்களையும் எழுப்பிட முடிந்தது.

பண்டைக் காலத்தில் அத்தனை தச்சர்களும் ஓரே இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர் எனலாம். நாம் மேற்சொன்ன தச்சர்கள் அனைவரும் ஓரே சீரான திறன் கொண்டவர்களாக இருக்க முடியாது. எனவே சூத்திரகிராகி எனப்படுபவன் அத்தனைத் தச்சர்களுக்கும் நூலடித்து கொடுத்த பின்னரே தச்சன் செதுக்கிடுவான். தச்சகன் எவ்வளவு திறமை படைத்தவனாக இருந்தாலும், சூத்ரகிராகியோ, ஸ்தபதியோ நூலடித்து குறிப்போட்டுக் கொடுத்தபின்னரே செதுக்கச் செய்வது தொழில் மரபாகும். இன்று மாமல்லபுரம், புள்ளமங்கை, தஞ்சாவூர், தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோயில் மற்றும் சிற்பங்களை கூர்ந்து பார்த்தால் ஒவ்வொரு கோயிலும் மாறுபட்ட காலமாக இருந்தபோதிலும் ஓரே சிற்பியால் செதுக்கப்பட்டதுபோலத் தோன்றுகின்றன. பல சிற்பிகளுக்கு ஒரு சிற்பி வரைந்து கொடுத்து, குறிப்போட்டு கொடுத்து செதுக்கப்பட்ட காரணத்தாலேயே கட்டட அமைப்பு, சிற்ப நடை, உடை பாவனை அனைத்தும் ஓரே திறனோடு அமைத்துள்ளதைக் காண முடிகிறது. இக்கட்டுப்பாடு இன்றும் பெரிய திருப்பணிகளில் கையாளப்பட்டு வரும் முறையாகும். இதன் காரணத்தாலேயே அந்தந்த காலத்து சிற்ப நடைகள் ஓரே பாங்கில் காட்சித் தருகின்றன. இதனாலேயே தொல்பொருள் ஆய்வாளர் கால கணிப்புக்கு எளிதாக அமைந்துள்ளது. இல்லையேல் குழப்பமே ஏற்படும்.

சில கோயில்களில் அக்கோயிலைக் கட்டிய சிற்பியின் உருவத்தை அமைத்து பெருமைச் சேர்த்துள்ளனர் அக்கால அரசர்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள கோனெரிராசபுரம் கோயிலில் அக்கற்றளியை செய்தவனின் உருவமும், அவன் பெயரும் கருவறையின் சுவரில் இடம்பெறச் செய்துள்ளனர். "ஸ்வஸ்தி மதுராந்தக தேவரான உத்தம சோழரைத் திருவயிறு வாய்த்த உடையபிராட்டியார் திருக்கற்றளி எடுப்பித்த ஆலத்தூருடையான் சாத்தன் குணப்பட்டன் ஆன அரசரான சேகரன். இவன் பட்டங்கட்டினபேர் இராசகேசரி மூவேந்த வேளான்." என்று கல்வெட்டாக எழுதப்பெற்றுள்ளது. அக்கோயிலைக் கட்டிய சிற்பிக்கு இராசகேசரி மூவேந்த வேளான் என்ற பட்டமும் அளித்து பெருமைப்படுத்தியுள்ள செய்தி அக்காலத்தில் ஸ்தபதிகளுக்கு அரசர்கள் அளித்த பெருமையைப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைகிறது. சிதம்பரம் கோயிலின் வடக்கு கோபுரத்தை கிருட்டிணதேவராயன் கட்டுவித்தார். அக்கோபுரத்தின் நுழைவு வாயிலின் பக்கச் சுவரில் நான்கு சிற்பிகளின் உருவங்களைக் காணலாம். அவ்வுருவத்திற்கு மேலே அவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.


இவ்வாறு சிற்ப இலக்கணப்படி எழுப்பப்படும் கோயிலுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணி செய்வது மரபாகும். இதனை உணர்ந்த அரசர்கள் அக்காலத்தில் பூசைக்காக தானம் அளிக்கும்போது திருப்பணிக்காகவும் சேர்ந்து தானம் அளித்ததாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு அளிக்கப்பட்ட நிலம் 'திருப்பணிபுரம்' என்றும், 'புதுக்குப்புரம்' என்றும் 'திருமண்டபபுரம்' என்றும் அழைக்கக் காண்கிறோம். சில கோயில்களில் திருப்பணிகளை செய்வதற்குச் சிற்பிகளும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு அளிக்கப்பட்ட

நிலம் 'சிற்பவிருத்தி', 'சில்பின்காணி' 'ஆசார்ய தபசனன்' 'தத்தார்ச்சார்ய காணி' என்று அழைக்கப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுக்களில் காணும்போது அக்காலச் சிற்பிகள் போற்றப்பட்ட செய்தி நம்மை மகிழ்விக்கின்றன.

பண்டைக்காலத்தில் திருப்பணிக்கென்று நிலம் ஒதுக்கி திருக்கோயில்களை பராமரித்ததுப் போன்று இன்றைய தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் திருக்கோயில் வாரியம் ஒன்றினை அமைத்து கோயில்களை திருப்பணி செய்யவும், பூசைகள் நடக்கவும் வழிவகை செய்துள்ளதை என்றும் தமிழகம் மறவாது.

இன்று தமிழகத்தில் பெரும்பாலான திருக்கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு விழா கண்டுள்ளதை இறையன்பர்கள் அறிவார்கள். இவ்வரிசையில் புனித வைணவ திருத்தலமான அருள்மிகு. ராஜகோபால ஸ்வாமி திருக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெற ஆவன செய்த தமிழக முதல்வர், திருக்கோயில் வாரியம் அமைத்த் தமிழன்னை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், திருப்பணி அருளன்பர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் ராஜகோபால ஸ்வாமி திருவருள் அருளட்டும் என வழிபடுவோமாக.

## ஒருதளக் கோயில்



# தஞ்சைக் கலைக்கூடத்தில் வைணவ திருமேனிகள்

சா. ஜனகராஜன்,
காப்பாட்சியர்

சோழப் பேரரசின் மாட்சிமை மிக்க தலைநகராக விளங்கிய தஞ்சையில் உள்ள பெருவுடையார் திருக்கோவில் மாமன்னன் இராஜராஜனை நினைவுபடுத்துவதுபோல், அரண்மனை நாயக்க மன்னர்களை நினைவு படுத்துவதுபோல், சரசுவதிமகால் நூலகம், மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜியை நினைவுபடுத்துவதுபோல் சோழமண்டலத்தின் கலைப்பெட்டகமாகத் திகழும் கலைக்கூடம், அதனை நிறுவிய திரு.டி.கே. பழனியப்பன் இ.ஆ.ப. அவர்களை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

இந்தக் கலைக்கூடம் அரண்மனை வளாகத்தின் முக்கிய பகுதிகளான விஜயபவனம், இராமசௌதம் மற்றும் இந்திரா மந்திரம் ஆகியவற்றில் அமைந்துள்ளது. நாயக்க மன்னர்கள் காலத்தில் சூட்டப்பட்ட இப்பெயர்கள் தற்போது பூஜாமகால், நாயக்கர் கொலு மண்டபம் மற்றும் ஆயுதக் கோபுரம் என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதிகள் அனைத்தும் சங்கீத மகாலின் தென்புறமாக அமைந்துள்ளன. "இரகுநாதப்யுதமு" என்ற தெலுங்கு நூலில் இப்பகுதிகள் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதைத் திரு. குடவாயில் பாலசுப்பிரமணியம் தனது "தஞ்சாவூர்" என்னும் நூலில் தெரிவித்துள்ளார்.

'இராம சௌதம்' என்ற அரச அவையில் மிக அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய 5.70 மீ. x 5.10 மீ. x 0.40 மீ. அளவுகளுடைய ஒரே கல்லால் ஆன ஒரு மேடை அமைந்துள்ளது. இந்த மண்டபத்தின் மேற்குப் புற சுவற்றில் சக்கரவர்த்தி திருமகனும் நீதி நெறி ஒரு சிறிதும் வழுவாதவனுமாகிய இராமபிரானின் முடி சூடும் காட்சி சுதையில் வடிக்கப்பெற்று வண்ணப் பொலிவோடு விளங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும். மண்டபத்தின் முன்பகுதியை உயர்ந்த தூண்கள் தாங்கி நிற்கின்றன. முகப்பில் உள்ள தூண்களிலும் மேலே விதானத்திலும் அனுமன், கருடன், விலங்குகள், நடனப் பெண்கள், இசைவாணர்கள், பறவைகள், மலங்கள், தாமரை போன்ற பல்வேறு சுதை சிற்பங்கள் அழகிய வேலைப்பாடுகளுடன் நாயக்கர்கள் கலைப்பணியை எடுத்து இயம்புகின்றன.

இதே போன்று 'இந்திரா மந்திரம்' என்ற ஆயுதக் கோபுரத்தின் நான்குபுறங்களிலும் கஜலெஷ்மி, சங்கு, சக்கரம், ஆலிலைக் கிருஷ்ணன் மற்றும் குதிரை வீரர்களின் சிற்பங்களும் சுதை வேலைப்பாடுகளுடன் மிளிர்வதைக் காணலாம்.

இதுகாறும் நாயக்கர் அரண்மனையின் ஒரு பகுதியில் கலைக்கூடம் அமைந்துள்ள இடத்தில் உள்ள சுதையிலான வைணவத் திருவுருவங்களைக் கண்டோம். இனி இங்கு 1951ம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ள கலைக்கூடத்தில் இம்மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் செப்புத் திருமேனிகளையும் கற்சிலைகளையும் காணலாம்.

இந்தக் கலைக்கூடத்தில் கி.பி. 7ம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான பல்லவர் காலத்திய, சோழர் காலத்திய மற்றும் நாயக்கர் காலத்திய

சைவ, வைணவத் திருமேனிகளுடன் பௌத்த மற்றும் சமணத் திருமேனிகளும் கொண்ட அரிய கவின்மிகு சிற்பங்கள் உள்ளன. அவைகளில் வைணவத்திருமேனிகள் பற்றிய விபரங்களைக் காணலாம்.

பெரியாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பல்லாண்டில் "வடிவாய் நின் வலமார்பினில் வாழ் நின்ற மங்கையும் பல்லாண்டு" என திருமகள் உறையும் இடத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதனை சிற்பிகள் திருமாலின் வலது மார்பில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு விதமாகக் காட்டியுள்ளார். பல்லவர் கால சிற்பங்களில் அமர்ந்த நிலையில் சுட்டிக்காட்டப்பட்ட இலக்குமிதேவி சோழர்கள் காலத்தில் முக்கோண வடிவத்தில் ஸ்ரீவத்சமாகக் காண்பிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

மேலும் பல்லவர் காலத்திலும் பல்லவர் சோழர் இடைப்பட்ட காலத்திலும் "வடிவார் சோதி வலத்துறையும் சுட ராழி" பிரயோகிக்கக் கூடிய முறையில் அமைந்துள்ளது. இதனைப் பிரயோகச் சக்கரம் என்பர். பிற்காலச் சோழர் சிற்பங்களிலும், விஜயநகர மன்னர் காலத்துச் சிற்பங்களிலும் பிரயோக சக்கரம் இல்லாமல் வட்ட வடிவ சக்கரத்தையே பார்க்க முடிகிறது.

திருமாலின் பத்து அவதாரங்களில் நரசிம்மாவதாரம், இராமாவதாரம் மற்றும் கிருஷ்ணாவதாரங்களுக்கான பற்பல காலகட்டங்களில் செய்யப்பட்ட மூர்த்திகளை இங்கே காணலாம். மேலும் குழலூதும் கண்ணன் (வேணுகோபாலன்) நர்த்தனமாடும் கண்ணன், கோபியர்களிடம் திருடிய வெண்ணெயை கையிலேந்தி குதூகலித்து நின்றாடும் நவநீத கிருஷ்ணன், வேலைப்பாடுடன் கொண்டை போடப்பட்ட தவழும் கிருஷ்ணன் ஆகிய திருமேனிகள் பலவற்றை ஒரு சேர இங்கு கண்டு மகிழலாம்.

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில்,

*"நின்ற வாறு மிருந்த வாறும்*
*கிடந்தவாறும் நினைப்பரியன"*

என திருமாலின் மூன்று கோலங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவைகளில் நின்ற திருக்கோலத்திலும் அமர்ந்த திருக்கோலத்திலும் செப்புத் திருமேனிகளையும் கற்சிலைகளையும் இங்கு கண்டுகளிக்கலாம்.

கோட்டூர், திருக்காரவாயில், பெருந்தோட்டம், துகிலி, கொக்காலடி, திருக்காரவாசல், அவளிவநல்லூர், கோமல், மணக்குடி, பட்டீஸ்வரம் போன்ற ஊர்களிலிருந்து இங்கு வந்து சேர்ந்த சிலைகள் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து 1617 ஆம் நூற்றாண்டுவரை படைக்கப்பெற்றவையாகும்.

இங்குள்ள கற்சிலையில் அமர்ந்த கோலத்தில் இலக்குமி நாராயணனும் செப்புத் திருமேனியில் இலக்குமி நரசிம்மனும் உள்ளனர். இங்கு சக்கரம் ஏந்திய விஷ்ணு துர்க்கை திருவுருவங்களும் உள்ளன.

இங்குள்ள பல செப்புத் திருமேனிகள் புதைபொருளாகக் கிடைத்து முறையான விசாரணைக்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் ஒதுக்கப்பட்டு, நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தி வாங்கப்பட்டவைகளாகும்.

புதைபொருளாகக் கிடைக்கும் செப்புத் திருமேனிகளும் பிற பொருட்களும் அன்னியர் படையெடுப்பின்போது கொள்ளை போகாமலிருக்க பூமிக்கடியில் யாரும் அறியாத வகையில் மறைத்து வைக்கப்பட்டவைகளாகும். காலப்போக்கில் புதைத்து வைக்கப்பட்ட இடங்கள் மறந்துபோக, அவைகள் எதேச்சையாக கிணறு வெட்டும்போதோ, அல்லது கட்டிடங்கள் கட்ட பள்ளம் தோண்டும்போதோ கிடைக்கப்பெற்றவைகளாகும்.

மயிலாடுதுறை வட்டம் கோமல் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட வைணவ திருமேனிகளுக்கு ஒரு பின்னணி உண்டு. கோமல் கிராமத்தில் சில சிறுவர்கள் கிராமத்தின் வெளியேயுள்ள ஒரு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு பறந்து வந்த ஒரு குருவியைப் பிடிக்க முயன்றனர். குருவி அவர்கள் கையில் சிக்காது தரையிலிருந்த ஒரு பொந்தில் நுழைந்து மறைந்தது. அதனைப் பிடிக்க தரையைத் தோண்டிய சிறுவர்களுக்கு அங்கே ஆச்சரியம் காத்திருந்தது. தேவி, பூதேவி சமேதரராக மகாவிஷ்ணுவும் பிற பொருட்களும் இருந்தன. பரபரப்படைந்த அச் சிறுவர்கள் இதனை ஊர்ப் பெரியவர்களிடம் தெரிவிக்க, அவர்கள் வட்டாட்சியருக்கு செய்தியனுப்ப மேல் விசாரணைகள் நடத்தப்பட்டு பின்னர் கலைக்கூடத்திற்கு வழங்கப்பட்டன. இவ்விதமாக ஒவ்வொரு கண்டுபிடிப்பிலும் ஒரு பின்னணிக்கதை உண்டு என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

பல்வேறு கால கட்டிடங்களில் அப்போதைய நாட்டு நடப்புக்கேற்ப உருவாக்கப்பட்ட தெய்வீகக் கலையுடன கூடிய பலவகை உணர்ச்சி பாவங்களைக் கொண்ட இந்த சிலைகள் உள்ள இந்தக் கலைக்கூடம் கலாரசிகர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் ஒரு கலைச்சுரங்கமாக அமைந்துள்ளது.

# ஒளிபதி விஷ்ணு கிருகம்

டாக்டர் இரா.கலைக்கோவன்
இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
திருச்சிராப்பள்ளி

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் கிள்ளுக்கோட்டை சாலையில் கீரனூரிலிருந்து ஏறத்தாழப் பதினேழு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது மலையடிப்பட்டி. பொருளாதாரப் பின்னடைவுள்ள இச்சிற்றூரின் தென்கிழக்கில் நெடுகப் படுத்த நிலையில் அதிக உயரமில்லாத குன்றடுக்கொன்று பார்வையில் படுகிறது. இவ்வடுக்கின் முகப்புக் குன்றில் வடக்குப் பார்வையாக இரண்டு குடவரைகள் குடையப்பட்டுள்ளன. முதலில் பெருமாள் குடைவரையும் அடுத்து அதன் கிழக்கே சிவபெருமானுக்கான குடைவரையும் காணப்படுகின்றன.

## பெருமாள் குடைவரை

பெருமாள் குடைவரையின் முன்னால் வடபார்வையாகக் கோபுரமும் அதையொட்டி மேற்கில் அம்மன் திருமுன்னும் கிழக்கில் மடப்பள்ளியும் உள்ளன. கோபுரத்தின் தொடர்ச்சியாக இருபுறமும் விரியும் மதிற்சுவர் கிழக்கிலும் மேற்கிலும் நீண்டு குன்றில் முட்டி முடிகிறது. இக்கோபுரமும் இதன் வளர்ச்சியாய்ப் பக்கங்களில் நீளும் மதிலும் பெருமாள் கோயிலைச் சிவன் கோயில் வளாகத்திலிருந்து முற்றிலுமாய்ப் பிரிந்து விடுகின்றன.

## இடைவெளி

கோபுர வாயில் வழியே உள்நுழைவாரைக் கிழக்கிலும் மேற்கிலும் மதிற்சுவர்களும் தெற்கில் குடைவரையும் வரவேற்கின்றன. கோபுர வாயிலுக்கும் குடைவரைப் பகுதிக்கும் இடையிலுள்ள மணற்பரப்பில் அரைத் தாமரையமர்வில் (அர்த்த பத்மாசனம்) கமலவல்லித் தாயார் காட்சி தருகிறார்.

இவரையடுத்துக் கல்லாலான இந்திரகாந்த விளக்குத் தூண். சதுர மேடையில் எழும் இதன் கீழ்ப்பகுதியைச் சதுரமாக்கி அதன் நாற்புறமும் சிற்பங்கள் காட்டியுள்ளனர். மேற்கில் சக்கரமும் கிழக்கில் சங்கும் வடக்கில் அநுமாரும் தெற்கில் கருடனும் செதுக்கப்பட்டுள்ளனர். விளக்குத் தூணின் மேற்பகுதியில் காணப்படும் எழுத்துப் பொறிப்புகள் படிக்குமாறு இல்லை. இவ்விளக்குத் தூணுக்குப் பின்னால் தென் பார்வையாகக் கருடன்.

கோபுரத்தின் மேற்குப் பகுதியில் மதிலையொட்டித் தாயார் திருமுன் காணப்படுகிறது. கோபுரத்தின் வடகிழக்கிலும் கிழக்கிலுமாய் மதிலையே தன் வெளிப்புறச்சுவராய் கொண்டு மண்டபமொன்று அமைந்துள்ளது. இதன் வடபுறம், மடப்பள்ளியாகத் தனிவாயில் கொண்டு அமையத் தென்பகுதி ஆழ்வார்கள் திருமுன்னாக்கப்பட்டுள்ளது.

## குடைவரை முன் மண்டபம்

நன்றாய்ச் சரிந்த குன்றின் வடபுறத்து அகழப்பட்டிருக்கும் குடைவரையின் முன்னால் மண்டபமொன்று எடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் முன் பகுதியில் மூன்று வாயில்கள் காட்டப்பட்டுள்ளன. நடுவாயில் பெரியது. வல, இடப்புறங்களில் அமைந்துள்ள

வாயில்கள் இதன் மூன்றில் ஒரு பங்கே உள்ளன. இம்மூன்று வாயில்களுமே திருநிலைக்கால்கள் கீழ், மேல் நிலைகள் படிகள் கொண்டமைந்துள்ளன. நடுவாயில் வழியே உள் நுழைந்தால் குடைவரையின் முழுக்காட்சியும் கிடைக்கிறது. குடைவரையின் பக்கச் சுவர்கள், கபோதம், முகப்புக்கு முன்னுள்ள தரை ஆகியவற்றோடு முன்னால் எடுக்கப்பட்டுள்ள சோழர்கால மண்டபத்தின் சுவர்களும் கூரையும் தரையும் முற்றப் பொருந்துமாறு இணைத்துள்ளார்கள். இம்மண்டபத்தின் உட்பகுதி வெறுமையாக உள்ளது.

### *குடைவரை முகப்பு*

நன்றாய்ச் சரிந்த குன்றின் வடபுறத்து அகழப்பட்டிருக்கும் குடைவரையின் முன்னால் மண்டபமொன்று எடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் முன் பகுதியில் மூன்று வாயில்கள் காட்டப்பட்டுள்ளன. நடு வாயில் பெரியது. வல இடப்புறங்களில் அமைந்துள்ள வாயில்கள் இதன் மூன்றில் ஒரு பங்கே உள்ளன. இம்மூன்று வாயில்களுமே திருநிலைக்கால்கள், கீழ் மேல் நிலைகள், படிகள் கொண்டமைந்துள்ளன. நடுவாயில் வழியே உள்நுழைந்தால் குடைவரையின் முழுக்காட்சியும் கிடைக்கிறது. குடைவரையின் பக்கச் சுவர்கள், கபோதம், முகப்புக்கு முன்னுள்ள தரை ஆகியவற்றோடு முன்னால் எடுக்கப்பட்டுள்ள சோழர் கால மண்டபத்தின் சுவர்களும் கூரையும் தரையும் முற்றப் பொருந்துமாறு இணைத்துள்ளார்கள். இம்மண்டபத்தின் உட்பகுதி வெறுமையாக உள்ளது.

### *குடைவரை முகப்பு*

முகப்பு, முகமண்டபம், கருவறை என்ற அமைப்பில் குடைவரை வெட்டப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக 7.17 மீ அளவுள்ள முகப்புப் பகுதி நான்கு நான்முகத் தூண்களால் மூன்று அங்கணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இந்த அங்கணங்கள் பிற குடைவரைகளைப் போல் அல்லாமல் தனி வாயில்களாக்கப்பட்டுள்ளன. நடு அங்கணத்தின் இரு புறமும் உள்ள தூண்கள் முழுத்தூண்களாகவும் கிழக்கு, மேற்கு அங்கணங்களின் பக்கத் தூண்கள் அரைத்தூண்களாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இந்நான்குமே பின்புலத்தில் நான்முகத் தூண்களாகவும் முன்புறத்தே விலங்கடி கொண்ட விஷ்ணுகாந்தத் தூண்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. முழுத்தூண்களின் கீழே சிம்மங்களும் அரைத்தூண்களின் கீழே யாளிகளும் தாமரைத் தளங்களில் அமர்த்தப்பட்டுள்ளன. சிம்மங்கள் அமர்ந்துள்ள தாமரைத் தளங்கள் செம்மையாக செதுக்கப்பட்டிருக்க யாளித் தளங்கள் நிறைவுறா நிலையிலுள்ளன. நான்குமே பிடரி மயிருடன் ஆண் வடிவங்களாகக் காட்டப்பட்டிருந்தாலும் இருவகை விலங்குகளுக்கும் இடையே பிடரி மயிரமைப்பில் வேறுபாட்டைக் காட்டியுள்ளனர் சிற்பிகள். திறந்த வாயும் கோரைப் பற்களும் சிறிய செவிகளுமாய்த் தாமரைத் தளத்தில் பக்கப் பார்வையாக அமர்ந்து முகத்தை மட்டும் வாயிலுக்காய்த் திருப்பிய நிலையில் முன் காலொன்றைத் தூக்கிக் கொண்டு காட்சி தரும் சிம்மங்கள் வடிவமைப்பில் காஞ்சிபுரத்து வைகுந்தப் பெருமாள் கோயில் சிம்மங்களை நினைவுபடுத்துகின்றன.

யாளி, சிம்மத் தலைகளின் மீது எழும் தூணுடலின் வீரக்கண்டத்திலிருந்து கிளைக்கும் தரங்கப் போதிகைகள் நடுவில் அகலமானதொரு பட்டையுடன் விரிகோணத்தில் மேல் திரும்பி உத்திரம் தாங்குகின்றன. இவற்றின் தரங்க எழுச்சிகளுக்கிடையில் காணப்படும் குளவு மேற்கு அரைத்தூணில் மட்டும் இல்லை. உத்திரத்தின் வெளிப் பிதுக்கமாய் வாஜனம். மேலே சரியாக வடிவமைக்கப்படாத கபோதமாய்ப் பாறையின் மேற்பரப்பு, இதன் மீதும் நுழைவாயில் சுவர்மீதும் நிறுத்தப்பட்டிருக்கும் நீளமான பலகைக் கற்களே முன் மண்டபக் கூரையாகி இக்கட்டமைப்புகளை இணைக்கின்றன.

முகப்பின் அரைத்தூண்களை அடுத்துள்ள பாறைப்பகுதிகள் கோட்டங்களாக்கப்பட்டு ஆளுயர அடியவர் சிற்பங்களைக் கொண்டுள்ளன. இவற்றிற்கு கிழக்கிலும் மேற்கிலும் உள்ள பாறைப் பகுதிகள் பக்கச் சுவர்களாகி முன் மண்டபக் கட்டுமானத் தழுவலுக்கு ஆட்பட்டுள்ளன. முகப்பு வாஜனம் கோட்டங்களின் மீதும் ஓடுகிறது. மேற்கில் மட்டும் இது பக்கச் சுவரிலும் தொடர்ந்து, கபோதத்தின் அடிப்பகுதியில் முடிகிறது. முகப்பின் மூன்று அங்கணங்களும் மேல், கீழ்நிலைகள், திருநிலைக்கால்கள் பெற்றுச் சிறப்புக்குரிய வாயில்களாகியுள்ளன. திருநிலைக் கால்களில் தொடங்கும் பூவேலைப்பாடு மேல் நிலையிலும் தொடர்ந்துள்ளது. மேல்நிலைக்கு மேல் பாதங்களோடு கூடிய கண்டப்பகுதி காட்டப்பட்டுள்ளது. இப்பாதங்களில் அன்னம், யாளி, பூ, முதலிய சிற்ப அமைப்புகளைப் பார்க்கலாம்.

### *முக மண்டபம்*

முகப்பின் பின்னாலுள்ள செவ்வகமான மண்டபத்தை முகமண்டபமெனலாம். இதன் தென்சுவர் நடுப்பகுதியில் கருவறை உருவாக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சுவர்ப் பகுதிகளில் கிழக்கிலும் மேற்கிலும் கோட்டங்கள் அமைத்து வராகரையும் யோக நரசிம்மரையும் உருவாக்கியுள்ளனர். கிழக்கு மேற்குச் சுவர்களிலுள்ள கோட்டங்களில் பெருமாள் தன் தேவியருடன் காட்டப்பட்டுள்ளார்.

கிழக்கு மேற்காக 9.48மீ நீளமும் தென்வடலாக 1.98 மீ அகலமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் கிழக்குச் சுவர்க்கோட்டம் முழுவதுமாய்ப் பரவியவராய்ப் பெருமாளும் தேவியரும் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். குடைவரைப் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ள இவர்கட்கு முன்னால் கருவறையின் கிழக்குச் சுவர் வரை 30 செ.மீ உயரம் கொண்ட தள அமைப்பொன்று இணைக்கப்பட்டுள்ளது. முக மண்டபத்தின் மேற்குச் சுவர்க் கோட்டத்தில் ஓரே கல்லிலே செய்தமைத்த சிற்பத் தொகுதியாய்ப் பெருமாளும் தேவியரும் அமர்ந்த நிலையில் காட்சி தருகின்றனர். இவர்களுக்கு முன்னாலும் எதிர்ப்புறம் போன்றே தள அமைப்பொன்று கருவறையின் மேற்குச் சுவர் வரை நீட்டப்பட்டுள்ளது.

முகமண்டபக் கூரையையொட்டி நாற்புறமும் வாஜனமும் அதன் கீழே உத்திரமும் காட்டப்பட்டுள்ளன. இது பல்லவர் முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அமைப்பாகும். பல்லவப் பகுதிகளில் முகப்பின் உட்புறம் மட்டுமே உத்திரம் காணப்பெறும். முகமண்டபத்தின் பிற சுவர்களின் மேல் கூரையை யொட்டி வாஜனம் மட்டும் இருக்கும்.

முகமண்டபத்தின் கூரையிலும் உத்திர, வாஜனப் பகுதிகளிலும் ஓவியங்கள் தீட்டப் பெற்றுள்ளன. கூரையில் பெருமாளின் பத்துத் திருத்தோற்றங்கள் காணப்பெறுகின்றன. கிழக்கு, மேற்குக் கோடியிலுள்ள ஓவியங்கள் தெளிவாக இருக்க, நடுப்பகுதி ஓவியங்கள் சரியான பாதுகாப்பின்மையால் பெருமளவு சிதைந்துள்ளன.

*கருவறை*

4.91 மீ நீளம் கொண்டமைந்துள்ள கருவறையின் முகப்பில் 52 செ.மீ உயரமுள்ள தள அமைப்பு காணப்படுகிறது. உபானம், துணடிகள் கொண்ட கண்டம், கம்பு, பெருவாஜனம் என்றமைந்துள்ள இந்தத் தள அமைப்பைத் தூணைத் தளமெனலாம். முழுத்தூண்களுக்கு இடைப்பட்ட முகமண்டபத் தரைப் பகுதியில் இதன் உபானம் சந்திரக் கல்லாக விரித்து விடப்பட்டுள்ளது. பெருவாஜனத்தின் மேற்பரப்பே கருவறையின் தரையாகியுள்ளது. கருவறையின் முகப்பிலுள்ள நான்கு ருத்ரகாந்தத் தூண்களும் தரையினின்றும் சற்று உயர்ந்த தளத்தின் மீது எழுகின்றன. இவற்றுள் நடுத்தூண்கள் இரண்டும் முழுத்தூண்களாயிருக்கப் பக்கத் தூண்கள் அரைத் தூண்களாக உள்ளன. மேலுறுப்புகளுள் கலசம், தாடி இரண்டும் தாமரை வரியால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. நீண்ட கீழ்க்கைகளுடன் மேல் திரும்பும் போதிகைகள் உத்திரம் தாங்க, அதன் பிதுக்கமாய் வாஜனம், தூண்கள் உத்திரம் வாஜனம் என அனைத்தின் மீதும் சுதை பூசி வண்ணம் தீட்டியுள்ளனர்.

கருவறையின் பெரும்பகுதியைப் பெருமாளின் கிடந்த கோலம் நிறைத்திருக்க, முன்னுள்ள பகுதியில் பெருமாளும் தேவியுமான சிறிய அளவிலான இலக்குமி நாராயணர் சிற்பமொன்று காணப்படுகிறது. ஐந்து தலைகளால் விதானம் அமைத்திருக்கும் ஆதிசேடனின் உடலே படுக்கையாகக் கிழக்கில் தலை வைத்துப் படுத்திருக்கும் பெருமாளின் திருவடிகள் தாமரை மலரைத் தொட்டவாறு மேற்கு நோக்கியுள்ளன. தலைக்கடியிலும் கால்களின் கீழ்ப்பகுதியிலும் தலையணைகள் காட்டப்பட்டுள்ளன. பெருமாளின் எதிர்ப்புறத்தே கருவறையின் மேற்குச்சுவரை நிறைத்தவாறு மது, கைடபர் என்னும் இரண்டு அரக்கர்களின் வடிவங்கள் இவர்களுக்கிடையில் கதிரவன், பெருமாளின் தலைப்புறத்தே கருவறையின் கிழக்குச் சுவரில் கீழே கருடன், மேலே இரண்டு தேவர்களும் சந்திரனும், பெருமாளின் படுக்கையை ஒட்டிய தென் சுவரின் மேற்பரப்பில் ஒன்பது வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. கிழக்கிலிருந்து மேற்காக இரண்டு இசை விற்பன்னர்களும் அடுத்து நான்முகனும் அவரின் இடப்புறத்தே மிருகத் தலையுடன் கூடிய மனித வடிவமொன்றும் தொடர்ந்து நான்கு ஆடலரும் இறுதியாகக் குள்ளச் சிறு மனித வடிவமொன்றும் காணப்படுகின்றன. பெருமாள் படுக்கையின் முன்புறத்தை அவர் வலக்கை அருகே கருவறைத் தரையில் குத்துக் காலிட்டு அமர்ந்த நிலையில் மார்க்கண்டேயரும் காலருகே நிலமகளும் சிற்பங்களாகியுள்ளனர்.

கருவறையின் அனைத்து பகுதிகளிலும் சிற்பங்கள் உட்படச் சுதை பூசப்பட்டு வணணம் தீட்டப்பட்டுள்ளது. இத்தீட்டல் பல இடங்களில் சிற்பங்களை விகாரப்படுத்தியிருப்பது கண்கூடு. இச்சுதைப் பூச்சால் பல இடங்களில் சிற்பங்களின் உண்மையான தோற்றத்தை அறிய முடியவில்லை. குறிப்பாக நான்முகனுக்கு இடப்புறமுள்ள முதற் சிற்பம் நந்தி முகமும் மனித உடலும் கொண்டு காட்டப்பட்டுள்ளது. ஆனால் நந்தீசருக்கு இந்தச் சிற்பத் தொடரில் இடமில்லை. திருமெய்யத்தில் ஒப்பீட்டுக்குச் சென்றபோது அங்கு ஆட்டுத்தலையும் மனித உடலுமாய் ஒரு வடிவத்தைப் பார்க்க முடிந்தது. இதைத்தான் மலையடிப்பட்டியில் சுதையும் வண்ணமும் நந்தியாக்கியுள்ளன.

;சிற்பங்கள்

*அ.முகப்பு அடியவர்*

முகப்பின் இருபுறத்தும் அமைந்துள்ள கோட்டங்களில் அடியவர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இருவருமே நேர்நிலையில் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் கழுத்தில் அட்டிகை, தோள்களில் வாகு வளையங்கள், மேற்கைகளில் கங்கணங்கள், மணிக்கட்டருகே வளைகள் எனப் பல்வகை நகைகளும் தலைமகுடமும் அணிந்து கருவறை நோக்கிய கையில் தாமரையேந்தி, மற்றொரு கையை இடுப்பில் ஊன்றிச் செழிப்பாக நிற்கின்றனர். கங்கண முகப்புகளின் சிம்மமுக வார்ப்பு அழகுற அமைந்துள்ளது. இருவருமே அரையாடை, அதன் மீதான அரைப்பட்டிகை ஆகியன அணிந்து, ஆடைகளின் கனத்த முடிச்சுகள் பக்கவாட்டிலும் வளையத் தொங்கல் முன்புறத்தேயுமாய் அமையக் காட்சி தருகின்றனர். கிழக்கரின் வலமேற்கைப் பருதியைச் சுற்றியுள்ள பாம்பு அவர் முகத்தருகே படமெடுக்க, மேற்கரின் பாம்பு அவரின் இடப்புறத் தோளருகே தலை காட்டுகிறது. முப்புரிநூல் இருவருக்கும் இருந்தாலும் மேற்கருக்கு மட்டுமே வலமேற்கையின் மீதேறிச் செல்கிறது.

*ஆ. முகமண்டபச் சிற்பங்கள்*

*1. பெருமாளின் நின்ற திருக்கோலம்*

கிழக்குச் சுவர்க் கோட்டத்தில் பொளியப்பட்டுள்ள பெருமாளின் நின்ற திருக்கோலமும் சுதை மற்றும் வண்ணப்பூச்சுக்கு ஆளாகியுள்ளது. தாமரைத் தளத்தில் பதக்கம், பட்டாடை, அணிமணிகள், என நிற்கும் பெருமாளின் பின் கைகளில் சங்கும் சக்கரமும், வல முன்கைகாக்கும் குறிப்பிலிருக்க, இடமுன்கை இடுப்பில், தலைக்குப் பின் சுதையில் திருவாசி, மேலே இருபுறமும் பக்கத்திற்கொருவராகத் தாமரையேந்திப் போற்றும் கந்தருவர் பெருமாளின் வலப்புறம் திருமகளும் இடப்புறம் நிலமகளும் ஒரு கையை நெகிழ்த்தி மறுகையில் மலரேந்தி மணாளருக்கேற்ற மங்கையராய்ச் சுண்ண, வண்ணப் பூச்சுக்களுக்குப் பலியாகி நிற்கின்றனர்.

*2. பெருமாளின் அமர்ந்த திருக்கோலம்*

மேற்குச் சுவர் அருகே நிறுத்தப்பட்டுள்ள மிகப்பெரும் ஒரு கல் சிற்பத் தொகுதியில் பெருமாள் மகிழ்வமர்விலும் தேவியர் இருவரும் உத்குடியமர்விலும் இருக்கின்றனர். பெருமாளின் பின் கைகள் வழக்கம் போல் சங்கு சக்கரம் கொண்டிருக்க வல முன்கை காக்கும் குறிப்பிலுள்ளது. இடமுன்கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. தேவியரோ ஒரு கையைத் தளத்தின் மீது இருத்தி மறுகையில் மலர் மொட்டு கொண்டுள்ளனர். முதல் பார்வையில் முக மண்டபச் சுவரிலேயே செதுக்கப்பட்டாற் போல் தோன்றும் இச்சிற்பம் மிக நுட்பமாகச் சுவருடன் பொருத்தப்பட்டுள்ளது.

*3. தெற்குச்சுவர் சிற்பங்கள்*

தென்சுவரின் வலப்புறம் வராகரும் இடப்புறம் நரசிம்மரும் இடம் பெற்றுள்ளனர். இருவருமே சுண்ண வண்ணப் பூச்சுகளில் மூழ்கியுள்ளனர்.

வராகர் மகிழ்வர்வில் வலக்காலைக் கீழிறக்கிப் பின் கைகள் சங்குசக்கரம் கொள்ள, வல முன் கையால் காத்து, இடமுன் கையைத் தொடைமேல் இருத்தித் தனியராய் இருக்கையொன்றில் அமர்ந்துள்ளார். இவரது கரண்ட மகுடத்தின் இருபுறமும் பூச்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. இருக்கையின் இருபுறமும் எழும் சிறு தூண்களின் மேலே மகரத் திருவாசி, மகரங்களின் கீழே தூண்களின் முகப்பாய் நிற்கும் யாளிகள், வராகரின் வலப்புறம் அவரை வணங்குபவராய் வாலில் மணியுடன் ஓவிய அனுமார்.

கோரைப் பற்களும் புடைத்த விழிகளுமாய் இருக்கையொன்றின் மீது உத்குடியமர்வில் காட்சி தரும் நரசிம்மரின் பின் கைகளில் சங்கும் சக்கரமும், இட முன்கை தொடை மீதிருக்க, வலமுன்கை வல முழங்காலைத் தொட்டபடி பக்கவாட்டில் நெகிழ்த்தப்பட்டுள்ளது. தலையில் கிரீட முகப்பு மட்டும் காட்டப்பட்டுள்ளது. இவர் பின்னுள்ள திருவாசி வராகருக்கு அமைந்துள்ளது போல் அல்லாமல் தலைக்கு மேலும் பக்கங்களிலும் மட்டும் காட்டப்பட்டுள்ளது.

நரசிம்மரின் இடப்புறம் முகமழிந்த நிலையில் பெண்ணொருவரின் ஓவியம் காணப்படுகிறது. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை காட்டப்பட்டிருக்கும் கட்டமிட்ட கீழாடையும் தோளில் தொங்கும் வனமாலையும் கழுத்தில் புரளும் மாலையும் செழிப்பான மார்பகங்களும் இவரை அழகரசியாகக் காட்ட, இடுப்பில் செருகியிருக்கும் கத்தி சற்றே அச்சுறுத்துகிறது.

*இ. கருவறைச் சிற்பங்கள்*

*1. பெருமாள்*

கருவறையின் பெரும் பகுதியை நிறைத்தபடி பெருமாளின் படுத்த திருக்கோலம் நேராகப் படுத்திருக்கும் பெருமாளின் வலத்திருக்கை படுக்கையை ஒட்டித் தலைப்புறமாய் நீண்டு மணிக்கட்டளவில் கீழ் நோக்கிச் சரிந்துள்ளது. இடக்கையை மடக்கி இடுப்பருகே உயர்த்திக் கடக முத்திரை காட்டுகிறார். உடலெங்கும் சுதை பூசப்பட்டு வண்ணம் தீட்டப் பெற்றிருப்பதால் பல்வேறு அணிகலன்களைப் பார்க்க முடிகிறது. முப்புரிநூலும் உதரபந்தமும் ஸ்கந்த மாலையும் பட்டாடையுமாய் நன்கு

அலங்கரிக்கப்பட்ட கிரீடத்துடன் பெருமாள் படுத்திருக்கிறார். எடுப்பான நாசியும், திறந்த விழிகளும் முகத்தின் கம்பீரமும் பெருமாளின் பேரெழிலை மேலும் கூட்டுகின்றன.

## 2. இலக்குமி நாராயணர்

கருவறையின் முன்புறத்தே முன்புறத்தே ருத்ரகாந்த முழுத்தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் காணப்படும் இலக்குமி நாராயணர் சிற்பம் அளவில் சிறியது. இதில் பெருமாளும் இலக்குமித் தேவியும் அமர்ந்த திருக்கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர்.

## 3. கருவறைப் பின் சுவர் சிற்பங்கள்

கருவறைப் பின்சுவரில் பெருமாளுக்குச் சற்று மேலாக வானத்தில் மிதப்பவர்களாய் எண்மரும் பெருமாளின் கடகக் கைக்கு மேலாகத் தாமரை மலரில் அமர்ந்தவராய் நான்முகனும் காட்டப்பட்டுள்ளனர். இந்த எண்மரில் நான்முகனுக்கு வலப்புறம் இசைக் கலைஞர்களாய் இருவரும் இடப்புறம் விலங்கு முகமும் மனித உடலுமாய் ஒருவரும் அவரையடுத்து ஆடற்கலைஞர்களாய் ஐவரும் காட்சி தருகின்றனர். முற்றிலும் சுதை பூசப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டிருப்பதால் இவ்வொன்பது சிற்பங்களின் உண்மை நிலைகளை அறிய முடியவில்லை.

தாமரை மலரில், அரைத் தாமரையமர்வில் காட்சி தரும் நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் தாமரை மலரும் முன்கைகளில் வலக்கை காப்பு செய்ய, இடக்கை மடியில், சுதையும் வண்ணமும் பல இடங்களில் சிதைந்துள்ளதால் நான்முகன் அவலமானதொரு தோற்றத்தில் இருக்கிறார். இச்சிற்பங்களின் வண்ணத்தையும் சுண்ணத்தையும் முழுமையாக அகற்றிவிடுதல் சால்புடையதாகும். இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை பிற இடங்கள் போல் இங்கும் இத்திருப்பணியை மேற்கொள்ளுமாயின் மிக நன்றாயிருக்கும்.

நான்முகனின் வலப்புறம், இடுப்பில் வரிந்து கட்டிய அரையாடையும் மகுடமாய்ப் புனையப்பட்ட சடையுமாய் முனிவரொருவர், வள்ளுவர் வேண்டாமென்ற நீட்டலில் நம்பிக்கையுடையவராய்த் தொங்கு மீசையும் தாடியுமாய், இடக்கையால் யாழ் போன்றதொரு இசைக்கருவியைப் பிடித்தபடி, வலக்கையைக் கொடி முத்திரையில் இருத்திக் காட்சியளிக்கும் இம்முனிவர், இசைக்கருவியைப் பிடித்திருக்கும் முறை வியப்பூட்டுகிறது. 'இடவயின் தழீஇ' என்ற சங்க இலக்கியங்கள் பரக்கப் பேசும் முறையில் இவரும் இசைக்கருவியை இடப்புறந்தான் கொண்டிருக்கிறார் என்றாலும், மார்பின் இடப்புறம் தழுவிச் சாய்த்திருக்க வேண்டிய கருவியை, இயல்புக்கும் வசதிக்கும் மாறானதொரு நிலையில் பிடித்திருக்கும் காரணம் விளங்கவில்லை. யாழ் போன்ற இவ்விசைக்கருவியின குடம் கலைஞரின் வலத்தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. தண்டின் நுனிப் பகுதியை விரல்கள் பிடித்துள்ளன. கருவியோ கையின் பின்புறம் காட்டப்பட்டுள்ளது. இந்த இயல்புக்கு மாறான அமைப்பு சுதைப்பூச்சின் நேர்வா என்பதை வேதித் தூய்மைதான் தெரிவிக்க முடியும். முனிவருக்கு வலப்புறம் கட்டான உடலும் அரையாடையும் அளவான அணிகலன்களுமாய்க் காட்சியளிக்கும் சடை மகுடத்தார் இரு கைகளிலும் வீணையேந்தி மீட்டுகிறார்.

நான்முகனின் இடப்புறம் அறுவர் உள்ளனர். இவர்கள் அனைவருமே ஆடுநர் போல் காட்சி தருகின்றனர். முதலில் இருப்பவர் விலங்கு முகம் கொண்ட மனித உடலர். இவரை யாரென அடையாளம் காண முடியவில்லை. இவரது வலக்கை உயர்த்திய கொடி முத்திரையில் பெருமாளைப் போற்ற, இடக்கை கடகமாய் அமைந்துள்ளது. பெருமாளின் திருமுகத் தரிசனம் பெற்றவாறே மகிழ்ந்தாடும் இவரையடுத்துக் கரண்ட மகுடத்துடன் அணியலங்கார நிறைவோடு இரண்டு பெண்கள் முதலாமவர் இடக்கையை இடுப்பில் ஊன்றி வலக்கையால் பெருமாளைப் போற்றுகிறார். இரண்டாமவர் இடக்கையால் வியந்து வலக்கையால் நெகிழ்கிறார். பெண்களையடுத்து இரண்டு ஆண்கள். இவர்களும் கரண்ட மகுடர்கள். வேழ முத்திரை காட்டும் இடக்கையை வலக்கையால் பிடித்தபடி முதலாமவர் ஆட, இரண்டாமவர் இடக்கையில் கொடித் தண்டும் இதழ்களில் இளநகையுமாய், வலக்கையை மேலுயர்த்தி ஆடுகிறார். இவரது உயர்த்திய வலக்கை காட்டும் முத்திரையை இன்னதென அடையாளம் காணமுடியவில்லை. இவரையடுத்து இரு கைகளையும் உயர்த்தியபடி மகிழ்ச்சிப் பெருக்கில் குறளர் ஒருவர்.

## 4. மேற்குச்சுவர் சிற்பங்கள்

பெருமாளின் திருவடி நோக்கும் கருவறை மேற்குச் சுவரை நிறைத்தபடி இரு பெரும் அரக்க வடிவங்கள் மது, கைடபர் என்ற பெயரில் விளங்கிய இவ்வரக்கர்கள் இங்குச் சுண்ண, வண்ணப் பூச்சில் இயல்பைவிடக் கொடூரமாகத் தோற்றம் தருகின்றனர். இவ்விரு அரக்கர்க்கும் இடையில் கிடைத்த மேற்கு பகுதியில் கதிரவனைப் படைத்திருக்கிறார் சிற்பி. ஒரு கை போற்ற, மற்றொரு கையில் தம்மை ஆய்வாளர்க்கு அடையாளம் காட்டத் தாமரையேந்தித் தலைக்குப் பின் ஒளிவட்டம் காட்டி நிற்கிறார் பகலவன்.

## 5. கிழக்குச் சுவர் சிற்பங்கள்

கிழக்குச் சுவரின் கீழ்ப் பகுதியைத் தமக்காய் வரித்துக் கொண்டு, அரையாடையும் சிலம்பொலிக்கும் கால்களும் ருத்திராக்கக் குண்டலங்களும் கரண்ட மகுடமாய்க் காட்சி தரும் கருடனின் தோற்றம் பறக்கத்

தொடங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இடக்கால் மடக்கி இடுப்பளவு உயர்த்தப்பட்டிருக்க, வலக்கால் தரையை நீங்கிய நிலையில் உள்ளது. முகத்தில் மது, கைடபரை அழிக்கத் துடிக்கும் சினக் குறிப்பு.

மேலே மூவர், முதலிருவர் வணங்கிய கைகளுடன் அரையாடையணிந்து பணிவோடு நிற்கின்றனர். தேவர்களாகலாம். மூன்றாமவர் கையிலிருக்கும் மலரும் ஒளிவட்டமும் அவரைச் சந்திரனாய்க் கொள்ள வைக்கின்றன.

### 6. வடக்குச் சிற்பங்கள்

பாம்புப் படுக்கையின் முன்னால் படுக்கையை ஒட்டியபடி கருவறைத் தறைமீது கிழக்கிலொரு ஆடவரும் மேற்கிலொரு பெண்ணும் குத்துக் காலிட்டு அமர்ந்துள்ளனர். பெருமாளின் நெகிழ்ந்த வலக்கையருகே ஆண்; முழங்காலருகே பெண்.

சடை மகுடமும் மலரேந்திய இடக்கையும் இளமை பொலிந்த முகத் தோற்றமும் இவ்விளைய முனியை மார்க்கண்டேயருக்குகின்றன. இரு கைகளையும் வணக்கமாய்க் குவித்திருக்கும் பெண் நிலமகள். கச்சணியா இவர் மார்பகங்களின் மீது பின்னாளில் சுதைப் பூச்சால் கச்சணிவித்துள்ளனர்.

### ஈ. தாயார் சிற்பம்

கோபுரத்தின் இடப்புறத்தே உள்ள தாயார் திருமுன்னில் அரைத் தாமரை அமர்வில் அன்னை. கரண்ட மகுடமும் பனையோலைக் குண்டலங்களும் அணிந்தவராய்ப் பின் கைகளில் தாமரை மலர்கள் ஏந்தி முன் கைகளில் காப்பும் அருளும் காட்டுமித் தேவி பிற்காலத்தவர். இவர் கருவறை வாயிலின் கீழ் நிலையில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

### கல்வெட்டுகள்

இக்கோயில் வளாகத்திலிருந்து புதுக்கோட்டை அரசால் நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இங்குக் கள ஆய்வு மேற்கொண்ட போது டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தினர் புதிதாக ஆறு கல்வெட்டு களைக் கண்டறிந்தனர். இவற்றையும் சேர்த்து இவ்வளாகத்திலுள்ள கல்வெட்டுகள் பத்தாகின்றன. இப்பத்துக் கல்வெட்டுகளுள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இராசகேசரி வர்மர் கால நிலக்கொடைக் கல்வெட்டும் பரகேசரி வர்மர் காலத்து விளக்குக் கொடைக் கல்வெட்டும் முன் மண்டப வடசுவர்ப் பெரு வாஜனத்தில் காணப்படுகின்றன. மற்றொரு புதிய கல்வெட்டு கோபுரத்தின் வடகிழக்குக் குமுதத்தில் உள்ளது. ஏனைய மூன்றும் அங்கணக் கீழ் நிலைகளில் உள்ளன.

இப்பத்துக் கல்வெட்டுக்களுள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இராசகேசரி வர்மரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே காலத்தால் பழமையானதாகும். இக்கல்வெட்டு இக்கோயிலின் பழம் பெயரைத் தருவதுடன் பல பயனுள்ள தகவல்களையும் தெரிவிக்கிறது. பெருமாள் திருக்கோயில் ஒளிபதி விஷ்ணுகிருகம் என்றழைக்கப்பட்டுள்ளது. கோயிலிருக்கும் ஊரைத் திருவாலத்தூர் என்று குறிக்கும் கல்வெட்டு, இவ்வூர் இருந்த நாட்டுப் பகுதியைக் கீழ் செங்கிளி நாடு என்கிறது. இக்கோயில் வைகானச ஆகமத்தைப் பின்பற்றியதையும் இங்கிருந்த கோயிலாட்சியர் தங்களை வைகானசத் தேவகன்மிகள் என்றழைத்துக் கொண்டதையும் வெளிப்படுத்தும் இக்கல்வெட்டு, அத்தேவகன்மிகளுள் சிங்கன்மானதரன், தெவ்வா நாகப்பன் என்னும் இருவரும் இக்கோயிலில் மேளம் கொட்டப் பரமேசுவரன் குன்றன் எறன் சுவரனான சங்கர நாராணயர் என்னும் இரண்டு உவச்சர் பெருமக்களுக்கு உவச்சக் காணியாக ராசசுவரன் குளத்தின் கீழிருந்த நிலத்தைக் கொடுத்த தகவலையும் முன் வைக்கிறது. காடாக இருந்த இந்நிலத்தைப் பண்படுத்திப் பாசன வசதிக்குக் குளமும் வெட்டிப் பின் காணியாகத் தரும் பொறுப்பு சிவதாசன் சோலையான இராசராச பிரும்மராயரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பெருமகனாரும் தேவகன்மிகள் சொன்னவாறு செய்து, உச்சவர்களிடம் நிலத்தைக் காணியாக ஒப்படைத்து கையெழுத்திட்டதைக் கல்வெட்டின் பிற்பகுதி தெளிவிபடுத்துகிறது. இக்கல்வெட்டு குறிக்கும் இராசகேசரி சுந்தர சோழராகலாம்.

பெருவாஜனத்தின் மேற்குப் பகுதியில் படிகளின் கீழே கண்டுபிடிக்கப்பட்ட பரகேசரிவர்மரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இங்குள்ள பெருமாளை ஒளிபதி விஷ்ணு என்றே அழைக்கிறது. கீழ்ச் செங்கிளி நாட்டு விராற்குடி சார்ந்த விராற்குடான் பெருமான் கடதேவகன் அரிஞ்சயன் முயன்றான் என்பார். மேற்செங்கிளி நாட்டுக் கூத்தன் குடியைச் சேர்ந்த விராகன் நினைவாக இக்கோயிலில் பகல் விளக்கொன்று எரிக்க நாற்பத்தெட்டு ஆடுகள் தந்தார். அவ்வாடுகளை ஏற்றுக் கொண்டு நாளும் நாழி நெய்யால் விளக்கெரிக்க விராற்குடி சேர்ந்த மன்றாடி தூரன் நக்கர் ஒப்புக் கொண்டார். வைணவர்கள் பாதுகாத்துச் செய்ய வேண்டிய அறம் இது என்று கட்டளையிடும் இக்கல்வெட்டுக்குரிய பரகேசரியாக உத்தம சோழரைக் கொள்ளலாம்.

விய ஆண்டு அய்ப்பசித் திங்கள் பதினெட்டாம் நாள் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டொன்று அச்சுதப்ப நாயக்கரின் சாமந்தனார் திருவாய் மலை கண் நிறைந்த பெருமாளுக்குப் பூமி தானமாகத் தந்த ஊர்க்கொடை பற்றிக் கூறுகிறது. இக்கல்வெட்டில் திருவாலத்தூர் மலை திருவாய்

மலையென்றும், ஓளிபதி விஷ்ணுகிருகம் கண் நிறைந்த பெருமாள் கோயிலாகவும் பெயர் மாறியுள்ளன. இக்கோயிலில் பூசை, திருப்பணி, மகா ஆராதனை போன்ற கட்டளைகளை நிறுவி நடத்தி வந்த சாமந்தனார். அவற்றை நிறைவேற்ற வாய்ப்பாகப் படித்தடியூர், சாமத்திவயல், சிறுவண வயல், நல்லிநத்தம் என்னும் ஒன்பது கிராமங்களையும் இக்கோயில் இறைவனுக்காய்த் தந்ததைக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.


சகம் 1558 இல் கோபுரத்தின் தென்புறத்தே வெட்டப்பட்டிருக்கும் வீரப்பிரதாப மகராயரின் கல்வெட்டு திருச்சிராப்பள்ளி உசாவடியைக் குறிக்கிறது. இதுவும் அச்சுதப்ப நாயக்கரின் சாமந்தனார் செய்த கொடையைப் பற்றிப் பேசுகிறது. கல்வெட்டு பெரிதும் சிதைந்திருப்பதால் உரிய செய்திகளைப் பெற முடியவில்லை. திரு வாழவந்த பெருமாள் சன்னதியில் நித்தம் வாசம் செய்து கொண்டு இருக்குமாறு கட்டளையிட்ட குறிப்பு கிடைக்கிறது. இக்கட்டளையை இட்டவரும் பெற்றவரும் யார் யார் என்பதை அறியக் கூடவில்லை. திரு வாழவந்த பெருமாளும் கண் நிறைந்த பெருமாளும் ஒருவரே எனக் கருதலாம். ஒரே காலகட்டத்தில் இக்கோயில் பெருமாளுக்குப் பல திருப்பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது இதனால் தெரிகிறது.

அம்மன் திருமுன்னிலுள்ள கல்வெட்டு சுபகிருது ஆண்டு அய்ப்பசித் திங்கள் பத்தாம் நாள் தென்மாவூர் அரையர்களில் செல்ல பொக்கன் என்பாரின் மகன் மங்கான் தென் கொண்டான் என்பவர் நாச்சியார்க்குக் கோயில் கட்டி அங்கு நாச்சியாரை எழுந்தருளுவித்த செய்தியைத் தருகிறது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோபுரத்தாங்குதளக் கல்வெட்டு தென் கொண்டான் மங்கப்பன் இக்கோயில் இறைவனை எப்போதும் வழிபட்டுக் கொண்டு இங்கு நித்திய ஊழியம் செய்வதாய்ச் சொல்கிறது. குடைவரை முகப்பின் நடு அங்கணக் கீழ் நிலைக் கல்வெட்டு இந்தத் தலம் திருவாய் உறந்தை இரண்டாம் திருப்பதி' என்ற சொற்றொடருடன் அமைந்துள்ளது. இதன் வலப்புறத்தே மங்கான் சதாசேர்வை என்றுரைக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டும் கீழே நாகரியில் மூன்று வரிகளில் அமைந்த கல்வெட்டொன்றும் காணப்படுகின்றன.

கிழக்கு அங்கணக் கீழ் நிலையில் வெட்டப்பட்டிருக்கும் தெலுங்குக் கல்வெட்டில் பல எழுத்துக்கள் சிதைந்துள்ளதால் இதன் பொருளை அறியக் கூடவில்லை.

இவை தவிர முன் மண்டபத்தின் வெளிச்சுவரில் நடுவாயிலின் இடப்புறத்தே படிக்க முடியாத அளவுக்குச் சிதைந்திருக்கும் தெலுங்கு மற்றும் கிரந்த எழுத்துக்களால் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகளும் கள ஆய்வில் கண்டறியப்பட்டன.



# ஏரார் பொழிற்சூழ் இடவெந்தை

சீ. வசந்தி எம்.ஏ., எம்.பில்.,
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை

"ஏரார் பொழிற்சூழ் இடவெந்தை" என்பது உலகப்புகழ் பெற்ற மகாபலிபுரத்தின் மிக அருகில் (சுமார் 10 கி.மீ தொலைவில்) அமைதி தவழும் கிராமத்தின் மையத்தில் அழகிய பல்லவர் கால விஷ்ணுவராகப் பெருமாள் கோயில் இடம்பெற்றுள்ள திருவிடந்தையே ஆகும். சென்னையிலிருந்து பேருந்தில் சுமார் 42 கி.மீ. தூரம் சென்றால், கோவளத்தை அடுத்து சுமார் 2 கி.மீ. தொலைவில் திருவிடந்தை என்ற இத்திருத்தலம் உள்ளது.

திருவிடந்தை என்ற பெயர் இவ்வூரின் இறைவன் பெயராலேயே வழங்கப்படுகிறது. திருவிடந்தை என்பது, திருவை சிறப்புடன் இடப்புறம் ஏந்தியவன் என்ற பொருளில் வழங்கப்பட்டது. கருவறை இறைவன் வராகப் பெருமாள் பூதேவியை இடப்புறத்தில் ஏந்தியுள்ளார். கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமங்கை ஆழ்வார் இப்பிரானை 'இடவெந்தை' எந்தை பிரானே' என்று வழங்குகிறார். இப்போது இறைவன் ஆதிவராகர் எனவும், தேவி அகிலவல்லி நாச்சியார் எனவும் வழங்கப்படுகிறாா்கள். கல்வெட்டுக்களில் இறைவனை திருவிடந்தை தேவன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாவிஷ்ணுவின் மூன்றாவது அவதாரம் வராக அவதாரம் ஆகும். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்த செய்தி சதபத பிராமணத்திலும், தைத்தரிய ஆரண்யத்திலும், இராமாயணம், விஷ்ணுபுராணம், லிங்கபுராணம் மற்றும் கருடபுராணம் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன.

*தல வரலாறு :*

எல்லா ஆலயங்களிலும் வழங்கப்படும் தலபுராணம் போன்று இங்கு வழங்கப்படும் தலபுராணத்தில் "கால்வன் என்ற முனிவர் கூனி என்ற பெண்ணை மணம் புரிந்து கொண்டார். அவர்களுக்கு 360 பெண் குழந்தைகள் பிறந்தன. தம் மகளிருக்குத் திருமணம் புரிய வேண்டி ஸ்ரீ புரி என வழங்கப்பட்ட திருவிடந்தைக்கு வந்து இறைவனை வேண்டினார். இவரது வேண்டுகோளுக்கு இணங்கிய இறைவன் கஸ்யப கோத்திரத்தில் பிறந்த அந்தணன் உருவில் வந்து முதல்மகளை மணந்து கொண்டார். மணமக்கள் முதலில் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுதல் மரபு. எனவே, இம்மணமக்களும் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கியபோது கோயிலுள் மறைந்தனர். இவ்வாறு அந்த அந்தணர் 360 பெண்களையும் தினமும் மணந்து கருவறையில் ஐக்கியமாகி விட்டார். முனிவர், தமது மகள்களும், மருமகன்களும் எங்கு சென்றனர் என அறிய விரும்பி, கோயிலுக்குச் சென்று பார்த்தபோது, மகாவிஷ்ணு வராக மூர்த்தியாக 360 பெண்களையும் தொடையில் அமர்த்திக் காட்சியளித்தார். மேலும், இப்பெண்டிர் அனைவரையும் ஒன்றாக்கி பூதேவியாக தனது இடப்புறத் தொடையின் மீது அமர்த்திக் காட்சியளித்தார். எனவே, இறைவன் நித்திய கல்யாண பெருமாளாக வழங்கப்படுகிறார். மேலும், பரிச்சக்கரவர்த்திக்கும், மார்க்கண்டேயருக்கும் அருளை வழங்கியப் பெருமாளாவார்.

கிழக்குப்பார்த்து அமைந்துள்ள கருவறை சதுரவடிவுடன், அதே சதுர கீரவ சிகரத்துடன் கட்டப்பட்டுள்ளது. அதிட்டானம், உபபீடம் போன்ற சோழர் காலத்திய கோயில் அமைப்பைக் கொண்டு விளங்குகின்றது. இக்கோயில் கட்டிட அமைப்பு தஞ்சையில் உள்ள பெரிய கோயிலின் அமைப்பை ஒத்துள்ளது. எனவே, இக்கோயில் முன்னர் செங்கல் கட்டிடமாக இருந்தது. முதலாம் இராஜராஜன் காலத்தில் கற்றளியாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். கருவறையின் தேவ கோட்டங்களில் தெற்கில் தும்பிக்கை ஆழ்வாரும், அச்சுதனும் மேற்குப்புற தேவ கோட்டத்தில் சத்தியவாகவும், வடபுற தேவ கோட்டத்தில் துர்க்கையும் இடம் பெற்றுள்ளனர்.

கருவறை, அர்த்த மண்டபத்தை அடுத்து, முன் மண்டபத்தில் இம்மண்டபத்தை கட்டியவர்களின் உருவங்கள் அவர்களின் துணைவியர்களுடன் ஒவ்வொரு தூண்களிலும் காணப்படுகின்றன. வராக மண்டபம், ஊஞ்சல் மண்டபம், பிற மண்டபங்கள் ஆகும். இக்கோயிலின் திருக்குளம் வராகப் புஷ்கரணி ஆகும். பள்ளியறையில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட தந்தக் கட்டில் உள்ளது. இதில் திருமாலின் பத்து அவதாரங்கள் சிறந்த முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

*வரலாற்றில் திருவிடந்தை :*

திருவிடந்தையின் வரலாறு கி.பி 750 முதல் தொடங்குகிறது. ஆயினும் இக்கோயிலில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் ஏதும் காணப்படவில்லை. எனினும், திருமங்கையாழ்வார் இவ்வூர் இறைவன் மீது பாடிய பாடல்களில் இக்கோயிலின் வரலாற்றுக்குச் சிறப்பு சேர்கின்றது. கி.பி. 959ல் ராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணனின் காலத்திய கல்வெட்டு இவ்வூர் இறைவனுக்கு ஆளத்தூழான் இரணகேசரி என்பவரின் மனைவி நங்கை வராகி அளித்த தானம் பற்றிய செய்தி காணப்படுகிறது. ஆளத்தூழான் இரண கேசரி என்பவன் மூன்றாம் கிருஷ்ணனின் படையினைச் சார்ந்த அதிகாரிகளுள் ஒருவனாக இருத்தல் கூடும். இதிலிருந்து தொண்டை மண்டலத்தில் இராஷ்டிரகூடர்கள் ஆட்சி புரிந்துள்ளனர் என்று அறியப்படுகிறது. சோழர்களின் ஆட்சியின் கீழ் தொண்டை மண்டலம் இருந்தது. இக்கோயிலின் மூன்று கல்வெட்டுகளில் இராஜகேசரி வர்மன் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் சோழ வம்சத்தில் எந்த இராஜகேசரியாக இருத்தல் கூடும் என்று ஆராய்ந்ததில் இவன் முதலாம் பராந்தகனின் மகனான சுந்தர சோழனாக இருத்தல் வேண்டும்.

திருவிடந்தையில் காணப்படும் பரகேசரி கல்வெட்டில் இம்மன்னன் உத்தம சோழனாக இருத்தல் வேண்டும். ஏனெனில், இக்கல்வெட்டில் மணவாளப் பெருமானுக்கு, பரகேசரி வர்மனின் ஆறாம் ஆட்சியாண்டில் 30 கழஞ்சு பொன்தானமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த மணவாளப் பெருமாள் திருமேனி இராஜமராயரின் எட்டாம் ஆட்சியாண்டில் செய்யப்பட்டது. இவனது இரண்டு கல்வெட்டுக்கள், ஆறாம், எட்டாம் ஆட்சியாண்டுகளில் முறையே கி.பி. 966 மற்றும் 968 ஆகிய காலங்களில் இங்கு காணப்படுகின்றன.

*கல்வெட்டு செய்திகள்*

சோழ அரசர்களில் இராஜராஜனின் ஆறு கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. இவனது கல்வெட்டு ஒன்றில் ஆவணி மாதம், இவனின் திருநட்சத்திரமான சதயநாள் தொடங்கி ஏழுநாட்கள் விழா கொண்டாடவும், அவ்விழாவில் இவ்வூரைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவக் குடும்பங்கள் பங்கேற்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே மன்னனின் மற்றொரு கல்வெட்டில் மலைநாட்டு மற்றொரு வணிகன் அளித்த தானத்தைக் கொண்டு மாசி மாதம் முப்பது நாட்களும் அடியார்களுக்கு உணவளித்த செய்தியும், சென்னைக்கு அருகில் உள்ள திருவொற்றியூரைச் சேர்ந்த வணிகன் பங்குனி உத்திரத் திருநாள் அன்று முப்பத்தைந்து அடியார்களுக்கு உணவளிக்க அளித்த கொடையும் கல்வெட்டின் மூலம் அறியப்படும் பிற செய்திகளாகும்.

பின்னர், முதலாம் இராஜாதிராஜனின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1053) திருவிடந்தையில் இருந்து வந்த ஆமூர் கோட்டம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கலியாணபுரம் கொண்ட சோழ கோட்டம் என வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், முதலாம் இராஜாதிராஜனின் சாளுக்கிய நாட்டு வெற்றியால், அவர்கள் தலைநகரான கலியாணியைக் கைப்பற்றிய காரணத்தினால் அதன் நினைவாக இக்கோட்டத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இக்காலத்தில் பெயர்மாற்றங்கள் நிகழ்வது போல் அக்காலத்திலும், ஊர்களுக்குப் பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதே கல்வெட்டில் எழுபது அலுவலர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், செக்கிறை (எண்ணெய் எடுக்கும் செக்கிற்கு வசூலிக்கப்படும் வரி) விநியோகம், தறியிறை (துணி நெய்தலுக்கு வரி) தட்டாரப்பட்டம் (இரும்பு உலைக்கள வரி) போன்ற பல்வேறு வரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவன் பிறந்த பூரநாளில் சிறப்பு வழிபாடுகள் இக்கோயிலில் நிகழ வழி வகுத்துள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டுக்களில் இவ்வூர் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய கல்வெட்டுக்கள் மூலம் அறியப்படுகின்றது. கூறை, சோறு இவைகளை தந்து அருள வேண்டி நின்ற திருமங்கை ஆழ்வாரின் பெயரால் 'காளிச்சிங்கன் மடம்' என்ற மடம் நிறுவப்பட்டது.

சோழமன்னர்களுக்குப் பின்னர் தொண்டை மண்டலத்தை பாண்டியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஜடாவர்ம வீர பாண்டியனின் (1314 1345) காலத்தில் இவ்வூர் அசுரகால நல்லூர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மற்றொரு பாண்டிய மன்னனான மாறவர்ம வீர பாண்டியன் கல்வெட்டில் கோயிலைச் சேர்ந்த பெண்ணின் நிலம் ஏலத்திற்கு விடப்பட்டுள்ளது. இதனை திருவிடந்தை ஊராரும், சபையாரும் வாங்க விரும்பவில்லை. எனவே,

கோயில் ஸ்தானத்தார் அந்நிலத்தை ஏலத்தில் வாங்கியுள்ளனர். அக்காலத்தில் அரசாங்கம் நிலத்தினை எடுத்துக்கொள்ளாமல், தனக்குச் சேரவேண்டிய வரியினை மட்டும் பெற முயற்சித்துள்ளது. ஆனால் கோயில் நிர்வாகம் அந்நிலத்தினை வாங்கி வரி செலுத்துவதற்கு வழிவகை செய்ததை நோக்கும்போது அக்கால கோயில்கள் சமுதாய பொருளாதாரத்தில் பங்கேற்ற பாங்கு நன்கு புலப்படுகின்றது.

திருவிடந்தை கோயிலில் பதினாறாம் நூற்றாண்டில், இறைவனின் நீராட்டுதலுக்கு கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் செட்டியார் சமூகத்தினர் பல தானங்களை வழங்கியுள்ளனர்.

திருவிடந்தை திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் பிரம்மோஸ்தவம், சித்திரைமாதம் தொடங்கிக் கொண்டாடப்படுகின்றது. மேலும், வைகுண்ட ஏகாதேசியும், ஆனி, ஆடி, தை மற்றும் மாசி மாதங்களில் கருட சேர்வையுடன் பிற வைணவத்தலங்களில் கொண்டாடப்படும் விழாக்களும், இத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இங்கு வரும் திருமணம் ஆகாத ஆண், பெண் இரு பாலரும் இறைவனை வேண்டித் தொழுதால் திருமணம் கைகூடும் என்ற நம்பிக்கையும் இத்திருத்தலத்திற்குப் பெருமை சேர்க்கிறது.

மகாவிஷ்ணுவின் மூன்றாவது அவதாரமான வராக அவதாரத்தில் இறைவன் காட்சியளிக்கும் தலங்கள் தமிழகத்தில் மிகக்குறைவு. அத்தகைய சிறப்பு மிக்க திருவிடந்தை இறைவனின் திருத்தாள்கள் பற்றி வணங்குவோம்.







இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள மன்னார்குடி ராஜகோபாலன் ஓவியம்

ஓவியத்தின் கீழ் தெலுங்கில் " உபய நாச்சியாருல ஸமேதமுக ராஜ மன்னாரு ஸ்வாமி " - என்று எழுதப்பெற்றுள்ளது.



அரவணை மேல் அஞ்சன வண்ணன்

# சங்கு

வேதாந்த சிரோன்மணி & தமிழ்வித்துவான்
தஞ்சை என். ஸ்ரீநிவாசன்

கடல் என்றும் வற்றாத நீர்நிலை. இதனால் தமிழில் கடலுக்கு முந்நீர் என்று ஒரு பெயருண்டு. உலகின் மூன்றில் இரண்டு பங்கு நிலத்தை தன் வசப்படுத்தியுள்ளது. கடல் தன்னையடுத்த நிலத்திலுள்ள மக்களின் வாழ்க்கையையும், நாகரிகத்தையும் வகுக்கின்றது. மனித வாழ்க்கைக்குத் தேவையான உப்பு. தாதுப்பொருட்கள், முத்து, கிளிஞ்சல், சங்கு, கடற்பஞ்சு முதலிய பொருட்களையும், நீர், மீன் முதலிய உணவுப் பொருட்களையும் அளிக்கின்றது. சுருங்கக்கூறின் கடல்வளம் உயிர் வாழ்க்கைக்குப் பலதிறப்பட்ட பயன்நல்கும் வற்றாத, குறையாத இயற்கை வளமாகும்.

இயற்கையான பொருட்களையும், மிக விலையுயர்ந்த பொருட்களையும் இறைவனுக்கு அர்பணிப்பது என்பது மரபு. வேதகாலந் தொடங்கி இன்றளவும் முன்னோர்கள் கூறிவந்த மரபுகளையே நாம் கடைபிடித்து வருகிறோம். இறைவனை ஆராதிக்கும் முறைகளைப்பற்றிப் பலநூல்கள் விதிகளையும், முறைகளையும் கூறுகின்றன. அங்ஙனம் கூறப்படும் விதிகளில் சங்கினால் செய்யும் பூஜை முறைகளைப்பற்றி மிக விரிவாகக் கூறுகின்றன ஆகம நூல்கள். ஆகையால் 'சங்கை' நமது வைதிக காரியங்களுக்கு பயன்படுத்துவதோடு, அதனை இந்து சமயம் பக்தியுடன் போற்றவும், வழிபடவும் செய்கிறது. இந்து சமயம் மட்டுமா? இல்லை. பௌத்த சமயத்தினரும் 'சங்கை' ஒரு புனிதப் பொருளாகக் கொண்டு வழிபடுகின்றனர்.

கார்த்திகைமாதந் தொடங்கிவிட்டால் சிவாலயங் களில் 'சங்காபிஷேகங்கள்' நடைபெறத்தொடங்கிவிடும். (இறைவனை பஞ்ச பூதங்களாலும் அபிஷேகம் செய்து வழிபடுதல் மரபு. அங்ஙனம் வழிபடும்போது நீரின் அம்சமான சங்கினால் வழிபட்டு நீராட்டுதல் ஐம்பூதங்களிலொன்றான நீரால் வழிபடுதலைக் குறிக்கும்) திருவிழாக்காலங்களில் ஆலயங்களில் 'பூம்பூம்' என்ற சங்கின் பேரொலியை எழுப்பி 'இறைவன் திருவுலாவுக்குப் புறப்பட்டுவிட்டான்' என்பதை நெடுந்தொலைவிலிருப்போரும் அறிந்து கொள்ளப் பயன்படுகின்றது. வைணவப் பெரியோர்கள் வந்தால் அவர்களிடம் வைதீக தீக்ஷையாக சங்கும் சக்கரமும் பொறித்த இலட்சினையை இரு தோள்களிலும் பெற்றுக்கொள்ள வைணவர்கள் கூடுவார்கள். மார்கழி மாதங்களில் அதிகாலையில் தூங்கும் மக்களைத் துயிலெழுப்ப 'தாதன்' சங்கு ஊதி உலகையே துயிலெழுப்புவான். நித்திய பூசை செய்வோர் சங்கின் தீர்த்தத்தால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வார்கள். திருக்கோயில்களின் வழிபாட்டு நேரங்களில் பேரிகை, மத்தளம், குழல், மணி, சங்கு முதலியன கலந்து ஒலிப்பதுடன் ஓதுவார் மூர்த்திகளின் தேவாரப் பண்ணிசையும் ஒலிக்கும். இவை இணைந்து, கலந்து ஒலிப்பதில் முக்கியமான தத்துவம் அடங்கியுள்ளது. நாம் இறைவனை தினமும் ஐம்பூதங்களாலும் வழிபடுதலைக் குறித்தலே மேலே காணும் வழக்கம். பேரிகை, முழவு, தவில், மத்தளங்களை மரத்தாலும், தோலாலும் செய்திருப்பதால் இது ப்ருதிவி நிலத்தின் அம்சமாகவும், குழல், நாதஸ்வரம், முதலிய துளைக்கருவிகளால் எழுப்பப்படும் ஒலி காற்றின் வாயு அம்சமாகவும், 'சங்கு' ஜலத்தின் அம்சமாகவும், மணி, புரி, சின்னங்கள் (உலோக வார்ப்புகள்) தீயின் அக்னி அம்சமாகவும், வாய்ப்பாட்டு 'ஹரஹர மஹாதேவா" என்பன போன்ற ஒலிக்குறிப்புகள் அகாச அம்சமாகவும் கொண்டு தினமும் வழிபடுகிறோம். ஒரு பெரிய சங்கில் தீர்த்தம் வைத்து சில முத்திரைகளைக் காட்டிய பிறகே தீபாராதனைகளைச் செய்வார்கள். இப்படி நமது சமயத்திற்கு மட்டுமின்றி மனிதனின் அன்றாட வாழ்விலும் சங்கின் பங்கு மிக அதிகம்.

சங்கினுக்கு, தமிழ்மொழியில் பல பெயர்களுண்டு. அவைகளை நந்து, பணிலம், வளை, நாகு, கரிமுகம், கம்பு, கோடு, சுத்தி, வெள்ளை, இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், தரா,

வண்டு, வாரணம், என்று பல்வேறு பெயர்களுண்டு. சம்ஸ்கிருதத்திலும் கம்பு, கம்போஜம், அப்ஜம், ஜபஜம், அர்ணோபவம், பாவனத்வனி, அந்த: குடிலம்; மகாநாதம், ஜீவா, ஸ்வேதம், பூத: முகர:, தீர்க்கநாதம், பகுநாதம், ஹரிப்ரிய: என்று பல பெயர்களுண்டு. துன்பத்தையொழித்து இன்பத்தைக் கொடுப்பதால் 'சங்கு' என்று பெயர் பெற்றது. இதைப்போலவே மங்களமயமான இன்பத்தை விரும்புகின்றவர்களுக்கு விரும்பியதைக் கொடுப்பதால் 'கம்பு' என்ற பெயரைப் பெற்றது.

சங்கு கடலில் வாழும் ஒரு உயிரினம். இதனால் 'ஜீவன்' என்ற பெயர் சம்ஸ்க்ருத மொழியிலுண்டு. 'சங்கு' கடலில்தான் பெரும்பாலும் அதிகமாகக் கிடைக்கும். சிற்சில க்ஷேத்திரங்களின் தீர்த்தங்களிலும் கிடைக்கின்றன என்று தல புராணங்கள் கூறுகின்றன. இது இந்தியக் கடலிலேயே சாதாரணமாகக் காணப்படுவது. அதிகமாக கீழ்கடலில்தான் காணப்படும். கடலில் குளித்து எடுக்கக்கூடியது. ஏறக்குறைய ஏழாள் ஆழம் வரையிலுள்ள பெரிய படுகைப் பகுதிகளிலே கிடைக்கும். கிழக்குக் கரையில் திருநெல்வேலி, இராமநாதபுரம், தென்னாற்காடு, தஞ்சை மாவட்டங்களிலும், மேற்குக் கரையிலே திருவிதாங்கூர், கத்தியவார் ஆகிய இடங்களிலும் அகப்படுகின்றன. இலங்கையின் யாழ்பாணத்தையடுத்த கடற்கரைக்குச் சற்று தொலைவில் மடிந்த சங்குகளின் ஓடுகள் கடற்படுகைகளில் காணப்படுகின்றன. சங்கில் திட்டமாக வேறு பிரித்தறியக்கூடிய ஓர் இனவகை அந்தமான் தீவுகளைச் சூழ்ந்துள்ள கடலில் கிடைக்கின்றது. இலங்கையிலிருந்து எடுக்கப்பெறும் தாழ்ந்த தரமான செத்த சங்குகளையும் சேர்த்து ஆண்டுக்கு 20 லட்சத்துக்கு மேல் எடுக்கின்றனர்.

சங்குகளில் சிறந்தவைகளை முறையே, இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சகன்னியம் என்று நான்குவகைப்படுத்தியுள்ளனர். இப்பி ஆயிரஞ் சூழ்ந்தது ஒரு இடம்புரி, இடம்புரி ஆயிரஞ் சூழ்ந்தது ஒரு வலம்புரி, வலம்புரி ஆயிரஞ் சூழந்தது ஒரு சலஞ்சலம், சலஞ்சலம் ஆயிரம் சூழந்தது ஒரு பாஞ்ச ஜன்னியம் என்று வகைப்படுத்தி தமிழ் நிகண்டுகளும் சமஸ்கிருத நூல்களும் கூறுகின்றன. சம்ஸ்கிருத நூல்களில் இடம்புரிக்கு 'சங்கம்' என்றும், வலம்புரிக்கு 'தக்ஷிணாவர்த்தம்' என்றும், சலஞ்சலம், பாஞ்சகன்னியம் (இவ்விரண்டு பெயர்களும் சம்ஸ்கிருத பெயர்கள்) என்றும் கூறுகின்றன.

புராண இலக்கியங்களில், முத்துச் சிப்பிகள் கடலின் நீர்மட்டத்திற்குமேல் வெளிவந்து வானத்தை நோக்கி வாய்திறந்து நிற்குமென்றும், அப்பொழுது மழைத்துளி சிப்பியில் விழுந்து முத்தாகிறதென்றும் கூறுகின்றன. மேலும் வைகாசி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் பெய்யும் மழைத்துளி சிப்பியின் வாய்க்குள் விழுமானால் அது அங்கே தங்கி முத்தாகும் என்று கூறுகிறது ஸம்ருதிஸாரோத்ரம். இதைப்போலவே 'சங்கபரீஷா' என்னும் நூலில் சங்கு உண்டாகும் விதம் பற்றி கீழே காணும் வண்ணம் கூறுகிறது:

கடல்மீது மழை பொழியும்போது சங்குகள் உற்பத்தியாகின்றதென்றும் குறிப்பாக நமது தென்னிந்தியாவில் ஆனி மாதம் விசாக நட்சத்திரம் கடல் மீது மழை பொழியும்போது அந்த மழைத்துளியால் 'தக்ஷிணாவர்தம்' என்ற சங்கின்வகை (வலம்புரிச் சங்கு) உண்டாகின்றன என்றும் கூறுகின்றது.

ஆனால் உயிரியல் துறையினர் 'சங்கு'களை சாங்கஸ்பைரம் (Sangospyrum) என்று அழைக்கின்றனர். இது நத்தையைப் போல 'மொலஸ்க்கா' (Mollusca) என்னும் "மெல்லுடலித் தொகுதி"யின் "காஸ்ட்ரபோடா" (Gastrapoda) என்னும் "வயிற்றுக்காலி" வகுப்பைச் சேர்ந்தது. இந்த உயிர் திருகலான ஒரு ஓட்டுக்குள் இருக்கும். அந்த ஓடே சாதாரணமாக 'சங்கு' என்று அழைக்கப்படுவது. ஓட்டுக்குள்ளே உடல் முழுமையும் அடங்கியிருக்கும்போது ஓட்டின் வாயானது ஓரே தகடுபோன்ற தசையால் அடைக்கப்பெற்றிருக்கும்.

இது மணற்பாங்கான அல்லது மணலும், சேறும் கலந்துள்ள இடங்களில் வசிக்கும். அந்த மண்ணை 'பூச்சிமணல்' என்று அழைப்பார்கள். சங்குகள் வாழும் இடத்திற்கு 'சங்குச் சலாபம்' என்று பெயரிட்டு அழைக்கின்றனர். சங்குகளில் ஆண், பெண் உண்டு. பெண் சங்குகள் கலவிக்குப் பிறகு முட்டைகளை உறைகளிலிடும். இவ்வுறைகள் செம்மறிக்கடாவின் கொம்புபோல முறுக்கிக்கொண்டிருக்கும். இவைப் பூக்களைப் போன்றிருப்பதால் 'சங்குப் பூக்கள்' என்று அழைக்கப்படுகிறது. இதில் காணும் ஒவ்வோர் உறைகளிலும் பல சிறுசிறு அறைகளுண்டு. ஒவ்வோர் அறைகளிலும் பல முட்டைகளும், உரிய உணவுப் பொருட்கள் சேர்ந்துள்ள திரவமும் நிரம்பியிருக்கும் முட்டை கருவாக முதிர்ந்து, வளர்ச்சி பெற்று இந்த அறைகளின் சுவாகளைக கிழித்துக்கொண்டு சங்குக் குஞ்சுகள் வெளிவரும்.

*அம்சுமதாகமத்தில்*

ஆண், பெண், அலி என்று மூன்றுவகை சங்குகள் உண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். அவற்றை கீழே காணும வகைகளாகப் பிரிக்கலாம். சங்கின் நுனியும் (வால்பகுதி), நடுவும், பின்பகுதியும் ஒத்த அளவில் இருக்கும் சங்கு ஆண் சங்கு என்றும், நுனி நீண்டு பின்பகுதி குறைவாகவும், அமைந்தது பெண் சங்கு எனவும், குறைந்த நுனியும், நீண்ட பின்பகுதியும் உள்ள சங்கு அலிச்சங்கு எனவும், சங்காபிஷேகப் படலத்தில் காணப்படுகின்றது.

இனி "இந்த சங்குகள்" அனைத்துமே உயர்ந்ததாக மதிக்கப்படுவதில்லை. பிறப்பையும், தோற்றத்தையம் ஒத்திருக்கும் சில சங்கு வகைகளும் உண்டு. இது கடலிலோ, ஆறுகளிலோ, குளங்களிலோ கிடைக்கும். இவைகளைத் தமிழகத்தில் நத்தைக்கூடுகள் என்று

அழைப்பார்கள். இதற்கு சம்ஸ்கிருதத்தில் 'ஷுத்ரசங்கம்' என்று பெயர். இவை சங்கைப்போல அழுத்தமாகவும், வெண்மையாகவும் இருக்காது. இவை எளிதாக உடையும் தன்மையைக் கொண்டவை. மேலும் பல வண்ண வண்ண நிறங்களில் ஆயிரக்கணக்கான வகைகளில் காணப்படும். உயிருள்ள சங்குகளில் மிகவுயர்ந்த தரமுள்ளவைகள் தமிழக அரசின் மீன்பண்ணை இலாகா நடத்துகின்ற திருநெல்வேலி மாவட்டத்துத் தூத்துக்குடி சங்குச் சல்லாபங்களில் அகப்படுவனவே. சாதாரணமாக உயர்தரமுள்ள 10 லட்சம் சங்குகளை ஆண்டொன்றுக்கு எடுக்கின்றனர்.

*சங்கின் அமைப்பும் லட்சணமும்:*

பொதுவாக, சங்கின் ஓடு பெரியது. பாரமானது உன்னதமான வடிவழகும் தோற்றமுள்ளது. நேர்த்தியான திருகலும்; அகன்ற வாயும், வாயிலிருந்து நீண்டு வந்துள்ள குறுகிய குழலும் இதற்குண்டு. இதனால் சங்கின் பெயர்களில் 'அந்த:குடிள:' (இறுதிப்பகுதி குறுகலானது) என்ற காரணப்பெயர் உண்டு. சங்கின் ஓட்டினுடைய வெளிப்புறப் பகுதியில் கொழுப்புப் பொருளான மெல்லிய தோல் மூடியிருக்கும். இது பொன் போன்ற மஞ்சள் நிறமும், இத்துடன் பழுப்புக்கலந்த நிறமுமுள்ளது. இத்தோல் எளிதில் உரிந்துவிடும் தன்மையுடையது. இதற்கடியில் கால்ஷியம் கார்பனேட் (Calcium Carbonate) என்னும் சுண்ணாம்புப் பொருளாலான தடிப்பான ஒரு அடுக்குண்டு. இந்தச் சுண்ணாம்படுக்கு மிகக் கடினமாகவும், வெண்மையாகவும் இருக்கும்.

*இடம்புரிச் சங்கு*

இது தூய வெண்மையாகவும, சில பழுப்பு நிறமாகவும் இருக்கும். இந்தச் சங்கை அதன் கரிகையின் உச்சி நமது உடம்புப் பக்கம் இராமல் புறப்பக்கம் இருக்கும்படி கையில் ஏந்திக்கொண்டு பார்த்தால் அதன் வாய் நமது வலப்பக்கத்தில் இருக்குமாறு சங்கின் முறுக்கு அமைந்திருக்கும். இதனால் இச்சங்கை 'இடம்புரிச் சங்கு' என்று அழைப்பார்கள். இது இறைவனின் பூசைக்கும்; அபிஷேக ஆராதனைக் காலங்களிலும், வீதி உலாக் காலங்களிலும் சங்கொலி எழுப்பப் பயன்படுத்துகின்றனர். இந்தவகைச் சங்கே அதிக அளவில் கிடைப்பது.

*வலம்புரிச் சங்கு*

இது இடம்புரிச் சங்கு போலிராமல் முன் சொன்னபடி சங்கைப் பிடிக்கும்போது சங்கின் வாய் நமது இடப்பக்கத்தில் இருக்கும். இவ்விதமான சங்குகளை வலம்புரிச் சங்கு என்று அழைக்கின்றனர். இச்சங்குகளில் சில தூய்மையான வெண்ணிறமாகவும், சில மஞ்சள் நிறமாகவும், சில புதிய வெண்ணையைப்போன்ற நிறமாகவும், சிலவற்றின் உட்பக்கம் சிவந்த நிறமாகவும் இருக்கும். இது தென்னிந்திய கடலில் கிடைப்பதாலும், சங்கின் வாய்ப்பகுதி இடப்பக்கமிருப்பதாலும் இதற்கு 'தஷிணாவர்த்தம்' என்று பெயர் பெற்றது.

இந்த வகைச் சங்கு(கள்) எந்த இல்லத்தில் இருக்கின்றதோ அங்கு அனைத்துக் காரியங்களும் வெற்றியடையும் என்றும், ஆயுள், செல்வம், பசு, மக்கட்பேறு, ஐஸ்வர்யம் முதலியன பெருகும் என்று கூறுகின்றது. சங்க பரீஷை என்னும் நூல். மேலும் வலம்புரிச் சங்கினால் மஹாவிஷ்ணுவுக்கும், சிவபெருமானுக்கும் அபிஷேகம் செய்து வழிபட்டால் அவனது ஏழு பிறவிகளில் செய்த பாவம் தொலைந்துவிடுகிறது என்று வராஹ புராணத்திலும், ஆன்னிக ஆசார தத்துவம் என்னும் நூலிலும் கூறப்பெற்றுள்ளன.

*சரஞ்சலம்*

ஆயிரம் வலம்புரிச் சங்குகளுக்கு ஒப்பாக இவ்வகைச் 'சங்கு' இருப்பதாக நூல்கள் பாராட்டுகின்றன. இதன் அமைப்பைப் பற்றி சங்க பரீஷை என்ற சுவடியில் கூறப்பெற்றுள்ளது. "இது தீயின் ஒளியை (வெளிர் சிவப்பு நிறத்தை) யுடையதாகவும், இச்சங்கு நம் அருகிலிருக்கும்போதே இனிமை பயப்பதாகவும் இதன் உட்புறத்தே வெள்ளை நிறத்தில் மூன்று கோடுகள் மேல்நோக்கிச் செல்வதாகவும் இருக்கும். இந்த மூன்று கோடுகளும் மும்மூர்த்திகளைக் குறிக்கும். இம்மூன்று கோடுகளே மூன்று வேதங்களின் ஸ்வரூபம். 'சரஞ்சலம்' என்ற இவ்வகைச் சங்குகளின் பெயரைக் கேட்டதுமே நாம் செய்த பாவங்கள் அழியும். இச்சங்கை தரிசனம் செய்தாலேயே யானை, குதிரை, செல்வம் போன்ற செல்வத்தை உறுதியாக அடைவான். இச்சங்கின் அடியில் பிரமனும், நடுவில் விஷ்ணுவும், நுணியில் சிவனும் இருக்கின்றனர். இச்சங்கை மக்கள் பூசித்தால் மும்மூர்த்திகளையும் பூஜித்த பலனை அடைவார்கள். இச்சங்கை எந்த அரசன் பூஜிக்கின்றானோ அவன் போர்க்களத்தில் எதிரியை வெல்வான் என்றும் இதை சேகரித்துக் கருவூலத்தில் வைத்தால் கருவூலம் பெருகும் என்றும் எந்த நாளுமே சக்கரவர்த்தியாகவே இருப்பான் என்றும் சங்க பரீஷை என்னும் சுவடி கூறுகிறது.

*பாஞ்சசன்னியம்*

இது திருமாலாகிய நாராயணனின் ஐம்படைகளுள் ஒன்று. நாராயணன் என்ற சொல்லினாலேயே அப்புதத்துவத்தின் அதிஷ்டான தேவதை என்பதை உணரமுடியும். நாரம் = தண்ணீரில் _ அணான் = உற்பத்தியானவன். இத்தத்துவத்தைக் குறிக்கவே ஜலத்தில் தோன்றிய 'சங்கு' நாரணனின் கைகளை அலங்கரிக்கின்றது.

பாஞ்சசன்னியம் என்ற பெயருள்ள இவ்வகைச் சங்கிற்கு இணையாக ஆயிரம் சலஞ்சரத்தை ஒப்பிடுகின்றது. இச்சங்கைப் பற்றி நான்மறைகளிலும் அதன் சாகைகளிலும் பரவலாகக் கூறுகின்றன. இது தூய்மையான வெள்ளை நிறமாகவும், இதன் உட்பக்கமாக வெள்ளை நிறத்தில் ஐந்து கோடுகள் மேல் நோக்கிச் செல்லும் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

*சங்கு குளித்தல்*

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆழ்கடலில் மூழ்கி சங்கு, முத்து எடுக்கும் வழக்கம் நமது மக்களிடமிருந்தது. உலகில் முத்துக்களையும், சங்குகளையும் முதன்முதலில் கண்டெடுத்தவர்கள் இந்தியர்கள் எனின் மிகையில்லை. ஆதிகாவியமான ராமாயணத்தில் இராமனுடைய கழுத்தை கம்புக்ரீவம் என்கிறார் வால்மீகி.

ஆழ்கடலில் மூழ்கி முத்துக்களையும், சங்குகளையும் எடுக்குந் தொழிலையும் பரதவர் கொண்டிருப்பர். கடலிலிருக்கும் வெண்மையான சங்குகளைப் பெறுதலே தமது முயற்சியாகக் கொள்பவர். அதனால் தம் உயிரைக்கூட சிறிதும் பொருட்படுத்தமாட்டார். சங்கு குளிக்கும்தொழில் அக்டோபர் முதல் மே மாதம் வரையிலும் நடைபெறும். சங்கு குளிப்பதற்காக முக்குவர்கள். சிறுசிறு தோணிகளில் ஏற்றிக்கொள்வர். பத்துப் பதினைந்து தோணிகள் சேர்ந்து புறப்படும். சங்குகள் இருக்கும் 'சங்குச்சலாபங்கள்' இருக்கும் இடத்தைச் சூரியன் உதயமாகும் சமயம் அடையும்படி நடு இரவில் தோணிகள் புறப்படும். ஒவ்வொரு தோணிகளிலும் ஏறத்தாழ சங்கு குளிக்கும் ஆற்றல் வாய்ந்த பதின்மரும், இரண்டொரு படகோட்டிகளும் இருப்பார்கள். பல சமயங்களில் ஒரு இயந்திரப் படகு நாலைந்து தோணிகளை இழுத்துக்கொண்டு குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேரும். குறித்த இடத்தை அவர்களுடைய பழக்கத்தினாலே அடையாளங்கண்டுகொள்வர். சூரியன் உதயமனவுடன் ஒவ்வொரு தோணிகளிலும் சுமார் 40 பவுண்டு (18.200 கிலோ கிராம்) எடையுள்ள கருங்கல் ஒன்றைக் கயிற்றில்கட்டி அந்தக் கயிற்றைப் படகுடன் பிணைப்பர். சங்கு குளிப்பவன் அந்தக் கயிற்றின் மூலமாக தண்ணீருக்குள் விடப்படுவான். இருவர் இருவராகவே ஆட்கள் வேலை செய்வார்கள். தண்ணீருக்குள் செல்பவருடன் பல கூடைகளும் செல்லும். அழுந்தும் கற்களின் உதவியைக்கொண்டு முத்துக்குளிப்பவர்களைப் போலவே சங்கு குளிப்பவர்களும் நீருக்குள் மூழ்கி 'சலாபத்தை' (சங்குகள் வாழும் பகுதி) அடைவர். ஒருவன் மூழ்கும்போது மற்றவன் அடையாளமாகக் கட்டப்பெற்றிருக்கும் கயிற்றையே உற்றுப் பார்த்துக்கொடிருப்பான். மூழ்கியவன் தனது கால்களால் அங்குள்ள சங்குகளைத் திரட்டி கூடைகளை நிரப்புவான். நிரப்பியதும் நீரிலிருப்பவன் அடையாளக் கயிற்றைப் பலமாக ஆட்டி எச்சரித்தவுடன் மேலே படகிலிருப்பவன் கூடைகளை வேகமாக இழுத்து, சங்குகளைப் படகில் கொட்டிவிட்டு, கடைசியாக மூழ்கியவனையும் வேகமாக நீர்மட்டத்திற்கு மேலே இழுப்பான்.

பிடித்த சங்குகளுடன் மேலே வந்து சிறிது பொழுது இளைப்பாறித் திரும்பக் குளிப்பார்கள். இவ்வாறு அனுபவமிக்க முக்குவர் ஒருநாளில் சுமார் 100 சங்குகளைப் பிடிப்பான். சங்கு குளிப்போர் சராசரி 50 முதல் 80 செகண்டுகள் வரை தண்ணீருக்குள் மூழ்கி இருக்கின்றனர். பேராற்றல் உடைய சிலர் ஆறு நிமிடங்கள்வரையிலுங்கூட மூச்சுப்பிடித்து நீரில் மூழ்கி இருந்ததாகச் சொல்வார்கள். சிலர் இந்தச் சமயம் இறந்துபோவதும் உண்டு. இந்தியக் கடல்களில் இருக்கும் சுறாமீன் முதலிய மீன்களால் நேரும் தீங்கைத தடுப்பதற்காக நீண்ட ஈட்டி முனைகள் பதித்த மரத்துண்டு ஒன்றையும் கையில் கொண்டு போவார்கள். நீரில் முத்து, சங்கு எடுப்பவர்கள் பெரும்பாலும் குறைந்த ஆயுளையே உடையவர்களாக இருக்கிறார்கள். மேலும் கஷ்டமும், ஆபத்தும் நிறைந்தது இத் தொழில்.

மீன் இலாகா ஒருவித உலோக அளவுக் கருவி வைத்திருக்கிறார்கள். அதில் 2 3/8 அங்குல விட்டமுள்ள வளையம் உண்டு. அவ்வளையத்தின் வழியே செல்லக்கூடிய சங்குகளையெல்லாம் மிகச்சிறியவையென்று எண்ணிக்கைக்கு எடுத்துக்கொள்ளாமாட்டார்கள். அவற்றை திரும்பக் கடலிலேயே விட்டுவிடுவார்கள்.

அமாவாசை முழுநிலா நாட்களில் ராமநாதபுரம் மாவட்டத்தின் தீவுகளுக்குச் செல்லும் வலையர்குலப் பெண்கள் நீர்வடியும்போது சங்குகளை எடுக்கின்றனர்.

*முத்தும் சங்கும்*

சிப்பியில் விளையும் முத்துக்களே மக்களுக்கு அதிகமாகக் கிடைக்கின்றன. முத்து நிலத்திலும், நீரிலும் பிறக்கின்றன. நீரில் கிடைக்கும் முத்துக்களை 'ஜலஜம்' என்றும், நிலத்தில் பிறப்பதை 'ஸ்தலஜம்' என்றும், கூறுவர். 'ஜம்' என்ற சொல்லுக்கு தோன்றுவது என்று பொருள். நீரில் சங்கு, சிப்பி, மீன்தலை, தாமரை, ஆகியவற்றிலும், நிலத்தில் மேகம், மூங்கில்கணு, பாம்பின் படம், நாமக்கரும்பின் கணு, சம்பாப்பயிரின் தாள், யானையின் தந்தம், பன்றியின் பல் முதலிய இடங்களில் கிடைக்கின்றன. ரத்னபரீக்ஷை, ரத்னதீபிகா, ரத்ன சாஸ்திரம், ஆகிய நூல்களில் வேறு சில இடங்களையும் குறிக்கின்றன.

முத்திற்குப் பல்வேறு பெயர்களுண்டு. அவற்றில் "சங்கீன்றபிள்ளை" என்பதும் ஒன்று. சங்கு மிக அருமையாகத்தான் முத்தை விளைவிக்கின்றது. சிப்பியில் விளையும் முத்தைவிட வலம்புரிச்சங்கில் விளையும் முத்து சாலச் சிறந்தது. என்வே "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!" என்று கண்ணகியைப் பாராட்டிப் பேசினான் கோவலன், இதற்கு அடியார்க்கு நல்லார், 'மரபின் தூய்மை கூறுவான் வலம்புரி முத்தென்றான்' என்று விளக்கம் கூறியுள்ளார். வலம்புரியில் விளையும் முத்திற்கு இலக்கணமாக 'சங்குகளில் உண்டாகும் முத்து ஆலங்கட்டியின் நிறமும், புறா முட்டையைப்போல் காத்திரமாகவும், நல்ல குளுமையான ஒளியும் பெற்றிருக்கும். இது மிகச் சிறந்தது என்று ரத்னபரீக்ஷை என்னும் நூல் கூறுகிறது. உருண்டு திரண்டு பெரிய "காட்டு இலந்தைப்பழத்தின் அளவிருக்கும்" என்று 'ரத்ன தீபிகா' என்னும் நூல் கூறுகின்றது.

வலம்புரி முத்துக்களை மூழ்கி எடுத்த பரதவர்கள் ஊரிலுள்ளோர் தம்மை ஆவலுடன் எதிர்கொள்ளுமாறு படகினின்றும் இறங்கிவருவர் என்றும் வலம்புரிமுத்தை எடுத்துவரும் பரதவன் பெரிய சாதனை புரிந்ததாக மக்கள் பாராட்டுவார்கள் என்றும் திரண்ட வடிவினுயுடைய அம்முத்துக்களைக் கடற்கரைச் சோலைகளில் வைத்துப் பலர்க்கும் பகுத்துக் கொடுப்பர் என்றும் சங்க இலக்கியத்தில் கூறப்படுகிறது.

சில சமயங்களில் இயற்கையாகவே கடலில் எழும் காற்றினால் அலைகள் எழும்பி கடற்கரையில் வலம்புரியையும், சரஞ்சலத்தையும் ஒதுக்குமென்றும், திரைமோதி ஏற்றுவதால் சங்கு அங்காந்து முத்தைச்சொரியும் என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.

*சங்கின் பயன்*

மனிதனுடைய அன்றாட வாழ்வில் 'சங்கு' மிகவும் பயன்படுகின்றது. முதன்முதலில் குழந்தை பிறந்ததும் அதற்குப் பாலூட்டப் பயன்படுகின்றது. இன்றைய நாகரீக வளர்ச்சியின் காரணமாக சங்கைப் போன்று (அரைவடிவில்) தங்கம், வெள்ளி, வெண்கலம், அலுமினியம், எவர்சில்வர் போன்ற உலோகங்களில் இருந்தாலும் பெயரை மட்டும் 'சங்கு' ஒன்றே முழுதாகப் பயன்படுத்துகின்றனர். கிராமங்களில் மருந்து புகட்டும்போது கட்டாயமாக இன்றும் கடற்சங்கின் மூலம்தான் புகட்டுகின்றனர். பெண்கள் கைகளில் அணியும் 'வளை' முற்காலத்தில் சங்கை அறுத்து, அதனையே அணிந்தனர். சங்கினுடைய பெயர்களில் 'வளை' என்பதுமொன்று. அதனாற்றான் கைகளில் அணியும் அணிக்கு 'வளை' என்றே வழங்கலாயிற்று. தங்கம், இரும்பு, கண்ணாடி, பிளாஸ்டிக், ரப்பர் ஆகியவற்றில் நாகரீக 'வளையல்கள்' தோன்றினாலும் 'வளை' என்ற தொன்மைப் பெயராலேயே இன்றும் அழைக்கின்றனர்.

வங்காளம், அஸ்ஸாம், பீகார், ஒரிஸ்ஸா ஆகிய மாநில மகளிர் இன்றும் சங்கு வளையகளையே அணிகின்றனர். இராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்பகுதிகளில் கிடைக்கும் சங்குகளில் 'பட்டி', 'இருபிறவி', 'இராமேஸ்வரம்' என்ற மூன்று வகைச் சங்குகள் சிறந்தவைகள். இந்த வகையான சங்குகளையே வங்காளம் முதலிய மாநில மக்கள் அதிக அளவில் வாங்குகின்றனர். இவைகளையே வளையல்களாக அறுக்கக் கச்சாப் பொருளாக கல்கத்தாவிற்கு அனுப்பப்படுகின்றன.

கி.மு. 3250க்கும் கி.மு.2750க்கும் இடைப்பட்ட காலம், சிந்து கங்கைச் சமவெளி, நாகரிக காலம். இக்காலத்தில் ஆடவரும் பெண்டிரும் யானைத்தந்தம், விலையுயர்ந்த கற்கள், சங்கு ஆகியவற்றாலான கழுத்தணிகளையும், மூக்குத்தி, வங்கி, மோதிரங்கள், வளையல்கள், அணிந்திருந்ததாக சரித்திரம் கூறும். இன்றும் நரிக்குறத்தியரின் கைவினைப் பாட்டில் சங்குமணிகள் பெண்மணிகளின் கழுத்தை அலங்கரிக்கின்றன. சங்குச் சுண்ணாம்பு, கோயில், மதுதிகளுக்கு சாந்தாகவும், வெள்ளைச் சுண்ணாம்பாகவும், உபயோகப் படுத்தப்படுகின்றன. 'சங்கபஸ்பத்'தை எலும்பிச்சம்பழச் சாற்றுடன் கலந்து உண்டால் வாதம், குன்மம், நீர்சுருக்கு, மற்றும் உஷ்ண சம்பந்தமான நோய்கள் தீரும். இதற்கு அநுபானமாக தேனையும், வெண்ணையையும் உபயோகிப்பார்கள்.

சங்குகளுக்குத் தலைப் பகுதியில் காணப்படும் துளை (ஓட்டை) இல்லாமலிருந்தால் அது தரங்குறைந்ததாகக் கருதுவர். இவ்வகைச் சங்குகளுக்கு 'சங்க நகம்' என்று சம்ஸ்கிருத மொழியில் பெயர். இவ்வகைச் சங்குகளை ஆநிறைகளின் கழுத்தில் கட்டினால் 'திருஷ்டி தோஷம்' நீங்கும் என்று சோதிட நூல் கூறும். சங்கின் வாயை மூடிக்கொள்ளும் மூடி 'ஊதுபத்தி' செய்வதற்கு ஓட்டுப்பொருளாகப் பயன்படுகிறது. இந்த மூடிக்கு 'நாகணம்' அல்லது 'நாவணம்' என்ற பெயரிட்டு அழைக்கின்றனர்.

சங்குகளைப் போர்முகங்களிலும், நெடுந்தொலைவிலுள்ளவர்களை அழைப்பதற்கும்; எச்சரிப்பதற்கும்; தெய்வம், அரசர், பெரியோர்கள் வருவதை மக்களுக்கு அறிவிப்பதற்காகவும், பயன்படுத்தினர். இக் காரணத்தினால் தொழிற்சாலைகளில், மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் காலத்தை அறிவிப்பதற்காகப் பயன்படுத்தம் 'சைரன்' (Sairen) கருவியையும் 'சங்கு' என்றே இன்றும் நாம் அழைக்கின்றோம். பூகம்பம் ஏற்பட்டால் சங்கெடுத்துக்கொண்டு ஊதும் வழக்கம். இன்றும் வங்காளப்பெண்களிடம் காணப்படுகிறது.

மேலும், சங்கு ஒரு இசைக்கருவியாகவும் பயன்படுகிறது. காற்றினால் இசைக்கப்பெறும் தொளைக்கருவிகளிலெல்லாவற்றையும்விட மிகப் பழங்காலத்திலிருந்தே மனிதன் பழகிவருவது 'சங்கு வாத்யமே' என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆகவே 'சங்குவாத்யம்' என்ற பெயருடன் கச்சேரி மேடைகளில் இது இடம்பெறும். இச்சங்கு சந்தக் குளிப்பையும், தாள விஸ்தரிப்பையும் தந்து மனவெழுச்சிக்குக் காரணமாகவும் இருக்கிறது. இதனை போர்க்காலங்களில் படைகளுடைய மனவெழுச்சிக்குப் பயன்படுத்தியுள்ளனர். இந்தக் குறிப்பை பழங்காலத்திலிருந்து அருணகிரிநாதர் காலம் வரையுமுள்ள இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகிறது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரிய அமராவதி, சாஞ்சி, ஆகிய இடங்களிலுள்ள சிற்பங்களில் சங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. இதை எச்சமயத்தினரும் பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, மனிதனுக்குப் பல வகைகளில் பயனளிக்கும் 'சங்கை' இறைவனாகவே கருதி இந்துமதம் வழிபடுகிறது.



# சக்கரத்தண்ணல்


ஒப்பிலியப்பன் ஸந்நிதி. ஆ. வீரராகவன் M.A.,B.Ed.,

*எண்டள வம்புயத் துள்ளிலங் கும்மறு கோணமிசை*
*வல்பணி லந்தி கிரிவளை வில்வளை வாய் முசலம்*
*திண்கை யிலங்குசந் சீர்திக ழுங்கதை செங்கமல*
*மெண்படை யேந்திநின் றானெழி லாழி யிறையவனே*

*(தேசிகப் பிரபந்தம் - பரமபதங்கம் 1)*

திருமகள் கேள்வனான திருநாரணன் தனது திருவிளையாடற்கருதி இப்பூவுலகை ஏற்படுத்தி நல்லோர்களைக் காக்கவும், தீயோர்களையொடுக்கவும் பற்பல அவதாரங்களைத் தாங்கிவந்தான். அவைகளைத் தொகுத்து ஐவகைநிலைகளாக நாம் உணர முடிகின்றது. ஐவகை நிலைகளாவன: பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று. இந்நிலைகளுக்கு இலட்சணங்களை ஸ்ரீவசனபூஷணம் என்னும் நூல் நன்கு விளக்குகிறது. அந்நூலாசிரியரான பிள்ளை உலகாசிரியரவர்கள் "ஆவரணஜலம் போலே" என்பதால் பரமென்ற நிலையினையும், "திருப்பாற்கடல் போலே" என்று வியூகநிலையினையும், "பெருக்காறு போலே" என்று விபவ நிலையினையும், "பூகத ஜலம் போலே" என்று அந்தர்யாமி நிலையினையும், "அதிலே தேங்கின மடுக்கள் போலே" என்று அர்ச்சை நிலையினையும் வருணித்துள்ளார்.

மேற்கூறிய ஐந்துநிலைகளையும் நீருடன் ஒப்பிட்டுப்பேசுகின்றார் ஆசிரியர். நீரின்றி அமையாதுலகு என்ற கருத்திற்கிணங்க, எங்கும் சூழ்ந்து கிடக்கும் நீரினால் முதல் நிலையினையும், கடக்க வரிதாம்படியுள்ளதால் அதனையிட்டு இரண்டாம் நிலையினையும், அவ்வப்போது தோன்றி மறையும் புயற்காற்றுக்கொப்பாக மூன்றாம் நிலையினையும், புவியினுள்ளிருக்கும் நீர்போல் இதயத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைக் கொண்டு நான்காம் நிலையினையும் கூறி, குறிப்பாக முதலில் ஒரு கடல், அக்கடலில் ஏற்படும் புயற்காற்று, அதனடியாகப் பெருகும் வெள்ளம், அதனாலேற்படும் மடுக்கள் என்று வழிவழியாக "அதிலே தேங்கின மடுக்கள் போலே" என்று அர்ச்சையாகிற ஐந்தாம் நிலையினையும் விளக்கித் தலைக்கட்டுகின்றார்.



பரம் என்ற சொல் பரமபத நாதனையும், வியூகம் என்ற சொல் அநிருத்தன், பிரத்யும்னன், ஸங்கர்ஷணன், வாஸுதேவன் ஆகிய மூர்த்திகளையும் விபவம் என்பதால் மத்ஸ்யம் முதலான அவதாரங்களையும் அந்தர்யாமி என்பதால் ஒவ்வொரு உடலிலும் குடிகொண்டுள்ள இறைவனையும், அர்ச்சையென்பதால் வீடுகளிலும், தேவாலயங்களிலும் விளங்கா நின்றுள்ள திவ்ய மூர்த்திகளையும் குறிக்கின்றது.

பரம் முதல் அர்ச்சை ஈறாக அமைந்துள்ள ஐவகை நிலைகளுள் கடைநிலையே சிறந்தது. ஏனெனில் ஆழ்வார்களும், ஆச்சார்யர்களும் எம்பெருமான்களின் குணானுபவத்தைத் தாமுமனுபவித்து நம்மையும் அனுபவிக்க விட்டுச் சென்றுள்ளனர். அவ்வளவு பெருமைவாய்ந்த அந்நிலைதான் "பிற்பாடர் இழவு தீரும்படி", "பின்னானார் வணங்கும் சோதியாகத்" திகழ்வதாகும்.

அவ்விதம் அர்ச்சை வடிவிலிலங்கும் சக்கரத் தண்ணலை திருக்குடந்தை, திருவரங்கம் போன்ற திவ்ய தேசங்களில் கண்டனுபவிக்கலாம். அந்த சக்ரத்தெம்பெருமானை ஐவகைநிலைகளுள் இரண்டாவதான வியூகநிலையில் வைத்துப் பேசுகின்றது அகிர்புத்ன்ய சம்ஹிதை. ஆகவே சக்கரத்தையும், வியூகமூர்த்தியான சக்கரத்தண்ணலையும் பற்றிச் சிறிது பார்ப்போம்.

### சக்கரம்

சக்கரம் என்ற சொல் பருதி, நேமி சுதரிசனம், எஃகம், வளை, ஆழி, திகிரி போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இதனை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். எண்கோணமுடைய சக்கரத்தினைச் சிறப்பானதென்றும், அறுகோணமுடையதை அடுத்தவகையிலும், நாற்கோணங்கொண்டதைச் சுமாரானது என்றும் யஜுர்வேதத்தில் காணப்படும் ஜமதக்னி சுக்கிர ஸம்வாதம் எடுத்துரைக்கின்றது. சக்கரம் என்பது ஒருவகையான அளவினையும் திருமாலின் ஆயுதத்தையும் குறிக்கின்றது.

### இலக்கியங்களில் சக்கரம்

"சங்கு, சக்கரம், கதை, சார்ங்கம், நாந்தகம் முதலிய ஆயுதக் கூட்டங்களாகிய நாங்கள் வாசுதேவனான கிருஷ்ணமூர்த்திக்குப் பணிவிடைபுரியவே வந்திருக்கின்றோம். அவைகளுள் சக்கரமாகிய நான் திருமாலின் வலக்கரத்தில் இலங்குபவனாகி, கூர்மம், திரிவிக்கிரமம் முதலான அவதாரங்களில் பல அசுரர்களை அழிக்கப் பயன்பட்டேன்" என்றும், "உச்சிவேளைச் சூரியனின் வெம்மைக்குச் சமமான பராக்கிரமசாலி" என்றும் தானே கூறுவதாக பாஸகவி இயற்றிய பாலசரிதத்தில் அமைந்துள்ளது. இவ்விதம் ஞாயிறுக்கொப்பான சக்கரத்தை உடைய எம்பெருமானை நம்மாழ்வாரவர்கள், "பரிதிவட்டம்போலும் சுடரடலாழிப்பிரான்" என்றும், "திருமால் உருவொக்கும் மேரு அம்மேருவில் செஞ்சுடரோன் திருமால் திருக்கைத் திருச்சக்கரமொக்கும்" என்றும் போற்றிப் பாடியுள்ளார். இதற்கிணையாகக் "கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கரமொக்கும்" என்ற நான்மணிக்கடிகையின் சொற்றொடரும் ஈண்டு நினைக்கத்தக்கது. மேலும் சக்கரம் என்னும் சொல் "தருமச்சக்கரம்" என்ற வகையில் அறநெறியிலமைந்த அரசாட்சியையும் விளக்கவல்லது. "இரத்தின தீவத்துத் தரும சக்கரமுருட்டினன்" என்று தருமத்தைச் சக்ரமாகவும், அதன் அமைப்புகளை தருமத்தின் அமைப்புகளாகவும் உருவகம் செய்துள்ள செய்தி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை மூலம் நாம் அறியலாம்.

### சக்கரமும் அதன் பிரிவுகளும்

சக்கரத்தின் கோணங்களையிட்டு அவைகளைப் பலவிதமாகப் பிரிக்கலாம். ஒரு கோணத்தையுடைய சக்கரத்தை "மகாராத்ரிதரச் சக்கரம்" என்றும், இருகோணங்களுடையதை "உஷச்சக்கரம் என்றும், மூன்று கோணங்களுடையதை "உதய சக்கரம்" என்றும், நான்கு கோணங்களுடையதை "ஐச்வர்ய சக்கரம்" என்றும், ஐந்து கோணங்களுடையதை "சக்திமகாசக்கரம்" என்றும், அறுகோணங்களுடையதை "வியூஹாந்தரம்" மற்றும் "ஷடரசக்கரம்" என்றும், பன்னிரண்டு கோணங்களுடையதை "மகாசுதரிசன சக்கரம்" என்றும், இன்னும் பலவிதமான சக்கரங்களையும் அஹிர்புத்ன்ய சம்ஹிதை விவரிக்கின்றது.

மேற்கூறிய சக்கரங்களுள் வியூகம் என்று சொல்லக்கூடிய அறுகோண சக்கரத்தை சுதரிசன மூர்த்தியாலேயே தரிக்கப்படுகிறது. இதனையே வேங்கடநாதரும் தனது சுதர்சனாஷ்டகத்தில் "ஷடரசக்ரப்ரதிஷ்டித" என்றும், அஹிர்புத்ன்யனான சிவபெருமானால் அடையாளம் காட்டப்பெற்றவராகையால் "பஜதஹிர்புத்ன்ய லக்ஷித" என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் விஹகேசுவர சம்ஹிதையில் காணப்படும் ஸஹஸ்ர நாமாவளியில் சுதரிசனரை "ஷட்கோணாந்தர்கதாய நம:" என்றும், பிருகு சம்ஹிதையில் காணப்படும் சுதரிசன கவசத்தில் "அஹிர்புத்ன்ய ஸுபூஜித:" என்றும் கூறப்பட்டுள்ளதை இங்கே நினைக்கத்தக்கது.

### ஆழிக்காலும் ஆழிக்கல்லும்

எம்பெருமான் கிருஷ்ணனாக அவதாரம் செய்தபோழ்து தண்டைகள் சிலம்ப தளர்நடையிட்டு கோகுலத்தைச் சுற்றிவந்தான். அவனது திருவடிகள் பதித்த நிலத்திலே சங்கும், சக்கரமும் காணப்பட்டன. காரணம் அவன் திருவடிகளிலேயிருந்த சங்கரேகையும், சக்கர ரேகையும் தென்பட்டன. அதுவே நிலத்திலும் பதிந்தனவாம். இக்கருத்தை பெரியாழ்வார், "ஒருகாலில் சங்கு, ஒருகாலில் சக்கரம்" என்ற பாடலின் மூலம் அனுபவிக்கின்றார். இதனால்

இந்த நிலம் முழுதினுக்கும் உரியவன் இவனேயென்பதனைச் சுட்டிக்காட்டவே "திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்பர் நம்மாழ்வார். இதனால்தான் பெருமாள் கோயிலுக்காக விடப்படும் நிவந்த நிலங்களின் எல்லைகளை வகுக்க ஆழிக்கல்லை அமைக்கும் மரபு ஏற்பாடாயிற்று என்று கருத முடிகிறது. மேலும் "திருவரங்கமேயான் திசை ஒன்றும் மறந்தறியேன்" என்ற இயற்பாவுக்கு விளக்கம் எழுதும் பெரியவாச்சான் பிள்ளையவர்கள், "திருவரங்கமேயான் இடையாட்டம் பரதிசையிலோ; எல்லை நிலத்திலோ" என்று குறிப்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. இதனால்தான் விஷ்ணு ஆலயங்களுக்கு விடப்படும் நிலக்கொடைச் செய்தியைத் தாங்கும் ஆழிக்கல்லில் "திருவிடையாட்டம்" என்ற சொல்லும், "வைஷ்ணவரக்ஷை" என்ற சொல்லும் கட்டாயம் குறிக்கப்பட்டும், அக்கல்லின் நாற்புறமும் ஆழியானின் சக்கர உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். இதனால் இது



விஷ்ணுகோவிலுக்குரிய இறையிலி நிலம் என்பது காலங்காலமாக ஊர்மக்கள் அறியும் வாய்ப்பும் உள்ளது.

### சக்கரமும் பீஜாக்ஷரமும்

ஒருசமயம் தேவர்கள் பிரம்மாவை அணுகி ஸ்வாமி! மகாசக்கரம் எனப் பிரசித்தியான சக்கரத்தைப்பற்றி எங்களுக்கு உபதேசியுங்கள், அது எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்வதுடன் மோக்ஷத்திற்கும் வாயிலாயிருப்பது என்று யோகிகள் கூறுகிறார்கள்" என்றனர். அதைக் கேட்ட பிரம்மனும், சுதரிசனம் என்பதுவே அந்த மகாசக்கரம். அதன் நடுவில் "ஓம்" என்ற தாரகத்தினையும், "ஷ்ரௌம்" என்ற நரசிம்ம ஏகாக்ஷரத்தினையும், ஆறு இதழ்களில் "ஸஹஸ்ரார ஹூம்பட்" என்ற சுதரிசன ஆறு அக்ஷரங்களையும், எட்டு இதழ்களில் "ஓம் நமோநாராயணாய" என்ற நாராயண அஷ்டாக்ஷரங்களையும், "ஓம் நமோ பகவதே வாசுதேவாய" என்ற த்வாதசாக்ஷரங்களை பன்னிரண்டு இதழ்களிலும், பிந்துக்களுடன் கூடிய அம் தொடங்கி அ: வரையிலான மாத்ருகா அக்ஷரங்களை பதினாறு இதழ்களிலும் நரசிம்மானுஷ்டுப் மந்திரராஜத்தின் அக்ஷரங்களான

*உக்ரம் வீரம் மகாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுகம்*
*ந்ருஸிம்மம் பீஷணம் பத்ரம் ம்ருத்யும்ருத்யும்*
*நமாம்யஹம்!!*

என்ற சுலோகத்தை முப்பத்திரண்டு இதழ்களிலும் எழுதப்படவேண்டும். இதுதான் சுதரிசன மகா சக்கரம். இது ருக். யஜுஸ், ஸாம ரூபமான வேதமயமாகவும், பிரம்மமயமாகவும், அம்ருதமயமாகவும் விளங்குவது" என்று தேவர்களுக்கு உபதேசித்தார் என்பது நிருசிம்ம பூர்வதாபிநீமூலம் அறியமுடிகிறது.

### சக்கரமும் ஆழ்வாரும்

திருமழிசையாழ்வார் தமது திருச்சந்த விருத்தப பாடலில் வேதமயமான இவ்வெம்பெருமானை "சாமவேத கீதனாய சக்ரபாணியல்லையே" என்றருளிச் செய்துள்ளார். மேலும் நான்கு வேதஸாரமாக நாற் பிரபந்தங்களையியற்றிய நம்மாழ்வார், திருவிருத்தம் என்ற நூலில் நாயியகாபாவங்கொண்டு எம்பெருமானை அனுபவிக்கின்றார். அப்போழ்து இயற்கையிலேயே குளிர்ச்சியைத் தரும் திருத்துழாய்க்கு வெப்பத்தைப் பாராட்டிப்பேசி, அதற்குவமையாக அதிக வெப்பத்தையுடைய திருவாழியாழ்வானைக் கூறுகின்றார். பிரிவாற்றாத தலைவி நெஞ்சழிந்துரைக்கின்ற அனுபவத்தை உரையாசிரியரான அப்பிள்ளையவர்கள், "கூடின நிலையில் குளிர்ச்சியைத் தருகின்ற அழகிய திருத்துழாய், கூடாத நிலையில் வருத்தந்தருகிற வெப்பம் போலே நலிகிற திருவாழியையுடைய ஸர்வேசுவரன்" என்னுங் கருத்துப்பட உரைப்பர். இவ்வாழியை ஆயுதமாகவுடைய வெம்பெருமான், எதிரிகளையழிப்பதிலும் அடியார்களைக் கவர்வதிலும் கொண்டுள்ள திறத்தை வியாக்கியான சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளையவர்கள்

*"பிரதிகூலரை ஆண்மையாலே கொல்லும்,*
*அநுகூலரை அழகாலே கொல்லும்" என்பர்.*

இவ்விதம் இவனது ஆற்றலைச் சிறப்பித்துத் தமது பாடலில் "சக்கரத்தண்ணல்" என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

*சக்கர இல்ச்சினையும் அதன் பெருமையும்*

வைஷ்ணவர்கள் திருவாழித் திருச்சங்கு இலச்சினைகளைத் தங்களது தோள்களில் அணிந்துகொள்ளும் மரபு உண்டு. இதுகுறித்து அஹிர்புத்ன்ய ஸம்ஹிதையில் ஒரு வரலாறு கூறப்படுகிறது. நகைசாசாகபுரத்தை ஆண்டுவந்த துர்தர்ஷன்வத்ஸலா என்ற மன்னர் தம்பதியருக்கு மணிசேகரன் என்ற புதல்வன் தோன்றினான். உரிய பருவத்தை அடைந்து மணிசேகரன் அரசாட்சிபுரியும்போது விகடாக்ஷன் என்ற அசுரனின் தொல்லையால் மன்னர் மணிசேகரனும் நாட்டுமக்களும் துன்புற்றனர். இத்துன்பத்திலிருந்து விடுபட துர்வாஸ முனிவரின் உபதேசப்படி சுதரிசன மகாமந்திரத்தை உபாஸனை செய்து சாளக்கிராமத்தில் (தேசத்தில்) தங்கி வழிபட்டான் அரசன். அத்தேசவாசிகளனைவரும் சங்குசக்கரப் பொறிகளையொத்திக்கொண்டு, மற்ற பிராணிகளும் சுதரிசன மூர்த்தியை வழிபட்டு உயர்ந்த கதியை அடைந்தனர். அரசனும் புரோஹிதனும் செய்த பணிவிடைகளால் மகிழ்ந்த எம்பெருமான் சக்கரரூபியாகவும், கதை, முசலம், சங்கம், அரி, தனுஸ்ஸு, பாசம், அங்குசம், அம்புஜம் ஆகிய எண்படைகளை யேந்தியவராகவும், சிவந்த கண்களையும், அக்னி ஜ்வாலை போன்ற கேசத்திரள், செக்கர் போன்ற மேனி, செம்பட்டாடை ஆகியவைகளை யுடையவராகவும் காட்சியளித்தார்.. பின்பு சுதரிசன மூர்த்தியின் அருளால் விகடாக்ஷனை வென்ற மணிசேகரன் தனது புகழை உலகெலாம் பரவும்படி செய்ததுடன் சுதரிசனரின் பெருமையையும் உலகுக்கு உணர்த்திய உத்தமனானான்.

*சிற்பங்களில் சக்கரத்தாழ்வார்.*

தேவாலயங்களில் சிலவற்றில்மட்டும் சக்கரத்தாழ்வாருக்குத் தனிக்கோயிலுண்டு. "கோயில்" என்றழைக்கப்படும் திருவரங்கத்தில் இவருடைய திருக்கோயில் "சக்கரவர்த்தித் திருமகனுக்கு இலக்குமணன் போலே" பாம்பணையில் கண் துயிலாதிருந்துள்ள எம்பெருமானுக்குக் காப்பாகவும், அரங்கனுடைய சந்நிதானத்திற்கு . வலப்புறத்தில் அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்க ஒன்று. மேலும் சில தேவாலயங்களில் சக்கரவடிவாகவே எழுந்தருளியுள்ள சக்கரத்தாழ்வாரை நாம் காணமுடிகிறது. பிரம்மோற்சவத் திருவிழாவின் இறுதியில் (தீர்த்தவாரி) அவப்ருத ஸ்நானத்தின் பொருட்டு எண்படைகளில் முதல்வராகிய இச்சக்கரத்தாழ்வாரை எழுந்தருளப் பண்ணுவது வழக்கமாக உள்ளது. இதில் மொத்தம் பதினாறு கைகள் இருபுறமும் வடிக்கப்பெற்றதாய் இடைவெளியில்லாதவாறு பஞ்சலோகத்தில் வட்டவலயமாய்ச் செய்யப்பட்டிருக்கும். ஆயினும் இச்சக்கரம் 16 கைகளுடன் இடைவெளியுடனும், நடுவில் சிங்கமுகத்துடனும் அமைந்த பஞ்சலோகப் படிமத்தை அழகிய புகைப்படத்துடன் திரு. கோபிநாதராவ் அவர்கள் தமது நூலில் (Elements of Hind Iconography Vol.I P.No. 288) வெளியிட்டுள்ளார்.

இவ்விதமைந்த கருத்தினைச் சித்தரிக்கும் வகையில் 16 திருக்கரங்களுடன் கூடிய திருஉருவத்தையும் அவரது பின்புறம் யோகாசனத்திலமர்ந்த நரசிங்க மூர்த்தியையும் சிலாபேரமாகத் திருவரங்கத்திலும் அப்படியே எட்டுத் திருக்கரங்களுடன் கூடிய பஞ்சலோக திருஉருவினைத் திருக்குடந்தையிலும் நாம் காணலாம்.

மேலும் மகாபலிபுரத்திலுல்ள மகிஷாசுரமாத்தனக் குடைவரைக் கோயிலில் விஷ்ணுவின் அனந்த சயன கோலம் சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது. ஆழ்ந்த நித்திரையில் அரவணைப்பள்ளியில் திருமால் உறங்குகிறார். அவருக்கு அருகில் சக்கரத்தாழ்வாரும், மார்க்கண்டேயரும் அமர்ந்துள்ளனர். எழில்மிகுந்த இந்த சிற்பத்தில் மனித உருவில் அமர்ந்துள்ள சக்கரத்தாழ்வாரின் தலைமேல் சக்கரம் பொறிக்கப்பெற்றுள்ளது. இது இராஜசிம்மபல்லவர் காலத்து எழில் மிகுந்த சிற்பமாகும்.

நிற்க, கர்நாடக மாநிலம் ஹாசன் ஜில்லாவிலுள்ள பேலூர் கேசவப் பெருமாளின் திருஉருவம் ஹொய்சள பாணியில் வடிக்கப்பெற்றுள்ளது. அவ்வுருவம் வலக்கரத்தில் சங்கத்தையும், இடக்கரத்தில் சக்கரத்தையும் ஏந்தியதாக அமைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*சக்கரத்தாழ்வாரை வழிபடுதலின் பயன்கள்*

சக்கரத்தாழ்வாரை வழிபடுகின்றவாகள் பலவேறு பயன்களையும் பெறுவர் என்பது நூலோர்கொள்கை. "எம்பெருமானின் சோதியே வடிவாய்த் தோன்றியதாம்படியுள்ள திருவாழியாழ்வானை அனவரதம் பணியடிமை செய்யும் பக்தர்களின் அறியாமையைப் போக்கி நன்மைகளைப் புரிகின்றார். மேலுமவர் நாடகத்தில் நட்டுவனார்போலே வானத்தில் மேகக் கூட்டங்களை விலக்கி விண்மீன்களை விளங்கச் செய்கின்றார்" என்று சுதரிசன சதகம் கூறுகின்றது. அவ்விதம் நம் வாழ்விலும் நன்மைகளையடைய நாமும் அவனைப் போற்றிப் பயன் பெறுவோமாகுக.

சுபம்

# திருக்கோயில் போற்றுவோம்

பேராசிரியர் டாக்டர். எஸ். வெங்கட்ராஜலு

இறை உணர்வே மனித வாழ்விற்கு அர்த்தத்தினையும் குறிக்கோளையும் வகுத்துள்ளது என்பது உண்மை. மேலும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் திருக்கோயில்கள் வரலாற்று காலம் தொட்டு ஆணி வேராக அமைந்துள்ளது என்பது வெள்ளிடைமலை.

பொருளியல் உலகில், ஊசலாடும் மனதைப் பண்படுத்தி, நெறியோடு வழிகாட்ட ஆன்மீகம் மலர்ந்தது. மனித குலத்தின் வலுவான நம்பிக்கையின் உறைவிடமாகவும் இறைத்தன்மையின் உருவாகவும் நம் முன்னோர்களால் மாபெரும் ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் உருவகிக்கப்படவில்லை. அப்படியெனில் மிகச் சிறிய இடங்களே போதுமானது ஆகும். மாறாக வழிபாட்டு சமூக, பொருளாதார மற்றும் பல்வேறு காலங்களின் கலை உணர்வுகளின் பிரதிபலிப்புகளாக விளங்கிவருகின்றன. இம்மாபெரும் பணியினை பண்டைய அரசர்களால் மட்டுமே செவ்வனே செய்துவர முடிந்தது. மன்னராட்சி மறைந்தபிறகு நல்மனம் படைத்த செல்வந்தர்சிலர் இப்பாரம்பரியத்தைப் போற்றினர் எனலாம். காலவேகத்தின் மாற்றத்தால் மக்களாட்சி, அரசிற்கு பல்வேறு பணிகளின் இடையில் திருக்கோயில் பராமரிப்பு இணைக்கப்பட்டது. விளைவு பல்லாயிரம் ஆண்டு கலாசாரத்தின் சின்னங்கள் நலியத் தொடங்கியது.

சுதந்திரத்திற்கு பிறகு தற்போது முதன் முதலில் தமிழகத்தில் திருக்கோயில்களைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் பணி ஓர் உயர்ந்த நோக்கோடு, தமிழக முதல்வரின் தனி முயற்சியால் அறப்பணியாக நடைபெறுவது மாற்ற முடியாத வரலாறு ஆகிவிட்டது. நம் மூத்த தலைமுறையினரால் அரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட வாடும் ஆலயங்களைப் போற்றிப் பாதுகாத்து எதிர்வரும் தலைமுறையினருக்கு அளிப்பது நம் அனைவரின் கடமை. இல்லையெனில் இரண்டு தலைமுறையினருக்கு துரோகம் செய்த பாவம் நம்மைச் சாரும்.

நம் முன்னோர்கள் திருக்கோயில்களை சமுதாயத்தின் ஓர் அங்கமாக எண்ணாமல் அதனையே ஒரு சமூகக் கூடமாகப் பாவித்து போற்றினர்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியால் சுற்றுப்புறம் மாசுபடுத்தப்பட்டு பல்வேறு நிலையில் மக்களுக்கு தீங்கு விளைவிக்கிறது. ஆனால் திருக்கோயில்களில் நந்தவனம் அமைத்து பல்வேறு நிலையில் சுற்றுப்புறத் தூய்மைக்கு வித்திட்ட நம் மன்னர்களை முன்னோர்களை பாராட்டியாக வேண்டும். இத்திருக்கோயிலிலும் நந்தவன மேம்பாட்டிற்கு உதவிய சிறப்புற வழிவகை செய்த தமிழக முதல்வரை போற்றவேண்டும்.

இறை உணர்வும், இறை அச்சமும், இறைத் தொண்டும், மக்கள் வாழ்க்கைக்கு பாதுகாப்பாகவும், நல்ல பண்புகளை போற்றிப் பாதுகாக்கவும், நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் வழிகாட்டியது கோயில்கள் எனலாம்.

இன்றைக்கு பொலிவிழந்த, நமது பண்பாட்டுச் சின்னங்களான திருக்கோயில்களை மீண்டும் நலிவு நீக்கி, பொலிவு காணச் செய்யும் அருமுயற்சியின் மூலம் சமுதாயம் மேம்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மன்னை இராஜகோபாலசாமி திருக்கோயில் வரலாற்று புகழும், பாரம்பரியம் மிக்க ஒன்று. தென் கைலயம், தென்காசி, தென் திருப்பதி என்ற மரபில் இக்கோயில் "தென் துவாரகை" என்று வைணவ பெருமக்களால் வகைமை செய்யப்பட்டுள்ளது பெருமைமிக்கது.

அரசர்களால் உருவாக்கப்பட்டு எல்லா அரச குடும்பத்தினராலும் போற்றப்பட்டது என்பது இத்தலத்திற்கு கிடைத்த தனிச் சிறப்பாகும். 'ராஜ' மன்னார்குடியில் தலப் பெயரே மேலோங்கிய புகழை இம் மேதினிக்கு பறை சாற்றுகின்றது.

அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் கோபுரங்கள். எண்ணத்தை கொள்ளைகொள்ளும் விமானங்கள், பல்வேறு வரலாற்று காலச் சிற்பங்கள், ஓவியங்கள், புகழ்மிக்க மதில்கள், கட்டடக்கலையின் நுணுக்கங்களை விளக்கும் ஸ்தம்பங்கள், கால அளவைக்கு கட்டுப்படாத அற்புதங்கள், இவற்றை அனைத்தையும் முறையாக புதுப்பிக்க தெய்வத் தூண்டுதல் காரணமாகவும், தமிழக முதல்வர் மற்றும் அரசு முயற்சியாலும் 300 ஆண்டுகளுக்குப் பின் ஒரு முயற்சி நடைபெறுவது 'திருவருள்' என்றே தோன்றுகிறது. தெய்வ சங்கல்பம் ஓர் ஒப்பற்ற மனித முயற்சியாக செயல்பட்டு வருவது அனைவராலும் போற்றத்தக்கது ஆகும்.

இத்திருக்கோயிலின் சிறப்புமிக்க திருப்பணியில் ஈடுபடவேண்டியது நம் அனைவரின் கடமையாகும். இத்திருப்பணி செயல் இத்துடன் முடிவடையாமல் என்றென்றும் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது திருப்பணிக்குழுவினர் தொலைநோக்குப்பார்வையினையும், உண்மையான செயல் நோக்கினையும் வெளிப்படுத்துகிறது.

ஆலயம் சென்று ஆன்மீக வளர்ச்சிக்கு பாடுபட உறுதி ஏற்போம். திருக்கோயில் வளர்ச்சிக்கு நம்மால் ஆன கடமையைச் செய்வோம். திருக்கோயில் சொத்துக்களை இறைச் சொத்தாகப் பாவித்து முறையாக செலுத்துவோம். செலுத்த வேண்டுவோம்.

*திருக்கோயில் போற்றுவோம்*

*நல்ல சமுதாயம் உருவாக்குவோம்*

## யோகி சுத்தானந்த பாரதியாரின் இராஜகோபாலன் பாடல்கள்

### ராகமாலிகை:

*யதுகுலகாம்போதி*

*உலகெலாம் கூடி வாழ உன் அருள் அன்பே பொங்க*
*நலமெலாம் வளரத் தீமை நலிந்திட கவலை தீர*
*கலகமும் துயரும் நீங்க கருணை செய் கண்ணா மன்னா*
*இலகு சீர் செம்பை வாசா ராஜகோபால தேவா*

*பூர்விகல்யாணி*

*அன்னதானங்கள் ஓங்கும், அணிமணி செல்வம் ஓங்கும்*
*இன்னிசை கீதம் ஓங்கும், இருமொழிப் புலமை ஓங்கும்*
*தென்திசை துவரைக் கண்ணா செங்கமலத் தாய் மேவும்*
*மன்னனார் கோவிலானே மன்னுயிருக்கருள வாராய்*

*அடாணா*

*கோவிலும் குளமும் வேத கோஷ்டியும் சாது சந்த*
*நேமமும் நியம நிஷ்டை நிலவுயிர் யோக வாழ்வும்*
*தூய சன்மார்க்க வாழ்வே துலங்கிடும் பூமிதேவி*
*நாயகா கருணை செய்வாய் நான் எனக்கென் உள்ளார்*

*சிந்து பைரவி*

*பாமணிப்புலவர் போற்றும பாமணிக் கரையல் உள்ளார்*
*பாமணியான கீதை நவின்ற நல் யோக ராஜ*
*(சத்ய) பாமையும் ருக்மிணியும் கூட பயிலும் யோக வாழ்வே*
*பூமியில் அறங்கள் ஓங்க (வாழ) தோன்றிடும் ஆன்ம வேந்தே*

*உலகெலாம் கூடி*

தொகுப்பு : சாரு ரங்கநாதன்
கீதா ராஜகோபாலன்

# மன்னார்குடியில் மேரு ஸ்வாமிகள்

பீமராஜகோஸ்வாமி
தஞ்சாவூர்

மஹாராஷ்டிர மன்னர், சத்ரபதி சிவாஜியின் சகோதரர், வெங்கோஜி என்கிற ஏகோஜி கி.பி. 1776 ல் தஞ்சையின் முதல் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். அன்று முதல் தஞ்சை, மராட்டியர் ஆளுகைக்குள் வந்தது. இவர் காலத்தில் மஹாராஷ்டிரத்தில் போசலகுல மன்னர் சத்ரபதி சிவாஜிக்கு ஆன்மீக ஆசிரியனாக சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகள் விளங்கினார். ஸ்வாமிகள் மன்னரால் மிகவும் மதிக்கப்பட்டார். சிவாஜியின் வேண்டுகோளின்படி ராமதாஸ ஸ்வாமிகள் தஞ்சைக்கு வந்து ஏகோஜி மன்னனுக்கு ஆன்மீக போதனைகள் செய்து அருள் செய்தார். ஏகோஜியின் வேண்டுகோளின்படி ஸ்வாமிகள் தன் முக்கிய மூன்று சிஷ்யர்களை தஞ்சை பிராந்தியத்திலிருந்து அனுப்பி ராமபக்தி பிராசார கேந்திரத்தை (மடம்) அமைக்க வழி செய்தார்.

இம்முறையில் தஞ்சையில் ஸ்வாமிகளின் பதிமூன்றாவது சிஷ்யனான 'பீகாஜி பாவா ஷஹபூர்கர் என்னும் பீம ஸ்வாமிகள் பிரசார கேந்திரம் அமைத்தார். மன்னர்குடியில் அனந்த மௌனி ஸ்வாமிகள், மாரியம்மன்கோவில் பக்கத்தில் உள்ள 'கோனூர்' என்னும் கிராமத்தில் ராகவ ஸ்வாமிகளும் ராமபக்தி பிரசார கேந்திரத்தை அமைத்து, ராமதாஸ சம்பிரதாயத்தை வளர்த்தனர். இம்மூன்று பக்தி பிரசார கேந்திரங்களுக்கும் தஞ்சை மன்னர் ஏகோஜி நிலக்கொடை செய்தும் பொன் பொருள் ஈந்தும் கேந்திரத்தை சிறப்புடன் நடக்க வழி செய்தார்.

மன்னார்குடியில் பிரசார கேந்திரத்தை அமைத்த அனந்தமௌனி ஸ்வாமிக்கு இரண்டு முக்கிய சிஷ்யர்கள், அவர்கள் மேரு ஸ்வாமி, மேகஸ்யாம, என்பவர் ஆவர். மேரு ஸ்வாமிகள் தன் குருவான அனந்த மௌனியிடம் நீங்காத பக்தியும், அன்பும் கொண்டு பல நூல்களைக் கற்றறிந்தார் அனந்த மௌனி ஸ்வாமிக்குப் பிறகு மன்னார்குடி பிராசா கேந்திரத்திற்கு தலைவராகவும் அமர்ந்தார்.

ஸ்ரீமேரு ஸ்வாமிகள் மஹாராஷ்டிர, தேசத்தில் கிருஷ்ணா நதிக்கரையில் 'மேருலிங்கம்' என்னும் பெயருடைய தீர்த்தக் கரையில் அமைந்த இடத்தில் மஹாராஷ்டிர அந்தணர் குலத்தில் பிறந்தவராவர். இவர் ஓர் அத்வைதி. இவர் தன் இளம் வயதில் கல்வி, கேள்விகளில் சிறந்த விளங்கி ஆன்ம ஞானத்தைப் பெற ஆர்வம் கொண்டு தகுந்த ஆசானைத் தேடிதெற்கு பக்கத்தில் உள்ள திருவண்ணாமலை ஷேத்திரத்திற்கு வந்த போது, அனந்த மௌனி என்னும் சமர்த்த ராமதாஸ சம்பிரதாயத்தில் வந்த மஹானைச் சந்தித்தார். அனந்த மௌனி ஸ்வாமிகளின் வேதாந்த விசாரமும், பக்தி சொற்பொழிவும் கேட்ட மேரு ஸ்வாமிகள் அனந்த மௌனியை தன் குருவாக ஏற்று அருளாசி பெற்றார். அனந்த மௌனி ஸ்வாமிகள் மேரு ஸ்வாமிக்கு சமர்த்த ராமதாஸ ராமபக்தி சம்பிரதாயத்தை முறையாகப் பயிற்றுவித்தார். இப்பயிற்சியில் குரு அனந்த மௌனியின் தர்மபத்தினியும் மேருவிற்கு உறுதுணையாக இருந்து ராமதாஸ சம்பிரதாயத்தைச் சிறந்த முறையில் பயில உதவி செய்தார். மேரு ஸ்வாமியும், குரு பத்தினியிடத்தில், பெரும் மதிப்பும் மரியாதையும் அன்பும் வைத்து பிற்காலத்தில் மேரு ஸ்வாமி தான் எழுதிய நூலில் குரு பத்தினியின் செயலைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். பிறகு அனந்த மௌனி பரிவாரங்களுடன் தீர்த்த யாத்திரைகள் செய்துகொண்டு தட்சிண துவாரகை என்று புகழப்படும் ராஜகோபால ஷேத்திரமான மன்னார்குடிக்கு வந்து முன் குறிப்பிட்டது போல் ஸ்ரீசமர்த்த பக்தி பிரசார கேந்திரத்தை நிறுவினார்.

மேரு ஸ்வாமிகள் தன் குருவான அனந்த மௌனியிடம் பல பக்தி மார்க்கங்களை பயின்று அதன் பயனாக பல இலக்கியங்களைப் படைக்க முற்பட்டார். கி.பி.1693ல் ஸ்ரீஅனந்த மௌனி சமாதி அடைந்தார். அதற்கு பிறகு அனந்த மௌனி நிறுவிய பக்தி பிரசார கேந்திரத்திற்கு மேரு ஸ்வாமிகள் தலைவராக அமர்ந்தார். மேரு ஸ்வாமிகள் பலதேசயாத்திரை செய்ததாலும் சிறந்த குருவின் கீழ் பயிற்சி பெற்றதாலும், சிறந்த வேத சாஸ்திர அறிஞனாக விளங்கினார். காவியம் படைப்பதில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.

மேரு ஸ்வாமிகள் எழுதிய நூல்களில் சிறந்து விளங்குவது இராமருடைய சரித்திரமான இராமாயணத்தின் விமர்சனமாக எழுதிய 'இராமசோகளா' வேதாந்தசாரமாக எழுதிய 'பீமோபதேசம்' என்னும் இரு நூல்களும் முக்கியமாகும். இவருடைய பிற நூல்கள் வேதாந்தத்தை போதிக்கிற அவதூத கீதா டீக்கா, ஆத்ம சாட்சாத்காரம், தத்வபடம், பூர்ணாம்ருதகலசோடசகலா, ப்ரம்மசம்விதி, ஸ்வானந்தலஹரி ஆகும். இராமாயண வர்ணனையாக தன் குருவின் பெயரை முன் வைதத் அனந்த வால்மீகி இராமாயணம் என்னும் சிறு நூலையும் எழுதினார். ஸோத்திர நூலாக நாராயண ஹ்ருதயம், பஞ்சரத்தினமாலிகா, மானஸ பூஜா, ராமதாஸ ஸ்தவனம், சமர்த்ததாஸ்டகம் மற்றும் கணேச ஸ்லோகம், சன்மணி மாலா, மூல ஸ்தம்பம், பகவத் கீதா, அநுபவசார என்னும் நூலும், தன் பெயரை முன் வைத்து மக்களுக்கு நல்போதனை செய்வதாக அமைந்த 'மேருபோதம்' என்னும் நூலும், ஆயிரத்திற்கு மேற்பட்ட அபங்க, பத, பாடல்களும் சிற்சில கவிதைகளும் எழுதினார். சமர்த்த சம்பிரதாயத்தில் வந்த சிஷ்யர்களில் இவரைப் போன்ற சிறந்த நூல்கள் எழுதியவர் யாரும் இலர் எனக் கூறலாம். மேரு ஸ்வாமிகள் எழுதிய நூல்கள் யாவற்றிலும் தன் குருவான அனந்த மௌனி ஸ்வாமிக்குச் சிறப்பு செய்யும் விதத்தில் 'அனந்தமேரு' என்று முத்திரையிட்டு நூலை எழுதியிருக்கிறார்.

ஸ்ரீசமர்த்த சம்பிரதாயத்தில் வந்த பக்தி பிரசார கேந்திரத்தில் தலைவராக அமர்ந்த யாவரும் கிரஹஸ்தராகவே காணப்படுகின்றனர். இவ்வழியை சமர்த்த ராமதாஸர் வகுக்க காரணம் 'வம்ச பரம்பரையாக ராமபக்தி வளர்க்க வேண்டும்' என்ற நியதியே ஆகும்.

முதன் முதலில் தஞ்சையில் அமைந்த சமர்த்த ராமதாஸ பக்தி கேந்திரமும், அதன் தலைவர் பீமராஜகோஸ்வாமிகளின் சிஷ்யர்களால் தஞ்சையில் ஏற்படுத்திய பிரசாரகேந்திரங்களும் இன்றளவும் ஸ்ரீராமபக்தி பிரசாரம் செய்து வருகின்றன. அதே போல் மன்னார்குடியில் அனந்த மௌனி ஸ்வாமிகளால் ஏற்படுத்திய பக்தி பிரசார கேந்திரத்தில் அனந்த மௌனி ஸ்வாமிகளுக்கு பிறகு அவருடைய முதல் சிஷ்யர் மேரு ஸ்வாமிகளும், அவருக்குப் பிறகு மேக ஸ்யாம ஸ்வாமிகளும், அவருக்குப் பிறகு சேது ஸ்வாமிகளும் மன்னார்குடி பிரசார கேந்திரத்திற்கு தலைவராக அமர்ந்து ராமபக்தியை வளர்த்தனர். இன்றும் அந்த பக்தி பிரசாரம் மேரு ஸ்வாமியின் சிஷ்ய பரம்பரையில் வந்த வம்சாவழியினரால் இராமபிரானுக்கு ஆராதனை செய்யப்பட்டு தொடர்கின்றது.

தஞ்சை பிராந்தியத்தில் அமைந்த சமர்த்த சம்பிரதாய கேந்திரங்களும், தஞ்சை கேந்திரத்திற்கு முதல் தலைவரான ஸ்ரீபீமராஜகோஸ்வாமிகள் சமாதி கோவிலும் மன்னார்குடியில் அமைந்த பிரசார கேந்திரத்தின் தலைவர்களான அனந்த மௌனி ஸ்வாமிகளால் ஆராதித்து வந்த இராமர் கோவிலும், அனந்த மௌனி ஸ்வாமிகளின் சமாதி கோவிலும் மேரு ஸ்வாமிகளின் சமாதி கோவிலும், அவருக்குப் பின் அமர்ந்த சேது ஸ்வாமிகளின் சத்திரமும் இன்றும் இப் பெரியோர்களின் புகழ் தஞ்சையிலும், மன்னார்குடியிலும் போற்றப்பட்டு ஞாபகச்சின்னங்களாக விளங்கி வருகின்றன. சேது ஸ்வாமிகளின் சமாதி கோவில் தஞ்சை மாவட்டம் குற்றாலம் என்னும் ஊரில் இருக்கிறது. "சேதுபாவா சத்திரம்" என்னும் பெயரில் ஒரு ஊரும் ஸ்வாமிகளின் பெயரை நிலைநிறுத்தி வருகிறது.

இவ்வாறாக தமிழ்நாட்டில் தஞ்சைப் பிராந்தியத்தில் மஹாராஷ்டிர மஹான் ஸ்ரீசமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகளின் இராமபக்தி பிரசாரம் சீரும் சிறப்புமாக வளர்ந்து இன்றளவும் அம் மஹானின் பேரும் புகழும் போற்றப்பெறுகின்றது

"ஜய ஜய ரகுவீர சமர்த்த"

# தெளிவு தரும் திருவாய்மொழி

இராம கதிரேசன் எம்.ஏ.,
மன்னார்குடி

'இறையருள் தெளிவு' மக்கள், வாழ்வாங்கு வாழ்வதற்குப் பயன்படுகின்றது என்பது எக்காலத்தும் உண்மை. இல்வாழ்க்கையிலுள்ள அனைவர்க்கும் மிகவும் வேண்டத்தக்கது ஆகும். தனிநபர் நல்வாழ்விற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் சிறப்பாக உதவ வல்லது.

## அதுவே வீடு

இவ்வுலகில் வாழும் காலத்திலேயே நாம் நலம் பெற வேண்டும். இதை ஆய்ந்தறிவதே உண்மையான அறிவுடைமையாகும்.

'முக்தி' அல்லது 'வீடு' என்பதெல்லாம் இப்பிறப்பிலேயே நாம் பெறக்கூடியது என்பது நம்மாழ்வார் காட்டும் துணிபு.

*"சென்றாங்கு இன்பதுன்பங்கள்*
*செற்றுக் களைந்து பசையற்றால்*
*அன்றே அப்போதே வீடு*
*அதுவே வீடு வீடாமே"* (திருவாய்மொழி 8 ப. 8 தி)

## துயர் கெடும் அல்லல் அழியும்

திருவாய்மொழி, இறையருள் தெளிவைக்காட்டி வாழ்விற்கான நன்னெறியையும் புலப்படுத்துகின்றது. நம் அல்லல்களைத் தீர்க்கும் அருமருந்தாகவுமுள்ளது. துயர் கெடுத்து வாழ வழிகாட்டுகின்றது. உங்கள் துயரங்கள் கெடுவதற்கும் அல்லல்கள் அழிவதற்கும் விரைவில் வந்து வழிபடுவீர் என்கின்றது.

*"துயர் கெடும் கடிதடைந்து*
*வந்து அடியவர் தொழுமின்"*

(திருவாய்மொழி 10ப.1தி)

*"வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரத்து*
*ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே"*
*(அடைந்தார்க்கு - நினைந்திருந்து தொழுவார்க்கு)*

(திருவாய்மொழி 9 ப. 10 தி)

## ஆன்ம நேய ஒருமைப்பாட்டுறவு

நம் பெற்றோர்கள் நம் உடலுக்கு மட்டுமே பெற்றோர்கள். நம் உயிருக்கும் பெற்றோராய் இருப்பது இறைவன். உடல் பற்றிய தொடர்பால் ஒரு சிலரே நம் உடன் பிறந்தோர். நம் உயிர் பற்றிய தொடர்பால் உலகத்தார் அனைவரும் நம் உடன் பிறந்தோராவர். உயிர்களனைத்தும் உலகமனைத்தும் இறையருள்தான் என்பது திருவாய்மொழி காட்டும் தெளிவு.

*"தானேயாகி நிறைந்து*
*எல்லா உலகும்*
*உயிரும் தானேயாய் "*

(திருவாய்மொழி 10 ப. 7 தி)

## பொல்லாங்கு செய்யும் ஐம்புலன்கள்

நம் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் எளிமையாக எண்ணிவிடக் கூடாது. பொல்லாங்கு விளைவிக்கத் தவறாதவை. நமக்குத் துணையாக இருக்க வேண்டிய அவை, தொல்லை தருவதில் முன்னிற்கின்றன. நம்மையே அடக்கி ஆளத் தொடங்கி விடுகின்றன. எல்லாக் கேடுகளும் இவற்றால் விளைவனவே.

நான் எவ்வாறு வேண்டினாலும் ஒடுங்காத ஐம்புலன்கள் என்னும் வலிமை நிறைந்த கயவர்களை உன் திருவருள் இல்லையேல் எவ்வாறு வெல்ல முடியும் என்று வேண்டுகின்றார் நம்மாழ்வார்.

*"ஒன்று சொல்லி ஒருத்தனில்*
*நிற்கிலாத ஓரைவர் வன்கயவரை*
*என்றுயான் வெல்கிற்பன்*
*உன் திருவருளில்லையேல்"*

(திருவாய்மொழி 7 ப. 1 தி)

## பக்தி வலையில் அகப்படுவன

மக்களாவர் குழந்தைப் பருவத்தில் வெட்டி எடுக்கப் பெற்ற கனிமப் பொருள் போல் விளங்காதவர்களாகத் தான் இருக்கின்றோம். இயற்கையைக் கண்டு விளங்கிக் கொள்ளமுடியாமல் அஞ்சுகின்றோம். காலப்போக்கில்

படிப்படியாக விளக்கம் பெற்று இறையுணர்வு பெறுகின்றோம். பக்தி நெறியில் ஈடுபட்டு நிற்கின்றோம். அஃதாவது ஜீவர்களின் துயர் கண்ட விடத்து நெஞ்சுருகி நின்று அவற்றின் துயர் துடைத்துக் காக்க முந்துகிறோம். இப்பயிற்சி முதிர்ந்து இறையருள் நாட்டம் மிகுந்து ஆன்மவுருக்கம் பெறுகின்றோம். இந்நிலையில் இறைவன் என்னும் அருட்பேராற்றல் புலப்படத் துவங்குகிறது. இருந்து நினைந்தும், நெகிழ்ந்துருகிப் பாடியும் ஆடியும் அக அனுபவம் பெறுகின்றோம். இதற்குத் துணையாக நிற்பது ஆழ்வார்கள் நமக்கு அளித்துள்ள தெய்வத் தமிழாகும். பக்தி நெறி பரவும் இந்தத் தமிழ்தான் நம் இதயத்தில் வாய்மை விளக்கேற்றுகிறது.

"பக்தர்களின் பக்தியிலே அகப்படுவது என்று கூறாமல் அருட்பேராற்றலை வேறு எவ்வாறு சொல்ல முடியும் ?" என்கிறார் திருமூலர்.

"சொல்லில் அடங்காத இறைவன் நினைப்பிற்கும் எட்டாத இறைவன் அன்பிற்குள் அகப்பட்டுக் கொள்கிறான்" என்கிறார் வாதவூரடிகள்.

"பக்தர்களுக்கு எளியவன் பிறருக்கு அரியவன் இறைவன்" என்கிறது திருவாய்மொழி.

*"பத்துடை அடியவர்க்கு எளியன்*
*பிறர்களுக்கு அரிய வித்தகன்......"*

(திருவாய்மொழி 1 ப. 3 தி)

### ஒன்றே மூன்றாகிறது

மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைத்தான் செய்கிறார்கள். எதை விரும்ப வேண்டும் என்பதனை அவர்களால் முடிவு காண முடியவில்லை என்பது அருளாளர்கள் கண்ட தெளிவு.

இயற்கையின் இயக்கங்களுக்கு அருட்பேராற்றல்தான் காரணமென்றால் இயற்கையோடு இயைந்துள்ள மனிதனின் நினைப்புக்கும் செயலுக்கும் அதே அருட்பேராற்றலே காரணமாக இருக்க முடியும்.

"நான் செய்யும் காரியங்கள் மட்டுமல்ல, நினைக்கும் நினைப்புகளும் அருட்பேராற்றலால்தான், இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளாமல் மயங்குகிறேன்" என்கிறார் தாயுமான அடிகள்.

விதையும் விளைவும் ஒன்று போல் இருப்பது போல், ஒரு காரியத்திற்குக் காரணமாகவுள்ள அருட்பேராற்றல் அக்காரியத்தினால் கிடைக்கும் பயனாகவும் உள்ளது.

காரியத்திற்கான காரணம், காரியம், காரியத்தின் பயன் மூன்றாகவும் உள்ளது அருட்பேராற்றல்தான் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது திருவாய்மொழி.

*"கருமமும் கருமபலனுமாகிய*
*காரணன் தன்னை" (திருவாய்மொழி 6 ப. 4 தி)*

நாம் நமது விருப்பப்படி செயல்படுகின்றோம் என்று எண்ணுவது விளங்காமையாகும். இவ்வுண்மையினை ஆழ்ந்துணர்ந்த நம்மாழ்வார் எனது மனம் சொல், செயல் எல்லாம் நீதான் என்று எம்பெருமானைத் தொழுகின்றனர்.

*"வணங்குமாறு அறியேன் மனமும்*
*வாசகமும் செய்கையும் யானும் நீதானே"*

*(திருவாய்மொழி 8 ப. 5 தி)*

### அதுவே நீ

யாண்டும் அனைத்துமாய் விளங்கும் அருட்பேராற்றல் தான் நம்மிடத்தும் ஆன்மாவாக உள்ளது. அது வே நீ ஆகின்றாய்" என்று விளங்கச் செய்து நம்மையே நமக்கு அறிமுகப்படுத்தும் வகையில் "அதுவே நீ" என்று அருளாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

"அதுவே நீயாக உள்ளாய்" (தத்-த்வ-மசி) என்ற ஞானமொழியை 'மகாவாக்யம்' என்று போற்றுகின்றனர்.

"நான் என்னை யாரென்று புரிந்து கொள்ளாமல், 'நான்' என்றும், 'எனது' என்றும் உனக்கு அன்னியமாக இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தேன். பகவானே! நானே நீ! என் உடைமையும் நீ" என்று பாடுகின்றார் நம்மாழ்வார்.

*"யானை என்னை அறியகிலாதே*
*யானே என்தனதே என்றிருந்தேன்!*
*யானேநீ என்னுடைமையும் நீயே!*
*வானே யேத்தும் எம்மானவரேறே!"*

*(திருவாய்மொழி 2.ப, 9 தி)*

உலகம் முழுவதும் உட்பொருளாக நிற்கும் அருட்பேராற்றலே நம்மிடத்தும் உட்பொருளாக நிலவுகிறது. உயிருக்கு உயிராக விளங்குகிறது. என்ற விவரத்தை உணர்ந்து, நமது மாண்பினை நாம் புரிந்து கொள்வதுதான் நம்மை நாமே புரிந்து கொள்ளுவதாகும்.

"பகவானே! நானே நீயானாய்! என்னை யாரென்று புரியும்படி செய்து என்னையே எனக்கு அளித்தாய்!" என்றும்,

"என்னை ஒரு பொருட்டாகக் கருதி உன்னையே என்னுள் வைத்தாய்! எம்பெருமானே! என்றும் நம்மாழ்வார் பாடுகின்றார்."

*"நாங்கள் கோனே! யானே நீயாகி*
*என்னை அளித்தானே"*

*(திருவாய்மொழி 10 ப. 7 தி)*

*"இன்று என்னைப் பொருளாக்கித்*
*தன்னை என்னுள் வைத்தான்"*

*(திருவாய்மொழி 10 ப. 8 தி)*

நம் நாட்டு அருளாளர்களுள் ஒப்பற்ற ஒருவர் நம்மாழ்வார். அவர் தமது அருளிச் செயலாகிய திருவாய்மொழியில் அருட்பேராற்றல் பற்றிய மெய்யான மெய்ம்மைகளை உண்மைகளை எவ்வாறு நமக்கு வழங்கியுள்ளார் என்பதை மிகச் சிறிய அளவிற்குக் கண்டோம். திருவருள் பற்றிய தெளிஞானம் சில பெற்றோம்; திருவருள் திளைப்பில் இன்பமுற இறைஞ்சி நிற்போம்.

# ஈடில்லாத "ஈடு"

இரா. சுப்பராயலு, எம்.காம்., எம். பி. ஏ.
துணைப் பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஒரு நூலுக்குப் பெருமைசேர்ப்பது அதன் உரையாகும். நூலாசிரியரின் கருத்தை நாம் நன்கு புரிந்துகொள்ள உரை உதவுகிறது. உரைகள் இல்லாமல் போயிருந்தால் சில இலக்கியங்கள் பெருமை பெற்றிருக்கமுடியாது. உரையாசிரியர்கள் சிலர் நூலாசிரியருக்கு இணையாகப் பெருமை பெற்றுள்ளனர். நக்கீரர், பரிமேலழகர்,நச்சினார்க்கினியர், இளம்பூரணர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள் இத்தகு பெருமை வாய்ந்தவர்கள். நக்கீரரின் இறையனார் களவியல் உரை உரைகளுள் தொடக்கமாகக் கருதப்படுகிறது.

உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள்கள் நூலின் கருத்தைத் துலக்கிக் காட்டுகின்றன. உரைகளின் விளக்கத்தால் நூலில் பாடபேதம் இருப்பினும் மூலச்சொல் எது என்பதைப் பிற்காலத்தில் உறுதிப்படுத்த முடிகிறது. உரைகளின் பயனாய் மூலநூலின் காலத்தையும் அளவிட முடிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, நூலின் நயத்தை உணர்ந்து துய்ப்பதற்கு உரைகளே பெரிதும் உதவுகின்றன.

திராவிட வேதமாகிய நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கு இயற்றப்பட்ட உரைகள் உரைகளின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளன. பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழோடு வடமொழியைக் கலந்து மணிப்பிரவாள நடையில் மொழியப்பெற்ற உரைகள் பின்னர் எழுத்தில் மலர்ந்தன.

நாலாயிர திவ்யப் பிரபந்தங்களில் திருவாய்மொழி சிறப்பான இடத்தை வகிக்கிறது. திருவாய்மொழிக்கு முதன்முதலாக உரை எழுதியவர் திருக்குருகைப்பிள்ளான் ஆவார். அவருடைய உரை ஆறாயிரம் கிரந்தங்கள் கொண்டிருந்ததால் அது ஆறாயிரப்படி என்று அழைக்கப்படுகிறது. வேதாந்தி நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படி உரையைத் தந்தார். நஞ்சீயரின் சீடரான நம்பிள்ளையின் இரு சீடர்களுள் பெரியவாச்சான்பிள்ளையின் உரை இருபத்து நாலாயிரப்படி ஆகும். மற்றொரு சீடரான வடக்கு திருவீதிப்பிள்ளை, நம்பிள்ளை மொழிந்த உரையை அவ்வப்போது எழுதிவந்து ஈடு முப்பத்தாறாயிரப்படியாக வைணவ உலகிற்கு அருளினார். அழகிய மணவாளச்சீயரின் உரை பன்னீராயிரப்படி ஆகும். இவ்வாறாக திருவாய்மொழியின் மிகப்பெரிய உரையாக ஈடு முப்பத்தாறாயிரப்படி அமைந்தது.

உரைக்கு உரை என்ற மரபில் ஈட்டிற்கு அரும்பத உரைகள் பல தோன்றின. ஆத்தான் ஜீயர் என்பவர் "அடையவளைந்தான் அரும்பத விளக்கம்" என்ற அரும்பத உரையையும், குணகரம்பாக்கம் இராமாநுஜஜீயர் என்பவர் "ஜீயர் அரும்பதவுரை"யையும் வழங்கியுள்ளனர்.

எனவே "ஈடு" என்ற முப்பத்தாறாயிரப்படி திருவாய்மொழியின் மிகச்சிறந்த உரையாகத் திகழ்கிறது. இதன் சிறப்பை விவரிக்கவேண்டுமானால் பேச நாள் போதாது, எழுத இதழ் போதாது. அந்த அளவுக்குத் திருவாய்மொழியின் பெருமையை எடுத்தியம்பும் உரையாக "ஈடு" திகழ்கிறது. இத்தகைய சிறப்புக்குரிய "ஈடு" உரையின் பெருமையைச் சிறிது அறிய முயலுவோம்.

திருவாய் மொழியின் முதல் பாடலே ஒப்புயர்வற்ற சிறப்புடைய பாடலாகும் (1 : 1 : 1) :

*"உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்*
*மயர்வற மதிநல மருளினன் யவனவன்*
*அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்*
*துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"*

இப்பாடலில் "உயர்வு அற" என்ற தொடருக்கு, "ஆதித்ய ஸந்நிதியில் நக்ஷத்ராதிகளைப் போலவும், மேரு ஸிகரத்திலே நின்றவனுக்குக் கீழுள்ள ஸர்ஷ பாதிகள் இருக்குமா போலவும், உண்டாயிருக்கச் செய்தே இல்லையென்னலாம்படி இருக்கை" என்று ஈடு உரை கூறுகிறது. "நலம்" என்பதற்கு, "கரை கட்டாக் காவேரி போலே பரந்திருந்தால் இப்பரப்பெல்லாம் ப்ரயோஜனமாயிராதே காடுபட்டுக் கிடக்குமோவென்னில் : கண்டிடமெங்கும் பயிர் பட்டிருக்கும் நிலம்போலே எங்குமொக்க உபாதேயமாயிருக்கும்" என்று விளக்கம் பெறுகிறோம். "அருளினன்" என்பதற்கு உவமையாக "முலைக் கடுப்பாலே தரையிலே பீச்சுவாரைப் போலே அருளிக்கொண்டு நிற்கக் கண்டவித்தனை" என்று கூறப்பட்டுள்ளது.

"துயரறு சுடரடி தொழுதெழு" என்பதற்கு "ஆறு கிண்ணகமெடுத்தால் நேர்நின்ற மரங்கள் பறியுண்டுபோய்க் கடலிலே புகும்; நீர் வஞ்சி தொடக்கமானவை வளைந்து பிழைக்கும். அதுபோலே பகவத் குணங்களினுடைய எடுப்பிருந்தபடி கண்டோமுக்கு எதிரே நானென்று பிழைக்க விரகில்லை; அவன் திருவடிகளிலே தலைசாய்த்துப் பிழைக்க வாராய் நெஞ்சே" என்பது இதன் விளக்கம். இதில் "அடி" என்பதற்கு ஒப்பாக, "ஸ்தநந்த யப்ரஜை முலையிலே வாய் வைக்குமாபோலே இவரும் "உன் தேனே மலருந் திருப்பாதம்" என்கிற திருவடிகளிலே வாய் வைக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது.

*வீடுமின் முற்றவும் வீடுசெய் தும்முயிர்*
*வீடுடை யானிடை வீடுசெய்ம் மினே"*

என்ற பாடல் எண் 1 : 2 : 1 ல் "வீடு மின்" என்ற தொடருக்கு,"முதலிலே 'வீடுமின்' என்பானேன்? என்னில், சிறு ப்ரஜை, கையிலே ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு கிடந்தால், பொகட்டுக் கொடு நிற்கச் சொல்லி, பின்னை "ஸர்ப்பம்" என்பாரைப் போலேயும், ஒருவன் க்ருஹத்துக்குள்ளே கிடந்து உறங்கா நிற்க, நெருப்புப் பற்றிப் புறம்பே எரியா நின்றால் "புறப்பட்டுக் கொள்கிடாய்" என்று, பின்பு "நெருப்பு" என்பாரைப் போலவும், முந்துற "விடுங்கோள்" என்கிறார்' என்று கூறியுள்ள உவமை கல்லாரையும் களிப்புற வைக்கும்.

பாடல் எண் 1 : 2 : 3 ல் அகங்கார மமதைகளை விடுவிக்கும் பாடல் வருமாறு :

*"நீர் நும தென்றிவை வேர்முதல் மாய்த்திறை*
*சேர்மின் உயிர்க்கத னேர்நிறை யில்லே"*

இப்பாடலில், "வேர்முதல் மாய்த்து" என்ற தொடருக்கு, "இரண்டு வ்ருஷம் தன்னிலே சேரநின்றால், ஒன்றிலே துளைத்துப் பெருங்காயத்தை வைக்க, சிலநாள் ஒன்றுபோலே நின்று, பின்னைப் பட்டுப்போகா நின்றதிறே. அப்படியே அஹங்கார மமகாரங்கள் த்யாஜ்யமென்னும் ப்ரதிபத்தி உண்டாக தன்னடையே ஸம்ஸாரம் அடியற்று நிற்கும்" என்ற உரைவிளக்கம் தரப்பட்டுள்ளது. "சேர்மின்" என்ற சொல்லை விளக்குகையில், "கெடுமரக்கலம் கரை சேர்ந்தாப்போலே இருக்கையாலே ஸம்ஸாரிக்கு பகவத் ஸமாஸ்ரயணம்" என்று பொருத்தமான உவமையுடன் விளக்கப்பட்டுள்ளது.

*"பற்றில னீசனும் முற்றவும் நின்றனன்*
*பற்றிலை யாய்அவன் முற்றி லடங்கே"*

என்ற பாடலில் (1 : 2 : 6), "பற்றிலையாய்" என்ற சொல்லுக்குரிய விளக்கம் அற்புதமானது. "அன்று ஈன்ற கன்றின் பக்கல் வாத்ஸல்யத்தாலே முன்னணைக் கன்றையும் கொம்பிலே கொள்ளுமாபோலே விடவொண்ணாதாரை நீ ஒருதலையாக விட்டான் அவன்" என்பது விளக்கம்.

*"உள்ள முரைசெயல் உள்ளவிம் மூன்றையும்*
*உள்ளிக் கெடுத்துஇறை யுள்ளி லொடுங்கே"*

என்ற பாடலில் (1 : 2 : 8) "இறையுள்ளில் ஒடுங்கே" என்பதன் உரையில் "பாழிலே மேட்டிலே பாய்கிற நீரைப் பள்ளத்திலே பயிரிலே பாய்ச்சுவாரைப் போலே ப்ராப்தவிஷயத்திலே ஆக்கப் பார்ப்பது" என்ற விள்க்கம் மிகவும் தெளிவானதாகும்.

நம்முடைய வாழ்நாள் எங்ஙனம் குறைகிறது? திருவாய்மொழி 1 : 3 : 7 க்குரிய உரையில் "சாலிலெடுத்த நீர்போலே தங்கள் ஆயுஸ்ஸு குறைகிறதென்று அறியாதிரா நின்றார்கள் என்னா நின்றதிறே" என்ற விளக்கம் உவமைநலம் மிகுந்ததாகும்.

*"கண்ணாவா னென்றும், மண்ணோர் விண்ணோர்*
*தண்ணார் வேங்கட, விண்ணோர் வெற்பனே"*

என்ற பாடலுக்குரிய (1 : 8 : 3) அறிமுகத்தில், "இரட்டை ப்ரஜை பெற்ற மாதாவானவள், இருவர்க்கும் முலைகொடுக்கப் பாங்காக நடுவே கிடக்குமாபோலே, நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுக்கைக்காகத் திருமலையிலே நின்றருளின நீர்மையை அருளிச் செய்கிறார்" என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது.

"அணைவதரவணைமேல்" என்ற பாடலிலும் (2 : 8 : 1) "மாதாபிதாக்கள் இருந்த படுக்கையிலே ப்ரஜை சென்று ஏறுமாபோலே" என்ற உவமை கூறி விளக்கப்பட்டுள்ளது.

"ஈடு" உரை தனித்தமிழ் நடையாய் இல்லாமல் வடசொற்கள் கல்ந்த மணிப்பிரவாள நடையில் உள்ளமை அவ்வுரை வெளியான காலத்தில் வடமொழிக்கிருந்த

செல்வாக்கை உணர்த்துகிறது. வடமொழியில் கூறப்பட்டால்தான் உயர்வு என்ற நிலை இருந்த காலத்தில் தமிழ் வேதமாகிய திருவாய்மொழியின் விளக்கம் வடமொழியில் "ப்ரமாணத்திரட்டு" என்ற பெயரில் தரப்பட்டதால் வடமொழி கற்றோரும் தமிழ் வேதத்தின் சிறப்பை உணர முடிந்தது. பேச்சு வழக்கிலிருந்த உரைகள் அப்படியே எழுத்தில் வந்ததனால் உரையாசிரியர் நேரில் பேசுவதுபோல ஈடு உரை அமைந்துள்ளதைக் காணலாம்.

வைணவ உரையாசிரியர்களின் உரைகள்தான் 'கதாகாலட்சேபம்' என்று இன்று நடத்தப்பெறும் 'ஹரிகதை'களுக்கு அடிப்படையாய் அமைந்துள்ளன. மூலநூலுக்குப் பலவிதமான வியாக்யானங்களை உரையாசிரியர்கள் வழங்கியது மூலநூலின் பெருமை மேலும் உயர வழிகோலியது. மொழி வல்லுநர்களுக்கு வைணவ உரைகள் ஆராய்ச்சிக்குரிய எவ்வளவோ அறைகூவல்களை விடுத்துள்ளன.

முப்பத்தாறாயிரப்படியான "ஈடு" திருவாய்மொழிக்கு அமைந்த உரைகளில் தலைசிறந்தது ஆகும். "ஈடு" என்பதற்கு இணை, ஒப்பு, உவமை, வலி, பெருமை, பிரதி, தகுதி என்று பொருள்கள் உள்ளன. "ஈடு" என்ற சிறப்புப் பெயரை முப்பத்தாறாயிரப்படி விளக்கம் மட்டுமே பெற்றுள்ளது அதன் பெருமையை உணர்த்தும். வடக்குத் திருவீதிப்பிள்ளையால் ஈடு முப்பத்தாறாயிரப்படி எழுதப்பட்டதெனினும் அதனை வாய்மொழியாக உரைத்த நம்பிள்ளை பெயரிலேயே 'நம்பிள்ளை ஈடு' என்று அழைக்கப்படுகிறது. மூல்நூலுக்கு ஈடாக ஓர் உரை பெருமை பெறவேண்டுமெனில் அதன் சிறப்புக்கும், பெருமைக்கும் ஈடு உண்டோ? ஈடில்லாத "ஈடு" முப்பத்தாறாயிரப்படி உரையை அறிஞர் உலகம் போற்றுவதோடு, உரை செய்தலுக்குப் புதிய நெறி அமைத்துத் தந்துள்ளதாக அதனைப் பாராட்டி மகிழ்கிறது.

## அன்னமூர்த்தி

கி. ஸ்ரீதரன்

தொல்பொருள் ஆய்வுத்துறை, திருச்சி 20



அன்னமூர்த்தி

வைணவக் கோயில்களில் அன்னமூர்த்தி என அழைக்கப்படும் திருஉருவம் வழிபடப்பெறுவதைக் காணலாம். கோயில்களில் இறைவனுக்கு சமர்பிக்கப்படவேண்டிய அமுதுகள் தயாரிக்கும் இடம் 'மடைப்பள்ளி' என அழைக்கபபடும. மடைப்பள்ளிக்கு அமுது தயாரிப்பதற்கும், அதற்கானப பணிகளுக்கு ஆட்களை நியமித்துக் கொள்ளவும் தானம் அளிக்கப்பட்டதாக பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பொதுவாக வைணவக் கோயில்களில் மடைப்பள்ளியின் அருகே அன்னமூர்த்தி என்ற மூர்த்தி வழிபடப்படுவதைக் காணலாம். திருவரங்கம் கோயிலில் அமர்ந்த நிலையில் காணப்படும் மூர்த்திக்கு இரண்டு கரங்கள் உள்ளன. இவ்விக்கிரகத்தில் திருமாலின் ஆயுதங்களான சங்கும், சக்கரமும் மேலே காணப்படுகின்றன. கரங்களில் இடதுகையில் தயிர்சாதமும், வலது கையில் பாயசம் உள்ள கலசமும் காணப்படுகிறது. 'பத்ம சம்ஹிதையில்' அன்னமூர்த்தியின் உருவ அமைப்புப் பற்றி கூறப்படுகிறது.

மடைப்பள்ளியின் வழிபாட்டுத் தெய்வமாக அன்னமூர்த்தி கருதப்படுகிறது. திருவரங்கத்தை அடுத்த திருவெள்ளறைக் கோயிலிலும் அன்னமூர்த்தியின் வடிவினைக் காணலாம். மற்ற வைணவக் கோயில்களில் மடப்பள்ளியில் மடப்பள்ளி நாச்சியார் என்ற திருவுருவம் வழிபாட்டில் இருப்பதைக் காணலாம்.

மக்களுக்கு உணவு அளித்து பசியைப் போக்கும் தெய்வமாக அன்னமூர்த்தி வழிபடப்பெறுகிறது என்று கருதுவதில் தவறில்லை.

# அசோகவனச் சீதையும் சொல்லின் செல்வனும்

முனைவர். ம.சா.அறிவுடைநம்பி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

காலத்தால் அழிக்க இயலாத காப்பியமாகத் திகழ்வது கம்பரின் இராமாயணமாகும். பல மொழிகளில் இக் காப்பியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பல மாநிலங்களில் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு காப்பியங்களும் சாதாரண எளிய பாமர மக்களும் அறியும் வண்ணம் அவற்றின் தாக்கம் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இவ்விரு காப்பியங்களில் காணப்படும் பல்வேறு நிகழ்ச்சிகள் இலக்கியமாகவும், ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் வடிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றன. இக் காப்பிய நிகழ்ச்சிகள் எந்த அளவிற்கு மக்களின் உள்ளத்தைச் சென்றடைந்திருக்கின்றன என்பதையே இவை நமக்குக் காட்டுகின்றன. தெருக்கூத்து, யட்சகானம், பாகவதமேளம், கூடியாட்டம், மோகினியாட்டம், பரதநாட்டியம் போன்ற நிகழ்கலைகளில் இவ்விரு காப்பியங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் பலவற்றைக் கருவாகக் கொண்டு இன்றும் பல மாநிலங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மக்களும் எவ்விதச் சலிப்புமின்றித் தொடர்ந்து பன்முறை இந் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து வருகின்றனர். தற்காலத்தில் நாடகங்களாகவும், திரைப்படங்களாகவும், தொலைக்காட்சித் தொடர்களாகவும் இராமாயணமும், மகாபாரதமும் பல மொழிகளில் எடுக்கப் பெற்று அவை மக்களின் பாராட்டுதல்களையும் வரவேற்பையும் பெற்று வருவதைக் காணும்பொழுது காலங்காலமாக இக் காப்பியங்கள் அழியாமல் நின்று நிலைத்து வருவதை அறியமுடிகின்றன.

தஞ்சையை ஆட்சி புரிந்த மராத்திய மன்னர்கள் பல கோயில்களைக் கட்டியிருக்கின்றனர். தஞ்சை மேலவீதியிலுள்ள வீரப்பிரதாப அனுமார் கோயில் என்பது அவற்றுள் ஒன்றாகும். இக்கோயில் கருவறையில் தென்புறச்சுவரில் இராமாயணத்தில் இடம்பெற்ற சில நிகழ்ச்சிகளை விளக்கும் வகையில் சில சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் சொல்லின் செல்வனாக விளங்கும் அனுமனின் புகழை வெளிப்படுத்தும் வகையில் எடுக்கப்பெற்றதாகும். தஞ்சையை ஆட்சி செய்த பிரதாபசிம்மர் (கி.பி. 17391763) காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. எனவேதான் மன்னர் பெயரையும் இணைத்து 'வீரப்பிரதாப அனுமார்' என்று இக் கோயிலுக்குச் சூட்டப்பட்டுள்ளது. அனுமனின் புகழை வெளிப்படுத்தும் வகையில் காப்பியத்தில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லும்படி அமைந்த காட்சிகளில் சிலவற்றை மட்டும் சிற்பங்களாக வடிக்கச் செய்திருப்பதைக் காணமுடிகின்றன, அவை:

1. *மாரீசனை இராமர் அம்பெய்து கொல்லுதல்*
2. *தேரில் சீதையை இராவணன் கொண்டு செல்லுதல்*
3. *அசோகமர நிழலில் சீதை இருத்தல்*
4. *இராவணன் அரசவை மண்டபத்தில் அனுமன் வீற்றிருத்தல்*
5. *சேதுவுக்குப் பாலம் அமைத்தல்*

வில்லின் செல்வன் இராமன், சொல்லின் செல்வனாகிய அனுமனைத் தன் தலைவி சீதையைக் கண்டு வரும்பொருட்டுத் தென்திசை நோக்கித் தூதனுப்பினான். அனுமன் இராமனை வணங்கி விடைபெற்றுத் தென்திசை நோக்கிச் சென்றான். அனுமன் இலங்கை மாநகரில் இராவணன் சீதையைச் சிறை வைத்திருப்பதை அறிந்து இலங்கை சென்றான். இலங்கையின் எழிலைக்கண்டு அந்நகர் முழுவதுமே சீதையைத் தேடினான். இறுதியில் அங்கிருந்த அசோகவனத்தை அடைந்தான். அப்பொழிலின் பலவிடங்களிலும் தேடிய அவன் அரக்கியர் நடுவில் சீதை வாடிய தோற்றத்துடன் வருந்தியிருத்தலைக் கண்டான். இதனைக் கம்பர்,

> ***"விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்***
> ***எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை யெண்ணித்***
> ***தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்***
> ***அழுதலன்றி மற்றயல் ஒன்றும் செய்குவது அறியாள்"***
>
> ***(சுந்தர: காட்சிப்படலம் 5)***

என்பார். கணவனைப் பிரிந்த பிரிவுத் துன்பத்தால் பெருகிய கண்ணீர் அவள் ஆடையை நனைப்பதும், உடலின் வெப்பத்தால் அந்த ஆடை உடனே காய்ந்து போவதுமாக இருந்தது. எவ்விதத்திலும் இராமன் வருதல் கூடும் என்ற நினைவால் அவள் எப்பொழுதும் திக்குகளையே நோக்கிக் கொண்டிருந்தாள். இராமனுடைய இனிய பண்புகள் பலவற்றையும் எண்ணியெண்ணி வருந்திக் கொண்டிருந்தாள். இக் காட்சி அழகிய சிற்பமாக இக்கோயிலில் (படம்1) செதுக்கப்பட்டிருக்கிறது. சோகமே வடிவெடுத்த நிலையில் அசோகமர நிழலில் சீதை அமர்ந்திருக்கின்றாள்.


சீதையை அசோக வனத்தில் கண்ட அனுமன் 'இராமனால் அனுப்பப்பெற்ற தூதன் நான்' என்று கூறியவாறு சீதையை வணங்கித் தான் வந்த நோக்கத்தையும் தன் வரலாற்றையும் அவளிடம் கூறுகிறான். அதன் பின்னர் அவ்வனத்தை மிதித்துத் துவைத்துச் சிதைத்து அழித்தான். அங்கிருந்த உயர்ந்த செய்குன்று ஒன்றினையும் தூக்கி இலங்கை நகரத்தின்மீது வீசினான். இதனால் அஞ்சியோடிய அரக்கர்கள், இராவணனிடம் சென்று முறையிட்டனர். இராவணன் அனுமனை உயிருடன் பிடித்துக் கொண்டுவரப் பணித்தான். இந்திரசித்து அனுமனுடன் போர் செய்து தோல்வியுற்று இறுதியில் பேராற்றல் வாய்ந்த நான்முகக் கணையினைச் செலுத்தி, அனுமன் தோள்களை இறுகக் கட்டி இராவணன் முன் கொணர்ந்தான். இராவணன் மிகுந்த சினத்துடன் அனுமனை நோக்கி 'நீ யாவன்? இங்கு வந்த காரணம் யாது? உன்னை அனுப்பியவர் யார்?' என்று வினவினான்.

"இராமன் விடுத்த தூதன் யான்;" அனுமன் என்பது எனது பெயர்; சீதையைத் தேடி நான்கு திசைகளிலும் வானரவீரர் சென்றுள்ளனர்; தென்பால் வந்த கூட்டத்திற்கு வாலியின் மகனான அங்கதன் தலைவனாவன்; நான் அவனது ஏவலால் இங்குத் தனியே வந்தேன்" என்று கூறிய அனுமன் இராவணன் அரசவை மண்டபத்தில் தம் வாலையே சிம்மாசனமாகக் கொண்டு அதிலமர்ந்து தூதுச் செய்தியைக் கூறுகிறான்.

"நான் சொல்ல வந்த செய்தியைக் கேள்; உனது செல்வ வாழ்வை வீணாக்கிக் கொண்டாய்; அரச தருமத்தைச் சிறிதும் நீ நினைந்தாயல்லை; கொடிய செயலைச் செய்துவிட்டாய்; அதனால் உனக்கு அழிவு நெருங்கியுள்ளது; இனிமேலாயினும் நான் இயம்பும் உறுதியினைக் கேட்டு நடந்தால் உன் உயிரை நெடுங்காலம் காத்துக் கொள்ளலாம்; சீதையைத் துன்புறுத்திய தீவினையால், தவம் செய்து ஈட்டிய நல்வினையை அடியோடு இழந்தாய்; உன் பெருமை முழுவதும் அழிந்து விட்டது; 'தீவினை நல்வினையை வெல்லமாட்டாது'; நேர்மையில்லாத சிற்றின்ப வேட்கையினால் நன்னெறியை மறந்தவர்கள் மேன்மை அடைய இயலாது; சிவபிரான் உனக்கு அளித்த வரம் தவறினாலும் இராமனது அம்பு தவறிப் போகமாட்டாது; எனவே உன் செல்வம் அழியாதிருக்கவும், உறவினர்கள் ஒழியாதிருக்கவும் நீ விரும்பினால் கவர்ந்து வந்த சீதையை உடனே விட்டு விடுமாறு சுக்கிரீவன் உன்பால் உரைத்துவரச் சொன்னான்" என்று அனுமன் கூறுகிறான்.

அனுமன் இராவணன் அரசவை மண்டபத்தில் தூதுரைத்த காட்சி (படம் 2) அழகிய முறையில் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. அனுமன் கம்பீரமாக இராவணனுக்கு எதிரில் அமர்ந்து தம் வலக்கையை மேலே தூக்கிப் பேசுகின்றான். சிற்பத்தில் காணப்படும் இராவணன் பத்துத் தலைகளுடனும், இருபது கைகளுடனும் காட்சி அளிக்கின்றான்.

வீரப்பிரதாப அனுமார் கோயிலில் காணப்படும் ஐந்து சிற்பங்களில் அசோகவனச் சீதையும், சொல்லின் செல்வன் அனுமன் தூதுரைத்தமையும் இக் கட்டுரையில் ஆராயப்பட்டன. சிறந்த சிவபக்தர்களாக விளங்கிய தஞ்சை மராத்திய மன்னர்கள் வைணவ சமயத்திலும் ஈடுபட்டுப் பல திருப்பணிகளையும், அறக்கொடைகளையும் செய்துள்ளனர். வீரத்திற்கு நிலைக்களமாக விளங்கும் சக்திக்கும், அனுமனுக்கும் கோயில்கள் எடுப்பித்துப் பல அரிய திருப்பணிகளைச் செய்துள்ளனர். இவற்றை அவர்கள் காலத்திய இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், மோடி ஆவணங்கள் போன்றவற்றின் மூலம் அறியமுடிகின்றன. கற்சிற்பங்களையும், மரச் சிற்பங்களையும் உருவாக்கிய இவர்கள் காலத்திய சிற்பங்களுள் இச் சிற்பங்கள் அரியனவாகத் திகழ்வதில் எள்ளளவும் ஐயமில்லை.



# ஸ்ரீமத் ராமாயணமும் அர்த்தபஞ்சகமும்

ஸ்ரீ உவே. மதுராந்தகம்
தி.ஈ. வீரராகவாச்சாரியார் ஸ்வாமி

இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீமத்ராமாயணம் எனும் பாற்கடலைக் கடைந்து, பற்பல உயர்ந்த ரத்தினங்களை, நம் பூர்வாசார்யர்கள் வெளியிட்டருளினார்கள். அவற்றுள் அர்த்தபஞ்சகம் எனும் சிறந்த ரத்தினமும் ஒன்று. ஸர்வ வேதங்களும், இதிஹாஸ புராணங்களும், ஆழ்வார்கள் திவ்ய பிரபந்தங்களுமாகிய இவை பலவும், அர்த்த பஞ்சகத்தையே உட்கொண்டிருப்பவை. ஐந்து அர்த்தங்கள் ஆவன

i) *பொருள் ஒன்று என நின்ற பூமகள்நாதன்*
ii) *அவன் அடிசேர்த்து அருளொன்றும் அன்பன்*
iii) *அவன் கொள் உபாயம்*
iv) *அமைந்த பயன்*
v) *மருளொன்றிய வினை வல்விலங்கு*

என்றிவை 'ஐந்து அரிவர் இருளொன்றிலாவகை என்மனம் தேர வியம்பினரே'

என்பதாக அதிகார ஸங்கிரஹத்திலே யீமந்நிகமாந்த மஹாதேசிகன் இந்தப் பாட்டிலே ஸங்கிரஹித்து காட்டி அருளியவையே. (அர்த்தபஞ்சகாதிகாரம்)

இதற்கு மூலம்

1. *ப்ராப்யஸ்ய ப்ரஹ்மனோ ரூபம்*
2. *ப்ராப்துசே ப்ரத்யகாத்மன :*
3. *ப்ராப்த்யுபாயம்*
4. *பலம் சைவ*
5. *ததா ப்ராப்திவிரோதி ச*

வதந்தி ஸகலா வேதா : ஸேதிஹாஸபுராணகா:
முனய : ச மஹாத்மானோ வேத வேதாங்க பாரகா: என்கிற ப்ரமாண வசனம்

திருவாய் மொழிக்குத்தனியன் அருளியவர்களும் இந்த ஐந்து அர்த்தங்களே திருவாய் மொழியின் ஸாரம் என்பதாகக் காட்டியருளினார்கள். அதாவது

1. *மிக்க இறை நிலையும்*
2. *மெய்யாமுயிர் நிலையும்*
3. *தக்க நெறியும்*
4. *தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும்*
5. *வாழ்வினையும்*

ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல் என்பது இவ்வைந்து அர்த்தங்களை அறிந்தவனே மஹாபாகவதன் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

*"அர்த்த பஞ்சக தத்வனோ மஹாபாகவத : ஸம்ருத"*

என்று

அர்த்தமாவது விரும்பப்படுவது. 'அர்த்யதே இதி அர்த்த : ' அத்மக்ஷேமத்தை அபேக்ஷிக்குமவர்களால முக்யமான இவ்வைந்தும் விரும்பி அறிய வேண்டியிருப்பதால், அர்த்த பஞ்சகமென்று பெயர் பெற்றது.

தைத்தீரிய உபநிஷத்திலே

"ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" எனத் தொடங்கி இவ்வைந்து அர்த்தங்களும் சுருக்கமாகவும் விஸ்தாரமாகவும், நிருபணம் செய்யப் பெற்றிருக்கின்றன. இப்படி ஸர்வப்ரமாணஸாரமாகிய, அர்த்த பஞ்சகத்தை, வேதார்த்தத்தை விசதமாகத் தெளிவிக்கின்றமையால் "வேதோபப்ருஹ்மணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:" என்று ஸ்ரீ வால்மீகி பகவான், குசலவர்களுக்கு உபதேசித்தருளிய, ஸ்ரீராமாயணத்தில், ஸங்க்ஷேபமாகவும் விஸ்தாரமாகவும் தெளிவாகக் காட்டியிருக்கிறார்.

அர்த்த பஞ்சகம் முதலிய வேதார்த்தங்களை, விசதமாக்கியபடியாலேயே ஸ்ரீமத் ராமாயணமானது சிறந்த வேதோபப்ருஹ்மணமாயிற்று.

ஸ்ரீமந்நாராயணனே ப்ராப்யமான பரப்ரஹ்மம் என்பது அர்த்தபஞ்சகத்திலே முதலாவது அர்த்தம். இதை பாலகாண்டம் முதலாக, உத்தரகாண்டம் ஈறாக, ஆங்காங்கு மிகத்தெளிவுபடுத்தியுள்ளார் மஹர்ஷி வால்மீகி பகவான்

ஸங்க்ஷேபராமாயணத்தில் நாரத மஹர்ஷியை முதலில் ஸ்ரீவால்மீகி ப்ரச்னம் பண்ணிய விஷயமும் இதுவே "கோன்வஸ்மின் ஸாம்ப்ரதம் லோகே" என்று தொடங்கிய ப்ரச்னமானது ப்ராப்யமான ப்ரப்ரஹ்மம் யார் என்பதையே உட்கொண்டது.

அதற்கு விடையளிக்கும் ஸ்ரீநாரத மஹர்ஷியும் ஸ்ரீவால்மீகி ஹ்ருதயத்தை உணர்ந்து பதிலளிக்கிறார்.

*"இக்ஷ்வாகு வம்சப்ரபமோ ராமோ நம: ஜனை: ச்ருத:*

ஸ்ரீராமன் குணவான் வீர்யவான் என்பதில் என்றுமே வால்மீகிக்கு ஸந்தேஹலேசமுமில்லையே. அப்படியிருக்க அவனே பரதத்வமாகிய பகவானுடைய அவதாரம் என்பதை நாரத முனிவர் மூலம் உலகத்தாருக்கு வெளிப்படுத்துவதற்காகவே ஸர்வக்ஞராயிருக்கச் செய்தேயும், இவ்வாறு ப்ரச்னம் பண்ணி நாரத முனிவர் மூலம் இத்தத்துவத்தை நமக்கு உணர்த்துவித்தார் ஸ்ரீ வால்மீகி.

தசரத சக்ரவர்த்தியின் வேள்வியில் ஹவிர் பாகத்திற்காக வந்திருந்த தேவர்கள் மத்தியில்

*"ஏதஸ்மின்னந்தரே விஷ்ணு ருபயாதோ மஹாத்யுதி :*
*சங்க சக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி:*

என்கிறபடியே பரதத்வ லக்ஷணங்களான அப்ராக்ருத திவ்ய திருமேனியும் பீதாம்பரமும் சங்க சக்ராதி திவ்யாயுதங்களுமாகத் தோன்றியவன் பரந்தாமனே என்பதை ப்ரம்மருத்ராதி தேவதைகள் மூலமே வெளியிட்டருளினார். "த்வம் கதி : பரமா தேவ ஸர்வேஷாம் ந : பரந்தப"இத்யாதியான தேவர்களின் வாக்கியத்தினால் இது தெளிவாயிற்று. சிவதனுர் பங்கத்தினாலும் பிறகு பரசுராமகர்வ பங்கத்தினாலும் பரதத்துவம் ஸ்ரீமந்நாராயணனே என்பதைத் தெளிவாக்குகின்றார் வால்மீகி.

ஜ்ரும்பிதம் தத்தநுர்த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணு ப்ராக்ரனம : அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஸ்ஸர்ஷிகணாஸ்த்தா என்பதாக.

விஷ்ணு அவதாரத்தில் சிவனும் விஷ்ணுவும் யுத்தம் செய்ய அப்போது ருத்ரதநுஸ்ஸை ஸ்தம்பிக்கச் செய்தான் பகவான். இதைக் கண்ணால் கண்ட தேவர்களும் மஹர்ஷிகளும் விஷ்ணுவே பரதத்வம் என்று தீர்மானித்தார்கள் என்பதை பரசுராமன் தன் வாயினாலேயே வெளிப்படுத்தினான்.

மந்தோதரி ராவணனை இழந்து அழுகையில் ஸ்ரீராமனைப் பார்த்து தேவரீரோ லக்ஷ்மீகாந்தன் சங்கசக்ரகதாபாணியான பரமபுருஷன் ஜகத்காரணபூதன் இத்யாதியாக பரத்வ நிர்த்தாரணம் செய்திருப்பதை ஸ்ரீராமாயணத்தில் மஹரிஷி வெளியிட்டார். "பகான் நாராயணோ தேவ: இத்யாதியாக ப்ரஹ்ம ருத்ராதிகளான தேவர்கள் ராவண வதத்திற்குப் பிறகு பிராட்டியின் அக்னிப்ரவேச ஸமயத்தில் திரண்டு, ஸ்ரீமந்நாராயண மூர்த்தியாகிய ஸ்ரீராமனே பரதத்துவம், ப்ரஹ்ம ருத்ராதிகளாகிய தாங்கள் அவனால் ஸ்ருஷ்டிக்கப் பெற்று தபோபலத்தினாலே ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் முதலிய அதிகாரம் பெற்றனர் என்பதை வெளியிட்டார்கள்.

உத்தரகாண்டத்திலே மால்யவானோடு போர் புரிந்து விஷ்ணு அவதாரமாகிய பகவான் அந்த மால்யவானைத் துரத்தும் போது அந்த மால்யவான் கேட்கிறான். "நாரயண நஜாநீஷே க்ஷத்ரதர்மம் ஸநாதநம்" என்பதாக. ஓடுபவர்களைத் துரத்தி வதம் செய்வது க்ஷத்திரியதர்மமன்று நாராயணா! நீ இவ்வாறு எங்களை ஹிம்ஸிப்பது தருமமாகுமா? என்றான் மால்யவான். அதற்கு பகவான் பதிலளிக்கையில் நாம் க்ஷத்ரியனன்று என்பதையும் நாராயணன் என்பதையும் நீயே சொல்லுகிறாயே. நாராயணதர்மமாகிய சரணாகதஸம்ரக்ஷணமே நமக்கு நோக்க வேண்டியிருப்பதேயன்றி க்ஷத்ரியதர்மமன்றே என்பதாக பகவான் தம் வாயினாலும் மால்யவான் முகமாகவும் பரமாத்மா ஸ்ரீமந் நாராயணனே என்பதை வெளியிட்டது ஸ்ரீமத் ராமாயணம்

2) இனி இரண்டாவது அர்த்தம் ஜீவாத்மாவின் ஸ்வரூபம்

இதை இளைய பெருமான், பரதாழ்வான, சத்ருக்னாழ்வான் மூலமாக வெளியிட்டருளினார் வால்மீகி.

பகவத் சேஷத்வமே ஜீவாத்மாவின் ஸ்வரூபம். 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று காட்டிற்கு எழுந்தருளும காலத்தும் தொடர்ந்து எல்லா கைங்கர்யங்களையும் செய்து வந்த இளைய பெருமான் படியைக் காட்டி ஜீவாத்மஸ்வருபத்தை வெளியிட்டபடி.

பரதாழ்வான்படி பாரதந்த்ரியம் ஸ்வாமி இட்ட வழக்காக இருக்கையே பாரதந்ரியம் என்பது. ஸ்ரீராமன் சொல்படி பாதுகா மூலம் இராஜ்யத்தை இசைந்து யுவராஜபட்டாபிஷேகத்தையும், ஸ்ரீராமன் ஆக்ஞையினால் பிறகு இசைந்து அவன் இட்ட வழக்காக நின்றவன் பரதன்.

ஸ்ரீ சத்ருக்னாழ்வான்படி பாகவத பாரதந்ரியம்

ஸ்ரீராமனைக் காட்டிலும் பரதாழ்வானிடத்திலே ஈடுபட்டு பரதனையே தனக்குத் தஞ்சமாக நினைத்தவன் சத்ருக்னன். இப்படி இம் மூவர் மூலம் ஜீவாத்மஸ்வருபமானது 1. பகவச்சேஷம் 2. பகவத்பரத்நத்ரயம் 3. பாகவதசேஷம் என்பதை வெளியிட்டபடி.

3) இனி மூன்றாவது உபாயஸ்வருபம் ஸ்ரீராமாயணத்தை தீர்க்க சரணாகதி சாஸ்திரம் என்று சொல்வார்கள் பூர்வர்கள். ஆதியில் தசரத வேள்வியில் தேவர்கள் சரணாகதி விச்வாமித்ரரிடம் சுநஞ்சேபன் என்றும் அவருடைய மருமானாகியவன் சரணாகதி செய்து பயன் பெற்றான். லக்ஷ்மணன் சரணாகதி செய்து கைங்கர்யத்தை வனவாஸத்தில் பெற்றான். சித்ர கூடத்தில் பரதன் சரணாகதி செய்தான். அதன் பலமே பின்னிட்டு ராஜ்யத்தை ஸ்ரீராமன் இசைந்தது. சுக்ரீவ சரணாகதி, விபீஷண சரணாகதி, த்ரிஜடா சரணாகதி என்றிவ்வாறாக ஆதியோடந்தமாய் சரணாகதி சாஸ்திரமாய் அமைந்துள்ளது ஸ்ரீமத் ராமாயணம்.

4) இனி பலம் - உபாயத்தை அனுஷ்டித்துப் பெறுவது பலம். பகவத் கைங்கர்யமே ஜீவாத்மாவுக்குப் பெறக் கூடிய பெரும் பயன். இதை இளையாழ்வாராகிய லக்ஷ்மணன் சரணாகதியினால் பெற்று ஓழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ததன் மூலம் ஸ்ரீராமாயணம் வெளியிட்டது.

5) இனி விரோதி அதாவது ப்ராப்தி விரோதி. பகவத் ப்ராப்திக்கு இடையூறாக நிற்கின்ற கர்மங்கள் ப்ராப்தி விரோதி எனப்படுகின்றன. விராத, சூர்ப்பணகா, கர்தூஷண, ராவண இந்த்ரஜித், கும்பகர்ணாதிகளான பாபிஷ்டர்கள் நிலையை உணர்த்தி அந்தந்த கதைகளின் மூலம் ப்ராப்தி விரோதி ஸ்வருபத்தை வெளியிட்டது ஸ்ரீமத் ராமாயணம். இப்படி அர்த்தபஞ்சகம் ஸ்ரீ ராமாயண ஸாரமாய் அமைந்துள்ளது.

*அர்த்த பஞ்சக ஸாரார்த்த ஸ்ரீமத் ராமாயணே ஸ்புட :*
*ஸமக்ராஹீஹ ஸத்ப்ரீத்யை வீரராகவஸூரிணா*

# பாஞ்சராத்ர தத்வ விளக்கம்

பாஞ்சராத்திர ஆகம ஆசிரியர் (ஏத்தக்குடி) க.அ. ஸ்ரீனிவாஸ அய்யங்கார்

*ச்ரூயதாம் அபிதாஸ்யாமி பிரும்மன்*
*ஆராதனம் ஹரே:*
*யேன விஷ்ணோ: பதம் மர்த்யா:*
*ப்ராப்னோதி அமர துர்லபம்*

உலகம் யாவையும் படைத்து, பாதுகாத்து நற்கதி பெறச் செய்யத் திருவுள்ளம் கொண்டவன் மன் நாராயணன். அதன்பயனாகத் தோன்றியவையே நான்மறைகள். அவற்றால் பயன் பெற்றவர்களோ ஒரு சிலரே. அதற்காகவே ஸ்ரீமன் நாராயணன் விக்ரஹ வழிபாட்டினை ஏற்படுத்தினான். அதற்கேற்ப பொதுவான ஆகமங்களைப்படைத்து அருளினன்.

பாஞ்சராத்திரம், வைகானஸம், பார்கவம், சைவம் என பல உள்ளன. அவற்றுள் ஒன்றான பாஞ்சராத்திரத்தை அருளிச் செய்தவர் ஸர்வஞ்ஞனான பகவான் ஸ்ரீமன் நாராயணனே. பகவானின் பஞ்சாயுதங்களின் அம்சமான, ஔபகாயனர், சாண்டில்யர், பாரத்வாஜர், கௌசிக மௌஞ்சாயனர் முதலிய ரிஷிகளுக்கும் மற்றும் பத்மர் முதலான மஹரிஷிகளுக்கும் இந்த பாஞ்சராத்திர தந்திரத்தை உபதேசித்தார்.

அவைகளில் பாதம், ஈஸ்வர, பாரமேஸ்வர என்னும் ஸம்ஹிதைகள் சிறப்பானவை. அவற்றில் பூகர்ஷணம் முதற்கொண்டு ஆலயங்களை அமைக்கும் விதிகளையும் அர்ச்சாவதார விக்ரஹங்களின் லக்ஷணங்களையும், பிரதிஷ்டை, பிம்ப லக்ஷணம், தீக்ஷை, பகவதாராதனம் நித்ய நைமாத்திக உத்ஸவாதிகள் சாந்தியாதிகள் முதலியன, விவரமாக எழுதப்பட்டுள்ளன. இவ்வளவு மகிமை பொருந்தியது பாஞ்சராத்திர ஆகமம். இவ்வாகம முறைப்படி அர்ச்சிக்கப்படும் ஆலயங்கள், அங்குள்ள அர்ச்சகர்கள், அங்கே வழிபாடு செய்யும் பக்த கோடிகள் அனைவருக்கும் ஸ்ரீமன் நாராயணன் ஸகல சௌபாக்கியங்களையும் அளித்து அருளுகின்றான் என்பது சாஸ்திர ஸித்தம்.

# வைணவம் காட்டும் தத்துவம்

திருவிடைமருதூர் . S. நாராயணசுவாமி, M.A., M.Ed.,
ஆகமம் சிற்ப ஆராய்ச்சியாளர்

பிறவி எடுத்த பயன் யாதெனின் ஈஸ்வரனின் (விஷ்ணு) திருவடியை நினைந்து கடைசியில் அவனது திருவடியைப் பற்றுதலாம்.

நாம் பிறவி எடுத்தவுடன் அவனது திருவடியை எப்படிக் காண்பது, காண முற்பட்டாலும் காண இயலுமா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு விடையாக வைஷ்ண ஆழ்வார்கள் அனுபவித்த நற்காட்சியினையும், திருமாலின் எண்ணிலா அவதார மகிமைகளையும் தத்துவ விசேடங்களையும் தமது பாசுரங்களில் வைத்து பாடியுள்ளனர். ஆனால் அதனை நாம் மேலும் அறிய வைஷ்ணவ வியாக்யானங்களும் புராணங்களும் துணைசெய்கின்றன.எப்பொழுதும் சகல கல்யாண குணங்களுடன் இருப்பவன் பரமபுருஷன் ஆவான். எல்லாமும் அறிந்தவன் முதல் மூன்று ஆழ்வார்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முதலான இவர்கள் திருக்கோவிலூர் ஸ்ரீ உலகளந்த பெருமாளினை நினையுங்கால் எம்பெருமான் கருடத்தில் பவனிவந்து அருளினான் என்பது கண்கூடு.

மற்றைய சமயங்களைக் காட்டிலும் வைஷ்ணவ தத்துவம் சற்று மேலோங்கி உள்ளது. சங்கரர் அத்னவதம் என்றும் மாத்துவர் துவைதம் என்றும் கூறுகையில் ஸ்ரீ ராமானுஉஜர் விசேஷ அத்வைதம் என்று கூறுகிறார்.

வைஷ்ணவம் மூன்று பொருள்களை ஒப்புக்கொண்டுள்ளது. (சித், அசித், ஈஸ்வரன்) ஈஸ்வரனின் மூலம் வெளிபட்டும் கடைசியில் ஓடுக்கமாகவும் இருக்கிறது. உயிரும் பொருள்களும் அவனிடத்தில் வந்தன. பிறகு அவனிடத்தில் சேருகின்ற போது எவ்வித பேதமில்லாமல் இருக்கின்றன.

*விஷ்ணுவின் ரூபம் :*

வைஷ்ணவ சம்பிரதாயப்படி விஷ்ணுவை மூன்று நிலைகளில் வைத்து வழிபடுகின்றனர். (1) நிற்கின்ற நிலை(நின்றனன்), (2) அமர்ந்த நிலை(இருந்தனன்), (3) சயன நிலை(படுத்த நிலை).

இந்நிலைகளில் சிவாலயத்திற்கும் வைஷ்ண ஆலயத்திற்கும் உள்ள வேற்றுமைகளைக் காணலாம். சைவாலயங்களில் சிவபெருமான் குரு லிங்க சங்கம வடிவில் இருந்து கொண்டு மெய்யடியார்களுக்கு அருளுகின்றான், என்பது சைவர்கள் கோட்பாடகும்.

வைஷ்ணவர்கள் கூறுகின்ற போது அவனது 108 திருப்பதிகளில் பெருமான் நின்று, இருந்து, கிடந்து அருளுகின்றான் என்று போற்றித்துதிப்பர்

*பரமனின் திருவழகு :*

திருமால் ஆனவர் தமது நான்கு கரங்களில் சங்கும், சுடராழியும், கதையும் தாமரையுடன் கூடிய அபயஹஸ்தமும் கொண்டு தன் திருவடிகளை தாமரையிலே பதித்தும், நெற்றியில் திருமண் சாற்றியும் நவரத்தின கிரீடமும் கௌதுபமணி, துளசிமணி, முப்புரிநூல், லட்சுமி முதலானவைகளை திருமார்பில் தாங்கியும் உள்ளான். பட்டாடைகள் அணிந்து, "துஷ்டநிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம்" செய்து வருகின்றான்.

*திருமன் சிறப்பு*

வைஷ்ணவ அடியார்கள் தங்களது திருமேனியில் வைஷ்ணவர்ச் சின்னமான திருமண் தரிக்கினறனர். இதன் இரண்டு பகுதிகளான (வெண்மையான பகுதி) பெருமானின் பாதங்களாக உணரப்படுகிறது. நடுவில் தனித்து இருக்கும் திருச்சூரணம் (சிவப்பு) எம்பெருமானது திவ்ய ருபமாக தியானித்தல் ஆகும்.

### திருமண் உண்மை

உயிரும் உலகமும் எப்பொழுதும் இணைந்து இருக்கும். அது என்று, இந்த உலகம் பொய்யானது என்று உணருகின்றதோ அப்போது தனித்து இருக்கும் பெருமானின் திருவடியை அடையும்.

வைஷ்ணவ சித்தாந்திகள் கூறுமாறு போல சித், அசித், ஈஸ்வரன் என்ற உண்மையை உணர்த்த வந்ததுதான் திருமண் அணிதல். ஆகவே தத்வார்த்தமாக தங்கள் மேனியில் 12 இடங்களில் அணிகின்றனர்.

### தசாவதார இரகசியம்

உலகில் முதலில் தோன்றியது நீர் அதில் தோன்றியதுதான் (மீன்) மச்சாவதாரம்

2. நிலத்திலும் (தரை) தண்ணீரிலும் வாழும் ஒரு ஜீவன் தோன்றியதுதான் கூர்மாவதாரம்

3. நிலத்தினைத் தோண்டி வளங்களைக் காண்பித்த ஜீவன் வராக அவதாரம்

4. மிருகமுமில்லாமல் மனிதனுமில்லாமல் ஒரு பிறவி எடுத்தது நரசிம்ம அவதாரம்

5. உருவத்தைக் கண்டு எண்ணாமல் கீர்த்தியுடன் செயல்படும் ரூபம்தான் வாமனாவதாரம்

6. தந்தை சொல்லே தாரகமந்திரம் என்ற நோக்கால் எடுத்த அவதாரம் பரசுராம அவதாரம்

7. இப்படித்தான் வாழவேண்டும் என்றும் பொறுமை மற்றும் ஏகபத்தினி விரதனாக நிலைநாட்ட வந்த அவதாரம் இராமாவதராம்

8. மனிதன் தன் பலத்தினாலும் வல்லவனாக வாழலாம் என்பதை நிருபிக்க எடுத்தது பலராமஅவதாரம்

9. தர்மத்தை நிலைநாட்ட தன்யுக்தியின் திறத்தால் வந்தது கிருஷ்ணாவதாரம்

10. மனிதன் தன் சுகபோகங்கள் கருதி தனக்குத்தானே தனது அழிவை தேடிக் கொள்கிறான் என்பதனை உணர்த்த வந்தது கல்கி அவுதாரம்.

### பன்னிரு திருநாமங்கள்

வைஷ்ணவர்கள் தன் மேனியில் தரிக்கும் 12 திருமண்கள் (திருநாமம் இட்டுக் கொள்ளுதல்) பரந்தாமன் ஸ்ரீமந் நாராயணனது திவ்ய திருநாமங்களே ஆகும்.

1. ஓம் கேசவாய நம:"
2. ஓம் நாராயணாய நம
3. ஓம் மாதவாய நம
4. ஓம் கோவிந்தாய நம
5. ஓம் விஷ்ணுவேய நம
6. ஓம் மதுசூதனாய நம
7. ஓம் திரிவிக்ரமாய நம
8. ஓம் வாமநாய நம
9. ஓம் ஸ்ரீதராய நம
10. ஓம் ஹ்ருஷிகேசாய நம
11. ஓம் பத்மநாபாய நம
12. ஓம் தாமோதராய நம

### கருட சேவை

எம்பெருமான் கருட வாகனத்தில் அமர்ந்து காட்சியளிக்கின்றார். கருடன் நான்கு வேதங்களின் அம்சமாகும். கருடப் பறவையின் கண் கூர்மையானது. அதுபோல எம்பெருமானது நேத்திரங்கள் அதனின் கூர்மையாக இருந்து சிருஷ்டி முதலான ஐந்தொழில்களை செய்து வருகின்றான். எத்தனை தரிசனம் இருந்தாலும் கருட தரிசனத்திற்கு ஈடாகாது. (பஞ்சாங்கங்களில் கருடதரிசனம் பலன்களைக் காண்க)

### இரண்டு மார்க்கம்

தன்னை வந்து அண்டின அடியாருக்கும் அருளி, தன்னிடம் அண்டாத (நெருங்காத அல்லது எதிர்க்கும்) அன்பருக்கும் உணர்த்தி ஏற்றுக் கொள்ளுதல் தனிச்சிறப்பே ஆகும். இதனை உணர்த்த மார்கட மார்க்கம் (தாய்க்குரங்கும் தனது குட்டிக் குரங்கும் போல மார்ஜர மார்க்கம் பூனையும் தன்குட்டியும் போல) முதலான இரண்டு மார்க்கத்தினை ஏற்றுக் கொண்டு வைஷ்ணவர்கள் எம்பெருமானை சேவிக்கின்றனர்.

### உயர் காயத்ரியும் எட்டு எழுத்தும்

எம்பெருமானின் காயத்ரியான

"ஓம் நாராயணாய வித்மஹே!
வாஸுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணுப்ரசோதயாத்"

என்ற ஒன்றினாலும் அல்லது அஷ்டாட்சரமான ஓம் நமோ நாராயணாய நம: (எட்டு எழுத்து மந்திரம்) என்ற மந்திரத்தினாலும் நாம் நினைப்போமேயானால் நமக்கு இகபர சௌபாக்கியம் தந்து அருளுபவந் பரமபுருஷனாகிய ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே ஆவான்.

"பரமன் சேவடி பணிவோம்"

# அருள்ராகம் சொட்டுகின்ற ஆண்டவன்

டாக்டர். கிரு. பாண்டியன், பூம்புகார்க் கல்லூரி, மேலையூர்

'மன்னார்'யெனும் பெயர்விளங்க இப்பதி யிருந்து
மாட்சிமிகு பேரருளை வாரித் தரும்
நன்னகரின் ராஜகோபாலன் கமலத் தாயார்
நடமாடும் ஆலயத்தின் குடமு ழுக்கு
விண்ணவரும் விரும்பிவந்து வணங்கு கின்ற
வெற்றிமிகுத் திருநாளாம் இற்றை நாளில்
முன்னூறாண்டு முற்பட்ட பொலிவு கூட்டி
முழுமைபெற உதவியநம் தமிழக முதல்வரின்
நன்நெஞ்சிற்கு ஆயிரமாம் நன்றி! நன்றி!
நகர்மக்கள் சார்பாக சூட்டு கின்றேன்

காக்கும்பணி ஏற்றுள்ள கடவுள் திருமால்
கருணையினால் மாடுமேய்க்கும் கோலம் ஏற்று
ஆக்கமுள்ள எவ்வுயிரும் நானே என்னும்
அருமறையின் பொருள்விளங்க கோபா லனாய்
தேக்கமின்றி அருள்கொடையை வணங்கு கின்றான்
"தென்துவாரகை" எனச்சிறப்புறும் கோயில் நின்று
பூக்கமலத்தாயும் மென்மையுடன் பக்தர் கட்கு
புண்ணியத்தைத் தருகின்றாள் வேண்டு மட்டும்
மனம்கடந்து நிற்கின்ற ஆண்ட வனின்
மாபெரிய ஆலயத்தில் எல்லா பேரும்
இனம்கடந்து பகைமறந்து இறை அடியை
இரவுபகல் எந்நேரமும் வணங்கு கின்றார்
தனபாலன் தண்ணாட்சி எண்தி சையும்
தமிழ்ப்பாட்டின் கருத்தாக பரவி நின்று
தினம்தினமும் நகருக்கே பெருமை சேர்க்கும்
திருமகளின் பார்வையதும் வளமை யாக்கும்

பன்னிரண்டு ஆழ்வார்கள் பிரபந் தத்தில்
பரம்பொருளாம் நம்கோபாலன் இலையென் றாலும்
தென்னகத்து வைணவத்தின் சிகரம் போன்றோர்
தித்திக்கும் செந்தமிழாய் பாடிப் பாடி
மன்னகத்து மக்கள்யுய்ய கவிதை தந்தார்
மகிழ்ச்சியுடன் பசுமேய்க்கும் கோபா லனும்
அன்புடனே புல்லாங்குழல் இசையை மீட்டி
அருள்ராகம் சொட்டுகின்றான் திகட்டா வண்ணம்
மதில்அழகு மன்னைக்கு கோபா லனின்
மனம்அழகு, பவளவாயழகு, பூமா தேவி
சதிராடும் நடையழகு, கடைக்கண் ணழகு,
சங்கமிக்கும் பங்குனித்திருநாள் அழகுதேர் அழகு,
மதிமயக்கும் தெப்பம்அழகு அனைவ ருக்கும்
மாட்சிதரும் திருவடியழகு, அதனைப் பற்றி
நதிபோல நானிலத்தில் சிறந்து நிற்போம்,
"நமோநாரா யணனைஎன்றும் மனத்தில் தைப்போம்.

# வளமும் நலமும் நாளும் ஓங்கவே..!

## அறங்காவலர் குழு

பூவிரியும் காவிரியாள் தண்கருணைக் கண்காட்ட
காவிரியக் கன்னலொடு கதிர்செஞ் சாலியும்
கவினார் கமுகும் கதலியும் களித்தோங்கும்
புவிக்கணி செய்திடும் புண்ணியத் திருநகர்
வண்டலர் சோலை வளவயல் சூழும்
வண்துவ ராபதிவாழ் வண்ணமா முகிலே!
தூயனே! துளபத் தாமம் உவந்த
மாயனே! மைக் கண்ணான முகுந்தா!
ஆயனே! அமரர்கணம் தொழுது ஏத்தும்
ஏயசீர் மாலே! எழில்வளர் குன்றேக்
கோபிலர் கோப்பி ரணயர் உவந்த
கோபால! குவலயம் உய்யவே இராஜ
கோபாலன் ஆகியெழுந் தருளிய ஏந்தலே!
செந்தா மதுரத்தடாகம் ஈந்த பெருந்தேவி
செங்கமல வல்லி உவந்த மணிமார்ப!
எங்கணும் வளம்பொளியப் பொங்கருள் புரியும்
சங்குசக்ர தாரியே! சந்தான கிருஷ்ணா!
உன்னருள் மேவி உவந்து னந்தார்க்கு
இன்னருள் பொழியும் எழிலார் கோவே!
படம்விரி பாம்பனை பள்ளிகொள் பரமா!
குடமுழுக் குவிழாக் காணவே விழைந்தார்
அணிமா மதிர்சூழ் மன்னை மாமுகிலே!
பிணிக்கு மருந்தாய் பெருங்குணக் கடலே!
முழுதுணர் கொள்கை முத்தமிழ் வித்தவி
விழுமிய பணியால் வையகம் போற்றும்
புரட்சித் தலைவி பொன்மனச் செல்வி
முதல்வர் ஜெயலலிதா ஆட்சி தன்னில்
உள்ளிய யாவும் தெள்ளிதின் ஆற்றும்
மன்னைக்கு மகுடம் சேர்த்த மூவேந்தர்
வழிவந்த வள்ளியோன் வளர்தமிழ்ச் செம்மல்
திருப்பணி மேற்கொண்டு செவ்விதின் முடிக்க
திருவருள் புரிந்தனை செய்யவாய்க் கண்ண!
வளமும் நலமும் நாளும் ஓங்கவே!

கா. பிச்சைக்கண்ணு, தலைவர், அறங்காவலர் குழு

ஆர்.எஸ். கோபாலன், வி.கதிர்வேல்முனையதிரியர்,
ஆர்.என்.சந்தானராஜகோபாலன், கோ.சதாசிவம்.

அறங்காவலர்கள், அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில்,
இராஜமன்னார்குடி.

# சீர்மிகு திருப்பணி

**எஸ். மகாலிங்கம்**

**மேலாளர், (திருக்கோயில் பணியாளர்கள் சார்பாக)**

நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் மன்னார்குடி மன்னர் அழகு, மதில் அழகு என்னும் சிறப்புடையது. தமிழ்நாட்டில் வைணவத் திருக்கோவில்களில் மிகவும் தொன்மை வாய்ந்ததுமானதும், சோழவளநாட்டில் புகழ்மிக்கதுமான கலைக்கோயில் மன்னார்குடி ராஜகோபாலசாமி திருக்கோவில் ஆகும். கோயில் ஒரு பாதி, குளம் ஒருபாதி, மறையோர் மிகுந்தது மன்னார்குடி, மண்ணில் மிக்கது மன்னார்குடி என்றெல்லாம் புகழ்பாடும் இத் திருத்தலத்தில் வேண்டுபவர்க்கு வேண்டுபவன வழங்கும் வகையில் திருமால் திருஉள்ளம் மகிழ்ந்து ஸ்ரீராஜகோபாலனாய் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

தென்னகரத்து விண்ணகரமாக மன்னார்குடி மாநகரம் சிறப்புற்று 24 சந்நிதிகளையும், ஏழு பிரகாரங்களையும், பதினாறு கோபுரங்களையும், 18 விமானங்களையும் கொண்ட கலைக்கோயிலாக எழிலோடு மிளிருகிறது.

ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்கள் அதே பண்பாட்டுச் சிறப்போடு வைதீக முறையிலும் செவ்வனே நடைபெற்று சிறந்தோங்கி வருகின்றன. சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான இக்கலைக்கோயில் தற்சமயம் தமிழக அறநிலைய ஆட்சித்துறையினரால் சிறப்புடன் நிர்வகிக்கப்பெற்று வருகிறது.

நாள்தோறும் விழாக்கள் காணும் பெருமாளுக்கு அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பட்ட திருக்கோயில் பணியாளர்கள் ஊன் உறக்கம் இன்றி, தெய்வீகத் திருப்பணியை தம்பணியாகக் கொண்டு அல்லும் பகலும் அயராது கடமையை ஆற்றி வருகின்றனர். தமிழகத்தில் திருக்கோவில் தோன்றியபோதே பணியாளர்களும் தோன்றியுள்ளனர். ஹிந்து மதத்தின் பெருமையை சிறந்தோங்கிடச் செய்திடவும், ஆலயங்கள் நன்முறையில் பராமரித்திடவும் தமிழக அறநிலையத்துறையின் கீழ் பணியாற்றும் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பலநூறு ஆண்டுகளுக்கு பிறகு திருப்பணிகள் நிறைவுற்று குடமுழுக்கு விழா நிகழ்வுற உள்ளது. இத் திருப்பணி வேலைகளில் நெஞ்சைவிட்டு அகலாத சில நிகழ்வுகளை ஒன்றிரண்டு இக்கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

திருக்கோயிலின் மேலராஜகோபுரம் மிகவும் பழுதுபட்டு, சிதிலமடைந்து இன்று விழுமோ, நாளை விழுந்துவிடுமோ என்று பொதுமக்கள் அஞ்சி, அக்கோபுர வாசலைப் பயன்படுத்தாமல், ஆள் அரவமற்று என்ன செய்வது? எனக் கட்டிடவியல் வல்லுநர்களும் கலக்கமுற்ற வேளையில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தை முன்மாதிரியாகக் கொண்டு சிமெண்ட் பாலினை கோபுர விரிசல்கள் இடையில் இட்டு நிரப்பி, அடித்தளத்தை ஆழப்படுத்தி சிமெண்ட் பெல்ட் சுற்றி அமைத்து ஆயிரம் ஆண்டுகளானாலும் நிலைகுலையாமல் இருந்திடும் வண்ணம் பழைமை மாறாத வகையில், புதுப்பொலிவுடன் கட்டுமானப் பணிகள் செய்திருப்பது வியக்கத்தக்க சாதனையாகும்.

ஆயிரங்கால் மண்டபம், வல்லாளமகாராஜன் மண்டபம் எனப்பல்வேறு மண்டபங்கள், கருங்கல் தூண்கள், அவற்றிலுள்ள சிற்பங்கள், தூசு படிந்து, சுண்ணாம்பு போர்வையில் மங்கி மறைந்திருந்த வேளையில் புதுமையான தொழில்நுட்பம் கொண்டு சுத்திகரித்ததால், இன்று கொணர்ந்த புதிய கருங்கற்களால் செய்யப்பெற்ற கல்தூண்களோ! என காண்போர் வியக்கும் வண்ணம் கவின் மிகு கலைநயம் வெளிக் கொணர்ந்திருப்பது சிறப்புடையதாகும்.

மன்னர்கள் காலத்திற்குப் பிறகு இப்போதுதான் புதிதாக பலநூறு ஆண்டுகளுக்குப்பிறகு பூரணமாக, முழுமையான அளவில் திருப்பணி முடிந்து குடமுழுக்கு நடைபெற உள்ளது. இதுபோல் திருப்பணிகளும், கோயிலின் அன்றாட அலுவல்களும் ஆன இப்புனிதக் கைங்கரியத்தில், தெய்வீகத்திருப்பணியில், அருட்நிலையங்களை செம்மையுறச் செய்யும் அருட்பணியில் எங்களை நேரடியாக ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பு கிடைத்தமை நாங்கள் பெற்ற பெறற்கரிய பேறாகும். ஏனெனில் இவ்வாய்ப்பு எங்களுக்கு கிடைத்ததற்கு இறைவன் திருவருள் தானே காரணம்!

"அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று அருள் வாக்கிற்கு ஒப்ப ஆலயப்பணி செய்ய எங்களுக்கு வாய்ப்பு கிட்டியதற்கு அந்தப் பரந்தாமன் பொன்னார் திருவடிகளில் எங்களது நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

திருக்கோயில் செம்மையுறாதா? சீர்பெறாதா? என்று ஏங்கிடும் வேளையில் நினைத்துப் பார்க்கக்கூட இயலாத வகையில் தமிழக அரசு முன்னின்று, முழு மூச்சோடு உபயதாரர்களை உட்படுத்தி, இமாலயப் பணிகளை விரைவாக நிறைவேற்றியமைக்கும், கோயிலினை புதுப்பொலிவோடும், எழிலோடும் செய்திட அரும்பாடுபட்ட திருப்பணிச் செம்மல், உபயதாரர்கள் அனைவருக்கும் எங்கள் பணியாளர் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தந்திடக் கடமைப்பட்டுள்ளோம்.






சந்தான கோபாலன


(மன்னார்குடி)



வேதாந்த தேசிகன்



மணவாள மாமுனி



நம்மாழ்வார்



திருமலைநம்பி தாத்தாச்சாரியார்




சக்கரத்தாழ்வார்




கருடன்



கருடி





தேர் பவனி

**வி. திவாகரன்,** பி.எஸ்.சி.,
தாளாளர் - ஸ்ரீசெங்கமலத்தாயார் மகளிர் கல்லூரி
சுந்தரகோட்டை - மன்னார்குடி

## ஓம் நமோ பகவதே வாசுதேவாய நமக

நான்கு யுகம் கண்ட நம் ஸ்ரீ இராஜகோபால பரவாசுதேவப் பெருமானாக நம் இராஜ மன்னார்குடியில் ஸ்ரீ பிரம்மதேவனால் செண்பக மரத்தடியில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டதாக சான்றோர்கள் மூலம் அறிந்த நாம் வைஷ்ணவ திருத்தலங்களில் பிரம்ம பிரதிஷ்டை என்பது அதுவும் முதல் யுகமான கிருதயுகத்தில் என்பது நம் வாசுதேவபுரிக்கு கிடைத்த பெருமை. நம் மாவட்டத்தில் உள்ள திருவாஞ்சியம் (ஸ்ரீ வாஞ்சியம்) நான்கு யுகம் கண்ட சைவ திருத்தலமாகும். அங்கு கிருத யுகத்தில் அருள்மிகு வாஞ்சிநாதன் (ஸ்ரீ வாஞ்சிலிங்கம்) தீப்பிழம்பாகவும், திரேதாயுகத்தில் வைடூரியமாகவும், துவாபர யுகத்தில் பொன்மயமாகவும், கலியுகத்தில் கல்லாகவும் நமக்கு அருள்பாலிக்கின்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் தட்சண துவாரகையான நம் வாசுதேவபுரியிலோ ஸ்ரீ ராஜகோபாலன் நான்கு யுகங்களிலும் எந்தவித மாற்றமும் இல்லாமல் பரவாசுதேவ பெருமானாகவே என்றென்றும் ஒரே நிலையாக அருள்பாலிக்கின்றான். பாரதத்தில் அவன் ஆடிய அத்தனைத் திருவிளையாடல்களையும் இந்த புண்ணிய பூமியில் செய்து காட்டியிருக்கின்றான் என்றால் இந்த பூமியின் பெருமையை என்னவென்பது

ஸ்ரீ பிரம்மா முதற்கொண்டு யுகயுகமாக தேவர்களாலும் மாமுனிவர்களாலும் ஆழ்வார்களாலும், ஆச்சார்யர்களாலும், மாமன்னர்களாலும் வழிபாடு செய்யப்பட்டு தட்சினமதுவாரகை, செண்பகாரண்யம், வாசுதேவபுரி, இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம், குலோத்துங்கசோழர் விண்ணகரம், இராஜமன்னார்குடி என பலவாறு, பெயரிலேயே புகழ் சேர்ந்துள்ளதும், இராஜாதி ராஜ சோழன் முதலாம் குலோத்துங்க சோழன், நாயக்கர்கள் மற்றும் மராட்டிய மன்னர்களால் பரமாரிக்கப்பட்டும் வழிபாடு செய்யப்பட்டும் வந்த மன்னையம்பதிக்கும் இங்கு வாழும் சைவம், வைணவம் சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரமம் எனப்படும் இந்து மதங்களை தழுவி வாழும் அன்பர்களுக்கும் கிருத்துவம், முகமதியம், ஜைனம் பௌத்தம் சீக்கியம் போன்ற மதங்களைச் சார்ந்த சகோதரர்களுக்கும் உள்ளபடியே பெருமை சேர்க்கும் நன்நாள்தான் இந்த யுவ வருடத்தில் வரும் வைகாசி திங்கள் 25 ம் நாள். இன்று நம் உள்ளம் கவர் ஸ்ரீ செங்கமலத்தாயார் சமேத ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோவிலுக்கு குடமுழுக்கு விழா காண்கின்றோம்.

சுமார் 320 ஆண்டுகளுக்கு பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரான தலைமையில் இயங்கும் இந்த அரசின் கொடை உள்ளத்தாலும், ஆன்மீக பெருமக்களின் ஆசிர்வாதத்தாலும் இப்பகுதி வாழ் இளைஞர்கள், தாய்மார்கள், பெரியோர்கள், மற்றும் அனைத்து தரப்பினர்களின் பேரார்வத்தாலும் இத்திருப்பணி முழுமையாக நிறைவேறி நம் பகுதிக்கு மட்டுமல்லாமல், மாவட்டத்திற்கும், மாநிலத்திற்கும் நம் பாரத திருநாட்டிற்கும், ஏன்? இந்த உலகத்திற்கும் நாம் விரும்பும் அமைதி நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம், பெரும் புகழ் மற்றும் உலகத்தில் உள்ள அனைத்து இன்பங்களும் குறையவறக் கிட்டி எல்லா மதத்தினரும் சகோதர உணர்வோடு வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல நம் தாய் ஸ்ரீ செங்கமலத் தாயாரும் எந்தை ஸ்ரீ ராஜகோபாலனும் அருள்புரிய வேண்டும் என்று வேண்டியும் இத்திருநாளிலிருந்து நம் இராஜ மன்னார்குடி குபேரபுரியாக உலகளாவிய நகரங்களின் வரிசையில் சேர வேண்டும் என்றும் பிரார்த்தித்து முடிக்கின்றேன்.

நன்றி! வணக்கம்.

வி. திவாகரன்



சேனை முதலி - திருச்சேறை


(பல்லவர் காலம்)



நந்திவர்ம பல்லவன் போற்றிய
நந்திபுரத்து விஷ்ணு



குடைவறை சிற்பம்



மலையடிபட்டி விஷ்ணு கோயில்







தஞ்சை கலைக்கூடத்து
விஷ்ணு திருமேனிகள்

# UTHARA YOGI

## S. RANGANATHAN

*Om Namo Bhagavate Vasudevaya Nama*

Om Sri Aravindaya Nama

According to the manuscripts available, the Adi Uthara Yogi, the Scion of Nagai and the famous NAGAI JAPTHA was born in the Tamil year Virodhi, in the month of Purattasi, with the birth star Uthiram, corresponding to 27th September, 1829. He was born to Sri Rangachariar and Janaki Ammal in the hamlet SEMBODAI in Vedaranyam taluk of Thanjavur district.

He moved out of his birth place at a fairly young age and finally landed in the village Nagai, a small hamlet in Mannargudi- Vadeseri road. Something striking must have happened here, for the village atmosphere put an end to his nomadic life and made him settle down and finally become the Japtha. The Nagai village and surrounding areas were rich with Vedic scholars, comprising of the three branches of religious philosophies (Vaishnavaites, adwaithins, and dwaithins) prosecuting themselves in their own way of rites and rituals. Sri Vasudeva Iyangar following his own sedentary life of Japa yagnas must have attracted the attention of these scholars and very soon he congregated a close well knit circle of followers who were collectively called the Nagai Japthas. The group gave importance to a special form of Japa yagna comprising of the great Gayatri Mantra ingeriously weaving into the system the Ashtakshara Mantra also. The repetitive rendering of the Japas in groups and in individual levels rendered a remarkable symphony and harmony to their lives and very soon the Nagai Japthas became quite popular and the entire group of followers of the founder Japtha perfected the system of collective meditation accepting him as their veritable GURU. Soon they built a small fortress around the colony and an exclusive place for meditation--the KUSUMAKRAM--a raised platform like structure in an octagonal shape with a Pranava chakra inthe apex. His followers were struck at the extraordinary meditative prowess coupled with yogic powers that they verily started addressing him as Adi Uthara Yogi!

The founder Japtha was unmarried till his late years and probably on the request of his disciples consented to marry at fairly late age of 35 or so and had a daughter born. He must have attained siddhi (samadhi) shortly after marriage. Prior to his samadhi he had evidently left word with his disciples that they would in future follow a great Guru from North and when further pressed for proper identification, he had advised them that the great Yogi from North would also be known UTHARA YOGI, who will land in the South soon. Nearly four decades had passed and yet the Nagai Japthas were unable to seek their Master or locate him anywhere. Finally around 1908 Kodiyalam (K.V) Rangaswami Iyengar and his brother K.V.Srinivasa Iyengar identified in Sri Aurobindo clear similarities of thuoghts of their Guru. Sri Aurobindo also called himself Uthara Yogi and the famous Alipore trials involving Sri Aurobindo brought to light various striking similar ideas between the great souls and it was not difficult for the brothers to get in touch with Sri Aurobindo through their usual contacts, one among them was Sir Sharma of Mavoor,who was a great Kali Bhakta and who had spent a major part of his life in Calcutta. Probably Rangaswami Iyengar was one of the early few to have influenced Sri Aurobindo and to have rendered financial assistance to move to Pondicherry from Chanden Nagore.

A brief history of the Kodiyalam brothers:

K.V.Rangaswami Iyengar and his brother K.V.Srinivasa Iyengar were the two sons among the nine children of Sri Kodiyalam Vasudeva Iyengar. They were born in 1887 and 1889 respectively as the second and third in the line. Sri Vasudeva Iyengar of Kodiyalam was actually married to the youngest sister-in-law of the great Nagai Japtha, and he was an unknowing child of two or three when the Japtha attained samadhi. The only daughter of the Nagai Japtha was a few years older than Kodiyalam Vasudeva Iyengar. He was popularly known as the Zamindar of

If, as it would appear from Documents 2 and 13, Rangaswami Iyengar learned of Sri Aurobindo's coming to Pondicherry only some time after Sri Aurobindo's arrival, it would seem unlikely that Rangawami had anything to do with Sri Aurobindo's departure from Chandernagore.

kodiyalam and was very well known among the ruling British and represented the landed genre in the Council. He died around 1906 at a young age of 40 and his eldest son K.V.Rangaswami Iyengar was elected to the British State Council and also represented in the Imperial British Council of State in Delhi. Both the brothers were very close not only to the British administration, but also to the then National leaders like Balgangadhar Tilak, Khaparde, Gopalakrishna Gokhale, Lala Lajpat Rai, Mohammed Ali Jinnah, Poet Subrahmanya Bharathi and so on. Their closeness to the British was quite advantageous to them in rendering assistance to Sri Aurobindo during his secret travel to Pondicherry from Calcutta, as they were the least suspects in the British eyes. It was all the more advantageous to Sri Aurobindo also in making an easy passage to deep south from the turmoil of National and political extremism. Seeing him safe in the shores of Pondicherry in those days was not an easy task and to continue to assist him without culling the disfavour of the British authorities was an equally difficult task. Kodiyalam brothers' proximity to the British rulers must have been responsible in their continued help to Sri Aurobindo without creating any untoward suspicion in the British eyes. Practically all the visits of the brothers to Pondicherry to meet both Sri Aurobindo or Subrahmanya Bharathi were kept well guarded secrets that no proper records or even casual mentions are made in the history. That is why most of the details of their assistance or other forms of help were entirely shrouded in mystery. Even a brief visit and stay of Poet Subrahmanya Bharathi in 1918 to Nagai village as the guest of the Kodiyalam brothers (escaping the shrewd British intelligence) was mentioned in the biography of Poet Bharathi by V.Ramaswami (Va.Ra.). It is of interest to observe here that Va.Ra.himself was brought up through the munificence of K.V.Rangaswami Iyengar who was responible to educate him beyond his school days in S.P.G.College, Trichy. This early association with Kodiyalam family, paved an easy way for the Kodiyalam brothers to contact and convey messages to Sri Aurobindo through Va.Ra. Since K.V.R. was a member of the British Council of State in Delhi he was unable to frequently visit Pondicherry;however the early visit and meeting with Sri Aurobindo is clearly mentioned in the biography and his efforts to undertake the publication of the very first work of Sri Aurobindo christened YOGIC SADHAN was also mentioned. It is of particular interest to note here that the above work was authored by Sri Aurobindo as UTHARA YOGI. A letter written by Sri Aurobindo in April, 1916 to Sri K.R.Appadurai (brother-in-law of Poet Bharathi) show clearly that KVR continued to help Sri Aurobindo during times of need.

Sri K.V.Srinivasa Iyengar had vividly described his episodes of visits to Pondicherry between 1911 and till the time Sri Aurobindo restricted his public darshans and interviews. He was a frequent visitor to Pondicherry to represent his brother and he used to trek the distance between Cuddalore and Pondicherry by walk with his pet bull-dog, as though he was on casual walking errands and sneak into the prohibited territory with cash to be handed over to Sri Aurobindo. His description of the news flash on the Alipore trials involving Sri Aurobindo and the disclosure of certain details about his being a Yogin simply thrilled the brothers, who never lost an opportunity to get in touch with him and render all possible help. And their first meeting at Pondicherry, where they exchanged for the first time about their views and beliefs of the Uthara Yogi was an experience of their life time! It was the belief of the Kodiyalam family who were the followers of the Nagai Japtha, that Sri Aurobindo was actually the incarnation of the founder of the Nagai Japthas, the Adi Uthara Yogi. The Nagai clan who had been in search of their GURU for well over three decades must have been overjoyed at finally locating him in Sri Aurobindo!

# THE BHAKTI MOVEMENT from the Gita to Sri Ramanuja maharishi

By S.VASUDEVACHARIAR.
(Founder, Manager of Ramakrishna Mission Educational Institution)

Bhakti, the attitude of fervent devotion to God, may be found whenever men turn to the Supreme Being, in eagerness of desire, or in extremity of despair, away from themselves and away from their own reasonings; but the historical student has to be content with such references to this attitude as he can find in literature. A study of the Indian literature on the subject shows that, so far as the Vaishnavite movement is concerned, a few great names stand out; they are the Bhagavad Gita, the Bhagavata Purana, the works of the Alwars of Sri Ramanujacharya and of the founders of the later sects in North India who drew their inspirations from Sri Ramanujacharya, while on a line of its own, directing its devotion to God Siva rather than to Vishnu is the Saiva Bhakti movement, with its admirable hymns of the Thevaram and Thiruvachakam. I shall confine my attention to the first four and examine the important aspects revealed in each one of then.

## Sri Bhagavad Gita.

The Bhagavad Gita is, for all practical purposes, the source of the Bhakti movement in India. In it the highest Brahman known as Sriman Narayana is stated to be capable of being reached by Bhakti, and by Bhakti alone. This Bhakti is brought about by the proper performance of the actions prescribed tor one's caste and stage of life and by the knowledge of the individual Atma in its pure form and by desirelessness. Desirelessness is really an adjunct of what is called Karma-Yoga; but it is an important element in the Bhaktiyoga too, as the obtaining of release from samsara depends upon it. Three different kinds of Yoga are mentioned in the text: Karmayoga, Gnanayoga and Bhaktiyoga. Karmayoga consists in the daily performance of certain chosen good deeds as pure acts of worship, such as making pilgrimage to holy streams, doing tapas, the making of gifts, making offerings to devotees and the like. Gnanayoga consists in continuously meditating on the pure swarupam of the individual Atma with perfect control over the mind. Bhaktiyoga is to medidate, without break, on the Supreme Being with love fixed on Him alone. It manifests itself in the form of external puja to Him, placing flowers at His feet, prostrating before Him etc., Theso yogas are related to one another. In Karmayoga there should be present the thought of the individual Atma as well as love for the highest Atma. In Gnanayoga, the karma pertaining to the yogin's stage of life should be performed and there should also be the love for the highest Atma ever present in it. In Bhaktiyoga the other two yogas should also find a place. In the first six chapters of the Gita the Karmayoga and Gnanayoga are explained; they are the means of attaining enjoyment of the pure Atma. The ordinary course of performance of these yogas is Karmayoga first; then, when he has obtained disgust for the sensepleasures of objects and has secured perfect control over the mind, he should take to Gnanayoga; the practice of this yoga secures for the aspirant what is called Atma-sakshatkaram, that is the vision of the Self. It is also possible to attain Atma-sakshatkaram by the practice of Karmayoga direct without passing through Gnanayoga in its rigid form. This forms the subject matter of the first six chapters.

In the second section of six chapters, Bhaktiyoga brought about and perfected by Gnana and Karmayogas, is fully described. If this Bhaktiyoga is performed in the way in which its performance is enjoined, the aspirant reaches finally the highest goal. Deep devotion to God is the chief element in this yoga. 'On Me fix thy mind; be devoted to Me; prostrate thyself before Me; harmonised thus in Me, thou shalt come unto Me' says the closing verse of this chapter.

The superior merit of the Bhakta, otherwise technically known as 'Gnani', who knows God and loves Him without expectation of any return, is proclaimed is the following verses:

'The same am I to all beings; there is none hateful to Me. Those who worship Me with devotion, they are in Me, and I also in them.'

'Even if the most sinful worship Me, provided the worship is with undivided heart, he too must be accounted as highly righteous, for he has rightly resolved.'

'Those who take refuge with Me, though of the womb of sin, they also tread the highest path.'

'So worship thou Me. Fix thy mind on Me; be devoted to Me; do sacrifice for Me; prostrate thyself before Me; harmonised thus in Me, thou shalt surely come unto Me.'

This is what the Gita teaches. Yet the orthodox commentators belonging to the three higher castes have set these declarations at nought and have made a monopoly of Bhaktiyoga, keeping certain class of people outside its pale. Although these pronouncements of the Gita are for these commentators as authoritative as any other pronouncement found in the Sastras, yet they have chosen to strain the original and put a different interpretation on the passage. In fact both Mimamsas have constructed what they call Apasudra-adhikaranam wherein they demonstrate that none but those of the three higher castes are entitled to recite the Vedas or undertake the study of the Upanishads. Do these verses warrant such a conclusion? This is a matter for furious thinking.

### Sri Bhagavatam

Let us now turn to the next land-mark in our path. Bhagavata Purana is the greatest and most popular of all the Puranas. Its main theme is the importance of Vishnu Bhakti, especially in God's manifestation as Sri Krishna. It emphasises the value of bhakti and virakti. Sage Vyasa who had edited the Vedas and had composed the Mahabharata did not feel quite happy with what he had done. He was told by sage Narada that he would attain peace of mind if he composed a work dwelling upon the incarnation of Vishnu and singing His glory. Sage Vyasa then began the composition of this Purana; and after finishing the work he taught it to his son Sri Suka, who recited it to King Parikshit, the grandson of the Pandavas. It has acquired a wonderful hold upon the minds of the Hindus. The secret of the appeal is in the fact that we find in it the highest truths of religion and philosophy expounded in appropriate language. The verse has a peculiar charm of its own. There is solemity and grandeur in the devotional songs, which attract the mind to the high theme. While the western mind prefers to contemplate God in the role of lawgiver, the Hindu mind prefers to dwell upon Him in His incarnation as a child, a son, a lover, a hero, a guide and counsellor. Herein lies the secret of the special charm of the Sri Krishna Avatara. The whole work is an inspiring call to heart purity. The vision of God, the realisation of His spiritual presence, the mystic sense of his nearness, His touch, His inspiration, His ministry of grace and sanctity to the moral nature, the consciousness of fellowship with Him as with a friend, the feeling of His being at our side, of having rest in His love,the new interpretation which this illuminating experience gives to all things and the transforming effect of it in the life-all this is depicted in the work in a rush of glowing feeling and musical language which find no parallel anywhere else in the whole range of our literature. To listen to the expounding of the Purana inspires the divine longing that coincides with God's knowledge of our deepest necessities. The results are deep spiritual emotions which words cannot sathom, feelings which struggle for articulation and deep- seated yearnings that cannot be clothed in the symbols of languages.

Certain critics of the modern times have found fault with the Purana that it shares the defects of Puranas generally. They say that, besides containing stories which are incredible, they embody doctrines which are philosophically divergent. As an example, they point to a statement which occurs in the seventh skandha (where sage Narada attempts to explain how Sisupala who was a disbeliever in krishna and who used to revile him was given salvation) which says that what secures moksham is a more concentration in God, not necessarily concentration with a feeling of love. One can secure mok sham whatevar be the feeling, whether it be love or fear or hatred, provided the remembrance of the object be incessant. The popular belief that a caterpillar being stung incessantly by the bee becomes a bee itself, is cited as an illustration of the principle enunciated. Not stopping with this the sage goes a step further and

declares that hatred operates more expeditiously than love. If this explanation is accepted as literally true, it will contradict not only what is said elsewhere in the work, but also what Upanishads and Bhagavad Gita proclaim. The greatest truth which Bhagavatam emphasises again and again is the attainment of salvation by love only. The highest conception of Bhakti as explained in the Upanishads is a loving devotion to God. How then can it be said that without love God's grace can be secured? Again in the 10th skandha, the question is raised in connection with the conferring of moksham on Gopis; and a similar explanation is offered. It is for us who are not prepared to accept that the Purana has faults in it to look into the matter closely and explain the intention of the author. The truth seems to be this. Among religious teachers there is a tendency to emphasise the value of a particular truth by having recourse to a rhetorical exaggeration. For example in the Upanishads sage Narada is reported to have said, 'I know the Vedas, the Itihasas and the Puranas; with all this I know mantras only; I have not known the Atma;' This declaration of the knowledge of Atma not being attainable through Vedas and Puranas has no other purpose than to glorify the knowledge of the Brahman which he wanted to be expounded. Analagous to this is the case of sage Sandilya's objection to the Vedas. Sandilya says I have read the Vedas together with all the various auxiliary branches of knowledge. But in none of them can I see a clear indication of the way to blessedness, whereby I might reach perfection. These are purely rhetorical passages.'

## The Divya Prabandham

The next name which stands out in the Bhakti movement is the work of the Alwars. In the Prabandham which they have composed, what is conspicuous is a yearning after intimate fellowship with God. In comparison with this fellowship the best that the world can offer is valueless. Wealth, sexual indulgence, the exercise of kingly authority, the bliss of Swarga itself are all treated with contempt. The nature of the personal relationship sought is beyond comprehension. The Alwars seek to express their permanent hunger of the heart for Him under the most intimate terms known to human relationship. Figures drawn from the sex are given to illustrate these extra-ordinary exhilaration. To those whose hearts are not extended to divine love, this may appear to be repugnant . They forget that God is love and love is that which not merely creates and, after brief caress, repudiates and discards; but which sustains, redeems, perfects, and perpetuates. It is therefore natural that when feeling becomes very deep it should find expression in this form. In this connection I am reminded of an anecdote. Saint Nanjiyar had a disciple who expressed a desire to be taught the Prabandam Tiruvaymozhi. The master began his series. The disciple listened to the discourse withrapt attention as long as the master confined himself to discourse on God in his aspect of the exalted and sublime; but, when the subject got changed and the discourse began to speak of love to God by illustration taken from sex relationship, the disciple turned away from it thinking that the mode of treating the subject was a shock to good taste and he forthwith left the place murmuring that the discourse had assumed the character of a sexualist's love-conversation. Nanjiyar exclaimed, 'What an unfortunate man is he that he should have failed to realise the deep hidden sense of our altered discourse. The fact of the matter is that true roligion is more of the heart than of the head. The relationship with God by means of loving devotion is the only way to escape from the ills of life. The goal that is sought is the normal human longing for the relation of conscious love and trust between man and God. The reality and eternity of love can alone save these impassioned hymns from being a mockery.

## Sri Ramanujacharya

The next name which stands out in the Bhakti movement is the name of Sri Ramanujacharya. In him, the movement has found a competent philosophical exponent, who reconciles in thought the conception of the impersonal Absolute and the gracious helper of man. He succeeded in establishing the Visishtadvaita philosophy which is the strongest alternative to the philosophy of Sri Sankaracharya, the philosophy of monism that enjoys the reputation of orthodoxy. From Ramanujacharya, as from a reservoir into which earlier streams had poured, the many subsequent Bhakti movements branch out again, some with more of

emotion, some with less. But all are alike in accepting as substantially true his theory of relation between God and man and the universe. He is not really the 'Morning star' of the Bhakti movement; but in him, Bhakti shines in full splendour of a great philosophical exposition. His saintly and exemplary life and his adoption of the Pancharatra cult contributed largely to his being respected by the community in general and followed by an ever increasing group of ardent followers.

Ramanuja's Sri Bhashyam is remarkable for the lengthy discussions on various topics, by which his actual commentary on the Sutras is written. In this disposition he treats various controversial points and expounds fully his differencees of view from those of Sri Sankaracharya. One of the most important topics discussed therein is the question relating to the means which secures release from the bondage of samsara. According to Sri Sankaracharya, the Vedanta Sastras aim is to destory completely that wrong knowledge which is the root of all pain, birth, old age, death and other evils of that kind. This wrong knowledge consists in supposing that in the universe there is plurality of existence. And to that end, the Sastra endeavours to establish the knowledge of the unity of the Self. That which can put an end to this nescience is the knowledge of Brahman which is pure intelligence and antagonistic to all plurality. Such knowledge of unity cannot proceed from performance of works. Sacrifices and works of that kind are helpful only so far as they contribute towards the rise of a desire for that knowledge; they have no influence in the production of fruit, i,e. knowledge of unity itself.

The process is therefore as follows: As the mind of a man has been cleaned of all impurities through works performed in many preceding states of existence, without a view to special forms of reward, there arises in him the desire for knowledge and thereupon through knowledge itself so originated from scriptural texts, nescience comes to an end.

Meditation too is, according to Sri Sankaracharya helpful only in this manner. It helps towards cognising the sense of these Vedic texts. Meditation means the constant holding of that sense before one's mind so as to dispel thereby the antagonistic beginningless imagination of plurality. In the case of him who through meditation has dispelled the entire imagination of plurality the knowledge of the sense of the Vedantic text puts an end to nescience.

To sum up: the root of bondage is the unreal view of plurality. This unreal view has its root in nescience. Knowledge and knowledge alone originated by texts outs the bondage short. Neither work nor meditation is of help towards the release.

To this argumentation, Sri Ramanujacharia replies: 'we admit that release consists only in the cessation of nescience and that this cessation results entirely from the knowledge of Brahman. But a distinction has here to be made regarding the nature of this knowledge which the Vedantic texts aim at enjoining for the purpose of putting an end to nescience. Is it merely the knowledge of sentences which originates from the sentences themselves? Or is it knowledge in the form of meditation which has the knowledge just referred to as its antecedent? It cannot be the knowledge of the former kind; for such knowledge springs from the mere apprehension of the sentence apart from any special injunction; and moreover it is not observed that nescience ceases as soon as the sentence knowledge is formed. Hence the conclusion is that the knowledge which the Vedantic texts aim at inculcating is a knowledge other than the mere knowledge of the sense sentences.

With this agree scriptural texts such as 'Having known it, let him practise meditation.'(Brih.4.21.)

That the knowledge intended to be enjoined as the means to final release is of the nature of meditation, we conclude from the circumstance that the terms'knowing' and 'meditating' are seen to be used in place of each other in the earlier and the later parts of Vedic texts.

'Let a man meditate in kind as Brahman' and 'He who knows this shines through his fame.'(Katha IV.18.1)

'He does not know Him, for he is not complete' and 'let man meditate on him as the self.'(Brih.I.1.7.)

Meditation means steady remembrance i.e. a continuity of steady remembrance, uninterrupted like

the How of oil. Such remembrance is of the character of intuition. This being so, we conclude, that the text 'The Self is to be seen' teaches that meditation has the character of intuition. And this is due to the element of imagination (representation) which prevails in it.

With reference to remembrance, which thus acquires the character of intuition and is the means to final release, scripture makes a further determination in the passage, 'Self cannot be gained by the study of Vedas, nor by thoughts, nor by hearing. Whom the self chooses, by him it may be gained.' This text says at first that mere "hearing" etc. do not suffice to gain the self, and then declares "whom the Self chooses by him it may be gained. Now a chosen one means a most beloved person--the relation being that he by whom that self is held most dear is most dear to the Self. Then the Lord himself endeavours that this most beloved person should gain the Self. Steady remembrance of the kind is according to Sri Ramanuja, designated by the word 'devotion' or 'Bhakti'.

For reasons which ordinary man cannot understand, only those that are born in the three higher castes, Brahmins. Kshatriyas and Vaisyas are considered eligible to practise this Bhakti Yoga. The question naturlly arises then, are those that are born in the other castes to be eternally damned? The orthodox Hindu maintains that Bhakti-yoga is effective in securing release, only when the knowledge which is the antecedent to it is obtained by a direct study of the Upanishads and that knowledge, though obtained in full otherwise (from a study of the Itihasas and Puranas) is not of any use for securing salvation. The members of the three higher castes thus make a monopoly of salvation and keep Sudras and the lower orders outside its pale. In the face of this strict monopoly, it is to the credit of Vaishnavism that it has brought the lower classes into its sold and has extended to tham the privilege of knowing God and of attaining liberation.

Among the agencies employed as effecting this silent revolution, one is the doctrine of Prapatti or surrender to God, which is conceived as demanding no caste status or educational qualification. This is peculiar to the Ramanuja School and is considerably elaborated by the religious teachers who succeeded him. This doctrine is considered to have some basis in the Upanishads; but the basis is slight; nor is it explicitly mentioned in the Sri Bhashya by Ramanuja. It is practically founded on the Pancha-ratra. It is however said to have been accepted and brought into practice by the Saint Satagopa himself and by Nathamuni after him. Some of the details of the doctrine may be mentioned here.

Prapatti, as has already been said is lovingly surrendering oneself to God. In other words, it is the means of unreservedly placing oneself in God's hands and ridding oneself of all notions of securing salvation by self-effort. It is the attitude of mind entirely resigned to His will. Bhaktiyoga, besides demanding a direct study of the Upanishads and obtaining knowledge of God therefrom, is also a means that tries the utmost strength and capacity of mortals. To those that are weak, ignorant, impatient of delay and are kept out by Sastras this path of Prapatti is accessible. The mental act 'I trust thee, O Lord'- once performed is done once for all, for as soon as it is done, it is accepted by Him. Only it must be done with perfect trust in God; whatever series of good deeds which the Prapanna may do thereafter are no more means to secure an end, but they acquire the character of being ends in themselves, in as much as all these acts become but acts or worship to Him and devoid therefore of any selfish motive. The soul does the act with the clear knowledge of its own intrinsic position as liege of the Lord whom it has to serve. This is the true relation between soul and God and from it there naturally follows the recognition of the true means as no other than surrendcring faith or extreme loving trust. Surrender of one's self is sacrificing oneself as oblation at God's feet. The self- assertion of Bhakti has given place to the self negation of Prapatti. The uplift to sublime independence is the fruit of complete surrender to the Supreme Being.

The contrast between Bhakti and Prapatti may be shown as follows. In Bhakti, incessant training of the will to devotional meditation on God, demanding much individual efforts, stricitly in accodance with prescribed modes, is required; whereas in Prapatti, no individual incessant efforts is required; the aspirant in whole hearted devotion unreservedly throws himself

once for all at the feet of God. Bhakti is attended with risks inasmuchas when lacking any of the conditions imposed upon the aspirant, he renders himself-liable to be rejected by God; whereas in Prapatti the aspirant so unconditionally surrenders himself to God that God, after giving protection does not cast him away. Bhakti is a slender stream of love proceeding from puny efforts, whereas Prapatti is a mighty folw of grace pouring down from God, the creator, nothing withstanding the rush of the torrent. In Bhakti we endeavour to qualify ourselves for salvation; in Prapatti we pray to God that He by His grace give us the diploma and thus make us equivalent to qualified people. For when we surrender ourselves we plead our utter unability to accomplish any of the means prescribed for salvation and pray that He himself be our means as well as our goal. Is there anything which God cannot or will not grant when prayed for?

'If I ask Him to receive me, will He say nay?
Not till earth and not till Heaven pass away.'

Ramanuja has not made any mention of Prapatti in his Sri Bhashyam, nor has he interpreted the Charama Sloka, the last stanza of the Gita, as inculcating Prapatti. There is a tradition connected with this. Asked the reason for this by one of his disciples, Ramanuja said that the doctrine of Grace was too sacred to be exposed to the profane gaze of all mankind without reference to their preparedness to receive the same; that it could be effective only when imparted to those who were in heart sufficiently sincere to act upon this doctrine. Ramanuja's intention in thus keeping this Prapatti hidden seems to be that without the change of heart leading to entire sacrifice for God, Prapatti should but land the soul in moral turpitude and spiritual bewilderment. Either one must sedulously strive to advance towards God with all the ethical preliminary involved in Bhakti, or by the change of his heart have full scope for the operations of God's free grace. However, what Ramanuja hid in the Sri Bhashya he disclosed in his work called Saranagata gadyam.

Among the conditions which Prapatti requires are these two which are most hard to attain viz. (1) an utter sense of helplessness and (2)a complete trust in God that He will save if we pray to Him for safety. Is this not much needed for free grace? A sailor in the wide ocean is found to trust himself to a bit of wood; must not man have some such confidence in God as a means to salvation when he means to launch into that bigger and endless Divine Ocean? When a disciple who realised the reality of this commodity, was told that the path of Prapatti was easier of accomplishment as it is only a momentary act, he cried out 'You place me in the predicament of a tenant who was called by his landlord to offer as his rent a gallon of oil in lieu of a bag of the oil-seed.'

How terrible is our ignorance of things, We know not who has sent us into this world, nor what the world is, nor what we ourselves are. We know not what our body is, nor our sense, nor our soul. We find ourselves fixed in one corner of this vast expanse without knowing why we are set in this place rather than elsewhere. As we know not whence we came so we know not whither to go. Such is our state, full of weakness and uncertainty. Let us therefore surrender ourselves to the will of Him who has made us all and pass the days of our life without thought of searching for what must happen to us. Let us be devoted to Him in good earnest. Let us cast everything besides, out of our hearts. He would possess them alone. If we do this, we shall soon see that change wrought is us which we aspire after. This is what Sri Ramanuja preaches.

# A Poetic Drama on VIJAYARAGHAVA NAYAK

Dr. PREMA NANDAKUMAR

For more than three centuries Telugu letters flourished happily in the city of Thanjavur and its environs. The Nayak kings (1532-1673) and the Maharatta rulers (1676-1855) were great lovers of arts and literature. Telugu was the prime beneficiary of their patronage. This stream of Telugu literature is widely known at Thanjapurandhra Vangmayamu. Raghunatha Nayak (1614-1633) is often compared to Krishnadeva Raya Both were kings, brave warriors, great authors and patrons of literature, Writers like Chemakura Venkata Kavi and Krishnadhvani adorned the Nayak's court. This Vijayaraghava Nayak (1633-1673) was equally famous. What distinguishes the Nayak reign is the large number of women writers who illumined the spaces of Telugu literature with narratives, epics and poetic plays. Unfortunately most of the work of these ladies Ramabhadramba, Madhuravani, Krishnajamma among others are lost. The sole exception is the output of Pasupuleti Rangajamma whose narrative poems Mannarudasa Vilasamu and Usha Parjnayamu and the play Mannarudasa Vilasamu have come down to us. Of these, only the play has been published so far. The three works together form a brilliant page, in Telugu literature.

Pasupuleti Rangajamma was a poetess in the court of Vijayaraghava Nayak. Usha Parinayamu a largely autobiographical work speaks of her expertise in several languages and her close relationship with the ruler of Thanjavur. She was also a well-known sataavadhaani. and has herself stated that it was the grace of Rajagopala, the presiding deity of Mannargudi, that inspired her to write poetry. She was honoured with kanakaabhisheka (shower of gold coins) by Vijayaraghava Nayak.

The drama Mannarudasa Vilasamu is about Vijayaraghava Nayak marrying the Princess Kantimati. The work is a source book for research on the socio-religious mores prevailing in South India in the 17th century. The deep influence of Vaishnavism on the people's psyche is made clear by Rangajamma who expertly uses the appropriate paribhasha for the activities inside the temple and Rajagopala located in the legendary Champakaranya Kshetra. Divided into five Aswasas, the drama opens with a moving prayer to Chengamalambika and Mannanar (Rajagopal) for guarding the dynasty of Vijayaraghava. Rangajamma also offers her worshipful salutations to the royal preceptor.

*"I salute the lotus feet of Srinivasa*
*Thathacharya, Performer of a hundred*
*sacrifices, and who is the father, preceptor,*
*and lord for king Vijaya raghava."*

A variety of verse forms and prose are employed to describe the glorious court of Vijayaraghava Nayak where reigns the Goddess of Prosperity. The preceptor sits on the left side of the king of a golden seat and expounds the significance of Ramayana, Mahabharata and Bhagavata. There are also ladies bearing lovely names like Ambujavalli, Kasthuri, Mohanamoorthamba and Madanarekhamba. Each lady is proficient in some art or other. The courtiers view with one another in exhibiting their talents, Suddenly the king addresses Rangaji daughter of Pasupuleti Venkatendra with words of admiration regarding her superlative ability to compose verses in different metres. Then he tells her; you must compose a poem based on Sringara rasa and dedicate it to Rajagopala with an account of the Lord's Phalguna festival.

Rangaji is pleased with the command and immediately approaches Srinivasa Thathacharya for his blessings. The royal preceptor gives an account of the Nayak geneology with special emphasis on their service to Vaishnavism. For instance Raghunatha Nayak who built the temple tower at Mannargudi, presented a coat of sapphires and a crown to Ranganatha at Srirangam and arranged for the daily worship at Srimushnam

temple. Vijayaraghava has been following in his father's footsteps in every way and has made Dakshina Dwaraka (Mannargudi) brighter than the original Dwaraka. The Nayak is also a creative writer and has recited the Ramayana a thousand times and performed a hundred sacrifices with his help (maacheta maghasahasrambuavani seyinchunatti mahatmudu). It is a privilege to be directed by him to compose a prabhandha.

Pasupuleti Rangajamma opens the story with a scintillating description of Thanjavur. The courtesans who excel in the fine arts, the four-caste division that keeps the social fabric in tact, and the healthy ranks of army divisions form the subject of this scene. Vijayaraghava, the hero of the drama, decides to perform the Phalguna festival at Mannargudi. The second Aswasa ushers in Spring, as Vijayaraghava proceeds to Mannargudi. Rangajamma's burst of musical phrases is a delight to the ear. Bejewlled, Vijayaraghava, is every inch a king! He has darshan of the Supreme King wielding a golden staff (kanaka vetramu) wearing a diamond crown (Vairamudi).

As the king stands in front of the deity, he is seen by Kantimati who has also come to worship in the temple. It is love at first sight. Rangajamma brings into play all the time-tested devices of classical Indian aesthesis to project the intense desire of the princess to wed the Nayak. Her friends take her to the garden and they indulge in water sport. The worship of Kama (soulfully described in Tamil classics like Perunkathai and Jeevaka Chintamani) follows. Kantimati's maid Vilasini goes to Vijayaraghava as love's ambassadress. The Nayak who is already in love with Kanthimati agrees with pleasure. The royal preceptor explains to the Nayak's household some details about the past life of the King as Krishna in Dwapara yuga. The same Lord is now born as Vijayaraghava to fulfil a boon granted to the Moon earlier. Srinivasa Thathacharya then proceeds to Kantimati's father. Rajachandra asks for her hand. But Rajachandra is reluctant as the Nayak has several wives alteady. Kanthimathi is such an innocent babe! After all, kings are always after novelty, and Kantimati may be sidelined ere along. However the preceptor convinces him about the sincerity and innate nobility of the Nayak. They decide upon a date soon after the conclusion of the Chariot festival (Tirutteru tirunaallu). The Nayak immediately offers to Rajagopala several jewels like a coat of diamonds vajrangi. A crown of emeralds, bracelets made of the finest pearls a necklace of diamonds, a star-clustre chain a waist band of lapis lazuli and beautiful anklets for the festival.

The final Aswasa contains a grand account of the Nayak's wedding. Srinivasa Thathacharya is the go-between in finalising the programme,and no item is forgotten. Thanjavur is decked out with auspicious spots lights and flags. The streets are thick with scented(sambrani) smoke. A bevy of maidens helps the Nayak bathe in rose water apply scented oil of Champak and javvad on his frame and enrobe him in silken garments. The Thathacharya invokes the Lord and Lakshmi into the decorated pots containing holy water and worships them with flowersw and other holy offerings. Then he binds the kankana on the Nayak's wrist to signal the beginning of the ceremony. The groam's party reaches Rajachandra's palace in time . The happy union is achieved(talambraalu, sapthapadi) amid chanting of Vedic hymns and auspicious music.

Now comes a super-menu designed for the royal wedding in one long breathless sentence. In these days of soaring prices and shrinking appetites. Rangajamma's gastrenomic fantasia affords a lovely Aerial s feast. Gold-sheened plaintain leaves, silver tumblers jewel-studded cups (donnelu) Vijayraghava is given an emerald seat and all his relatives and friends are also given noble seats. Rose water is poured over their hands. The servers come in holding golden pots and ladies pasindi chattulu chattuvambulu. A variety of pulses, pure ghee, large appalams, vegetables cooked with innumerable spices, sharp-edged cucumber'aromatic hen's eggs, tender greens, pungent greens, stuffed Roller birds and Minivets; shapely sparrows, pigeons, lapwings, ducks and a variety of hens and peacocks cooked with tasty spices freshwater fish, prawn roasted with fresh vegetables, steamed fish, generous portions of pork (varaaha maamsa khandambulu) too.


There also unrivalled atirasamulu appamulu, penilu, garivadalu, sweet puddings, grape juice, several kinds of fruits - And each item is served in pairs. The

guests wash it all down glasses of milk and fan themselves as the full mean has made them sweet, the wedding concludes with a ritual conducted by an auspicious matron (nagapasaani) and the recitation of Goda Devi's Nachiar Tirumozhi by the Thathacharya. The Nayak goes to Mannargudi, worships Rajagopala and reenters Thanjavur to continue his reign marked by benevolence.

There are several points of historical interest in Rangajamma's work. Apart from the scintillating poetry (devotional erotic). The interweaving of Tamil expressions like 'adiyen' (at your service) Tiruvandikappu (the waving of lights to a deity in the evening) and 'serthi' (union) make the work memorable from the angle of Vaishnavism. The active presence of Srinivasa Thathacharya indicates valuable historical evidence. History tells us that Lakshmi Kumara Thatha Desika (b. 1571 AD) grandson of a Srinivasa Thatha Desika of Kumbakonam went to Kancheepuram in the late sixteenth century and established himself as a green scholar of Ramanuja Darsana. The kings of Vijayanagar invited him to become their royal preceptor and his successors received the honorific. Rayaguru (preceptor of the Rayas) Lakshmi Kumara conducted renovaton work in numerous temples dedicated to Vishnu and built the stone steps leading up the Tirupati Hill. The Rayas gave him unstinted support in his spiritual ministry.

The highly revered Srinivasa Thatthacharya of Rangajamma's work was probably a son of Lakshmi Kumara In spite of the decline of the Vijayanagar Empire, the Nayaks of Thanjavur (who were originally in the service of the Rayas) continued to have the Rayaguru line as their acharya peetham. Mannarudasa Vilasamu shows the Thathacharya wielding the spiritual sceptre with a becoming sense of responsibility. His influence no doubt inspired the Nayak to renovate temples and arrange for the proper conduct of worship in these temples dedicated to Vishnu. The Nayak also wrote a drama on the famous legend of Vipranarayana. It is significant that the image of a Thatnacharya who performed one hundred yagnas has been installed in a niche facing the Thayar sannidhi in the Sarangapani temple at Kumbakonam.

The detailed descriptions of temple festivities in Mannargudi references to Vijayaraghava's building most of the temple as it stands today (among the earlier builders were Kulottunga I and Rajaraja Chola) and the dazzling poetry of Pasupuleti Rangajamma make this poetic play a unique experience when adventuring in the Telugu literature of the Southern School.



# MANNARGUDI - A CENTRE OF PILGRIMAGE

[N. Srinivasachariar M.A., L.T., Dip. in Geogrophy, President Sri Ramakrishna Mission Asramam of the schools in Thyagarayanagar, Madras]

The Sublime Divine Sport of Lord Rajagopala and its significance

one of the holiest centres of pilgrimage in Tanjore District is Raja Mannargudi known as Dhakshina Dwaraka and as Champaka Aranya Kshetra, because the region was once rank with the luxuriant growth of the Champaka flowers, perfuming the atmosphere, offusing an entrancing fragrance of sweetness and delight. The region, skirted by the river Pamini, a distributary of the Cauveri, is dotted with a number of tanks, most of them boaring significant names.

The greatest of these tanks, the Haridranathi, is a deep expansive sheet of water, where the imposing annual floating festival takes place, in the month of Aani, the other noteworthy tanks being the Krishna Tirta, the Gopralaya, the Gajendra Moksha, Rukmini Tirta, Thiruparkadal, the Gopinatha tank and the like, where devotees bathe on specific days.

Mannargudi as a cultural centre had two great patasalas engaged in the teaching of Sanskrit and the Sastras under the control of the pious and philanthrephic Mudaliars deeply interested in the prapagation of our culture. There were Veda Patasala as well one of them being, the Annaswami Iyengar Veda Patasala under the supervision of Sri. A. Srinivasa Iyengar, a devoted philanthrephic gentleman of the place.

Besides the regular teaching of the Vedas, a Vidwath Sadas is annually conducted during the great festival, where learned Pandits and scholars meet held discussions and disputations in the Sastras and also deliver discourses. It was an enlightening and entertaining sight, as one observed flow of the arguments and the intellectual skill reflecting the depth of learning of the scholars.

There were also two important Educational institutions, The Native High School, where Maharishi Vasudevachariar Swami had his early education in about 1880, and Findlay college run by the Wesley Mission. These institutions had produced men of light and leading, who have occupied high positions in the State and at the Centre and in other fields as well, with credit and distinction.

But the Cynosere of all eyes is the imposing sacred temple of Lord Rajagopala and His consort Sengamalavalli Thayar, whose enchanting radiant form described in a pictureoques manner by the deeply devoted Dikshitars, and enchanced by their inspiring Namavalis of the Deities chanted in resounding sonorous tone, caused a thrill in the worshippers. The greatness of Lord Rajagopala has been referred to, in the Hymns of Nammalvar, the songs of Muthuswami Dikshitar of the Music Trinity and observed by Venkataadwari in his Viswa Guna Adharsa Champu and sung by other devotees, as well.

It is said that a person, who looks at the radiant form of the Lord from the Pada to the Mouli is absolved of all sins:

*Apidan Mouli Paryantham Pasyathaha Purubshothamam*
*Padakany asunnasyanthi, kim punastu upapadhakam*

The temple is situated at the centre of a vast area with its inspiring Rajagopuram with the pillar of Victory in the front, with long and broad Prakarams. The very approach to the Sanctum sanctorium is through a long passage promoting awe and reverence. all the year round, the temple reverberates with festivities, picturing the Leelas of the Lord, casting a spell on the worshippers. There are two important festivals conducted in the months of Panguni and Aani lasting for 18 days, this being the only temple having a long duration.

People from all parts throng to witness these festivals, especially the Garuda Seva, the Vennaithazhi and the car festival, wherein, the devotees mingle together shedding all differences as well as, the floating festivals, the important one being that, at Haridhranathi. Not a day passes on without some festival or other and there is no festival, that does not evoke reverence and devotion. The reverberating vibrant voice of Vedic Scholars that follow in a long procession the Deity, chanting the Vedas, adds one more dimension to the spirituality of the

atmosphere. Such in brief has been the splendeur of this holy and hoary place.

According to legends, the rishis that occupied the region of Gopralayam prayed to the Lord, to exhibit his lilas or exploits, as displayed in Hid Vibhava Avatara, at Gokula and Brindavana and the festivals of Rajagopala Lord are but exhibitions, answering the prayer of the sages. It is said that the love of the Gopis was so intense, that even sages and saints wished to be born in the land of the Gopis, as part of the dust of their feet or even worship the dust itself.

हा जन्म तामु सिकतासु मया न लब्धं स
रासे त्वया विरहिता:किल गोपकन्या:

Athimanusha stava - 51

आसामहो चरणरेणु जुषामहं स्यां वृन्दावने किमपि
गुल्मलतौषधीनाम् वन्दे नन्द व्रज स्त्रीणां पादरेणु
मभीक्ष्णश:

Bhagavatam 10-4761

10-47-63

In this context, it is but proper, to refer in some detail to the Divine sport of Lord Krishna and His dalliance with the Gopis. Srimad Bhagavatam presents an absorbing picture of this divine dance of the Lord, known as Raasa Leela, a kind of sport, wherein the dance is conducted in a circular form, with rhythmical steps.

## RAASA LEELA

It was a beautiful moonlit night in autumn in Brindavanam and the Silvery Yamuna glided on the waves reflecting the moon. Young Krishna, then eleven years old assuming by His Yogie power, a captivating appearance, began to play on the flute, poruing out the sweetest strains of melady, of entrancing Bliss. The Gopis who were then busy in their homes attending to their household duties were drawn by the encnanting flute. The call was irresistible. Forthwith, they abandoned their work, in the middle, and ignoring children, husbands and elders, rushed to the spot to meet the Lord.

The Lord welcomed them and questioned them, the reason of their presence at that ultimely nocturnal hour and advised them to return home and attend to the induties stating that the main duty of a woman is to serve the husband.

The Gopis felt disappointed and appealed to the Lord to grant their wishes, as he was all for them. The Lord deigned and danced with the Gopis promoting an enexplicable joy, that knew no bounds. The Gopis, in their esctatis mood, thought too much of themselves and were intoxicated with pride. The Lord, in order to curb their egoist vanity, suddenly disappeared from their midst.

This abrupt disappearance of the Lord came as a rude shock to the Gopis causing a terrible wrench. They felt miserable and forlorn. Bewailing their, lot and feeling dependant for their folly, they began to search for the Lord enquiring all objects on the way, even as Rama did, when Sita was abducted by Ravana. But nowhere was the Lord to be seen. They then gathered on the sands of the river and began to sing the praise of the Lord glorifying his deeds and services. Their beautiful songs, this grand lyric, is the famous Gopika Geetham, a sublime piece of composition, nonpareil. Indeed it is said that the sweetest songs are those they tell of saddest thought.

The Lord heard their prayerful song. Their supplication was touching, appeared before them attractively attired and asked them to form a ring. By His Sankalpa power the Lord assumed, as many forms as the Gopis present, and stood not only in the centre but also, in between, two Gopis and began His mystic dance, 'The Raasa Leela'. The Gopis enjoyed very much the Rasa of Brahmanandaas the Lord Himself is Rasa.

"रसो वै स:" (Taitreya upanishad)

It is said that even the God from above were drawn by these Divine sports of Krishna.

King Parikshit, who listened to this narration of Suka questioned the Sage how, the Lord, the upholder of Dharma could violate by involving Himself in an act bordering on sensuality. Suka replied that a great truth lay hidden. The Lord is the very embodiment of all virtues and is always free from sensual pleasures. He is immanent in all, ever watching our actions. It will be interesting to note herein Swami Vivekanda's observation on this most significant phase in Krishna's life in Brindavanam.

"Ah, that most marvellous passage of His life, the most difficult to understand and which none ought to attempt to understand until he has become perfectly chaste and pure, that most Marvellous expansion of love, Allegorised and expressed in that beautiful play at Brindavan which no one can understand".

## MANNARGUDI AND ITS ENVIRONS NAGAI VILLAGE ONCE THE SEAT OF THE JAPTAS IN RETROSPECT

About two centuries ago there came a period of resurgence in our country, an awakening among the cultures, who began to realise the greatness of our hoary heritage and the degradaten of the masses. There appeared, at this juncture, like the Lord's Awater, in times of need, for the establishment of Dharma, a number of saintly personages, who charged with the spark of the Divine, felt tha need for raising the common man from the trammels of worldiness and despair, to the higher levels of knowledge and wisdom. These modern saints well read in the knowledge of the scriptures and gifted with a divine vision began to chasten the lives of persons, lifting them up from the Slough of Despond.

Sri Sankaracharyar says in his Viveka Choodamani

शान्ता महान्तो निवसन्ति सन्त:
वसन्त वल्लोकहितं चरन्त: ॥ (verse 33)

There are pious souls, serene and great, who do good to the world, like the bright spring season that makes all Nature gay.

Among such saintly personages, that were born in the south, Pattinathar great Ramana Maharshi, Ramalinga Adigal, Seshadri Swamigal, Kulandai Swamigal Valli Malai Swamigal, Narasimha Bharathi and Auribindo were all godly souls steepell in spiritual knowledge. Year after year, many devotees came pouring in, to the Ashrama of Ramana Maharshi, only to be reformed. Even foreigners have made a pilgrimage to the Ashramam to have a glimpse of the Divine personage.

It is said that association with holy men purifies and stimulate spiritual aspiration. Not all such souls have comeout into the open and made their influence felt, as the poet Gray says

*"Full many a gem of puriest ray serene*
*the dark unfathomad caves of Ocean bear."*

It was to the good fortune of Nagai Village, to have had a pious personage who chosettwopeace for his spiritual pursuits.

The environs of mannargudi had a number of villages which have produced eminent worthies in all walks of life. Among such villages mentioned may be made of the village of Nagai, once famous as the retreate of the Japtas, the neighbouring villages of Painganadu, Kurichi, Kottur, Kunniyur, Vilakkudi, Kombur, Volukudi, Thenparai and some others. These villages have been the home of persons who have become famous in their respective spheres of activity, as advocates, judges, The Hon'ble Mr. Justice V. Rathinam, The Hon'ble Mr. Justice M. Srinivasan, The Hon'ble Mr.Justice M. Bhahtavat salam educationist, professors, Sastragnas, Vedic scholars and even spiritual heads like the Thenparai Andavan, and the Mannargudi Azhagiyasingar the 39th pontiff of the Ahobila Math. These places have a halo, because of their association with these great men.

Defining a holy place a verse runs thus

प्रभावादद्भुताद् भूमे: सलिलस्य च तेजसा ।
परिग्रहान्मुनीनाञ्च तीर्थानां पुण्यता स्मृता ॥

"By its noteworthy, wonderful nature of the land the brightness and the purity of water or as a chosen spot of saint, a region becomes a sanctified place."

One such sacred spot was the calm and serene village of Nagai (Not Nagapattinam) situated two miles south of Mannargudi on the route of Pattukottai, via Vadaseri. It was a congenial region with a sacred tank named Mandagini, full of pure and placid water, midst sylvan surroundings affording a peaceful ground, for the performance of japa and meditation.

More than 150 years ago, there came to this village of Nagai, a saintly person hailing from a village nearby, who chose this beautiful spot for the pursuit of hismeditation and spiritual life, He bore tha name Vasudeva, as for him Lord Vasudeva was everything. In fact many in the village came to bear this name.

वासुदेव: सर्वमिति स महात्मा सुदुर्लभ: ॥ Gita 7-19

His noble bearing and radiant countenance revealed the spark of divinity in him.

यद्यद्विभूतिसत्सत्वं श्रीमदूर्जितमेव वा ।
तत्त देवा वगच्ध मम तेजोःऽझसंभवम् ॥Gita 10-41

Whatsoever his full of glory, excellence, full of beauty and strength, understand Arjuna, that they are but a fragment of my splendur. This saintly personage, finding the region congenial answering all requirements stated herein took his seat near the banks of the tank and began to perform of his Japayagna, chanting the names of the Lord or the Mantras the Ashtakshara and the Dwdasakshara as well as the Vedas. The spiritual powers drew the attention of the devotees who came from far and near and joined in the thrilling experience or Japayagna following all observances. They were to bathe in the tank thrice a day Thrikala Snana and perform Japa in all is rigidity. They were called Japtas and the entire region shona with the glow of divinity, inspiring faith in the onlookers.

It is said that an aspirant may certainly achieve his desired object as well as liberation, even by the performance of Japa, as Japayagna is ten times superior to Vidhiyagna or sacrifice, silent repetition a hundred times and mental repetition, a thousand time - says Manu-

विधियज्ञाज्जपयज्ञो विशिष्टो दशभिर्गुणै: ।
उपांशु: स्याच्छतगुण: साहस्रो मानस: स्मृत: ॥chII sl85

Japa and meditation clense the mind of all impure thoughts destroys all sins and ushers in the dawn of spirituality leading to divine grace.

It was a Golden period for the village filled with a hoary atmosphere. But with the passing away of the saintly soul Vasudeva, the splendour that was, gradually faded; perhaps may linger long in the memory of those who breathed that lovable atmosphere.

Still the greatness of the sacred soul is kept alive by preserving his Padukas and performing regularly the poojas under the guidance of Sri. A. Srinivasa Iyengar, Mirasudar of Mannargudi and an ardent devotee of that Saintly soul.

Nagai had a small agraharam peopled by the followers of that Saint, who spent their time faithfully addering to his dictates. Their now remains a small arch like structure in ruins, perhaps the remains of an ancient building. There was also an imposing Bungalow constructed by Hon'ble K.V. Rangaswami Iyergar of Kodialam. It is said that the poet Bharathiar sought asylum in this spot for sometime, patromized by the Hon'ble Rangaswami Iyengar.

"Bliss it was in that dawn to be alive
And to be young was very Heaven"


In this context, it is to be recorded that this glorious village of Nagai has been the birth place of a number of respectable people, some of whom have became great scholars, who rose to positions of eminence. Mention needs be made of Maharshi S. Vasudevachariar Swami, born on October 8, 1870 and his Cousin, Desika Darsana Vijaya Dwaja, Sri Ub. Ve. Puthankottaham Srinivasachariar Swami, younger by six years. Both were very great scholars, respected by all. They were the grandsons of a saintly soul, Sri Venkatakrishnamachariar Swami, a profound Vedic Scholar, highly orthodox and held in greatest regard and reverence.

Maharshi Vasudevachariar Swami was a pious orthodox gentleman highly educated both in Sanskrit and in the Sastras as well as in the literature of the west.

He was the colleague of Rt. Hon'ble Sri V.S. Srinivasa Sastriar in the early years of their professional career, as teachers in the Municipal High School, Mayuram, in about 1892. Maharshi Vasudevachariar became the Vice Principal and Bursar, Wesley College, Royapettah and was held in high respect by the European Missionaries for his scholarship in English and in Sanskrit for his dedicated service. He was the founder, Secretary of the Madras Teachers' guild and of the South India Teachers' Union along with the Rt. Hon'ble Sastriar. Besides he was the Founder Treasurer of the Ramakrishna Mission Students' Home Mylapore, since its inception in 1905, Founder Manager of the Ramakrishna Mission Educational institutions for boys' and Girls in T. Nagar, Madras. Secretary Sri Vaishnava Sidhanta Sabha and the Editor of the Veaant Deepika, a religious journal, Manager of the Sanskrit college, Madurantakam and the

Editor, Nrisimha Priya, a religious monthly of Sri Ahohila Math.

His Cousin, puthankotaham Srinivasachariar Swami, was an erudite scholar in Sanskrit, who had drunk deep of the various Sastras, a good criticist an authority on Dharma Sastras possessing profund knowledge. He was for sometime incharge of the Sanskrit Patasala at Mannargudi, run by the illustrious Mudaliars. Swami had participated and presided over in all Vidwat Sathas with credit and distinction. Later in his life, he settled at Srirangam delivering discourses and conducting Kalakshepams to a number of disciples, and in various other places as well He was the Asthana Vidwan of the Ahobila Math, during the periods of the 41st, 42nd, 43rd Azhasiyasinger, of the Ahobila Math. The 42nd Azhasiyasingar, Sri Injimedu Swami was his collegue in his Poorvasrama. They were both disciples of the venerable scholar Swarnam Vadoola Krishnamachariar Swami.






**Hotel Temple Tower (P) Ltd.**

THANJAVUR